JL
Zwm N06
N067
161192

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
23 OCT 1914
MADRAS.

# மகா சந்நிதானத்தின் தரிசின வைபவம்.

ஸ்ரீலஸ்ரீ பரமகுரு திருவாடுதுறை ஆதீனம் மேன்மை தங்கிய மகா பண்டார சந்நிதானம் ஸ்ரீ அம்பலவாண தேசிக ஸ்வாமிகளின் தரிசனம் நமக்குக் கிடைத்ததில் நாம் ஷை ஸ்வாமிகளின் குணாதிசயங்களையும் ஔதாரத் தன்மையையும் சத் விஷயங்களின் காரணார்த்தமாய் மகா சந்நிதானத்தை தேடி வருகிறவர்களுக்கு முகமலர்ச்சியுடன் நன்கு ஆதரிப்பின் தன்மையையும் மற்றும் ஷை மகா சந்நிதானம் நித்திய கர்மானுஷ்டானங்களை வழுவாது நாள்தோறும் நிறைவேற்றி வரும் தன்மையையும் தேவாலயங்களின் விசாரணையை நடத்திவரும் பெருமையை நாம் கண்ணுற்று களிப்படைய நேரிட்ட பூர்வ புண்ணிய வசத்தையும் நினைத்து நினைத்து நாள்தோறும் அகமகிழ்ச்சி கொள்ளாத நாளில்லை. பின்னும், ஷை மகா சந்நிதானம் பூஜை காலத்தில் பூஜை செய்யும் வைபவத்தைக் கண்ணுற்றவர்கள் சிவபெருமானே அவ்வுருவாய் பூவுலகத்தில் அவதரித்து பாமரர்கள் திகிலடையவும் பக்தி ரசத்தை எவ்வளவு கசடரானாலும் தன் இருதயத்தில் குடி கொள்ளாதிருக்க முடியாதென்பதில் சந்தேகமுமுண்டோ? சிவ பக்தியுடையவர்கள் அவ்வாதீனத் தலைமை ஸ்தானத்தை வகித்து கீர்த்திப் பிரகாசம் ஜொலித்து விளங்கும்படி நடத்திக்கொண்டுவரும் மகா சந்நிதானத்தை தரிசிக்காதவர்கள் புண்ணிய சீலர்களல்லவென்று நாம் சொல்லுவதை உலகினர் ஒப்புக்கொள்ளுவார் என்று நம்புகின்றோம்.

பின்னும், கருணைக்கடல் என்று சொல்லும்படியான மேன்மை பொருந்திய இருதயத்தைப் பொருந்தப்பெற்ற மகா சந்நிதானத்திற்கு திராவிட பாஷையிலிருக்கும் பாண்டித்வத்தைப் பற்றியும் சாஸ்திர ஆராய்ச்சியின் பெருமையைப்பற்றியும், சைவாகம விதிகளின் தேர்ச்சியைப்பற்றியும் அடுத்த சஞ்சிகையில் விஸ்தாரமாய் எழுதி மகா சந்நிதானத்தின் திருவுருப் படத்துடன் பிரசுரிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

N. ராதாகிருஷ்ண அண்டு கோ.,

# இந்திய சட்ட கெஜெட்.


உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டு பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது.

வால்யம் 7.] சென்னப்பட்டணம் 1914வூ செப்டம்பர்மீ [பாகம் 1.


## அடக்கம்:


| | | பக்கம். |
|---|---|---|
| | உருவப்படம்:—காலஞ்சென்ற மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட் ... ... ... | |
| 1. | ஐக்கோர்ட்டு நிலுவை வியாஜ்ஜியங்களும் சட்ட சபையும் ... ... ... | 1 |
| 2. | இரண்டு அடிஷனல் ஜட்ஜிகள் ... ... ... ... ... | 2 |
| 3. | மூர்த்தி யிருந்த ஐக்கோர்ட்டு பிரதம ஜட்ஜி ... ... ... ... | 3 |
| 4. | மிஸ்டர் S. குமசாமி அய்யங்கார் பென்ஷன் பெற்றுக்கொண்டது ... ... | 3 |
| 5. | கனம் தங்கிய கவர்னர் பேசினது ... ... ... ... ... | 4 |
| 6. | கேசுகளுடைய ரிப்போர்ட்டுகள் ... ... ... ... ... | 5-13 |
| 7. | ஆகஸ்ட் செப்டெம்பர் தீர்ப்புகள் ... ... ... ... ... | 13 |
| 8. | சமீபத்தில் ஜாரி செய்யப்பட்ட ஐக்கோர்ட்டு தீர்மானங்கள் ... ... ... | 17 |
| 9. | வியாக்கியானத்துடன் சட்டங்கள் ... ... ... ... ... | 23 |
| 10. | ஈாஜுவிதமான வியாஜ்ஜியங்களும் கோர்ட்டு சமாசாரங்களும் ... ... | 25-35 |
| 11. | மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட்டின் மரணம் ... ... ... ... ... | ,, |
| 12. | நம்முடைய கக்ஷிக்காரர்களின் பக்கம் ... ... ... ... ... | 36 |
| 13. | யுத்தம் ... ... ... ... ... ... ... ... | 37-43 |
| 14. | புருஷனை விட்டுப் பிரிந்திருக்கும் மனைவி — ஒரு சம்பாஷனை ... ... | 43 |


## சந்தா விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வருஷ சந்தா .... .... | ரூபா 5 0 0 | மூன்று மாதத்திற்கு .... | ரூபா | 1 8 0 |
| ஆறுமாதத்திய சந்தா .... | ,, 3 0 0 | (தபால் சார்ஜ் பிரத்தியேகம்.) | | |

சிங்கப்பூர் பினாங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) .... .... ரூபா 6 0 0

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

# விஞ்ஞாபனம்.

(1) திருவாடு துறை ஆதினம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தேசிகப் பண்டார சந்நிதி அவர்கள் நம்முடைய வரவை ஏற்று உபசரித்து அளித்த நன்கொடைக்காகவும், செய்த ஆசீர்வாதத்திற்காகவும் அவர்கள் பால் நன்றி பாராட்டி வந்தனமளிக்கின்றோம்.

(2) மதுரை ஜில்லா சத்திரப்பட்டி ஜெமீன்தார் ஸ்ரீமான் முத்துசாமிநாயுடு அவர்கள் நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டின் அபிவிருத்தியை நாடி நமக்கு ரூ. 200 நன்கொடை அளித்திருப்பதற்காக அவர்களுக்கு நன்றி பாராட்டி வந்தனமளிக்கின்றோம்.

(3) சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ, P. சுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்களும் கடப்பை ஜில்லா நிலசுவான்தார் ஸ்ரீமான் ராமச்சந்திர ரெட்டியார் அவர்களும் தலைக்கு ரூ. 100 நன்கொடை அளித்து இந்திய சட்ட கெஜெட்டின் போஷகர்களாகச் சேர்ந்துகொண்டிருப்பதற்காக வந்தனமளிக்கின்றோம்.

161192

---

ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் வாங்குகிறவர்களுக்கு முக்கியம்!

## மாதிரி தேவை.

இதுவரையில் ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் வாங்கிக்கொண்டுவந்த ஜனங்களுக்கு இனிமேல் அப்படிரியான சாமான்களை இங்கிலாண்டில் தயார் செய்து சப்ளை செய்யும்பொருட்டு அடியிற்கண்ட பத்திரிகை ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறது. இந்த விஷயத்தில் பற்றுடையவர்கள் அடியிற்கண்ட பத்திரிகைக்கு சாமான்களின் மாதிரி அனுப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி சாமான்கள் யாரால் இங்கிலாண்டில் தயார் செய்யப்படுகின்றனவோ அவர்களுக்கு அனுப்பப்படும். அவர்கள் மாதிரி அனுப்பியவர்களுக்கு விலை முதலிய விபரம் எழுதுவார்கள்.

இந்த ஏற்பாட்டால் இங்கிலாண்டில் யார் யார் இந்த சாமான்களை தயார் செய்கிறார்கள் என்று அறிந்துகொள்ளக் கூடும். ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் பர்த்தி படுத்தப்படுவதற்கு வசதியாக விருக்கும். மாதிரி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். பப்ளிஷர்,

பிரிடிஷ் டிரேட் ஜேர்னல்,

24, மார்க் சந்து லண்டன், இங்கிலாண்டு.

---

## *The Best Silver Wrist Watch.*

## கையில் கட்டிக்கும்படியான மாக உயர்ந்த வெள்ளி கெடியாரம்.

இது உயர்ந்த சாமான்களால் செய்யப்பட்ட ஸ்விஸ் மேக்கர், மதிராஸ் கோட்டை குண்டுக்கு சரியான டையிம் காட்டும். அடிக்கடி ரிப்பேர் செய்வதற்கு விடம் கொடுக்காத வலுவும் உறுதியான கெடியாரம். இது எங்களுக்காக்வே தயார் செய்யப்பட்டு வந்திருக்கிறது. கெடியாரத்திற்குள்ளே யிருக்கும் சாமான்கள் பூட்டுவதற்கு சாதாரண திருகு ஆணிகள் போடப்படுவதற்குப் பதிலாக கெம்பு வைக்கப்பட் டிருக்கிறது. சாவி தலையின் மேரி லிருக்கிறது. நேர்த்தியான லிவர் வாச்; ஒரு தடவை சாவி கொடுத்தால் 36 மணி நேரம் ஓடும்.




சாதாரணமாக சில்லரைக் கடைகளில் கெடியாரம் ஒன்றுக்கு 15 ரூ. க்குக் குறைவாக கிடைக்க மாட்டாது. ஆனால் கைக்கு கட்டிக்கொள்ளும் இங்கிலீஷ் தோல் பட்டையுடன் ரூ. 8க்கு விற்று வருகிறோம்.

N. S. ரும் அண்டு கோ,

49, ஆச்சாரப்பன் வீதி,

ஜியார்ஜ்டவன் சென்னை.

JL

Z ЗІ m NO6

NO6.7



THE LATE MR. JAMES SHORT.

காலம் சென்ற மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட் துரையவர்கள்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 OCT 1914
MADRAS.

DIEU ET MON DROIT

HONI SOIT QUI MAL Y PENSE

# The Indian Law Gazette.

## இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 7.] சென்னப்பட்டணம், 1914௵ செப்டம்பர்மீ [பாகம் 1.

## HIGH COURT ARREARS AND THE LEGISLATIVE COUNCIL.

### ஐக்கோர்ட்டு நிலுவை வியாஜ்ஜியங்களும் சட்ட சபையும்.

—:o:—

சென்னை மாகாண சட்ட சபையில் ஜனப் பிரதிநிதி மெம்பராக விருக்கும் ஆனரபில் மிஸ்டர் V. K. ராமானுஜாச் சாரியார் அவர்கள் கடந்த மேமீ கூடிய சட்ட சபையில் அடிற்கண்ட தீர்மானம் ஒன்று பிரேரபணை செய்தார்கள் :—

ஐக்கோர்ட்டில் நிலுவை வியாஜ்ஜியங்கள் குவிந்துகொண்டு வருவதைப்பற்றி விசாரணை செய்து சிக்கனமான செலவுடன் நீதி பரிபாலிக்கப்படும்படியான உபாயத்தைக் கண்டு பிடித்து யோஜனை சொல்லும்படியாக சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களல்லாதவர்களும் கூடிய ஒரு கமிட்டி ஐக்கோர்ட்டாருடன் கலந்து யோஜனை செய்து நியமிக்கப் படவேண்டுமென்று இந்த சபை ஆலோஜனை சபையிலிருக்கும் கனம் தங்கிய கவர்னருக்கு சிபார்சு செய்கிறது. இந்தத் தீர்மானத்தைப் பிரேரபணை செய்தபோது 1895-ல் ஐக்கோர்ட்டில் 5 ஜட்ஜிகளிருந்தார்கள் என்றும் ஆனால் சில வருடங்களுக்குள் ஜட்ஜிகளின் எண்ணிக்கை விரைவில் ஏறிவிட்டதென்றும், 1913ம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வியாஜ்ஜியங்களின் எண்ணிக்கையுடன் 1895ம் வருடத்திற்கு முந்தி பல வருடங்களின் சராசரி வியாஜ்ஜியங்களின் எண்ணிக்கையைச் சீர்தூக்கிப் பார்த்தால் 100-க்கு 50-வியாஜ்ஜியங்கள் இப்போது அதிகப்படியாய் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன என்று தெரிய வந்தபோதிலும் 12-ஜட்ஜிகள் நியமிக்கப்படுவதற்கு நியாயமில்லை என்றும், சிட்டி சிவில் கோர்ட்டார் அதிகாரத்தை விஸ்தரித்து ஐக்கோர்ட்டு அசல் தரப்பின் வேலைகள் சிட்டி சிவில் கோர்ட்டில் நடக்கும்படியாய்ச் செய்தால் ஐக்கோர்ட்டு ஜட்ஜிகளுக்கு இப்போதிருக்கும் அவ்வளவு கஷ்டம் இருக்கமாட்டாதென்றும் அலகாபாத் ஐக்கோர்ட்டைப்போல சென்னை ஐக்கோர்ட்டில் அப்பீல் விசாரணை மட்டிலும் நடத்தும்படியாக ஏற்பாடு செய்யலாமென்றும் ஐக்கோர்ட்டு ஜட்ஜிகள் சேம்பரில் செய்யும் வேலைகள் ரிஜிஸ்டிராரால் நடத்தும்படி செய்யலாமென்றும், கோடைகால ராஜா காலத்தில் இரண்டொரு வாரங்கள் குறைத்து விசாரணை நடத்தும் தினங்களை அதிகரிக்கலாமென்றும் கல்கத்தா, பம்பாயில் நடப்பதுபோல சனிக்கிழமை தினங்களிலும் கோர்ட்டு நடக்கும்படியாகச் செய்யலாமென்றும் இப்படிச் செய்தால் அதிகப்படியான வேலைகள் நடத்தப்பட்டு நிலுவை வியாஜ்ஜியங்கள் குவிவதற்கு இடமிருக்க மாட்டாதென்று சொன்னார்.

ஆனரபில் டாக்டர் T. M. நாயர் அவர்கள் இந்தப் பிரரேபனையை அங்கீகரித்துப் பேசும்போது நிலுவை வியாஜ்ஜியங்கள் குவிவதற்கு இப்போது அதிகப்படியான வியாஜ்ஜியங்கள் தாக்கலாயி வருவதை மட்டிலும் காரணமாகச் சொல்லக்கூடாதென்றும் அடியிற்கண்டவைகளும் காரணங்களாகவிருக்கின்றன:—(1) ஒவ்வொரு ஜட்ஜியும் இதற்கு முந்தி எவ்வளவு வியாஜ்ஜியங்களை முடிவு செய்து வந்தார்களோ அவ்வளவு வியாஜ்ஜியங்களை முடிவு செய்ய முடிகிறதில்லை. ஏனென்றால் வக்கீல்கள் சொன்ன கக்ஷி வாதத்தையே மடக்கி மடக்கி சொல்லிக் காலம் கழிக்கிறார்கள் என்று ஜட்ஜிகள் சொல்லுகிறதாகப் பிரஸ்தாபமாயிருக்கிறது. அப்படி மடக்கி மடக்கிச் சொன்ன கக்ஷியே திருப்பிச் சொல்லாவிடில் இப்போதிருக்கும் ஜட்ஜிகள் மனதிற்குப் படுகிறதில்லை என்று வக்கீல்கள் சொல்லுவதாகப் பிரஸ்தாபமாயிருக்கிறது.

(2) சில ஜனங்கள் அன்னியர் வியாஜ்ஜியங்களையே விலைக்கு வாங்கி வியாஜ்ஜியமாடுவதையே ஒரு தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(3) வக்கீல்களுக்குள் போட்டி உண்டாயி அவர்களுடைய வருமானம் குறைந்துபோய் விட்டது. ஆதலால் கக்ஷிக்காரர்கள் இலகுவான செலவில் அப்பீலை நடத்திப் போடலாமென்று நினைக்கிறார்கள்.

(4) ஐக்கோர்ட்டுத் தீர்ப்புகள் ஒரே சட்ட அம்சத்தைப்பற்றி ஒன்றுக்கொன்று முரணாகவிருக்கிறபடியால் தன்னுடைய கக்ஷி ஜெயம் பெறாது என்று நினைக்கும் கக்ஷிக்காரன்கூட அப்பீல் செய்துகொண்டால் ஜெயிக்கலாமென்று நினைப்பதற்கு தூண்டுதலாயிருக்கிறது. ஆதலால் இந்த விஷயம் சம்பூரணமாய் ஆராயப்படவேண்டிய தவசியமென்றும் கவர்ன்மெண்டார் இந்தப் பிரரேபனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டனர். இந்தப் பிரரேபனைக்கு கவர்ன்மெண்டு தரப்பில் ஆனரபில் மிஸ்டர் கார்டியூ பதில் கூறும்போது ஐககோர்ட்டு தொடர்ந்தேர்த்தியாய் இம்மாதிரி அதிருப்திகாமான நிலைமையிலிருந்து வருவது கவர்ன்மெண்டாருக்குக் கவலையைக் கொடுத்து வருகிறதென்பதில் சந்தேகமில்லை யாயினும் வியாஜ்ஜியங்கள் துரிதமாக பைசல் செய்யப்பட சில யோஜனைகள் சொல்லப்போகிறதாக ஐக்கோர்ட்டார் தெரிவித்திருக்கும்போது அந்த யோஜனைகளைக் கேட்காமல் கமிட்டி நியமிப்பது ஐக்கோர்ட்டின் கௌரவத்திற்கு பொருத்தமாயிருக்கமாட்டாதென்றும் ஆதலால் இந்த சமயத்தில் இந்த பிரரேபனையை ஏற்றுக்கொள்ள கவர்ன்மெண்டார் இணங்கமாட்டார்கள் என்று சொன்னார்.

---

## MOTHER CUTS HER CHILD'S THROAT.
## தாயார் குழந்தையினுடைய தொண்டையை அறுத்தது.

ஆமட் நகருக்கு சமீபத்திலுள்ள ஒரு ஊரில் ஒரு புருஷனுக்கு இரண்டு மனைவிகளிருந்தார்கள். முதல் மனைவி இரண்டு பிள்ளைகளை விட்டு விட்டு இறந்துபோய் விட்டாள். இரண்டாவது மனைவியின பெயர் "மண்டி" இவளுக்கும் $2\frac{1}{2}$-வயதில் ஒரு குழந்தை இருந்தது. இவள் சக்களத்தியின் குழந்தைகளை இம்சித்துக்கொண்டு வந்தாள். புருஷன் இந்த குழந்தைகளுக்காகப் பரிந்து மண்டியுடன் அடிக்கடி சச்சரவு செய்து வந்தான். ஆதலால் மண்டிக்கும் அவளுடைய புருஷனுக்கும் மனஸ்தாபம் முதிர்ந்திருந்தது. சடந்த மேமீ 20உ மண்டி அவளுடைய குழந்தையுடன் அவளுடைய குடிசையில் படுத்துக்கொண்டிருந்தாள். அவளுடைய புருஷன் பக்கத்துக் குடிசையில் படுத்து உறங்கிக்கொண்டிருந்தான். அன்று நடு இரவில் மண்டி "கூ! கூ! என் புருஷன் என் குழந்தையின் கழுத்தை அறுத்துப்போட்டான்" என்று கூவி கதறினாள். அக்கம் பக்கத்தார் வந்து கூடினார்கள். குழந்தை பிரேதமாய்க் கிடந்ததைப் பார்வையிட்டார்கள். அந்த சமயம் மண்டி புருஷனைப் பார்த்து அடே சண்டாளப் பாவி, இனியாவது உனக்கு தூக்கம் வருமா என்று கேட்டாள். போலிசார் இந்தக கேசைப்பற்றி விசாரணை செய்ததில் மண்டியே புருஷன்பேரில் பழி போடவேண்டுமென்று யோஜனை செய்து அவளே இந்தக் கொலையைச் செய்துவிட்டு புருஷன்பேரில் பழியைச் சுமர்த்துகிறாள் என்று தெரியவந்தது. இதன்பேரில் போலிசார் மண்டியைக் கைதி செய்து மாஜிஸ்டிரேட் முன்னில் ஆஜர்படுத்தினார்கள். மாஜிஸ்டிரேட் கேசை விசாரணை செய்து மண்டியை செஷனுக்கு கமிட் செய்தார்கள். கீழ்க்கோர்ட்டில் மண்டி தானே கொலையைச் செய்ததாக ஒப்புக்கொண்டிருக்கும்போது செஷன் கோர்ட்டில் தான் நிரபராதி என்றும் போலிசார் தூண்டுதல்பேரில் கொலையைச் செய்ததாக ஒப்புக்கொண்டதாகவும் வாக்குமூலம் எழுதி வைத்தாள்.

ஜூரர்கள் கைதி நிரபராதி என்று அபிப்பிராயம் கூறினார்கள். ஜட்ஜி குற்றவாளி என்று அபிப்பிராயப்பட்டு கேசை ஐக்கோர்ட்டிற்கு அனுப்ப ஐக்கோர்ட்டார் ஜென்ம தீபாந்திர தண்டனை தண்டனை விதித்தார்கள்.

---

## TWO ADDITIONAL JUDGES.
## இரண்டு அடிஷனல் ஜட்ஜிகள்.

ஐக்கோர்ட்டில் விசாரணை செய்யப்படவேண்டிய நிலுவை வியாஜ்ஜியங்கள் எதேஷ்டமாக விருக்



கின்றன என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்பட்டு இரண்டு அடிஷனல் ஜட்ஜிகள் நியமிக்கப்படும்படியாக சாங்கிஷன் செய்தார்கள். இந்த இரண்டு ஸ்தானங்களுக்கு பப்ளிக் பிராசிக்கியூட்டராகவிருந்த பாரிஸ்டர் மிஸ்டர் C. நேப்பியரும் கெஞ்சம் செஷன் ஜட்ஜியாகவிருந்த மிஸ்டர் C. V. குமாரசாமி சாஸ்திரியாரும் ஜட்ஜிகளாக தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பப்ளிக் பிராசிக்கியூட்டராக விருந்த மிஸ்டர் C. B. பவல் (Mr. C. B. Powell) 1909ம் வருடத்தில் உத்தியோகத்தைவிட்டு நீங்கியமுதல் மிஸ்டர் நேப்பியரே அந்த உத்தியோகத்தைப் பார்த்து வந்தார். இடையில் கொஞ்சாலம் அட்வோகேட ஜெனரலாகவும் ஆக்டிங் வேலை பார்த்தார். லாயர் தொழில் தன்னுடைய கௌரவத்தை நிர்வாகித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று மிகவும் ஆவல் கொண்டவர். சிறிது காலமாக ஜட்ஜியாகவும் உத்தியோகம் பார்த்தார். தாராளமான சிந்தையுடையவர். கேஸ்களுடைய உண்மையை வெகு சீக்கிரத்தில் கிரகிக்கும் சக்தி இவரிடம் வெகுவாய் அமைந்திருக்கிறது.

மிஸ்டர் C. V. குமாரசாமி சாஸ்திரியாரும் அடிஷனல் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் ஆதியில் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டில் லாயர் தொழில் மிகவும் விசாலமாக நடத்திக்கொண்டு வந்திருந்தார். கவர்ன்மெண்டார் இவரை ஸ்மால் கோர்ட்டு ஜட்ஜியாக நியமித்தார்கள். இதன் பிறகு சிட்டி சிவில் கோர்ட்டு ஜட்ஜியாக நியமித்தார்கள். இவர் சிட்டி சிவில் கோர்ட்டு ஜட்ஜி உத்தியோகத்தை ஒப்புக்கொண்டு சிலகாலம் அந்த உத்தியோகத்தைப் பார்த்துக்கொண்டு வந்தபிறகு சிட்டி சிவில் கோர்ட்டில் அந்தந்த வருடத்தில் தாக்கலான வியாஜ்ஜியம் அதே வருடத்தில் விசாரணைக்கு வருகிறதில்லையென்று உண்டாயிருந்த நீண்டகால புகார் சூரியனைக்கண்ட பனிபோல் விலகிப்போய்விட்டது. இந்த உத்தியோகத்திலிருந்தபடியே கெஞ்சம் ஜில்லா செஷன் ஜட்ஜியாக நியமிக்கப்பட்டார். இவருடைய கோர்ட்டில் பிராக்டிஸ் செய்யும் லாயர்களும், வியாஜ்ஜியமாடும் கக்ஷிக்காரர்களும் இவர்பேரில் குறை கூறினதை நாம் கேள்விப்பட்டதில்லை. இவர் நம்முடைய சட்ட கெஜெட்டின் அபிமானி; பலதடவை நன்கொடை அளித்து உதவி புரிந்திருக்கிறார்கள்.

---

## OUR FRONTISPIECE.
## இந்தமாத உருவப்படம்.

நிகழ்மீ இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கும் உருவப்படம் மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட்டினுடையது. இவர் சென்னைப்பட்டணத்தில் சிறந்த லாயர்களில் ஒருவர். இவருடைய மரணத்தைப்பற்றியும் ஜீவதிசைச் சரித்திரத்தைப்பற்றியும் இச் சஞ்சிகையின் மற்றொரு பக்கத்தில் எடுத்தெழுதி யிருக்கின்றோம். இவர் சிறந்த லாயராயிருந்து வந்ததுமன்றி நம்முடைய கெஜெட்டு தோன்றின காலமுதல் வருஷவாரி அதற்காக ரூ. 200 நன்கொடை அளிந்து வந்தனர். அது காரணம்பற்றி அவர் பால் நன்றி விஸ்வாசம் பாராட்டி அவருடைய உருவப்படத்தைப் பிரசுரித்திருக்கிறோம்.

---

## RETIREMENT OF MR. S. RAMASAWMY IYENGAR.
## மிஸ்டர் S. ராமசாமி அய்யங்கார் அவர்கள் உத்தியோகத்தைவிட்டு நீங்கியது.

சென்னைப்பட்டணம் ஸ்மால்காஸ் கோர்ட்டு மூன்றாவது ஜட்ஜியாக விருந்த மிஸ்டர் S. ராமசாமி அய்யங்கார் நிகழ் செப்டம்பர்மீ 23உ உத்தியோக வாழ்க்கையைவிட்டு நீங்கி பென்ஷன் பெற்றுக்கொண்டார்கள். அன்று சாயங்காலம் அவருடைய கோர்ட்டு கலைந்தவுடன் வக்கீல்கள் அவருடைய கோர்ட்டில் அவருக்கு மறியாதை காட்டுவதற்காகக் கூடினார்கள். வக்கீல் மிஸ்டர் V. C. சேஷாச்சாரியார் வக்கீல்களுக்காக ஜட்ஜியினுடைய மேன்மையான குணநிசயங்களை எடுத்துக் கூறி சிலாகித்துப் பேசினார். மிஸ்டர் ராமசாமி அய்யங்கார் அவருக்கு வந்தனமளித்தார்கள். இவர் உத்தியோகத்தைவிட்டு நீங்கினபோதிலும் ஐக்கோர்ட்டிலேயே அட்வோக்கேட்டாகத் தாக்கல் செய்துகொண்டு லாயர் தொழில் நடத்துவாரென்றும் பெரும்பாலும் வெளியூர் கேஸ்களுக்குப் போய் வருவார்கள் என்றும் அறிகிறோம்.

---

## HIGH COURT CHIEF JUSTICE.
## ஐக்கோர்ட்டு பிரதம ஜட்ஜி.

ராஜாவின்பேரில் சீமைக்குப் போயிருந்த ஐக்கோர்ட்டு சீப் ஜட்ஜியாக விருந்த மிஸ்டர் ஜெஸ்டிஸ் ஆர்னால்ட் வொயிட் அக்டோபர்மீ முதல் வாரம் சென்னைக்குத் திரும்பிவந்து உத்தியோகத்தை ஒப்புக்கொள்ளுவாரென்றும் அவர் ராஜா எடுத்துக்கொண்டு போனதால் காலியான ஸ்தானத்திற்கு பதிலி ஐக்கோர்ட்டு ஜட்ஜியாக விருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானே பழையபடி ஜில்லா ஜட்ஜி உத்தியோகம் பார்க்க விஜாகப்பட்டணம் போய் விடுவார் என்று முதலில் பிரஸ்தாபமாயிருந்தது. ஆனால் இப்போது செய்யப்படும் நிச்சயமான பிரஸ்தாபத்தால் ஜஸ்டிஸ் ஆர்னால் வொயிட் இனி இந்தியாவிற்கு வரமாட்டார் என்றும் அவருக்கு பதிலாக காயமாக ஒரு ஐக்கோர்ட்டு ஜட்ஜியை நியமிக்க ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ் உள்பட சில பெயர்கள் லோக்கல் கவர்ன்மெண்டால் இந்தியாகாரியதரிசிக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன வென்றும் அறிகின்றோம்.

---

## IMPORTANT DECISIONS.
## முக்கியமான தீர்ப்புகள்.

நிகழ்மீ சஞ்சிகையில் அனேக முக்கியமான தீர்ப்புகளை எடுத்தெழுதி யிருக்கின்றோம். சந்தாதாரர்கள் அவைகளை வாசித்துப் பயன் அடைந்தால் நமக்கு அவைகளை எடுத்து எழுதினதால் உண்டான சிரமம் ஈடேட்டுப் போகும். ஒரு கேசில் ஒரு ஸ்திரி சொந்தப் புருஷனுக்கு ஒரு ஆண்பிள்ளையைப் பெற்றனள். வைப் புருஷனுக்கு ஒரு பெண்பிள்ளையைப் பெற்றனள். தாயாருடைய ஸ்திரீ தன் சொத்திற்கு இருவருக்கும் உண்டான தாவாவில் சொந்தப் புத்திரனே அதிக பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. ஒரு தேவஸ்தானத்திலிருக்கும் தர்மகர்த்தாக்கள் எல்லோரும் கூடி ஒரு நிலத்தை குத்தகை விடவேண்டுமென்றும் சில தர்மகர்த்தாக்களை யோஜனை செய்யாமல் மற்ற தர்மகர்த்தாக்கள் குத்தகை விட்டால் அந்த குத்தகை செலாமணியாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகிய இந்த இரண்டு தீர்ப்புகளையும் நம்முடைய நேயர்கள் கவனிப்பார்களாக.

## H. E. THE GOVERNOR'S SPEECH.
## கனம் தங்கிய கவர்னர் பேசினது.

யுத்தத்தைப்பற்றி இந்த சஞ்சிகையின் கடைசி பக்கங்களில் ஆதி முதல் நாளது வரையிலுள்ள சமாசாரங்களைச் சுருக்கமாக எழுதி யிருக்கிறோம். ஜெர்மன் கிருஸ்சர் ஸ்டீமர் "எம்டன்" வங்காள குடாக்கடலில் தோன்றி பூரி துறைமுகத்திற்குச் சமீபத்திலும் சென்னைத் துறைமுகத்திலும் செய்த அக்கிரமங்களையும் எடுத்திருக்கிறோம். கூடிய சீக்கிரம் எம்டன் பிடிபட்டு அமுக்கப்படு மென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் வங்காள குடாக்கடல் வியாபார ஸ்டீமர்கள் போககுவரத்திற்குச் சாவதானமாயில்லை என்று ஸ்மலாவிலிருந்து தந்தி வந்திருக்கிறது. இப்படியாக வங்காள குடாக்கடலில் அபாயமுண்டாயி ஸ்டீமர் பிரயாணத்திற்கு யோக்கியதையற்றிருக்கும்போது இன்று அதாவது 29வு பகல் 11 மணிக்கு "ஷிரகாலா" என்னும் ஸ்டீமர் ஜாவாவிலிருந்து சர்க்கரை ஏற்றிக்கொண்டுவந்து சேர்ந்தது, நமக்கு சந்தோஷமாக யிருக்கிறது. ஒரு வியாபாரக்கப்பல் சென்னைக்கு வந்து வெகுநாளாயிவிட்டது. "எம்டன்" வங்காள சமுத்திரத்தில் உலாவிக்கொண்டிருப்பதாவது அல்லது சென்னை முற்றுகை போடப்பட்ட சமாசாரமாவது இந்த "ஷிரகாலா" ஸ்டீமருக்குத் தெரியாது. இந்த ஸ்டீமர் ஆட்கள் எல்லாம் இந்த எம்டன் சமாசாரங்களைக் கேள்விப்பட்டு சிரிக்கிறார்கள். எப்படி யிருந்தபோதிலும் இந்தக் கப்பல் வந்ததால் சர்க்கரையின் விலை இறங்கிப்போம் என்று நாம் எண்ணுகிறோம்.

நிற்க, மேன்மைதங்கிய 'வைசிராய் அவர்கள் ஏற்படுத்தி யிருக்கும் யுத்த நிதியின் ஜெனரல் கமிட்டி மீட்டிங்கு ஒன்று இன்று கவர்ன்மெண்டு அவுசில் நடந்தது. மேன்மை தங்கிய கவர்னர் அவர்களே சபா நாயகராக விருந்தார்கள். இவர்கள் பேசும்போது "எம்டன்" விஷமத்தைப் பற்றியும் பேசினார்கள். அதை மட்டிலும் இவ்விடத்தில் எடுத்து எழுதுவோம்:—

"ஒருநாள் எம்டன் சென்னையை வந்து பார்த்ததை நான் மறந்துபோகவில்லை. எம்டன் சென்னைக்குக் கொடுத்த பேட்டி பிரயோஜன மில்லாதவும் விஷமம் நோக்கமுடைய பேட்டி. இப்பேர்ப்பட்ட பேட்டியால் சில மனிதர்கள்கூட கொல்லப்டும் போனார்கள் என்று நாம் விசனப்படவேண்டும். இதனால் எந்த யுத்தத்தில் ராஜ்ஜியம் அமர்ந்திருக்கிறதோ அந்த யுத்தம் பாதிக்கப்படமாட்டாது. எம்டன் பேட்டி இரண்டொரு குடும்பங்களுக்கு விசனத்தைக் கொண்டுவந்திருக்கிறது. நாமெல்லாம் அந்த குடும்பங்களுக்கு நேரிட்டிருக்கும் சங்கடங்களுக்கா அனுதாபப்படவேண்டும். சிலநாள் வரையில் ஸ்டீமர் போக்கு வரவுகளையும் வியாபாரத்தையும் தடுத்திருக்கின்றது. ஆனால் கூடிய சீக்கிரம் இந்த குறைபாடுகள் எல்லாம் நீங்கிப்போய்விடும். இந்த ஸ்டீமரை இந்திய சமுத்திரத்திலாவது அல்லது வங்காள குடாக்கடலிலாவது கண்டு பிடிப்பது ஒரு பெரிய புல் கட்டில் ஒரு ஊசியைத் தேடி எடுப்பதற்குச் சமமாக விருக்கிறது. எம்டனைத் தேடிக்கொண்டு அனேக ஸ்டீமர்கள் திரிகின்றன என்றும் அந்த ஸ்டீமராவது அல்லது வேறெந்த ஜெர்மன் ஸ்டீமராவது சென்னைக்கு வருவதற்கு ஏதுவில்லை என்று நான் உறுதி கூறுகின்றேன். சென்னைத் துறை சமுத்திரத்தில் ஜாக்கிரதையான ஏற்பாடுகளுட னிருந்தார்கள் என்றும் அன்றிரவு அனுபோகம் ருஜுப்படுத்தி யிருக்கிறது. அதன் பிறகும், இப்பேர்ப்பட்ட சம்பவங்கள் நடக்குமாகில் அவைகளுக்கு ஈடு கொடுக்கும்படி நகரைப் பாதுகாப்பதற்குப் போதுமான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன."

## EMDEN EXPLOITS.
## எம்டன் வேட்டை.

எம்டன் மேற்கு சமுத்திரக்கரையில் காலிக்கும், மின்காயிக்கும் மத்தியில் 5ஸ்டீமர்களை வழிமறித்து அவைகளிலுள்ள கப்பல் ஆட்களையும், சிப்பந்திகளையும் "கிரெபல்" என்னும் ஸ்டீமரில் ஏற்றி கொளும்புக்கு அனுப்பிவிட்டு பாக்கி நான்கு ஸ்டீமர்களையும் பீரங்கியால் சுட்டு சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்டது.



# Reports of Cases.
# கேசுகளுடைய ரிபோர்ட்டுகள்.

—:o:—

## PRIVY COUNCIL.
## பிரிவி கவுன்சில்.

(1)

கல்கத்தா ஐகோர்ட் அப்பீல்.

கவுன்சிலர்கள்:—லார்ட்கூஷா, லார்ட் மேளல்டன், சர்ஜான் எட்ஜ், மிஸ்டர் அமீர் அலி.

புவனேஸ்வரி குமாரர்—வாதி........அப்பீல்வாதி

vs

கயாஜில்லா கலெக்டர்—வாதி......அப்பீல் பிரதிவாதி

வியாஜ்ஜிய சங்கிரகம்:—ராஜாராம் பகதூர் சிங் என்பவர் இறந்து போய்விட்டார் இவருக்கு11லக்ஷத்திற்குமேல் மதிப்புள்ள சொத்திருந்தது. இவர் இறந்துபோவதற்கு முந்தி தம்முடைய புத்திரனின் விதவைக்கு ஜீவனம்சத்திற்காக சொற்ப சொத்து கொடுத்துவிட்டு பாக்கி எல்லாச் சொத்துக்களையும் தம்முடைய பௌத்ரியாகிய ராஜகுமாரி ரத்னகுமார் என்பவளுக்கு உயில் மூலியமாக கொடுத்துவிட்டு இறந்துபோனார்; இந்த ராஜகுமாரி ரத்னகுமார் லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்டிரேஷன் (Letters of Administration) என்கிற சர்ட்டிபிகேட் பெறுவதற்காக மனுவுடன் உயிலை அடக்கம்செய்து கயா ஜில்லா ஜட்ஜிக்கு மனு செய்துகொண்டனள். மனுவில் சொத்தின் மதிப்பு 11 லக்ஷ ரூபாய் என்று மதிப்பு போடப்பட்டிருக்கிறது. ஜில்லாக் கோர்ட்டார் இந்த மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். இந்த உத்திரவிற்கு விரோதமாக ஐகோர்ட்டிலும் பிரிவு கவுன்சிலிலும் அப்பீல்கள் செய்துகொள்ளப்பட்டதில் அக்கோர்ட்டார்கள் மனுவை ஏற்றுக்கொள்ள, லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்டிரேஷன் என்கிற வார்ஸ் சர்ட்டிபிக்கேட் பிறப்பிக்கப்பட்டது.

ஷை ராஜகுமாரி ரத்னகுமார் உயில் எழுதி வைத்துவிட்டு இறந்து போய்விட்டாள். உயில் சொத்து அவளுடைய குமாரத்திக்குச் சேரவேண்டுமென்றும் அவளுடைய புருஷனும் தாயாரும் எக்ஸிக்கியூட்டர்களாக விருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. இந்த எக்ஸிக்கியூட்டர்கள் லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்டிரேஷன் என்கிற சர்டிபிக்கேட் பெறுவதற்காக 30-5-1895 ஜில்லா ஜட்ஜுக்கு மனு செய்துகொண்டார்கள். 23-8-1902ல் லெட்டர்ஸ் ஆப் அட்மினிஸ்டிரேஷன் சர்ட்டிபிக்கேட் பிறப்பிக்கப்பட்டது. சட்டப்பிரகாரம் கலெக்ட்டருக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அந்தக் கால முதல் 16-7-1908 வரையில் கலெக்டர் கேட்டபோதெல்லாம் எக்ஸிக்கியூட்டர்கள் விபர ஜாப்பிதாக்கள் பல தாக்கல் செய்திருக்கிறார்கள்.

கலெக்டர் இந்த ஜாப்பிதாக்களில் சொல்லப்பட்டிருந்த எஸ்டேட்டின் கிறைய மதிப்பில் திருப்தி அடையாமல் சட்டப் பிரகாரமுள்ள எஸ்டேட் விபர ஜாபிதா தாக்கல் செய்யப்படவில்லை என்றும் எஸ்டேட்டின் சொந்தக்காரியாகிய புவநேஸ்வரி குமார், கலெக்ட்டர் இஷ்டப்படி எஸ்டேட்டின் மதிப்புத் தொகையை ஜாப்பிதாவில் சேர்திருத்த சம்மதமற்றவளாயிருக்கிறாள் என்று கூறும்படியாக ஜில்லா ஜட்ஜிக்கு கோர்ட் பீஸ் ஆக்ட் 19-வது பிரிவு 4-வது கிளாசின்படி மனு செயதுகொண்டார்.

எஸ்டேட்டின் சொந்தக்காரியாகிய புவனேஸ்வரி குமாருக்கு ஜில்லா ஜட்ஜி நோட்டீஸ் பிறப்பித்தார்கள்.

புவனேஸ்வரி குமாரியின் ஆக்ஷேபனை:—கோர்ட் பீஸ் ஆக்ட் 1914 பிரிவு 4 - வது கிளாசில், 1865-ம் வருடத்திய இந்தியன் வார்ச் சட்டம் 277 - பிரிவிலாவது அல்லது 1881 - வருடத்திய புரோபேட் அண்டு அட்மினிஸ் டிரேஷன் ஆக்ட் (Probate and Administration) 98 - வது பிரிவிலாவது சொல்லப்பட்டிருக்கிறபடி எஸ்டேட் விபர ஜாப்பிதா தாக்கல் செய்யப்பட்டு 6 - மாதம் சென்ற பிறகு ஷை ஜாப்பிதா திருப்திகரமாயில்லை என்கிற காரணத்தை முன்னிட்டு எஸ்டேட்டின் சொந்தக்காரரின் பேரில் யாதொரு நடவடிக்கையையும் நடத்தக்கூடாதென்று சொல்லப் பட்டிருக்கிறது. எஸ்டேட்டின் விபர ஜாப்பிதா 1905 - லியே தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் கலெக்ட்டர் இப்போது தன்பேரில் யாதொரு நடவடிக்கை நடக்க அதிகார மற்றவர் என்று கக்ஷீ சொன்னார்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—மனுவை ஆதரித்துத் தீர்ப்பு சொன்னாகள். அதாவது கலக்ட்டர் பக்கம் தீர்ப்பு சொன்னார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக புவனேஸ்வரி குமார் கல்கத்தா ஐகோர்ட்டில் அப்பில் செய்து கொண்டனள்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—அசல் கோர்ட்டு தீர்ப்பின்படி உறுதி செய்தார்கள்.

இதன் பேரில் புவ்னேஸ்வரி குமார் பிரிவிகவுன்சிலில் அப்பில் செய்து கொண்டாள்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:—புரோபேட் அண்டு அட்மினிஸ் டிரோஷன் ஆக்ட் என்கிற வார்ச் சர்ட்டிபிக்கேட் ஆக்ட் 98 - வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் சொத்து ஜாப்பிதா எப்படி யிருக்கவேண்டு

மென்றால் இறந்து போனவருடைய எஸ்டேட்டைச் சேர்ந்த எல்லாச் சொத்துகளுடைய உண்மையானவும் பூர்த்தியான விலைமதிப்பையும் அடக்கிக்கொண்டிருப்பதுடன் இறந்துபோனவருடைய சகல வரவுவகையையும் செல்லு வகையையும் அடக்கிக் கொண்டிருக்க வேண்டும். இப்பேர்ப்பட்ட ஓர் ஜாப்த்தா தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டு 6-மாதம் சென்று விட்டால் கோர்ட்டு பீஸ் ஆக்ட் 19 வது பிரிவு 4 வது கிளாசில் சொல்லப்பட்டிருக்கிறபடி கலெக்ட்டர் யாதொரு நடவடிக்கையையும் நடத்த அதிகார மற்றவர். ஆனால் இந்தக் கேசில் அப்பில் வாதியால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஜாப்பிதாவிலே அனேக சொத்துகளுக்கு முதலாவது விலை மதிப்பே போடப்படவில்லை. ஆதலால் அப்பில் வாதி தாக்கல் செய்திருக்கும் ஜாப்பிதா சட்டப்படி தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ஜாப்பிதாவாக யிராதபடியால், கீழ்க்கோர்ட்டார்கள் இந்தக் கேசை நியாயமாக முடிவு செய்திருக்கிறார்கள் என்றும் ஆதலால் இந்த அப்பீலைத் தள்ளும்படி செய்யவேண்டுமென்று மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்களுக்கு யோஜனை கூறுகிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். 1914-ம. வீ. நோ 13 Buvanaswari Kumar v Collector of Gaya (1914) M. W. N. 13.

---

(2)

கல்கத்தா ஐக்கோர்ட்டு.

கவுன்சிலர்கள்:— லார்ட் அட்க்கின்சன், லார்ட் ஷா, மிஸ்டர் அமீர் அலி, சர்ஜான் எட்ஜ்.

ராஜா துருகப் பிரசாத் சிங்—வாதி......அப்பீல் வாதி

*vs*

ராஜேந்திர நாராயண பக்ஷி வகையரு—பிரதி வாதிகள்...அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வங்காளத்தில் "மான் பூம்" சப் கோர்ட்டின் அதிகார எல்லைக்குள்ளிருக்கும் ஒரு ஊரில் ராஜா ஜெயமங்கள சிங் என்பவர் தமக்குச் சொந்தமான ஒரு குறிப்பிட்ட நான்கு எல்லைக்குள் அடங்கி யிருக்கும் 400 ஏக்ரா நிலங்களிலிருக்கும் நிலக்கரியை வெட்டி எடுத்துக்கொள்ளும்படி பிரதிவாதியாகிய ராஜேந்திர நாராயண பக்ஷி என்பவருக்கு வருடத்திற்கு ரூ. 2800 தீர்வைக்கு குத்தகைவிட்டார். நாராயண பக்ஷி என்பவர் "கபுலாயத்"என்கிற குத்தகைச் சீட்டும் 3-12-1884ல் எழுதிக்கொடுத்தார். ராஜா ஜெயமங்களசிங் என்பவர் முச்சிலிக்கையும் எழுதிக்கொடுத்தார். நாராயண பக்ஷி என்பவர் 9-12-1894 வரையில் ஷை கபுலாயத்தில் கண்டபடி தீர்வையும் செலுத்தி வந்தார். அதன் பிறகு நாராயண பக்ஷி ஷை நிலங்களில் அகப்படும் நிலக்கரி மட்டமா யிருக்கிறதென்றும் ரயில் இஞ்சின்களுக்கு உபயோகப்படக் கூடியதா யில்லை என்றும், ஆதலால் தாம் நஷ்டமடைகிறதாக தெரிவித்துக் கொண்டதின் பேரில் தீர்வை ரூபா 2800 யை ரூ. 2000 மாகக் குறைந்திருக்கிறதாக ராஜா ஜெயமங்களசிங் ராஜா நாராயண பக்ஷிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். இக்கடிதப்படிக் குத்தகை எடுத்துக்கொண்டவர் குத்தகை விட்டவருக்கு வருடத்திற்கு தீர்வை ரூ. 2000ப்படி செலுததிக் கொண்டு வந்தார். குத்தகை விட்டவரும் ஒப்புக்கொண்டு தீர்வைத் தொகையைப் பெற்றுக்கொண்டார். இப்படி இரண்டு வருடகாலம் தீர்வை செலுத்தப்பட்டும் வாங்கிக் கொள்ளப்பட்டும் வந்தது. இதன் பிறகு 1900-ல் ஜெயமங்கள சிங் இறந்துபோய்விட்டார். இவருக்குப் பிறகு இவருடைய ஷை நிலசொத்துக்கு பிரஸ்தாப கேசின் வாதியாகிய துருகப் பிரசாத் சிங் வார்சாக வந்தார். இவர் ஆதியில் பிறந்த "கபுலாயத்" குத்தகைச் சீட்டில் சொல்லப்பட்ட தீர்வை ரூபா 2800 வீதம் தமக்குச் சேரவேண்டிய நிலுவைத் தீர்வைக்கும், அதன் வட்டிக்கும், செஸ்வரிக்காகச் சேரவேண்டிய பணத்திற்காகவும் "மான் பூம்" சப் கோர்ட்டில் குத்தகை எடுத்துக்கொண்ட ராஜா நாராயண பக்ஷி வகையரு பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

பிரதிவாதிகளின் கக்ஷி:—(1) ஆதியில் பிரஸ்தாப நிலக்கரி நிலத்தைக் குத்தகைக்கு விட்ட ராஜா ஜெயமங்கள சிங் "கபுலாயத்" சீட்டில் கண்ட தீர்வை ரூபா 2800 யை ரூபா 2000 மாகக் குறைத்ததற்கு கடிதம் பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்திருக்கிறார். ஆதலால் கபுலாயத் சீட்டில் காணப்பட்ட ரூபா 2800யைப் பெற வாதி பாத்தியமுடையவ ரல்ல (2) கபுலாயத்தில் குறிப்பிட்டிருக்கும் நான்கெல்லைக்குள் 400 ஏக்ராக்களிருப்பதாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும் 275 ஏக்ராக்கள் தான் தங்களுடைய ஸ்வாதீனத்திற்கு விடப்பட்டிருக்கின்றன வென்றும் ஆதலால் அதற்குத் தகுந்தபடி தீர்வையும் குறைக்கப்படவேண்டும்:—ஆக இரண்டு கக்ஷிகள் சொன்னார்கள்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு:—346 ஏக்ராக்கள் பிரதிவாதிகளின் ஸ்வாதீனத்தி லிருக்கின்றன வென்றும் வாதிக்கு முன்னிருந்தவும் ஆதியில் குத்தகைவிட்ட ராஜா ஜெயமங்களசிங் தீர்வை ரூ. 2800யைக் குறைத்து ரூ. 2000மாகப் பெற்றுக்கொள்ளுகிற தென்று ஒப்புக்கொண்டு பிரதிவாதிகளுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார் என்று ருஜுபடுகிற தென்றும் ஆனால் கபுலாயத்தில் கண்ட 400 ஏக்ராகளையும் பிரதிவாதிகள் அனுபவிக்காமல் குறைந்தபடி 375 ஏக்ராக்களை அனுபவித்து வருவதை முன்னிட்டு இன்னும் தீர்வையை குறைத்துக்கொள்ள பாத்தியமற்றவர்கள் என்று தீர்மானித்தார்கள்.



இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக இருதரப்பார்களும் கல்கத்தா ஐகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—ஆதியில் குத்தகைவிட்ட ராஜா ஜெயமங்கள சிங் "கபுலாயத்தில்" கண்ட ரூ. 2800 தீர்வையை ரூபா 2000ம் ஆகக் குறைத்துப் பெற்றுக்கொள்ளுவதாக ஒப்புக்கொண்டு பிரதிவாதிகளுக்கு எழுதிய கடிதம் இந்தியன் ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் 17-வது பிரிவு (6) கிளாசின்படி ரெஜிஸ்டர் செய்யப்படாததால் ஷை ஆக்ட் 49-வது பிரிவின்படி சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மேலும் யாதொரு பரிகாரமும் பெருமல் தீர்வை குறைக்கப்பட்டிருப்பதால் அந்த தஸ்தாவேஜு ஊர்ச்சிதப்படுத்தபடவும் முடியாது. நிற்க, ஆதியில் "கபுலாயத்"எழுதிக்கொடுத்தவரும் எழுதி வாங்கினவரும் ஷை நான்கு எல்லைக்குள் 400 ஏக்ராக்க ளிருப்பதாக எண்ணி ரூபா 2800 தீர்வையை நிரணயத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அனுபோகத்தில் பிரதிவாதிகள் வசம் 245 ஏக்ராக்கள் தானிருப்பதாக ருஜுப்படுத்தப்பட்டிருக்கிறது; ஆதலால் குழிகள் குறைந்துபோ யிருப்பதற்கு ஏற்றபடி தீர்வையும் குறைத்துச் செலுத்த பிரதிவாதிகள் பாத்தியமுடையவர்கள் என்று தீர்மானித்தார்கள்.

இந்தத் தீர்ப்பிற்கு விரோதமாக வாதி பிரிவுகவுசிலில் அப்பீல் செய்து கொண்டார்.

பிரிவு கவுன்சில் தீர்ப்பு:—கபுலாயத்தில் சொல்லப்பட்ட மேற்படி அக்ஷரத்துகளை வாய்மொழியான சாக்ஷியத்தைக் கொண்டு மாற்ற முடியாது. குத்தகைவிடப்பட்ட நிலத்திற்கு நான்கு எல்லை குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த நான்கு எல்லைக் குள்ளிருக்கும்படியான, ஏக்ராக்கள் இவ்வளவு தான் என்று அளந்து கணக்கு செய்து போடப்படவில்லை.—உத்தேசமாகப் போடப்பட்டது. குத்தகைவிட்ட ராஜா நாராயணபக்ஷி நான்கு எல்லைக்குள் 400-ஏக்ராக்கள் இல்லை என்றும் ஏக்ராக்கள் குறைந்து போயிருக்கின்றன என்றும் பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்கு முந்தி எக்காலத்திலும் வாதிகளுடைய நோட்டீசுக்குக் கொண்டு வந்ததில்லை. ராஜா ஜெய மங்கள சிங் தீர்வையைக் குறைத்து பிரதிவாதிகளுக்கு லெட்டர் எழுதிக் கொடுத்த காலத்தில் கூட ஏக்ராக்கள் 400-ஆக யிராமல் குறைந்து போயிருக்கின்றன என்று அவருடைய கவனத்திற்கு பிரதி வாதிகள் கொண்டு வரவில்லை பிரஸ்தாபக் கேசில் "கபுலாயத்தில்" குறிப்பிடப்பட்ட நான்கு எல்லை முக்கியமாக எண்ணப்பட்டு தீர்வை நிரணயிக்கப்பட்டதே ஒழிய அந்த நான்கு எல்லைக்குள் ளிருக்கும்படி யானவும் அளந்து கூட பார்க்காமல் உத்தேசமாகப் போடப்பட்ட ஏக்ராக்கள் அல்ல, ஆதலால் அனுபோகத்தில் ஏக்ராக்கள் குறைந்து போயிருப்பதை முன்னிட்டு அதற்குத் தகுந்தபடி பிரதிவாதிகள் தீர்வையையும் குறைத்துச்செலுத்த பாத்தியமற்றவர்கள்; அனுபோகத்திலிருக்கும் நிலத்தின் விஸ்தீரணம் குத்தகை விடப்பட்ட விஸ்தீரணத்திற்கு கம்மியாக விருக்கிறதென்றும் ஆதலால் தீர்வையும் குறைந்து போகவேண்டிய தென்று ருஜுப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்தக்கேசில் பிரதிவாதிகளைச் சேர்ந்ததாக விருக்க, அவர்கள் முதலாவது கபுலாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் நான்கு எல்லைக்குள் எத்தனை ஏக்ராக்கள் இருக்கின்றன என்று ருஜுப்படுத்தவே யில்லை "கபுலாயத்தில்" சொல்லப்பட்டிருச்கும் தீர்வையை குறைக்க ஏதுவாயுள்ள எந்த விஷயத்தையும் பிரதிவாதிகள் ருஜுப்படுத்தவில்லை. ஆகையால் இந்த அப்பீலை ஏற்றுக்கொண்டு வாதிக்கு முழுத்தீர்வைக்கு டிக்கிரி கொடுக்கும்படி மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்களுக்கு யோஜனை கூறுகின்றோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். (1914) ம. வீ. நோ. I Raja Durga Prasad Singh v Rajandra Narain Bakchi 1914 M. W. N.

---

(3)

பர்மா சீப் கோர்ட்டு அப்பீல்.

கவுன்சிலர்கள்:— லார்ட் சான்சல்வர், லார்ட் மவுல்டான், லார்ட் பார்க்கர், லார்ட் சம்மர்

ஜியார்ஜ் ஸ்டான்டன் கிளிபர்ட் வகையரு—மனுதார்கள்.

*vs*

மகாராஜா சர்க்ரவர்த்தியார்—எதிர் மனுதார்கள்.

கேசின் விபரம்:— மனுதார்கள் பர்மா பாங்கியின் இரண்டு டைரக்ட்டர்களும் மானேஜரும் ஆகிய மூவர்கள் பர்மா பாங் இந்தியன் கம்பெனி ஆக்ட்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. பர்மா சீப் கோர்ட்டார் ஒரு அபிஷியல் லிக்குவிடேட்டரை நியமித்து பாங்கை முடிவுக்குக் கொண்டுவநது விடும்படி உத்திரவு செய்தார்கள். இவர்கள் ஷை மூவர்களும் புறட்டான பாலன்ஸ் ஷீட்டைப் பிறப்பித்து பாங்கி நல்ல ஸ்திதியிலிருக்கிறதென்று பத்திரிகைகளில் விளம்பரங்கள் மூலியமாக பயிரங்கப்படுத்தி ஜனங்கள் அதில் பணம் போடும்படியாகத் தூண்டினார்கள் என்று சொல்லி அவர்கள்பேரில் ரெங்கூன்

ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் பிரியாது கொடுத்தார்கள். மாஜிஸ்டிரேட் இம் மூவரையும் விசாரணை செய்து "புறப்பட்டான் பாலன்ஸ் ஷீட்டைக்கொண்டும் புறப்பட்டான், விளம்பரங்களைக் கொண்டும் குறிப்பிட்ட 3 பேர்களை பாங்கியில் பணம் போடும்படி மோசக்கருத்தான எண்ணத்துடன் தூண்டினர்கள்" என்று குற்றஞ் சாட்டி ஒரு குறத்திற்குள் மூன்று உட்பிரிவுக ளிருக்கும்படியாக குற்றப் பத்திரிகை வாசித்து அவர்களை செஷனுக்கு கமிட் செய்தார்.

சேஷன் கோர்ட்டில் நடவடிக்கை:—கீழ்க்கோர்ட்டு விசாரணையில் பாலன்ஸ ஷீட் நான்கு காரணங்களைக்கொண்டு புறப்படு என்று பிராசிக்கியூஷன் தரப்பார் சக்ஷி சொன்னர்கள். செஷன் ஜட்ஜி முதல் நாள் விசாரணையில் விளம்பரங்களைப் பார்த்து பாங்கியில் பணம் போட்டதாக ஜில்லா மாஜிஸ்டிரேட் முன்னில் சாக்ஷியம் சொல்லாததால் புறப்பட்டு விளம்பர சம்பந்தமான குற்றத்தை அடித்துப் போட்டார். இரண்டாம்நாள் விசாரணையில் செஷன் ஜட்ஜி தாமே குற்றப் பத்திரிகையில் அடியிற்கண்ட வார்த்தைகளைச் சேர்த்தார்:— "பாங்கி நல்ல ஸ்திதியைவிட்டு நீங்கியபிறகு அது நல்ல ஸ்திதியிலிருந்து வேலை நடப்பதுபோல குற்றவாளிகள் வேண்டுமென்று வேலை நடத்திக்கொண்டு வந்தார்கள். இப்படி குற்றத்தைச் சீர்திருத்தி விசாரணை நடத்தினர்கள்.

சேஷன் கோர்ட்டார் தீர்ப்பு:— முதல் மனுதாருக்கு ஒவ்வொரு குற்றத்திற்கும் 8 மாதமேணிக்கு எல்லா குற்றங்களுக்கும் 2, 3 மனுதார்களுக்கு ஒவ்வொரு குற்றத்திற்கும் 6 மாத மேணிக்கும், ஒரு குற்றத்தின் தண்டனை முடிந்தபின் இரண்டாவது குற்றத்தின் தண்டனை ஆரம்பமாக வேண்டுமென்று சொல்லி கடுங்காவல் தண்டனை விதித்தார்கள்.

இந்தக் கேசில் சம்பந்தப்பட்ட சில லாப்பாயின்ட்டுகள் பர்மா சீப் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட வேண்டுமென்று கி. பு. கோ. 431-வது பிரிவின்படி குற்தவாளிகள் வேண்டிக்கொள்ள அப்படியே அனுமதி கொடுக்கப்பட்டது.

பர்மா சீப் கோர்ட்டுத் தீர்ப்பு:—விசாரணை நடந்து வரும்போது ஜட்ஜி குற்றத்தைச் சீர்திருத்தினது பிசகென்றும் பாலன்ஸ் ஷீட்டை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில்நான்கு குறிப்பிட்டகாரணங்களைக்கொண்டு மட்டிலும் பிராசிக்கியூஷன் தரப்பார் ஆக்ஷேபித்திருக்கும்போது கீழ்க்கோர்ட்டில் சொல்லப்படாத சில காரணங்களைக்கொண்டு செஷன்ஸ் கோர்ட்டில் ஆக்ஷேபித்திருப்பது பிசகு என்றும் செத்துப்போன கடன்களை உயிருள்ள கடன்கள் போல பாலன்ஸ் ஷீட்டில் காண்பித்திருக்கிறர்கள் என்று ஒரு புதிய குற்றஞ் செஷன் கோர்ட்டில் சேர்த்திருப்பது பிசகு என்று ஜட்ஜி ஜூரிகளுக்கு கேசின் சாரம்சத்தை எடுத்துச் சொன்னதில் அனேக அம்சங்களில் எடுத்துச் சொல்லக்கூடாத விஷயங்களை எடுத்துச் சொல்லியிருக்கிறர் என்றும்—இப்படியாக குற்றவாளிகள் தங்களுக்கு செஷன் கோர்ட்டில் நியாய விரோதம் நடந்ததென்று கக்ஷி சொல்லுகிறர்கள்.

ஆனல் இவைகள் எல்லாம் நூதனமான குற்றங்களல்ல. ஏற்சனவே கீழ்க் கோர்ட்டாரால் சாட்டப்பட்ட குற்றத்திலேயே அடங்கி யிருககின்றன. ஆதலால் ஜட்ஜி குற்றத்தைச் சீர்திருத்தின பாகத்தை மட்டிலும் பார்த்து ஜூரிகள் குற்றவாளிகள் குற்றம் செய்திருக்கிறர்கள் என்று அபிப்பிராயப்பட்டிருக்கிறர்கள் என்று நாங்கள் நினைக்ககூடவில்லை என்று மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஆகவே குற்றவாளிகள் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ள அனுமதிபெற பிரிவி கவுன் கவுன்சிலில் மனு செய்துகொண்டார்கள்.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:—ஒரு கிரிமினல் அப்பீல் கோர்ட்டார், சதாரண அப்பீல் கோர்ட்டார் போல சாக்ஷி வாககுமூலங்களிலும் கேசின் நடவடிக்கைகளிலும் பிரவேசித்துப் பரிசிலனை செய்யக்கூடும். ஆனல் பிரிவி கவுன்சில் அப்படி செய்தால் அதன் அமைப்பால் ஏற்பட்ட கடமைகளுக்கு விரோதமாகும். கீழ்க் கோர்ட்டுகளில் அடியோடு நியாயம் அல்லது நியாயத்தின் கொள்கைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன என்று தெரியவந்தால் அப்பேர்ப்பட்ட கேஸுகளில் மட்டிலும் பிரவேசிப்பதற்கு பிரிவி கவுன்சிலுக்கு அதிகார மிருக்கிறது. இந்தக் கேசில் எந்தெந்த பிரஸ்னைகள் முடிவு செய்யப்பட்டனவோ அவைகளுக்கெல்லாம் சாக்ஷியங்களிருக்கின்றன. இப்படி யிருக்கும்போது ஜூரிகளுடைய அபிப்பிராயம சரியென்ருவது அல்லது ஜட்ஜி ஜூரிகளுக்கு கேசின் சாராம்சத்தை எல்லாம் எடுத்துச் சொன்ன ரென்ருவது யாதொரு அபிப்பிராயம் நாம் கூறுவது நம்முடைய கடமைக்கு விரோதமாகும் ஆதலால் இந்த மனுவை தள்ளுபடி செய்யும்படி மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்களுக்கு யோஜனை கூறுகின்ருேம். (1914) ம. வி. நோ. 11 George Staunton v King Emperor (1914) M. W. N. 11. (18—11—1913.

---



(4)

லாலா பிர்ஜலால்.............:அப்பில் வாதி.

vs

முசமட் இந்த கன்வார்....அப்பில் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—விதவை செய்த பராதீனம்.

தீர்ப்பு:—ஒரு இந்து விதவை சொத்தைப் பராதீனம் செய்வதற்கு அவசியம் ஏற்பட்டிருந்ததென்று ருஜுப்படுத்த வேண்டிய பொறுப்பு பராதீனம் பெற்றவனுடையது. அடமானப் பத்திரங்களிலாவது அல்லது கிறைய சாசனங்களிலாவது பராதீனத்திற்கு அவசியமான காரணங்கள் சொல்லப்பட்டிருப்பது போதுமான சாக்ஷியங்களாக மாட்டா. ஷை தஸ்தாவேஜிகளில் சொல்லப்பட்டிருக்கும் காரணங்களை ஆதரிக்க பிரத்தியேகமான சாக்ஷியமும் கொஞ்சமிருக்க வேண்டும். 18. இ. லா. ஜெ. 791. Lala Birjalal v Musamat Inda 18. I. L. J. 791.

---

(5)

ஷேர்பகதூர் பேயா......................அப்பில் வாதி.

vs

கங்கபாக்ஷாசிங்............அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—உயில்.

தீர்ப்பு:—ஒரு ஹிந்துவுக்கு முகம்மதிய வைப்பாட்டி மூலியமாக ஒரு புத்திரனிருந்தான். அவனை ஹிந்துவைப் போலவே வளர்த்து வந்தான். அவனுக்கும் அவனுடைய சொந்தப் புத்திரர்களுடைய காலக்ஷேபத்திற்காக சில சொத்துக்களை உயில்மூலியமாகக் கொடுத்தான். இந்த தானம் எந்தக் காலத்திலும் ஊர்ச்சிதத்தி லிருக்கவேண்டு மென்றும், தானம் செய்யப்பட்ட சொத்து எந்தக் காலத்திலும் பாகிக்கப்படக்கூடாதென்றும், பராதீனம் செய்யப்படவும் கூடாதென்றும் புத்திரன் இறந்த பின்பு அவனுடைய சொந்தப் புத்திரர்களில் எவன் வார்சு முறைப்படி சொத்தை அடைகிருனே அவன்தான் முழுச் சொத்தையும் வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்றும் மற்ற சொந்த புத்திரர்களும் பாத்தியமுடையவர்கள் என்று சொல்லப் பட்டிருந்தது.

உயில் எழுதி வைத்த சமயத்திலிருந்த சந்தர்ப்பங்களையும் ஏதுக்களையும் கொண்டு உயில் கர்த்தா உயில் செலாமணியாக வேண்டுமென்று தான் எண்ணங் கொண்டிருந்தார் என்று ருஜுப்பட்டிருக்கிறதென்று தீர்மானிக்கப் பட்டது. 18. இ. லா. ஜெ. 996.. Sher Bahadur Bharya v Ganga Baksh Singh 18. I. L. J. 996

---

(6)

பார்பதிதேசி..........அப்பில் வாதி.

vs

ருஜாபைக்கிநாத்...அப்பில் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—சேர்ந்த ஹிந்து குடும்பம்.

தீர்ப்பு:—ஒரு சேர்ந்த இந்து குடும்பத்தின் இளைய மெம்பர் பெயரில் இருந்த ஒரு சொத்து அவருடைய சுயார்ஜ்ஜிதமா என்று ஒரு பிரஸ்னை உண்டானது. இதை எப்படிக் கண்டுபிடிக்க வேண்டுமென்ருல் எந்தச் சொத்து இளைய மெம்பர் பெயரிலிருக்கிறதோ அந்தச் சொத்தை வாங்கப்பணம் எங்கே யிருந்து வந்ததென்று ஆருய்ந்து பார்க்க வேணும். இளைய மெம்பருககு பிரத்தியேகமாகப் பணமிருந்ததில்லை, அல்லது அவருக்குச் சொந்தமான பணத்தைக் கொண்டு வாங்கப்படவில்லை என்று ருஜுப்பட்டால் அந்த சொத்து அவருடைய சுயார்ஜ்ஜிதமல்ல வென்றும் குடும்பத்தின் தலைவர் குடும்ப பணத்தைக்கொண்டு இளைய மெம்பர்கள் பெயரால் அந்த சொத்தை வாங்கியிருக்கிறர் என்றும் தீர்மானிக்கப்படவேண்டும். (1914) M. W. N. 42. Parbati Dasi v Raja Baikinath (1914) M. W. N. 42.

---

## THE HIGH COURT OF MADRAS.

## மதிராஸ் ஐக்கோர்ட்.

—:o:—

(7)

ஜட்ஜிகள்:— { ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்.<br>ஆனரபில் மிஸ். ஜ. சதாசிவய்யர்.

அப்பீல்களின் நெ.262, 269 of 1909 & 122 of 1910

மதுரை மீனுக்ஷி சுந்தரேஸ்வரர் தேவஸ்தான மானேஜர் அனந்த நாருயண அய்யர் வகையரு. } பிரதிவாதிகள்.... அப்பில் வாதிகள்.

vs.

ஆதி அய்யர் வகையரு—வாதிகள்...அப்பில் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—தேவஸ்தானத்தில் பாரம்பரியமாக உள்ள உத்தியோக பாத்திதை.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—வாதிகள் மதுரையிலிருக்கும் ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேஸ்வராள் தேவஸ்தானத்தில் அதிகார பாரபாத்தியம் என்கிற உத்தியோகத்திற்கு தங்களுக்கிருக்கும் பாரம் பரியமான பாத்திதையை ஸ்தாபித்து அந்த உத்தியோகத்திற்கு ஏற்பட்டிருக்கும் வருமானங்களையும் அலவன்சுகளையும்பெற்றுக்கொள்ள மதுரை ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் வியாஜ்ஜியம் (O. S. No. 199 of 909) கொண்டுவந்தார்கள்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு :—அதிகார பார பாத்தியத்திற்கு வாதி பாத்தியமுடையவர் என்று ஆரம்ப டிக்கிரி கொடுக்கப்பட்டது. (1) அந்த உத்தியோகத்தின் மரியாதைகள் அலவன்சுகள் (2) வாதி அந்த உத்தியோக சம்பந்தமான வேலைகளை நடத்திக்கொண்டிருக்கும்போது பிரதிவாதிகள் பிரவேசிக்கக்கூடாது (3) வியாஜ்ஜியத்திற்கு முந்தியும் பிந்தியும் வாதிக்குச் சேரவேண்டிய நடை முதல் லாபம் (4) வியாஜ்யச்செலவு தொகை ஆகிய இவைகளுக்கு வாதிகளுக்கு முடிவான டிக்கிரி கொடுக்கப்பட்டது.

இந்த தீர்ப்புக்கு விரோதமாக 2 முதல் 10 பிரதிவாதிகளாகிய ஸ்தானிக்கப்பட்டவர்கள் 10-வது பிரதிவாதியாகிய அவர்களால் நியமிக்கப்பட்ட பதிவியும் ஐக்கோர்ட்டில் இரண்டு அப்பீல்கள் செய்து கொண்டார்கள். செலவு தொகைக்கும் நடை முதல் லாபத்திற்கும் தேவஸ்தானத்தின் மானேஜராகிய 1-வது பிரதிவாதியையும் கட்டுப்படுத்தி டிக்கிரி கொடுக்கப்பட்டபடியால் அவரும் பிரத்தியேகமாக ஒரு அப்பீல் செய்து கொண்டார்.

லாயர் :—அப்பீல் வாதிகளுக்காக வக்கீல்கள் மெசர்ஸ் T. ரெங்காச்சாரியாரும் C. S. வெங்கடாச்சாரியாரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக வக்கீல் மிஸ்டர் T. R. ருமச்சந்திர ஐயரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—தேவஸ்தான பழைய கால உத்தியோகங்கள் பாரம் பரியமான பாத்தியதை உடையவை என்று ஜில்லா ஜட்ஜி தாராளமாய்ச் சொல்லி யிருப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ள தயாராயில்லை. எங்களில் ஒரு ஜட்ஜி தேவஸ்தான உத்தியோகங்களின் பாரம் பரியமான பாத்தியதைகளை அங்கீகரித்துக்கொள்ள கோர்ட்டார் தாமதிக்கவேண்டுமென்று பலமான அபிப்பிராயங்கள் பல தடவை கூறி யிருக்கிறார். ஆனால் இந்தக் கேசில் சம்பந்தப்பட்ட உத்தியோகம் பாரம்பரியமாக வாதிக்கி வந்து இறங்கி யிருக்கிறதென்று ஜில்லா ஜட்ஜி முடிவு செய்திருப்பதற்கு போதுமான சாக்ஷியும் இருக்கிறது. அப்பாசாமி v. நாகப்பன் (1) கேசில் ஒரு தலைமுறையில் பிதாவுக்குப்பிந்தி புத்திரன் உத்தியோகத்திற்கு வந்தது. பாரம்பரியமான பாத்தியதையை ஸ்தாபிக்கப்போதுமானதல்ல வென்றும் ஆனால் பாரம்பரியமான பாத்தியதையை ஸ்தாபிக்க அதுவும் ஒரு சாக்ஷியம்தான் என்றும் ஆனால் அதை முடிவான சாக்ஷியமாக வைத்துக்கொள்ளக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதை அப்பீல் வாதிகள் தங்களுடைய கக்ஷிக்கி ஆதாரமாக நினைக்கிறார்கள்.

அந்தக் கேசில் வாதி பாரம் பரியமான பாத்தியதை ஸ்தாபிக்கப்படவில்லை. ஏன் என்றால் அவருடைய பாத்தியதைகளை ஆக்ஷேபிக்கக்கூடிய அனேக சந்தர்ப்பங்கள் அந்தக் கேசிலிருந்தன. ஆனால் பிரஸ்தாப வியாஜ்ஜியத்திலே வாதியின் பாத்தியதையை உறுதிப்படுத்த ஊர்ஜிதவிட்டிருக்கும் சாக்ஷியத்தைத் தவிர இன்னும் அனேக சாக்ஷியங்களை ஜில்லா ஜட்ஜி தம்முடைய தீர்ப்பில் எடுத்துக் கூறுகிறார். ஆகையால் அவர்செய்த முடிவைப் புறக்கணிப்பதற்கு நாங்கள் தயாராயில்லை. ஆகவே மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வராள் தேவஸ்தானத்தில் "அதிகார பாரபாத்தியம்" என்கிற உத்தியோகம் பாரம்பரியமான பாத்தியமுடையது. ஸ்தானிகர்கள் தங்களுக்கு இஷ்டப்பட்ட வரை நியமிக்கவும் அவர்களுடைய இஷ்டப்படி தேவையான போதெல்லாம் நீக்கவும் அதிகார மற்றவர்கள்; ஆகையால் 2 முதல் 10பிரதிவாதிகளும் செய்துகொண்ட அப்பீல்களை நாங்கள் தள்ளுபடி செய்கின்றோம்; முதல் பிரதிவாதி செய்துகொண்ட அப்பீலையும் தள்ளுபடி செய்கின்றோம்; ஏன் என்றால் மற்றப் பிரதிவாதிகள் போலவே இவரும் வாதியின் பாத்தியதையை பலமாய் ஆக்ஷேபித்திருக்கிறார். 1 முதல் 10 பிரதிவாதிகள் இந்த அப்பீல்களில் அவரவர்களுடைய கோர்ட்டுச் செலவுகளை அவர்களே பொறுத்துக் கொள்ளவேண்டும் வாதிக்கு ஒரு கோர்ட்டு அப்பீல் செலவுகளை மட்டிலும் செலுத்தவேண்டுமென்று தீர்ப்பு சொன்னார்கள். (1914) ம. வீ. நோ 385 Ananthanarayana Iyer v Athimuthu Iyer. (1914) M. W. N. 385 (26-3-1914)

---

(8)

கோயமுத்தூர் ஜில்லா அப்பீல்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ ஐயர்.
ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்.

அப்பீல் நெ. 162 of 1912.

சரஸ்வதி அம்மாள்—எதிர் மனுதார்......அப்பீல் வாதி

vs

R. சுப்பய்யா வகையரு—மனுதார்......அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—கோயமுத்தூர் ஜில்லாவில் ஓவர் ஸீயர் உத்தியோகத்தி லிருந்தவர் வாரிசில்லாமலிறந்து போய்விட்டார்; அவருடைய சகோதரர் தங்களுக்கு வார்சு செர்ட்டிப்பிக்கேட் பிறப்பிக்கப்பட வேண்டுமென்று கோயமுத்தூர ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் மனு செய்துகொண்டார்கள்.

எதிர் மனுதாரின் ஆக்ஷேபனை:— இறந்து போனவனுடைய மனைவி தன்னுடைய புருஷன் ஓவர்சியர் உத்தியோகம் செய்து பண்டு ஆபீசிலும், சேவிங்ஸ் பாங்கியிலும் பணம் போட்டிருக்கிறார் என்றும் அவைகள் தன்னுடைய புருஷனுடைய சுயார்ஜ்ஜிதமென்றும் தனக்கு உயில் எழுதிக் கொடுத்துவிட்டு இறந்து போய்விட்டார் என்றும் மனுதார்கள் அவர்களுடைய மனுவில் சொல்லியிருக்கும் கடன்களுக்கும் தன்னுடைய புருஷனுக்கும் யாதொரு பாத்திதை கிடையாதென்று எதிர் மனு செய்துகொண்டனள்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் உத்திரவு:—வார்சு செர்ட்டிபிக்கேட் பிறப்பிப்பதற்கு வேண்டிய விஷயங்கள் சம்பந்தப்பட்ட வரையில் இரு கக்ஷிக்காரர்களும் ஒரே மாதிரியாய் ஒப்புக்கொள்ளுகிறார்கள். என்று சம்மேரி விசாரணைகூட செய்யாமல் தீர்மானித்து மனுதார்களாகிய சகோதரர்களுக்கு வார்சுசர்ட்டிபிக்கேட் பிறப்பிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

எதிர் மனுதார் இந்த உத்திரவிற்கு விரோதமாக ஐகோர்ட்டில் மனுசெய்தனர்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—வார்சு செர்ட்டிபிகேட் பிறப்பிப்பதற்காக நடத்தப்படும் சம்மரி விசாரணையில் சில சமயம் சிக்கலான பிரஸ்னை தீர்மானிக்கப்பட வேண்டியதா யிருக்கிற தென்கிற காரணத்தை முன்னிட்டு சம்மரி விசாரணை நடத்தி அப்பேர்ப்பட்ட கஷ்டமான பிரஸ்னை தீர்மானிக்கப்பட வேண்டியதா யிருக்கிற தென்று முடிவு செய்ய வேண்டுமென்று 17 இ. லா.ரி. 17 சென் 477வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது

[1914] ம. வி. நோ 175ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற அழகப்ப செட்டியார் v. மீனாக்ஷி அம்மாள் கேசில் இரு கக்ஷிக்காரர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்ட முக்கியமான விஷயம் ஒத்திருந்து அவைகளைக்கொண்டு இரு கக்ஷிக்காரர்களில் ஒருவருக்கு வார்சு செர்ட்டிபிக்கேட் பெற்றுக்கொள்ளும் பாத்திதை யிருக்கிறதென்று வெளிப்படையாகத் தெரியவந்தால் கோர்ட்டார் அவருக்கே வர்ர்சு சொட்டிபிகேட் பிறப்பிக்கலாமென்று சொல்லப்பட்டிருந்தபோதிலும் அப்பேர்ப்பட்ட கேசுகள் விலக்கு விதிகள் போல, எண்ணப்படவேண்டும்; சாதாரணமாய் இரு கக்ஷிக்காரர்களும் அநேக விஷயங்களில் ஒத்துச் சொல்லி யிருந்தபோதிலும் சம்மேரி விசாரணை நடத்தியே வார்சு சர்ட்டிபிக் கேட்டிற்கு யார் பாத்தியமுடையவர் என்று தீர்மானிக்க வேண்டும்.

இந்தக் கேசில் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் மனுதாரர்களுக்கு சர்ட்டிபிக்கேட் பிறப்பிப்பதற்கு முந்தி சம்மேரி விசாரணை நடத்தி தீர்மானித்திருக்க வேண்டுமென்று நாங்கள் நினைக்கின்றோம். ஆகையால் அடியிற் கண்ட பிரஸ்னைகள் சம்பந்தமாக சாக்ஷி விசாரணைசெய்து இந்த மனுவை பைசல் செய்யவேண்டும் மென்று உத்திரவு செய்து ஜில்லா ஜட்ஜியின் தீர்மானத்தை ரத்து செய்கின்றோம். என்று தீர்ப்பு சொன்னார்கள்.

1. எதிர் மனுதாரால் ஆஜர்படுத்தப்பட்டிருக்கும் உயில் உண்மையானதா ?

2. மனுவில் கண்ட தொகைகள் இறந்துபோனவருடைய பிரத்தியேகமான அல்லது சுயார்ஜ்ஜித சொத்தா? (1914) M. W. N. 26.

---

(9)

சிவில் ரிவிஷன் மனு

ஜட்ஜிகள்:— { ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்.
ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்.

நெ. 719 of 1911.

சொர்னலிங்க முதலி—வாதி............மனுதாரர்.

vs

பாச்சி நாய்க்கன் என்கிற
பச்சையப்ப நாய்க்கன் வகையரு—பிரதிவாதிகள்
......அப்பீல் வாதிகள்.

கேசின் விபரம்: — பிரதிவாதிகள் ஐவரும் சேர்ந்து வாதிக்குப் பூந்தமல்லியில் ஒரு பிராமிநோட்டு எழுதிக் கொடுத்தார்கள். இந்த நோட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதி, பிரதிவாதிகள் பேரில் பூந்தமல்லி டி. மு. க்கோர்ட்டில் ஸ்மால்காஸ் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

5-வது பிரதிவாதியின் ஆக்ஷேபனை:—5-வது பிரதிவாதி தான் யாதொரு பணமும் வாங்கவில்லையென்றும் தானும் கடன் வாங்கினது போல தன்னுடைய கையெழுத்துப் பிராமிசரி நோட்டிலிருந்தால் மற்றப் பிரதிவாதிகள் பயந்து கடனைத் தீர்த்துப் போடுவார்கள், என்று வாதி சொன்னதை முன்னிட்டுத் தான் கை யெழுத்துப் போட்டதாகவும் தான் சம்பந்தப்பட்டவரையில் நோட்டு பரிகாரமற்ற நோட்டு என்று கக்ஷி சொன்னார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—ஆண்டிமாண்டை எழுதிக்கொடுத்த பல பேரில் சிலர் நோட்டிற்குத் தாங்கள் பணம் வாங்கவில்லை என்று கக்ஷி சொல்ல பாத்திதை யிருக்கிறதென்று டி. மு. அபிப்பிராயப்பட்டு 5-வது பிரதிவாதியை மட்டிலும் நீக்கி மற்ற நான்கு பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தி வாதிக்கி டிக்கிரி கொடுத்தார்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக 1887-ம் வருடத்திய 9-வது ஆகட் 25 வது பிரிவின்படி வாதி ஐக்கோர்ட்டில் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்.

ஜட்ஜி மிஸ்டர் சதாசிவஐயர் தீர்ப்பு:—டி. மு. கோர்ட்டார் கொண்ட அபிப்பிராயம் சரியல்ல நோட்டு சேர்ந்து எழுதிக்கொடுத்தவர்களுக்குள் ஒருவர் அந்த நோட்டிற்காகப் பணம் பெற்றுக் கொண்டிருந்தால் அதுவே, நோட்டில் கையெழுதது போட்டிருப்பவர்கள் எல்லோரும் பெற்றுக்கொண்

டிருப்பதாக சட்டப்படி எண்ணப்பட வேண்டியதற்குப் போதுமானது. அப்பீல் பிரதிவாதியின் லாயர் தம்முடைய கக்ஷிக்கு ஆதாரமாக 20 ம. லா. ஜெ. 144 ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் சேஷய்யர் v. மங்கள தோஜாகி கேசில் ஜாரி செய்யப்பட்டிருக்கும் தீர்ப்பை எடுத்துக் கூறுகின்றனர். அந்தக் கேசில் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்த தனிப்பட்ட ஒருவன்தான் நோட்டிற்குப் பரிகாரம் பெறவில்லை என்று ருஜுப்படுத்தலாமென்று ஷை கேசை விசாரணை செய்த ஜட்ஜிகள் தீர்மானிப்பதாகத்தெரிகிறது. நோட்டு கூரத்தின்படி நோட்டிற்குக் கட்டுப்பட்ட ஒருவன் தானும் நோட்டை எழுதி வாங்கிக்கொண்டவனும் ஆகிய இருவரும் தான் நோட்டுக்கு கட்டுப்பட்டவனல்லவென்று நோட்டெழுதிக்கொடுககப்பட்டபின்பு ஏற்பாடு செய்துகொண்டதாக ருஜுப்படுத்தலாமென்று ஜட்ஜிகள் தீர்மானித்திருந்ததால் அந்தத் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏன் என்றால் அது இந்தியன் சாக்ஷி சட்டம் 92வது பிரிவுக்கு விரோதமானது. நரசிம்மா v ராமசாமி*(1) கேசில் புரோ நோட்டை எழுதிக்கொடுத்த பலபேர்களில் ஒருவன் தான் ஜாமீனாகயிருந்து கையெழுத்து போட்டேனே ஒழிய பரிகாரப் பணம் வாங்கவில்லை என்று கக்ஷி சொல்ல விடப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் 5 பிரதிவாதிகள் பேரிலும் டிக்கிரி கொடுக்கிறோம்.

ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்ஸர் தீர்ப்பு:—அப்பீல் பிரதிவாதி நோட்டிற்குப் பரிகாரம் வாங்கவில்லை என்றும் தான் மேலொப்பம் போட்டவன் என்று சொன்னபோதிலும் மற்றவர்கள் பணம் வாங்கிக்கொண்டிருப்பது மேலொப்பம் போட்டவனையும் கட்டுப்படுத்துமென்று இந்தியன் கண்டிராக்ட் ஆக்ட் 127, 128 பிரிவுகளில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் என்னுடைய சகோதர ஜட்ஜி சொல்லியிருக்கும் தீர்ப்புக்கு நான் சம்மதிக்கிறேன் என்று தீர்ப்பு சொன்னார். (1914) M. W. N. 27.

---

(10)

அசல் வியாஜ்ஜிய அப்பீல்.

ஜட்ஜிகள்:— { சீப் ஜட்ஜி<br>ஜட்ஜி மிஸ்டர் ஓல்ட் பீல்ட்

நெ. 105 of 1912

N. A. சீனிவாசய்யங்கார்—மனுதார்......அப்பீல் வாதி.

vs

மதிராஸ் அபிக்ஷியில் அசயினி வகையரு } எதிர் மனுதார்கள். அப்பீல் பிரதிவாதிகள்

வியாஜ்ஜிய சங்கிரகம்:—சீனிவாசய்யங்கார் மதிராஸ் ஐகோர்ட்டு இன்சால்மெண்டு கோர்ட்டில் இன்சால் வென்ட் மனு தாக்கல்செய்தார் இந்த மனு தஞ்சாவூர் ஜில்லாக் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்படும் படியாக ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல் அந்தக் கோர்ட்டிற்கு மாற்றினார். ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல் செய்த உத்திரவில் பிரசிடென்சி டவுன் இன்சால் மெண்டு ஆக்ட் 90-வது பிரிவாலும் சிவில் புரோசீஜர் கோட் 24-வது பிரிவாலும் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி மாற்றினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐகோர்ட்டில் இன்சால் மெண்டு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணை செய்யப்படுவதற்காக வெளியூரிலுள்ள ஜில்லாக் கோர்ட்டிற்கு அனுப்ப ஐகோர்ட்டிற்கு அதிகாரமில்லை என்கிற காரணம் காட்டி சீனிவாசய்யங்கார் அப்பில் செய்துகொண்டார்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல் மனுவை மாற்றினபோது அவர் முன்னில் இந்த விவாதம் உண்டாகவில்லை. அப்பீல் வாதி தரப்பிற்காக ஆஜராயிருந்த பாரிஸ்டர் மிஸ்டர் கஷாமியர் இந்தக்கக்ஷியை இப்போது சொல்லுகிறார்; பிரசிடென்சி டவுன் இன்சால்வென்டு ஆக்ட் 90-வது பிரிவில் இந்த ஆக்ட்டின்படி நடத்தப்படும் நடவடிக்கைகளில், ஐகோர்ட்டு அசல் தரப்பில் என்ன என்ன அதிகாரங்களும் நடவடிக்கைகளும் கோர்ட்டிற்கு ஏற்பட்டிருக்கின்றனவோ அவைபோலவே, அந்த கோர்ட்டாரும் பிரயோகப்படுத்த வேண்டும்; ஷை ஆக்ட் 2-வது பிரிவில் கோர்ட் என்பதற்கு "அந்த ஆக்ட்டின் அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தும் கோர்ட்டு" என்று தாத்பரியம் சொல்லப்பட்டிருக்கிறது. 3-வது பிரிவில் இந்த ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் காரியங்களுக்காக அதிகாரம் செலுத்தும் கோர்ட்டு சென்னப்பட்டணம் ஐகோர்ட்டு என்று சொல்லப்படுகிறது; ஆகையால் ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல் செய்த உத்திரவு ஐகோர்ட்டார் இன்சால் வென்டு தரப்பில் செய்த உத்திரவாகின்றது.

நிற்க புரோவின் கூியல் இன்சால் வெண்சி ஆக்ட் என்கிற வெளியூர் இன்சால் வென்சி ஆக்ட்டில் கோர்ட்டு என்கிற பதத்திற்கு ஷை ஆக்டில் சொல்லப்பட்டிருக்கிற அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தும் கோர்ட்டு என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த இரண்டு ஆக்ட்டுகளிலும் சொல்லப்பட்டிருக்கும் அதிகாரம் ஒன்றாயிராமல் வித்தியாசமாயிருக்கிறது. இரண்டு ஆக்ட்களினுடைய கூரத்துக்களும் வித்தியாசமாக விருக்கின்றன.

சி. பு. கோ. 24-வது பிரிவில் ஐக்கோர்ட்டுகள் முன்னில் விசாரணைக்கு வந்திருக்கும் வியாஜ்ஜியம் அல்லது அப்பீல் அல்லது மற்ற நடவடிக்கையை தனக்குக் கீழே யுள்ளளவும் அந்த விசாரணை செய்து பைசல் செய்யக்கூடிய யோக்கிதையுடைய கோர்ட்டிற்கு மாற்றலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது; ஐகோர்ட்டார் அசல் தரப்பில் இந்த மனுவை மாற்ற அதிகார முடையவர்கள் என்பதைப்பற்றி யாதொரு அபிப்பிராயம் நாங்கள் சொல்லவேண்டிய தவசியமில்லை. இந்த அப்பீல் காரியங்களுக்காக முன்னிட்டு ஐக்கோர்ட்டுக்கு அப்பேர்ப்பட்ட அதிகார மிருக்கிற தென்று எண்ணிக்கொள்ளுவோம் அதன்பிறகு தீர்மானிக்கப்பட வேண்டிய பாக்கி பிரஸ்னை என்னவென்றால் மனு எந்தக் கோர்ட்டிற்கு மாற்றப் பட்டதோ அந்தக் கோர்ட்டார் மனுவை பைசல் செய்ய யோக்கிதையுடையவர்களா என்பதே. ஏற்கனவே சொல்லியிருக்கும் காரணங்களைக் கொண்டு யோக்கிதை யுடையவர்க ளல்லவென்று வெளிப்படையாகவே தெரிகிறது. வெளியூர்களில் சொத்துடையவர்கள் சென்னப்பட்டணத்தில் சிலருடன் ஒக்கு மத்து செய்துகொண்டு வாரண்டில் அகப்பட்டு இன்சால் வென்சி மனு கொடுத்துவிடுகிறார்கள் அப்பேர்பட்டவர்களுடைய மனுக்களை வெளியூர் கோர்ட்டுகளுக்கு மாற்றிப்போட்டால் சௌகரியமாக விருக்குமென்று அப்பீல் பிரதிவாதிகள் தரப்பில் கக்ஷி சொல்லப்படுகிறது. அது வாஸ்தவமாக விருக்கக்கூடும்; ஆனால் நாம் சட்டத்தைப் புறக்கணிக்க முடியாது என்று சொல்லி அந்த அப்பீலை ஏற்றுக்கொண்டு ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல் செய்த உத்திரவை ரத்துசெய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

---

AUGUST AND SEPTEMBER DECEISSIONS.

ஆகஸ்ட்-செப்டெம்பர் தீர்ப்புகள்.

——:o:——

(11)

[குறிப்பு :—பின்னால் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்புகள் எல்லாம் பின்பு விபரமாக நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டில் ரிப்போர்ட் செய்யப்படும்.]

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மி-ர். சேஷகிரி அய்யர்.<br>ஜட்ஜி மி-ர். குமாரசாமி சாஸ்திரி.

இரண்டாவது அப்பீல் நெ. 76 of 1913.

லாப்பாயின்ட்:—ஒரு பிராமிசரி நோட்டு.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—முதல் பிரதிவாதியின் பெயரில் எழுதிக் கொடுக்கப்பட்டது. முதல் வாதி பணம் யாருக்குச் சொந்தமோ அவனை இரண்டாவது வாதியாகச் சேர்த்து ஆக இரண்டு வாதிகளும் சேர்ந்து பிரதிவாதியின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். இந்த இரண்டு வாதிகளில் கோர்ட்டார் எந்த வாதியின்பேரில் இஷ்டப்பட்டாலும் டிக்கிரி கொடுக்கலாமென்று பிரியாதில் சொல்லப்பட்டிருந்தது.

தாவாப் பிராமிசரி நோட் பரிகாரம் பெற்றுக் கொள்ளாமல் எழுதிக் கொடுக்கப்பட்ட பிராமிசரி நோட்டு என்று முதல் கோர்ட்டார் முடிவு செய்து வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாக 2-வது பிரதிவாதி 1-வது வாதியை அப்பீல் பிரதிவாதிகளில் ஒருவராகச் சேர்த்து முதல் அப்பீல் செய்து கொண்டார்.

தாவாப் புரோநோட் யாருடைய பெயரில் எழுதப்பட்டிருக்கிறதோ அப்பேர்ப்பட்ட 1-வது வாதி அப்பில் செய்துகொள்ளாததால் முதல் அப்பீல் கோர்ட்டார் வியாஜ்ஜியத்தை விசாரணைச் செய்யாமலே தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இரண்டு வாதிகளும் சேர்ந்து இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—முதல் அப்பீல் கோர்ட்டார் அப்பீலைத் தள்ளுபடி செய்திருக்கக் கூடாதென்றும் I-வது வாதியை அப்பீல் பிரதிவாதியின் ஸ்தானத்திலிருந்து அப்பீல் வாதியின் ஸ்தானத்திற்கு மாற்றிக்கொண்டு அப்பீலை விசாரணைசெய்து பைசல் செய்திருக்க வேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யர் அப்பீல் பிரதிவாதிகளுக்காக டிஸ்டர் K. V. கிருஷ்ணசாமி அய்யரும் ஆஜரானார்கள். (14—8—1914.)

---

(12)

ஜட்ஜி:—மிஸ்டர் ஓல்ட்பீல்ட்.

சிவில் ரிவிஷன் பெட்டிஷன் நெ. 595, 596 of 1913.

லாப்பாயின்ட்:—மத்திசம்.

ஒரு வியாஜ்ஜியத்தின் கக்ஷிக்காரர்கள் தாங்களே ஒரு மத்தியஸ்தரின் தீர்மானத்திற்கு வியாஜ்ஜியத்தை அனுப்பிப் போட்டு ஷை மத்தியஸ்தர் தீர்மானம் சொல்லும் பரியந்தம் கேசின் விசாரணையைத் தள்ளி வைக்கும்படியாக சப் ஜட்ஜியை வேண்டிக்கொண்டார்கள். ஆனால் சப் ஜட்ஜி கக்ஷிக்காரர்கள் வேண்டிக்கொள்ளாமல் தாமே ஒரு மத்தியஸ்தரை நியமித்தார். மத்தியஸ்தரும் தீர்மானம் சொல்லிவிட்டார். கோர்ட்டார் மத்தியஸ்தரை நியமித்தது எவ்வளவு சட்ட விரோதமாக விருந்தபோதிலும், அந்த மத்தியஸ்தரின் தீர்மானப்படி டிக்கிரி கொடுக்கப்பட்டுப் போய்விட்டால் அதற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளவும் முடியாது

* (1913) M. W. N. 336.

சிவில் ரிவிஷன் மனுவும் தாககல் செய்யவும் முடியா தென்று தீர்மானிக்கப்பட்டது. (18—8—1914.)

லாயர்கள் :— மனுதார் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் பிரகாசமும், அப்பீல் பிரதிவாதியின் தரப்பிற்கு வக்கீல்கள் மெசர்ஸ் P. நாராயண மூர்த்தியும் P. சோமசுந்திரமும் ஆஜரானார்கள்.

---

(13)

ஜட்ஜிகள்:—சீப் ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் ஹானே.

அப்பீல் நெ. 152 of 1911.

லாப்பாயின்ட்:—கிரைய சாசனம் - அடமானம்.

ஒரு கிரைய சாசனம் பிறந்த தினத்திலேயே கிரையம் செய்தவன் கிரையத் தொகையை 10-வருடங்களுக்குள் திருப்பிக் கொடுத்துவிட்டால் கிரையம் செய்யப்பட்ட சொத்து மறுபடியும் தனக்கே கிரையம் செய்து கொடுக்கப்படுமென்று கிரையம் பெற்றவனிடமிருந்து ஒரு வர்த்தமானக் கடிதம் எழுதி வாங்கினன். இந்தக் கிரையம் ஒரு கிரைய சாசனமாக மாட்டாதென்றும் அடமானம் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மெசர்ஸ் டி. ரெங்காச்சாரியாரும், S. முத்தய்யா முதலியாரும், மெசர்ஸ் K. சீனிவாசய்யங்காரும், G. S. ருமச்சந்திரய்யரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காகவும் ஆஜரானார்கள். (19—8—1914.)

---

(14)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்

அப்பீல் நெ 57 of 1911.

லாப்பாயின்ட்:—முந்திய வியாஜ்ஜியம் பிந்திய வியாஜ்ஜியத்தைக் கட்டுப்படுத்தல்.

ஐகோர்ட்டுத் தீர்ப்பு :—ஒரு ஹிந்து விதவை ஒரு மைனர்பேரில் வியாஜ்ஜியம் செய்து டிக்கிரி பெற்ருள். இந்த வியாஜ்ஜியத்தில் கார்ட்டியன் அலக்ஷியமாகவும் மோசடியாகவும் வியாஜ்ஜியத்தை நடத்தினதை முன்னிட்டு விதவைக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டது. விதவை இறந்துபோய் விட்டாள். மைனர் மேஜரானவுடன் அந்த டிக்கிரியை ரத்து செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். இந்த வியாஜ்ஜியத்தில் அனந்தரவார்சு பிரதிவாதியா யிருந்தான். விதவைக்குக் கொடுக்கப்பட்ட டிக்ரிரி போலவே தனக்கும் டிக்கிரி கொடுக்கப்பட வேண்டுமென்று தக்ஷி யாடக்கூடாது. விதவை மைனர்பேரில் செய்த வியாஜ்ஜியத்தில் கார்டியன் மைனருக்கு ஆதாரமாயுள்ள ஒரு உயிலை எடுத்து கோர்ட்டாருக்கு காண்பித்து தக்ஷிபாடாமல் மைனர் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டதாக கற்பனை செய்து தக்ஷிபாடினல் அவள் சட்டப்படி அலக்ஷியமாகவும் மோசடியாகவும் வியாஜ்ஜியத்தை நடத்தினதாக எண்ணப்படுவான்.

ஜட்ஜி மிஸ்டர் ஸ்பேன்சர்:—ஒரு விதவை பெற்ற டிக்கிரியாவது அல்லது அவள்பேரில் கொடுக்கப்பட்ட டிக்கிரியாவது அவளுடைய ஜீவதிசையில் அனந்தரவார்சு அதே வியாஜ்ஜிய மூலத்திற்காக கொண்டுவந்த வியாஜ்ஜியத்திற்குத் தடையாக விருக்கமாட்டாது ஒரு அனந்தரவார்சு மற்றொரு அனந்தரவார்சுபேரில் கொண்டுவரும் வியாஜ்ஜியத்தையும் அது தடைபடுத்த மாட்டாது.

லாயர்கள் :— அப்பீல் வாதிக்காக மிஸ்டர் P. நாராயணமூர்த்தியும் அப்பீல் பிரதிவாதிக்காக வக்கீல்கள் மெசர்ஸ் S. சீனிவாசய்யங்காரும் வி. ருமதாசும் ஆஜரானார்கள். (19—8—1911.)

---

(15)

ஜட்ஜி.—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்.

கிர்மினல் ரிவிஷன் கேஸ் நெ. 115 of 1914.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—குடித்துவிட்டு ஒழுங்கீனமாக நடந்த நடவடிக்கைக்காக 10 பேர்கள் பென்ச் கோர்ட்டின் முன்னில் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். இந்தக் குற்றவாளிகள் இருவர் மற்றவர்கள் பேரில் "காயம் விளைவித்தவும்" "அத்துமீறி பிரவேசித்த" குற்றங்களுக்கு குற்றஞ் சாட்டினார்கள். கேஸ் ராஜியாய்ப் போய்விட்டது. பென்ச் கோர்ட்டார் குற்றவாளிகளின் ஆக்ஷேபனையை ஏற்றுக் கொண்டு கேசைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளை விசாரணை செய்யும்படியாக உத்திரவு செய்தார்கள்.

அப்பேர்பட்ட உத்திரவு பிறப்பிக்க அதிகாரமில்லை என்றும், ஜில்லா மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பி யிருக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

லாயர்கள் :—மனுதாருக்காக வக்கீல் மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யரும், கவர்ன்மெண்டு தரப்பிற்காக பப்ளிக் பிராசிக்கியூட்டரும் ஆஜரானார்கள்.

(21—8—1914.)

---



(16)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 106, 151 of 1914.

லாப்பாயின்ட்:—சட்ட விரோதமான விசாரணை.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு :— டிவிஷனல் மாஜிஸ்டிரேட் ஒருவர் குற்றவாளியின்பேரில் கொண்டுவரப்பட்ட கேசை விசாரணை செய்து குற்றப் பத்திரிகை வாசித்தார். குற்றப் பத்திரிகை வாசித்தபின்பு மாஜிஸ்டிரேட் மாற்றப்பட்டுப் போய்விட்டார். ஆகவே மறுபடி வந்த மாஜிஸ்டிரேட் மறுபடியும் கேசை ஆதிமுதல் விசாரணை செய்ய ஆரம்பித்து பிரியாதியைக் கூப்பிட்டு விசாரணை செய்து குற்றவாளியை டிச்சார்ஜ் செய்துவிட்டார். ஜில்லா மாஜிஸ்டிரேட் இந்தக் கேசைப் பரிசீலனை செய்து இந்தக் கேசை புனர் விசாரணை செய்யும்படி மாஜிஸ்டிரேட்டிற்கு உத்திரவு செய்தார்.

டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால் குற்றவாளி டிச்சார்ஜ் செய்யப்பட்டது, குற்றவாளி விடுவிக்கப்பட்டதற்குச் சமம். ஆகையால் அவனைப் புனர விசாரணை செய்யும்படி ஜில்லா மாஜிஸ்டிரேட் உத்திரவு செய்ய அதிகாரமற்றவர் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :— மனுதாருக்காக பாரிஸ்டர்கள் மெசர்ஸ் T. பிரகாசமும் B. நரசிம்மராவும் எதிர் மனுதாருக்காகப் பப்ளிக் பிராசிக்கியூட்டரும் ஆஜரானார்கள். (25—8—1914 )

---

(17)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்கும்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜியும்

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 77 of 1914.

லாப்பாயின்ட் :— கிரிமினல் நடவடிக்கையில் செலவு தொகை.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு :—ஒரு கக்ஷிக்காரன் நிலத்தை வசப்படுத்திக் கொள்ளும்படி கி. பு. கோ. 145 - வது பிரிவின்படி மனு செய்துகொண்டான். டிவிஷன் மாஜிஸ்டிரேட் மனுவின்பேரில் உத்திரவு செய்து செலவு தொகைக்கும் உத்தரவு செய்தார். செலவு தொகைக் குறிப்பு அவனுடைய பிளீடரால் தாக்கல் செய்யப்பட்டது. மாஜிஸ்டிரேட் அந்தக் குறிப்பில் காணப்பட்ட தொகை செலவு தொகையில் சேர்க்கப்படும்படி உத்திரவு செய்தார். அதன் பிறகு கக்ஷிக்காரன் இறந்துபோய் விட்டான். அவனுடைய புத்திரன் ஏறக்குறைய மூன்று வருஷம் சென்றபிறகு தனக்கு செலவு தொகை கிடைக்க வேண்டுமென்று மனு செய்துகொண்டான்.

ஏற்கனவே உததிரவு செய்யப்பட்ட செலவு தொகையைப் பெற்றுக்கொள்ளுவதற்காக புத்திரனை சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாகச் சேர்த்துக்கொள்ள கோர்ட்டாருக்கு இயல்பிலேயே அதிகாரமிருக்கிறதென்றும் ஆனல் கிரிமினல் புரோசிஜர் கோடில் இம்மாதிரி கேசிற்கு மார்க்கம் சொல்லப்படவில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள் :— மனுதாருக்காக வக்கீல் மிஸ்டர் P. R நாருயண மூர்த்தி அய்யரும் எதிர் மனுதாருக்காக பப்ளிக் பிராசிக்கியூட்டரும் ஆஜரானார்கள்.

---

(18)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

இரண்டாவது அப்பீல் நெ. 2600 of 1913.

லாப்பாயின்ட்:—செல்லுபடியுள்ள ஜப்தி.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—பாதி கிரமமாயுள்ள ஒரு பட்டாவை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு ஜப்தி செய்யப்பட்டது. அது முழுதிலும் சட்ட விரோதமல்லவென்றும் சட்டப் பிரகாரம் சேரவேண்டிய தொகை சம்பந்தப்பட்ட வரையில் அந்த ஜப்தி செல்லுபடியுள்ளதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் L. A. கோவிந்த ராகவய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக வக்கீல் மிஸ்டர் V. புருஷோத்தமய்யரும் ஆஜரானார்கள்.

---

(19)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

சிவில் பிசிவேனியல் அப்பீல் நெ. 113 of 1914.

லாப்பாயின்ட்:—ஜாமீன்தார்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—தீர்ப்புக் கடனாளி கடனை செலுத் தவறிப்போய் விட்டான் என்று ருஜுப்படும் பரியந்தம் ஜாமீன்தார் அல்லது மேலொப்பம் போட்டவன்பேரில் டிக்கிரி நிறைவேற்றப்படக்கூடாது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் R. குப்புசாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யரும் ஆஜரானார்கள்.

---

(20)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

இரண்டாவது அப்பீல் நெ. 2415 of 1913.

லாப்பாயின்ட்:—கால நிரணயச் சட்டம்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—பராதீனம் செய்த விதவையின் ஜீவதிசைக்குப் பிறகு இந்தப் பராதீனம் தன்னை கட்டுப்படுத்த மாட்டாதென்று கோர்ட்டார்

கூறும்படியாக தூர பாத்தியமுடைய (அதாவது விதவை இறந்துபோன வுடனே பாத்தியம் பாராட்டக்கூடிய அனந்தரவார்சல்ல) ஒரு அனந்தரவார்சு வியாஜ்ஜியம் கொண்டுவந்தான்.

இந்த வியாஜ்ஜியத்திற்கு லிமிட்டேஷன் ஆக்ட் 135வது ஆர்ட்டிகள் பொருந்தாது. ஆனால் 125ஆர்ட்டிகல் பொருந்துமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் P. நாராயண மூர்த்தியும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் V. ருமதாசும் ஆஜரானார்கள்.

---

(21)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

இரண்டாவது அப்பீல் நெ. 427 of 1912.

லாப்பாயின்ட்:—ஸ்ரீதனம்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—தாயாருடைய ஸ்திரீதன சொத்திற்காக சொந்தப் புத்திரனும் வைப்பாட்டியின் புத்திரியும் பாத்தியம் பாராட்டினார்கள். வைப்பாட்டியின் புத்திரியைப் பாக்கிலும் சொந்தப் புத்திரன் அதிக பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கேசில் ஒரு ஸ்திரி சொந்த புருஷனுக்கு ஒரு புத்திரனைப் பெற்றாள்; ஒரு வச்சுக்காரனுக்கு ஒரு புத்திரியைப் பெற்றாள்.

(26—8—1914.)

---

(22)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

சிவில் மிசிலேனியஸ் அப்பீல் நெ. 2 of 1913.

ஐக்கோர்டுத் தீர்ப்பு:—பிதா பேரிலும் புத்திரன் பேரிலும் செய்யப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் புத்திரன் நீக்கப்பட்டபோதிலும் குடும்பச் சொத்தில் புத்திரனுடைய பாகம் இந்துலாப் பிரகாரம் டிக்ரிக்கு கட்டுப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் S. சௌந்திரராஜ அய்யங்காரும் ஆஜரானார்கள்.

---

(23)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

இரண்டாவது அப்பீல் நெ. 2203 of 1912.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:— தேவஸ்தானத்தின் 6-டிரஸ்ட்டிகளில் ஒருவர் வாதியாக விருந்து இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டு வந்திருக்கிறார். தேவஸ்தானத்தின் நிலத்தை குத்தகை எடுத்திருக்கிறவனை முதல் பிரதிவாதியாகவும் 5 டிரஸ்ட்டிகளை மற்ற பிரதிவாதிகளாகவும் சேர்த்து இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறார். ஷை 5 டிரஸ்டிகளும் வாதியையோஜனை செய்யாமல்முதல் பிரதிவாதியின் குத்தகையை புதிப்பித்திருப்பதால் நிலத்தை விட்டு முதல் பிரதிவாதியை அப்புரப்படுத்தும்படி வாதி இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறார். அசல் கோர்ட்டார் வியாஜஜியத்தை ஏற்றுக்கொண்டு வாதிக்கி டிக்கிரி கொடுத்தார்கள். முதல் அப்பீல் செய்துகொண்டதில் இந்த வியாஜ்ஜியம் கொண்டு வருவதைப்பற்றி வாதி மற்ற டிரஸ்ட்டிகளுடன் கலந்து யோஜனை செய்யாமல் இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறபடியால் இந்த வியாஜ்ஜியம் செல்லுபடியுள்ள தல்லவென்று தீர்மானித்தார்கள். இரண்டாவது அப்பீல் செய்து கொள்ளப்பட்டது. முதல் அப்பீல் கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்ததில் தவறிப் போயிருக்கிறார்கள் என்றும் 5 பிரதிவாதிகளும் வாதியை யோஜனை செய்யாமல் குத்தகையைப் புதிப்பித் திருக்கிறபடியால் இ. லா. ரி. 34 சென். 106ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற தீர்ப்பைப் பின்பற்றி வாதி இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவர பாத்தியமுடையவரென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. P. M. மீனனும் ஆஜரானார்கள்.

(26—8—1914.)

---

(24)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்.

இரண்டாவது அப்பீல் நெ. 369 of 1912.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:— தேவஸ்தான அர்சக உத்தியோகம் வார்சுக் கிரமப்படி அதை அடைய வேண்டியவனை தவிர மற்ற எவனுக்கும் பராதீனம் செய்யப்படக் கூடியதல்ல. அப்படி பராதீனம் செய்யப்பட்டால் அதற்கு சட்டப்படி வார்சுடையவர்கள் கட்டுப்பட மாட்டார்கள்.

பராதீனம் செய்த அர்ச்சகன் தன்னுடைய உத்தியோகததைச் செய்துகொண்டிருக்கும்போது பராதீனம் பெற்றவன் அந்த உத்தியோகத்தின் வருமானத்தை எவ்வளவு காலம் அடைந்திருந்தபோதிலும் அதினால் பராதீனம் செய்யப்பட்டவனுக்கு ஒரு பாத்தியம் ஏற்படமாட்டாது. அதனால் வார்சு முறைப்படி ஷை உத்தியோகத்திற்கு வரவேண்டியவர்களுடைய பாத்திதை போய்விடமாட்டாது.

லாயர்கள்:— அப்பீல் வாதிக்காக மிஸ்டர் P. நாராயண மூர்த்தியும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் P. நாகபூஷணமும் ஆஜரானார்கள்.

(1—9—1914.)

---

(25)

ஜட்ஜிகள்.—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானே.

அப்பீல் நெ. 69 of 1913.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு இனாம் நிலம் ஒரு தேவஸ்தானத்தின் பெயரிலிருந்தது. அந்த நிலத்தில் அனேகர் வீடுகள் கட்டிக்கொள்ளும்படியாக விடப்பட்டார்கள். இவர்கள் அந்த சுதந்தரத்திற்காக வருஷவாரி தேவஸ்தானத்திற்கு ஒரு உபயக் கட்டணம் செலுத்திக்கொண்டு வந்தார்கள். நீண்ட காலமாக இந்த நிலத்தை அவர்கள் அநுபவித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

வருஷவாரி கட்டணத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்குத் தான் தேவஸ்தானத்திற்குப் பாத்தியமிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் K. P. M. மீனனும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள்.



# Recent Important Decisions.

## சமீபகாலத்தில் ஜாரி செய்யப்பட்ட ஐகோர்ட்டு தீர்மானங்கள்

PART I

பாகம் I

Civil — சிவில

---

### HINDU LAW.

### ஹிந்துலா.

---

Adoption — ஸ்வீகாரம்.

விதவை ஸ்வீகாரம் எடுததுக்கொள்ள அடுத்த அனந்தரவார்சு சம்மதம் கொடுத்துவிட்டால் பிந்தி வரும் அனந்தரவார்சுகளுக்கு அந்த ஸ்வீகாரத்தை ஆக்ஷேபிக்க அதிகாரமில்லை யென்று பஞ்சாப் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

சோஹாஜ்ராம் v ருமலால் 22. இ. கே 542—21. I. C. 542.

### ADOPTION BY A WIDOW.

விதவை எடுத்த ஸ்வீகாரம்.

ஒரு விதவை ஸ்வீகாரம் யெடுத்துக்கொள்ளும் போது ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளப்படும் பிள்ளையின் சொந்த பிதாவுடன் ஒரு ஏற்பாடு செய்து கொண்டாள். அதாவது என்னவென்றால் அவளே எஸ்டேட்டை எப்போதும் போல மானேஜ்மெண்டு செய்துகொண்டு வரவேண்டும். எஸ்டேட்டிற்கு வர வேண்டிய வருமானங்களை வசூல் செய்யவும் கொடுக்கவேண்டிய பாபத்துகளைக் கொடுக்கவும். இப்படி அவளே அவள் ஜீவ தசையுள்ள பரியந்தம் மானேஜ்மெண்டு செய்துகொண்டு வரவேண்டும். அவள் இறந்துபோன பின்பு ஸ்வீகாரப் புத்திரன் அவள் சொத்தை அடையவேண்டும்—ஆக இந்தப் பிரகாரம் ஏற்பாடு செய்து கொண்டாள்.

இந்த உடன்படிக்கை நியாய விரோதம் என்றும் சட்டத்திற்கும் விரோதமானதென்றும் ஆதலால் செல்லுபடி யுள்ளதல்லவென்றும் பம்பாய் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. புருஷோத்தம் v ரக்கம்பாய், 16 பம். லா. ரி. 57 Bom L. R. 57.

### HINDU.

இந்து

ஒரு ஹிந்து முகமதிய ஸ்திரீயை வைப்பாட்டியாக வைத்துக்கொண் டிருந்தான். அவனுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பிறந்தது முதல் பிதா அந்தக் குழந்தையை இந்து ஆசார மார்க்கங்களிலேயே வளர்த்துக்கொண்டு வந்தான். பிள்ளை இந்து மார்க்கத்தின்படி வைதிகனாகவும் போய்விட்டான். அவனுக்கு இந்து மார்க்கத்தின்படியே விவாகமும் பிதா செய்து வைத்தான். இப்படி ஒரு கேஸ் கல்கத்தா ஐக்கோர்ட்டுக்கு வந்ததில் உண்டான பிரஸ்னை யென்னவென்றால் (1) பிள்ளை வைதீக இந்துவாய் போய்விட்டபோதிலும் அவன் ஹிந்துவாவானா? (2) இவனுக்குப் பிறந்த பிள்ளைகள் இந்துலாப் பிரகாரம் வார்சு பாத்தியதைக்கு உரித்தான பிள்ளைகளாவார்களா? [இந்தப் பிரஸ்னை யின்னும் தீர்மானிக்கப்படவில்லை. ஜவாப்பு அடுத்த சஞ்சிகையில் காண்க. எ-ர்] பேகிய ருமபகதூர் v பேகியா கங்கபார்க்காகூ 18 கல். வீ. 18 C. W. N. 401.

### BERAR

பீரார்

மேற்கு இந்தியாவில் வியாக்கியானம் செய்யப்பட்டு அனுஷ்டிக்கப்படும் மிதாக்ஷரச் சட்டம் பீரார் மாகாணத்திற்குப் பொருந்தும் என்று நாகப்பூர் ஜூடீஷியல் கமிஷனர் தீர்மானித்திருக்கிறார்கள். பாடியா v பாஜி 10 N. L. R. 24.

### IMPARTIBLE ESTATE.

பாகிக்கப்படக்கூடாத எஸ்டேட்.

பாகிக்கப்படக் கூடாத எஸ்டேட்டையுடைய ஒரு குடும்பத்தின் இளைய மெம்பர் தான் ஜீவதிசையிலுள்ள பரியந்தம் ஜமீனிலிருந்து ஜீவனாம்சம் பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவன். அந்த பாத்தியதை யன்னியில் அவனுடைய பிள்ளைகளுக்கு ஜெமீனிலிருந்து ஜீவனாம்சம் பெற்றுக்கொள்ள பிரத்தியேகமாக விருக்கும் பாத்திதைகளுக்குப் பதிலாக ஜீவனாம்சத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஜமீனிலிருந்து பெற்றுக் கொள்ளும்படியாக பிதா கட்டுப்படுத்தலாமா? என்கிற பிரஸ்னை சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டுக்கு வந்திருக்கும் ஒரு வியாஜ்ஜியத்தில் உண்டாயிருக்கிறது (ஜவாப்பு அடுத்த சஞ்சிகையில்காண்க) ரெங்கப்பூர் காளப்பா v கலண்டே ஆயாள்.26. ம. ல. ஜெ 205 26 M. L. J. 205.

### MAINTENANCE.

ஜீவனாம்சம்.

பாகிக்கப் படக்கூடாத எஸ்டேட்டை உடைய ஒரு குடும்பத்தின் இளைய மெம்பருடைய விதவை எஸ்டேட்டிலிருந்து ஜீவனாம்சம்பெற்றுக் கொள்ள பாத்தியமுடையவள் என்று சென்னப் பட்டணம் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். ரெங்கப்பா காளப்பா v களந்தேய் ஆயாள். 26. ம. லா ஜெ, 205, 26 M. L. J. 205.

## INHERITANCE.

### வார்சு பாத்தியதை

பீரார் மாகாணத்தில் இந்து லாவுக்கு வியாக்கியானம் சொல்லுகிறபடி ஒரு சிறிய தகப்பனுடைய புத்திரனைப் பார்க்கிலும் தங்கை வார்ஸாக வர அதிக் பாத்தியதை யுடையவள் யென்று நாகப்பூர் ஜூடிஷியல் கமிஷணர் கோர்ட்டார் தீர்ப்பு செய்திருக்கிருர்கள். பாடியா ⱱ பாகி 10. N. L: R. 24.

வம்சஸ்தர் அல்லது பந்து என்று சொல்லப்படக் கூடாத உரவின்முறையார் மிதாக்ஷரச் சட்டப்படி வார்சு வரிசையில் சேர்க்கப்படவில்லையென்று மதிராஸ் ஐக்கோர்ட்டார் தீர்மானித் திருக்கிருர்கள். சீதை அம்மாள் ⱱ நாச்சார் அம்மாள். 26 M. L. J. 10.

மிதாக்ஷரச் சட்டத்தின்படியும் அநுபோகத்தை நீக்கிப் பார்க்கும்போதும் ஒரு மாற்ருந்தாய் புத்திரனுடைய சொத்துக்கு வார்சாகவர பாத்தியமற்றவள் யென்றும், அவள் தாயுக்குச் சமானமானவள் அல்லவென்றும், கோத்திரத்தார் அல்லது சபிந்தா மாற்ருந்தாய பந்துவு மல்லவென்றும் வார்சு வரிசையிலேயே அவள் இல்லையென்றும் சொத்து அவளுக்குப் போய் சேருவதைப் பார்க்கிலும் சர்க்காருக்குப் போய்ச் சேருவது விரும்பத் தகுந்ததென்றும் மதராஸ் ஐக்கோர்ட்டார் தீர்மானித் திருக்கிருர்சள். சீதை அம்மாள் ⱱ நாச்சியார் அம்மாள் 26. ம. ல. ஜெ. 10.

## ALIENATION

### பராதீனம்.

சொந்த குடும்பத்தின் மானேஜர் ஷை குடும்பத்தின் மைனர்களுக்கு கார்டியனுக இல்லாமற்போனபோதிலும். அந்த மானேஜர் ஸ்தானத்தில் அவனுல் செய்யப்பட்ட பராதீனத்தால் மைனர்களுக்கு நன்மை உண்டாகக் கூடியதா யிருந்தால் அந்தப் பராதீனம் மைனர்களையும் கட்டுப் படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ருமாச்சாரன் ⱱ ருமகின்லால் 22 I. C. 623.

சொந்த ஹிந்து குடும்பத்தின் மூன்று சகோதரர்களில் ஒருவன் மற்ற சகோதரர்களுடைய முழு சம்மதத்துடன் ஷை குடும்பத்தைச் சேர்ந்த சொத்தைப் பராதீனம் செய்தால் அந்தப் பராதீனம் மற்ற சகோதரர்களையும் கட்டுப் படுத்துமென்று அலகபாத் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக கப்பட் டிருக்கிறது. தாக்கூர் மன் ⱱ சீதா 12 A. L. J. 52.

## ALIENATION BY FATHER.

### தகப்பனுல் செய்யப்பட்ட பராதீனம்.

தகப்பனுல் பராதீனம் செய்யப்பட்ட ஒரு பிதிரார்ஜ்ஜித சொத்தை புத்திரர்கள் ஷை பராதீனத்தை ரத்து செய்து சொத்தை யடைய வியாஜ்ஜியம் கொண்டு வந்தால், தகப்பனுக்குப் புராதீனமான கடனிருந்த தென்றும், பராதீனம் செய்வதற்கு நியாயமான காரணமிருந்த தென்று ருஜூப்படுத்த வேண்டிய பொறுப்பு பராதீனம் பெற்றுக் கொண்டவனுடையது. அந்தப் பராதீனம் புத்திரர்களைக் கட்டுப் படுத்த மாட்டாதென்று ருஜூப்பட்டால், பராதீனம் செய்யப்பட்ட தினத்தில் தகப்பனுக்கு அந்த சொத்தில் எவ்வளவு பாத்தியதையிருந்ததோ அவ்வளவு பாத்தியதையை மட்டிலும் பராதீனம் பெற்றுக் கொள்ளுகிறவன் அடைகிருன். அந்த பாத்தியதை, சொந்த குடும்பத்தில், பராதீனம் செய்யப்பட்ட பிறகு உண்டான மாறுதல்களை முன்னிட்டு அதிகரிக்கவும் மாட்டாது குறைந்து போகவும் மாட்டாது: கிரையத் தொகையின் ஒரு பாகம் மட்டிலும் புத்திரர்களை கட்டுப் படுத்தக் கூடியதா யிருந்தால், எப்படி சரியான டிக்கிரி கொடுக்கப்பட வேண்டு.மென்ருல், தகப்பனுக்கு சொத்தில் எவ்வளவு பாகமிருந்ததோ அதன் கிரையத்தைப் பராதீனம் பெற்றவனுக்குக் கொடுத்துவிட்டு, மொத்த கிரயத்தை தொகையில் அவர்களைக் கட்டுப்படுத்தப் பட்ட தொகை எவ்வளவு உண்டோ அந்தத் தொகைக்கு புத்திரர்கள்பேரில் பராதீனம் பெற்றவனுக்கு டிக்கிரி கொடுக்கப்பட வேண்டும் என்று மதிராஸ் ஐக்கோர்ட்டார் தீர்மானித் திருக்கிருர்கள். சீதாராமநாயுடு ⱱ பாலகிருஷ்ண நாயுடு 15. ம. லா. டை 78 — 15 M. L. T. 78.

## ALIENATION BY MANAGER.

### சோந்த இந்து குடும்ப மானேஜர் செய்த பராதீனம்.

சேர்ந்த இந்து குடும்பத்தைச் சேர்ந்த மானேஜர் செய்த பராதீனம் ஷை குடும்பத்தின் மற்ற மெம்பர்கள் சம்பந்தப்பட்ட வரையில் செல்லுபடி யுள்ளதாக விருக்க வேண்டுமாஞல் கிரயம் பெற்றவன் பராதீனம் செய்வதத்கு ஏற்பட்ட அவசியத்தைப் பற்றி உண்மையில் விசாரணை செய்ததாக ருஜூப்படுத்த வேண்டும். எந்த அவசியமான காரணத்தை முன்னிட்டு பராதீனம் செய்யப்பட்டதோ அந்தக் காரியத்தில் தான் கிரையைத் தொகைவினியோகப்படுத்தப் பட்டதென்று பராதீனம் பெற்றவன் ருஜூப் படுத்த சாத்தியப்படா விட்டாலும் பாதகமில்லை. உண்மையில் விசாரணை செய்ததாக ருஜூப் படுத்திஞல் போதுமான தென்று சென்னப்பட்டணம் ஐக்கோட்டார் தீர்மானித் திருக்கிருர்கள். கலக செட்டி ⱱ ருமமூர்த்தி — I. L. W. 249.



## ALIENATION FROM A CO-PARCENER

### பாகஸ்தனிடமிருந்து பராதீனம் பெற்றவன்.

சேர்ந்த ஹிந்து குடும்ப மெம்பர் ஷை குடும்பத்தைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட சொத்தில் தனக்கிருந்த பாகத்தை ஒருவனுக்குப் பராதீனம் செய்தால் பராதீனம் பெற்றவன் ஷை பராதீனம் செய்யப்பட்ட சொத்தை மற்ற பாகஸ்தர்களுடன் சேர்ந்து அனுபவிக்கிறவனுக (Tenant-in-Common) எண்ணப்பட மாட்டான். அந்தப் பராதீனத்தால் அந்தச் சொத்தில் அவனுக்கு யாதொரு பர்த்தியமும் உண்டாகவில்லை. பாக வியாஜ்ஜியத்தில் அவனுடைய பாத்தியதையை ஸ்தாபிக்க மட்டிலும் கூடும் என்று மதிராஸ் ஐக்கோர்ட்டார் தீர்மானித் திருக்கிருர்கள். நன்ஜையமுதலி ⱱ ஷண்முகமுதலி 15. ம. லா. டை. 186. 15 M. L. T. 186.

## MARRIAGE EXPENSES-

### விவாகச் சேலவுகள்.

சேர்ந்த ஹிந்து குடும்பத்தின் மெம்பர்கள் பாகப் பிரிவினை செய்து கொள்ளும்போது விவாகமாகாத மெம்பர்களுக்கு விவாகம் செய்யும் பொருட்டு விவாகச் செலவுகள் குடும்ப பொது ஐவேஜியிலிருந்து பிரத்தியேகமாக எடுத்து வைக்க வேண்டுமென்றும் ஏனெனில் இந்து லாப் பிரகாரம் விவாகம் ஒரு சமஸ்காரம் என்றும் அந்தக் காரியத்தை நடத்திவைக்கும்பொருட்டு செலவு செய்யப்படும் பொருள் எஸ்டேட்டைப் பொறுக்குமென்றும் மதராஸ் ஐக்கோட்டார் தீர்மானித் திருக்கிருர்கள். சீனிவாசய்யங்கார் ⱱ திருவேங்கிடத் தய்யங்கார் (1913) ம. வீ. நே. 282—(1914) M. W. N. 282

## MARRIED WOMAN,

### விவாகமான ஸ்திரீ.

பள்ளி ஜாதியைச் சோந்த விவாகமான ஒரு ஹிந்து ஸ்திரீ முகமதிய மதத்திற்கு மாறி முந்திய விவாகம் ஊர்ச்சிதத்தி லிருக்கும்போது ஒரு முகம்மதியனை விவாகம் செய்து கொண்டனள். இரண்டாவது விவாகம் சட்ட விரோத மென்றும் முகமதியப் புருஷனுக்கு அவள் பெற்ற குழந்தைகள் ஔரச (Illegitimate) புத்திரர்களென்றும் மதிராஸ் ஐக்கோட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. பாடம் சிராவுத்தர் ⱱ பட்டிமாபீ. 15 ம. ல. டை. 107. 15 M. L. T. 107.

## MARRIAGE.

### விவாகம்.

முகம்மதியலாவும், இந்துலாவும் அவரவர்கள் அந்தந்த மதத்தில் பிறந்ததை முன்னிட்டு அவர்களுக்குச் சொந்தமான சட்டம். அவரவர்க ளிருக்கும் தேசத்தைப் பொருத்ததல்லவென்று ஐக்கோட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

## DAUGHTER.

### புத்திரி.

புத்திரி பிதாவினுடைய சொத்துக்கு வார்சாக வந்தாள். அவள் பேரில் ஒரு டிக்கிரி கொடுக்கப் பட்டது. அந்த டிக்கிரியின் தொகை பிதாவின் எஸ்டேட்டிலிருந்து கொடுக்கப்பட வேண்டுமென்று டிகிரியில் சொல்லப்பட் டிருந்தது. எந்தக் கடனுக்காக டிக்கிரி அவள் பேரில் கொடுக்கப்பட்டதோ அந்தக் கடன் எஸ்டேட்டைக் கட்டுப் படுத்தக் கூடியதாக விருந்தாலும் சரிவில்லாவிட்டாலும் சரி, அவள் பேரில் டிக்கிரி கொடுக்கப் பட்டது. அவள் எஸ்டேட்டிற்கு பிரதிநிதியா யிருக்கிருள். ஆகையால் இந்த டிக்கிரித் தொகையை எஸ்டேட்டிலிருந்து வசூல் செய்யப்படலா மென்றும் அநந்தர வார்சுகள் அதை ஆக்ஷேபிக்க முடியாதென்றும் பஞ்சாப் சீப் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். ஜாங்கிதாஸ் ⱱ மொகபீர்பாசாத் 22 இ. கே. 240 — 22 I. C. 240.

## STRIDHANAM.

### ஸ் திரீ த ன ம்.

இறந்துபோன ஸ்திரீயின் ஸ்திரீதன சொத்தை வார்சு முறையில் அடைந்தால் அந்தச் சொத்து வார்சுகளுக்கு சர்வ சுதந்தரமாய்ப் போய்விட்டது. ஜீவ திசையுள்ள பரியந்தம் அனுபவிக்க மட்டிலும் பாத்திய மிருக்கிறதென்று பஞ்சாப் சீப் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். 22. I. C. 518.

## Restitution of Conjugal Rights.

### பெண்ஜாதி புருஷனுடன் வசிக்கவேண்டிய பாத்திதைகள்.

ஒரு பெண்ஜாதி தன்னுடைய புருஷன் தன்னுடன்கூடச் சேர்ந்து வாழவேண்டுமென்று கோர்ட்டில் தாவா செய்தனள். பெண்ஜாதி நோயா யிருக்கிருள் என்றும் ஆதலால் அவளுடன் சேர்ந்து வசிக்க முடியாதென்று கக்ஷி சொன்னுள். அவள் நோயா யிருந்தாலும் கூட, அவளுக்குத் தன்னுடைய கிரகத்தில் இடம் கொடுத்து அவளைக் காப்பாத்தக் கடமைப்பட்டவன் என்றும் பெண்ஜாதி புருஷனுக்குச செய்யவேண்டிய உபசாரணைகள் எல்லாம் அவளால் செயய முடியாமற் போய்விட்டபோதிலும் அவளுக்கு மேலே சொன்னபடி அவன் செய்யக் கடமைப்பட்டவன் என்று சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். குப்பம்மாள் ⱱ குப்பனுச்சாரி 26 ம. லா. ஜெ. 363. Kuppammal v Kuppanachari 26 M. L. J. 363.

## DEBTS OF HUSBAND.

### புருஷனுடைய கடன்.

புருஷன் வாங்கின கடன்கள் அனந்தர வார்சுகளைக் கட்டுப்படுத்தும்படியாக ஷை கடன்கள் காலாவதி தோஷத்திற்குட் படாதபடி விதவை அந

தக் கடன்களை ஏற்றுக்கொண்டு எழுதிக் கொடுக்கப் பாத்தியமற்றவள் என்று அலகபாத் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். பாவான்ட் சிங் ப டவு லட்சிங் 21 I. C. 757.

### WIDOW ACCUMULATION.
### விதவை சேருவாடு.

புருஷனுடைய சொத்திலிருந்து தனக்குக் கிடைத்த வருமானத்தைக் கொண்டு ஒரு விதவை ஒரு சொத்து வாங்கினாள். இந்தச் சொத்து அவளுடைய ஸ்திரீதனமாகமாட்டாது. எஸ்டேட்டின் வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்ட எஸ்டேட்டின் ஒரு பாகமாக எண்ணப்படும் என்று கல்கத்தா ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். குலா சந்திர சக்கரவர்த்தி ப ருமசுந்தரி தேசாயி 22 I. C. 701.

### BARRED BEBT OF HER HUSBAND.
### புருஷனுடைய கலாவதியான கடன்.

புருஷனால் வாங்கப்பட்டதும் கலாவதியாகவும் போனதுமான கடன்களைத் தீர்க்கும்பொருட்டு ஒரு ஹிந்து விதவை தன்னுடைய புருஷனுடைய சொத்தைப் பராதீனம் செய்ய பாத்தியமுடையவள் என்று கல்கத்தா ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். கோஜேந்திர நாராயணசிங் ப சான்ட் டோலால் 22 I. C. 699.

### ALIENATION BY A WIDOW.
### விதவை பராதீனம்.

பஞ்சத்தை முன்னிட்டு குடும்பச் செலவுகளுக்காக விதவை பராதீனம் செய்தது அனந்தர வார்சுகளைக் கட்டுப்படுத்தும்படியான அவசியமான பராதீனம் என்று தீர்மானிக்கப்பட்டது. 22 I. C. 699.

### GENERAL AUTHORITY.
### பொதுவான அதிகாரம்.

புருஷனுடைய சொத்துக்களைப் பராதீனம் செய்துவிடலாமென்று விதவை இறந்துபோனபின்பு சொத்திற்கு வார்சாக ஒருக்கால் வரலாமென்று சாதாரணமாக நம்பிக்கொண்டிருக்கும் பாத்திதையைத் தவிர மற்ற எந்த விதமான பாத்திதையுமற்ற அனந்தரவார்சுகள் விதவைக்குப் பொதுவாய் அதிகாரம் கொடுக்க பாத்தியமற்றவர்கள் இந்தக் கேசிற்கு விதவை செய்கிற ஒரு பராதீனத்திற்கு அனந்தர வார்சின் சம்மதத்தைக் கேட்கும்படியான கேசிற்கும் வித்தியாச மிருக்கிறது. 16 O. C. 359.

### SALE BY A WIDOW.
### விதவை செய்த விற்பனை.

ஒரு சாதாரணப் பத்திரத்தின் கடனை தீர்ப்பதற்காக விதவை தன்னுடைய புருஷனுடைய சொத்தை விற்பனை செய்தாள். கடன் பத்திரம் சாமானியப் பத்திரமா யிருப்பதை முன்னிட்டு சொத்தை வாங்கினவனுக்கு அச் சொத்தில் ஜீவதிசை பாத்தியமட்டிலும்தா னிருக்கிறதென்று எண்ணக்கூடாது அந்த சொத்தில் அவனுக் கிருக்கும்படியான பாத்தியம் எவ்வளவு என்பது தஸ்தாவேஜியின் தாத்பரியத்தையும் கக்ஷிக்காரர்களின் எண்ணத்தையும் பொருத்ததென்று கல்கத்தா ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 22 I. C. 699.

### COMPOUND INTEREST.
### வட்டிக்கு வட்டி.

வருஷத்திற்கு 100 க்கு 18 வீதம் வட்டிக்கு வட்டி போட்டு கடனைச் செலுத்துவதாக விதவை எழுதிக் கொடுத்திருந்தாள். இவ்வளவு கடுமையான வட்டிக்கு கடன் வாங்க அவசியம் ஏற்பட்டதற்கு ருஜுவில்லாதபோது, இந்த வட்டி மிகக் கடுமையான வட்டியா யிருப்பதால், இந்த வட்டிப் பிரகாரம் டிக்கிரி கொடுக்க முடியாதென்று பஞ்சாப் சீப் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. 21 I. C. 757.

### PURCHASE BY WIDOW OUT OF INCOME.
### வருமானத்தைக்கோண்டு விதவை வாங்கின சோத்து.

புருஷனுடைய எஸ்டேட்டின் வருமானத்தைக் கொண்டு விதவை வாங்கின சொத்து அவளுடைய சொந்த சொத்தென்று சகஜமாக யூகிக்கப்படுகிறது. இந்த சொத்து அவளுக்குச் சொந்தமாகாது என்றும் அந்த சொத்து புருஷனுடைய எஸ்டேட்டைச் சேர்ந்ததென்றும் அதை அவளிடமிருந்து பெற்றுக் கொள்ள எத்தனிக்கும் அனந்தரவாரசுகள் அதை ருஜுப்படுத்தி ஸ்தாபிக்க வேண்டுமென்று அயோத்தியா கமிஷனர் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 16 O. C. 359.

## CIVIL PROCEEDURE CODE
## சிவில் புரோசிஜர் கோர்ட்

---

### Clerical and Arithmetical errors
### குமஸ்தா பிசகுகள் கணிதப் பிசகுகள்

ஒரு டிக்கிரியில் குமாஸ்தா தவறுதல்களும் எண் பிசகுகளுமிருந்து கண்டுபிடிக்கப்பட்டால் கோர்ட்டில் மனுகொடுத்து உத்தரவு பெற்று அவைகளைச்சீர்திருத்திக் கொள்ளவேண்டும் என்று மதிராஸ் ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். வெங்கட்ட ரத்தனம் ப சங்கர நாருயணு I. L. W. 298.

### CLERICAL ERROR IN A AWARD
### மத்தியஸ்தர் தீர்மானித்ததில் குமாஸ்தா பிசகு

கோர்ட்டாரால் தாக்கல் செய்யும்படி உத்திரவு செயயப்பட்ட ஒரு மத்தியஸ்தர் தீர்மானத்தில் ஒரு குமஸ்தா பிசகு செய்திருந்தால் அதைத் திருத்திக்கொள்ள சி. பு. கோ. 151 பிரிவின்படி கோர்ட்டாருக்கே அதிகாரமிருக்கிறது. 13 P W R 1914.



### Dismissal for Default.
### அஜாக்கிரதையை முன்னிட்டு கேஸ் டிஸ்மிஸ்

வாதியின் அஜாக்கிரதையை முன்னிட்டு கேஸ் டிஸ்மிஸ் செய்யப்பட்டது, அடுத்த நாள் வியாஜ்ஜியத்தைப் பயிலில் தாக்கல் செய்துக்கொள்ள வேண்டுமென்று மனு செய்து கொண்டான். டிக்கிரி தீர்ப்பு ஆகிய இவைகளின் நகல்களை தாக்கல் செய்யும்படி கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள். இவைகளை தாக்கல் செய்யாததை முன்னிட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதன் பிறகு வாதி இன்னொரு மனு செய்து கொண்டு தாவாவை பயிலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்க, கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள். ஆனால் வாதி அந்த மனுவில் முதல் மனு டிஸ்மிஸ் செய்யப்பட்டு இரண்டு மாதங்கள் கிரமித்து பிரஸ்தாப மனு செய்துகொண்டதற்குக் காரணம் சொல்லவில்லை. கால நிரணயச் சட்டம 163 - வது ஆர்டிகிலின்படி அந்த மனு டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று சென்னப்பட்டணம் ஐகோட்டார் தீர்மானித் திருக்கிறார்கள் M. சுப்பராவ் ப வெங்கட்ட ரத்னம் 22, இ. கே. 689—22 I, C. 639.

### EXPARTEE DECREE.
### எக்ஸ்பார்ட் டிக்கிரி.

பிரதிவாதி கொஞ்சம் காலம் வீட்டில் இல்லாமலிருக்கும்போது சம்மனை கதவில் ஒட்டி சார்வ் செய்வது கிரமமாக சார்வ் செய்ததாக மாட்டாது. அப்பேர்ப்பட்ட ஒரு பிரதிவாதி ஆஜராகாததை முன்னிட்டு அவன் பேரில் கொடுக்கப்பட்ட எக்ஸ்பார்ட்டி டிக்கிரியை சி. பு. கோ 9-வது ஆர்டர் 13-வது ரூல் பிரகாரம் ரத்து செய்து வைக்கப் பாத்தியமுடையவன் என்று மதிராஸ் ஐகோர்ட்டார். தீர்மானித்திருக்கிறார்கள். வெள்ளையப்ப செட்டி ப வீரப்ப செட்டி 1. லா. வி. 1—1 L. W. !.

### ATTACHMENT.
### ஜப்தி.

அடமானச்சொத்தை ஏலம் போடும்படி கோர்ட்டார் கொடுத்த பின்பும் ஏலம் எடுத்தவன் கோர்ட்டில் பணம் கட்டுவதற்கு முந்தியும் செய்யப்பட்ட ஜப்தி செலாமணியாகக் கூடியதல்ல; ஏனென்றால் ஜப்தி செய்த காலத்தில் கோர்ட்டாருடைய வசத்தில் சொத்தில்லை. ஆர்டர் 52 ரூல் 21 -பார்க்கவும்; திருவேங்கட்டராயலு ப திருவேங்கடய்யா 26 M. L. J. 364.

### MATERIAL IRREGULARITY.
### முக்கியமான ஒழுங்கீனம்.

அதிகாரவரம்பை மீறி போடப்பட்ட ஒரு ஏலம் முக்கியமான ஒழுங்கீனம் என்று எண்ணப்பட்டு வலுவற்ற தாய்ப் போய்விடுமென்று மதிராஸ் ஐக்கோட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. ருமநாதன் செட்டி V. அருணசலம் செட்டி (1914) ம. வீ. நோ. 46—(1914) M. W. N. 46.

## CONTRACT ACT.
## ஒப்பந்த சட்டம்

ஒருவன் தன்னுடைய சொத்தை மகா அவசரத்தை முன்னிட்டு தாழ்ந்த விலைக்கு விற்க ஒப்பந்தம் செய்திருப்பதை முன்னிட்டு அவன் தகாத செலவாக்கு பிரயோகத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறுன் என்று எண்ணிவிடக்கூடாது. 25. M. L. J. 325.

### PROMISORY NOTE.
### பிராமிசரி நோட்.

நம்பிக்கை மோசக் குற்றத்திற்காக ஒருவன் பேரில் கிரிமனல் கேஸ் எடுக்கப்பட்டிருக்கிற போது அவனுக்கும் பிரியாதிக்கு முள்ள கணக்கு வழக்குகளைப் பார்த்து தீர பரிசோதித்து பிரியாதிக்கு சேர வேண்டிய தொகைக்காக அவன் பேரில் ஒரு பிராமிசரி நோட்டு எழுதி ஒரு மூன்றுவது மனிதன் கையில் கொடுத்து பிரியாதி கேசை வாப்பீஸ் பெற்றுக் கொண்டவுடன் பிராமிசரி நோட்டை அவன் கையில் கொடுத்துவிட வேண்டுமென்று சொன்னான். அந்த ஏற்பாட்டை மாஜிஸ்டிரேட்டும் ஒப்புக்கொண்டார். நம்பிக்கை மோசக் கேஸ் சமாதானம் செய்துகொள்ளப்படக் கூடாத கேஸ்; அந்தக் கேசை சமாதானம் செய்து கொள்வதற்காக அந்த பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தச் சட்டம் 23-வது பிரிவின்படி சட்ட விரோதமான ஒப்பந்தம் என்று அலகபாத் ஐகோர்ட்டார் தீர்மானித் திருக்கிறார்கள். 54 P. L. R. 1914,

### TIME—BARRED DEBT.
### காலாவதியாகப் போன கடன்.

கடன் காலாவதியாய் போய்விட்டது. கடன் தொகை இவ்வளவு என்று பிரதிவாதி கைப்பட ஒரு கடுதாசியில் குறிக்கப்பட்டிருந்தது. இந்த குறிப்பு கடுதாசியை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதி வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். இந்த குறிப்பு பிராமிசரி நோட்டாக எண்ணப்பட வேண்டுமானால் ஒப்பந்தச் சட்டம் 25-வது பிரிவின்படி தொகையைக்கொடுக்க அதில் வாக்களிக்கப்பட் டிருக்கவேண்டும். இந்த குறிப்பு கடுதாசியில் அப்படி வாக்குதானம் செய்யப்படாமல் தொகையின் "எண்"மட்டிலும் போடப்பட்டிருந்தபடியால் தாவாவை கல்கத்தா ஐகோர்ட்டார் தள்ளுபடி செய்துவிட்டார்கள். தேபி பிரசாத் ப ரும் குலாம் சாகு 19 C. L. J. 263

### Agreement in Restraint of Trade

வியாபாரத்தைத் தடுப்பதற்கான உடன்படிக்கை

A, என்பவன் C என்பவனுக்கு கூலி ஆட்கள் சப்ளை செய்யாமலிருந்தால் B என்பவனுக்கு ஒரு குறிப்பிட்ட தொகை கொடுப்பதாக வாக்களித்து ஒரு உடன்படிக்கை எழுதிக்கொடுத்தான் இந்த உடன்படிக்கை வியாபாரத்தை தடுப்பதற்காகச் செய்யப்பட்டிருக்கிறபடியால் செலாமணியாக மாட்டாது என்று சென்னப்பட்டணம் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. இந்தக் கேசில் ஒரு பிரஸ்னை உண்டாயிருக்கிறது அதாவது, அகப்படக்கூடிய கூலிக்காரர்களை எல்லாம் சப்ளை செய்வதாக ஒருவன் ஒப்புக்கொண்டு உடன்படிக்கை எழுதிக்கொடுத்தால். அந்த உடன்படிக்கை செலாவணியாகுமாஎன்பதே, தங்கவேலுசெட்டி v முகுந்தநாயுடு (1914) ம. வீ. நோ. 108 (1914) M. W. N. 108.

### *HIGH RATE OF INTEREST.*

கடுமையான வட்டி

கடன் பத்திரத்தில் குறிப்பிட்டிருக்கும் வாயிதாவில் கடனைச் செலுத்த தவறிப்போனால் அதிக வட்டி மேனிக்கு வட்டி போட்டுச சேர்த்துக்கொடுப்பதாக கடனாளியிடமிருந்து எழுதி வாங்குவது அபராத வட்டியாக மாட்டாது என்றும் ஆனால் வாயிதா தவறிப்போன பிறகு போடப்படும் வட்டி கொடுமையானதாக விருக்கக் கூடாதென்றும் மதராஸ் ஐகோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டது பக்கீர் முகமது v. ரங்கப்பக் கவுண்டன் I. J. L. W. 181.

### AGENT.

ஏஜண்டு.

A என்பவன் B என்பவனுக்கு ஏஜண்டாயிருந்த உத்தியோக முறையில் ஒரு ஒப்பந்தம் செய்தான். இப்போது B என்பவனுக்கு ஏஜண்டாயில்லை. அந்த ஒப்பந்தப்படி நிறைவேற்றிக் கொடுக்கக் கேட்க A பாத்திதையற்றவன் என்று கல்கத்தா ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள் ரும்ஜி v ஜானிதாஸ் 18 C. W. N. 263.

### *EASEMENT ACT.*

ஈஸ்மெண்டு ஆக்ட்.

குஜராத்தி தேசத்தில் வாதி பிரதிவாதிகளுடைய வீடுகள் ஒன்றுக்கொன்று அடுத்தாப் போலிருக்கின்றன. இரண்டு வீடுகளுக்கும் நடுவே ஒரே தாய்ச்சுவர் இருக்கிறது. பிரதிவாதி அதில் ஒரு ஜன்னல் புதிதாய் வைத்திருக்கிறார். அந்த ஜன்னலிலிருந்து பார்த்தால் வாதிவீட்டின் முத்தமும், வாதியின் ஸ்திரிகள் ஸ்நானம் செய்யும் விடமும் தெரிகிறது.

ஆதலால் பிரதிவாதி அந்த ஜன்னலை அடைத்துவிடவேண்டும் என்றும் குஜராத் தேசத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் வழக்கச் சட்டத்தின்படி வாதி தாவா கொண்டுவந்தார். ஜன்னல் வைத்திருப்பதும் வாஸ்தவம் என்றும் ஆனால் அந்த ஜன்னல் ஒரு மனிதனுடைய உயரத்திற்குமேல் வைக்கப்பட்டிருக்கிற தென்றும் ஆனால் வாதியின் வீட்டு ஸ்திரீகளை பார்க்க வேணுமென்கிற உத்தேசத்துடன் ஒருவன் வேணுமென்று பார்த்தால் அந்த ஜன்னல் வழியாக பார்ப்பது சாத்தியமாயிருக்குமென்றும் பிரதிவாதியே ஒப்புக்கொள்ளுகிறார். இப்பேர்ப்பட்ட ஒரு கேசில் வாதி ஜெயம் பெறுவது சந்தேகமாயிருந்த போதிலும் பிரதிவாதியின் தகப்பன் வாதிக்கு மேற்படி சுவரில் ஜன்னல் வைக்கிறதில்லை என்று ஒப்புக்கொண்டு வாதிக்கு எழுதிக்கொடுத்திருக்கிற படியால் ஜன்னலை அடைத்துப் போடும்படி பம்பாய் ஐகோட்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள் 38 B. I.

## PART II — CRIMINAL.

பாகம் II—கிரிமினல்

### ACCOMPLICE

குற்றவாளியின் கூட்டாளி.

ஆதரித்து சாக்ஷியம் சொல்லப்படாத குற்றவாளியின் கூட்டாளியின் சாக்ஷி வாக்குமூலத்தை ஆதாரமாகக்கொண்டு குற்றஸ்தாபனை செய்யப்பட்டிருக்கிறபடியால், அந்த குற்ற ஸ்தாபனை ரத்து செய்யப்படவேண்டுமென்று கல்கத்தா ஐகோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். 18 C. W. N. 500.

[N. B - கூட்டாளியின் சாக்ஷி வாக்கு மூலத்தை நம்பி குற்ற ஸ்தாபனை செய்யக்கூடா தென்பதாக யாதொரு தீர்ப்பு ஜாரி செய்யப்பட வில்லை. ஆயினும் அனேக வருட அநுபோகத்தைக் கொண்டு, கூட்டாளி, குற்றத்தின முக்கியமான பாகத்தைப் பற்றியும், அவன் குற்றத்தில் கலந்திருந்ததைப்பற்றி அவன்சொல்லும் சாக்ஷி வாக்கு மூலத்தை ஆதரித்து வேறு சாக்ஷி வாக்கு மூலங்களுமிருக்க வேண்டுமென்று கோர்ட்டார் நினைக்கிறார்கள்.]

### *ARMS ACT.*

ஆயுதச் சட்டம்

துப்பாக்கி லைசென்ஸ் வாங்க தாமதப் பட்டதற்காக அபராதம் விதித்தது நியாயமான தண்டனைதான். சாதாரணமாக இந்தக் கேசுகளுக்கு அபராதம் விதிக்கப்படுகிறதில்லை. லைசென்ஸ் பெறுகிற வரையில் துப்பாக்கியைப் பிடுங்கி போலீஸ் ஸ்டேஷனில் வைத்துக் கொள்ளும்படி உத்திரவு செய்வது வழக்கம் என்று சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. காட்டுபாவா ராவுத்தர் கேஸ் 22. I. C. 165



### AUDITORS.

கம்பெனியின் பரிசோதகர்கள்

ஒரு கம்பெனியின் மானேஜர்களும் டைரக்கட்டர்களும் உண்மையான பாலன்ஸ் ஷீட் பிறப்பிக்கிறார்களா என்று பங்குதார்களுக்காக கவனித்துக் கொண்டிருப்பது ஆடிட்டர்கள் என்று சொல்லும்படியான பரிசோதர்களின் கடைமை என்று பர்மா சீப் கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. 22 I C

### COMMITTAL

சேஷனுக்கு கமிட் செய்யப்படுவது

செஷனுக்கு கமிட் செய்யப்பட்டதை ரத்து செய்ய வேண்டியதா யிருந்தால், கமிட் செய்த கோர்ட்டார் உததிரவில் சட்ட சம்பந்தமான தவறு தலிருக்கிறது என்று எடுத்துக் காண்பிக்கப்பட வேண்டும். 3 Cr. L. R. 117.

### RECEIVER

ரிசிவார் நியமிக்க

கி. பு. கோ. 144 வது பிரிவின்படி நடத்தப்படும் நடவடிக்கைகளில் ஒரு ரிசிவரை நியமிக்க சப் மாஜிஸ்டிரேட்டிற்கு அதிகாரமில்லை. 26 Al. L. J. 208

### *SANCTION*

பிராசிக்கியூட் செய்ய சாங்கிஷன்

ஒருவன்பேரில் கிரிமினல் பிரியாது கொடுக்க, கோர்ட்டாருடைய சாங்ஷன் தேவையாக விருக்கும் கேஸ்களில், கொடுக்கப்பட்ட. சாங்ஷன்பேரில் பிரியாது கொடுக்கப்பட்டது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தால் மாஜிஸ்டிரேட் கேசைத் தள்ளுபடி செய்துவிட்டார். மறுபடியும் அந்தப் பிரியாது கொடுக்கப்படவேண்டு மென்றால் கோர்ட்டாரிடமிருந்து புதிய சாங்கிஷன் பெறவேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது. 3 Cr. L. R. 305.

### Illegal Commitment

சட்ட விரோதமாக கமிட் செய்வது

ஒரு கேஸ் செஷன் கோர்ட்டுகுச் சட்ட விரோதமாக கமிட். செய்யப்பட்டிருந்தால், அதை ரத்து செய்ய ஒழுங்கான மார்க்கம் என்ன வென்றால் ஐக்கோர்ட்டார் ரிவிஷனில் அந்தக் கேசை பரிசீலனை செய்து பைசல் செய்யவேண்டு மென்று மதிராஸ் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். நாகப்ப கவுண்டன் v சக்ரவர்த்தியார் 3 C. L. R. 117.

# *Acts with Commentaries.*

## வியாக்கியானத்துடன் சட்டங்கள்.

*DEWAN BAHADUR KRISHNASWAMY RAO,*

*on*

*THE COMPANIES ACT.*

1913ம் வருடத்திய இந்தியன் கம்பெனிச் சட்டம்

1913 வருடத்தில் பாஸ் செய்விக்கப்பட்டு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்தியன் கம்பெனி ஆக்ட்டைப்பற்றி திவான் பகதூர் கிருஷ்ணசாமிராயர் அவர்கள் இந் நகரில் பிரசுரமாகும் "இந்தியன் ரிவியூ" என்னும் பத்திரிகைக்கு அடியிற் கண்ட பிரகாரம் தாற்பரியப்படும் படியாக ஆங்கிலத்தில் எழுதி யிருக்கிறார்கள்:—

இந்தியாவின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து வருவதில் ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் பிரபலமாய் விளங்கி வருவதையும் அந்தக் கம்பெனிகளின் எண்ணிக்கை நாளுக்குநாள் ஏறிக்கொண்டு போவதையும் உத்தேசித்துப் பார்க்கும் அளவில் 1914ம்வருஷம் ஏப்ரல்மாதத்தில் ஊர்ச்சிதத்திற்கு வந்திருக்கும் இந்தியன் கம்பெனி ஆக்ட் (7 of 1913) மிகவும் நுட்பமான கவனத்துடன் வாசிக்கப்பட வேண்டியது அவசியமா யிருக்கிறது. டைரக்டர்களும் கம்பெனியின் உத்தியோகஸ்தர்களும் லாயர்களும் மட்டிலும்வாசித்தால் போதுமானதல்ல; ஜாயின்ட்ஸ்டாக் கம்பெனிகளில் பங்கு எடுத்துக்கொள்ளுகிறவர்களும் ஆயுள் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளில் பாலிசி பெற்றுக்கொண்டிருப்பவர்களும் இந்த சட்டத்தின் நிபந்தனைகளை அறிந்து கொண்டிருந்தால், அந்த அறிவால் அவர்கள் பயன் அடைவார்கள்.

பிரஸ்தாப 1913ம் வருடத்திய 7-வது ஆக்ட்பிரிடிஷ் பார்லிமெண்டாரால் பாஸ் செய்யப்பட்ட 1908ம் வருஷத்திய கம்பெனி ஆக்டையும், ஏற்கனவே இந்தியாவில் அமுலிலிருந்த 1882ம் வருடத்திய 6-வது ஆக்டையும் ஆதாரங்களாக வைத்துக்கொண்டு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆக்ட்டின் நிபந்தனைகளில் பல, மிகவும் கடுமையாக விருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. இந்த ஆக்ட்டின் நிபந்தனைகளை அனுபோகத்திற்குக் கொண்டுவருவது பிரதமத்தில் கஷ்டப்படும். ஆயினும், ஆக்ட்டில் சொல்லியிருக்கிறபடி அதன்படி ஷரத்துக்கள் கண்டிப்பாய் நடவடிக்கைக்குக் கொண்டுவரப்பட்டால் நம் தேசக் கம்பெனிகள் ஜனங்களுடைய நம்பிக்கையையும் மரியாதையையும் அனுபவித்துக்கொண்டு வருமென்பதில் சந்தேகமில்லை.

புதிய கம்பெனிகள் உற்பத்தி செய்வது 1914ம் வருஷம் மார்ச்சு மாதம் 31 வுக்கு முந்தி யிருந்தது போல அவ்வளவு இல்குவான காரியமல்ல; பிரஸ்தாப புதிய சட்டத்தின்படி ஒருவன் பங்கு எடுத்துக் கொள்ள விண்ணப்பம் செய்துகொள்ள வேண்டுமானால், அந்தப் பங்கின் கிரயம் என்னவோ அதில் நூற்றுக்கு ஐந்து வீதம் அந்த மனுவுடன் சேர்த்து அனுப்பவேண்டும்; பங்கு மூலதனத்தினுடைய முழுத் தொகையும் செலுத்தப்பட்டாலொழிய பங்கு கொடுக்கப்பட மாட்டாது. உற்பத்தி செய்யப்படும் கம்பனியைப்பற்றி விளம்பரங்கள் பிரசுரித்த 120 நாட்களுக்குள்ளாக டைரக்டர்கள் பங்குகளைக் குறிப்பிட்டு நிரணயித்து விடவேண்டும்; இப்படிச் செய்ய தவரிப்போவார்களேயாகில் 130ம் நாளிலிருந்து நூற்றுக்கு வருடத்திற்கு 4 வீதம் வட்டிசேர்த்து பங்கு விண்ணப்பதாரர்களிட மிருந்து பெற்றுக்கொண்ட தொகையை வாப்பீஸ் செய்துவிடவேண்டும்; பங்குகளுக்கு மனுக்கள் எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளப்படலாமென்பதும் எடுத்துக்கொண்ட பங்குகளின் கிரையத் தொகையை வாங்காமலே பங்குகள் கொடுக்கப்படுவதும் ஆகிய இந்த வழக்கங்கள் பழைய ஆக்ட்டுடன் தொலைந்துபோய்விட்டன. புதிய கம்பெனிகள் உற்பத்தி செய்கிறவர்கள் பயிரங்கப்படுத்தும் விளம்பரங்களில் உதயேசத்திலிருக்கும் கம்பெனியின் தாழ்ந்த மூலதனம் என்னவென்று குறிப்பிட்டுச் சொல்லலாமென்றும் இந்தத் தொகை வசூலானவுடன் பங்குகள் நிரணயிக்கப்படலாமென்றும் புதிய சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சிறிய வியாபாரக் கம்பெனியாவது அல்லது லாவா தேவி கம்பெனியாவது தாழ்ந்த மூலதனத்துடன் வேலை ஆரம்பிப்பது சாத்தியமாயிருக்கும். ஆனால் அதிகப்படியான மூலதனம் தேவையான (Manufacturing Companies) போலொத்த கம்பெனிகள் சம்பந்தப்பட்ட விளம்பரங்களில் தாழ்ந்த மூலத்தனம் குறிப்பிடப் படலாமென்றும் இந்த மூலதனம் வசூலானவுடன் வேலை ஆரம்பிக்கப் படலாமென்று பிரஸ்தாப ஆக்ட்டில் அனுமதி கொடுக்கப்பட்டிருப்பது பிரயோஜனப்படா,

தென்னிந்தியா சம்பந்தப்பட்ட வரையில் புதிய சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற மூன்று மாத காலத்திற்குள் பங்குகள் மூலியமாய் கேவலம் லக்ஷ ரூபாய் சேருவது கூட சாத்திய மாகாத காரியம்; பின்பு மூலதனத்தைப் பெருக்கிக் கொள்ளலாமென்று உபாய் மூலதனத்துடன் வேலை ஆரம்பித்த தொழிற்சாலை கம்பெனிகள் பின்பு பொதுஜன ஆதரிப்பை இழந்து முடிவுக்கும் கொண்டுவரும்படி கட்டாயப்படுத்தப் பட்டன வென்று அனுபவம் அறிவிக்கின்றது. தாழ்ந்த மூலதனத்துடன் ஒரு தொழிற்சாலைக் கம்பெனியை ஆரம்பிப்பதைப் பார்க்கிலும் பெரிய பிசகு எதுவுமில்லை. ஆகையால் புதிய ஆக்ட்டின்படி இந்த ஷரத்துக்கள் சென்னை ராஜதானியில் பாரி தொழிற்சாலை கம்பெனிகள் உற்பத்தியாவதற்கு இடஞ்சலாக விருக்கும்.

தாழ்ந்த முலதனம் வசூல செயயப்பட்டு பங்குகள் நிரணியக்கப்படப்படும் பரியந்தமும், வேலை ஆரம்பிப்பதற்கு ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கும் ஷரத்துகள் திருப்தி செய்யப்பட்டதாக ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகளின் ரிஜிஸ்டிராரிடமிருந்து செர்ட்டிபிக்கேட் பெறும் பரியந்தமும் — யாதொரு கம்பெனியையும் வேலை ஆரம்பிக்கக்கூடாது.

(163-வது பிரிவைப் பார்க்கவும்.)

புதிய கம்பெனிகள் உற்பத்தி செய்கிறவர்கள். மற்றொரு விஷயத்தையும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்! அதாவதென்னவென்றால் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட ஒரு கம்பெனி எந்தத் தொழிலைச் செய்வதற்காக ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருந்ததோ, அந்தத் தொழிலை நடத்த ரிஜிஸ்டான தேதி முதல் ஒருவருடத்திற்குள் ஆரம்பிக்காவிட்டால், கோர்ட்டாருடைய உத்திரவின்பேரில் முடிவுக்குக் கொண்டுவரப்படலாம்.

பாரிதொழிற் சாலை கம்பெனிகள் சம்பந்தப்பட்ட வரையில் அவைகளுக்குத் தேவையான கட்டடங்களைக்கட்டி யந்திரத்தளவாடங்களை அமைப்பதற்கே ஒரு வருடத்திற்கு மேலாகும்; மேலும் பங்கு மூலதனம் வசூலான பிறகு அந்த முக்கியமான காரியங்கள் செய்யப்படவேண்டியதாயிருக்கிறது. ஆகையால் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஒருவருடம் மிகுந்த சொற்பகாலம் என்று எண்ணுகிறோம். ஆயினும் இந்த சங்கடத்திற்குச் சட்டத்தைச் செய்தவர்கள் ஒரு பரிகாரமும் செய்திருக்கிறார்கள். அதாவது "கோர்டாருடைய உத்திரவின் பேரில் கம்பெனி முடிவுக்குக் கொண்டுவரப்படலாம் என்று" ஆக்ட்டில் சொல்லப்பட்டிருப்பதால் கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவருவது கோர்ட்டாருடைய இஷ்டத்தைப் பொருத்தது. ராஜதானி நகரில் ஐக்கோர்ட்டுக்கும் வெளி ஜில்லாக்களில் ஜில்லாக் கோர்ட்டுக்கும் அந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் கோர்ட்டார் எப்போதும் கம்பெனி உற்பத்தி செய்கிறவர்களுக்கு அனுகூலமாக விருப்பார்கள் என்று எண்ணப்படக்கூடாது. கம்பெனி உற்பத்தி செய்கிறவர்கள் ஜாக்கிரதையான நிலைமையிலிருக்க வேண்டுமானால் பம்பாயிலும் ஐரோப்பாவிலும் செய்யப்படுவதுபோல கம்பெனி உறபத்தியாவதற்கு முந்தி பெரும்பாலான பங்குகளைச் சேர்த்துக்கொண்டு பாக்கி பங்குகளுக்கு மட்டிலும் விளம்பரம் பிரசுரிக்க வேண்டும். அந்த விளம்பரத்தில் ஏற்கனவே சேர்ந்திருக்கிற பங்குகளையும் அவைகள் மூலியமாக வசூலாயிருக்கும் தொகைகளையும் சொல்லவேண்டும்.



டைரக்டர்களும் மானேஜர்களும் அலக்ஷியமாக விருந்தாலாவது, செய்யவேண்டிய கடமைகளை செய்யாம லிருந்தாலாவது அநேக தண்டனைகள் அந்த ஆக்ட் விதிக்கின்றது. மானேஜர்கள், டைரக்டர்கள், ஆகிய இவர்களுடைய உத்தரவாதம் அவர்களுடைய குற்றமுள்ள எண்ணத்தைப் பொருத்ததாக விருக்கிறது.

ஆனால் கம்பெனியுடைய உத்திரவாதத்திற்கு நிபந்தனையில்லை; யோக்கியமான டைரெக்டர்களையும் மானேஜர்களையும் முற்றுமோ அல்லது பாதியோ மன்னித்துப்போட கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கபபட்டிருக்கிறது. ஆனால் இந்த அதிகாரப் பிரயோகம் ஜட்ஜிகளுடைய குணாதிசயங்களைப் பொருத்ததாக விருக்கிறபடியால், இந்த அதிகாரத்தால் நன்மை உண்டாகக் கூடுமென்று எதிர் பார்க்கக்கூடாது.

கவர்ன்மெண்டாரிட மிருந்து லைசென்ஸ் வாங்காதவர்கள் கம்பெனிகளுடைய கணக்குகளை பரிசோதனை செய்யக்கூடாது. பரிசோதிப்பதற்குப் பரிகார வீதங்களை காலத்திற்குக் காலம் புதிப்பிக்க கவர்ன்மெண்டாருக்கு அதிகார மிருக்கிறபடியால் இந்த நூதன ஏற்பட்டால் கம்பெனிகள் நஷ்டமடைய மாட்டாதென்று எண்ணலாம்.

கம்பெனி செய்யும் காரியங்களுக்கு இதற்கு முந்தி கட்டணம் விதிக்கப்படவில்லை. ஆனால் இப்போது விதிக்கப்பட்டிருக்கின்றன. புதிய ஆக்ட்டின்படி, 10 ஆயிரம் ரூபாய் மூலதனமுடைய கம்பெனிகள் என்ன செலுத்த வேண்டியதாயிருக்கிறதோ, அவ்வளவே 10 லக்ஷ ரூபாய் மூலதனமுடைய கம்பெனியும் செலுத்த வேண்டியதாயிருக்கிறது.

இந்த ஆக்ட்டில் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களை முழுதிலும் ரத்து செய்யவாவது அல்லது குறைக்கவாவது ஆலோசனை சபையிலிருக்கும் கவர்னர்-ஜனரல் அவர்களுக்கு அதிகார மிருக்கிறது. இந்த அதிகாரத்தை இந்தியா கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரம் பிரயோகித்தால் நலமாகவிருக்கும்.

## INDIAN PENAL CODE.

### இந்தியன் பீனல் கோட் 493 பிரிவு

சட்டப்படி விவாகம் செய்யாத ஒரு ஸ்திரியினிடம் தான் சட்டப்படி அவளுடன் விவாகம் செய்யப்பட்ட புருஷன் என்று மோசக்கருத்தாகச் சொல்லி அவளை நம்பும்படி செய்து அவளைத் தன்னுடன் புணரும்படி அல்லது சம்சர்க்கம் செய்யும்படி செய்த எந்த மனிதனுக்கும் இருவகை ஜெயில் தண்டனைகளில் எந்த தண்டனையாவது 10வருடம் அதனுடன் கூட அபராத தண்டனையும் விதிக்கப்படுவான்.



குறிப்புகள்

கோர்ட்டு நடவடிக்கை.

(1) இந்த குற்றத்தால் யார் பாதிக்கப்பட்டிருக்கிறாளோ அப்பேர்ப்பட்டவள் பிரியாது கொடுத்தாலொழிய கோர்ட்டாரே வலுவில் எந்தக்கேசையும் பிடித்து விசாரணை செய்யக் கூடாது.

(2) முதல் தடவையில் குற்றவாளிக்கு வாரண்டு பிறப்பிக்கப் படவேண்டும்.

(3) ஜாமீன்பேரில் விடப்படக்கூடிய கேசல்ல.

(4) சமாதானம் செய்துகொள்ளப் படக்கூடிய கேசுமல்ல.

(5) செஷன் கோர்ட்டார் மட்டிலும் இந்தக் கேசை விசாரணை செய்ய அதிகாரமுடையவர்கள்.

ருஜுப்படவேண்டிய அம்சங்கள்.

(1) குற்றவாளி பிரியாது கொடுத்தவளுடன் புணர்ந்தான் என்று ருஜுப்படவேண்டும்.

(2) குற்றவாளி அந்த ஸ்திரீயை சட்டப்படி விவாகம் செய்ததில்லை என்று ருஜுப்படவேண்டும்.

(3) அவன் அவளுக்குத் தான் சட்டப்படி விவாகம் செய்யப்பட்ட புருஷன் என்று அவன் சொன்னதை அவள் நம்பி அவனுடன் சம்சர்க்கம் செய்ய சம்மதித்தாள் என்று ருஜுப்படவேண்டும்.

(4) குற்றவாளி சொன்ன மோசக் கருத்தான வார்த்தைகளால் அவ்வளவு நம்புதல் அவளுக்கு உண்டானதென்று ருஜுப்படுத்தப் படவேண்டும்.

---

# *Miscellaneous Suits & Legal Intelligence.*

# நானாவிதமான வியாஜ்ஜியங்களும் கோர்ட்டு சமாச்சாரங்களும்

---

## ADDITION TO BAR.

### புதிய வக்கீல்

ஐகோர்ட்டு வக்கிலாக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யா அவர்களுடைய மனுவின் பேரில் மிஸ்டர் T. V. அனந்த நாராயணன் என்கிறவர் ஐக்கோர்ட் வக்கீலாக தாக்கல் செய்துகொண்டு தொழில் நடத்தும்படி சீப் ஜட்சியும் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹான்னேயும் கூடிய கோர்ட்டார் உத்திரவு செய்திருக்கிறார்கள்.

## MADRAS HIGH COURT.
## மதிராஸ் ஐக்கோர்ட்.

---

### A BRUTAL MURDER.
### ஒரு படுகோலை.

ஜட்ஜுகள்:- மிஸ்டர் ஜட்டிஸ் எயலிங் மிஸ்டர் ஜட்டிஸ் டாயப்ஜி

சாத்தய்யா vs சக்கரவர்த்தியார்

கேசின் விபரம்:—குற்றவாளி சாத்தய்யா 28-வயதுடைய பிரம்மச்சாரி, பாதம்மாள் என்னும்சாணத்தியை வைப்பாட்டியாக வைத்துக் கொண்டிருந்தான். அந்த சமாச்சாரம் சொந்த புருஷனுக்குத்ந்துபோய் விட்டது. சொந்த புருஷன் பெண்ஜாதியைக் கண்டித்து அவனை வீட்டிற்குள் விடாதே என்று உத்திரவு செய்தான்.

பெண்ஜாதியும் பயந்து சோரபுருஷனை வரவேண்டாம் என்று அவனுக்குச் சொன்னாள். கடந்த மார்ச்சு மாதம் புருஷன் வீட்டில் இல்லாதபோது குற்றவாளி சாத்தய்யா பாதம்மாளுடைய வீட்டிற்கு வந்து அவளைத் தன்னுடன் கூட வரும்படி கூப்பிட்டான்; அவள் வரமாட்டேன் என்று சொல்ல அவளுடைய தலைமயிரைப்பிடித்து இழுத்து முன் வாசலில் கொண்டுவந்து கன்னத்தில் அடித்தான்; அவள் கீழே விழுந்துவிட்டாள். விழுந்துவிட்டவுடன் அவள் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு உயிர் போகும் வரையில் அவளை அடித்தான். அவன் அரிவாளுடனே ஆயுதபாணியாகவே பாதம்மாள் வீட்டிற்கு வந்தான். பிரேதத்தின் கழுத்தில் மூன்று பெரிய காயங்களிருந்தன. ஒன்று பின்புரத்திலும் மற்ற இரண்டும் முன்புரத்திலு மிருந்தன. கொலை நடந்த ஸ்தலம் ஒரு சிறிய கிராமத்தில் 4-அல்லது 5 குடிசைகளிருக்கும்படியான விடத்தில் அவளுடைய வீட்டு வாசற்படியில் பட்டப்பகலில் நடந்தது. கிராமப் போலீசார் குற்றவாளியைப் பிடித்து, கைது செய்து நடவடிக்கை நடத்தினார்கள். அதன்பேரில் குற்றவாளியின்பேரில் கொலைக்குற்றம் ஸ்தாபிக்கப்பட கோதாவரி ஜில்லா செஷனுக்கு கமிட்டி செய்யப்பட்டான்.

தண்டனை:— செஷன் கோர்ட்டார் இந்தக் கேசை விசாரணைசெய்து குற்றவாளிக்கு மரணதண்டனை விதித்தார்கள். செஷன் ஜட்ஜி தண்டனை சொல்லும்போது அடியிற்கண்டபடி சொன்னார்:— குற்றம் பட்டப்பகலில் நடத்தப்பட்ட படுகொலை; தண்டனையைக் குறைப்பதற்கு அதில் யாதொரு காரணமுமில்லை. நாம் சொல்லக்கூடியதெல்லாம் கெட்டுப் போனதுவும் பரிதாபப் படும்படியான தோற்றத்தை உடைய இவன் கேவலம் சொற்ப நாழி சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்று அவளைக் கூப்பிட அவள் வராததால் அவளுடைய உயிரை எடுத்துப் போட தன்னை உட்படுத்தி யிருக்கிறான்.

செஷன் கோர்ட்டார் மரண தண்டனை விதித்தால் அந்த தண்டனை ஐக்கோட்டாரால் உறுதிப் படுத்தப்பட வேண்டியதாக இருக்கிறபடியால், கோதாவரி செஷன் கோர்ட்டார் அந்தக்கேசை ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பினார்கள்.

லாயர்கள்.—கவர்ன்மெண்டு தரப்பிற்கு பப்ளிக் பிராசிக்கியூட்டரும், குற்றவாளி தரப்பிற்கு மிஸ்டர் H. ருமநாத சேனையும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—ஐக்கோட்டார் இரு தரப்பு லாயர்கள் பேசினதையும் கேட்டு விட்டு குற்றவாளி பாதம்மாளைக் கொல்ல வேண்டுமென்று முன்னடியே யோஜனைசெய்து ஆயுதபாணியாக அவளுடைய வீட்டிற்குச் சென்றிருக்கிறபடியால், செஷன்கோர்ட்டார் தண்டனையில் பிரவேசிப்பதற்கு யாதொரு காரணத்தையும் காணேமென்று மரண தண்டனையை உறுதிப்படுத்தினார்கள். (15-8-1914)

---

### தகப்பனைக் கோன்ற கேஸ்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிக்ஸ் எய்லிங் மிஸ்டர் ஜட்டிஸ் டையாப்ஜி

1. புல்லகவுண்டன் 2. மாரப்ப கவுண்டன்

vs

சக்ரவர்த்தியார்.

கேசின் விபரம்:—இந்தக் கேஸ் திருச்சினப்பள்ளி ஜில்லாவில் நடந்தது. முதல் குற்றவாளி கொலை செயயப்பட்டவனுடைய ஜேஷ்ட புத்திரன், இரண்டாவது குற்றவாளி மாப்பிளை; அதாவது பெண்ணை விவாகம் செய்துகொண் டிருப்பவன்; முதல் குற்றவாளியும் கொலை செய்யப்பட்ட பிதாவும் சேர்ந்த குடும்பஸ்தர்கள்; இந்தக் குடும்பத்திற்கு சில நிலங்களிருந்தன; புத்திரனும் பிதாவும் பாகம் பிரிவினை செய்துகொண்டார்கள்; பாகம் என்னவென்றால் சொத்தை $2\frac{1}{2}$ பாகமாகப் போட்டு ஒரு பாகம் புத்திரனும் $1\frac{1}{2}$ பாகம் பிதாவும் எடுத்துக்கொண்டார்கள். இதன் பிறகு பிதாவுக்கு இரண்டாவது மனைவி மூலியமாக இன்னொரு புத்திரன் பிறந்தான்; ஆகவே பிதா சொத்துக்களை மறுபடியும் பாகப் பிரிவினை செய்யவேண்டுமென்று விரும்பி மூன்று பாகமாகப்போட்டு ஒரு பாகத்தைப் புத்திரனுக்குக் கொடுத்து இரண்டு பாகத்தை தனக்கும் தன்னுடைய குழந்தைக்கு வைத்துக்கொண்டான். புத்திரனுக்கு கோபம் பிறந்துவிட்டது. மிற்க கொலை செய்யப்பட்டவன் தன்னுடைய மாப்



பிள்ளையிடமிருந்து ரூபா 50 ரொக்கம் கடன் வாங்கியிருந்தான். கடனைக் கொடுக்கமுடியாமல் கடனுக்காக கடைசியில் ரூபா 20 மதிப்புள்ள ஒரு பசுமாட்டைக் கொடுத்தான். அதனால் மாப்பிள்ளைக்கும் மாமனாருக்கும் மனஸ்தாபமாக விருந்தது. ஆகவே புத்திரனும் மாப்பிளையும் கொல்ல தீர்மானித்து 1914ஸ்ரீ ஏப்ரல்மீ 2உ பிதா தோட்டத்திலிருந்த போது இருவரும் சேர்ந்து அவனுடைய தொண்டையை பிடித்து யிருக்கியும் அவனுடைய பீஜவிரைகளைப் பிடித்து நசுக்கியும் அவனுடைய உயிரைப் போக்கடித்து விட்டார்கள். இவர்கள் திருச்சினப்பள்ளி செஷன் கோட்டிற்கு கமிட் செய்யப்பட மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

இந்தக் கேஸ் சர்க்கா முறையில் ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு வந்தது.

தீர்ப்பு:—அசல் கோர்ட்டு தண்டனை உறுதிப் படுத்தப்பட்டது.

---

### அத்துமீறி பிரவேசித்த கேஸ்.

ஜட்ஜி: மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்

கேசின் விபரம்:—ஒருவர் ஒரு ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்று ரயிலுக்காக எதிர்ப்பார்த்துக காத்துக் கொண்டிருந்தார். தன்னுடைய மகனை அசிஸ்டன்ட ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குச சென்று ஒரு நாற்காலி கொண்டு வரும்படி அனுப்பினார். அசிஸ்டன்ட் ஸ்டேஷன் மாஸ்டர் பையனை உள்ளே நுழையும்படி விடவில்லை. இதன்பேரில் தகப்பனே அசிஸ்டன் ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குச்சென்று அவருடன் சண்டை போட்டார். இதன் பேரில் இவர் அத்துமீறி பிரவேசித்த தாகவும் திட்டினதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டார்.

மாஜிஸ்டிரேட் கோர்ட்டார் அபராதம் விதிக்க, ஐகோர்ட்டில் ரிவிஷன் மநு தாக்கல் செய்யப்பட்டது.

லாயர்கள்:—ஐகோர்ட்டு வக்கில் மிஸ்டர் முத்தய்யா மூதலியார் குற்றவாளி தரப்பிற்கு ஆஜராகி, ரயிலுக்காக காத்திருக்கும் பிரயாணிகளை ஸ்டேஷன் மாஸ்டர் தன்னுடைய அறைக்குள் நுழையும்படி விடுவது வழக்கமென்றும் ஆதலால் குற்றவாளி அந்த அறைக்குள் சென்றது அத்துமீறி பிரவேசித்ததாக மாட்டா தென்றும் கக்ஷி சொன்னார்.

தீர்ப்பு:—ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் ரயிலுக்காக காததிருக்கும் பிரயாணிகளை ஸ்டேஷன் மாஸ்டர் விடுவது வழக்கமாயிருந்த போதிலும், ஸ்டேஷன் மாஸ்டர் அறைக்குள் விடமாட்டேன் என்று சொல்லி விட்டால் அதற்காக அவதூரான வார்த்தைகளைப் பிரயோகப்படுத்தி அவரைத் திட்டுவது வழக்கமில்லை என்று நியாயம் சொல்லி அபராதத்தை உறுதிப்படுத்தி ரிவிஷன் மனு தள்ளுபடி செய்யும்படி உத்திரவு செய்தார்கள். (21-8-1914.)

---

### கூட்டு வியாபார பாகப்பிரிவினைக் கேஸ்.

ஜட்ஜு:—மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரி....

வாதிகள்:—மிஸ்டர் ஹாஜி அப்தல் கானி சாகேப் வகையரு

பிரதிவாதிகள்:—மிஸ்டா ஹாஜி சரபால சாகேப் வகையரு

கேசின் விபரம்:—வாதி பிரதிவாதிகள் சென்னை கிடங்குத் தெருவில் கூட்டாக சீமை ஜவுளி வியாபாரஞ் செய்துவந்தார்கள். வாதி கூட்டைப் பிரித்துப் போட வேண்டுமென்று சென்னபட்டணம் ஐக்கோர்ட்டு அசல் தரப்பில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்; ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் எத்திராஜமுதலியார் கமிஷனராக நியமிக்கப்பட்டார்; அவர் கணக்கு வழக்குகளைப் பார்த்து ஒரு ரிப்போர்ட் தயார்செய்து கோர்ட்டில் தாக்கல் செய்தார்; இந்த ரிப்போர்ட்டில் ரூ. 2,321-13-3 கமிஷனர் வாதிகளுக் கொடுத்திருப்பதை முதல் பிரதிவாதி ஆக்ஷேபித்தார்.

கேசின் நடவடிக்கைகள்—இரண்டு தரப்பு லாயர்கள் சொன்ன கக்ஷிவாதத்தை கோர்ட்டார் கேட்டுக்கொண்டார்கள்.

தீர்ப்பு:—வாதிக்கு ரூ 2321-13-3 கொடுக்கும்படி கமிஷனர் ரிப்போர்ட்டில் சொல்லியிருப்பது நியாயமென்று தீர்ப்பு சொன்னார்கள். முதல் பிரதிவாதி கம்பெனியில் மானேஜமெண்டு செய்துவந்த காலம் வரையில் அவரால் போடப்பட்ட முதலின்பேரில் வருஷத்திற்கு நூத்துக்கு 9 வட்டி வீதம் அவருக்குப் போட்டுக்கொடுக்கும் படியாக உத்திரவுசெய்தார்கள்; இந்த வியாஜ்ஜியத்தில் முதல் பிரதிவாதி அவருடைய செலவுகளை அவரே ஏற்றுக்கொள்ள வேண்டும், பிரஸ்தாப ஆக்ஷேபனை மனு விசாரணையில் வாதிக்கு நேரிட்டிருக்கும் செலவு தொகைகளை முதல் பிரதிவாதி கொடுக்கவேண்டும் என்றும், அசல் வியாஜ்ஜியத்தில் வாதிக்கு நேரிட்டிருக்கும் செலவுத் தொகைகள் பாகப்பிரிவினை செய்யப்படவேண்டிய கம்பெனியின் ஐவேஜியிலிருந்து கொடுக்கப்படும்படியும் உததிரவுசெய்தார்கள்.

லாயர்கள் .— மெசர்ஸ் ரென்கான்ட்டரும் திருமலைப்பிள்ளையுடைய உதவியுடன் மிஸ்டர் சிட்னிஸ்மித்தும், வாதிக்காகவும்முதல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C.P. ருமசாமிஅய்யர் அவர்களும் ஆஜரானார்கள்.

---

### கர்ப்பூர விநாயகர் கோவில் கேஸ்.

*வாதிகள்:—பக்தர்கள்*

*பிரதிவாதி:—தாதலிங்க முதலியார்*

கேசின் விபரம்:—வாதிகள் திருவல்லிக்கேணியிலிருக்கும் கற்பூர விநாயகர் தேவாலயத்தின் பக்தர்கள்; பிரதிவாதி ஷை தேவஸ்தானத்திற்கு தர்மகர்த்தாவாக யிருந்து வருகிறார்; வாதிகள் அட்வோகேட் ஜெனராலுடைய சாங்க்ஷனைப்பெற்று சி. பு. கோ. 98-வது பிரிவின்படி இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், வாதிகள் தாக்கல் செய்திருக்கும் பிரியாது என்னவென்றால் இந்த தேவஸ்தானத்தில் தர்மகர்த்தா ஸ்தானம் காலியானால் தேவஸ்தானத்தின் உபயககாரர்களும் காரியக்காரர்களும், திருவல்லிக்கேணி தலைவர்களும் ஒரு கூட்டம் கூடி ஒரு தர்மகர்த்தாவை தெரிந்தெடுத்து நியமிப்பது வழககமென்றும், இந்த வழக்கப்பிரகாரம் பிரதிவாதியாக விருக்கும் தர்மகர்த்தா நியமிக்கப் படவில்லை என்றும் ஆதலால் அவர் தர்மகர்த்தாவாக யிருப்பது வழக்கத்திற்கு விரோதமென்றும், அந்த தேவஸ்தானம் ஒழுங்காய் நடை பெறும் பொருட்டு கோர்ட்டார் ஒரு ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று பிரார்த்திததுக்கொண்டிருக்கிறார்கள்.

பிரதிவாதியின் எழுத்து வாக்குமூலம்:— இந்த தேவஸ்தானத்திற்கு எங்கள் குடும்பத்தார் தர்மகர்த்தாகளாக பரம்பரையாக யிருந்து வருகிறார்கள். என்னுடைய தகப்பனார் தர்ம சர்த்தாவாக விருந்து இறந்துபோனபோது என்னை தர்ம கர்த்தாவாக நியமித்து விட்டு இறந்துபோனார். தேவஸ்தானமும் அதிலுள்ள சொத்துக்களும் பொது ஜனங்களுடைய தர்ம டிரஸ்டி சொத்து; என்னுடைய தகப்பனார்; கிரமப்படி நியமிக்கப்பட்ட தர்மகர்த்தாவாக விருந்தார்; அவர் என்னை தர்ம கர்த்தாவாக நியமித்து நியமனப் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறார்.

கேசின் நடவடிக்கைகள்:—வாதிகள் பக்கம் 11 சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள், கோர்ட்டார் பிரதிவாதியின் சாக்ஷிகளைவிசாரணை செய்யாமல் தீர்ப்பு சொன்னார்கள்.

தீர்ப்பு:—தர்மகர்த்தா ஸ்தானம் பிரதிவாதியின் குடும்பத்திலேயே இருந்து வந்து கொண்டிருக்கிறதென்று யாதொரு சந்தேகமின்றி ருஜுப் படுகிறது. குடும்பத்தின் ஆண் ஜேஷ்டர்களே தர்ம கர்த்தாவாக விருந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. மீட்டிங்கு கூடி தர்மகர்த்தாவை நியமிககும் வழக்கத்தை ருஜுப்படுத்த வாதி தரப்பு சாக்ஷிகள் கொடுத்திருககும் வாக்குமூலம் திருப்திகர மற்றதாயிருக்கிறது. மேலும் இன்னார் தான் கூட்டம் கூடி தர்மகர்த்தாவை நியமிக்கிறதென்று ஒரு நிச்சயமான ஏற்பாடு இருந்திருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் பிரதிவாதி கிரமமாக நியமிக்கப்பட்ட தரும கர்த்தாவென்று எண்ணப்படவேண்டும். இந்த தேவஸ்தானத்திற்கு ஒரு ஸ்கீம் ஏற்பாடு செய்யவேண்டுமென்பதைப்பற்றி,பிரதிவாதிகள் வரவுசெலவு கணக்கை அந்தந்த வருடம் டிசம்பர்மாதம் 31, தேதிக்குள் தேவஸ்தானத்தின் பயிரங்கமான விடத்தில் தாமகர்ததா ஒட்டிப்போட வேண்டும். கணக்குகளை யாரேனும் பரிசோதனை செய்யவேண்டுமென்று கேட்டால் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தில் தரும கர்த்தாவைக்கேட்க வேண்டும்; நோட்டீஸ் கொடுத்து மூன்று நாட்களுக்குப் பிறகு கணக்கு காண்பிக்கப்படவேண்டும். வாதிகள் அவர்களுடைய செலவுகளை அவர்களே பொருத்துக்கொள்ள வேண்டும் ; பிரதிவாதியின் கோட்டுச் செலவுகள் தேவஸ்தான ஐவேஜியிலிருந்து கொடுக்கப்படவேண்டும்—இந்தப் பிரகாரம் தீர்ப்பு சொல்லப்பட்டது.

லாயர்கள்:—வக்கீல்கள் மிஸ்டர் V. மாசிலாமணி முதலியாரும், மிஸ்டர் C. K. மகாதேவ அய்யரும் வாதிகள் தரப்பிற்கும் மிஸ்டர் C. P. ராமசாமி அய்யரும் மிஸ்டர் V. சந்திரசேகர அய்யரும் பிரதிவாதி தரபிற்கும் ஆஜரானார்கள். (22—8—'14.)

---

### குடித்து விட்டு சண்டை போட்ட கேஸ்

*ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்*

கேசின் விபரம்:—கெஞ்சம் ஜில்லாவில் சூரிய காந்தமும் இன்னும் 12 - பேர்களும் குடித்துவிட்டு சண்டை போட்டு ஒரு வீட்டிற்குள் அக்கிரமாய் புகுந்து சிலருக்குத் தீங்கு செய்ததாக பென்ச் மாஜிஸ்டிரேட் முன்னில் அவர்களில் சில பேர்கள் பேரில் மட்டிலுத் குற்றம் சாட்டப்பட்டது. பிரியாதியும் குற்றவாளிகளும் சமாதானமாகப் போகவே குற்றவாளிகள் விடுவிக்கப் பட்டார்கள். இதற்குப் பிறகு போலிசார் எல்லாக் குறறவாளிகளையும் சேர்த்து டவுன் நியூசன்ஸ் ஆக்ட்டின்படி குடித்துவிட்டு சண்டை போட்டதாக அந்த பென்ச் மாஜிஸ்டிரேட் முன்னிலையிலேயே குற்றம சாட்டினார்கள். குற்றவாளிகள் எதிர்கக்ஷி சொன்னார்கள். அதாவது என்னவென்றால் தங்கள் பேரில் அத்துமீறி பிரவேசித்ததற்காகவும் திங்குவிளைவித்ததற்காகவும் முந்தி குற்றம்சாட்டப்பட்டு விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் ஆதலால் அவர்கள் இப்போது விசாரணை செய்யப் படக்கூடாதென்று எதிர்கக்ஷி சொன்னார்கள். பென்ச் மாஜிஸ்டிரேட் இந்த சமயமும் குற்றவாளிகளை விடுவித்து விட்டார்கள்.

சர்க்கார் முறையில் இநதக் கேசின் ரிக்கார்ட்டுகளை சோதனை செய்த ஜில்லா மாஜிஸ்டிரேட் இந்தக் கேசை மறுபடியும் விசாரணை செய்து சட்டப்படி



பைசல் செய்யும்படியாக பென்ச் கோர்ட்டிற்கு உத்திரவு செய்தார்கள்; குற்றவாளிகள் ஐக்கோர்ட்டிற்கு அப்பீல் செய்துகொண்டார்கள்.

குற்றவாளிகளின் லாயர் பேசினது:—

குற்றவாளிகள் விடுவிக்கப்பட் டிருக்கிறபோது, அவர்களை மறுபடியும் விசாரணை செய்யும்படியாக உத்திரவுசெய்ய ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு அதிகாரமில்லை என்று சொன்னார்.

பப்ளிக் பிராசிக்கியூட்டர் பேசினது:—

ஜில்லா மாஜிஸ்டிரேட் தம்முடைய அபிப்பிராயத்துடன் கூட இந்தக் கேசை ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பி யிருக்கவேண்டும்.

கோர்ட்டார் உத்திரவு:—

புனர் விசாரணை செய்யும்படி உத்திரவு செய்ய ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிற்கு ஆதாரமில்லை என்று கோர்ட்டார் கூறி அந்தக் கேசைப் புனர் விசாரணை செய்யும்படி பென்சு மாஜிஸ்டிரேட்டிற்கு தாங்களே உத்திரவு பிறப்பித்தார்கள். (2J-8-1914)

---

## வடமலையாளம் ஜில்லா ஜட்ஜி கோர்ட்.

---

### தேவஸ்தான வியாஜ்ஜியம்.

*சென்னை தர்ம ரக்ஷணை சபை...........வாதிகள்...*

*vs*

*திருவேங்கட வீருமசாமி*
*தேவஸ்தான மானேஜர்கள்* } பிரதிவாதிகள்

கேசின் விபரம்:—வாதி சபை சென்னபட்டணத்தி லிருக்கிறது. தென் இந்தியாவில் தேவஸ்தானங்கள் சீர்கேடாக மானேஜ்மெண்டு செய்யப்பட்டு வந்தால் அவைகள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டு வந்து அவைகளை ஒழுங்கான நிலைமையில் வைப்பது சபையின் கடைமை. பிரதிவாதி தேவஸ்தானம் மலையாளத்தில் செல்வம் நிறைந்த தேவஸ்தானங்களில் ஒன்று. இந்த தேவஸ்தானத்திற்கு அனேக சர்வ மானியங்களும் இனும் அதாவது கவர்ன்மெண்டு தீர்வை யில்லாத சொத்துக்கள் அனேக மிருக்கின்றன. இவைகளன்றி இன்னும் சொத்துக்களிருக்கின்றன. இந்த இரண்டு வகை சொத்துக்களிலிருந்து வரும் வருமானம் கொஞ்சமல்ல; கடந்த 30 அல்லது 40 வருடங்களாக தேவஸ்தான மானேஜர்கள் சீர் கேடாய் மானேஜ்மெண்டு செய்து வருகிறார்கள். தேவஸ்தான சொத்துக்கள் அனேகம் அடமானம் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்த தேவஸ்தானத்திற்கு ரூபா 10 ஆயிரம் விலை மதிப்புள்ள ஒரு பொன் கிரீடமிருந்தது. அது விருந்தவிடம் தெரியவில்லை. அதாவது காணாமற் போயிருக்கிறது. இந்தத் தேவஸ்தானம் பரசுராம க்ஷத்திரியர்களைச் சேர்ந்த தேவஸ்தானம். 18-ம் நூற்றாண்டில் இந்த தேவஸ்தானம் திப்பு சுல்த்தானால் தீண்டப்படவில்லை. 18-ம் நூற்றாண்டில் சுராக்கால் ராஜா தமக்கு ஷை மானேஜ்மெண்டு தேவை என்று அப்போதிருந்த மானேஜர்கள் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். ஆனால் அவருக்கு அனுகூலமாகவில்லை. அதன் பிறகு ஈஸ்ட் இந்திய கம்பெனிபார் நேரில் மானேஜ்மெண்டை ஒப்புக் கொண்டார்கள். சிலகாலம் சென்று மறுபடியும் இப்போது மானேஜர்களாக யிருக்கும் "யுரவார்ஸ"களுடைய முன்னோர்களிடம் மானேஜ்மெண்டை ஒப்புவித்துவிட்டார்கள். அது கால முதல் தேவஸ்தானம் சீர்கேடாய் மானேஜ் மெண்டு செய்யப் பட்டு வருகிறது. இப்போதிருக்கும் மானேஜரை விலக்கிவிட்டுப் புதிய மானேஜர் நியமிக்கவேண்டுமென்றும் கணக்கு எடுக்கப்பட வேண்டுமென்றும் தேவஸ்தானத்தின் சங்கம சொத்துக்களுக்கு ஒரு ஜாப்பிதா தயார் செய்யவேண்டு மென்றும், ஒரு ரிசீவர் நியமிக்கப்பட வேண்டுமென்றும் தேவஸ்தானம் இனிமேல் ஒழுங்காக மானேஜ்மெண்டு செய்யப்பட கோர்ட்டார் ஒழுங்கும் அல்லது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வாதிகள் பிரியாதியில் ஒரு பிரார்த்தனை செய்துகொண் டிருக்கிறார்கள்.

ஒருமனு:—தேவஸ்தான சொத்துக்களை இனி மானேஜர்கள் பராதீனம் செய்யக்கூடாதபடி கோர்ட்டார் இனஜங்ஷன் உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்றும் தேவஸ்தான சொத்துக்களுக்கு ஒரு ஜப்பிதா எடுக்கும்படி கோர்ட்டார் ஒரு கோர்ட்டு மனிதனை அனுப்பிவிக்க வேண்டுமென்று வாதிகள் மனு செய்துகொண்டார்கள்; கோர்ட்டார் மனுவில் கேட்டுக்கொண்டபடி உத்திரவு செய்திருக்கிறார்கள்.

---

## பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் கோர்ட்.

---

### ஒரு ஜெயில் பறவைக் கேஸ்.

*மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் F. D. பெர்ட்*

கேசின் விபரம்:—குப்பன் என்கிற துரைசாமி சென்னப்பட்டணம் பார்க் ரயில் ஸ்டேஷனில் விஜாகப்பட்டணம் சூரியப் பிரகாசார்யர் புதுச்சேரிக்கு டிக்கிட்டு வாங்கிக் கொண்டிருந்தபோது குற்றவாளி அவருக்கு அருகில் நின்று இவனும் ஒரு டிக்கட்டு வாங்குவன்போல நின்றுகொண்டிருந்து அவருடைய சட்டை ஜோபியிலிருந்த 55-ரூபா பணம் முடிக்கப்பட்டிருந்த கைக் குட்டையை எடுத்துப் போட்டான். ஷை சூரியப் பிரகாசராவ் டிக்கட்டு கொடுக்கும் ஆபிஸிலிருந்துவந்தவுடன் ஜோபியிலிருந்த பண

முடிப் பப் பார்க்க, காணாமல் உடனே அவ்விடமிருந்த ரயில்வே போலிசாருக்கு ரிப்போர்ட் செய்தார். போலிசார் அந்த சமையமே அவனைப் பிடித்துப் பணத்தை வாங்கிப் போட்டார்கள். எழும்பூர் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் முன்னில் திருட்டுக் குற்றம் சாட்டினார்கள். இவன் பழைய ஆசாமி.

தண்டனை:—கோர்ட்டார் குற்றவாளிக்கு இரண்டு வருட கடினகாவல் தண்டனை விதித்தார்கள். அதில் மூன்று மாதம் தனிக்காவல் ஜெயிலிலிருந்து திரும்பி வந்தவுடனும் இரண்டு வருடம் வரையில் அவன் தன்னுடைய இருப்பிடத்தைப் போலீசாருக்கு அறிவித்துக் கொண்டிருக்க வேண்டும்.

---

## LEGAL INTELLIGENCE.
## கோர்ட்டு சமாசாரங்கள்.

---

### புதிய லாயர்

ஐகோர்ட்டி வக்கீல் மிஸ்டர் B. N. சர்மாவுடைய மனுவின்பேரில் மிஸ்டர் நாருயணசி பி. எ. பி. யல். ஐகோர்ட்டு வக்கீலாக தாக்கல் செய்து கொள்ளும்படி ஆக்டிங் சீப்ஜஸ்டிஸும் ஜட்ஜிமிஸ்டர் ஹனேயும் கூடிய கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள்.

---

## AN EUROPEAN FINED.
### ஒரு ஐரோப்பியர் அபராதம் விதிக்கப்பட்டார்.

மெசர்ஸ் பாரி கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் பெர்னார்ட் மூர்க்கமாய் மோட்டார் வண்டியை விட்டுக்கொண்டு போனதாக எழும்பூர் சிப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரால் குற்றம் ஸ்தாபனை செய்யப்பட்டு ரூ. 15 அபராதம் விதிக்சபபட்டார்.

---

### மிஸ்டர் ஜஸ்டிஸ் அப்தல் ரகீம்

பப்ளிக் செர்விஸ் கமிஷனில் மெம்பராக நியமிக்கப்பட்டிருந்த மிஸ்டர் ஜெஸ்டிஸ் அப்தல் ரகீம் செப்டம்பர் மாதம் சென்னைக்குத் திரும்பி வந்து ஐகோர்ட் ஜட்ஜி உத்தியோகத்தை ஒப்புக்கொள்ளுவார்கள். ஆதலால் அவருடைய ப்திலியாகிய ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி பம்பாய்க்குத் திரும்பிப் போய் விடுவார்கள்.

---

### வக்கீல் ரிசீவர்பேரில் கேஸ்.

கேசின் விபரம்:—சென்னப்பட்டணம் கிடங்குத்தெருவில் ஒரு சீமை ஜவுளி வியாபாரத்தில் உண்டான தாவாவில் ஐகோட்டு வக்கீல் மிஸ்டர் ரெங்கவடிவேலு என்பவர் ரிசீவராக நியமிக்கப் பட்டார். இவர் கிடங்கை 6மாதகாலம் வரையில் திறந்து பார்க்காமல் அலஷியமாக யிருந்ததால் ஜவுளிகள் கெட்டுப்போய் விட்டன வென்றும் மழைஜலம் உள்ளே பிரவேசித்து துணிகளை ஈரமாக்கி விட்டனவென்றும் ஆகவே ஜவுளிகளின் கொளு முதல் விலைக்கும் விற்ற விலைக்கும் ரூபா 2300 நஷ்டம் ஏற்படு மென்றும் நஷ்டத்தை ரிசீவர் கட்டிக் கொடுக்கும்படி கோர்ட்டார் உத்திரவு செய்யவேண்டு மென்று பிரதி வாதி மநு செய்து கொண்டார்.

உத்திரவு:—ரீசீவர் அலஷியமாக விருந்ததாக ருஜுப்படுகிறதென்று தீர்மானித்தார்கள். ஆயினும் நஷ்டம் பிரதிவாதி சொல்லுகிற அளவு உண்டாகவில்லையென்று சொல்லி பிரதிவாதிக்கி ரிசீவர் ரூ. 100 நஷ்டம் கட்டிச் கொடுக்கும்படியாக உத்திரவு செய்தார்கள். (21 8 14)

லாயர்கள்:—மிஸடர் T. M. வெங்கடாச்சாரி வேதாந்தச்சாரியார் பிரதிவாதி தரபிற்கும் மிஸ்டா V. V, சீனிவாசய்யங்கார் ரீசிவர் தரபிற்கும் ஆஜரானார்கள்.

---

## HOUSE TRESPASS
### அத்துமீறி பிரவேசித்தல்.

பிரிவு 450 ஜென்ம தீபாந்திர தண்டனை விதிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தைச் செய்யவேணுமென்கிற எண்ணம் கொண்டு அத்துமீறி வீட்டிற்குள் எவன் ஒருவன் பிரவேசிக்கிறானோ அவன் இரண்டுவகை ஜெயில் தண்டனைகளில் எந்த தண்டனையாவது 10 வருஷங்களுக்கு அதிகப்படாமல் தண்டிக்கப் படுவதுடன் அபராத தண்டனையும் விதிக்கப் படுவான்.

---

## NOTES.
## குறிப்புகள்.

---

### கோர்ட்டு நடவடிக்கைகள்.

(1) இந்தக் கேசிற்கு பிரியாது வேணுமென்பது அவசியமல்ல. கோர்ட்டாரே இந்தக் கேசை வலுவில் பிடித்து விசாரணை செய்யலாம்.

(2) முதலில் குற்றவாளியின் பேரில் வாரண்டு பிறப்பிக்கப் படவேண்டும்.

(3) குற்றவாளியை ஜாமீன்பேரில் விடக்கூடாது.

(4) சமாதானம் படுத்திக்கொள்ளக் கூடிய கேசல்ல.

### ருஜுப்படவேண்டிய அம்சங்கள்.

(1) குற்றவாளி அத்துமீறி வீட்டிற்குள் புகுந்தான் என்று ருஜுப்படவேண்டும்.



(2) ஜென்ம தீபாந்திர தண்டனை விதிக்கப்படக் கூடிய ஒரு குற்றத்தைச் செய்யவேண்டியதற்காக அத்துமீறி வீட்டிற்குள் பிரவேசித்தான் என்று ருஜுப்படவேண்டும்.

---

## TRANS PORTATION.
### தீவாந்தர தண்டனை.

அடியிற்கண்ட குற்றங்களுக்கு தீவாந்திர தண்டனை விதிக்கப்படுமென்று இந்தியன் பீனல் கோடில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. பிரிவு 121 அரசாங்கத்திற்கு விரோதமாக யுத்தம் செய்தல்.
2. ,, 121 A அரசாங்கத்திற்கு விரோதமாக சதியாலோஜனை செய்தல்.
3. ,, 122 அரசருடன் யுத்தம் செய்ய வேணுமென்னும் எண்ணத்துடன் ஆயுதங்கள் முதலியவையைச் சேர்த்து வருதல்.
4. ,, 124 A ராஜத்துரோகம்.
5. ,, 125 ஆசியாவிலிருக்கும் எந்த அரசனாவது யுத்தம் செய்தல்.
6. ,, 128 ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன் தன் வசமிருந்த யுத்தக் கைதியாவது அல்லது அரசாங்கக் கைதியாவது தப்பித்துக் கொள்ளும்படி விடுவது.
7. ,, 130 தப்பித்துக்கொண்ட கைதிக்கு உடந்தையா யிருத்தல்.
8. ,, 131 அரசாங்கத்திற்கு விரோதமாக கலகம் செய்ய உடந்தையா யிருப்பது.
9. ,, 132 ஷை ஷை
10. ,, 194 தூக்கு தண்டனை விதிக்கப்படக் கூடிய ஒரு கேசில் பொய் சாக்ஷியம் சொல்லுதல்.
11. ,, ஜென்ம தீபாந்திர தண்டனை விதிக்கப்படக்கூடிய கேசில் பொய் சாக்ஷியம் சொல்லுதல்.
12. ,, 225 மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு குற்றவாளியை பிடிக்கும்போது எதிர்த்தல்.
13. ,, 225 சில கேஸ்களில் சர்க்கார் உத்தியோகஸ்தன் குற்றவாளியை பிடிக்க தவறிப்போவது அல்லது தப்பித்துக் கொள்ளும்படி விடுவது.
14. ,, 226 தீவாந்திர தண்டனையிலிருந்து சட்டவிரோதமாகத் திரும்பிவருதல்.
15. ,, 232 போலி நாணயம் செய்தல்.
16. ,, 238 போலி நாணயத்தை ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்தல்.
17. ,, 255 போலி கவர்ன்மெண்டு முத்திரைக் கடுதாசிகள் செய்தல்.
18. ,, 302 கொலை (மரண தண்டனை.)
19. ,, 304 குற்றமாகும்படியான கொலை.
20. ,, 305 மைனராவது அல்லது பயித்தியம் கொண்டவனாவது தற்கொலை செய்து கொள்ள உடந்தையா யிருப்பது.
21. ,, 307 காயப்படுத்தி கொலை செய்ய எத்தனித்தல்.
22 ,, 311 கொலையையும் கொள்ளையடித்தலையும் தொழிலாகக்கொண்ட கூட்டத்தைச் சேர்ந்தவன்.
23. ,, 313 ஸ்திரீயினுடைய சம்மதமின்றி கர்பத்தை அழித்தல்.
24. ,, 314 கர்பத்தை அழித்ததால் மரணம் உண்டானால்.
25. ,, 315 வயிற்றுக்குள் ளிருக்கும் சிசு பிறப்பதற்கு முந்தியாவது அல்லது பிந்தியாவது அதை அழித்தல்.
26. ,, 326 அபாயமான ஆயுதத்தால் கடுங்காயம் விளைவித்தல்.
27. ,, 329 இம்சித்துப் பணம் பறிப்பதற்காக கடுங்காயம் விளைவித்தல்.
28. ,, 364. கொலை செய்வதற்காக நர சோரம் செய்தல்.
29. ,, 371 அடிமை வியாபாரம்.
30. ,, 376 பலவந்தப் புணர்ச்சி.
31. ,, 377 சுபாவத்திற்கு விரோதமான குற்றங்கள்.
32. ,, 388 சுபாவத்திற்கு விரோதமான குற்றங்களைச் செயவதாக பயமுறுத்தி இம்சித்துப் பணம் பறித்தல்.
33. ,, பி. 389 ஸுபாவத்திற்கு விரோதமான குற்றங்கள் செயததாக குற்றஞ் சாட்டி பயமுறுத்தல்.
34. ,, 394 காயம் சம்பந்தப்பட்ட கொள்ளை.
35. ,, 396 தீவட்டிக் கொள்ளையால் கொலை.
36. ,, 400 தீவட்டிக் கொள்ளை கூட்டத்தில் சேர்ந்திருப்பது.

37. ,, 409 சர்க்கார் உத்தியோகஸ்தன், பாங்கிக்காரன், வியாபாரி ஏஜண்டு.

38. ,, 412 தீவட்டிக் கொள்ளையில் திருடின சொத்தை பெற்றுக்கொள்ளுவது.

39. ,, S 413 திருட்டுச் சொத்தில் வியாபாரம் செய்தல்.

40. ,, 436 ஒரு வீட்டை நாசம் செயவதற்காக நெருப்பினால் விஷமம்செய்தல்.

41. ,, 487 கப்பல்களை நாசம் செய்ய வேணுமென்கிற நோக்கத்துடன் நெருப்பினால் விஷமம் செய்தல்.

42. ,, 449 தூக்கு தண்டனை விதிக்கும்படியான ஒரு குற்றத்தைச் செய்வதற்காக வீட்டில் அத்துமீறி பிரவேசித்தல்.

43. ,, 459 மறைந்து அத்துமீறி வீட்டிற்குள் பிரவேசித்து கடுங்காயம் விளைவித்தல்.

44. ,, 460 கன்னம் வைத்த கேசில் மரணமாவது அல்லது கடும் காயமாவது விளைவித்தல்.

45. ,, 467 ஒரு விலை உயர்ந்த தஸ்தாவேஜியில் போர்ஜரி செய்தல்.

46. ,, 472 போர்ஜரி செய்ய வேணுமென்கிற நோக்கத்துடன் முத்திரை ஸ்டாம்பு தயார்செய்தல்.

47. ,, 474 போர்ஜரி செய்யப்பட்ட தஸ்தாவேஜியை உடைத்தாயிருத்தல்.

48. ,, 475 போர்ஜரி நடத்துவதற்காகப் போலிப்பிளானாவது அல்லது குறியாவது போடுவது.

49. ,, 477 ஒரு உயிலை மோசக் கருத்துடன் புறட்டுவது.

50. ,, சில பிரயத்தனங்கள்.

---

## ADULTEY

### விபசாரம்.

பிரிவு 498: எவன் ஒருவன், ஒருமனிதனுடைய மனைவியை அவனிடமிருந்தாவது அல்லது அந்த மனிதனுக்காக அவளைப் பாதுகாத்துக்கொண்டு வருகிறவனிடத்தி லிருந்தாவது அவள் எந்த மனிதனுடனாவது குற்றமாகும்படியான புணர்ச்சி செய்யும்படியாகச் செய்ய வேண்டுமென்கிற எண்ணத்துடன் அவளை எடுத்துக் கொண்டு அல்லது அடித்துக்கொண்டு போகிறானோ அல்லது அந்த எண்ணத்துடன் அவளை மறைத்து அல்லது நிறுத்தி வைத்திருந்தாலும் அவனுக்கு இரண்டுவிதமான தண்டனைகளில் ஏந்த தண்டனையாவது இரண்டுவருடம் வரையிலாவது அல்லது அபராதமாவது அல்லது ஜெயில் தண்டனையும் அபராத தண்டனையும் சேர்த்துமாவது விதிக்கப்படும்.

---

## NOTES

### குறிப்புகள்

1. ஸ்திரீயின் புருஷனாவது அல்லது அந்த புருஷன் இல்லாமற் போனால் அந்த ஸ்திரீயைப் பாதுகாத்துக்கொண்டிருந்த வேறொவனாவது பிரியாது கொடுத்தால் ஒழிய, கோர்ட்டாரே வலுவிலே இப்பேர்பட்ட கேஸ்களை பிடித்து விசாரணை செய்யக் கூடாது.

2. இந்தக் குற்றம் கோர்ட்டாரே வலுவில் பிடிக்கக் கூடிய கேசல்ல (Non - cognizable).

3. சாதாரணமாக ஆரம்பத்தில் வாரண்டு பிறப்பிக்கப்பட வேண்டும்.

4. குற்றவாளியை ஜாமீன் பேரில் விடலாம்.

5. சமாதானம் செய்து கொள்ளப்படக் கூடிய கேஸ்.

6. பிரசிடென்ஜி மாஜிஸ்டிரேட், அல்லது முதல் கிளாஸ் அல்லது இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டுகள் இந்தக்கேசை விசாரணை செய்ய வேண்டும்.

7. குற்ற ஸ்தாபனைக்கு அடியிற் கண்டருஜுக ளிருக்க வேண்டும்:—

a. ஸ்திரீ விவாகம் செய்யப்பட்டவள் என்று ருஜுப்படவேண்டும்.

b. இன்னொருவனுடைய மனைவி என்று குற்றவாளிக்குத் தெரியுமென்று ருஜுப்படவேண்டும்.

c. குற்றம் நடந்த காலத்தில் புருஷனுடைய பராமரிப்பிலையாவது அல்லது அவனுடைய தரப்பல் வேறொருவனுடைய பராமரிப்பிலே யாவது அவள் வசித்துக்கொண்டு வந்தாள் என்று ருஜுப்படவேண்டும்.

d. குற்றவாளி அவளை அவளுடைய புருஷனிடமிருந்தாவது அல்லது அந்த வேறு மனிதனிடமிருந்தாவது: (1) எடுத்துக் கொண்டு போயிருக்க வேண்டும் அல்லது (2) ஆசை காட்டி அடித்துக் கொண்டு போயிருக்க வேண்டும் (3) அல்லது மறைத்து வைத்திருக்க வேண்டும் (4) அல்லது நிறுத்தி வைத்திருக்க வேண்டும்.

e. அந்த ஸ்திரீ குற்றமாக எண்ணப்படும் சம்சர்க்கத்தைச் செய்யும் படியாகச் செய்யவேண்டுமென்று குற்றவாளிக்கு எண்ணமிருந்ததென்று ருஜுப்படவேண்டும்.



8. சோர புருஷனே அந்த யோஜனை அந்த ஸ்திரீக்கு முதலில் சொல்லி யிருந்தாலும் அல்லது விஸ்வாசம் கெட்ட ஸ்திரீயே அந்த யோஜனையை ஆரம்பத்தில் வலுவில் சொல்லி யிருந்தாலும் சரி இரண்டும் ஒன்றே. மொத்தத்தில் அவள் புருஷனை விட்டுப் போயிருந்திருக்க வேணும்.

9. ஸ்திரி விவாகம் செய்யப்பட்டவளாக விருக்கவேண்டும். குற்றவாளிக்கு, அவள் விவாகம் செய்யப்பட்டவள் என்று தெரிந்திருக்கவேண்டும். அவளுடைய புருஷனை குற்றவாளிக்குத் தெரியவேண்டுமென்பது அனாவசியம்.

10. ஸ்திரி, தானே அவளுடைய புருஷனுடைய வீட்டிலிருந்தாவது அல்லது பெற்றோர்கள் வீட்டிலிருந்தாவது அல்லது மற்றவனிடமாவதிருந்து ஓடிப்போய் அதன் பிறகு அவள் ஒரு மனிதனுடன் குற்றமாகும்படியான சம்சர்க்கம் செய்யத் தூண்டப்பட்டக் கேசிற்கு இந்தப் பிரிவு பொருந்தாது. ஆதலால் புருஷனைவிட்டு ஒரு ஸ்திரீ தானே ஓடிப்போய் அதன் பிறகு ஒரு மனிதனை சம்பாதித்துக்கொண்டு, இருவரும் விபசாரம் செய்ததற்கு ருஜு வில்லாமற்போனாலும் கூட அவளுடன் குற்றமான சம்சர்க்கம் செய்யவேண்டுமென்று அவனுக்கு எண்ணமிருந்த போதிலும் அவன் குற்றஸ்தாபனை செய்யப் படமாட்டான்.

11. குற்ற மாகும்படியான சம்சர்க்கம் என்பது சட்ட விரோதமான சம்சர்க்கம். ஒரு ஸ்திரி புருஷனுடைய சம்மதத்தின்பேரில் வேறொருவனுடன் சம்சர்க்கம் செய்தால் அவள் சோர புருஷனை தண்டனைக்குட்படுத்த விரும்பமாட்டாள்.

---

தீர்ப்பு சோல்லப்பட்டு மறுபடியும் ரத்து செய்யப்பட்டது

ஜட்ஜுகள்:— ஆக்ட்டிங் சீப் ஜட்ஜி
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானனே

கேசின் விபரம்:— தென் கன்னடம் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் மதிராஸ் பாங்கி சம்பந்தப்பட்ட கேசில் மதிராஸ் பாங்கிக்கு அனுகூலமாக தீர்ப்பு சொல்லப்பட்டது.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளப் பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் K. சீனிவாசய்யங்காரும் அப்பீல் பிரதிவாதிகளுக்காக சொலிசிட்டர் மிஸ்டர் பிரைட்வெல்லும் ஆஜரானார்கள்.

அப்பீல் வாதியின் லாயர் பேசினது:—அப்பீல் தாக்கல் செய்யப்படவேண்டிய காலம் சென்று 5 நாட்களுக்குப் பிறகு அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதென்றும், அப்பீல்வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பிரமாணப் பத்திரிகையிலும் தாமதத்திற்கு காரணம் சொல்லப்படவில்லை என்றும் ஆகையால் இந்த அப்பீல் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் சொன்னார்.

தீர்ப்பு:—கோர்ட்டார் இருதரப்பு லாயர் பேசினதையும் கேட்டுவிட்டு அப்பீல் தாமதமாக தாக்கல் செய்யப்பட்டதற்காக யாதொரு காரணமும் சொல்லப்படாததால் அப்பீல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று தீர்ப்பு சொன்னார்கள்.

இந்த சமயத்தில் பாங்கிக்கு சொலிசிட்டராகவிருக்கும் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் எழுந்திருந்து செலவு தொகை கோர்ட்டாரைக் கேட்டார்.

கோர்ட்டார்:—எங்கள் இருவரில்ஒரு ஜட்ஜுக்கு மதிராஸ் பாங்கியில் பங்குகளிருப்பதால், அப்பீல் வாதி நாங்கள் அப்பீலை விசாரணை செய்ய சம்மதித்தால் ஒழிய நாங்கள் விசாரணை செய்யக்கூடாது என்று சொன்னார்கள்.

அதன்பேரில் மிஸ்டர் K. சீனிவாஸய்யங்கார் இன்னொரு கோர்ட்டார் இந்த அப்பீலை விசாரணை செய்யும்படி வேண்டுகிறதாகத் தெரிவித்துக்கொண்டார்.

தீர்ப்பு:—இந்த அப்பீலை இன்னொரு கோர்ட்டாருடைய விசாரணைக்குக் கொண்டு வரும்படி கோர்ட்டார் உத்திரவு செய்து, இந்த சமாசாரம் இதற்கு முந்தியே தெரிந்திருந்தால் நாங்கள் அப்பீலை ஆரம்ப விசாரணைகூட செய்திருக்க மாட்டோம் என்று சொன்னார்கள். (21-8-1914.)

---

ஸ்மால்காஸ் கோர்ட்டு மூன்றுவது ஜட்ஜி.

ருவ் பகதூர் S. ருமசாமி அய்யங்கார் 55-வது வயதைக் கடந்துவிட்டபடியால் செப்டம்பர்மீ மத்தியில் உத்தியோகத்தை விட்டு நீங்கி பென்ஷன் பெற்றுக்கொள்ளப் போகிறார்.

---

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையார்ஜி

இளவாணிய ஜாதியார்............வாதிகள்

vs

தருமகர்த்தா சுப்பிரமணிய அய்யர்...பிரதிவாதி

கேசின் விபரம்:— பனங்குடி கிராமத்திலிருக்கும் இளவாணிய ஜாதியார் தாங்களும் முதலிமார்களும் நாயுடுமார்களைப் போல் கிராமத்திலிருக்கும் ஸ்ரீ ராமலிங்க சுவாமி கோவிலில் சபாபதி சந்நதி வரையில் சென்று ஆறுதனை செய்ய விடப்பட வேண்டுமென்று ஷை தேவஸ்தானத்தின் மானேஜர்

பேரில் திருநெல்வேலி அடிஷனல் டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் டிக்ளரேடரி வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்கள்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—சபாபதி சன்னதி வரையில் தாங்களும் போகிறதுண்டு என்று வாதிகள் சொல்லும் வழக்கத்தை அவர்கள் ருஜூப்படுத்தவில்லை. இளவாணிய ஜாதியார் ஆதிகால முதல் சாமி கும்பிடுவதற்காக சபாபதி சன்னதி வரையில் போகிறதும் வழக்கமில்லை. என்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

இந்த தீர்ப்புக்கு விரோதமாக வாதிகள் ஜில்லாக் கோர்ட்டில் அப்பில் செய்து கொண்டார்கள்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு: அசல் கோர்ட்டு தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது.

வாதிகள் ஐகோர்ட்டில் அப்பீல் செய்து கொண்டார்கள்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு.—வாதிகள் ஆதிகாலமுதல் மற்ற ஜாதியார்களைப் போல கோவிலுக்கு விடப்படுகிறதில்லை என்று ருஜூப்படுத்தும் பொறுப்பு பிரதிவாதிகளைச்சேர்ந்தது. அவர்கள் அப்படிருஜூப்படுத்த தவறிப் போயிருக்கிறார்கள். முதலியார் நாயுடுகள் முதலிய ஜாதியார்களைப்போல, சாஸ்திரங்களின் பிரகாரம், இளவாணியர்களும் கோவிலுக்குள் சுவாமியைக் கும்பிடுவதற்காக விடப்படுகிறதுண்டு என்று ருஜூப்பட்டிருக்கிறபடியால் வாதிகள் பிரார்த்தித்துக் கொண்டபடி வாதிகளுக்கு டிக்கிரி கொடுக்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். (18-8-1914.)

---

லிமிட்டேஷன் ஆக்ட் சம்பந்தமாக ஒரு கேஸ்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பில்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்

கேசின் விபரம்:—மதுரையில் இன்சால் வென்சி நடவடிக்கையால் ரிசீவர்செய்த உத்திரவிற்கு விரோதமாக ஜில்லா ஜட்ஜியிடம் ஒரு ரிவிஷன்மனு தாக்கல் செய்யப்பட்டது. ரிசீவர் செய்த உத்திரவுக்கு விரோதமாக ஜில்லா ஜர்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளப்படவேண்டியதாயிருந்தால் இத்தனை நாட்களுக்குள் அப்பீல் செய்துகொள்ள வேண்டுமென்று வெளி ஜில்லா இன்சால் வென்சி ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. ரிசீவருடைய உத்திரவின் நகல் காப்பியை வாங்குவதற்குப் பிடித்த காலத்தைக் கழித்துப்போட்டால் ரிசீவர் செய்த உத்திரவிற்குப் பிறகு எத்தனை நாட்களுக்குள் ஜில்லா ஜட்ஜியிடம் மனுக் கொடுக்கப்பட வேண்டுமென்று ஆக்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறதோ அத்தனை நாட்களுக்குள்ளாகவே பிரஸ்தா மனு ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் ரிசீவர்செய்த உத்திரவின் நகலை வாங்குவதற்குப் பிடித்த காலத்தைக் கழித்துப்போட ஜில்லா ஜட்ஜி சம்மதிக்காமல் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக ஐகோர்ட்டில் அப்பீல்செய்து கொள்ளப்பட்டது.

அப்பீல் வாதியின்கக்ஷி:—லிமிட்டேஷன் ஆக்ட் 12-வது பிரிவின் பிரகாரம் நகல் வாங்குவதற்குப் பிடிக்கும் காலம் மனு அல்லது அப்பீல் தாக்கல் செய்வதற்காக குறிப்பிடப்பட்டிருக்கு காலத்திலிருந்து விலக்கப்பட்டு கணக்கு பார்க்கப்படவேண்டும் அப்படி கணக்கு செய்தால் பிரஸ்தாப மனுவும், மனு தாக்கல் செய்யப்பட வேண்டியதற்காகச் சொல்லப்பட்ட காலத்திற்குள்ளவே ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆதலால் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் இந்த மனுவைத் தள்ளுபடி செய்தது நியாயவிரோதம் என்றும் கக்ஷி சொன்னார்கள்.

ஐகோர்ட்டார் தீர்ப்பு:—லிமிட்டேஷன் ஆக்ட் 12-வது பிரிவு இந்தக்கேசிற்குப் பொருந்தாது. ஆதலால் ரிசீவர் உத்திரவினுடைய நகலை வாங்குவதற்குப் பிடித்தகாலம் விலக்கப்பட மாட்டாதென்று சொல்லி ஜில்லா ஜட்ஜியினுடைய உத்திரவை உறுதிப்படுத்தினார்கள் (18-8-1914.)

---

அட்மினிஸ் ட்ரேடா ஜெனரலின் அதிகாரங்கள்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்ட்டிஸ் குமாரசாமி சாஸ்திரி.

கேசின்விபரம்:—இறந்துபோன ராஜாமணி முதலியினுடையஎஸ்டேட்ஐக்கோர்ட்டார்12-12-1908ல் செய்த உத்திரவின் பேரில் அட்மினிஸ்ட்ரேடர் ஜெனரலால் பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது. இறந்துபோன ராஜாமணி முதலிக்கு சிதம்பர முதலி என்று ஒரே ஒரு புத்திரர் இருந்தார். அவரும் இப்போது இறந்து போய்விட்டார். சிதம்பரமுதலி மேஜரானவுடன் அட்மினிஸ் ட்ரேடர் வசமிருக்கும் சொத்துக்களில் ஒன்றை அடமானம் வைத்து அடமானப்பத்திரம் யெழுதிக்கொடுத்தார். இந்த அடமானப் பத்திரத்தின் பேரில் வாதி சிதம்பர முதலியை முதல் பிரதிவாதியாகவும், அட்மினிஸ்ட்ரேடர் ஜெனரலை இரண்டாவது பிரதிவாதியாகவும் சேர்த்து வியாஜ்ஜியம் கொண்டு வந்திருக்கிறார். ராஜாமணிமுதலி இறந்து போகும்போது சிதம்பர முதலி மைனர். 1904ல் மேஜரானார். சொத்துக்களுக்கு பாத்தியதை பாராட்டக்கூடியே வேறெவருமில்லை. முதல் பிரதிவாதி மேஜர் அடைந்தவுடன் வாதியினிடம் இரண்டு சொத்துக்களை அடமானம் வைத்து ரூபா 5000 வாங்கினார். இதன் பிறகு அச் சொத்துக்களில் ஒன்றை ஆள்வார் செட்டிக்கி கிரையம்செய்து வாதிக்கு ரூபா இரண்டாயிரம் செலுத்தினார்.



வாதி தமக்குச் சேரவேண்டிய பாக்கித் தொகைக்கு இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

இரண்டாவது பிரதிவாதிகளின் கக்ஷி:—இந்தப் பராதீனம் செலாமணியாக மாட்டாது. ஏனென்றால் சொத்துக்கள் அட்மினிஸ்ட்ரேட்டர் ஜெனரல் மானேஜ்மெண்டிலிருந்து வருகின்றன. அவைகள் கிரமப்பிரகாரம் ஒப்பிவிக்கப்படும் பரியந்தம் சொத்தில் பாத்தியதை ஏற்படமாட்டாது.

வாதியின் லாயர் பேசினது:—அட்மினிஸ் ரேட்டா ஜெனரல் டிரஸ்டி ஸ்தானத்திலிருந்து மானேஜ்மெண்டு செய்துவருகிறார். உள்ளபடி அந்தசொத்தை அடையவேண்டியவர் பிரதிவாதி. குடும்ப விஷயமாக அவசரம் ஏற்பட்டு அட்மினிஸ் ட்ரேடர் வசமிருந்த சொத்துக்களைக்காட்டி பணம் வாங்கவேண்டியதா யிருந்தது. ஆதலால் அந்த அடமானம் செல்லுமென்று வாதித்தார்.

கோர்ட்டார் அபிப்பிராயம்:-இன்னும்தீர்ப்புசொல்லப்படவில்லை ஆயினும் அட்மினிஸட்ரேடர் ஜெனரல்களை ஒப்புவிக்கும் பரியந்தம் அடமானம் எழுதிக் சொத்துக் கொடுக்கும்படியான பாத்தியம் சொத்தில் உண்டாகவில்லை என்றும் ஆதலால் அடமானம் செலாமணியாக மாட்டாதென்று தாம் அபிப்பிராயப்படுகிறதாகக் கோர்ட்டார் சொன்னார்கள்.

(18 - 8 - 1914.)

---

DEATH OF MR. JAMES SHORT.

மிஸ்டர் ஜேம்ஸ் க்ஷார்ட்டின் மரணம்.

சென்னப்பட்டணத்தில் அகண்ட லாயர் தொழில் நடத்தி திரண்ட சொத்துக்களை சம்பாதித்த சொலிசிட்டர் மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட் சென்றமீ 26௳ இங்கிலாண்டில்இறந்துபோய் விட்டார் என்று கேள்விப்பட்டு விசனிக்கின்றோம். பிரக்கியாதிபெற்ற லாயராக விருந்த மிஸ்டர் வுல்லிகிரான்ட்டினிடம் தொழிலுக்கு தயார் செய்யப்பட மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட் 1881௵ லாயர் தொழில் நடத்த ஆரம்பித்தார். அந்தக் காலத்திலிருந்த சொலிசிட்டர் மிஸ்டர் சாம்பியனுடன் பாகஸ்தராகச் சேர்ந்து, அநேக காலம் இச் சென்னையில் பிரக்கியாதியுடன் பிரகாசித்து விளங்கிவந்த மெசர்ஸ் க்ஷாம்பியன் அண்டு ஷார்ட் என்று சொல்லப்பட்ட லர்யர் கம்பெனியை ஸ்தாபித்தார். இதன்பிறகு மிஸ்டர் ஷார்ட் தாமே ஏகதேசத்தில் நடத்திவந்தார்.1904ல்மிஸ்டர் பியூலை பாகஸ்தராகச் சேர்த்துக்கொண்டனர். 1910 - ல் மிஸ்டர் M. தணிகாசல செட்டியாரையும் ஒரு பாகஸ்தராகச் சேர்த்துக்கொண்டு கம்பெனி மெசர்ஸ் "க்ஷார்ட் அண்டு பியூல்" என்னும் நாமத்தால் விளங்கி வந்தது.

கடந்த பிப்ரவரிமீ முதல் மிஸ்டர் ஜேம்ஸ் க்ஷார்ட் நோயாயிருந்தார். அவர் இங்கிலாண்டிற்கு ஒருமுறை போய் வரும்படியாக டாக்டர்கள் யோசனைசொன்னார்கள். ஆதலால் கடந்த மேமீ 15௳ மிஸ்டர் ஷார்ட் இங்கிலாண்டிற்குப் பிரயாணமானார். தேகத்தில் ஒரு கட்டி தோன்றி அறுக்கப்படவே அதன் காரணமாக இறந்துபோய விட்டார். ஒரு புத்திரன், ஒரு புத்திரி, ஒரு விதவை அனேக சினேகிதர்கள்.—ஆகிய இவர்களை விட்டு விட்டு இறந்திருக்கின்றனர்.

---

ஐக்கோர்ட்டில் பிரஸ்தாபம்.

சென்றமீ 27௳ ஐக்கோர்ட்டில் அசல் தரப்பு ஜட்ஜியாகியமிஸ்டர்பேக்வெல் 11மணிகோர்ட்டிற்கு வந்தவுடன், சொலிசிட்டர்களுக்காக மிஸ்டர் பார்ட்டன், மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட்டின் குணாதிசயங்களைப்பற்றி துக்கம் பாராட்டினார். மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட் இந்தக் கோர்ட்டில் வெகு காலமாக தொழில் நடத்திக்கொண்டு வரும் சொலிசிட்டர்களில் ஒருவர் என்றும், அசல் தரப்பு விசாரணைக்கு வந்த அனேக வியாஜ்ஜியங்களில் அவர் சம்பந்தப்பட்டிருந்தார் என்றும் அனேகவருட காலங்களாக லாயர் தொழிலை வெற்றியுடன் நடத்திக்கொண்டு வந்தார் என்றும் அவருடைய கக்ஷிக்காரர்களிடம் மிகவும் அவர் பற்றுதலுடையவர் என்றும் அவருடைய மரணத்தால் நேரிட்டிருக்கும் நஷ்டத்தை அவருடைய குடும்பத்தார் உணருவதுமன்றி லாயர் சங்கம் முழுதிலுமே துக்கம் பாராட்டுகிறது என்று சொன்னார்.

---

ஜட்ஜி மிஸ்டர் பேகவெல்.

அடியிற்கண்டபடி பேசினார்:—மிஸ்டர் ஜேம்ஸ் ஷார்ட்டின் குணாதிசயங்களைப்பற்றி நீங்கள் சரியாய்ப் பேசி யிருக்கிறீர்கள். இறந்துபோனவரை அனேகவருட காலமாக எனக்குத் தெரியும். அவர் என்னுடைய சினேகர். எப்போதும் சந்தோஷமான முகத்தோற்ற முடையவர். மிகவும் நற்குணமுடையவர். வக்கீல் சங்கத்துக்கு ஒரு உபயோகமுள்ள மெம்பராக விருந்தார். தொழிலில் ஏதேஷ்டமாக பணமும் சம்பாதித்தார். ஆதலால் அவர் இறந்துபோனதைப்பற்றி எல்லோரும் துக்கம் பாராட்ட வேண்டியதுதான். அவர் இறந்துபோனதால் அவருடைய குடும்பத்திற்கு நேரிட்டிருக்கும் விசனத்திற்கும் நஷ்டத்திற்காகவும் நான் அனுதாபப்படுகிறேன்.

---

# Our Client's Page.

## நம்முடைய கக்ஷிக்காரர்களின் பக்கம்.

நம்முடைய இந்திய சட்ட கெஜட்டின் அபிப்பிராயங்களைக் கேட்கிறவர்கள் மாமூலான விதிகளை மறந்துபோயிருப்பதைப்பற்றி நாம் விசனிக்கின்றோம். அபிப்பிராயம் கேட்பதற்கு கடிதம் எழுதும்போதே ரூ. 5 அட்வான்ஸ் மணியார்டர் செய்யவேண்டுமென்றும் இல்லேல் ரிக்காட் கட்டோடே அவிழ்த்துப் பார்க்கப்பட மாட்டாதென்று பலமுறை நம்முடைய சஞ்சிகைகளில் எழுதியிருந்தும் கக்ஷிக்காரர்கள் கவனிக்கிறதில்லை! இந்தக் காரணத்தை முன்னிட்டு சுமார் 35 அபிப்பிராயக் கடிதங்கள் முதலாவது உடைத்துப் பார்க்கப்படவில்லை. ஆதலால் இனி கக்ஷிக்காரர்கள் ஞாபகத்தில் வைப்பார்கள் என்று நம்புகின்றோம்! நம்முடைய கெஜட் கூறும் அபிப்பிராயம் ஏனோ தானோ என்று அலக்ஷியமாகச் சொல்லப்படும் அபிப்பிராயமல்ல. கூறப்படும் அபிப்பிராயம் ஒவ்வொன்றிற்கும் அதன் கடைசியில் லா ரிப்போர்ட் பிரமாணமும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்களையே வெளியூர்களில் உள்ள கக்ஷிக்காரர்கள் அவர்களுடைய சொந்த லாயர்களிடம் எடுத்துச் சொன்னால் கக்ஷிக்காரர்களிடமிருந்து லாயர்கள் அதிகப்படியான பீஸ் எதிர்பார்க்க இடமில்லாமல் மேல் நடவடிக்கை நடத்திக்கொண்டு போவார்கள்.

நம்முடைய கெஜட்டினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டவர்களில் எவரும் அந்த அபிப்பிராயம் சரியாயில்லையே என்று நமக்கு எழுதியிருப்பதை நாம் அறியோம்! நம்மால் இயன்றளவு நாம், ஜீவதிசையிலுள்ள பரியந்தம் கக்ஷிக்காரர்களுக்கு சாதகம் செய்யவேண்டுமென்று விரதம்கொண்டு கங்கணம் கட்டிக்கொண்டு சுமார் 9 வருட காலமாக தொடர்ந்தேர்த்தியாக உழைத்துக்கொண்டு வருகிறோம் என்பது உலகமறிந்த விஷயம் என்பதை மறுக்க முடியாது. ஆகையால் இந்த வகையில் கக்ஷிக்காரர்களுடைய முழு ஆதரிப்பையும் பெறுவோம் என்று நம்புகின்றோம்:—

### அபிப்பிராய ஜவாப்பு.

(1) திருச்சினாப்பள்ளி பக்ரிசாமிப் பிள்ளை:— தாங்கள் நிர்பயமின்றி தூங்கலாம். பயப்படவேண்டியதில்லை. ஏன் என்றால் பட்டாளத்தில் உத்தியோகம் செய்யும் ஒரு ஆபீஸருடைய சம்பளம் சி. பு. கோ. 60வது பிரிவின்படி ஜப்தி செய்யப்படக் கூடாததாக விருந்த போதிலும், மீறி ஜப்தி செய்யப்பட்டு டிக்கிரித் தொகை கடன்காரர்களுக்கு பங்கு போட்டு கொடுக்கப்பட்டுப் போய்விட்டால் அந்தத் தொகையை வாப்பீஸ் செய்யும்படி உத்திரவு செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை என்று பழனியாண்டி v கமலூர் ஆயா என்னும் இரண்டாவது அப்பீல் கேசில் ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி v ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர்கூடிய மதிராஸ் ஐக்கோர்ட்டார்கள் ஒரு இரண்டாவது அப்பீல் கேசில் தீர்மானித்திருக்கிறார்கள் என்று I. L. W. 416-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது.

(2) திருவையார் சதாசிவம்பிள்ளை:— தாசில்தாரால் கொடுக்கப்பட்ட ஒருதர்காஸ்த்தை ரத்துசெய்ய சப் கலெக்டருக்கு யாதொரு சந்தேகமின்றி அதிகாரமிருக்கிறதென்று I. L. W. 410ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறபடியால் நீங்கள் அப்பீல் செய்துகொள்ளுவதைப்பற்றி மயங்கவேண்டாம்.

(3) புதுக்கோட்டை வீரப்பிள்ளை:— தாங்கள் நம்முடைய அபிப்பிராயத்திற்கு எழுதியிருக்கும் கடிதத்தில், கடன்காரனை மோசம் செய்யவேண்டுமென்கிற எண்ணம் கடனாளிக்கிருந்ததென்று ருஜுப்படுத்தினால் விற்பனை செலாமணியாகாது. சில மாதங்களுக்கு முந்திகூட தங்களுடைய கேசைப்போலவே ஒரு கேஸ் (சிதம்பர செட்டியார் v சீனிவாச சாஸ்திரி 26 M. L. J. 73) மதிராஸ் ஐக்கோர்ட்டாருடைய விசாரணைக்கு வந்ததில் கடன்காரனை மோசம்செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன் உண்மையில்கிரயத் தொகை பெற்றுக்கொண்டு கடனாளி தன்னுடைய சொத்தைக் கிரயம் செய்திருந்தபோதிலும் அந்தக் கிரயம் செலாமணியாகமாட்டாதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

(4) மதுரை பாபு நாயுடு:— அதினால் பாதகமில்லை! இரண்டாவது அப்பீல் செய்துகொண்டால் ஜெயப்படும். ஏனென்றால் I. L. W. 416ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிற கேசில், ஒரு தஸ்தாவேஜியைப்பற்றி முதல் கோர்ட்டு நடவடிக்கையில் பிசகான தாத்பரியம் செய்யப்பட்டிருந்தால் இரண்டாவது அப்பீலில் அந்தப் பிசகைச் சீர்திருத்திக் கொள்ளலாமென்று மதிராஸ் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

(5) திருக்கோகரணம் ப. ழ. வ. காசிச் செட்டியார்:— மதிராஸ் ஐக்கோர்ட்டில் ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயரும் v ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்கும் கூடிய கோர்ட்டார் ரத்னசாமி செட்டி v ரத்னம்மாள் (I. L. W. 446) கேசில், ஒரு குறிப்பிட்ட வாயுதாத் தேதி தவறினால் வருடத்திற்கு 100க்கு 12 வீதம் வட்டி செலுத்தவேண்டுமென்று டிக்கிரியில் சொல்லப்பட்டிருப்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

N. R. N. and Co., Madras.



### ஐரோப்பா யுத்தம்.

இப்போது ஐரோப்பாவிலுள்ள வல்லரசுகள் எல்லாம் யுத்தத்தில் அமர்ந்திருக்கின்றன வென்றும் இரு தரப்பு சைனியங்களில் லக்ஷக்கணக்கான சோல்ஜர்கள் சண்டையில் அமர்ந்திருக்கிறார்கள், என்றும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் இரு தரப்பிலும் கொல்லப்பட்டு வருகிறார்கள்-இப்படியாக பிரமாதமாகவும் மாரா மாரியாகவும் போர்புரிந்து வரப்படுகிற-தென்றும் அதினால் பூலோக முழுதிலும் கவலைக் கடலில் ஆழ்ந்திருக்கின்றதென்றும் உலகமறிந்த விஷயங்கள்; பாரி யுத்தம் ஒன்று நடந்துவருகிறதென்றும் நம்முடைய பெருமையும் காருண்யமும் பொருந்திய பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் பிரவேசித்திருக்கிறாகள் என்றும் ஜனங்களுக்குத் தெரியுமே யொழிய மற்றப்படி அதன் உண்மையான காரணம் பொது ஜனங்களில் அனேகருக்குத் தெரிந்திருக்காது! ஆதலால் அந்தக் காரணத்தை நம்முடைய இந்திய சட்டகெஜெட்டில் இந்தசஞ்சிகையில் எடுத்து எழுதுவது தகுதியுடையதென்று எண்ணித் துணிந்தனம்; இந்த யுத்தத்தில் நம்முடைய பிரிட்டிஷ் அரசாங்கத்தார்கள் சேர்ந்திருப்பதும் அதன் நிமித்தம் நம் ஜனங்கள் மிதமிஞ்சின பற்றுதலும் கவலையும் காட்டிவருவதும்; சட்ட போதனை செய்யும் தொழிலை மட்டிலும் ஆபரணமாகப் பூண்ட நம் இந்தியா தேச சட்ட கெஜெட்டின் இந்த சஞ்சிகையில் நான்கு பக்கங்கள் இந்த யுத்த சமாசாரங்களுக்காக கொடுக்கும்படியாக நம்மைத் தூண்டி-ருக்கின்றன.

---

### பூர்வ கால யுத்தத்திற்கும் தற்கால யுத்தத்திற்குமுள்ள வித்தியாசம்.

கலியுகம் முதிர முதிரவும் நாகரீகமும் புத்தி தீக்ஷண்யமும் விசாலப்பட்டு இவ்வுலகத்தில் பல தேசத்தார்கள் பல நூதனங்களைக் கண்டுபிடித்து பிரசித்திப்படுத்தியிருக்கிறார்கள்; இப்படி நூதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது மானிடாபிவிருத்திக்காக மட்டிலுமல்ல; யுத்த காலங்களில் சத்துருக்களை முன்னிக்கிப்போது ஜடுதியில் கொல்லும்படியான யுத்த ஆயுதங்களும் தளவாடங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குமுன் நடந்த யுத்தங்களில் ஆகாயத்தில் சண்டை நடந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை; சமுத்திரத்திற்குள் சண்டை நடந்ததாகவும் கேள்விப்பட்டதில்லை. ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும் ஆகாயக் கப்பல்களையும் ஆகாய விமானங்களையும் சுடுவதற்கு, நூதன யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகாயத்தில் சண்டை போடும்படியான பலவிதமான விமானங்களும் ஆகாயக்கப்பல்களும் ஜெப்பாலியன்களும் (Zeppalin) கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன; சமுத்திரத்திற்குள்ளவே மூழ்கி அனேக மணி நேரம் வரையில் பிரயாணம் செய்து மறைந்து சத்துருவின் ஸ்டீமரை மோதித் தாக்கி நாசம் செய்யும் "டார்பீடோ" போர்ட்டுகளை ஜப்பான் ருஷியா சண்டைகளில் கேள்விப்பட்டிருக்கிறோமே யொழிய "சப்மாரையின்" என்னும் ஸ்டீமரைப்பற்றி நாம் கேள்விப்பட்டதில்லை. சமுத்திரத்திற்கு மேல் சண்டை நடப்பது போலவே சமுத்திரத்திற்குக் கீழும் சண்டைபோட "சப்மாரேயின்" என்னும் ஓர் வகை ஸ்டீமர் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்டீமர்கள் சமுத்திரத்திற்குள்ளேயே சண்டை போடும்படியான விசித்திர சூக்ஷ்மமுடையவை. இப்படி அநேக நூதனங்கள் மனிடர்களை ஜடுதியில் கொல்லவும் கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றன. ஆகாயக் கப்பல்கள் ஆகாயத்தில் வட்டமிட்டுக்கொண்டு சத்துரு நிற்கும் அல்லது வசிக்கும் ஸ்தலங்களில் பாம் குண்டுகள் போட்டு அவைகளை நாசம் செய்கின்றன. அந்த குண்டுகளிலேயே இரும்பு அம்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அம்புகள் அவைகளே யுத்தம் செய்யும்படியான மாதிரியாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. நிற்க நாம் யுத்தத்திற்குள்ள காரணத்தை எழுதப்புகுவோம்:—

---

### மூலகாரணம்

ஐரோப்பாவில் செர்வியா தேசம் என்று ஒரு சிறிய தேசமிருக்கிறது. அந்த தேசம் தான் இந்த யுத்தத்திற்கு மூலகாரணம்; இது யுத்தத்திற்குமுந்தி அதாவது கடந்த ஆகஸ்டு மாதத்திற்கு முந்தி ஆஸ்டிரியா தேசத்துடன் சேர்ந்திருந்தது. இத்தேசம் ஆஸ்டிரியா தேசத்துடன் சேர்க்கப்படுவதற்கு முந்தி துருக்கியுடன் சேர்ந்திருந்தது. துருக்கியுடன் சேர்ந்திருந்தபோதிலும் அந்த தேசத்திற்கு சட்ட திட்டங்களும் அரசாங்க பரிபாலனங்களும் பிரத்தியேகமாயுமிருந்தன. ஆனால் துருக்கி சுல்த்தானுடைய அரசாக்ஷிக்குட்பட்டு வந்துகொண்டிருந்தது. அந்த தேசத்தவர்கள் "சால்வ்" என்னும் ஒரு வெள்ளைக்கார ஜாதியார்; எப்போதும் முயற்சி செய்யும் குணநிச்சயமுடையவர்கள். தங்களுடைய ஜாதியாரன்றி வேறொரு ஜாதியாரின் ஆக்ஷிக்கு உட்பட்டிருக்கக்கூடிய இயல்பு உடையவர்களல்ல. ஆகையால் செர்வியா துருக்கியினுடைய அரசாக்ஷியிலிருந்து தன்னை நீக்கிக்கொள்ள வேண்டுமென்று அநேக காலம் முயற்சி செய்து வந்தது. இதனால் பல சமயங்களில் செர்வியா துருக்கியுடன் போர் செய்து பல தடவை அடக்கி வைக்கப்பட்டது. கடைசியாக ஐரோப்பாவின் வல்லரசுகள் பிரவேசித்து செர்வியாவை ஆஸ்டிரியாவுடன் சேர்த்து வைத்தன. சேர்த்து வைத்தபோதிலும் துருக்கியுடன் சேர்ந்திருந்ததுபோலவே ஆஸ்டியா

சக்ரவர்த்தியின் ஆக்ஷிக் குட்பட்டுவந்தது. ஆஸ்டிரியா தேசத்தார் "டியூட்டன்" என்னும் வெள்ளைக்கார ஜாதியார்; எப்போதும் சால்வ் ஜாதியாருக்கும் டியூட்டன் ஜாதியாருக்கும் இயல்பிலேயே விரோதமுண்டு; ஆயினும் ஐரோப்பா வல்லரசுகள் பிரவேசித்து ஆஸ்டிரியாவுடன் சேர்த்து வைத்தபடியால் வேறே விதியில்லை என்று ஆஸ்டிரியாவின் மேல பார்வைக்குட்பட் டிருந்தது; ஆயினும் ஆஸ்டிரியாவின் மேல் பார்வையைவிட்டு எப்போது நீங்குவோமென்று சமயம் எதிர்பார்த்த வண்ணமா யிருந்தது. ஆதலால் செர்வியா எந்தக்காலத்தில் ஆஸ்டிரியாவுடன் சேர்ந்ததோ அந்தக்காலத்திலிருந்தே ஆஸ்டிரியாவுடைய அமரிக்கைக்கும் சமாதானத்திற்கும் நல்லிருப்பிற்கும் அது இடைஞ்சலாகவே யிருநது கொண்டிருந்தது. அனேக சமயங்களில் செர்வியா ஆஸ்டிரியாவுடன் யுத்தம்செய்து அடக்கப்பட்டது. 1904ல் ஒரு சண்டை நடந்து செர்வியாவினுடைய ராஜ்ஜியத்திற் குள்ளிருந்த எர்ஜகோவினை என்னும் மாகாணத்தையும் இன்னும் சில மாகாணங்களையும் ஆஸ்டிரியா பிடுங்கிக்கொண்டு தன்னுடைய ராஜ்ஜியத்துடன் சேர்த்துக்கொண்டது. இந்த சந்தர்ப்பமும் செர்வியா ஆதிமுதல் ஆஸ்டிரியாவிடம் கொண்டிருந்த மனஸ்தாபத்தை பலப்படுத்தினது; மேலும் நாம் ஏற்கனவே சொல்லியபடி செர்வியர்கள் முயற்சிசெய்யும் குணதிசய முடையவர்களானபடியால் சமீபகாலத்தில் நடந்த துருக்கிச் சண்டையில் அட்ரியாட்டிக் சமுத்திரத்தில் துருக்கியைக் கேட்டு ஒரு துறைமுகப் பட்டணம் வாங்கி தங்களுடைய ராஜ்ஜியத்தை பிரபலயப்படுத்தலாமென்று பலமான முயற்சி செய்துவந்தார்கள். ஆஸ்டிரியா இந்த சமாசாரத்தைக் கேள்விப்பட்ட வுடன் கோபம் மூண்டு துருக்கியில் தனக்கிருக்கும் செல்வாக்கை பிரயோகப்படுத்தி செர்வியாவினுடைய எண்ணத்தில் மண்ணைவாரிப்போட்டுவிட்டது! ஆகவே செர்வியாவுக்கு கோபம் மூண்டு ஆஸ்டிரியா பேரில் ஜென்ம விரோதம் பாராட்டத் தலைப்பட்டது. ஆஸ்டிரியாவை அழித்துப்போட வெடி குண்டுகளும் மருந்துகளும் ரகசியமாகத் தயார்செய்யத் தலைப்பட்டது. ஆஸ்டிரியாவை அழித்துப்போட செர்வியாவிலேயே ரகசிய சங்கங்கள் உற்பத்திசெய்யப்பட்டன. செர்வியாவின் பாலிய மாணுக்கர்களும் இனிப் பிறக்கும் குழந்தைகளும் ஆஸ்டிரியர்கள்பேரில் துவேஷம் காட்டும்படியாகவும் ஆஸ்டிரியர்களைக் கொடிய ஜென்மப் பகைவார்கள் என்று எண்ணும்படியாகவும் பள்ளிக்கூடங்களில் கூட பாடங்கள் போதிக்கப்பட்டுவந்தன. இப்படியாக செர்வியர்கள் ஆஸ்டிரியர்கள்பேரில் கொடிய விரோதம் பாராட்டிக்கொண்டு வந்தார்கள்.

---

### ஆஸ்டிரியாவின் இளவரசர் கோல்லப்பட்ட வரலாறு.

செர்வியாவின் நோக்கம் இப்படியிருக்கும் தருவாயில் ஆஸ்டிரியாவின் இளவரசர் தம்முடைய பத்தினியுடன் ஆஸ்டிரியா செர்வியா விடமிருந்து பிடுங்கி தனனுடன் சேர்த்துக்கொண்ட ஹெர்ஜகோவினை மாகாணத்தின் பிரதான பட்டணமாகிய "சரஜிவோ" நகரைப் போய்ப் பார்க்க விரும்பினர். அவருடைய பந்துக்களும் சிநேகர்களும் செர்வியா காட்டி வரும் விரோதத்தை அறிந்து இந்த சமயம் அந்த நகருக்குப் போவது உசிதமல்ல வென்று இளவரசருக்கு புத்திமதியும் யோசனையும் சொன்னார்கள்; இளவரசர் இவைகளுக்கெல்லாம் காது கொடுக்காமல் ஒரே பிடிவாதமாகவிருந்து அந்த நகரைப் பார்க்க தம்முடைய பத்தினியுடன் புறப்பட்டார்கள்; ராஜ தம்பதிகள் அந்த ஊர் போய்ச் சேர்ந்து பட்டணப் பிரவேசம் வரும் போது முதல் தடவையில் ஒரு பாம் குண்டு வந்து விழுந்தது. அதை தப்பிகொண்டு போனவுடன் ஒரு செர்வியா தேசத்து மாணவன் ராஜ தம்பதிகளைச் சுட்டுக் கொன்றுன். இந்தக் கொடிய சந்தர்ப்பத்தைக் கேள்விப்பட்ட ஆஸ்டிரியாச் சக்கரவர்த்தி "நான் தனியானேன்" என்று கூறி விசன மேலிட்டு மூர்ச்சையாய் விழுந்துவிட்டார்! சக்ரவர்த்திக்கு இப்போது வயது 86; அவருடைய குடும்பத்தில் நீண்ட காலம் அனேக சங்கடங்களை அனுபவித்தவர். இளவரசர் இறந்துபோனது அவருக்கு சாமானிய விசனமாக வாகவா விருந்திருக்கும்? அவர் விழுந்த துக்க சாகரத்திலிருந்து எழுந்து நிமிர்ந்து மூச்சு விடவே வாரம் இரண்டுகள் சென்றன!

---

### கோலையைப்பற்றி ஆஸ்டிரியா செய்த விசாரணை.

ராஜ தம்பதிகளைச் சுட்டவன் செர்விய தேசத்து மாணவன் என்று சொன்னேம் அவனைக் கைதி செய்து துன்பப்படுத்திக் கேட்டதில் அவன் ஒரு ரகசியத்தையும் வெளிவிடாமல் "யாரேனும் ஒரு பெரிய மனுஷனைக் கொல்லவேணுமென்று நீண்ட காலம் கொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்றி விட்டேன்" என்று பதில் சொல்லிவிட்டான்.

நிற்க, இறந்துபோன ராஜ தம்பதிகளுடைய தேகங்கள் "வியானு"வுக்குக கொண்டுவரப்பட்டு அடக்கம் செயயப்பட்ட பின்பு செர்வியா ஆஸ்டிரியாவிடம் காட்டி வந்த விரோதத்தால் இந்தக் கொலை நடந்திருக்க வேண்டுமென்று ஆஸ்டிரியா அரசாங்கத்தார் நினைத்து செர்வியாவுக்குள் சென்று விசாரணை செய்யத் தலைப்பட்டார்கள். செர்வியா பிரஸ்தாப கொலை சம்பவம் நடப்பதற்கு 6 மாதங்களுக்கு முந்தியே இளவரசரைக் கொல்லும் நோக்கத்துடன்



லண்டனில் ஒரு ரகசிய ஆபீஸ் வைத்திருந்ததென்றும், பிறகு அந்த ஆபீசு பெல்கிரேட்டிற்குக் கொண்டுவரப்பட்ட தென்றும் அதின் பழைய தஸ்தாவேஜிகள் எரிக்கப்பட்டபோது ஒரு தஸ்தாவேஜி மட்டிலும் அஜாக்கிறதையாக விடப்பட்டுப் போய் விட்டதென்றும் அந்த தஸ்தாவேஜியைப் பார்க்கின் செர்வியா அரசாங்கத்தார் ஆஸ்டிரியா இளவரசரை ஆள் வைத்துக்கொல்லும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள் என்றும் அந்தக் கொலையாளி அந்நிய தேசத்தான் என்றும் அவனுக்கு செர்வியா அரசாங்கத்தார் முதலில் இரண்டாயிரம் பவுனும் அதற்குப் பிந்தி ஆயிரம் பவுனும் கொடுத்திருக்கிறார்கள் என்றும் பாக்கித் தொகை "வேலையை முடித்தவுடன்" கொடுக்கப்படுமென்று செர்வியா அரசாங்கத்தார் அந்தக் கொலையாளிக்கு எழுதி யிருக்கிறார்கள் என்றும், அந்தக் கொலையாளி பலவிதமாகப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்து அவனுக்குக் கீழ் பல ஆட்கள் வைத்திருந்து வசதிப்பட்ட இந்த சமயத்தில் சுட்டான் என்றும் ஷை தஸ்தாவேஜியால் தெரியவந்தது. [இந்த சமாசாரம் ஐரோப்பாவில் பிரசுரமாகும் "ஜான்புல்" என்னும் பத்திரிகையில் பயிரங்கப்படுத்தப்பட்டு அதிலிருந்து நம் நகரில் பிரசுரமாகும் ஹிந்துப் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்பட் டிருக்கிறது - ஏ-ர்.] ஆகவே ஆஸ்டிரியா கவர்ன்மெண்டாரின் விசாரணையில் செர்வியா அரசாங்க ஆபிஸர்களில் சிலர் சேர்ந்து இந்தக் கொலையை நடத்தி யிருக்கிறார்கள் என்று நன்கு புலப்பட்டது. ஆகவே ஆஸ்டிரியா கவர்ன்மெண்டார் செர்வியாவுக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். அதில் என்ன சொல்லப்பட்டிருந்ததென்றல் (1) இளவரசர் கொலையில் சம்பந்தப்பட்ட கொலையாளிக்கு உடந்தையாகவிருந்த செர்வியா அரசாங்க ஆபிசர்கள் பயிரங்கமாக ஆஸ்டிரியா அரசாங்கப் பிரதிநிதிகளுக்கு முன்னில் கோர்ட்டு விசாரணை நடத்தி தண்டிக்கப்படவேண்டும். (2) ஆஸ்டிரியாவிடம் விரோதம் பாராட்டும் சில செர்வியா உத்தியோகஸ்தர்கள் உத்தியோகங்களுலிருந்து நீக்கப்படவேண்டும். (3) ஆஸ்டிரியாவிடம் ஜென்மப் பகை காட்டும்படியான பள்ளிக்கூடங்களில் படிப்பு போதிக்கப்பட்டு வருவது நிறுத்தப்படவேண்டும். (4) ஆஸ்டிரியாவை அழித்துப் போடும்படியாக நோக்கங்கொண்டு வெடி மருந்துகள் பாம் குண்டுகள் சொவியாவில் தயார் செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும். (5) இந்தக் கடிதத்தில் சொல்லியிருக்கிறபடி செர்வியா நடந்துகொள்ள வேணும். (6) இல்லேல் இந்தக் கடிதமே முடிவான நோட்டிசாக எண்ணப்பட்டு செர்வியாபேரில் யுத்தம் ஆரம்பிக்கப்படும்.

---

### ஆஸ்டிரியா - சேர்வியா யுத்தம்.

செர்வியாதேசம் இந்த அல்டிமேட்டம் என்னும் நோட்டீசைப் பெற்று திடுக்கிட்டு ஆஸ்டிரியா கேட்ட சில நிபந்தனைகளை நிறைவேற்றி வைப்பதாக ஒப்புக்கொண்டது. சிலவற்றை ஒப்புக்கொள்ள மறுதளித்துவிட்டது. ஆகவே ஆஸ்டிரியா கடந்த ஜுலை மாதத்தில் செர்வியாபேரில் யுத்தம் கூறிவிட்டது.

### ஜாதி அபிமானம்.

ஆஸ்டிரியா செர்வியாபேரில் யுத்தம் கூறவே ஐரோப்பா முழுதிலும் படபடப்பும் கவலையும் உண்டாயிவிட்டது. ஏன் என்றல் ருஷியர்கள், செர்வியர்களைப்போல சால்வ் ஜாதியாரைச் சேர்ந்தவர்கள். சால்வ் ஜாதியாருக்கெல்லாம் ருஷியா மடாதிபதி போல் ஒரு குரு பீடமாகவிருந்து வருகின்றது. ஆஸ்டிரியர்கள் செர்வியாபேரில் யுத்தத்திற்குக் கிளம்பினல் ருஷியா செர்வியாவுககாகப் பரிந்து ஆஸ்டிரியாபேரில் பாயும். மேலும் ருஷியா சில வருடங்களுக்கு முந்தி ஜப்பானுடன் யுத்தம் செய்து தோல்வி அடைந்துவிட்டது. குப்புற விழுந்தவன் மீசைமேல் மண் படவில்லை என்று சொன்னதுபோல ருஷியோ—ஜப்பான் யுத்தத்தில் யுத்தகளம் ருஷியாவுக்கு வெகுதூர மிருந்ததடியால் தோல்வி அடைந்துவிட்டோம் என்றும், இல்லேல் அபஜெயப்படுவோமா என்று நாளது வரையில் ருஷியா சொல்லிக்கொண் டிருக்கிறது. ஆதலால் ஏதேனும் ஒரு சண்டையில் ஜெயித்துதான் கிழக்கு சமுத்திரத்தில் அபஜெயப்பட்ட நிமித்தம் எடுத்த அபகீர்த்தியான பெயரை நீக்கிக்கொள்ள வேண்டுமென்று வெகுநாளாக எண்ணம் கொண்டிருந்தது. இதுவரையில் அந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள சமயம் நேரவில்லை. ஆஸ்டிரியா செர்வியா பேரில் யுத்தம் கூறவே ருஷியா அடுத்த நிமிஷமே ஆஸ்டிரியாபேரில் பாய படபடப்பு காண்பிதது வந்தது. ஆஸ்டிரியர்களும், ஜெர்மனியர்களும் "டியூட்டன்" என்று சொல்லும்படியான ஒரே வெள்ளைக்கார ஜாதியர். மேலும் இருதேசத்தார்களும் இனபந்துக்கள்; ருஷியா செர்வியாவுக்காகப் பரிந்து படபடப்பு காண்பிக்கவே ஜெர்மணி ஆஸ்டிரியாவுக்காகப் பரிந்தும் ருஷியாபேரில் பாயப் படபட்ப்பு காண்பித்தது.

### Triple Alliance (டிரிப்பில் அலையன்ஸ்) என்று சொல்லும்படியான மூன்று வல்லரசு உடன்படிக்கை.

அனேக வருடங்களுக்கு முந்தி ஜெர்மனி, ஆஸ்டிரியா, இட்டாலி ஆகிய இமமூன்று அரசுகளும் சேர்ந்து உடன்படிக்கை செய்துகொண்டிருந்தன.

அதாவது என்னவென்றால் வேறெந்த அரசாங்கத்தாரேனும் இந்த மூன்று அரசாங்கங்களில் ஒன்றின் பேரில் யுத்தம்கூறி யுத்தத்திற்கு கிளம்பி வந்தால் மற்ற இரண்டு அரசுகளும் கூடச் சேர்ந்து படையெடுத்துவந்த அரசுபேரில் யுத்தம் செய்யவேண்டுமென்பதே! இந்த உடன்படிக்கையின்படி ஜெர்மனி படபடப்பு காண்பித்தவுடனே இட்டாலியும் படபடப்பு காண்பிக்கவேண்டியதிருக்க, இட்டாலி இந்த யுத்தத்தில் சேர சம்மதிக்கவில்லை. அதற்கு காரணம் ஒன்று சொன்னது. அதாவது டிரிப்பில் அலையன்ஸ் உடன்படிக்கையின்படி வேறெந்த அரசாங்கத்தாரேனும் மேலே சொல்லப்பட்ட மூன்று அரசாங்கங்களுக்குள் ஒன்றின்பேரில் யுத்தம் கூறினால் மற்ற இரண்டு அரசாங்கங்களும் யுத்தம் கூறின அரசாங்கத்தின்பேரில் பாயவேண்டுமே யொழிய, ஷை மூன்று அரசாங்கங்களில் ஒன்றுதானே வலியச் சண்டைக்கு கிளம்பினால் அதற்காக மற்ற இரண்டு அரசாங்கங்களும் பரிந்து சண்டைபோட கட்டுப்படவில்லை என்றும் ஆஸ்டிரியாவே சேர்வியா பேரில் வலியப் படையெடுத்துப் போயிருக்கிறபடியால் இந்த யுத்தத்தில் தான் சேர கட்டுப்படவில்லை என்று இட்டாலி கூறிவிட்டது.

---

## டிரிப்பில் என்ட்டிடி என்னும் இரண்டரசு உடன்படிக்கை.

டிரிப்பில் அலையன்ஸ் உடன்படிக்கை நடந்து சிலகாலம் சென்றபிறகு இங்கிலாண்டும், பிரான்சும் ஒரு உடன்படிக்கை செய்துகொண்டன. இந்த உடன்படிக்கையின் க்ஷரத்துகளின்படி பிரான்சின் பேரிலாவது அல்லது இங்கிலாண்டின்பேரிலாவது வேறெந்த அரசாங்கத்தாரேனும் படை யெடுத்து வநதால் மற்ற அரசும் சேர்ந்து படை யெடுத்து வந்த அரசாங்கத்தார்பேரில் சண்டைக்குப் போகவேண்டுமென்பதே. இங்கிலீஷ்காரர்களும் பிரன்ச்சுக்காரர்களும், ஜென்ம விரோதிகள் ஆயினும் காலஞ்சென்ற மேன்மை தங்கிய ஏழாவது எட்வர்ட் மகாராஜா காலத்தில் இங்கிலாண்டிற்கும், பிரான்சுக்கும் நேசம் முதிர்ந்து இம்மாதிரி டிரிப்பில் என்ட்டிட்டி என்னும் உடன்படிக்கை செய்துகொண்டன. இதற்குப்பிறகு ருஷியாவும் இந்த உடன்படிக்கையில் சேர்ந்துகொண்டது. ஆகவே ஆஸ்டிரியா, சேர்வியா யுத்தத்தில் ருஷியா படபடப்பு காட்டவே "டிரிப்பில் என்ட்டிட்டி" என்னும் உடன்படிக்கையின்படி பிரான்சும், இங்கிலாண்டும் யுத்தத்தில் சேர்ந்து ஆஸ்டிரியாவுடனும்,ஜெர்மனியுடனும் யுத்தம் செய்ய கட்டுப்பட்டனவையாகப் போய்விட்டன. ஆனாலும் இந்த இரண்டு தேசங்களும் ருஷியாவையும் ஜெர்மனியையும்போல எடுதத அடியில் படபடப்பு காண்பிக்கவில்லை. இந்த இரண்டுவகை உடன்படிக்கைகளின் க்ஷரத்துக்களை அறிந்திருந்த இங்கிலாண்டில் அந்நியநாட்டு மந்திரியாகிய சர் எட்வர்ட் கிரேயுத்தம் நேரிட்டால் ஐரோப்பா முழுதிலுமே தீ பிடித்துக்கொள்ளும் என்று அஞ்சி இந்த யுத்தம் நடக்கவொட்டாமல் சமாதானம் செய்து போடவேண்டுமென்றும் ஒருக்கால் யுத்தம் நடந்தால் சேர்வியாவுக்கும், ஆஸ்டிரியாவுக்கு மட்டில் நடக்கும்படியாகச் செய்யவேண்டுமென்று கூடியவரையில் பிரயாசைப்பட்டுப் பார்த்தார். சாத்தியப்படவில்லை! திடீரென்று ஆஸ்டிரியா சேனை சேர்வியாவின் பிரதான நகராகிய பெல்கிரேடை முற்றுகை போட்டுவிட்டது. ருஷியா எல்லைலோரத்தை தாண்டி ஆஸ்டிரியாபேரில் படை யெடுத்து வந்துவிட்டது.

---

## பெல்ஜியத்தின் நடு நிலைமை.

ருஷியா ஆஸ்டிரியாவின் எல்லையோரத்தைத் தாண்டி வந்தவுடன் இங்கிலாண்டும் பிரான்சும்"டிரிப்பில்என்ட்டி"என்னும் உடன்படிக்கையின்படி ருஷியா பக்கம் சேர்ந்துவிடுமென்று ஜெர்மனி தீர்மானமாக நினைத்து பிரான்சின் பேரில் படையெடுத்துப் போக அதன்பேரில் யுத்தம் கூறிவிட்டது. பிரான்சின் பேரில் படையெடுத்துப் போகவேண்டுமானால் பெல்ஜியத்தின் வழியாகப் போவதுதான் ஜெர்மனிக்கு இலகுவான காரியமாக விருக்கும். ஆனால் 1882-ம் வருடத்தில் பிறந்த உடன்படிக்கையின்படி பெல்ஜியம் எந்த யுத்தத்திலும் சேரக்கூடாதென்றும் அந்த தேசத்தை எந்தச் சத்துருவேனும் தாக்கினால் ஐரோப்பாவிலுள்ள வல்லரசுகள் பெல்ஜியத்திற்கு சகாயமாக விருந்து அதன்பேரில் படை யெடுத்து வந்த சத்துருவைத் தாக்கவேண்டும். இந்த உடன்படிக்கையில் இங்கிலாண்டும் ஜெர்மனி பிரான்சு ஆகிய மூன்று வல்லரசுகளும் கையெழுத்து செய்திருக்கின்றன. இந்த உடன்படிக்கையின்படி ஜெர்மனி பெல்ஜியத்தில் பிரவேசிக்காமலிருக்கக் கட்டுப்பட்டிருந்தும் பிரான்சின்பேரில் படையெடுத்துப் போகும் தன்னுடைய துருப்புகளுக்கு பெல்ஜியத்தில் பெல்ஜியம் அரசர் வசதிசெய்து கொடுக்காவிடில் பெல்ஜியத்தின்பேரில் யுத்தம் கூறப்படுமென்று பெல்ஜியம் அரசருக்கு ஒரு முடிவான நோட்டீஸ் கொடுத்தது. அதற்கு பெல்ஜியம் அரசர், உடன்படிக்கையின்படி தம்முடைய ராஜ்ஜியம் நடு நிலைமையிலுள்ள ராஜ்ஜியமென்றும் ஆதலால் ஜெர்மனியின் கோறிக்கையை நிறைவேற்றிவைக்க முடியாதென்று பதில் சொல்லிவிட்டார். ஆகவே ஜெர்மனி பெல்ஜியத்தின்பேரில் யுத்தம்கூறி தன்னுடைய துருப்புகளை அதன்பேரில் படையெடுத்து அனுப்பினது. ஆஸ்டிரியா - சேர்வியா யுத்தத்தில் ருஷியாவும் ஜெர்மனியும் கலந்துகொள்ள தொடை தட்டிக்கொண்டும் புஜம் தட்டிக்கொண்டும் தயாரா



யிருந்த போதிலும் டிரிப்பில் என்ட்டீடீ என்னும் உடன்படிகையின்படிக்கு ருஷியாவுக்காக பரிந்து இந்த யுத்தத்தில் கலந்துகொண்டு சண்டை செய்ய உடன்பட்ட பிரான்சும் இங்கிலாண்டும் இந்த சமயம் வரையில் யுத்தம் ஆயுத்தம் யாதொன்றும் காண்பிக்காமல் ஐரோபாவில் அமரிக்கையை பரவும்படி செய்து வைப்பதிலேயே திருஷ்டியாயிருந்தன; ஆயினும் ஜெர்மனி பெல்ஜியத்தில் பிரவேசித்ததை இங்கிலாண்டு ஆக்ஷேபிக்க ஜெர்மனி இணங்கிப் பேசாமல் போகவே பெல்ஜியத்திற்காகவும் பெல்ஜியத்தின் உடன்படிக்கைக்காகவும் பரிந்து இங்கிலாண்டு ஜெர்மனியின்பேரில் யுத்தம் கூறிவிட்டது.

---

## ஜெர்மனி பெல்ஜியத்தில்

ஜெர்மனி பெல்ஜியத்திற்குள் பிரவேசித்து பல விடங்களில் பெல்ஜியம் சேனையுடன் போர் புரிந்து லக்ஷக்கணக்கான மனிதர்களைக் காவு கொடுத்தும் காவுவாங்கியும் ஜெயம் அபஜெயமும் அடைந்து சடைசியில் நெருக்கிக்கொண்டு வந்து "லீஜ்" கோட்டைகளை பலமாய் முற்றுகை போட்டு இரண்டு வாரங்கள் வரையில் கடும்போர் செய்தது; "லீஜ்" கோட்டைகளின் சில ஜெர்மனிக்குப் பணிந்து போய் விட்டன; சில இன்னும் எதிர்த்து நிற்கின்றன; இதன் பிறகு நாமூர் கோட்டைகளைத் தாக்கி உள்ளே பிரவேசித்து விட்டார்கள்; இதன் பிரகு பிரசல்சுக்குள் யாதொரு சண்டையும் செய்யாமலே பிரவேசித்து அதை கைபற்றிக்கொண்டு ஜனங்கள்பேரில் 80 லக்ஷம் பவுன் யுத்த வரி விதித்திருக்கிறது; இந்த வரியை பெல்ஜியத்தில் தேசாபிமான முடைய மூன்று கோடீஸ்வரர்கள் செலுத்தி விடுவதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள் இதன் பிரகு பெல்ஜியத்தில் மகா சிறந்த பட்டணமாகிய லூவியான் நகரில் பிரவேசித்து அந் நகரிலுள்ள ஸ்திரீகளையெல்லாம் புருஷர்களைவிட்டுப் பிரித்து ரயிலேற்றி ஒரு தெரியாத விடத்திற்கு அனுப்பி விட்டு அப் பட்டணத்தை அதன் நேர்த்தியான கட்டடங்களுடனும், யுத்த சாலையுடனும், ஆபீஸ் கட்டடங்களுடனும், நேர்த்தியான சித்திரமால்களுடனும், அக்கினிபகவானுக்கு ஆகாரமாகக் கொடுத்து ஒரு நொடிப்பொழுதில் சாம்பலாகச் செய்துவிட்டார்கள்; இது வரையில் ஜெர்மனியர்கள் பெல்ஜியத்தில் கைபற்றின தேசத்தை ஒரு ஜெர்மன் மாகாணமாகச் செய்து அதற்கு ஒரு மிலிட்டரி கவர்னரையும் நியமித்து விட்டார்கள்; இந்த சமயத்தில் இங்கிலாண்டு - பெல்ஜியம், பிரான்சுக்கும் ஒரு உதவிப் படையை அனுப்பினது; ஜெர்மனியர்கள் பெல்ஜியத்திற்குள் பிரவேசித்து மேலே சொன்ன கொடிய அக்கிரமங்களை எல்லாம் நடத்திப் போட்டு பிரான்சுக்குள் நுழைந்து விட்டாகள்.

---

## கூட்டு சைனியங்களும் ஜெர்மன் படைகளும்

பிரிடிஷ் துருப்புகளும், பிரன்ச் துருப்புகள் ஒரு புறமும், பெல்ஜியம் சேனை ஒருபுரமும், எதிரில் ஜெர்மன்படையும் சுமார் 25-மயில் தூரம் நின்று 10-தினங்களாக ஓயாமல் சண்டை செய்து வருகின்றன. பிரான்சில் இன்னும் தீர்மானமாக யாதொரு பெரிய யுத்தம் நடக்கவில்லை; ஆனால் கூடிய சீக்கிரம் நடந்து ஒரு நிச்சயமான முடிவு ஏற்படுமென்று பிரன்ச் அரசாங்க விளம்பரம் அறிவிக்கின்றது; ஆனால் கடந்த 10 நாட்களாக ஜெர்மன் சேனை பிரான்ஸை நோக்கிப் போக எத்தனிக்கின்றன. கூட்டு சைனியங்கள் அதைத் தடுத்துப் பின்வாங்கும்படி முயற்சி செய்வதில் அமர்ந்திருக்கின்றன; ஒரு முறை பிரிடிஷ் துருப்புகள் தாங்கள் நின்ற நிலையை விட்டு அகன்று பின்வாங்கி ஒரு வசதியான விடத்தில் அமர்ந்ததில் பிரிடிஷ் தரப்பில் சுமார் 6 ஆயிரம் மனிதர்கள் ஒரே தினத்தில் கொல்லப் பட்டார்கள். ஜெர்மனியா களுடைய மானிடச் சேதத்திற்கு ஒரு கணக்கு மில்லை, வழக்குமில்லை; பிரான்சில் இது வரையில் பிரிடிஷ் துருப்புகளும் பிரன்ச்துருப்புகளுமே பெரும்பாலும் வெற்றி அடைகின்றன; பிரன்ச் கவர்ன்மெண்டார் தங்களுடைய ராஜஸ்தானத்தைப் பாரிஸ் நகரை விட்டு "போர் டோ" என்னும் துறைமுகப் பட்டணத்திற்கு கொண்டுபோய் விட்டார்கள். பாரிஸ் நகரைச்சுற்றிலும் சைனியங்கள் நடமாடு மானபடியால் தேச நிர்வாகத்தை பாரிசிலிருந்து செலுத்த சாத்தியப்படாதென்று பிரன்ச் கவர்ன்மெண்டார் கருதி அப்படிச் செய்திருக்கிறார்கள்; இது வரையில் ஜெர்மனி தரப்பில் லக்ஷம் மனிதர்கள் கொல்லப்பட்டிருபதாக கணக்கெடுக்கப் பட்டிருக்கிறது; இன்னும் அதிகமாகவே யிருக்குமென்று நம்புகிறோம்; பிரிடிஷ் தரப்பில் காணமற் போனவர்கள் உள்பட இதுவரையில் 15 ஆயிரம் பேர்கள் சேதப்பட்டிருப்பதாக கணக்கெடுக்கப்பட்டு பயிரங்கப் படுத்தப்பட்டிருக்கிறது. இப்போது பாரிஸ் நகரத்திற்கு 25 மயில் தூரத்தில் ஜெர்மன் படை கூட்டு சையினியங்களுடன் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறது.

---

## ருஷியாவும், ஜெர்மனியும்.

ருஷியாப் படைகள் ருஷிய எல்லை யோரத்தைத் தாண்டி பல விடங்களில் ஜெர்மன் படையுடன் சண்டை போட்டு வெற்றி அடைந்து பெர்லின் பேரில் படை யெடுத்துப் போயிருக்கிறார்கள்; இப்போது கோனிஸ்பர்க்கு கோட்டையை பலமாய் முற்றுகை போட்டிருக்கிறார்கள்.

---

## ருஷியாவும் ஆஸ்டிரியாவும்.

ருஷியாவும் ஆஸ்டிரியாவும் செய்த சண்டையில் ருக்ஷயர்களே பலமுறை பல சண்டைகளில் வெற்றி பெற்று ஆஸ்டிரியர்களை பட்டாளம் பட்டாளமாக கைதி செய்து அவாகளுடைய பீரங்கிகளையும் பிடிங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்டிரியப் பட்டாளம் ஒன்று பசி பொருக்க முடியாமல் படிந்துபோய் தன்னைக் கைதி செய்யும்படியாக ருஷியாவை வேண்டிக்கொண்டது; ஆஸ்டிரியப் பட்டாளத்தில் வயிற்றளைவு தோன்றி விட்டது; ஆஸ்டிரியா சக்கரவர்த்தி இறந்து போய் விட்டதாகவும் உள் நாட்டுக் குழப்பதால் இந்த சமாசாரம் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறதென்று பிரஸ்தாபமாக யிருக்கிறது.

---

## ஆஸ்டிரியாவும், சேர்வியாவும்.

ஆஸ்டிரியா யுத்த ஆரம்பத்தில் பெல்கிரேடை முற்றுகை போட்டு தடபுடல் செய்தது; ஆனால் சேர்வியர்கள் சளைக்காமல் எதிர்த்து நின்று ஆஸ்டிரி

யர்களை விறட்டினார்கள். அத்துடன் ஆஸ்டிரியர்களுடைய கொட்டம் அடங்கிப்போய்விட்டது. ஒரு ஆஸ்டிரியன் கூட இப்போது செர்வியாவில் இல்லை என்று சொல்லப்படுகிறது.

---

### ஜப்பானும் யுத்தமும்.

ஜப்பான், இங்கிலீஷ்காரர்களுடன் செய்துகொண்ட உடன் படிக்கையின்படி கிழக்கு சமுத்திரத்தில் இங்கிலீஷ்காரர்களுக்கு உதவி செய்ய கட்டுப்பட்டிருக்கிறது. ஆகையால் ஜப்பானுடைய யுத்தக் கப்பல்கள் கிழக்கு சமுத்திரத்தில் உலாவக்கூடாதென்றும் இன்னும் சில நிபந்தனைகள் செப்பி ஜெர்மனிக்கு ஒரு நோட்டீஸ் கொடுத்தது. ஜெர்மனி பதில் சொல்லவில்லை. ஆகவே ஜப்பான் யுத்தம் கூறி கிழக்கு சமுத்திரத்தில் ஜெர்மனியர்களுக்குச் சொந்தமான டிசிங்டோவை முற்றுகை போட்டிருக்கிறது.

---

### யுத்தமும் ஜெர்மன் கிழக்கு ஆபிரிக்காவும்.

ஜெர்மன் கிழக்கு ஆபிரிக்காவில் பிரிடிஷ்காரர்கள் டோகோலாண்டை பிடித்துக்கொண்டார்கள்.

---

### யுத்தமும் வட சமுத்திரமும்.

கப்பல் சண்டை பெரும்பாலும் வட சமுதிரத்தில் நடந்துக்கொண்டு வருகின்றது; பிரிடிஷ் கப்பல் படை ஒரு வாரத்திற்கு முந்தி திடீரென்று ஜெர்மன் கப்பல் கூட்டத்துடன் சண்டைசெய்து அனேக ஜெர்மன் டிஸ்டிராயர் ஸ்டீமர்களையும் கிருப்சர்களையும் சமுதிரத்தில் அமிழ்த்தி விட்டது; ஜெர்மனியர்கள் சமுத்திர முழுதிலும் சுரங்கங்கள் போட்டிருக்கிறார்கள். பிரிடிஷ் கப்பல் படை அவைகளை எல்லாம் எடுத்து எறிந்து வியாபார கப்பல்களின் மார்க்கத்தை சுத்தமாக வைத்திருக்கிறது. பிரிடிஷ் தரப்பிலும் இரண்டொரு பெரிய ஸ்டீமர்களை ஜெர்மனியர்கள் சமுத்திரத்தில் அமிழத்தி விட்டார்கள். ஆனால் கப்பல் சண்டை இன்னும் மும்மரமாக நடக்கவில்லை.

---

### இந்தியாவுல் யுத்தமும்.

இந்தியாவிலிருக்கும் சத்துரு தேசத்தார்கள் பெரும்பாலும் கைதி செய்யப்பட்டு ஆமத் நகரில் வைக்கப்படிருக்கிறார்கள். பாக்கி இருப்பவர்கள் கவர்ன்மெண்டார் பார்வையில் வைக்கப்பட்டிருகிறார்கள். இந்த யுத்தத்தால் அந்நிய நாட்டு வியாபாரமே அடியோடு நின்று போய் விட்டது; சீமைத் தபால் ஸ்டீமர்கள் மட்டிலும் காலம் தவறி போக்கு வர்த்து செய்யப்படுகின்றன; கப்பல் போகும் மார்க்கங்களை கூடியவரையில் இடஞ்சலன்றி வைக்க பிரிடிஷ் கப்பல் படை பிரயாசைப்பட்டுக் கொண்டு வருகிறது; பிரிடிஷ் குடியேற்ற நாடுகள் எல்லாம் ஒன்று தவறாமல் தேசத்திற்கு பலவிதமாக நன் கொடை அளித்து வருகின்றது. இந்தியா தேசத்திலுள்ள ராஜாக்களும் சிற்றரசர்களும் பிரபுக்களும் சாமானிய ஜனங்களும் வைசியராயாலும் மாகாகண கவர்னர்களாலும் யுத்தகஷ்ட நிவாரணத்திற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் யுத்தகஷ்ட நிவாரன நிதிகளுக்கு ஏராளமான தொகை நன்கொடை அளித்திருக்கிறார்கள். மேன்மை தங்கிய மைசூர் மகாராஜா மட்டிலும் ஏகதேசத்தில் ரூபாய் 50 லக்ஷம் நன் கொடை கொடுத்திருப்பதை நாம் எடுத்துச் சொல்ல மறந்து போகக் கூடாது. மாஷிமை தங்கிய மகாராஜா அவர்களுடைய பார்லிமெண்டாரும் பிரிடிஷ்பொது ஜனங்களும் இங்கிலாண்டிற்கு கஷ்டமான இக்காலத்தில் இந்திய ராஜாக்களும் இந்திய ஜனங்களும் ராஜ விசுவாஸ மேன் பாட்டால் செய்து வரும் உபகாரங்களையும் அளித்து வரும் நன் கொடைகளையும் பார்த்து மூக்குமேல் கையை வைத்து பிரமிக்கிறார்கள் இந்த நன் கொடைகளாலும் சமயோஜிதமான உபகாரத்தாலும் மாஷிமை தங்கிய சக்கரவர்த்தியாரின் மனமே உறுகிபோய் இந்தியா அரசர்களுக்கும் ஜனங்களுக்கும் அனுப்பி யிருக்கும் செய்தி சில தினங்களுக்கு முந்தி கூடிய வைசிராய் சட்ட சபையில் வாசித்து பயிரங்கப் படுத்தப்பட்டது; மொத்தத்தில் இந்த யுத்தம் இந்தியா இங்கிலாண்டின் பேரில் வைத்து வத்திருக்கும் அபிமானமும் ராஜா விசுவாசமும் சாமானியமான தல்லவென்றும் சமயம் நேரிட்டால் இந்தியர்கள் உடல் பொருள் ஆவி ஆகிய இமூன்றையும் இங்கிலாண்டிற்கு த்தம் செய்யக் கூடியவர்கள் என்பதை விளக்கி காட்டி யிருக்கிறது. பிக்கானீர் முதலிய சில பாலிய ராஜாக்கள் பிரிடிஷ் தரப்பில் சத்துருவுடன் சண்டை செய்ய நேரே யுத்த களத்திற்குப் போய் யிருக்கிறார்கள்; வெள்ளைக் காரனும் வெள்ளைக் காரனுக்கும் நடக்கும் யுத்தத்தில் இந்திய சுதேச துருப்புகளை பிரயோகப்படுத்தி சண்டை செய்வது அகௌரமாக என்னப்பட்டுவந்தது நீங்கிப்போய் நம்முடைய பிரிடிஷ் கவர்ன்மெண்டார் இந்திய சிப்பாய் துருப்புகளையும் ஐரோப்பா யுத்தகளத்திற்கு அனுப்பி யிருக்கிறார்கள்; ஜெர்மனியர் பலமான சத்துருகளானபடியால் அவர்களைச் தரைச் சண்டையில் எதிர்ப்பதற்கு இப்போது பிரிடிஷாருக்கிருக்கும் சைனியம் போதாதென்று லக்ஷம் லக்ஷம் மனிதர்கள் கொண்ட இரண்டு பாரிப்பட்டாளங்கள் இப்போது லண்டனில் தயார் செய்யப்பட்டு வருகின்றன; ஜெர்மனியர்கள் மிகுந்த சேனை பல முடையவர்கள் என்பதில் சந்தேகமில்லை; ஆனால் யுதத தந்திரத்தில் தேர்ச்சி அடைந்தவர்களல்ல; பிரிடிஷ் துருப்புகளுக்கு முன்னிலும் பிரன்ச் துருப்புகளுக்கு முன்னிலும் நேருக்கு நேர் எதிர் நின்று சண்டையை செய்யக்கூடிய சக்தி யற்றவர்களாக யிருக்கிறார்கள் 100 ஜெர்மனிக்கு 25 பிரிடிஷ்காரர்கள் சண்டையில் ஜவாப்புசொல்லி வருகிறார்கள்; பிரிடிஷ் குதிரை துருப்புகள் சண்டை போடும் தீரத்தையும் புதுமையையும் கண்டு ஜெர்மனியர்களே ஆச்சரியப்படுகிறார்கள்; ஜெர்மனி இப்போதே களைத்துப்போய் சமாதானம் பேச்சி விட்டதாக லண்டன் டைமஸ் பிரஸ்தாபிக்கிறது; மேலும் அவர்களிடம் நீடித்த காலம் சண்டை நடத்த நம்முடைய பிரிடிஷ் காரரைப் போல பண ஐவேஜியும் பொருள் கிடைக்கும்படியான ஆதாரமுடைய வர்களல்ல; பிரிடிஷ் உதவிப் படை யுத்தத்தில் போய் கலந்து கொள்ளுவதற்கு முந்தி ஜெர்மனியர்கள் பெல்ஜியத்தில் சிறிது அட்டகாசம் செய்தார்கள்! ஆனால் பிரிடிஷ் படை வந்து சேர்ந்தவுடன் நடக்கும் சண்டையில் எல்லாம் பிரிடிஷ்காரர்களே ஜெயம் பெற்று யிருக்கிறார்கள் என்று பிரதி தினமும் தந்திகள் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன; முடிவில் இவ்வுலகத்தில் மூன்றில் ஒரு பாகத்தை கட்டிக்கொண்டு ஆண்டு வரும் பிரிடிஷ்காரர்களே இந்த யுத்தத்தில் வெற்றி பெறுவார்கள்



என்பதில் சந்தேகமில்லை; உலக நன்மைக் காகவும் அதிலும் முக்கியமாய் இந்தியாவின் நன்மைக்காகவும் "பெல்ஜியத்தை பாதுகாப்போம்"என்று செய்த வாக்குதத்தத்தை நிறை வேற்றுவதற்காக கோடிக் கணக்கான தனத்தையும் லக்ஷக் கணக்கான மனிதர்களையும் இழக்க உடன் பட்டு நிர்வாகிக்க வொண்ணாத கஷ்டங்களை எல்லாம் நிர்வாகித்துக்கொண்டு சத்தியம் இவ்வுலகினில் நிலை பெற்று ஓங்கு மாறு இந்த யுத்தத்தை நடத்திக்கொண்டு வரும் பிரிடிஷாரே வெற்றிமாலை அணிந்து கொள்ளும்படியாக அனுகிரகிக்க வேண்டுமென்று அகிலாண்ட கோடி பிர்மாண்ட நாயகனாகிய எம் பொருமான் பிரிடிஷ் நியாயத்தையும் அதன் பெருமையையும் போதிக்கும் இந்தியா தேச சட்ட கெஜெட்டின் மூலியமாக பிரிடிஷ்பிரஜைகளுக்கு எடுத்து போதிப்பதையே தொழிலாகக் கொண்ட N ராதா கிருஷ்ணன நாயடு கம்பெனியார் உறுதியான ராஜ விசுவாச பக்தியால் கட்டுப் பட்டு வேண்டிக் கொள்ளுகிறார்கள்.

---

### எம்டன் விஷமம்.

—:o:—

யுத்தத்தைப்பற்றி நாம் இந்த வியாசம் எழுதிய பிறகு சீனா தேசத்திற்கு வடக்கே யிருக்கும் ஜெர்மனியருக்குச் சொந்தமான தேசத்திலிருந்த ஒரு சிறிய ஜெர்மன் சண்டைக் கப்பல் ஒருவர் கண்ணிற்கும் புலப்படாமல் தப்பித்துக் கொண்டு வங்காள குடாக்கடலுக்குள் வந்து சேர்ந்துவிட்டது. இந்தக் கப்பலுக்கு "எம்டன்" என்று பெயர். இதில் ஆபிஸர்களும் மனிதர்களுமாகச் சேர்ந்து 180 பேர்களிருக்கிறார்கள். இந்தக் கப்பலுக்கு கமாண்டராக யிருப்பவன் இதற்குமுன் இந்தியத் துறைமுகங்களுக்கு வந்துகொண்டிருந்த வியாபாரக் கப்பல்களுக்கு காப்ட்டினாக விருந்தவன். ஆகையால் இந்தியத் துறைமுகப் பட்டணங்களில் இன்ன இன்ன விடங்களில் இன்ன இன்னவை யிருக்கின்றனவென்று உளவு அறிந்தவன்.

இந்த ஜெர்மன் கப்பல் ஜகநாத் அல்லது பூரி என்று சொல்லும்படியான துறைமுகத்திற்கு சமீபத்தில் 6 வியாபார ஸ்டீமர்களை வழிமறித்து அவற்றுள் 5 ஸ்டீமர்களிலிருந்த ஜனங்களையும், கப்பல் சேவகர்களையும் "கபிங்கா" என்னும் 6வது ஸ்டீமரில் ஏற்றி கல்கத்தாவிற்கு அனுப்பிவிட்டு காலி செய்யப்பட்ட 5 ஸ்டீமர்களையும் சாக்குகளுடன் பீரங்கியால் சுட்டு சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்டான். இதனால் ஒரு கோடியே நாற்பத்தைந்து லக்ஷம் ரூபாய் சேதப்பட்டுப்போய் விட்டது.

இதன்பிறகு ஊக்லிநதி முகத்துவாரத்திற்கு எதிரில் பால்ஸ்பாயின்ட் என்னுமிடத்தில் சென்னை மெசர்ஸ் கார்ட்டன் வுட்ராப் கம்பெனியைச் சேர்ந்த "கிளான் மாதியூஷன்" என்னும் ஸ்டீமரை மறித்து அதிலிருந்த ஜனங்களை தன்னுடன்கூட வந்துகொண்டிருக்கும் "மார்கோமேனியா" என்னும் கப்பலில் ஏற்றிவிட்டு அதை சமுத்திரத்தில் ஆழ்த்திவிட்டு ரெங்கூனை நோக்கிச் சென்றது.

போகும் வழியில் ஒரு நார்வேதேச கப்பலைக்கண்டது; நார்வேதேசம் யுத்தத்தில் சேராமல் நடு நிலைமையிலிருக்கும் தேசம். ஆதலால் அந்த கப்பலுக்கு யாதொரு தீங்கு செய்யாமல் மார்க்கமோனியா ஸ்டீமரிலிருந்த "மாதியூசன்" ஸ்டீமர் பிரயாணிகளை எல்லாம் அந்த ஸ்டீமரில் ஏற்றி அனுப்பிவிட்டு போனவிடம் தெரியாமலிருந்தது.

### மதிராஸ் முற்றுகை.

—:o:—

"எமடன்" சென்னைக்கு வருமென்று எவரும் நினைக்கவில்லை. நிகழும் செப்டம்பர்மீ 22உ சாயங்காலம் சென்னை ரேவு துறைக்கு 25 மயிலுக்கு அப்பால் ஒரு ஸ்டீமர் தென்பட்டது. துறைமுக ஆபிசர் சைகை காண்பித்து அந்தக் கப்பல் யாருடையது என்று கேட்டார். இதற்கு எம்டன், தான் ஒரு பிரிடிஷ் கப்பல் என்றும், கல்கத்தாவிலிருந்து வருவதாகவும் வழியில் யாதொரு ஆபத்துமில்லை என்று பதில் சொன்னது. துறைமுக ஆபிஸர் இது உண்மை என்று நம்பிவிட்டார். இருந்தபோதிலும் ராணுவ அதிகாரிகள் முன் ஜாக்கிரதையாக பீரங்கிகளைத் தயார் செய்து வைத்திருந்தார்கள். அன்றிரவு 9 மணி அடித்து 10 நிமிஷங்களுக்கெல்லாம் "எம்டன்" கரைக்கு சமீபத்தில் ஜெனரல் போஸ்டாபிசுக்கு எதிரில் சமுத்திரத்தில் வந்து நின்றுகொண்டு தன்னிடமிருந்த ஜெகஜோதி வீசும் செர்ச் லைட்டைக் காண்பித்துக் கொண்டு முதலில் ஜெனரல் போஸ்டாபிசையும், பிறகு லைட் அவுசையும், அதன்பிறகு பட்டணத்தையும், அதன் பிறகு கோட்டையையும் நோக்கி பீரங்கிகளால் படபட என்று வேட்டுகள் கிளம்பும்படியாக சுட்டது. நம்முடைய ராணுவத்தார் கோட்டையிலிருந்து மூன்று முறை சுட்டார்கள். ஒரு குண்டு சமீசத்திலேயே விழுந்துவிட்டது. ஒரு குண்டு மிகவும் உச்சியில் போய்விட்டது. மூன்றுவது வேட்டு எம்டனுக்கு சமீபத்தில் போய் விழுந்தது. எம்டன் சத்துருக்கள் உஜாராக விருப்பதை அறிந்து உடனே தீபங்களை அணைத்துவிட்டு தெற்கு நோக்கி ஓட்டம் பிடித்துவிட்டது. நிற்க, எம்டன் போட்ட குண்டுகளால் பலபேர் பல விடங்களில் ஆகக்கூடி 23 பேர்கள் குண்டு பட்டு இறந்துபோய் விட்டார்கள். சிலர் காயப்பட்டு ஆஸ்பத்திரியிலிருக்கிறார்கள். பீச் ரயில்வே ஸ்டேஷனிலிருந்த சில வண்டிகள் குண்டுகளால் பொத்தல் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஸ்டேஷனுக்குப் பின் புரத்திலிருந்த சில புதிய கட்டடங்கள் சேதப் பட்டுப் போய்விட்டன. எல்லாவற்றைவிட பெரிய நஷ்டம் என்ன வென்றால் பர்மா ஆயில் கம்பெனியைச சேர்ந்த இரண்டு பெட்ரோலியம் எண்ணெய்த் தொட்டிகள் குண்டு பட்டு குபீரென்று தீப் பிடித்துக்கொண்டு மூன்றுநாள் வரையில் எரிந்தன. நஷ்டம் 3½-லக்ஷம் ரூபாய்.

### எம்டனும் புதுச்சேரியும்.

—:o:—

இவ்வளவு நஷ்டத்தை விளைவித்த பிறகு எம்டன் புதுச்சேரி நோக்கிச் சென்றது. புதுச்சேரி ஐரோப்பியர்கள் சென்னைத்தந்தியால் எச்சரிக்கப்பட்டு அவர்களுடைய பெண்டு பிள்ளைகளை கிராமங்களுக்கு அனுப்பிவிட்டு எம்டனை எதிர்க்கத் தயாராக விருந்தார்கள். ஆனால் எம்டன் யாதொரு விஷமும் செய்யாமல் கூடலூரை நோக்கிச் சென்றது. கூடலூருக்குப் பிறகு இன்ன விடத்திற்குப் போயிருக்கிறதென்று தெரியவில்லை. எம்டனைத் தேடிப்பிடிக்க ஒரு பிரிடிஷ் பீரங்கிப் படகும், ஒரு ஜப்பான் குருசர் கப்பலும் கொளும்புவைவிட்டு புறப்பட்டு சென்னப்பட்டணம் நோக்கி வந்துகொண்டிருக்கின்றன.

எம்டனை மூன்று பிரிடிஷ் குருசர் ஸ்டீமர்கள் பின்தொடர்ந்து வருகின்றனவென்று மேன்மை தங்கிய வைசிராய் சென்னை கவர்னருக்கு தந்தி அடித்திருக்கிறார்கள்.

சென்னைத் துறைமுகத்தின் பந்தோபஸ்திற்காக ஒரு யுத்தக் கப்பலிருக்கும்படி உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது.

கூடிய சீக்கிரம் "எம்டன்" பிடிபட்டுப் போய்விடுமென்று நம்பப்படுகிறது. அறியாத பாமர ஜனங்கள் என்னமோ ஏதோ என்று பயந்து ஊரைவிட்டுப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

---

### புருஷனைவிட்டுப் பிரிந்திருக்கும் மனைவி.

---

ரெங்கம் — அடியே! சாவித்திரி இவ்விடம் வா!

சாவித்திரி — ஏன் அக்காள் கூப்பிடுகிறாய்.

ரெ — நான் கூப்பிடுகிற குரலுக்கு வராமல் அவ்விட மிருந்தபடியே கேட்டால், நான் என்னமாய் உனக்கு சொல்லக் கூடும்?

சா — ஆனால் இதோ வருகிறேன் (சாவித்திரி சென்றாள்.)

ரெ — ரகசிய மாகச் சொல்லுகிற காரியமுண்டு பேலக்காச் சொல்லுகிற காரிமு முண்டு கூப்பிட்ட குரலுக்கு ஏன் என்று வந்து கேட்டு விட்டுப் போனாலல்லவோ சொல்லக் கூடும்.

நல்லது; போனது போகட்டும்; நாளையதினம் திருவாரூரி லிருந்து அண்ணன் வருகிறாரே செலவுக்கு என்ன யோஜனை செய்திருக்கிறாய்?

சா — வந்த விடத்தில், நான் என்ன செய்வேன் ஏதாவது கொடுத்தால் சமையல் செய்து போடுகிறேன் இவ்வளவு கஷ்டம் என்ன ? ஏன் அத்தானைக் கேட்டு அனுப்புகிறது தானே ?

ரெ — அத்தானா! அத்தானைக் கேள்கிறதைப்பார்க்கி லும் சுடு காட்டுப் பிடாரியைக் கேட்கலாம் அதாவது கொஞ்சம் மன மிறங்கி ஏதேனும் கொடுக்கும்; அந்த சண்டாளப்பாவியா கொடுக்கப் போகிறான் ? தாலி கட்டின நாள் முதல் என்னை தனியே விட்டு விட்டு திரிகிறான்; தடிக் கட்டையிலே போவான்! வெட்கமேது! ரோஷமேது! மானமேது! ஈனமேது அவனா கொடுக்கப் போகிறான்?

சா — ஏன் இப்படி திட்டுகிறாய்! இப்படி நீ பெண்ணாய் பிறந்து கடன் வாங்கியும் பட்டினி யிருப்பது போல் ஒருவனைத் தாலியும் கட்டிக் கொண்டு இப்படி வயிற்றுச் சோற்றுக்கு கூட நீ சங்கடப்படுவது எனக்கு பார்க்க பரிதாபமா யிருக்கிறது.

ரெ — தங்கை இந்த சங்கடம் ஒரு நாளா இரண்டு நாளா! என்றைய தினம் சண்டாளப் பாவித் தொட்டு தாலிக் கட்டினானோ அன்று முதல் இந்த இம்சை தானே! கடவுள்தான் அறிய வேண்டும் ?

சா — இதற்கு அக்காள் தகுந்தபடி யோஜனை செய்ய வேண்டும்; அத்தான் என்ன மூடமா? உத்தியோகம் பார்க்காமல் யிருகிறாரா அவர் உன்னுடம் சேர்ந்து வாழ இஷ்டப்படா விட்டால் கூட சம்பளத்தில் மாதமாதம் 8 அல்லது 10 ரூபாய் கொடுத்துக்கொண்டு வந்தால் கூட வல்லவா உன் கஷ்டம் தீர்ந்து போய் விடும் ?

(கெவுளி சொல்லுகிறது.)

ரெ — சாவித்திரி! நீயும் சொல்லி முடித்தாய் கெவுளியும் கீச் கீச் என்று சொல்லுகிறது! ஏதோ அதிசய மிருக்கிறது.

சா — ஆம்! அக்கா! கெவுளிக்கு பலன் சொல்லுகிறவனை வரவழைத்துக் கேட்டால் தெரியும்.

ரெ — யாருக்குப் பலன் சொல்லத் தெரியும்.

சா — அடுத்த தெருவில் திருநாவுக்கரசு என்று ஒரு வள்ளுவனிருக்கிறான் அவன் சொல்லுவான் என்று கேள்வி.

ரெ — ஆம்! ஆம்! எனக்கும் ஞாபகமிருக்கிறது.

சா — அக்கா! இவனுக்கு ஆயுசு 100 இதோ வருகிறான்.

ரெ — அப்பா! திருநாவுக்கரசு! நல்ல வேளை உனக்கு ஆள் விட்டு அனுப்புகிற தென்றிருந்தேன்; அதற்குள்ளாக நீயும் வந்து விட்டாய்! இன்றைய தினம் உச்சியில் கெவுளி சொன்னது, தங்கையும் நானும் ஒரு முக்கியமான காரியத்தைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம்! அந்த சமயத்தில் கருக்கு கருக்கென்று சொன்னது.

திருநாவுக்கரசு — அம்மா! கேளுங்கள்! கெவுளி பலன்! உச்சியிலே கெவுளி சொன்னால் - உயர்ந்தவன் கெடுவலாவான் - வைத்தவன் மறந்து விட்டால் - எடுத்தவன் கொடுக்கமாட்டான் - இரவு போனால் பகல் உண்டாகும் - மழை பெய்தால் பூமியில் ஈரமிருக்கும் அம்மா - நான் சொல்லுவதைக் கேளுங்கள்! சுக்கிர வாரம் காலையில் உச்சியில் கெவுளி சொன்னால் நினைத்த காரியம் நினைத்தபடி கைகூடும்! இதில் ஒன்றும் சந்தேகப்படவேண்டாம் அம்மா எனக்கு உத்தரவு கொடுங்கள் நான் போய் வாரேன்.

ரெ — சாவித்திரி! நீ என்ன நினைத்தாய்!

சா — உங்களுடைய கஷ்டகாலம் நீங்க வேண்டுமென்று நினைத்தேன்!

ரெ — என்னமாக நீங்கப் போகிறதோ என்னமோ கடவுள் தான் சொல்ல வேணும். இதோ அண்ணன் வருகிறார்.

சா — அண்ணா! வாருங்கள்! நான் வழியையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

அண்ணன் — நல்ல திருக்கட்டும் அந்தப் பயலை அடக்குவதற்கு வழி யில்லை என்ன செய்கிறது. திருவாரூர் நாகப்பட்டணம் லாயர்கள் எல்லாம் ஒருவன் சொல்லுகிறது போல மற்றொருவன் சொல்லமாட்டேன் என்கிறான்; எப்படியாவது அந்த பயல் பேரில் வியாஜ்ஜியத்தைப் போட்டு எந்தக் கேசிலையாவது அவனை சிக்கிவைக்கலாமென்று ஆனமட்டும் பார்க்கிறேன் ஒன்றும் பலிக்கவில்லை; திருவாரூர் லாயர் ஒரு மாதிரியாக சொல்லுகிறான் நாகப்பட்டணம் லாயர் ஒரு மாதிரியாகச் சொல்லுகிறான் எனக்கு மூளை சிதரிப் போகிறது.

சா — அண்ணா! என்ன வியாஜ்ஜியம் செய்யவேண்டுமென்று சொல்லுகிறீர்கள்?

அண்ணன் — நீ பெண்பிள்ளை! உனக்கு சொன்னால் என்ன தெரியப்போகிறது.

சா — அண்ணா! நீங்கள் தயவுசெய்து சொல்லுங்கள்! நான் அதற்குமேல் யோஜனை சொல்லுகிறேன்?

அண்ணன் — நீ அபலை பெண்பிள்ளை! என்ன யோஜனை சொல்லப்போகிறாய்?

ரெ — அண்ணா! நீங்கள் என்ன காரியத்திற்காகத் தான் திருவாரூருக்கும் நாகப்பட்டணமும் போயிருந்தீர்கள் ?

அண்ணன் — வேறென்ன காரியம்? எல்லாம் உன் காரியம்தான்? மற்றப்படி எனக்கு என்ன காரியமிருக்கிறது. உன் புருஷனை ஏதாவது ஒரு கேசில் சிக்கி வைக்கவேண்டுமென்று வக்கீல்களிடம் யோஜனை செய்யப் போனேன்.

சா — அவர்கள் என்ன சொன்னார்கள் ?

அண்ணன் — ஒருவன் போனபடி இன்னொருவன் போகவில்லை.

சா — இதெல்லாம் அநியாயம். எப்படி யிருந்தாலும் அவர் நம்முடைய அத்தான். அவர் ஏதேனும் கிரிமினல் கேசில் சிக்கிக்கொண்டால் கடைசியில் நாம்தான் துயரப்படுவோம்?

அண்ணன் — பின்னே, அவன் மாதம் ரூ. 100 சம்பாதித்தும் பெண்ஜாதியையும் காப்பாற்றாமலும், அவளுடன்கூட வசிக்காமலும் அவளுக்கு செலவுக்கும் கொடுக்காமலும் அவளைப் பாதவிக்க விட்டிருக்கிற பாவிப் பயலை என்ன செய்தால் என்ன ?

OFFICE OF THE REGISTRAR ... 8 - DEC 1914 MADRAS.

# இந்திய சட்ட கெஜெட்.


உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டு பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது.

வால்யம் 7.] சென்னப்பட்டணம் 1914ஞு அக்டோபர்மீ [பாகம் 2.


## அடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| | உருவப்படம்:—இந்தியாவின் மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் ... .... | |
| 1. | மோசல் ... .... ... ... ... ... ... ... | 45 |
| 2. | ஐக்கோர்ட்டின் பிரதம ஜட்ஜிஸ்தானம் ... ... ... .... ... | |
| 3. | ஆனரபில் ஜஸ்டிஸ் சர் ஆனல்ட் வொயிட் .... ... ... ... | |
| 4. | மேன்மைதங்கிய ஹார்டன்ஞ்சு பிரபு ... ... .... .... ... | |
| 5. | லா ஜெர்னல்களில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கேஸ்கள் .... ... | 49-52 |
| 6. | யுத்தம் .... .... ... .... ... ... ... .... | 53 |
| 7. | ஒரு குழந்தையின் ஜீவனும்சம்—சம்பாஷனை ... .... .... .... | 54 |
| 8. | செப்டம்பர்மீ அக்டோபர்மீ தீர்ப்புகள் .... ... ... ... | 57 |
| 9. | மற்ற ஐக்கோர்ட்டுகளுடைய தீர்ப்புகள்... .... ... .... ... | 59-62 |
| 10. | எங்களுடைய கக்ஷிக்காரர்கள் பக்கம் ... ... ... ... .... | 63 |
| 11. | சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் சமீபத்தில் ஜாரி செய்யப்பட்ட தீர்ப்புகள் | 65-70 |
| 12 | நானாவிதமான வியாஜ்ஜியங்கள் .... ... ... ... ... | 70-76 |


## சந்தா விபரம்.


| | | | | |
|---|---|---|---|---|
| வருஷ சந்தா .... .... | ரூபா 5 0 0 | மூன்று மாதத்திற்கு .... | ரூபா 1 8 0 |
| ஆறுமாதத்திய சந்தா .... | ,, 3 0 0 | (தபால் சார்ஜ் பிரத்தியேகம்.) | |

சிங்கப்பூர் பினாங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) .... .... ரூபா 6 0 0

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

# விஞ்ஞாபனம்.

(1) திருச்சிறுப்பள்ளி ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் G. K. ரங்கில்தாஸ் அவர்கள் நம்முடைய வரவை ஏற்று உபசரித்து இந்திய சட்ட கெஜெட்டின் அபிவிருத்திக்காய 25 நன்கொடை கொடுத்து போஷகர் ஜாப்திதாவில் தங்களுடைய பெயரை தாக்கல் செய்துக்கொள்ளும்படியாக நமக்கு உத்திர வளிப்பதற்காக மனமார வந்தனமளிக்கின்றோம், இவர்கள் ஸ்ரீரங்கத்தில் தர்மப் பிரபுவாக விளங்காநின்ற சாவுக்கார் மிஸ்டர் கோபாலதாஸ் அவர்களுடைய குடும்பத்தில் ஜெனித்து 200 வருடங்களுக்கு முந்தி ஸ்தாபிக்கப்பட்டு வந்து இயற்கையில் இவருடைய வசத்திற்கு வந்த தர்மங்களை நிர்வகித்துக்கொண்டு வருகிறபடியாலும் தெய்வ பக்தி நிரம்பப் பெற்றவராயு மிருக்கிறபடியால் இவருடைய திருவுருப் படத்தை நம்முடைய கெஜெட்டின் அடுத்தசஞ்சிகையில் பிரசுரிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

(2) திருச்சிறுப்பள்ளி கோட்டையி லிருக்கும் ஸ்ரீமான் சிதம்பர செட்டியார் அவர்கள் நம்முடைய இந்தியாதேச சட்ட கெஜெட்டின் அபிவிருத்தியை நாடி ரூ. 15 நன்கொடை கொடுத்து உதவி யிருப்பதற்காக அவர்பால் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றோம்.

ந, ராதாகிருஷ்ண அண்டு கோ.

---

ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் வாங்குகிறவர்களுக்கு முக்கியம்!

## மாதிரி தேவை.

இதுவரையில் ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் வாங்கிக்கொண்டுவந்த ஜனங்களுக்கு இனி மேல் அம்மாதிரியான சாமான்களை இங்கிலாண்டில் தயார் செய்து சப்ளை செய்யும்பொருட்டு அடியிற் கண்ட பத்திரிகை ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறது. இந்த வஷயத்தில் பற்றுடையவர்கள் அடியிற்கண்ட பத்திரிகைக்கு சாமான்களின் மாதிரி அனுப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி சாமான்கள் யாரால் இங்கிலாண்டில் தயார் செய்யப்படுகின்றனவோ அவர்களுக்கு அனுப்பப்படும். அவர்கள் மாதிரி அனுப்பியவர்களுக்கு விலை முதலிய விபரம் எழுதுவார்கள்.

இந்த ஏற்பாட்டால் இங்கிலாண்டில் யார் யார் இந்த சாமான்களைத தயார் செய்கிறார்கள் என்று அறிந்துகொள்ளக் கூடும். ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் பர்த்தி படுத்தப்படுவதற்கு வசதியாக விருக்கும். மாதிரி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். பப்ளிஷர்,

பிரிடிஷ் டிரேட் ஜேர்னல்,
24, மார்க் சந்து லண்டன், இங்கிலாண்டு,

## The Best Silver Wrist Watch.

## கையில் கட்டிக்கும்படியான மாக உயர்ந்த வெள்ளி கெடியாரம்.

இது உயர்ந்த சாமான்களால் செய்யப்பட்ட ஸ்விஸ் மேக்கர், மதிராஸ் கோட்டை குண்டுக்கு சரியான டையம் காட்டும். அடிக்கடி ரிப்பேர் செய்வதற்கு விடம் கொடுக்காத வலுவும் உறுதியான கெடியாரம். இது எங்களுக்காகவே தயார் செய்யப்பட்டு வந்திருக்கிறது. கெடியாரத்திற்குள்ளே யிருக்கும் சாமான்கள் பூட்டுவதற்கு சாதாரண திருகு ஆணிகள் போடப்படுவதற்குப் பதிலாக கெம்பு வைக்கப்பட் டிருக்கிறது. சாவி தலையின் பேரி லிருக்கிறது. நேர்த்தியான லிவர் வாச்; ஒரு தடவை சாவி கொடுத்தால் 36 மணி நேரம் ஓடும்.



சாதாரணமாக சில்லரைக் கடைகளில் கெடியாரம் ஒன்றுக்கு 15 ரூ. க்குக் குறைவாக கிடைக்க மாட்டாது. ஆனல் கைக்கு கட்டிக்கொள்ளும் இங்கிலீஷ் தோல் பட்டையுடன் ரூ. 8க்கு விற்று வருகிறோம்.

N. S. ரும் அண்டு கோ,
49, ஆச்சாரப்பன் வீதி,
ஜியார்ஜடவுன் சென்னை.



H. E. The Right Hon'ble BARON HARDINGE of Penshurst, P.C., G.C.B., G.M.S.I., G.C.M.G., G.M.I.E., G.C.V.O., I.S.O.
Viceroy and Governor-General of India.


# The Indian Law Gazette.

## இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 7.] சென்னப்பட்டணம், 1914ஞு அக்டோபர்மீ [பாகம் 2.


### MOSUL OR DETENTION IN BAILIFF'S CUSTODY.
### மோசல்.

ஒரு பண டிக்கிரி நிறைவேற்றப்பட்டு தீர்ப்புக் கடனாளி வாரன்டில் பிடிக்கப்பட்டு கோர்ட்டார் முன்னில் ஆஜர்படுத்தப்பட்டால் அவனிடம் அந்த சமயம் ஷை டிக்கிரி கடனைத் தீர்க்கப்பணமில்லாததை முன்னிட்டு தன்னை உடனே ஜெயிலுக்கு அனுப்பிவிடாமல் மூன்று அல்லது நான்கு தினங்கள் வரையில் பணம் ஜாக்கிறதைசெய்து கட்டும் பரியந்தம் தன்னை கைதிசெய்த கோர்ட்டு சேவகன் வசத்தில் விட்டுவைக்கவேண்டும் அல்லது மோசலிலிருக்கும்படி உத்திரவு செய்யவேண்டுமென்று அவன் வேண்டிக்கொள்ளுவது சகஜமாயிருக்கிறது. இப்படி அவன் மோசலில் விட்டுவைக்கும்படி கோர்ட்டில் மோசல்படிகட்டி வேண்டிக்கொள்ளுகிறான் என்பதில் சந்தேகமில்லை. சில கோர்ட்டார் அவன் வேண்டிக்கொண்டபடி மோசலிலிருக்கும்படியாக உத்திரவு செய்கிறார்கள். சில கோர்ட்டார் டிக்கிரியை நிறைவேற்றினவன் தீர்ப்புக்கடனாளியை மோசலில் வைத்திருக்கும்படி சம்மதித்தால் மட்டிலும், மோசலிலிருக்கும்படி உத்திரவு செய்கிறார்கள். இன்னும் சில கோர்ட்டார் வாரன்டில் அகப்பட்டவனுடைய வேண்டுகோளை நிறைவேற்றிவைக்க டிக்கிரி பெற்றவன் சம்மதித்தாலும்கூட சிவில் புரோசீஜர் கோடில் கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை என்று சொல்லி வாரன்டில் அகப்பட்டவனை உடனே ஜெயிலுக்கு அனுப்பிவைக்கிறார்கள்.

ஆகவே இந்த விஷயத்தில் பல கோர்ட்டார்கள் பலவிதமாக அபிப்பிராயப் படுகிறார்கள். டிக்கிரிக்காரன் சம்மதம் கொடுத்தாலும்கூட சிவில்கோர்ட்டு இலாக்கா சர்க்குலர் உத்திரவுகளை அனுசரித்து சில கோர்ட்டார்கள் வாரன்டில் பிடிபட்டவன் மோசலிலிருக்கும்படியாக விடுகிறதில்லை. கோர்ட்டார்கள் சிவில்புரோசீஜர்கோடு ஆர்டர் 21-ரூல் 40-யை தாராளமான தாற்பரியம் செய்தால் வாரன்டில் பிடிபட்டவனை மோசலில் விட்டு வைக்கும்படியும் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதென்று நினைக்கலாம். சி. பு. கோ. ஆர்டர் 21ரூல் 40ல் "ஒரு மனிதன் பண டிக்கிரி நிறைவேற்றப்பட்டுவாரண்டில்பிடிபட்டுகோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டால் அந்தமனிதன் ஏழையாயிருப்பதை முன்னிட்டாகிலும்அல்லதுவேறெந்த போதுமான தகுந்த காரணத்தை முன்னிட்டாவது கடனைத்தீர்க்க சக்தியற்றவனாகயிருக்கிறான் என்று கோர்ட்டாருக்குத் தெரியவந்தால் கோர்ட்டார் என்ன ஏற்பாடு செய்தால் தகுதியுடையதென்று அபிப்பிராயப்படுகிறார்களோ அந்த ஏற்பாட்டின்படி ஷை மனிதனை வாரன்டில் பிடித்து ஜெயிலில் வைக்கும்படி டிக்கிரிக்காரன் செய்துகொண்ட

மனுவை ரத்துசெய்யலாம் அல்லது அவனை விடுவித்துவிடலாம்'' என்று கூறுகிறது. டிக்கிரி பெற்றவன் தீர்ப்புக்கடனாளியை வாரன்டில் பிடித்து ஜெயிலில் வைக்க செய்துகொண்ட மனுவை ரத்து செய்யவும் கைதிசெய்யப்பட்ட தீர்ப்புக்கடனாளியை விட்டுவிடவும்கோர்ட்டாருக்குபெரிய அதிகாரம்கொடுக்கப்பட்டிருக்கிறபோது அந்த பெரிய அதிகாரத்தில் வாரன்டில் பிடிபட்டவனை, உடனே ஜெயிலுக்கு அனுப்பிவிடாமல் ஒரு 4-அல்லது 5-தினங்கள் வரையில் பணம் சேகரித்துச் செலுத்தும் பொருட்டு அவனை மோசலில் விடும்படியான சிறிய அதிகாரம் அடங்கவில்லை என்று எண்ணுவதற்கு நியாயமில்லை. மோசலில் விடும்படியான அதிகாரம் வெளிப்படையாகஷ்டி பிரிவில் சொல்லப்படவில்லை என்பது உண்மையாயினும் இந்த சிறிய அதிகாரம் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கும் பெரிய அதிகாரத்திலேயே அடங்கியிருக்கிறதென்று, சட்டத்தைச்செய்தவர்கள், வாரன்டில் பிடிபட்டவன் பணம் ஜாக்கிறதைசெய்து செலுத்தும்பொருட்டு ஒரு 4-அல்லது 5-தினங்கள் வரையில் கோர்ட்டார் மோசலில்விட்டு வைக்க உத்திரவு செய்யலாமென்று வெளிப்படையாக கோர்ட்டாருக்கு அதிகாரம் கொடுப்பது அனுவசியமென்று எண்ணி வெளிப்படையாகச் சட்டத்தில் சொல்லாமலிருந்திருக்கக்கூடும். சட்டத்தைச் செய்தவர்களுடைய தாற்பரியம் எப்படியிருந்தபோதிலும் வாரன்டில் பிடிபட்டவனை மோசலில் விட்டுவைக்கும் வழக்கத்தை சில கோர்ட்டார்கள் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். சிலர் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. பல கோர்ட்டார்கள் பலவிதமாக நடவடிக்கை நடத்திவருகிறார்கள். சி. பு. கோ. 151-வது பிரிவை அனுசரித்தும் கோர்ட்டார் வாரன்டில் அகப்பட்டவனை மோசலில் விட்டுவைக்கும்படியும் உத்திரவு செய்யக்கூடும். சி. பு. கோ. 151-வது பிரிவில் என்ன கூறுகிறது என்றால் நியாயத்தைச் செய்வதற்கு கோர்ட்டாருக்கு இயற்கையிலிருக்கும் அதிகாரத்தை சி. பு. கோடில் எந்தப் பிரிவும் குறுக்கிப் போடமாட்டாது அல்லது எடுத்துப் போடமாட்டாது என்பதே. வாரன்டில் பிடிபட்டவன் டிக்கிரித் தொகையை ஜாக்கிறதைசெய்து செலுத்தும் பொருட்டு ஒரு 4-அல்லது 5-தினங்கள் வரையில் அவனை சேவகன் வசமே விட்டுவைப்பது நியாயமே தவிர மற்றப்படி நியாயமல்லவென்று சொல்லமுடியாது. இப்படியிருந்தும் சில கோர்ட்டார்கள் அந்தப் பிரிவை அனுசரித்தும் . . .

. . வாரன்டில் பிடிபட்டவர்களை அவர்கள் கேட்டுக்கொண்டபடி மோசலில்விட்டு வைக்க உத்திரவு செய்ய இணங்குகிறதில்லை. சிவில் கோர்ட்டு வாரன்டில் அகப்பட்டவன் தான் 4-அல்லது 5-தினங்களுக்குள் பணம் செலுத்தி விடுவதாயும் அது வரையில் தன்னை மோசலில் விட்டுவைக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுவதற்குகோர்ட்டார்இணங்காமல் அவனை ஜெயிலுக்கு அனுப்புவது பரிதாபமாயிருக்கிறது! இன்னும் பெரிய பரிதாபம் என்னவென்றால் டிக்கிரிக்காரன் வாரன்டில் பிடிபட்டவனை மோசலிலில் விட்டுவைக்கும்படி சம்மதித்தும் சில கோர்ட்டார்கள் அவனை ஜெயிலுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இந்த துர்வழக்கங்களுக்கெல்லாம் காரணம் சிவில் புரோசீஜர் கோடு, வாரன்டில் அகப்பட்டவன் டிக்கிரித் தொகையைச் சேகரித்து செலுத்தும் வரையில் மோசலில்விட்டு வைக்கப்படலாமென்று, வெளிப்படையாய்ச் சொல்லாமல் மௌனம் சாதிப்பதே. கடனைத்தீர்க்க சக்தியற்றகடனாளியை வாரன்டில்பிடித்து ஜெயிலுக்கு அனுப்பும் வழக்கத்தை சில அரசாங்கத்தார் கண்டனம்செய்து நிறுத்திப்போட்டார்கள். நம்முடைய மாக்ஷிமை தங்கிய ஜியார்ஜ சக்ரவர்த்தியாரின் டில்லி மகுடாபிஷேக நிமித்தமாக இந்திய ஜனங்களுக்கு சில நன்மைகள்செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்டார் ஆலோசனைசெய்துகொண்டிருந்த காலத்தில், இந்தியாவில் கடனைத் தீர்க்க வகையற்ற கடனாளிகளை கோர்ட்டார் ஜெயிலுக்கு அனுப்பிவரும் துர்வழக்கத்தை நிறுத்தி அதை அனுசரித்து சிவில் புரோசீஜர் கோடை சீர்திருத்தினால் இந்தியர்கள், மகுடாதிபதி வந்த நிமித்தம் தங்களுக்கு ஒரு தகுந்த நன்மை உண்டானதென்று மாக்ஷிமை தங்கிய ஜியார்ஜ சக்கரவர்த்தியாரைக் கைகூப்பித் தொழுவார்கள் என்று நம்முடைய ஜன சமுகத் தலைவர்களில் இரண்டொருவர் கவர்ன்மெண்டாருக்கு யோசனை சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தினாலேயோ அந்த சமயம் இந்த நன்மையைச் செய்ய கவர்ன்மெண்டார் இணங்கவில்லை. அப்படி இணங்காததால் கடனாளியை ஜெயிலுக்கு அனுப்பும் வழக்கத்தை முழுதிலும் அங்கீகரித்துவிட்டார்கள் என்று நாம் எண்ணிவிடக்கூடாது. மகுடாபிஷேக சமயத்தில் கடனாளியை ஜெயிலில் பிடிக்கும் துர்வழக்கத்தை ஒழிக்கும் நன்மையைவிட மிக பாரியான நன்மைகளை இந்தியர்களுக்குச் செய்துவைக்கவேண்டியது மிகவும் அவசியமாக விருந்தபடியால் கடனாளியை ஜெயிலுக்குஅனுப்பும் வழக்கத்தைஒழிக்கும் ஏற்பாட்டை சிலகாலத்திற்கு கவர்ன்மெண்டார் தள்ளிவைத்திருக்கக்கூடும். எப்படியிருந்தாலும் இந்த துர்வழக்கத்தை ஒழித்துப்போட வேண்டுமென்றே கவர்ன்மென்டார எண்ணியிருப்பார்கள் என்று நாம் யூகிக்கின்றோம். இப்படியாக கடனாளியை ஜெயிலுக்கு அனுப்பும் வழக்கம் பலராலும் கண்டனம் செய்யப்பட்டு வரும்போது வாரன்டில் அகப்பட்டவனை மோசலில் 4-அல்லது 5-தினங்கள் வரையில் விட்டுவைக்க டிக்கிரிக்காரன் சம்மதித்தும் சில கோர்ட்டார்கள் சம்மதிக்காமல் சி. பு. கோடில் சட்ட ஆதாரமில்லை என்று காரணம்சொல்லி ஜெயிலுக்கு அனுப்பி அவனுடைய யோக்கிதை கெட்டுப்போகும்படி கட்டாயப்படுத்துவது சிறிதும் விரும்பப்படக்கூடியதாயில்லை. சி. பு. கோ. 128-வது பிரிவின்படி சிவில் கோர்ட்டு நடவடிக்கைகளுக்கு சம்பந்தமான விஷயங்களைப் பற்றியும் சி. பு. கோடின் பிரிவுகளுக்குப் பொருத்தமாயுமுள்ள விதிகளை அப்போதைக்கப்போது செய்துகொள்ள ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறது. டிக்கிரிக்காரன் டிக்கிரியை நிறைவேற்றி கடனாளியை வாரன்டில் பிடிப்பதும்—கடனாளி தன்னை 4-அல்லது 5-தினங்கள் வரையில் மோசலில் விட்டு வைக்கும்படி வேண்டிக்கொள்ளுவதும்—சிலகோர்ட்டார்கள் அவனுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்க விருப்பமில்லாமல் ஜெயிலுக்கு அனுப்பிவருவதும்—ஆகிய இந்த விஷயங்கள் தினசரி கோர்ட்டு நடடிக்கைகளே ஒழிய மற்றப்படி அத்தி புஷ்பித்ததுபோல ஆபூர்வமான சம்பவங்களல்ல. ஆகையால் (Rules Committee) என்றுசொல்லும்படியான விதிகள் செய்யும் கமிட்டியார் வாரன்டில் பிடிபட்ட கடனாளி மோசலில் வைக்கப்பட வேண்டிக்கொண்டால் கோர்ட்டார் அவனுடைய கோரிக்கையை நிறைவேற்றி வைக்கலாமென்று எல்லா கோர்ட்டுகளிலும் அது விஷயமாக ஒரே மாதிரியான நடவடிக்கை அனுஷ்டானத்தி லிருக்கும்படியாக கூடிய சீக்கிரம் ஒரு விதி ஏற்படுத்தி நடவடிக்கைக்கு வரும்படி செய்யவேண்டுமென்று மிகவும் வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

---

## CHIEF JUSTICESHIP OF THE HIGH COURT.

### ஐக்கோர்ட்டு பிரதம ஜட்ஜிஸ்தானம்.

—:o:—

ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர், ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ் முதலான ஜட்ஜிகளுடன் கடந்த கோடை கால ரஜாவில் சீமைக்குப்போன ஐக்கோர்ட்டு பிரதம ஜட்ஜியாகிய மிஸ்டர் ஆர்னலட் வொயிட் ஐக்கோர்ட்டு திறந்தவுடன் மற்ற ஜட்ஜிகளுடன்கூட சீமையிலிருந்து திரும்பிவராமல் போனபோதிலும் அக்டோபர்௴ 1௳ திரும்பிவந்து தமது உத்தியோகத்தை ஒப்புக் கொள்ளுவார் என்று எண்ணப்பட்டு வந்தது. ஆனால் அவர் தேக அசௌக்கியத்தை முன்னிட்டு இந்தியாவிற்கு வரக்கூடாமல், பென்ஷன் பெற்றுக்கொள்ள விரும்புகிறதாக அவ்விடமிருந்தபடி இந்தியா கவர்ன்மெண்டாருக்கு எழுதி உத்தியோகத்திலிருந்து விலகிக்கொண்டார். கவர்ன்மெண்டாரும் அனுமதி கொடுத்து விட்டார்கள். அவருக்குப் பதிலாக இப்போதிருக்கும் அட்வொக்கேட் ஜெனரலையாவது அல்லது ஜட்ஜி மிஸ்டர் வாலிசையாவது இந்தியா காரியதரிசி தெரிந்தெடுத்து நியமிக்கலாம் என்று லோக்கல் கவர்ன்மெண்டார் சிபார்சு செய்திருந்தார்கள். மாக்ஷிமை தங்கியசக்ரவர்த்தி அவர்கள் ஜட்ஜிமிஸ்டர் வாலிசை ஐக்கோர்ட்டு பிரதம ஜட்ஜியாக நியமித்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு சந்தோஷ மடைகின்றோம். ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ் மிகுந்த அனுபோகமுடையவர். சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டிலேயே 6 வருஷம் அட்வொகேட் ஜெனரல் உத்தியோகத்தைப் பார்த்து வந்தார். 8 வருஷம் ஐக்கோர்ட்டிலேயே ஜட்ஜியாகவும் இருந்து வந்திருக்கிறார். மேலும் அகண்ட சட்ட ஞானத்தையும் விசாலமான கல்வியையும் பொருந்தப் பெற்றவர். இங்கிலான்டில் இருந்தபோதே அனேக பத்திரிகைகளுக்கு நிரூபராகவிருந்ததுமன்றி அனேக புஸ்தகங்களுக்கும் கிரந்த கர்த்தாவாகவு மிருந்துவந் திருக்கின்றனர். ஐக்கோர்ட்டு பிரதம ஜட்ஜி உத்தியோகம் இப்பேர்ப்பட்ட அனுபோகமும் ஞானமும் உடையவர் கையில் ஒப்புவிக்கப்பட் டிருக்கிறபடியால் ஐக்கோர்ட்டு நடவடிக்கைகள் சம்பந்தமாக தேவையான சீர்திருத்தங்களைச் செய்து குறிப்பாய் ஐக்கோர்ட்டாரும், பொதுவாய், சென்னை மாகாணசிவில் கோர்ட்டுகளும் ஒழுங்காகநீதிபரிபாலனம் செய்துவைக்கும்படியான வசதிகளைச் செய்து வைப்பார் என்று எண்ணப்படுகிறது. பிரதம ஜட்ஜி சர் ஆர்னல் வொயிட் இதற்கு முந்தி உத்தியோகத்தி லிருந்தபோது அவர்களுடைய திருவுருப்படத்தை நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டில் பிரசுரித்துக்கொண்டாடி அவர்களுடையகவனத்தையும் அபிமானத்தையும் நம்முடைய கெஜெட்டு அடையும்படியாக அவர்களுக்கும் ஒரு பிரதி அனுப்பியிருந்தோம்.

---

## THE HONORABLE JUSTICE SIR ARNOLD WHITE.

### ஆனரபில் ஜஸ்டிஸ் சர் ஆர்னல்ட் வொயிட்.

---

அநேக வருடங்களாக ஐக்கோர்ட்டில் பிரதம ஜட்ஜி உத்தியோகத்தை வகித்துக்கொண்டு வந்த ஜஸ்டிஸ் சர்ஆர்னல்ட் வொயிட் தமது உத்தியோகத்தைவிட்டு விலகி பென்ஷன் பெற்றுக்கொண்டார். இவர் சாதாரணமாக நம்முடைய ஐக்கோர்ட்டிற்குக் கிடைக்கக் கூடிய ஜட்ஜியல்ல; மிகவும் அபூர்வமான ஜட்ஜி. என்ன அபூர்வமான குணாதிசயம் இவரிடம் பொருந்தியிருந்ததென்றால் "அபரிமிதமான பொருமையே;" பொருமையில் இவருக்கு ஒப்பாகச் சொல்லக் கூடிய ஜட்ஜி இதுவரையில் ஐக்கோர்ட்டில் ஏவருமிருந்ததில்லை. இனி இப்பேர்ப்பட்ட பொருமையான ஜட்ஜி ஐக்கோர்ட்டிற்கு கிடைப்பது அதனுடைய அதிர்ஷ்ட வசத்தைப் பொருத்ததென்பதை எவரும் ஒப்புக்கொள்ளுவார் என்பதில் சந்தேகமில்லை. ஒரு கேசை அணு அணுவாய் பரிசீலனை செய்து அதன் உண்மையை ஒரு நொடிப் பொழுதில் கண்டு பிடித்துவிடுவார். கேசில் கவனிக்கப்படக் கூடாத சமாச்சாரங்களை எல்லாம் சிறிதேனும் நிதானிக்காமல் ஒதுக்கிப் போடுவார். வியாஜ்ஜிய விசாரணைமுடிந்தவுடன், தீர்ப்பை எழுதி வாசிக்க வேண்டு மென்று கேசின் ஈரங்கியை ஒத்தி வைக்காமல் உடனே வாய்மொழியாக தீர்ப்புச் சொல்லி விடுவார்கள். தீர்ப்புச் சொல்லுவதற்கு வேண்டிய வாக்கு சாமர்த்தியமும் பதப்பிரயோகங்களும் இவரிடம் பொருந்தியிருந்தன. இவர் பிரதம ஜட்ஜி ஸ்தானத்திற்கு வந்த காலமுதல் பென்ஷன் பெற்றுக்கொள்ளும் வரையில் எந்த லாயருடனாவது அல்லது எந்தக் கக்ஷிக்காரனுடனாவது கடிந்து பேசினார் என்று நாம் கேள்விப்பட்டதில்லை. இவர் ஆதியில் இங்கிலாண்டில் பாரிஸ்டராக விருந்தவர். ஆகையால் பாரிஸ்டர் வகுப்பை முன்னுக்குக் கொண்டு வருவதிலேயே நோக்கமாயிருந்து ஐக்கோர்ட்டில் ஜட்ஜி உத்தியோகம் காலிவிழுந்ததால் பாரிஸ்டர் வகுப்பைச் சேர்ந்தவர்களையே சிபார்சு

செய்வார். இவருக்கு முந்தி ஐக்கோர்ட்டிற்குப் பிரதம ஜட்ஜியாயிருந்த சர் ஆர்தர் காலினஸ் காலத்தில் வக்கீல்களுக்கு எவ்வளவு நன்மைகள் கிடைத்தனவோ அவ்வளவு நன்மை இவர்காலத்தில் அவர்களுக்கு உண்டாகவில்லை என்று சொல்லப்பட்டு வந்தது. ஐக்கோர்ட்டிற்குப் பிரதம ஜட்ஜியாகவிருந்து நியாயஇலாக்காவிற்கு தலைமை ஸ்தானத்தை இவர் வகித்துக் கொண்டு அமுல் நடத்திவருவதை வெளிப்படையாக காண்பித்துக் கொள்ள விருப்பமற்றவர். நிர்வாக உத்தியோகஸ்தர்கள் தங்களுடைய வரம்புமீறி நடப்பதை இவர் பெரும்பாலும் கவனிக்கிறதில்லை என்றும் கோர்ட்டுகள் அமைந்திருக்கும்படியான வாரவாரம் சிட்டிங் ஜாப்பிதா தயார் செய்வதில் அவர் அவ்வளவு சமர்தர் அல்லவென்றும் அனேக காலங்களில் அந்த விஷயத்தில் இவருடைய ஏற்பாடு பின்னப்பட்டு வியாஜ்ஜிய விசாரணை தடைப்பட்டு வந்ததென்று இந்நகரில் பிரசுரமாகும் நியூ இந்தியா கூறுகின்றது.

## H. E. THE VICEROY OF INDIA.
## இந்தியாவின் மேன்மைதங்கிய ராஜப் பிரதிநிதி.

நிகழ் மீ சஞ்சிகையில் நாம் பிரசுரித்துக் கொண்டாடியிருக்கும் உருவப்படம் கனம்பொருந்திய இந்தியாவின் ராஜப் பிரதிநிதியாகிய மேன்மைதங்கிய ஹார்டின்ஞ்சு பிரபு அவர்களுடையது. இந்த இந்திய தேச சட்ட கெஜட்டில் அவர்கள் இந்தியாவிற்குவந்த சமயத்தில் அவர்களுடைய திருவுருப்படத்தைப்பிரசுரித்து நாம் முன் ஒருசமயத்தில் கொண்டாடும்படியான பாக்கியத்தைப் பெற்றோம். ஆகையால் இப்போதும் அதுவும் பொது ஜனங்களுடையவும்கவர்ன்மெண்டாருடையகவனம் ஐரோப்பா யுத்தத்தில் அமர்ந்திருக்கும்இந்தக்காலததில் அவர்களுடைய திருவுருப்படத்தைப் பிரசுரித்து நாம் கொண்டாடும்படியான காரணம்யாது நேரிட்டதென்றும் நம்முடைய நேயர்களில் சிலர் உசாவக்கூடும். அன்னோர்களுக்கு நாம் இப்போது விடைகூறுவோம். மேன்மை தங்கிய வைசிராய் அவர்கள் இந்தியர்களுக்குச் செய்துவரும் எண்ணிக்கையற்ற நன்மைகளும், இந்தியாதேச பொதுஜனங்கள் அவர்கள்பால் காட்டிவரும் ஆழ்ந்த நன்றி விசுவாசம் ஆகிய இந்த இரண்டு விஷயங்களுமே, இன்னொரு முறை அவர்களுடைய திருவுருப்படத்தை நம்முடைய கெஜெட்டில் பிரசுரித்து நாம் கொண்டாடும்படியாகத் தூண்டி விட்டிருக்கிறது. இதுவரையில் இந்தியாவிற்கு ஆக்ஷிசெலுத்தும் பொருட்டு வந்திருக்கும் ராஜப் பிரதிநிதிகளுக்குள் நம்முடைய அப்பன் பிரபு ரிப்பன்போல இந்தியாவிற்கு நன்மைகள் செய்துவிட்டுப்போன அனேக வைசிராய்களு மிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நம்முடைய லார்ட் ஹார்டின்சைப்போல இலகுவில் எதிர்பார்க்கப்படக் கூடாததாயும் ஒப்பு உயர்வு அற்ற நன்மைகளைச் செய்துவரும் வைசிராய் இதுகாறும் இந்தியாவிற்கு வந்ததில்லை என்று சந்தேகமறச் சொல்லக்கூடும். இதுவரையில் வந்திருக்கும் வைசிராய்கள் செய்திருக்கும் நன்மைகள் எல்லாம் கூடி இந்தியா சம்பந்தப்பட்ட நன்மைகளே தவிர மற்றபடி அன்னியதேசம் சம்பந்தப்பட்ட நன்மைகளல்ல. ஆனால் நம்முடைய கனம்பொருந்திய ஹார்டின்ஞ்சு பிரபு அவர்கள் செய்திருக்கும் பல நன்மைகளுக்குள் இரண்டு பெரிய நன்மைகள் அன்னியதேசங்கள் சம்பந்தப்பட்டனவா யிருக்கின்றன. ஒன்று என்னவெனில் தென் ஆபிரிக்காவில் குடியேறியிருக்கும் நம்முடைய சகோதரர்கள் யூனியன் கவர்ன்மெண்டாருடைய கொடுமைகளைப் பொறுக்க முடியாமல் எர்க்திகாமல் எதிர்க்கும் உபாயத்தை அனுஷ்டித்து படாதபாடு பட்டு வந்தபோது இந்திய ஜனங்கள் கொண்டிருந்த கொதிப்பான உணர்ச்சியை அறிந்து யூனியன் கவர்ன்மெண்டார் செய்துவந்த அட்டூழியங்களை இந்தியா மந்திரியினுடையவும் பிரிட்ஷ் பார்லிமெண்டினுடைய கவனத்திற்கு கொண்டுவந்தும் இந்தியா கவர்ன்மெண்டினுடைய பிரதிநிதியாக ஒருவரையும் தென் ஆபிரிக்காவுக்கு அனுப்பி முடிவில் தென் ஆபிரிக்கா இந்தியர்களுடைய குறைகளை யூனியன் கவர்ன்மெண்டார் பெரும்பாலும் நிறைவேற்றிவைக்கும்படியாக கட்டாயப் படுத்தினார்கள். நிற்க பிரிடிஷாருக்கும் மற்ற வெள்ளைக்கார ஜாதியாரும் நடக்கும் யுத்தங்களில் இந்தியத்துருப்புகள் எவ்வளவு வீரத்தன்மை யுடையவைகளாக விருந்தபோதிலும் அவைகளை அந்த யுத்தங்களில் சேர்த்துக் கொண்டு பிரிடிஷ்காரர்களுடைய எதிரிகளை எதிர்த்துச் சண்டை செய்யும்படியாகச் செய்கிற வழக்கமில்லை. அதற்குக்காரணம் என்னவென்றால் நிரபேதமும் கருப்பு நிறமுள்ள இந்தியத் துருப்புகள் வெள்ளைக்காரருடன் சரிசமானமாக நின்று யுத்தம் செய்யும்படியான கௌரவத்தை அவர்களுக்குக் கொடுக்கக் கூடாதென்பதே; நம்முடைய வைசிராய் அவர்கள் இந்தியா மந்திரிக்கு இந்தியர்களுடையவும் இந்தியத் துருப்புகளுடைய உறுதியான ராஜபக்தியை எடுத்துக் காண்பித்து எழுதி இந்தியத் துருப்புகள் ஐரோப்பா யுத்தகளத்திற்கு வந்து சண்டை செய்ய பிரிடிஷ் கவர்ன்மெண்டாரை இணங்கும்படியாகச் செய்தார்கள். பிரிடிஷ் கவர்ன்மெண்டார் மேன்மைதங்கிய வைசிராயினுடைய சிபார்சுபேரில் நிரவித்தியாசம் பாராட்டாமல் இந்தியர்களை சரிசமானமாய் வெள்ளைக்காரர்களுக்குள் நடக்கும் யுத்தத்தில் சேர்த்துக்கொள்ள இணங்கியிருப்பது இனி இந்தியர்களுக்கு பிரிடிஷ் கவர்ன்மெண்டார் செய்யப்போகிற பல நன்மைகள் என்கிற மெத்தைக்குப் போகும்படிகள் என்று எண்ணப்படவேண்டும். இப்பேர்ப்பட்ட எளிதில் எதிர்பார்க்கப் படக்கூடாத நன்மைகளை நாம் கேட்டுக்கொள்ளாமல் வலியவே நமக்கு செய்திருக்கும் பிரபுவை நாம் இன்னொரு முறை கொண்டாட வேண்டுமென்று நோக்கம் கொண்டே நாம் கனம்பொருந்திய ஹார்டின்ஞ்சு பிரபு அவர்களுடைய திருவுருப்படத்தை இரண்டாம் முறையாக நம்முடைய சட்ட கெஜட்டில் இப்போது பிரசுரித்திருக்கிறோம்.



# Reported Cases.
## லாரிப்போர்ட்டுகளில் ரிபோர்ட் செய்யப்பட்டிருக்கிற கேஸ்கள்.

—:o:—

(26)

சிவில் ரிவிஷன் மனு நெ. 135 of 1913.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானே

துல்குன்டவா பிரமய்யா—வாதி...மனுதார்

vs

சங்கம் ருமிரெட்டி வகையரா—பிரதிவாதிகள் ...எதிர்மனுதார்கள்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— குண்டூர் டி. மு. கோர்ட்டில் ஸ்மால்காஸ் தரப்பில் வாதி பிரதிவாதிகள்பேரில் ஒரு பிராமிசரி நோட்டின்பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்திருந்தார். டி. மு கோர்ட்டார் அந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்தார்கள். முதல் பிரதிவாதியை வாதி தரப்பு 6-வது சாக்ஷியாக விசாரணை செய்ததில் இரண்டு பிரதிவாதிகளும் சேர்ந்து புரோநோட்டு எழுதிக்கொடுத்த தாகவும் தாம் பணம் வாங்கினதாகவும் ஒப்புக்கொண்டார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:— புரோநோட்டு எந்தத் தேதியில் எழுதிக்கொடுக்கப் பட்டதாக அதில் தேதி போடப்பட்டிருக்கிறதோ அந்த தேதியில் எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும் இரண்டாவது பிரதிவாதியால் பிரஸ்தாபநோட்டு எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும் அவனுடைய சம்மதத்துடன் நோட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதாக ருஜுப்படவில்லை என்றும் தீர்மானித்து வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி டி. மு. கோர்ட்டாருடைய தீர்ப்புக்கு விரோதமாக 1887-ம் வருடத்திய 9-வது ஆகட் 25-வது பிரிவின்படி ஐக்கோர்ட்டில் சிவில் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்.

லாயர்கள்:—மனுதாருக்காக ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் P. நாகபூஷணமும், எதிர் மனுதார்கள் அல்லது அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் V. ருமதாசுக்குப் பதிலாக மிஸ்டர் S. சத்தியமூர்த்தியும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:— முதல் பிரதிவாதியின்பேரில் டிக்கிரி கொடுக்க முடியாதென்று டி. மு. கோர்ட்டார் முடிவுசெய்து வியாஜ்ஜியத்தை அடியோடு தள்ளுபடி செய்துவிட்டார்கள். முதல் பிரதிவாதியின் 6-வது சாக்ஷியாக விசாரணை செய்யப்பட்டபோது தானும் இரண்டாவது பிரதிவாதியுமாகச் சேர்ந்து நோட்டு எழுதிக் கொடுத்ததாகவும் தான் பணம் வாங்கியிருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார். முதல் பிரதிவாதி பணம் வாங்கியிருப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதை முன்னிட்டு டி. மு. கோர்ட்டார் முதல் பிரதிவாதியின் பெயரிலேயாவது டிக்கிரி கொடுத்திருக்க வேண்டுமென்று மனுதார் தரப்பில் கக்ஷி சொல்லப்படுகிறது. அப்பீல் பிரதிவாதிகள் தங்களுடைய பெயரில் டிக்கிரி கொடுக்கப்படக் கூடாதென்றும் கக்ஷி சொல்லி அந்த கக்ஷிக்கு ஆதாரமாக அமிர்தம்பிள்ளை v. நஞ்சாக்கவுண்டன் (1) கேசையும் 1912-ம் வருடத்திய 601-ம் சிவில் ரிவிஷன் கேசையும் ஆகிய இந்தக் கேஸ்களில் சொல்லப்பட்ட தீர்ப்புகளையும் எடுத்துக் காண்பிக்கிறார்கள். ஆனால் இந்தக் கேஸ்களுக்கும் பிரஸ்தாப கேசிற்கும் வெகு வித்தியாசமிருக்கிறது. மேலே சொல்லப்பட்ட நஞ்சுண்ட கவுண்டன் கேசிற்கு தீர்ப்பு ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யரால் சொல்லப்பட்டிருக்கிறது. மேலே சொல்லப்பட்ட சிவில் ரிவிஷன் கேசிற்குத் தீர்ப்பு ஜட்ஜி மிஸ்டர் மில்லரால் சொல்லப்பட்டது. நஞ்சுண்ட கவுண்டன் கேசிற்கு தீர்ப்பு சொன்ன ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் அவர்களுடைய தீர்ப்பைக்கொண்டு, அந்தக்கேசில் எந்தப் பிரதிவாதியின் பேரில் டிக்கிரி கொடுக்கப்பட வேண்டுமென்று வாதி வேண்டிக்கொண்டானோ அந்தப் பிரதிவாதி மற்றொரு பிரதிவாதியும் சேர்ந்து கடனுக்குக் கட்டுப்பட்டாலொழிய தான் ஏகாங்கியாய் கடனுக்கு கட்டுப்பட முடியாதென்று பிரதிவாதியுடன் ஏற்பாடுசெய்து கொண்டிருக்கிறான் என்று விபரமாய்த் தெரிகிறது. ஆனால் இந்தக் கேசில் முதல் பிரதிவாதி அப்பேர்பட்ட யாதொரு ஏற்பாடும் வாதியுடன் செய்து கொண்டிருப்பதாக ருஜுப்படவில்லை. மேலே பிரமாணமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கும் இரண்டு கேஸ்களிலும் பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுக்கப்பட்டதையும் பணம் வாங்கினதையும் எந்தப் பிரதிவாதியும் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் பிரஸ்தாப வியாஜ்ஜியத்திலோ இரண்டு பிரதிவாதிகளும் புரோ நோட்டை எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். முதல் பிரதிவாதி பணத்தை வாங்கியிருப்பதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

ஆகையால் மேலே சொல்லப்பட்ட கேசிற்கும் பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்கும் கனத்த வித்தியாசமிருக்கிறது. முதல் பிரதிவாதி நோட்டு எழுதிக் கொடுத்ததையும் பணத்தைப் பெற்றுக் கொண்டதையும் ஒப்புக்கொண்டிருக்கும்போது நோட்டில் ஏதோ ஒரு முக்கியமான பாகம் திருத்தப்பட்டிருக்கிறதென்றும் ஆகையால் தான் கடனுக்குக் கட்டுப்படமாட்டேன் என்று சொல்லும் கக்ஷியை டி. மு. கோர்ட்டார் கேட்டுக்கொண்டுமுதல் பிரதிவாதியின் பேரில் டிக்கிரி கொடுக்காமல் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்தது நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஆது

லால் இந்த கோர்ட்டு கீழ்கோர்ட்டுச் செலவுகள் உள்பட பணம் செலுத்தப்படும் வரையில் 100-க்கு வருடத்திற்கு 6-வட்டி மேனிக்கு வட்டி சேர்த்து கடனைச்செலுத்தும்படியாகநாம் முதல் பிரதிவாதிபேரில் டிக்கிரி கொடுத்து டி. மு. கோர்ட்டாருடைய தீர்ப்பை மாற்றுகிறோம் என்றும் இரண்டாவது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறபடியால் இரண்டாவது பிரதிவாதியின் செலவு தொகைகளை வாதிசெலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பு சொன்னார்கள். (1914) ம. வீ. நோ. 705. Junuguntla Brahmayya V. Sangam Rami Reddi, (1914) M. W. N. 705 (11-8-1914.)

குறிப்பு.

(1) அமிர்தம்பிள்ளை V. நஞ்சாக்கவுண்டன், [1914] ம. வீ. நோ. 250 Amritam Pillai V. Nanjah gownden (1914) M. W. N. 250.

---

(27)

இரண்டாவது அப்பீல் நே. 2226 of 1912.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

முத்து கருப்பமுதலி வகையரா—வாதிகள்... அப்பீல் வாதிகள்.

vs

பி. மு. காத்தப்ப உடையான் வகையரா—பிரதிவாதிகள்...அப்பீல் பிரதிவாதிகள்.

லாப் பாயின்ட்:— ஒப்பந்தம். 1904-ம் வருடத்திய 861-ம் நெ. அசல் வியாஜ்ஜியத்தில் அரியலூர் டி. மு. கோர்டடார் கொடுத்த தீர்ப்புக்கு விரோதமாக திருச்சினாப்பள்ளி ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில செய்து கொள்ளப்பட்ட 1905-ம் வருடத்திய 159-ம் நெ. அசல் வியாஜ்ஜியத்தில் ஷை கோர்ட்டார் கொடுத்த தீர்ப்புக்கு விரோதமாக அப்பீல்செய்து கொள்ளப்பட்டிருக்கிறது.

லாயர்கள்.—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் T. ரங்காச்சாரியார் ஆஜரானர். அப்பீல் பிரதிவாதிகளுக்கு லாயர் இல்லை.

ஐகோர்ட்டுத் தீர்ப்பு:—காண்டிராக்ட் ஆகட் (ஒப்பந்தச் சட்டம்) இரண்டாவது பிரிவின் தாற்பரியப்படி சாதாரணமாக சிபார்சு செய்வது ஒரு பரிகாரமாக (Consideration) எண்ணப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. ஒருவன் ஒரு மூன்ருவது மனிதனுக்குக் கடன் கொடுக்கும்படி சாதாரணமாக சிபார்சு செய்ததால் அவன் கடனைத்திருப்பிக்கொடுக்க கட்டுப்பட்டவனாக மாட்டான் என்று தீர்மானிக்கப்பட்டது. (1914) ம. வீ. நோ. 706. Muthukaruppa Mudalli V. Kathappa Udyan, (1914) M. W. N. 706 (11-8-1914.)

---

(28)

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நே. 419 of 1913.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட்.

அண்ணுமலை உடையார் வகையரா — மனுதார்கள்...குற்றவாளிகள்.

vs.

சக்கரவர்த்தியார் எதிர் மனுதார்—பிரியாதி.

லாப்பாயின்ட் :—திருட்டுக்குற்றம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— பிரியாதியும் குற்றவாளிகளும் முறையே நிலங்கவான்தாரும் குடிகளும்; குடி அறுவடையான மாசூலை அவனும் இன்னும் சிலருமாகச் சேர்ந்துகொண்டு நெல்களத்திலிருந்து திருடிக்கொண்டுபோய்விட்டார்கள் என்றுகுடியானவனை முதல் குற்றவாளியாகவும் அவனுடன் சேர்ந்தவர்களை மற்ற குற்றவாளிகளாகச் சேர்த்து வலங்கமான்இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்முன்னில் பிரியாதி திருட்டுக்குற்றம் சாட்டினர். (கவண்டர் கேஸ் நெ. 83 of 1913.)

மாஜிஸ்டிரேட்தீர்ப்பு:—திருடப்பட்டதாகசொல்லப்படும் நெல் பிரியாதி யாகிய நிலஸ்வான்தாருடையவும் முதல் குற்றவாளியாகிய குடியானவனுடைய வசத்திலிருந்தது என்றும் முதல் குற்றவாளியும் மற்ற குற்றவாளிகளுமாகச் சேர்ந்து அந்த நெல்லை இருந்த விடத்திலிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்என்றுருஜுப்பட்டபடியால்வலங்கமான் இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட் குற்றவாளிகள்பேரில் குற்ற ஸ்தாபனைசெய்து தண்டித்துவிட்டார்கள்.

இந்த தீர்மானத்திற்கு விரோதமாககுற்றவாளிகள் கும்பகோணம் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்துகொண்டார்கள். (கிரிமினல் அப்பீல்கள் நெ. 118-121 of 1913.)

சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட் தீர்ப்பு:— அசல் கோர்ட்டு தீர்மானத்தையும், குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் உறுதிப்படுத்தி தீர்ப்பு சொன்னர்கள்.

இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக கி. பு. கோ 435, 439-வது பிரிவுகளின் படிகுற்றவாளிகள் ஐக்கோர்ட்டில் கிரிமினல் ரிவிஷன்மனு தாக்கல் செய்தார்கள்.

லாயர்கள்:—மனுதார்களுக்காக பாரிஸ்டர் மிஸ்டர் J. C. ஆடமும், கவர்ன்மெண்டு தரப்பிற்காக பாரிஸ்டர் மிஸ்டர் C. F. நேப்பியரும் ஆஜரானர்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—குற்றவாளி தரப்பிற்கு ஆஜராயிருக்கும் பாரிஸ்டர் மிஸ்டர் ஆடம் நெல்



161192

முதல் குற்றவாளி வசத்திலிருந்ததென்று கீழ்க்கோர்ட்டார்கள் முடிவு செய்திருக்க வேண்டுமென்றும், அப்படி முடிவு செய்திருந்தால் முதல் குற்றவாளியும் மற்ற குற்றவாளிகளும் அந்த இடத்தைவிட்டு நெல்லை எடுத்துக்கொண்டு போனது திருடினதாக மாட்டாதென்று கக்ஷி சொல்லுகிறார். நெல் குவிக்கப்பட்டு நிலஸ்வான்தார்அந்தகுவியலுக்கு முத்திரை போட்டிருந்தார் என்று ருஜுப்பட்டிருக்கிறது. ஷை குவியல் தன்னுடைய கொல்லையில் குவித்து வைக்கப்பட்டிருந்ததென்றும் தன்னுடைய வசத்தில் தான் இருந்ததென்று முதல் குற்றவாளி ஒப்புக்கொண்டிருக்கிறான். இந்த இரண்டு விஷயங்களையும் கீழ்க்கோர்ட்டார்கள் கவனிக்கவில்லை. மேலும் சட்ட சம்பந்தமாக அந்தக் கோர்ட்டார்கள் செய்திருக்கும் முடிவிலும் அவர்கள் தவறிப்போயிருக்கிறார்கள்.

சுபதிபந்தோ V. பலராம செட்டி (1) கேசில் நெல்பங்குபோட்டு நிலஸ்வான்தாருக்கு அவருடைய பாகத்தை ஒப்புவிக்கும் பரியந்தம் முழுமாசூலும் குடியினுடைய வசத்திலிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தத்தீர்ப்பை இந்தக்கேசிற்கு பொருந்தாமலிருப்பதற்கு நமக்குக்காரணம் விளங்கவில்லை. ஆகையால் களவாடப்பட்டதாகச் சொல்லப்படும் நெல் குடியின் வசத்திலிருந்ததென்று தீர்மானிக்கப் பட்டிருக்கவேண்டும். ஆகையால் குற்றவாளிகள்பேரில் சாட்டப்பட்டிருக்கும் திருட்டுக்குற்றம் ஸ்தாபிக்கப்படக்கூடியதல்ல. குற்றவாளிகள் செய்த செய்கை திருடின குற்றமாகாவிட்டால் வேறென்ன குற்றமாக எண்ணப்படக்கூடும் என்று கவர்ன்மெண்டு பிராசிக்கியூட்டர் நமக்குச் எடுத்துச் சொல்லவில்லை. குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்துசெய்கின்றோம். குற்றவாளிகளுக்கு ஏதேனும் அபராதம் விதிக்கப்பட்டு வசூல் செய்யப்பட்டிருந்தால் அது அவர்களுக்கு வாப்பீஸ் செய்யப்பட வேண்டுமென்று தீர்ப்பு சொன்னார்கள். (1914) ம. வீ. நோ. 606. Annamalai Odyar V. Emperor, (1914) M. W. N. 606. (7-9-1914.)

குறிப்பு.

(1) இ. லா. ரி. 26 சென். 481:—Subadi v. Balarama Chetty 26 Mad. 481.

---

(29)

கிரிமினல் அப்பீல் நே. 38 of 1914.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்.

உருமமுதலி வகையரா—அப்பீல் வாதிகள்

vs

சக்கரவர்த்தியார்—பிரியாதி

லாப்பாயின்ட்:—ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்ட குற்றவாளியின் அப்பீல்.

கேசின் சுருக்கம்:—கோயமுத்தூர் செஷன் ஜட்ஜிமுன்னில் சட்ட விரோதமான கூட்டம் கூடி கலகம் செய்ததாக 22-பேர்கள் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். கலண்டர் கேஸ் நெ. 81 of 1913. செஷன் ஜட்ஜி இந்தக் கேசை விசாரணைசெய்து இரண்டு பேர்களை விடுவித்துவிட்டார். பாக்கி 22-பேர்கள் பேரில் குற்ற ஸ்தாபனைசெய்து சிலருக்கு அபராதமும் சிலருக்கு ஜெயில் தண்டனையும் விதித்தார்கள்.

அந்தத் தீர்ப்புக்கு விரோதமாக குற்றவாளிகள் ஐக்கோட்டிற்கு அப்பீல் செய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக வக்கீல் மிஸ்டர் A. சடகோபாச்சாரியாரும், C. நரசிம்மாச்சாரியாரும், C.ராஜகோபால் அய்யங்காரும், கவர்ன்மெண்டு சரப்பிற்காக பப்ளிக் பிராசிக்கியூட்டரும் ஆஜரானர்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—குற்றஞ் சாட்டப்பட்ட 22-பேர்களுக்குள் இரண்டு பேர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

குற்ற ஸ்தாபனை செய்யப்பட்ட 22-பேர்களுக்குள், 4-பேர்கள் அப்பீல் செய்துகொள்ளவில்லை. பாக்கி 18-பேர்கள் அப்பீல் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்பீல் செய்து கொண்டிருக்கும் 18-பேர்களுக்குள் 14-பேர்களுக்கு தலைக்கு ரூ. 10-வீதம் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது. கி. பு. கோ.413-வது பிரிவின்படி அவர்கள் அப்பீல்செய்து கொள்ள பாத்திய மற்றவர்கள். ஒரே தீர்ப்பில் 112, 3, 6, அப்பீல் வாதிகளுக்கு முறையே 3-மாத கடுங்காவல் தண்டனையும், ரூ. 750 அபராதமும், ரூ.200 அபராதமும்,இரண்டுமாத கடுங்காவல்தண்டனையும், ரூ. 500 அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறபடியாலும் அவர்கள் அப்பீல் செய்துக்கொண்டிருக்கிறபடியாலும் மிகவும் சொற்ப தண்டனையாகிய ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்ட பாக்கி 14-பேர்களும் தாங்கள் அடைந்த தண்டனைக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ள பாத்திய முடையவர்கள் என்று அவர்கள் தரப்பில் ஆஜராயிருக்கும் வக்கீல் மிஸ்டர் சடகோபாச்சாரியார் கக்ஷிசொல்லி அந்தக் கக்ஷிக்கு ஆதாரமாக பழனிக் கொரவன் V. சக்கரவர்த்தியார் (1) கேசில் சொல்லப்பட்ட தீர்ப்பை எடுத்துக்கூறுகின்றார். செஷன் கோர்ட்டாரேனும் அல்லது ஜில்லா மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரேனும் ஒரு மாதத்திற்கு குறைவாக ஜெயில் தண்டனையேனும் அல்லது ரூ. 50-க்குக் குறைவாக அபராத தண்டனையேனும் விதித்தால் குற்றவாளிகள் மேலான கோர்ட்டிற்கு அப்பீல் செய்து கொள்ளுவதை கி. பு. கோ 413-வது பிரிவு கண்டிப்பாய்த் தடுக்கிறது. ஒரே செஷன் விசாரணையில் தண்டனை அடைந்த பல குற்றவாளிகள் சேர்ந்து அப்பீல் செய்துகொள்ள விடப்படுவது நீண்டகால வழக்கமாயிருந்தபோதிலும், சேர்ந்த அப்பீல், குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டவர்கள் தனித்தனியே செய்து கொண்ட அப்பீல்களை அடக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே1,2,3,6 அப்பீல்வாதிகள்செய்துகொண்டிருக்கும் அப்பீல்களைத் தவிர பாக்கிப்பேர்கள் செய்து கொண்டிருக்கும் அப்பீல்களை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம் என்று தீர்ப்பு சொன்னர்கள். 16 ம. லா. டை. 34. Uruma Mudalli V.Emperor 16M. L. T. 34 (17-4-1914.)

குறிப்பு.

(1) (1907) 17 ம. லா. ஜெ. 248 Palani Korawan V. Emperor, (1907) 17 M. L. J. 248.

---

(32)

இரண்டாவது அப்பீல் நெ. 2149 of 1910.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்

சுக்கிரநாயர் வகையரு — பிரதிவாதிகள்...அப்பீல் வாதிகள்.

vs

வீராசாமிபிள்ளை—வாதி...அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—கிரயசாசனம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—திருக்கோயிலூர் டி. மு. கோர்ட்டின் அதிகார எல்லைக்குள் 1 முதல் 6 பிரதிவாதிகள் ஒரு நிலம் வாங்கி யிருந்தார்கள். கிரய சாசனத்தில் அவர்களுடைய குடும்பத்திற்கு பந்துவாயிருக்கும் ருமசாமி நயினுர் என்பவர் வேளாண்டி கிராமத்தில் செல்வாக்குடையவராக விருந்தபடியால் அவருடைய பெயரும் கிரய சாசனத்திலிருந்தால் நீர்ப்பாய்ச்சலில் யாதொரு சண்டையு முண்டாகாதென்று 1 முதல் 6 பிரதிவாதிகள் எண்ணி அவருடைய பெயரையும் சேர்த்து கிரயசாசனம் எழுதி வாங்கினுர்கள். ருமசாமி நயினுர் அந்த நிலத்தை இப்போது வீராசாமிப் பிள்ளைக்கு விற்றுப் போட்டார். வீராசாமிப்பிள்ளை 1 முதல் 5 பிரதிவாதிகளை ஷை நிலத்திலிருந்து அப்புறப்படுத்தி தன்னிடம் ஒப்புவிக்கவேண்டுமென்று திருக்கோயிலூர் டி. மு. கோர்ட்டில் அசல் வியாஜ்ஜியம் (O. S. No. 589 of 1908) கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிக்குக் கிரய சாசனம் எழுதிக் கொடுத்த ருமசாமி நயினுர் பெயர் இரவல்காரர் என்று ருஜூப்படுகிறது. அவருக்குத் தாவா நிலத்தில் யாதொரு பாத்தியமுமில்லை. ஆகவே வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது.

வாதி தென் ஆற்காடு ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல்செய்துகொண்டார். (A.S.No.15 of 1910.)

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—வாதி காண்பித்தகிரய சாசனத்தை நம்பி வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள். 1முதல் 5பிரதிவாதிகள் ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்கள்.

கேசின் நடவடிக்கை:— இந்த அப்பீல் அந்த சமயம் ஜட்ஜிகளாகவிருந்த மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்சனுலும், மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்தரமய்யராலும் விசாரணை செய்யப்பட்டு அடியிற்கண்டபடி உத்திரவு செய்யப்பட்டது.

உத்திரவு:—தாவா நிலம் 1 முதல் 6 பிரதிவாதிகளுடைய அனுபவத்திலிருக்கிறது. அவர்களைப் புறப்படுத்தி தன்னிடம் ஒப்புவிக்க வேண்டுமென்று வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கும் வாதி தன்னுடைய பாத்திதையை ருஜூப்படுத்த வேண்டியது என்று ஹரிராம் v ருஜகுமார் ஏபேத்தியா (I) முகட்டு கேஷியா v. அனண்டோ சந்தர் சடோ உபாத்தியா (2) ஆகிய இரண்டு கேஸ்களிலும் செய்யப்பட்டிருக்கும் தீர்ப்புகளால் நன்கு விளங்குகின்றது. ஆனுல் வாதி தன்னுடைய கிரய சாசனத்தை ருஜூப்படுத்தி தன்னுடைய பாத்திதையை ஸ்தாபிக்கும்போது அந்தக் கிரய சாசனம் உண்மையானதல்லவென்று ருஜூப்படுத்த வேண்டிய பொறுப்பு பிரதிவாதிகளுடையதென்று ஜில்லா ஜட்ஜி தீர்மானித்திருப்பதில் தவறிப்போயிருக்கிறுர் என்று நாம் சொல்லக்கூடாது. ருமசாமி நயினுர் கிரைய சாசனம் பெற்றது உண்மையா யிருந்தால் அந்த நிலங்களை தம்முடைய அனுபவத்திற்குக் கொண்டுவந்திருப்பார். அப்படி அவர் கொண்டுவராமலிருந்தது அவர் உண்மையான சொந்தக்காரரல்ல என்கிற கக்ஷியைப் பயப்படுத்துகின்றது. இந்தக் கேசில் பாத்திதையை ருஜூப்படுத்தவேண்டிய பொறுப்பு இன்னருடையதென்னு தீர்மானிக்கப்படாமலே சாக்ஷி வாக்குமூலங்களைக் கொண்டு சரியானபடி முடிவு செய்வது கஷ்டமா யிருக்கமாட்டாது. ஆகையால் ருமசாமி நயினுர் எந்தக் காலத்திலாவது தாவா நிலத்திற்குச் சொந்தக்காரராக விருந்தாரா என்றும் வாதிக்கு தாவா நிலத்தில் பாத்திதை உண்டாயிருக்கிறதா என்றும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சாக்ஷி வாக்குமூலங்களைக்கொண்டு சரியானபடி முடிவு செய்வது கஷடமாயிருக்கமாட்டாது. ஆகையால் ருமசாமி நயினுர் எந்தக்காலத்திலாவது தாவா நிலத்திற்குச் சொந்தக்காரராக விருந்தாரா என்றும் வாதிக்குத் தாவா நிலத்தில் பாத்திதை உண்டாயிருக்கிறதா என்றும் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் சாக்ஷி வாக்குமூலங்களைக்கொண்டு மறுபடியும் தீர்மானித்து அனுப்பவேண்டுமென்று ஜில்லா ஜட்ஜியை நாம் கேட்கவேண்டும்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்மானங்கள்:— ருமசாமி நயினுர் எந்தக்காலத்திலும் அந்த நிலத்தின் எந்த பாகத்திற்கும் சொந்தக்காரராக விருந்ததில்லை என்றும் அவரிடமிருந்து கிரயசாசனம் பெற்றவாதிக்கு யாதொரு பாத்தியமில்லை என்று முடிவுசெய்து தீர்மானம் ஐக்கோர்ட்டாருக்கு அனுப்பினுர்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு இந்தக் கோர்ட்டு முதல் அப்பீல் கோர்ட்டுச் செலவுகளுடன் டி. மு. கோர்ட்டாருடைய தீர்மானத்தை உறுதிப்படுத்துகிறேும் என்று தீர்ப்பு சொன்னுர்கள். 14 ம. லா. டை. 85 Sukira Naiar v Veerasawmy Pillai 14 M. L. T. 85. (17-9-'14.)

குறிப்பு.

(1) 8 கல். 759. Hari Ram v Raja Kumar 8 Cal 759.

(2) கல்கத்தா லா ரிப்போர்ட்டுகள் 48 Muktoo Heshee v Anundo Chader Calcutta Law Reports 48.



## THE WAR.

## யுத்தம்.

கடந்த மூன்று மாதங்களாக நடந்துகொண்டு வந்திருக்கும் யுத்தத்தில் நிகழ்ந்த சந்தர்ப்பங்களை சென்னப்பட்டணத்தில் பிரசுரமாகும் மதிராஸ் மெயில் பத்திரிகை ஆராய்ச்சி செய்து அவைகளின் சாராம்சத்தைப் பின்வருமாறு எழுதியிருக்கின்றது:— ஜெர்மனியர்கள் பெல்ஜியத்தின் பெரும் பாகத்தையும் பிரான்சில் ஒரு சிறிய பாகத்தையும் கைபற்றிக் காண்டிருக்கிறுர்கள். ஆனுல் ஜெர்மனியர்கள் நான்சி, வார்ஷா, கலேய், ஆகிய இந்த முக்கியமான நகர்களைப்பிடிக்கச்செய்த பலமான பிரயத்தனம் மிகவும் பலமாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது ஜெர்மனியர்கள் எவ்வளவு பிரயத்தனம் செய்தும் இந்த நகர்களுக்குள் பிரவேசிக்க முடியவில்லை. ஜெர்மனியர்களுடைய ஆபீசர்களில் அநேகம்பேர் இறந்து போய்விட்டார்கள். சாதாரணப் படையில் மாண்டு போனவர்களுக்கு ஒரு கணக்குமில்லை வழக்குமில்லை.. கூட்டு சைனியங்கள் நல்ல தேகஸ்திதியுட னிருக்கின்றன. ஜெர்மனியர்களேபார்த்து ஆச்சரியப்படும்படியாக பிரிடிஷ் துருப்புகள் சண்டைசெய்கின்றன. ருஷியர்களும் அப்படியே சண்டைசெய்து ஆஸ்டிரியர்களை போர்களத்தில் முதுகுகாட்டி ஓடும்படியாக விறட்டி அடித்து பதினுயிரக்கணக்கான ஆஸ்டிரியர்களை கைதிசெய்தும் அவர்களுடைய பீரங்கிகளையும் பிடித்துக் கொண்டிருக்கிறுர்கள். ஜெர்மனியர்களையும் பலவிடங்களில் தோற்கடித்து அநேக ஜெர்மனியர்களை கைதி செய்திருப்பதுமன்றி அவர்களுடைய பீரங்கிகளை பிடித்து ஏறக்குறைய ஜெர்மனியின் எல்லை யோரத்திற்குப் போய்விட்டார்கள். சொற்பதினங்கள் சென்றுல் ஜெர்மனிக்குள் ருஷியர்கள் நுழைந்துவிட்டார்கள் என்று நாம் கேள்விப்பட்டு சந்தோஷமடைவோம் என்பதில் சந்தேகமில்லை. ஜெர்மனியர்கள் பெல்ஜியத்தில் பெரும்பாகத்தைப் பிடித்துப் போட்டார்கள் என்பதால் பெல்ஜியர்கள் வீரத்தன்மையுடன் சண்டை போடவில்லை என்று எண்ணிவிடக்கூடாது. பெல்ஜியம் யுத்தத்தில் சேராத நடுநிலைமையான தேசம். அது தன்னுடைய உள் நாட்டுப் பாதுகாப்புக்காக சொற்பப்படைதான் வைத்துக் கொண்டிருக்கிறது. அதன்பேரில் படையெடுத்து வரக்கூடிய எதிரி எவரும் இல்லாததால் அந்த தேசம் மற்ற எந்த அரசாங்கத்தாருடனும் உதவிக்காக யாதொரு எகிரிமெண்டும் செய்யவில்லை. ஜெர்மனியர்கள் திடீரென்று பெல்ஜியத்திற்குள் பிரவேசித்து விட்டார்கள். லீஜ்கோட்டை சண்டைவரையில் பெல்ஜியர்கள் யாதொரு உதவியுமின்றி தாங்களே சண்டை போட்டார்கள். அதன் பிறகுதான் பிரான்ஸ் படையும் பிரிடிஷ் படையும் பெல்ஜியரின் உதவிக்காகச் சென்றன. ஜெர்மனியர் ஆன்ட்வெர்ப் கோட்டைகளை பிடித்தபோது பிரிடிஷ் கப்பல்படை இலாக்காவைச் சேர்ந்த 10-ஆயிரம் மனிதர்கள் அடங்கிய ஒருபடை ஒரே நாளில் இரவும் பகலுமாக பிரயாணம்செய்து பெல்ஜியம் வந்து சேர்ந்து பெல்ஜியர்களுக்கு உதவி செய்தார்கள். ஆனுல் ஜெர்மனியர்களை அந்த சமயம் எதிர்க்கும்படியான அவ்வளவு பெரிய உதவிப் படை போகாததை முன்னிட்டு ஆன்ட்வெர்ப் ஜெர்மனிர் கையில் விழுந்துவிட்டதாக சொல்லப்படுகிறது.

ஜெர்மனியர்கள் புறட்டுத் தந்திகள் அனுப்பி உலகத்தில் தங்களுடைய பெயரை பிரசித்தப்படுத்த எத்தனிக்கிறுர்கள். உதாரணமாக வார்ஷா நகரைப்பிடித்துப் போட்டதாக ஒரு தந்தி சமாச்சாரம் பயிரங்கப்படுத்தினுர்கள். ஆனுல் அடுத்த தினம் ருஷியர்கள் பிரசுரித்த பிரசுரத்தில் ஜெர்மனியர்களுடைய தந்தி பொய்யென்றும் வார்ஷாநகர் கோட்டை மதில்களின்கீழ் ஜெர்மனியர்கள் சண்டைசெய்து வருகிறுர்கள் என்றும்சொல்லப்பட்டிருந்தது. இந்தியாவிலிருந்துயுத்தகளத்திற்குப் போயிருக்கும் கூர்க்கப்படைகள் முதலானவை மகாதைரியத்துடனும் வீரத்தன்மையுடனும் சண்டைசெய்து வருகின்றன. ஐரோப்பாவிலிருக்கும் எல்லா தேசத்தார்களும் மூக்குமேல் கையைவைத்து ஆச்சரியப்படுகிறுர்கள். இந்தியத் துருப்புகள் எவ்வளவு வீரத்தன்மையுடன் சண்டைசெய்யுமென்று எதிர்ப்பார்க்கப்பட்டதோ அதற்கு அதிகமாகவே சண்டைசெய்து வருகின்றன என்று நம்முடைய பிரிடிஷ் அரசாங்கத்தார் கூறுகிறுர்கள். கூர்க்கப்படைகளைக் கண்டால் கேய்சார் அச்சம் கொள்ளுகிறுர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கூர்க்கப்படைகள் செய்த வீரத்தன்மையான செய்கைக்கு இவ்விடத்தில் ஒரு உதாரணம் கூறுகின்றேும். கூர்க்கப்படைகள் பிரான்சிற்கு வருவதற்குமுந்தி கூட்டு சைனியங்கள் ஜெர்மனியர் ஒரு இடத்தில் வைத்திருந்த மருந்து கிடங்கை எரித்துப்போட பலமுறை பிரயத்தனம் செய்துவந்தன. ஆனுல் சாத்தியப்படவில்லை. ஆகையால் இந்த வேலை கூர்க்கப்படையிடம் ஒப்புவிக்கப்பட்டது. இவர்களில் சிலர் ஒரு பீரங்கிப்படகில் ஏறிக்கொண்டு அந்த மருந்து கிடங்கிருந்த இடத்திற்கு சமீபத்திலுள்ள ஒரு துறைமுகத்திற்குச் சென்று இறங்கி மருந்து கிடங்கியை நோக்கிப் போனுர்கள். போகும்வழியில் போனவர்களில் 6-பேர்கள் தவிர மற்றவர்கள் எல்லாம் ஒருவிடத்தில் மறைந்து நின்றுகொண்டார்கள். பாக்கி 6-பேர்களும் தங்களுடைய அடையாளம் தெரியவொட்டாதபடி உடுப்புகளை எல்லாம் எடுத்துப்போட்டு பூமியில் படுத்து பாம்பு நகர்வதுபோல நகர்ந்துகொண்டு மருந்துக் கிடங்கிருக்கும் இடத்திற்குச் சென்றுர்கள். மருந்து கிடங்கை 6-ஜெர்மன் சோல்ஜர்கள் பந்தோபஸ்தாய் பாராக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்த 6-கூர்க்கர்களும் 6-சோல்ஜர்கள்பேரில் பாய்ந்து 6-சோல்ஜர்களுடைய தொண்டைகளை அறுத்துவிட்டு கிடங்குக்கு நெருப்பு வைத்துவிட்டு திரும்பி ஓடிவந்துவிட்டார்கள். இப்படியாக கூர்க்கர்கள் அநேக சாமார்த்தியமான வேலைகளைச்செய்து வருகிறுர்கள் என்று கேள்விப்படுகிறேும். பிரிடிஷ் ஆகாயக்கப்பல் ஒன்று கேய்சார் தங்கியிருக்கும் இடம் அறிந்து வட்டமிட்டு அந்த இடத்தின்பேரில் வெடிகுண்டு போட்டது; ஆனுல் வெடிகுண்டு போட்ட 25-நிமிஷத்திற்கு முந்திதான் கேய்சார் அந்தவிடத்தை விட்டுப் போய்விட்டார். ஆகையால் அவர் தப்பித்துக்கொண்டார். அவருடைய இரண்டு ஏய்-டி-காங்குகள்பேரில் வெடிகுண்டு விழுந்து கொல்லப்பட்டுப் போய்விட்டார்கள். ஆகவே நாளதுவரையில் நடந்திருக்கும் தரைச்சண்டையில் நம்முடைய கூட்டு சைனியங்களே ஜெயமடைந்திருக்கின்றன என்று சந்தேகமின்றி சொல்லக்கூடும். சமுத்திரச் சண்டையிலும் நம்முடைய பிரிடிஷ் கப்பற்படையே வெற்றி அடைந்திருக்கிறது. சமுத்திரச் சண்டையில் பிரிடிஷாரை ஜெயிக்க இவ்வுலகத்தில் எந்த அரசாங்கத்தாராலும் சாத்தியப்படாது என்று சொல்லப்படுவதற்கிணங்க பிரிடிஷ் கப்பற்படை ஜெர்மன் கப்பற்படையை ஜெர்மனி சமுத்திரத்தைவிட்டு வெளிவாராதபடி அடக்கிவைத்துப் போட்டது. இவ்வளவு பிரமாதமான யுத்தம் நடந்துகொண்டுவரும் இந்தக்காலத்திலும் நமக்குச் சீமைத்தபால் வாரவாரம் தப்பாமல் கிடைத்துக் கொண்டுவருகிறது. நம்முடைய அந்நியதேச ஏற்றுமதி

யும் இறக்குமதியும் சரக்குகள் ஏற்றிக்கொண்டு போகும்படியான கப்பல்கள் அகப்படாத நிமித்தம் குறைவுபட்டிருக்கின்றனவே ஒழிய மற்றப்படி போகும்வரும் மார்க்கங்களை நம்முடைய பிரிடிஷ் கப்பற்படை சுத்தமாய் வைத்திருக்கின்றது. சுமார் நம்முடைய கப்பல்களில் 27-கப்பல்களை ஜெர்மனி சமுத்திரத்தில் அமிழ்த்தியிருக்கிறது. நம்முடைய கப்பல்கள் அமிழ்த்தியிருக்கும் ஜெர்மன் கப்பல்களைக் கணக்கு எடுத்தால் அதற்குமேலிருக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இப்போது தயார்செய்யப்பட்டிருக்கும் புதிய கப்பல்கள் சமுத்திரத்திற்கு வந்துவிட்டால் ஜெர்மனியை சிறிதும் ஒப்பிட்டுச் சொல்லக்கூடாதபடி நம்முடைய கப்பற்படை அவ்வளவு பலமாகப் போய்விடுமென்று சொல்லப்படுகிறது. ஆசியாகண்டத்தில் ஜப்பானியர் கயாச்சோபேரில் படையெடுத்துப்போய் அநேகமாக அதைக் கைப்பற்றிவிட்டார்கள். இட்டாலியில், யுத்தத்தில் சேரவிருப்பதாக மந்திராலோசனை சபை கலந்துபோய் யுத்தத்தில் சேரவிருப்பமுடைய ஒரு புதிய மந்திராலோசனை சபை அமைந்திருக்கிறது. ஆகையால் இட்டாலியும் வெகு சீக்கிரத்தில் யுத்தத்தில் சேர்ந்துவிடும். அப்படிச் சேருமாயின் ஜெர்மனியுடன் சேராமல் நேச அரசாங்கத்தாருடன்தான் சேரும். துருக்கியின் நிலைமைதான் மிகவும் பரிதாபகரமாயிருக்கிறது. சுல்தானுக்கு யுத்தத்தில் எந்தப் பக்கங்களிலும் சேர மனமில்லை. ஆனால் துருக்கியின் யுத்த மந்திரியாகிய என்வர்பாக்ஷாவும் துருக்கியின் துருப்புகளுக்கு சேனாதிபதியாயிருக்கும் ஜெர்மனியரும் ஜெர்மனியுடன் சேர்ந்து சண்டைசெய்ய வேண்டுமென்று சுல்தானைக் கட்டாயப்படுத்துகிறார்கள். ஆகையால் சுல்தானுடைய உத்திரவை நிராகரித்து துருக்கியில் பாலியக் கக்ஷிக்காரர்கள் ஜெர்மனியருடன் சேர்ந்து நேச அரசாங்கத்தாரை எதிர்த்து வருகிறார்கள். அப்படி துருக்கியும் ஜெர்மனியுடன் சேர்ந்து நேச அரசாங்கங்களுடன் போர் புரிந்தாலும்கூட இந்தியாவிலுள்ளவும் மற்றும் பிரிடிஷ் ராஜ்ஜியத்திலுள்ள முஸ்லீம்கள் எப்போதும்போல பிரிடிஷ் சிம்மாசனத்தின்மீது வைத்திருககும் ராஜபக்தியில் குறைவுபடுகிறதில்லை என்று உறுதி கூறியிருககிறார்கள். யுத்தம் இன்னும் நீண்டகாலம் ஒருக்கால் நடக்கக்கூடுமென்று சிலர் அபிப்பிராயம் கொண்டிருந்தபோதிலும்ஜெர்மனியர்களுடைய வியாபாரமுய ஆகாரசாமான்களும் பொருளாதார ஐவேஜியும் வரவரக்குறைவுபட்டுகொண்டு வருகிறபடியால் ஜெர்மனி வெகு சீக்கிரம் படிந்துபோய் யுத்தத்திலிருந்து தன்னைப் பின் வாங்கிக்கொள்ளுமென்று பல தெரிந்தவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். இன்னும் எத்தனை காலம் யுத்தம் நடந்தபோதிலும், வேறேயாதொரு நோக்கமுமின்றி "பெல்ஜியத்தைக் காப்பாற்றுகிறோம்" என்று கூறிய சத்தியவாக்கை நிறைவேற்றுவதற்காக சண்டைபோடும் நம்முடைய இங்கிலாண்டே முடிவில் ஜெயம்பெறுமென்பதில் சந்தேகமில்லை.

---

# *Lawyer and Client.*

## லாயரும் கக்ஷிக்காரனும்.

—:o:—

## MAINTENANCE OF A CHILD.

## ஒரு குழந்தையின் ஜீவனாம்சம்.

ருக்குமணி — அடியே சாரதா! இந்த அநியாயம் எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கிறாயடி! எத்தனை காலம் இப்படி கஷ்டப்படுகிறது! அந்த சண்டாளப்பாவிக்குக் கொஞ்சம்கூட இரக்கமில்லையே!

சாரதா — அண்ணி! என்ன ஜாடை சொல்லுகிறாய் என்று எனக்குத் தெரியவில்லையே! யாரைச் சண்டாளப்பயல் என்று சொல்லுகிறாய்! என்ன விசனப்படுகிறாய்!

ரு — யாரை அப்படித் திட்டப்போகிறேன்! எல்லாம் அவரைத்தான்!

சா — உன் புருஷனையா!

ரு — ஆம்.

சா — அது பழைய கதைதானே! இன்னமேயா ஒழுங்குபட்டு வரப்போகிறார்! இல்லை இல்லை. பரமசிவன் நேரேவந்து மத்தியஸ்தம் செய்தாலும் அவர் உனக்கு காலக்ஷேபத்திற்குக் கொடுக்கப்போகிறதில்லை.

ரு — அப்படியா அது! காலம் வந்தால் கொடுப்பார். நல்லதிருக்கட்டும்; அதோ அடுத்தவீட்டு ராமசாமி வருகிறான். அவன் ஏதோ ஒரு புஸ்தகம் கையில் எடுத்துக்கொண்டு வருகிறான். இந்த எளவு பேச்சைப் பேசுவதைப் பார்க்கிலும் அவனைவிட்டு அந்த புஸ்தகத்திலிருந்து ஏதேனும் ஒரு கதையை வாசிக்கச்சொல்லி கேட்போம், சாரதா!

சா — அப்படியே செய்வோம்.

(ராமசாமி வந்தான்.)

ரு — ராமசாமி! உன்னையல்லவோ நாங்கள் எதிர்பார்த்துக்கொண் டிருக்கிறோம்.

ராமசாமி — என்ன அவ்வளவு காரியம் என்னால் ஆகவேண்டியதிருக்கிறது.

ரு — வேறே ஒரு காரியமும் அல்ல. கையில் வைத்துக்கொண் டிருக்கிறாயே அந்தப் புஸ்தகத்தை வாசிக்கச்சொல்லி கேட்கலாமென்றே ஒழிய மற்றப்படி வேறில்லை. அது என்ன புஸ்தகம், ராமசாமி?

ரா — அது பாரதமல்ல, ராமாயணமல்ல, ஆனால் "உயிர்காப்போன்" என்னும் ஒரு புஸ்தகம்.

சா — ருக்மணி! பார்த்தாயா? நல்ல அதிசயமான பெயராக ராமசாமி சொல்லுகிறான் கேட்டாயா? ருக்குமணி.

ரு — ஆம் ஆம் அதிசயமான புஸ்தகம்தான்.

சா — அது என்ன புஸ்தகம்! அதற்கு உயிர்காப்போன் என்று பெயர் வருவானேன்!

ரா — சாரதா! நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லுகிறாயா?

சா — கூடியவரையில் சொல்லுகிறேன்.



ரா — அருள் இல்லாருக்கு அவ் வுலகமில்லை; பொருள் இல்லாருக்கு இவ் வுலகமில்லை என்று நீ கேள்விப்பட் டிருக்கிறாயா?

சா — கேள்விப்பட்டிருக்கிறேன். அது அனுபவத்திலும் சரியாய்தா னிருக்கிறது. பணம் இல்லாதவன் பிணமல்லவோ?

ரா — பணம் ஒருவனுக்கு யிருந்தால் அவன் உயிருடையவனாக விருக்கிறான். பணம் போய்விட்டால் உயிர்போய் பிரேதம்போலாகிறான். ஆதலால் பணத்தைக் காப்பாற்றும்படியான புஸ்தகமாக யிருக்கிறபடியால் உயிர்காப்போன் என்று இப்புஸ்தகத்திற்குப் பெயர் கொடுக்கப்பட் டிருக்கிறது.

ரு — அது என்ன அப்பேர்ப்பட்ட புஸ்தகம்?

ரா — அது "இந்தியாதேச சட்ட கெஜெட்" என்னும் பத்திரிகை.

சா — ஆம்! ஆம்! நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சட்ட சம்பந்தமான சகல விஷயங்களும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது. வெகுபேர் வியாஜ்ஜியமாடும் கக்ஷிக்காரர்கள் அதை வாங்கி வாசிக்கிறதுண்டு. அது சென்னப்பட்டணம் ஆச்சாரப்பன் தெருவு, 49ம் நெ. வீட்டில் ம-ா-ா-ஸ்ரீ ந. ராதாகிருஷ்ண நாயுடு கம்பெனியாரால் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகிறது.

ரு — நான் கேள்விப்பட்டதில்லையே!

சா — அந்த புஸ்தகத்தை வாசித்தால் உன் புருஷனைக்கூட வழிக்குக் கொண்டுவந்து விடலாம். அந்த புஸ்தகத்திற்கு "உயிர்காப்போன்" என்று பெயர் வைக்கப்பட் டிருக்கிறது சரியான பெயர். எத்தனை பேர்கள் அந்த புஸ்தகத்தால் பிழைத்து வருகிறார்கள் தெரியுமா?

ரு — ஆனால் ராமசாமி! அந்த புஸ்தகத்தால் எனக்கு ஏதேனும் வழி பிறக்குமோ?

ரா — கட்டாயம் வழி பிறக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் உனக்குள்ள குறை இன்னதென்று எனக்குத் தெரியவில்லை.

சா — என்ன அப்பா! நீ அடுத்த வீட்டுக்காரனாகவிருந்து இத்தனை நாளாக இந்த அட்டூழியத்தைக் கேட்டதில்லையா?

ரா — நான் கேள்விப்பட்டதில்லை. அடுத்த வீட்டுப் பேச்சு எனக்கு என்ன தெரியப்போகிறது.

சா — ருக்குமணியின் புருஷன் குழந்தை பிறந்த நாளாக ஒரு காசுகூட காலக்ஷேபத்திற்குக் கொடுக்கிறதில்லை. எத்தனையோ பேர்கள் அவருக்கு புத்திசொல்லியும் அவர் ஒரு காசுகூட கொடுக்கிறதில்லை.

ரா — இவ்வளவுதானா? இதோ இந்தியா தேச சட்ட கெஜெட்டைப் பார்த்து பதில் சொல்லுகிறேன்.

(புஸ்தகத்தைப் புறட்டிப் பார்க்கிறான்.)

ரா — சாரதா! ருக்குமணி அதிர்ஷ்டசாலி. புஸ்தகத்தை திறந்தவுடன் அந்த பாயின்டே அகப்பட்டது.

ரு — பெண் பாவம் எங்கே போகும்! அதை வாசித்துச் சொல்லு பார்ப்போம்!

ரா — வாசிக்கிறேன்! கேளுங்கள். "குழந்தையைப் பெற்ற பிதா அந்தக் குழந்தைக்கு ஜீவனாம்சம் கொடுத்து ஆதரிக்கக் கடமைப்பட்டவன். அப்படி ஆதரிக்காவிட்டால் கிரிமினல் புரோசீஜர் கோட் 488-வது பிரிவின்படி மாஜிஸ்டிரேட்டினிடம் பிரியாது கொடுக்கலாம்" இன்னும் ஒரு விசேஷமல்லவா?

ரு — அது என்ன?

ரா — இந்தியாதேச சட்டகெஜெட்டு ஆபீஸ்சொந்தக்காரர்களாகிய மெசர்ஸ் N. ராதாகிருஷ்ண கம்பெனியாரை யாரோ ருக்குமணிபோலொத்த மனம் நொந்துபோன ஸ்திரீ கேட்ட கேள்விக்கு அப்படி பதில் சொல்லி யிருக்கிறதாகத் தெரிகிறது.

ரு — ஆனால் நான் மாஜிஸ்டிரேட்டினிடம் போய் நேரில் சொன்னால் என் புருஷனைக் கூப்பிட்டு விசாரணை செய்வாரா?

சா — ருக்குமணி! உன்னைப்போல கர்னாடக மனுஷி பயித்தியக்காரி இந்த வுலகத்தில் வேறெவருமில்லையடி. லாயரிடம் போய்ச் சொல்லி கோர்ட்டில் மனுகொடுத்தல்லவோ ஆகவேணும்.

ரா — ஆம்! ஆம்! அது வாஸ்தவம்தான்.

சா — மேலும் ருக்குமணி புருஷன் சாமானியமானவனா? வள்ளாள கண்டனாச்சே! ருக்குமணி விபசாரி ஆகையால் அவளுக்கு நான் ஜீவனாம்சம் கொடுக்கப்போகிறேனா என்று வீடுவீடாய் புகுந்து பாட்டுப் பாடிக்கொண்டு வருகிறவனா சும்மா விட்டுவிடுவான்!

ரா — ஆம்! ஆம்! லாயரண்டை போய்த்தான் இந்தக் காரியம் ஆகவேண்டும்!

ரு — லாயரிடம் போனாலா காரியம் சீக்கிரம் கைகூடும். இந்த ஜென்மத்திலில்லை. வைத்தியன், மந்திரவாதி, லாயர் இவர்களிடம் போனால் எறிகிற வீட்டில் பிடுங்கின்து லாபம் என்று நினைத்து சுய காரியத்தைப் பார்ப்பார்களே ஒழிய நம்முடைய காரியம் கைகூடப் போகிறதில்லை. வைத்தியனிடம் தலை நோகிறதென்று கையைக் காட்டினால் போதும், வலது பக்கத்தில் ஒரு

சார்பாக வாயு தங்கி யிருக்கிறது. வில்வாதி லேகியமும், ஈஸ்வர சிந்தாமணி செந்தூரமும் ஒரு மண்டலம் சாப்பிட்டாலொழிய பச்சை வாதம் ஒரு பக்கத்து காலையும் கையையும் இழுத்துப் போடுமென்று பயமுறுத்தி இரண்டு வராகன் கொடு என்று அதிகாரமாகக் கேட்பான்! குழந்தைக்கு விபூதி போடு என்று மந்திரவாதியிடம் போய்ச் சொன்னால் வேப்ப மரத்திலிருக்கு முனி பிடித்திருக்கிறது என்று முனியை ஓட்ட ரூபாய் 3-ம் 3கோழியும் 5எலு மிச்சம்பழங்களும் கேட்பான்! ஒரு அற்ப கேசிற்காக லாயரிடம்போனால் மாஜிஸ்டிரேட்டு ஐந்து ரூபாய் அபராதம் போடுகிற கேசுக்கு ரூ. 500 போடுவார் என்று மிறட்டி 50 ரூ. பீசு கொடுத்தால் ஆற்று மணலை கயிறாகத் திரித்துப் போடுவேன் என்று ஆசை வார்த்தை காட்டுவார்.

ரு — ருக்குமணி! நல்லதிருக்கட்டும். இந்த உலகத்தில் எந்தெந்த தொழிலிலும் நல்லவர்களு மிருக்கிறார்கள்! கெட்டவர்களு மிருக்கிறார்கள்! யோக்கியர்களைப் பார்த்து பொறுக்கி எடுத்து கேசை ஒப்புவித்தால் நாம் மோசம்போகமாட்டோம்!

சா — நம்முடைய ஊர் தெற்குமாட வீதியில் ஒரு லாயர் புதிதாக வந்திருக்கிறார் என்றும். யோக்கியர் என்றும், அதிக பீசு கேட்கமாட்டாரென்றும் என்னுடைய சித்தப்பா சொல்லிக்கொண்டிருந்தார். அவரை எனக்கும் தெரியும். நாம் எல்லோரும் போவோம் வாருங்கள்.

(லாயர் வீட்டிற்குப் போகிறார்கள்.)

பிச்சைக்காரன் — ஆரோகரா! மகாதேவா! வடிவேல்! முருகய்யா! அமுது போடுங்களம்மா! நந்தவனத்தில் ஒரு ஆண்டி — அவன் நாளாறு மாதமாய்க் குயவனை வேண்டி—கொண்டுவந்தான் ஒரு தோண்டி—கூத்தாடிக் கூத்தாடி போட்டு உடைத்தாண்டி தினதந்தின தந்தினா? அமுது போடுங்களம்மா!

காவல்காரன்—ஏ! ஆண்டி! இதுவீடா? ஆபீசு அல்லவோ? இங்கே பாட்டுப்பாடினால் தஸ்தாவேஜி கட்டுதான் அகப்படும்! விலகிப்போ! பாதையில் நிற்காதே! கக்ஷிக்காரர்கள் வருகிறார்கள்! வா சாரதா! என்ன விசேஷம்!

சாரதா — அய்யாவை பார்க்கவேணும்! ஒரு கேஸ் கொடுக்கவேணும்!

கா — ஓடுமீன் ஓட ஒரு மீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு என்பதுபோல காத்துக் கொண்டிருக்கிறோமே! நல்லது அய்யா ரங்கப்பத்தரிடம் பேசிக்கொண்டிருக்கிறார். இதோ போய் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்று நான் சொல்லுகிறேன்.

லாயர் — அடே! செங்கல்ராவ் எங்கே உள்ளே வந்தாய்? யாரேனும் கக்ஷிக்காரர்கள் வந்திருக்கிறார்களோ?

கா — ஆம்! ஸ்வாமி! அடுத்த தெருவு சாரதாவும் ருக்குமணியும் வந்திருக்கிறார்கள். அவர்களுடன் கூட ஒரு சிறுபிள்ளையாண்டானும் வந்திருக்கிறான்.

லா — உள்ளே வரச்சொல்லு.

(சாரதாவும் ருக்குமணியும் கும்பிடுகிறார்கள்.)

லா — உட்காருங்கள்! ரங்கப்பத்தரை அனுப்பி விட்டு நீங்கள் வந்திருக்கும் காரியத்தைக் கேட்கிறேன்.

சா — அப்படியே செய்யுங்கள் ஸ்வாமி அவசரப் படவேண்டாம்.

லா — ரங்கப்பத்தரே! உம்முடைய ரிக்கார்டை வாங்கிக்கொண்டேன். ரூ. 50 பீஸ் கேட்டேன். பாதி ரூபாய் இப்போது அட்வான்சு கொடுத்துவிட வேண்டும். பாக்கி பாதியை ஈராங்கி தினம் கொடுத்துவிடவேண்டும். எடும்பணத்தை நாழி ஆய்விட்டது.

ரங்க — எல்லாம் கேசை தாக்கல் செய்யுங்கள். நான் எங்கே ஓடிப்போகிறேன். வேலை நடக்கட்டும்.

லா — நல்லகாரியம் சொல்லுகிறீர் அட்வான்சு இல்லாமல் கேசை பயில் செய்யும்படி சொல்லுகிறீர். வல்லத்து தண்ணீரிலே வலங்கமான் பருப்பு வேகாதய்யா! அதுவும் நீர் தட்டாரப் பிள்ளையல்லவோ நீர்.

ரங்க — என்ன! ஸ்வாமி தட்டான் என்றால் அவ்வளவு இளப்பமா?

லா—இந்த ஜாதியில் எவ்வளவோ பேர்கள் யோக்கியர்களிருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இவருடைய செய்கையால் அந்த ஜாதியின்பேரில் பொதுவாய் ஒரு பாட்டுப் பாடப் பட்டிருக்கிறதே தெரியுமா?

ரங்க — ஸ்வாமி! அந்தப் பாடலைச் சொல்லுங்கள் பார்ப்போம்!

லா—உமக்கு கோபம் வந்து விட்டால் நான் என்ன செய்கிறது.

ரங்க—தமாஷாய் பேசுகிறபோது கோபம் எதற்காக வரவேணும் பாதகமில்லை சொல்லுங்கள் அந்தப் பாடலை.

(இன்னும் வரும்.)



# MADRAS HIGH COURT.
## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

—:o:—

### SEPTEMBER & OCTOBER DECISIONS.
### செப்டெம்பர், அக்டோபர் மாதத் தீர்ப்புகள்.

---

ஜட்ஜிகள்:— { ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங் / ஜட்ஜி மிஸ்டர் ஹானே }

இரண்டாவது அப்பீல் நெ. 1010 of 1913.

தீர்ப்பு:—ஒரு கூட்டு வியாபாரப்பிரிவினை முடிவு செய்யப்பட்டபிறகு கூட்டு பாகஸ்தர்களில் எவரேனும் ஒருவன் கூட்டு வியாபாரத்தால் உண்டான கடனுக்கு மற்ற பாகஸ்தர்களுடைய உத்திரவின்றி எழுதிக்கொடுத்து அவர்களைக் கட்டுப்படுத்தக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. (16-9-1914.)

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் B. சீதாராமராவும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்: { சீப் ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ் / ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங் / ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் }

சிவில் ரிவிஷன் மனு நெ. 186 of 1913.

தீர்ப்பு:—ஒரு பிராமிசரி நோட்டை எண்டார்ஸ்மெண்டு செய்து வாங்கினவன் வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். அந்தப் பிராமிசரி நோட்டில் டார்வாட் குடும்பத்தின் கர்னவனாகிய A. B. என்பவனால் எழுதிக் கொடுக்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கையெழுத்துப் போடுமிடத்தில் "டார்வாட் குடும்பத்தின் கர்னவன் A B" என்று போடப்படாமல் "A B" என்று மட்டிலும் போடப் பட்டிருந்தது. டார்வாடு குடும்பச் சொத்தின் பேரில் டிக்கிரி பெற்றுக்கொள்ள வாதிக்கு பாத்திதை கிடையாதென்றும் A. B. என்பவனுடைய சொந்த சொத்தின்பேரில் மட்டிலும் டிக்கிரி பெற்றுக்கொள்ள பாத்திதை யுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. (21-9-1914.)

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C. V. மாதவநாயரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:— { ஜட்ஜி மிஸ்டர் ஓல்ட்பீல்ட் / ஜட்ஜி மிஸ்டர் டையாப்ஜி }

சிவில் மிசிலேனியஸ் அப்பீல் நெ. 226 of 1913.

பாகப் பிரிவினைக்காக கொண்டுவரப்பட்ட ஒரு வியாஜ்ஜியத்தில் வாதிக்கு பிரியாதின் ஷெடியூலில் கண்ட ஒவ்வொரு சொத்தில் சரி பாதிக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டது. ஆனால் அந்த டிக்கிரியில் இன்னபாதி வாதிக்குச் சேரவேண்டியதென்று சொல்லப் படவில்லை. வாதி இந்த டிக்கிரியை நிறைவேற்ற மனு செய்துகொண்டார். கோர்ட்டார் முடிவான டிக்கிரி பிறப்பிப்பதற்கு முந்தி வாதி டிக்கிரியை நிறைவேற்ற பாத்தியமற்றவன் என்று பிரதிவாதி கக்ஷி சொன்னார். கீழ்க் கோர்ட்டார் இந்தக் கக்ஷியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஐக்கோர்ட்டு அப்பீலில் கீழ்க் கோர்ட்டார் முடிவான டிக்கிரி கொடுத்ததற்குப் பிந்தி வாதி டிக்கிரியை நிறைவேற்ற வேண்டுமென்று தீர்ப்பு சொன்னார்கள்.

(21-9-1914.)

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் M. B. துரைசாமி அய்யங்காரும் பேசினார்கள்.

---

ஜட்ஜிகள்:— { ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங் / ஜட்ஜி மிஸ்டர் ஹானே }

இரண்டாவது அப்பீல் நெ. 1120 of 1913.

தீர்ப்பு:—ஒரு விடுதலை ஆதரவை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதி ஒரு ஸ்தாபர சொத்திற்குப் பாததியம் பாராட்டி வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். விடுதலைப் பத்திரம் எழுதிக்கொடுத்தவன் ஷை சொத்தில் தனக்கிருந்த பாத்திதை எல்லாம் விட்டுவிட்டான் என்று ருஜுப்பட்டது. ஒரு மூன்றாவது மனிதனுக்கும் வாதிக்கும் நடந்துவரும் ஒரு வியாஜ்ஜியத்தில் ஷை ஆதரவு கிரையசாசனம் போல வலுவுடையதாக விருக்கமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

(22-9-1914.)

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் A. கிருஷ்ணசாமி அய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜிகள்:— { சீப் ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ் / ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் }

அப்பீல் வியாஜ்ஜியம் நெ. 188 of 1911.

தீர்ப்பு:— கவர்ன்மெண்டு ஜலம் பாயும் இனாம் நிலங்கள் தண்ணீர் தீர்வை செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டிருக்கின்றன. இதற்கென்று ஒரு வெளிப்படையான எகிரிமெண்டு இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. எவ்வளவு விஸ்தீரணத்திற்கு தண்ணீர்த் தீர்வை கிடையாதென்பதை ருஜுப்படுத்த இனாம் மூல ஆதரவு முடிவான சாக்ஷியமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் P. R. கணபதி அய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர் நன்ஜன்ட் கிரான்டும் ஆஜரானுர்கள்.

---

ஜட்ஜிகள்:— { சீப் ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் }

அப்பீல் வியாஜ்ஜிய நே. 239 of 1911.

தீர்ப்பு:— முகமதியச் சட்டத்தின்படி தாயார் மைனர் புதகிரனுடைய சொத்துக்கு கார்டியனுக விருக்கிறபடியால் அவளால் கொடுக்கப் பட்ட ஒரு விடுதலைப்பத்திரம் லிமிட்டேஷன் ஆக்ட் 44-வது பிரிவின்படி ரத்து செய்யப்படவேண்டியது அவசியம் என்று தீர்மானிக்கப்பட்டது.

அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் T. R. ராமச்சந்திர அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் T. ராமச்சந்திர அய்யரும் ஆஜரானுர்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர்
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்

இரண்டாவது அப்பீல் நே. 542 of 1913.

தீர்ப்பு:—ஒரு ஆதரவில் நெட்டெழுத்து அதாவது பத்திரத்தை எழுதினதாக கையெழுத்து செய்த ஒருவன் பத்திரத்திற்கு சாக்ஷியாகவும் எண்ணப்படக்கூடும். ஆனுல் அந்த ஆதரவில் சொல்லப்பட்ட விஷயங்களை அவன் நேரில் தெரிந்துகொண்டு கையெழுத்து செய்திருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. S. கோவிந்தாச்சாரியும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் M. பதஞ்சலி சாஸ்திரியும் ஆஜரானுர்கள்.

---

ஜட்ஜிகள்:— { சீப் ஜட்ஜி வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டா ஏய்லிங்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் }

தீர்ப்பு:—ஒரு சொத்தை கிரையம் பெறுவதாக A-என்பவன் B-என்பவனுடன் ஒப்பந்தம் செய்து அட்வான்சு பணம் செலுத்தினன். ஒப்பந்தத்தைத் தவறினல் அட்வான்சு பணத்தை இழந்துவிடுகிறதென்றும், நஷ்டம் வேறே கட்டிக்கொடுக்கிறதென்றும் இருதரப்பாரும் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். A-என்பவன் ஒப்பந்தப்படி கிரையம் பெற்றுக்கொள்ள தவறிப்போய்விட்டான். B-என்பவன் ஒப்பந்தத்தை மீறினதற்காக நஷ்ட தாவா கொண்டுவந்தான். ஒப்பந்தத்தை மீறி நடந்தால் அட்வான்சு பணத்தை இழந்துவிடுகிறதென்றும், நஷ்டமும் கட்டிக்கொடுக்கிறதென்று A-என்பவன் எழுதிக் கொடுத்திருந்தபோதிலும் நஷ்டத் தொகையிலிருந்து அட்வான்சு கட்டின தொகையைக் கழித்துக்கொள்ள பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் S. வரதாச்சாரியும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. R. சுப்பிரமணிய அய்யரும் ஆஜரானுர்கள். (24-9-1914.)

---

ஜட்ஜிகள்:— { ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்
ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர் }

தீர்ப்பு:—பிதாவும் புத்திரனும் கூடிய சேர்ந்த இந்து குடும்பத்தின் தகப்பன் அவசியமில்லாமல் குடும்பச் சொத்தைப் பராதீனம் செய்ய எகிரிமெண்டு எழுதிக்கொடுத்தான். விற்பனை செய்வது அவசியம் என்று ருஜுப்படவில்லை. இந்த உடன்படிக்கை ஊர்ச்சிதப் படுத்தப்படக் கூடியதல்லவென்று தீர்மானிக்கப்பட்டது.

அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் T. V. வெங்கட்ரும அய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் T. பிரகாசமும் ஆஜரானுர்கள்.

---

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி }

இரண்டாவது அப்பீல் நே. 2112 of 1913.

தீர்ப்பு:— ஸ்வாதீன அடமானம் பெற்றுக்கொண்ட ஒருவன் உட்குத்தகை ஒப்புக்கொண்டவனுக லோக்கல் போர்ட் ஆக்ட் 73-வது பிரிவின்படி எண்ணப்படவேண்டுமென்றும் லோக்கல் போர்டுக்குச் செலுத்தப்படவேண்டிய வரிகளை செலுத்த அவன் பாத்தியம் உடையவன் என்றும் குடிகளிடமிருந்து அவன் வசூல் செய்துகொள்ள பாத்தியமுடையவன் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் K. சீனிவாசய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் B. நரசிம்மராவும் ஆஜரானுர்கள்.

---

ஜட்ஜிகள்:— { ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்
ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சா }

அப்பீல் நே. 252 of 1911.

தீர்ப்பு:—சேர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் பாகப்பிரிவினை செய்யப்படக்கூடாத ஒரு எஸ்டேட்டிற்கு பாத்தியம் பாராட்டி வியாஜ்ஜியமாடி தோற்றுப்போய் விட்டான். வியாஜ்ஜியச் செலவுகளுக்கா குடும்பச் சொத்துகளில் ஒன்றைப் பராதீனம் செய்தான். இந்தப் பராதீனம் குடும்பத்திற்கு நன்மையைக் கொடுக்கக்கூடியதாய் இல்லாததால் குடும்பத்தையும் மற்ற பாகஸ்தர்களையும் கட்டுப்படுத்த மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.



அப்பீல் வாதிக்காக மிஸ்டர் S சீனிவாசய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும் ஆஜரானுர்கள். (9-10-'14)

---

ஜட்ஜிகள்:— { ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்
ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங் }

அப்பீல் நே. 216 of 1911.

தீர்ப்பு:—பாகப் பிரிவினை செய்யப்படக்கூடாத எஸ்டேட்டின் ஜெமீன்தார் இளைய மெம்பருக்கும் அவருடைய வார்சுகளுக்கும் சாஸ்வதமாய் காலக்ஷேபத்திற்காக ஒரு குறிப்பிட்ட தொகை கொடுத்துக்கொண்டு வருவதாக எஸ்டேட்டைக் கட்டுப்படுத்தி ஆதரவு எழுதிக்கொடுக்க அருகுடையவர் அல்ல. அப்படி பராதீனம் செய்வது டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட்டின் ஷரத்துகளுக்கு நேர் விரோதம்.

அப்பீல் வாதிக்காக மிஸ்டர் S. சீனிவாசய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிக்காக கோவிந்தராகவய்யரும் ஆஜரானுர்கள். (6-10-1914.)

---

# Rulings of other High Courts.

# மற்ற ஐக்கோர்ட்டுகளுடைய தீர்ப்புகள்.

—:o:—

## CALCUTTA HIGH COURT.

## கல்கத்தா ஐக்கோர்ட்டு.

---

பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்வதற்கு அனுமதி கேட்கும்பொருட்டு செய்து கொள்ளப்படும் மனு எந்த டிக்கிரிக்கு விரோதமாக அப்பீல் செய்து கொள்ளப்படப்போகிறதோ அந்த டிக்கிரியினுடைய நகல் வாங்குவதற்குப் பிடித்த காலத்தை நீக்கி டிக்கிரி பிறந்த தேதியிலிருந்து 6-மாத காலத்திற்குள்ளாக செய்து கொள்ளப்பட்டால் அந்த மனு காலாவதி தோஷத்திற்குள்ளாகாது என்று கல்கத்தா ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 18 C. W. N. 1066.

---

ஒரு முகமதிய மைனர் பெண்ணின் தமக்கையின் புருஷன் அந்த மைனருக்குத் தகுந்த கார்டியனல்ல. அம்மான் (தாய்வழி சிறிய தகப்பன்) தகுந்த கார்டியனுகிருன். எந்த ஆண்பிள்ளையும் அந்த மைனர்ப் பெண்ணைத் தன்னுடைய வசத்தில் வைத்திருக்க பாத்திய மற்றவன். ஆனுல் (Mahram) மகா பந்துவாயிருந்து எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவளை விவாகம் செய்து கொள்ளக்கூடாத பந்துவாயிருந்தால் அப்பேர்ப்பட்டவன் அந்த மைனரை அவன் வசத்தில் வைத்துக் கொண்டிருக்கலாம். I. L. J. 1038

---

ஒரு வியாஜ்ஜியம் விசாரணை செய்யப் படுவதற்காக ஐக்கோர்ட்டாரால் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டிற்கு அனுப்பப்பட்டது. இப்படி அனுப்பப்பட்ட பிறகு ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் அந்த வியாஜ்ஜியத்தை விசாரணைக்காக சப் கோர்ட்டாருக்கு அனுப்பினுர்கள். இப்படி ஐக்கோர்ட்டார் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருக்கு அனுப்பியதில் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாரே அந்த வியாஜ்ஜியத்தை, விசாரணை செய்ய வேண்டு மென்பது ஐக்கோர்ட்டாருடைய எண்ணமாயிராவிட்டால் ஜில்லா ஜட்ஜி வியாஜ்ஜியத்தைச் சப் ஜட்ஜிக்கு மாற்றினது சட்ட சம்மதமான மாற்றல் என்றும் இருகக்ஷிக்காரர்களும் சப் ஜட்ஜியின் விசாரணைக்கு சம்மதித்திருப்பதாலும் ஜில்லா ஜட்ஜி சப் ஜட்ஜிக்குக் கேசை மாற்றினது சட்ட விரோதமாக மாட்டாதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வாதியின் நிலத்தைப் பிரதிவாதி குத்தகை எடுத்துயிருக்கும்போது வாதி திரும்பிப் பெற்றுக்கொள்ள விரும்பும் மற்றொரு நிலம் பிரதிவாதியினுடைய நிலத்தில் சேர்ந்திருக்கவில்லை என்று ருஜுப்படுத்த வேண்டிய பொறுப்பு வாதியினுடையதல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. குத்தகை விட்டவன் நிலத்தைக் குத்தகைக்குவிட தனக்கு அதிகாரமிருக்கிறதென்று தவறுதலாகச் சொன்னதின்பேரில் குத்தகை எடுத்தவன் நிலத்தை குத்தகைக்கு ஒப்புக்கொண்டான். டிரான்ஸ்பர் ஆப் பிராப்பர்ட்டி ஆக்ட் 48-வது பிரிவின்படி குத்தகை எடுத்தவன் குத்தகை விட்டவன்கீழ் நிலத்தை உடைத்தாயிருக்க பாத்தியம் உடையவன்என்று தீர்மானிக்கப்பட்டது. 18 I. L. J. 1047.

---

கடனின் ஒரு பாகத்திற்காக வார்சு செர்ட்டிபிகேட் பிறப்பிக்கப்படலாமென்று தீர்மானிக்கப்பட்டது. 18 I. L. J. 1065.

---

பின்பு பிறந்த ரெஜிஸ்ட்டர் செய்யப்பட்ட ஆதரவை ஆதாரமாகக்கொண்டு பாத்தியம் பாராட்டும் ஒருவனுக்குமுந்தி ஒரு ரெஜிஸ்டர் செய்யப்படாத ஆதரவு பிறந்திருக்கிறதென்று தெரிந்திருந்தால் இப்பேர்ப்பட்ட கேசிற்கு இந்தியன் ரெஜிஸ்டிரேடின் ஆக்ட் 50-வது பிரிவு பொருந்தாது என்றும் முந்தி ஒரு ஆதரவு பிறந்து ரெஜிஸ்டர் செய்யப்படாமலிருக்கிறதென்று அவனுக்குத்

தெரியுமென்று எவன் கக்ஷிசொல்லுகிருனே அதை ருஜுப்படுத்தவேண்டிய பொறுப்பு அவனுடையது என்று தீர்மானிக்கப்பட்டது. 18 I. L. J. 802.

---

முதல் கோர்ட்டார் முடிவு செய்த தீர்மானத்திற்கு நேர்விரோதமாக முடிவு செய்வதற்குப் பிரத்தியேகமான காரணங்களிருக்கின்றன என்று முதல் அப்பீல் கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால் அசல் கோர்ட்டு தீர்ப்பில் சொல்லப்பட்ட காரணங்களை ஒவ்வொன்ருய் தங்களுடைய தீர்ப்பில் எடுத்துச் சொல்லி அதற்கு ஆக்ஷேபனை சொல்லவேண்டுமென்பது அவசியமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. 18 I. L. J. 849.

---

ஒருவருக்கு அல்லது ஒருவருடைய உத்திரவுக்காவது எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு பிராமிசரி நோட்டு எண்டார்ஸ்மெண்டு செய்து கொடுக்கப்படாமல்188-ம்வருடத்தியநெகோஷியபில் இன்ஸ்டிருமெண்டு ஆகட் 48-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடியாகவும் டிரான்ஸ்பர் செய்யப்படலாம் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

பிரதிவாதி N - என்பவனுக்காவது அல்லது N என்பவனுடைய உத்திரவு பெற்றவனுக்காவது ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்திருந்தான். N-என்பவன் ஒரு ஸ்வாமியின் நன்மைக்காக அந்தப் பிராமிசரி நோட்டை அதன் பூஜாரியிடம் கொடுத்தான். ஆனுல் யாதொரு எண்டார்ஸ்மெண்டும் செய்யாமல் கொடுத்தான். பூஜாரிதன் பெயரால் தொகையைப் பெறுவதற்கு பிரதிவாதியின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தான்.

(1) பிராமிசரி நோட்டு சட்டப்படி டிரான்ஸ்பர் செய்யப்படவில்லை என்று தீர்மானிக்கப்பட்டது.

(2) பிராமிசரி நோட்டு டிரான்ஸ்பர் செய்யப்பட்டதற்கு எழுத்து மூலமான சாக்ஷிய மில்லாதபடியால் டிரான்ஸ்பர் செலாவணியாக மாட்டாது; எண்டார்ஸ்மெண்டு செய்யப்படாமல் செய்யப்பட்ட டிரான்ஸ்பர் நியாயமான (Equitable) டிரான்ஸ்பர் என்று சொல்ல முடியாது. ஏன் என்ருல் நோட்டு போதுமான பரிகாரப்பணம் பெற்றுக்கொள்ளாமல் டிரான்ஸ்பர் செய்யப்பட்டிருக்கிறது என்று தீர்மானிக்கப்பட்டது.

பிரஸ்தாப டிரான்ஸ்பர். டிரான்ஸ்பர் ஆப்பிராப்பாட்டி ஆகட் 123-வது பிரிவின்படி செலாவணியாகக்கூடிய தானம் என்று சொல்லமுடியாது.

பிராமிசரி நோட்டு வாதி பெயரால் எழுதிக் கொடுக்கப்படாதபடியால் அவர் பெயரால் வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்திய மற்றவர் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜட்ஜி மிஸ்டர் காரன்டம்:—வாதி நோட்டின் பணத்தை வசூல் செய்வதற்கு முந்தி, பிராமிசரி நோட்டை எழுதிக் கொடுத்தவன் இறநது போய் விட்டபடியால் அவனுடைய சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியிடமிருந்து எண்டார்ஸ்மெண்டு எழுதி வாங்கி யிருக்கவேண்டும்.

ஜட்ஜி மிஸ்டர் ரிச்சர்ட்சன்:—பிராமிசரி நோட்டை டிரான்ஸ்பர் பெற்றுக்கொண்டிருப்பவன், எவன் பெயரால் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவனையாவது அல்லது அவனுடைய சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியையாவது வழக்கம்போல எண்டார்ஸ்மெண்டு செய்து கொடுக்க கட்டாயப்படுத்த பாத்தியமுடையவன். 18 I. L. J. 550.

---

ஒருபாக வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டு வரும்போது கோர்ட்டார் சாதாரணமாய் ஒரு ரிசீவரை நியமிப்பார்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. கூட்டுபோகஸ்தர்களில் ஒருவன் தாவாச் சொத்தை உடைத்தாயிருந்தால் கோர்ட்டார் அடியிற் சொல்லப்பட்ட நான்கு காரியங்களில் ஒன்றைச் செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது. (1) அந்த கூட்டு பாதஸ்தனையே கோர்ட்டார் ரிசீவராக நியமித்து அவனிடமிருந்து ஜாமீன் தொகை வாங்கிகொள்ளலாம். (2) மற்ற பாகஸ்தர்களுக்கு அலவுன்ஸ் கொடுக்கும்படியாக அவனுக்கு உத்திரவு செய்யலாம்.

(3) வாதியின் பாகத்திற்கு மட்டிலும் கோர்ட்டார் ரிசீவர் நியமிக்கலாம். (4) முழு எஸ்டேட்டிற்கும் ரிசீவர் நியமிககலாம்.

கக்ஷிக்காரர்களில் ஒருவன் சகஜமாக ரிசீவராக நியமிக்கப்படவேண்டியதாயிருந்தால் மிகவும் தகுந்த காரணங்களிருக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 18 I. L. J. 550.

---

ஒரு சக்கார் உத்தியோகஸ்தன் அவனுடைய உத்தியோக கடமைகளைச் செய்கையில், அவன் செய்தது சட்டப்பிரகாரம் முழுதிலும் நியாயம் என்று சொல்லக்கூடாததாக விருந்தபோதிலும் அல்லது அவன் எந்த பெரிய ஆபீசருடைய உத்திரவின்பேரில் அந்தக் கடமையைச் செய்தானே அந்த உத்திரவே பிசகாகவிருந்தாலும்சரி அவனை அடித்துப்போட்டு இ. பி. கோ. 99-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் தற்காப்பு சுதந்தரக்(Rights of Private Defence) கக்ஷிசொல்லக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. 18 I. L. J. 566.

---



## ALLAHABAD HIGH COURT.

## அலகாபாத் ஐகோர்ட்டு.

---

### Easement Right.

### ஈஸ்மேன்டு பாத்திதை.

மேட்டு பூமிக்குச் சொந்தமானவன் அந்த பூமியின்பேரில் இயற்கையாகவிழும் மழை ஜலத்தை அதற்கு மட்டமான பூமியில் விடுவதற்குள்ள பாத்திதை இயற்கையான பாத்திதையே ஒழிய அனுபோகத்தின்பேரில் உண்டான பாத்திதையல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. தாழ்ந்த பூமியில் வசிக்கும் மனிதன் மேட்டு பூமியிலிருந்து விழக்கூடிய மழை ஜலம் போகுவதற்கு வழியில்லாதபடி தன்னுடைய நிலத்தில் ஒரு கட்டடம் கட்டிவிட்டால், மேட்டு பூமியில் விழும் மழை ஜலம் கீழே போகும்படி பள்ள பூமியிலிருப்பவன் வழி செய்து கொடுக்கும்படியாக மட்டிலும் மேட்டு பூமியிலிருப்பவன் டிக்கிரி பெற்றுக்கொள்ளப் பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. 12 A. L. J. 685.

---

### SUIT FOR PARTITION.

### பாக வியாஜ்ஜியம்.

ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சகோதரன் மற்ற இரண்டு சகோதரர்கள் பேரில் குடும்பச் சொத்தைப் பாகப்பிரிவினை செய்வதற்காக ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். குடும்பச் சொத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு வாதிக்கு கோர்ட்டார் டிக்கிரி கொடுத்தார்கள்.

ஆனுல் எப்படி பாகப் பிரிவினைச்செய்து கொள்ளுகிற தென்பதைப் பற்றி டிக்கிரியில் யாதொன்றும் சொல்லப்படவில்லை. கோர்ட்டார் கொடுத்த பிரஸ்தாப டிக்கிரி ஆரம்ப டிக்கிரி என்று தீர்மானிக்கப்பட்டது. 12 A. L. J. 69?.

---

### BENAMIDAR.

### பேயர் இரவல் கோடுத்தவன்.

பெயர் இரவல் கொடுத்தவன்பேரில் கொடுக்கப்பட்ட டிக்கிரி உண்மையான சொந்தக்காரனையும் கட்டுப்படுத்தும்; எப்போது கட்டுப்படுத்துமென்ருல் (1) உண்மையான சொந்தக்காரன் முன்னுக்கு வந்திருக்கக்கூடாது (2) பெயர் இரவல்காரன் நடத்தின வியாஜ்ஜியம் அவனுக்கு முழுதிலும் தெரிந்திருக்கவேண்டும் அவன் சம்மதமும் கொடுத்திருக்கவேண்டும். 12 A L. J. 701.

---

### COURT FEES.

### கோர்ட்டு பீஸ்.

வாதி ஒரு பிரியாதுக்குப் போதுமான கோர்ட்டு பீஸ் ஒட்டவில்லை என்று முதல் கோர்ட்டார் பாக்கிப்பட்ட ஸ்டாம்பை ஒட்டும்படி வாதிக்குக் காலம் கொடுத்தார்கள். கோர்ட்டார் சட்டப்படி தங்களுடைய சொத்தைப் பிரயோகப் படுத்தவில்லை என்று சொல்வதற்கு யாதொரு காரணமுமில்லை. பிரியாது தாக்கல் செய்யப்படும்போதே வாதி போதுமான கோர்ட்டு பீஸ் ஸ்டாம்பு ஒட்டவில்லை என்கிற ஒரே காரணத்திற்காக அப்பீல் கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடிசெய்தது நியாயமல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. 12 A. L. J. 709.

---

### SUIT BY REVERSIONERS.

### அனந்தரவார்சுகள் கோண்வேந்த வியாஜ்ஜியம்.

ஒரு இந்து விதவை அப்போதிருக்கும் அனந்தரவார்சுகளுடைய சம்மதத்தினுடன் அவசியமான காரணத்தை முன்னிட்டு குடும்பச் சொத்தைப் பாராதீனம் செய்ய பாத்திய முடையவள் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஒரு பராதீனம் 1863-ல் அனந்தரவார்சுகளுடைய சம்மதத்தின் பேரில் விதவையால் செய்யப்பட்டது. வாதிகள் வெகு காலம்வரையில் அதை ஆக்ஷேபிக்கவில்லை. இப்படி ஆக்ஷேபிக்காமலிருந்ததே பராதீன ஏற்பாடு நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டிருக்கிறதென்றும் அந்தப் பராதீனம் செலாவணியாகக்கூடிய அவசியமான சந்தர்ப்பங்களுடன் செய்யப்பட்டதென்பதற்கு போதுமான சாக்ஷியம் என்று தீர்மானிக்கப்பட்டது.

1863-ல் ஒரு இந்துவிதவை தன்னுடைய இறந்துபோன புருஷனுடையவும்அப்போது அபாயகரமான நிலைமையிலிருந்த 60வருடத்திற்கு இஜாரா அல்லது குத்தகைக்கு விட்டனள். அப்போது குடும்ப விஷயமாகவும் ஒரு செட்டில்மெண்டு செய்தாள். இந்த இஜாரா ஏற்பாடு ஷை குடும்பசெட்டில்மெண்டின் ஒரு பாகமாயிருந்தது. குடும்ப விஷயமாக என்ன ஏற்பாடு செய்தாள் என்ருல் குடும்பசொத்தை அனந்தரவார்சுகளுக்கு பங்கு போட்டு தனக்கு ஒரு உபாய வருமானத்தை ஜீவனும்சமாக வைத்துக்கொண்டனள். அவள் பங்கிட்டதில் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா கிளைகளிலுமிருந்த மெம்பர்களுக்கும் பங்கு கிடைக்கும்படியாக பங்கிட்டாள். அனந்தரவார்சுகளில் ஒருவன் 1882-ல் இறந்து போனுன் 1893-ல் அவனுடைய புத்திரர்கள் ஷை இஜாராவை ரத்துசெய்து வைக்க வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள்.

இஜாரா ஏற்பாடு உள்பட விதவைசெய்த செட்டில்மெண்டு அவசியத்தை முன்னிட்டு உண்மையில் நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. எஸ்டேட்டின் நன்மையை உத்தேசித்து இஜாரா 60-வருஷத்திற்கு விடப்பட்டிருக்கிறதென்றும் ஆகையால் இந்த இஜாரா அனந்தரவார்சுகளை கட்டுப்படுத்துமென்று தீர்மானிக்கப்பட்டது. 12 A. L. J. 711. - (இந்த தீர்ப்பு பிரிவி கவுன்சிலால் ஜாரி செய்யப்பட்டது.)

---

## A VERBAL ORDER TO PRODUCE BOOKS.

### புஸ்தகங்களை ஆஜர்படுத்த வாய்மொழியான உத்திரவு.

ஒரு இன்சால்வென்ட்டு அவனுடைய புஸ்தகங்களைக் கொண்டுவந்து தாக்கல் செய்யும்படியாக ஒரு ஜட்ஜி வாய்மொழியாக உத்திரவு செய்தார். இன்சால்வென்ட்டு ஆஜர்படுத்தவில்லை என்று ஜட்ஜி அபிப்பிராயப்பட்டு அவனை ஜெயிலுக்கு அனுப்பினார். இம்மாதிரியான வாய்மொழியான உத்திரவு ஒரு குற்ற ஸ்தாபனைக்கு திருப்திகாமற்ற ஆதாரம் என்று தீர்மானிக்கப்பட்டது. 12 A. L. J. 716.

---

## MORTGAGE BY ONE BROTHER.

### ஒரு சகோதரனால் அடமானம்.

இரண்டு சகோதரர்களில் ஒருவன் ஒரு சொத்தை வாதியினிடம் அடமானம் வைத்தான். ஷை சொத்தை விற்பனை செய்யும்பொருட்டு இரண்டு பேர்கள் பேரிலும் வாதி கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் தான் மூத்த சகோதரனுடன் சேர்ந்து வசிக்கவில்லை என்றும் மூத்த சகோதரன் தனியாய்ச் சொத்தை அடமானம் வைக்க பாத்தியமற்றவன் என்றும் இரண்டாவது சகோதரன் சாக்ஷிசொன்னான். சகோதரர்கள் சேர்ந்த குடும்பஸ்தர்கள் என்றும் மூத்த சகோதரன் குடும்பத்தலைவன் ஸ்தானத்தில் அடமானம்வைக்க பாத்திய முடையவன் என்று வாதிசாக்ஷியாடினான். சகோதரர்கள் தனித்தனியே வசித்து வருகிறார்கள் என்று முடிவு செய்தார்கள். இரண்டாவது அப்பீலில் சகோதரர்கள் தனித்தனியே யிருக்கிறார்களானபடியால் அடமானம் எழுதிக்கொடுத்த இந்த சகோதரன்பேரில் டிக்கிரி கொடுக்கப்பட வேண்டுமென்று வாதிசாக்ஷி சொன்னான். குடும்பம் சேர்ந்த குடும்பம் என்றும் சகோதரர்கள் தனித்தனியே வசித்து வருகிறார்கள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறபடியாலும் யாதொரு அவசியமுமின்றி சொத்து அடமானம் வைக்கப்பட்டிருக்கிறபடியால் வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 12 A. L. J. 716-1.

---

## CONTRACT.

### ஒப்பந்தம்.

வாதியினுடைய புருஷன் உயில் மூலியமாக சொத்தைப் பிரதிவாதிகளுக்குக் கொடுத்தான். ஆனால் ஒரு நிபந்தனையுடன் கொடுத்தான். அதாவது என்னவென்றால் பிரதிவாதிகள் வாதியின் மகளுடைய விவாகச் செலவிற்காக ரூ. 3000-ம் கொடுத்து விடவேண்டும். அந்தத் தொகையை பெறுவதற்காக வாதி வியாஜ்ஜியம் கொண்டு வந்தனள் வியாஜ்ஜியம் சமாதானமாய்ப் போய்விட்டது. சமாதானத்தின் ஷரத்து என்னவென்றால் பிரதிவாதிகள் தவணை தவணையாக ஷை தொகையைச் செலுத்திக்கொண்டு வரவேண்டும். தவணை விவாகத் தேதியின் 12-மணிக்குச் செலுத்திப் போடவேண்டும். அப்படி செலுத்தத் தவறினால் முழுத்தொகையும் உடனே செலுத்திப் போடவேண்டும். பிரதிவாதிகள் செலவு தொகைக்கும் பாத்தியப்படவேண்டும். 12 A. L. J.

---

பிரதிவாதிகள் பணத்தைப் பகல் 12 மணிக்குச் செலுத்தாமல் மத்தியானம் 2 மணிக்குச் செலுத்தினார்கள். மத்தியானம் 1 மணிக்கு வாதி ரூ. 1000ம் கடனும் வாங்கிவிட்டாள். ஒப்பந்தத்திற்கு காலம் முக்கியமான அம்சம் என்றும் பிரதிவாதிகள் செலவு தொகையை செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்றும் தீர்மானிக்கப்பட்டது. 12 A. L. J 716-3.

---

## MORTGAGE DECREE.

### அடமான டிக்கிரி.

முந்திய அடமானக்காரனுக்குக் கொடுக்கும்படி உத்திரவு செய்யப்பட்ட பணத்தை கோர்ட்டில் கட்டவேண்டிய காலத்தை விஸ்தரிக்கச் செய்துகொள்ளப்படும் மனு முதல் கோர்ட்டாருக்குச் செய்துகொள்ளப் படவேண்டும். இந்த மனுவை ஏற்றுக்கொள்ள அதிகார மற்றவர்கள். இந்தக் கேசில் முதல் கோர்ட்டார் முந்திய அடமானத்திற்குட்படுத்தி சொத்தை ஏலம் போடும்படி உத்திரவு செய்தார்கள். ஆனால் கீழ் அப்பீல் கோர்ட்டார் முந்திய அடமானதாரனுக்குச் சேரவேண்டிய தொகையை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கோர்ட்டில் கட்டும்படி உத்திரவு செய்தார்கள். பிந்திய அடமானக்காரன் இந்தக் காலத்தை அதிகப்படுத்தும்படி மனு செய்துகொண்டான். இந்த மனுவை ஏற்றுக்கொள்ள முதல் அப்பீல் கோர்ட்டாருக்கு அதிகாரம் கிடையாதென்று தீர்மானிக்கப்பட்டது. 12 A. L. J. 716-3

---

## FORBIDDING ALIENATION.

### பராதீனத்தைத் தடுத்தல்.

வாதியின் புருஷன் இறந்து போகும்போது வாதி ஜீவதிசையுள்ள பரியந்தம் அனுபவிக்கும்பொருட்டும் அதன்பிறகு அந்தச் சொத்து அவனுடைய பேரப்பிள்ளைகளுக்குச் சேரவேண்டுமென்றும் ஆனால் இந்தப் பேரப்பிள்ளை அந்தச் சொத்தை வீண் செலவு செய்யக்கூடாதென்கிற நிபந்தனையுடன் சில சொத்தை உயில் மூலியமாகக் கொடுத்தான். விதவை பேரப்பிள்ளைகளுக்கு தன்னுடைய பாத்தியதையை விட்டுவிட்டாள். பேரப்பிள்ளைகள் இவளுக்கு ஜீவனாம்சம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். 12 A. L. J. 716-4.

---

## WIDOW'S ALIENATION.

### விதவை பராதீனம்.

விதவை பேரப்பிள்ளைக்கு ஒரு தான பத்திரம் எழுதிக்கொடுத்து சொத்தை அவர்கள் வசத்தில் ஒப்புவித்தாள். தானப் பத்திரத்தில் பேரப்பிள்ளைகள் சொத்தைப் பராதீனம் செய்யக்கூடாதென்றும் அப்படிச் செய்தால் விதவை சொத்தை திருப்பிப் பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவள் என்றும் ஒரு வாக்கியம் எழுதப்பட்டிருந்தது. பேரப்பிள்ளைகள் வீண் செலவு செய்ததாகச் சொல்லி சொத்தைப் பெற்றுக்கொள்ள விதவை வியாஜ்ஜியம் செய்தனள். தானபத்திரம் சர்வ சுதந்தரமுடைய தானம் என்று சொல்லப்பட்டிருக்கிறபடியால் அப்பேர்ப்பட்ட தானப் பத்திரத்தில் மேலே கண்ட வாக்கியமிருக்கக்கூடாதென்று சொல்லி வியாஜ்ஜியம் தள்ளுபடி செய்யப்பட்டது. 12 A. L. J. 716-4.

---



# Our lient's Page.

## நம்முடைய கக்ஷிக்காரர்களின் பக்கம்.

நம்முடைய இந்தியசட்ட கெஜட்டின் அபிப்பிராயங்களைக் கேட்கிறவர்கள் மாமூலான விதிகளை மறந்துபோயிருப்பதைப்பற்றி நாம் விசனிக்கிறோம். அபிப்பிராயம் கேட்பதற்கு கடிதம் எழுதும்போதே ரூ. 5 அட்வான்ஸ் மணியார்டர் செய்யவேண்டுமென்றும் இல்லேல் ரிக்காட்கட்டை அவிழ்த்துப் பார்க்கப்பட மாட்டாதென்று பலமுறை நம்முடைய சஞ்சிகைகளில் எழுதி யிருந்தும் கக்ஷிக்காரர்கள் கவனிக்கிறதில்லை! இந்த காரணத்தை முன்னிட்டு சுமார் 35 அபிப்பிராயக் கடிதங்கள் முதலாவது உடைத்துப் பார்க்கப்படவில்லை. ஆதலால் இனி கக்ஷிக்காரர்கள் ஞாபகத்தில் வைப்பார்கள் என்றும் நம்புகின்றோம்! நம்முடைய கெஜட் கூறும் அபிப்பிராயம் ஏனோ தானோ என்று அலக்ஷியமாகச் சொல்லப்படும் அபிப்பிராயமல்ல கூறப்படும் அபிப்பிராயம் ஒவ்வொன்றிற்கும் அதன் கடைசியில் லா ரிப்போர்ட் பிரமாணமும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்களையே வெளியூர்களில் உள்ள கக்ஷிக்காரர்கள் அவர்களுடைய சொந்த லாயர்களிடம் எடுத்துச் சொன்னால் கக்ஷிக்காரர்களிடமிருந்து லாயர்கள் அதிகப்படியான பீஸ் எதிர்ப்பாக்க விடமில்லாமல் மேல் நடவடிக்கை நடத்திக்கொண்டு போவார்கள்.

நம்முடைய கெஜட்டினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டவர்களில் எவரும் அந்த அபிப்பிராயம் சரியாயில்லையே என்று நமக்கு எழுதி யிருப்பதை நாம் அறியோம்! நம்மால் இயன்றளவு நாம், ஜீவதிசையிலுள்ள பரியந்தம் கக்ஷிக்காரர்களுக்கு சாதகம் செய்யவேண்டுமென்று விரதம்கொண்டு கங்கணம் கட்டிக்கொண்டு சுமார் 9-வருட காலமாக தொடர்ந்தேர்த்தியாக உழைத்துக்கொண்டு வருகிறோம் என்பது உலகமறிந்த விஷயம் என்பதை மறுக்க முடியாது. ஆகையால் இந்த வகையில் கக்ஷிக்காரர்களுடைய முழு ஆதரிப்பையும் பெறுவோம் என்று நம்புகின்றோம்:—

---

### அபிப்பிராய ஜவாப்பு.

(1) திருவண்ணாமலை கேஜபதிராவ்:— தங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது. தாங்கள் நம்முடைய அபிப்பிராயத்திற்காக அனுப்பியிருக்கும் கேஸ் ஜெயமடையாதென்று தங்களுக்கு அறிவிக்க விசனிக்கிறோம். ஏன் என்றால் சுந்தராம்பாள் அம்மாள் என்னும் ஸ்திரீயினுடைய கேசில் அவசரத்தை முன்னிட்டும் அவசியத்தை முன்னிட்டும் ஒருவன் தன்னுடைய சொத்தை மிகவும் தாழ்ந்த விலைக்கு விற்பனை செய்வதாக ஒப்பந்தம் செய்ததால் அவன் தகாத செல்வாககுக்கு உட்பட்டு சொத்திலிருந்த பாத்தியதையை விட்டுவிட கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறான் என்று நினைக்கப்பட கூடாதென்று மதிராஸ் ஐக்கோட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. பிரதிவாதிகள் வீட்டைப் பராதீனம் செய்வதற்கு அந்தசமயம் அவசரமிருந்ததென்று ருஜூப்படுத்துவார்கள். மேலும் வீட்டை விற்பனை செய்வதாக ஒப்பந்தம் செய்தவன் மேஜரே ஒழிய மைனரல்ல. தகாத செல்வாக்கிற்கு உட்பட்டான் என்று சொல்லமுடியாது. ஆகையால் எந்த வழியில் யோசனைசெய்து பார்த்தபோதிலும் கேஸ் ஜெயப்படுவதற்கு ஆதாரமில்லை. ஆகையால் சமாதான மார்க்கத்தில் பிரவேசிப்பது உத்தமம். கோர்ட்டில் வியாஜ்ஜியம் செய்தால் வீண் செலவாய் முடியும். நாம் மேலே எடுத்து கூறியிருக்கும் தீர்ப்பு மதிராஸ் லா ஜெர்னல் (Madras Law Journal) 26-வது வால்யூம் 325-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது.

(2) சத்திரப்பட்டி நாருயணசாமி நாயுடு:—தங்களுடைய கடிதமும் வந்து சேர்ந்தது; தங்களுடைய கேஸ் நல்ல கேஸ்; பிராமிசரி நோட்டிற்காக நான் யாதொரு பணமும் வாங்கவில்லை என்றும் வாதியைக்கொண்டு வாதியின் சினேதனாகிய சங்கர நாருயணபிள்ளையை திண்டுக்கல்லில் நடந்த ஒரு கிரிமினல் கேசில் சாக்ஷி சொல்லும்படியாக சிபார்சு செய்ததற்காக பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுக்கப்பட்டதே ஒழிய மற்றப்படி பிராமிசரி நோட்டிற்காகப் பணம் வாங்கவில்லை என்று டிபன்சு சொன்னால் கோட்டார் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிடுவார்கள்.

கோர்ட்டில் சாக்ஷியம் சொல்வதற்காக பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுப்பது பொது நன்மைக்கு விரோதமான காரியமென்றும் கோர்ட்டில் சாக்ஷியம் சொல்லுவது பிராமிசரி நோட்டிற்கு நல்ல பரிகாரப்பண மல்லவென்றும் மதிராஸ் ஐக்கோர்ட்டார் ஆதிராஜ செட்டி V. விட்டால்புத்தாக் கேசில் தீர்மானித்திருக்கிறார்கள். அந்த கேஸ் இந்தியன்

லாவீக்கிலி என்று சொல்லும்படியான சட்ட ரஞ்சிகையில் முதலாவது வால்யூம் 300-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பைக் கோர்ட்டாருக்கு எடுத்துக் காண்பிக்கும்படி தங்களுடைய லாயருக்குச் சொல்லவும். ஆதலால் தங்களுடைய கேஸ் ஜெயமடையுமென்பதில் சந்தேக மில்லை.

தாங்கள் அனுப்பவேண்டிய பாக்கிப்பணத்தையும் சீக்கிரமாக அனுப்ப வேண்டுகிறோம்.

ஜெயம்கொண்ட சோளபுரம் ரங்கசாமி:— சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டார் தங்கவேலுசெட்டி V. முகுந்தநாயுடு கேஸில் வியாபாரத்தைக் கெடுக்கக் கூடிய உடன்படிக்கை செலாமணியாக மாட்டாதென்று சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். அந்தக் கேஸ் மதிராஸ் வீக்கிலி நோட்ஸ் என்னும் ஜர்னலில் 1914-ம் வருடத்திய வால்யூமில் 108-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. தங்களுடைய ஊரில் ஏதேனும் ஒரு லாயரைப்பிடித்து தீர்ப்பை அனுசரித்து டிபன்ஸ் கக்ஷிசொன்னால் அந்த ஒப்பந்தம் ரத்தாய்விடும்.

கும்பகோணம் ருமசாமி செட்டியார்:— தங்களுடைய கடிதம் மட்டிலும் வந்து சேர்ந்தது. மணி ஆர்டர் வரவில்லை.

நாராயணசாமி ரெட்டி:— ஜில்லா மாஜிஸ்டிரேட் கேசை விசாரணை செய்வதற்காக சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டிற்கு அனுப்பியிருக்கிறபோது சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் அந்தக் கேசை வேறொரு மாஜிஸ்டிரேட்டிற்கு அனுப்ப அதிகாரமற்றவர் ஆதலால் நீர் அப்பீல் செய்துகொள்ளலாம்.

தாயாரம்மாள்:—தயாருடைய நிலைமை எப்படியிருந்தபோதிலும் பெற்ற தகப்பன் பிள்ளையை ஆதரிக்கக் கடமைப்பட்டவன்.

சிக்காத்தாயி:— ஜாதி பஞ்சாயத்தார் உன்னை ஜாதியைவிட்டு விலக்கியிருப்பதற்கும் நீ கோர்ட்டில் ஜீவனாம்சத்திற்காக கிரிமினல் புரோசீஜர்கோடு 488-வது பிரிவின்படி மனுவுசெய்துக் கொண்டிருப்பதற்கும் சம்பந்தா சம்பந்தமில்லை. நீ ஜாதியை விட்டு விலக்கப்பட்டிருக்கிற காரணத்தை முன்னிட்டு கிரிமினல் கோர்ட்டார் உன்னுடைய மனுவைத் தள்ளிப்போட மாட்டார்கள்.


## நோய்க்கிடங்கொடேல்.

சூரியனைக்கண்ட பனிபோல் சகலவித நோய்களையும் பறக்கடிக்கும் சஞ்சீவியான "பெயினலீன்" பாம் தைலம்.

இடுப்புவலி, தலைநோய், கழுத்திழுப்பு, தொண்டைநோய், மார்பு நோய், மார்புசளி, சுளுக்கு, பல் நோய், காதுநோய், முகஜன்னி, கை கால் பிடிப்பு, திமிர்வாய்வு, கப இருமல், ஜலதோஷம், பிடரிவலி, பார்ஸ்வாய்வு முதலிய நோய்களினால் உபத்திரவப் படுகிறவர்களுக்கு குணத்தையளிக்கும், மருந்து "பெயினலீன்" (தீ பெஸ்ட் பாம்) எனப் பெயர் பூண்ட தைலமே. இந்தப் "பெயினலீன்" தான் கொண்ட பெயருக்குத் தக்கபடி நோய்களை அதிக சீக்கிரத்தில் நோயின் மூலகாரணத்தைக் கண்டு பிடித்து வேரோடு நிர்மூலமாக்குகிறது. இதை ஒரு முறை உபயோகித்தால் அதன் குணம் தெரியும்.

விலை புட்டி 1-க்கு பெரியது அணா 10.
சிறியது அணா 6. வி. பி. சார்ஜ் 4.

மாதிரி வேண்டுமானால் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

### வாந்திபேதி நிவாரணி.

இது வாந்திபேதிக்கும், அஜீர்ணபேதிக்கும் எடுத்த திராவகம் இதன் பரிமளமே பேதியைக் கிட்டணுகாதுகாற்கும் இதை ஒவ்வொருவரும் ஆபத்துக்குதவும் சஞ்சீவியாகக் கையிருப்பில் வைத்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.

### மூலிகைகளால் செய்த பற்பொடி

இதை உபயோகிப்பதால் பல்லிலிருந்து ரத்தம் விழாது பற்கள் உறுதியாகும், பற்களைச் சுத்தப்படுத்தி முத்துபோல் பளபளப்பாக்கச்செய்யும் வாய்நாற்றம் நீங்கும், பல்வலிபோகும்.

இதன் விலை டப்பி 1-க்கு அணா 4.

### சுர சம்ஹாரி.

இது முறைசுரம், தொந்தசுரம், விடாசுரம், மலைசுரம்முதலான எல்லாவிதசுரங்களுக்கும் சஞ்சீவி.

இதன் விலை டப்பி 1-க்கு அணா 8.

### படை சம்ஹாரி.

இது கடி அல்லது படை என்று சொல்லப்படும் கொடிய நோய்க்கு மருந்து நெடுநாளான படையாயிருந்தாலும் போக்கடிக்கும்.

இதன் விலை டப்பி 1-க்கு அணா 4.

### வீரியவிர்த்தி பூஷணம்.

இது நரம்பைப் பற்றினவும் சிரைஸப்பற்றினவுமான தளர்ச்சிக்கு ஒப்புயர்வற்ற மருந்து இது எல்லாவித பலஹீனர்களுக்கும், புஷ்டிக்கும் எடுத்த மருந்து. புட்டி 1-க்கு விலை ரூபா 1.

இன்னும் ஏதாகிலும் மருந்து தேவையிருந்தால் எங்களுக்கு எழுதி அதைப்பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

M. C. AGENCY,
72, Nattu Pillayar Coil St.,
Sowcarpet Post Madras.




# Recent Important Rulings
OF THE
# Madras High Court.

## மதிராஸ் ஐக்கோர்ட்டின் முக்கியமான தீர்ப்புகள்.

—:o:—

## HINDU LAW.
### ஹிந்துலா.

### Gift — தானம்.

விதவையாகப்போன மருமகளுக்குச் செய்யப்பட்ட ஒரு தானம் அவள் ஜீவதிசையுள்ள பரியந்தம் தான் அனுபவிக்கவேணுமென்கிற நோக்கத்துடன் தானம் செய்யப்பட்டதாக யூகிக்கவேண்டுமென்பதற்கு சட்டமில்லை. ஹிந்து குடும்பத்தின் புத்திரிகளுக்காவது அல்லது மற்ற பெண் மெம்பர்களுக்காவது எழுதிக் கொடுக்கப்பட்ட தான ஆதரவுகள், தானம் செய்யப்பட்ட சொத்து அடமானம் விற்கிரையம் பராதீனம் முதலியவை செய்ய யோக்கியதை யற்றதாகத்தான் இருந்திருக்க வேண்டுமென்கிற நோக்கத்துடன் தாற்பரியம் செய்யப்படக் கூடாதென்றும், இப்போது ஜாரி செய்யப்படும் தீர்ப்புகள் இந்த நோக்கம் கொண்டவையாயிருக்கின்றன என்று ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யரும், ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யரும் கூடிய கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். போடி முத்தய்யா v. காவேரி கோதண்டருமய்யா, [1914] M. W. N. 337.

[இந்தக் காலத்தில் ஸ்திரீகளுக்கு சர்வ சுதந்தரமும் கொடுத்து தான ஆதரவுகள் எழுதப்படுகின்றன என்பது தாற்பரியம் - Ed.]

---

### INHERITANCE.
### வார்சு பாத்திதை.

ஒருவனுடைய நாசி துவாரத்தில் ஒரு பெரிய கட்டி உண்டாயிருப்பது, அந்த கட்டி அவன் ஜெனிக்கும்போதே இருந்ததாக விருந்தபோதிலும் அவன் வார்சாகவரும் பாத்திதையைப் போக்கடிக்கூடிய நோயல்ல; என்று ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யரும், ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யரும் கூடிய கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். சுப்பா நாயுடு v. வெங்கடருமநாயுடு, 26 M. L. J. 508.

---

### JOINT FAMILY.
### சேர்ந்த குடும்பம்.

ஒரு இந்து பிதா தானும் தன்னுடைய புத்திரனும் கூடிய ஒரு சேர்ந்த குடும்பத்திற்கு மானேஜராக விருக்கிறான். புத்திரனை கட்டுப்படுத்தக்கூடாத ஒரு கடனுக்காக ஷை குடும்பச்சொத்தைப் பராதீனம் செய்கிறான். பராதீனம் செய்யப்பட்ட சொத்தில் பராதீனம் செய்யப்பட்ட காலத்தில் பிதாவுக்கு எவ்வளவு பங்கு இருந்ததோ அவ்வளவுக்கும் பராதீனம் பெற்றவன் பாத்தியப்பட்டவனாகப் போய் விடுகிறான். பராதீனம் செய்யப்பட்ட பிறகு பிதாவுக்கு ஆண் பிள்ளைகள் பிறந்திருப்பது ஷை சொத்தில் பராதீனம் பெற்றவனுக் கிருக்கும் பாகத்தைக் குறைத்துப்போட மாட்டாது என்று ஜட்ஜி மிஸ்டர் வாலிசும் ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யரும் தீர்ப்பு சொன்னார்கள். கணேசராவ் v. துளஜாராமராவ், 26 M. L. J. 460.

---

### ALIENATION BY A CO-PARCENER.
### ஒரு பாகஸ்தன் செய்த பராதீனம்.

சேர்ந்த குடும்பச் சொத்திலிருக்கும் தன்னுடைய பாகத்தை ஒரு மெம்பர் பராதீனம் செய்தால் பராதீனம் பெற்றவன் Tenant-in-common அதாவது மற்ற மெம்பர்களுடன் சொத்தைச் சேர்ந்து அனுபவிக்கும் யோக்கிதை யுடையவனாகமாட்டான். பராதீனம் செய்த மெம்பரைப் பின்பற்றி சொத்தைப் பாகப்பிரிவினை செய்து கொடுக்கும்படி கேட்க மட்டிலும் பாத்திதையுடையவன் என்று மதிராஸ் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. கணேசராவ் v. துளஜாராமராவ், 26 M. L. J. 460.

---

### FATHER'S ALIENATION.
### தகப்பன் செய்த பராதீனம்.

பிதாவும் புத்திரனும் சேர்ந்த ஹிந்து குடும்பத்தில் குடும்பத்தைச்சேர்ந்த ஒரு சொத்தில் பிதா தனக்கிருக்கும் பாகத்தை ஒரு மூன்றாவது மனிதனுக்குப் பராதீனம் செய்தான். பராதீனம் செய்ததற்குப் பிந்தியும் பாக விஸ்தியாவதற்கு முந்தியும் பிதாவுக்கு இன்னொரு புத்திரன் ஜெனித்தான். பராதீனம் செய்யப்படாத சொத்தை இரண்டாவது புத்திரன் முதல் புத்திரனுடன் சமமாகப் பாகப் பிரிவினை செய்துகொள்ள பாத்திதையுடையவன் என்று சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. கணேசராவ் v. துளஜாராமராவ், 26 M. L. J. 460.

---

## FAMILY PROPERTY.

குடும்பச் சொத்து.

குடும்ப ஐவேஜியைக்கொண்டு குடும்பத்தினுடைய ஸ்திரீக்கு நகைகள் செய்யப்பட்டிருக்கிறதாக ருஜூப்பட்டிருக்கும்போதும் அந்த ஸ்திரீமட்டிலும் அந்த நகைகளை உபயோகப்படுத்திக்கொண்டு வந்திருக்கிறாள் என்று ருஜூப்பட்டிருக்கும்போதும் மற்ற ஸ்திரீகள் அந்த குடும்பத்திற்கு வந்தபோதும் அவர்களுக்கும் அம்மாதிரியான நகைகள் செய்யப்பட்டு அவர்கள்மட்டிலும் அந்த நகைகளை உபயோகப்படுத்திக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று ருஜூப்பட்டிருக்கும்போது அந் நகைகள் அவர்களுடைய சொந்த சொத்தென்றும், குடும்பச்சொத்தல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. இதை ஆக்ஷேபிக்கக்கூடிய சாக்ஷியம் இல்லாதபோது நகைகளை உபயோகித்துக்கொண்டு வந்த ஸ்திரீகளே அவைகளின் சொந்தக்காரர்கள் என்று யூகிக்கவேண்டும். அலமேலு மங்கத்தாயாரம்மாள் v. நம்பெருமாள் செட்டி, 15 M. L. T. 352.

## NATURE OF THE PROPERTY.

சொத்தின் ஸ்வபாவம்.

ஒரு குடும்பத்தின் பல மெம்பர்கள் பல தொழிலில் அமர்ந்து சம்பாதித்துக்கொண் டிருக்கையில் அவர்கள் எல்லாருடைய சம்பார்த்தனையையும் ஒரு பொதுவான விடத்தில் சேர்த்து வைத்திருக்க நினைத்தார்கள் என்றுவது அல்லது அவர்கள் ஒவ்வொருவருக்கும் உள்ள தனித்தனி பாத்திதைகளை விட்டுவிட உத்தேசித்தார்கள் என்றுவது யூகிக்கக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. லக்ஷிமி நாரேயின் v. ருமதயால், 22 I. C. 887.

### PROPERTY STANDING IN THE NAME OF ONE MEMBER.

ஒரு மெம்பர் பெயரிலிருந்த சொத்துக்கள்.

விபக்தமாகாத ஹிந்து குடும்பத்தைச்சேர்ந்த ஒரு மெம்பர் பெயரிலிருந்த சொத்துக்கள் அம்மெம்பருடைய சுயார்ஜ்ஜிதமென்று யூகிக்கக்கூடாது. ஆனால் மேற்படி சொத்தை வாங்கக்கூடிய வருமானமுடைய பிதிரார்ஜ்ஜித சொத்து அவன் கையிலில்லாமலிருந்து அவன் சொந்த வியாபாரம் முதலியவைகளை நடத்தி சொத்துக்களைச் சம்பாதித்துக் கொண்டிருந்தால் அப்போது அந்த மெம்பர் பெயராலிருக்கும் அந்த சொத்து அவனுடைய சுயார்ஜ்ஜிதமென்று தீர்மானிக்கப்பட வேண்டுமென்று மதிராஸ் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. குருசாமி அய்யா v. மாரி செட்டி, 22 I. C. 852.

## RELIGIOUS ENDOWMENT.

மதசம்பந்தமான நன்கொடை.

தானம்செய்யப்பட்ட சொத்திற்குவேறே நிபந்தனை யில்லாதபோது ஒரு மகந்துவை நியமிக்கும் அதிகாரம் தருமத்தை ஸ்தாபித்தவருக்கும் அவருடைய வார்சுகளுக்கு மிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. பால்டியோடாஸ் v. கோவிந்ததாஸ், 22 I. C. 18.

## PUROHIT.

புரோகிதம்.

புரோகித வேலையை ஒருவனே பார்க்கும்படி விடும் வழக்கத்தை கோர்ட்டார் ஒப்புக்கொள்ளக் கூடாது. அப்பேர்ப்பட்ட பாத்திதையை ஒருவனுக்கு விடுவது விரோதமாகும். மற்றவர்கள் ஒரு நியாயமான தொழிலைப் பார்ப்பது அல்லது செய்வதிலிருந்து விலக்கும் பாததிதை கோர்ட்டாரால் நிக்ரகிக்கப்படக் கூடாமலிருக்கக்கூடாது என்று ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் அபிப்பிராயப்பட்டார்கள். ஒரு குறிப்பிட்ட புரோகிதனைக்கொண்டே காரியாதிகளை நடத்திக்கொண்டுவந்த ஒருவன் மற்றவர்களையும் உபயோகித்துக் கொள்ளுவதிலிருந்து தடுக்கப்படக்கூடாது என்றும் புரோகிதம் ஒரு உத்தியோகமென்று எண்ணும்படியான உத்தியோகமல்லவென்றும், பாரம்பரியமான உத்தியோகமென்றும், குத்தகைக்கு விடப்படும்படியான ஸ்தாபர சொத்தென்றும் சொல்ல முடியாதென்று ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர் அபிப்பிராயப்பட்டார்கள். சின்ன மகாதேவா v சூரியப்பிரகாசம் I. L. W. 389

புரோகித உத்தியோகத்தை அடமானம் வைப்பதாவது அல்லது குத்தகை விடுவதாவது இந்து மதத்திற்கும் பொது நன்மைக்கும் விரோதமான காரியமா யிருக்கிறபடியால் கோர்ட்டார் அதை ஆதரிக்கக் கூடாதென்று மதிராஸ் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டது. சின்னமகாதேவன் v. சூரியப்பிரகாசம், I. L. W. 389.

## SELF-ACQUISITION.

சயார்ஜ்ஜிதம்.

இந்து குடும்பத்திற்கு மானேஜராக விருக்கும் ஒரு பிதாவின் கையில் உபாய பிதிரார்ஜ்ஜித சொத்திருந்தது. பிறகு வாங்கப்பட்ட சொத்து பிதாவின் பெயரிலிருந்தது. அது அவனுடைய சுயார்ஜ்ஜிதமென்று சொல்லுகிறவர்கள் அதை ருஜூப்படுத்த வேண்டுமென்று மதிராஸ் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சுப்பாநாயுடு v. வெங்கட்டுரும நாயுடு, 26 M. L. J. 508.



## STRIDHANAM.

ஸ்திரீதனம்.

தாயாருடைய ஸ்திரீதன சொத்திற்கு வார்சாக வரும் ஒரு புத்திரி காசியில் அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஹிந்து சட்டததின்படி ஜீவதிசையுள்ள பரியந்தம் அனுபவிக்கும்படியான பாத்திதை மட்டிலும் உடையவள் என்று தீர்மானிக்கப்பட்டது. 10 N. L. R. 35.

## WIDOW.

விதவை.

வேறொருவருக்குச் சொந்தமான ஒரு சொத்தை யாதொரு பாத்திதையு மில்லாமலும் சுதந்தரமுமில்லாமலும் ஒரு விதவை கைவசப்படுத்திககொண்டு 12 வருஷம் அனுபவித்துக்கொண்டு வந்தால் சொந்தக்காரனுக்கு விரோதமாக அவளுக்கு அச் சொத்தில் சர்வ சுதந்தர பாத்தியமும் உண்டாகின்றது என்று மதிராஸ் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. போடி முத்தய்யா v. காவேரி கோதண்டராமய்யா, [1914] M. W. N. 367.

விதவையிடமிருந்து வாங்கின பராதீனம் செலாமணியாகக் கூடியதென்று ருஜூப்படுத்த வேண்டிய பொறுப்பு பராதீனம் பெற்றவனுடையது. பராதீன ஆதரவில் அவசியமான செலவுகளுக்காக விதவை பராதீனம் செய்தாள் என்று சொல்லப்பட்டிருந்தபோதிலும் அது போதுமான சாக்ஷியமாக மாட்டாது. அவசியத்தை முன்னிட்டு பராதீனம் செய்தாள் என்று ஆதரவில் சொல்லப்பட்டிருப்பதை வேறே சாக்ஷிகளைக்கொண்டு ருஜூப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. லாலாபிர்ஜலால் v. முசமட் இந்த்சன்வார், 18 C. W. N. 649.

தன்னுடைய புருஷனுடைய வியாபாரத்தை நடத்திக்கொண்டுவர விதவை வாங்கின கடனை அடைப்பதற்காக விதவை செய்த பராதீனம் அவள் செய்த மற்ற பராதீனங்கள்போல அவசியமான காரியங்களுக்காகச் செய்யப்பட்டதென்று ருஜூப்படுத்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. சவுத் இந்தியன் எக்ஸ்போர்ட் கம்பெனி v. விஸ்வநாத அய்யர், 15 M. L. T. 323.

## CIVIL COURTS.

சிவில் கோர்ட்டுகள்.

நிலங்கள் ரெவினியூ செட்டில்மெண்டு நிலங்களாகயிராமல் ரயத்வாரி நிலங்களாக யிருக்கும்போது எந்த விதமான தீர்வையை வேண்டுமானாலும் விதிக்க கவர்ன்மெண்டாருக்கு அதிகார மிருக்கிறது. சிவில் கோர்ட்டார் அவர்களுடைய அபிப்பிராயத்தில் பிரவேசிக்கக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. அனந்த நாராயணய்யா v. ஆதிமுத்து அய்யர்,

வியாஜ்ஜியத் தொகை சம்பந்தப்பட்ட வரையில் எந்தக் கோர்ட்டார் ஒரு வியாஜ்ஜியத்தைப் பிடிக்க அதிகார முடையவர்கள் என்று தீர்மானிப்பது அந்தக் கோர்ட்டாரால் கொடுக்கப்படும் பரிகாரத்தைப் பொருத்ததல்ல; பிரியாதின் பிரகாரம் வியாஜ்ஜிய மதிப்பைப் பொருத்தது. ரெத்னசாமி செட்டி v. ரத்தனம்மாள், [1914] M. W. N. 388.

## LIMITATION ACT.

கால நிரணயச் சட்டம்.

லிமிட்டேஷன் ஆக்ட் 5-வது பிரிவின்படி தாரித்திரம் போதுமான காரணமல்ல. அண்ணுமலை v. O. M. M. R. M. செட்டி, 22 I. C. 884.

ஒரு கடன் காலாவதியாகப் போனபிறகு முதலுக்குக் கொஞ்சம் பணம் செலுத்துவது கடனுக்கு உயிரை உண்டாக்கி விடமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. 22 I. C. 959.

## MAHOMEDAN LAW.

முகமதியச் சட்டம்.

முகமதியச் சட்டத்தின்படி ஒருவனுடைய மனைவியின் சகோதரியின் சொத்திற்காவது அல்லது அவளுடைய தேகத்திற்காவது அவன் கார்டியனை நியமிக்கப்படக்கூடாதென்று அக்ஹர் ஆலி v. அமீனபிகம் கேசில் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 12 A. L. J. 392.

## GIFT.

தானம்

ஷியா சட்டத்தின்படி மரணம் உண்டாகும்படியான நோயிலிருக்கும்போது செய்யப்படும் தானச் சொத்துக்கள் எவனுக்கு தானம் செய்யப்பட்டதோ அவனுக்கு டெலிவர் செய்யப்பட்டபோதிலும் அச்சொத்தின் மூன்றில் ஒரு பாகத்தில் மட்டிலிமிருக்கும்பாத்திதை தானம்செய்யப்பட்டவனுக்குச்சேருகிறதென்று கர்சட் உசேன v. பேயாஸ் உசேன் கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 12 A. L. J. 417.

## SHIAH LAW.

ஷியாச் சட்டம்.

ஷியாச் சட்டத்தின்படி ஒரு வருடத்திற்கு மேற்பட்ட வியாதி மார்-ஜல்-மட் அல்லது மரண வியாதி அல்ல என்று கர்கெஷட் உசேன் v. பேயாஜ் உசேன் கேஸில் தீர்மானிக்கப்பட்டது. **12 A. L. J. 417.**

---

## INTEREST.

வட்டி.

ஒரு அடமான ஆதாரவின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரும் வாதி ஷெ ஆதாரவில் என்ன வட்டி போடப்பட்டிருக்கிறதோ அந்த வட்டிப் பிரகாரம் அந்த ஆதாரவில் கடன் திருப்பிக் கொடுப்பதற்காக என்ன தேதி போடப்பட்டிருக்கிறதோ அந்தத் தேதி வரையில் வட்டி கேட்கப் பாத்தியமுடையவன் என்று அலகபாத் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. **12 A. L. J. 377.**

---

## ONUS ON PLAINTIFF.

வாதியைப் போருத்தது.

ஒரு ஆதாரவு காலாவதியாகாமல் கொஞ்சம் பணம் வரவு வைக்கப்பட்டது என்று ருஜூப் படுத்தவேண்டிய பொறுப்பு வாதி யுடையதென்று தீர்மானிக்கப்பட்டது. **22 I. C. 959.**

---

## SUBSCRIPTION.

வீதப்பணம்.

ஒரு தருமத்திற்கு அல்லது வேறெந்த காரியத் திற்காவது இனாமாக சந்தாப் பணம் கொடுப்பதாக வாக்களிப்பது தயாளத்தின்பேரில் செய்யப்படும் வாக்குதானம், அந்தப் பணத்தை வாக்குதானம் செய்தவர்களிடத்தி லிருந்தாவது அல்லது அவருடைய வார்சுகளிடமிருந்தாவது வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவருவது செலாவணியாகமாட் டாதென்று தீர்மானிக்கப்பட்டது. அப்துல் ஆஜிஸ் v. மாசாம் ஆலி, **12 A. L. J. 351.**

---

## *DECLARATORY SUIT.*

டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம்

ஒரு தரிசு நிலம் தன்னுடையதென்று கோர்ட்டார் கூறும்படியாக ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். நிலம் அவன் வசத்திலில்லை என்று இரு கக்ஷியாராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்த நிலத்தை வசப்படுத்திக் கொடுக்கும்படி கோர்ட்டாரை பிரார்த்திக்காமல் தன்னுடைய பாத்தியதையை மட்டிலும் கூறும்படியாக பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபடியால் இந்த வியாஜ்ஜியம் ஸ்பெசிபிக் ரிலிப் ஆக்ட் 42-வது பிரிவின்படி செலாவணி யாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. ஈஸ்வரிசிங் v. நரேயின்டட், **12 A. L. J. 409.**

---

## *UNSTAMPED DOCUMENT.*

முத்திரை போடாத ஆதரவு

போதுமான ஸ்டாம்பு கடுதாசியில் எழுதப் படாத ஒரு ஆதரவு முதல் கோர்ட்டாரால் சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டபோது பிறகு அதே நடவடிக்கையில் தள்ளுபடி செய்யப்படக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. சீதாருமருவ் v. பிரசாத்ருவ், **22 I. C. 858**

---

## *REAL OWNER.*

உண்மையான சோந்தக்காரன்.

M - என்பவன் உண்மையான சொந்தக்காரனுக்கு விரோதமாக ஒரு வீட்டை அனுபவித்துக் கொண்டு வந்தான். அவனுக்கு ஒரு புத்திரி இருந்தாள். இவள் L. - என்பவனை விவாகம் செயது கொண்டனள். M - என்பவன் இறந்துபோகும் பரியந்தம் எல்லோரும் அந்த வீட்டை அனுபவித் துக்கொண்டு வந்தார்கள். இதன்பிறகு அந்த சொத்தை L - என்பவன் மானேஜ்மெண்டு செய்து கொண்டு வந்தான். L - என்பவன் அதை வாதியிடம் அடமானம் வைத்தான். L - என்பவனும் அவனுடைய பெண்சாதியும் சேர்ந்து பிரதிவாதியிடம் அடமானம் வைத்தார்கள். அடமானத்தின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. M-என்பவன் இறந்துபோனபிறகு சொத்து அவனுடைய வார்சுகளுக்குச் சேர்ந்துபோய் விட்டது. L - என் பவனுக்கு அந்தச் சொத்தில் எந்த சமயத்திலும் பாத்தியமுண்டாகவில்லை. டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் (Transfer of Property Act) 41-வது பிரிவின்படி L - என்பவன் உண்மையான சொந்தக்காரனல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. ஜம்மாதாஸ் v. உமாஷன்கர், **12 A. L. J. 411.**

---

## IMPROVEMENTS.

விருத்தி.

வழக்கப்பிரகாரம் வருஷத்திற்கு ஒரு தடவை நிலத்திற்கு எரு விடுவதிலும் பூமியை சமப்படுத்து வதிலும் உபாயத்தொகை செலவிடுவது டிரான்ஸ்பர் ஆப் பிராபர்ட்டி ஆக்ட் 51-வது பிரிவில் சொல்லப் பட்டிருக்கிற நில விருத்திகள் ஆகமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. S. முத்துமுப்பன் v. சங்கரநாராயணய்யர், **I. L. W. 371.**



## WILL.

உயில்.

உயில் மூலியமாய் ஒரு சொத்து வைதீக காரியங்களுக்காக தத்தம் செய்யப்பட்டிருந்தால் அச் சொத்துப் பராதீனம் செய்யப்படக் கூடியதல்ல வென்றும் ஒரு ஊழியம் செய்வதற்காகச் செய்யப் பட்டிருந்தால் அது பராதீனம் செய்யப்படக்கூடிய சொத்து என்று தீர்மானிக்கப்பட்டது. **7 S. L. R. 120.**

---

## REVISION.

பரிசீலனை செய்தல்.

சி. பு. கோ. 115-வது பிரிவின்படி ராஜதானி ஸ்மால்காஸ் கோர்ட்டு நடவடிக்கைகளைப் பரிசீலனை செய்ய ஐக்கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிற தென்று தீர்மானிக்கப்பட்டது ருமசாமி நாயுடு v. வெங்கட்ருமான்ஜுலு நாயுடு, **[1914] M. W. N. 368.**

---

CRIMINAL — கிரிமினல்.

---

## MERE IRREGULARITY.

சாதாரணமான ஒழுங்கீனம்.

பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளை விசாரணை செய்ய விரும்புகிறீர்களா என்று கோர்ட்டார் கி. பு. கோ. 256 - வது பிரிவின்படி குற்றவாளிகளைக் கேட்க தவறிப்போனது சாதாரண ஒழுங்கீனம் என்று சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள். வீராசாமி முதலியார் v. சக்ரவர்த்தியார், **3 Cr. L. R. 308.**

---

## CROSS-EXAMINATION.

குறுக்கு விசாரணை.

ஒரு சாக்ஷி பிரதம விசாரணையில் என்ன சொன்னாரோ அதையே மறுபடியும் குறுக்கு விசாரணையில் சொல்லும்படி லாயர் கேட்க பாத்தியமுண்டா இல்லையா என்பதைப்பற்றி யாதொரு கண்டிப்பான விதியும் செய்யக்கூடாது. **3 Cr. L. R. 358.**

---

## MAINTENANCE OF CHILD.

குழந்தையின் ஜீவனம்சம்.

குழந்தையை போஷித்துவரத் தகப்பன் விருப்பமுள்ளவனாக விருக்கும்போது, அதற்கு ஜீவனம்சம் கொடுத்துவரும்படி கோர்ட்டார் கி. பு. கோ. 488 - வது பிரிவின்படி உத்திரவு செய்யக்கூடா தென்று தீர்மானிக்கப்பட்டது. **21 P. W. R. 1914.**

---



## STATEMENT OF WITNESS.

சாக்ஷியம்.

சாக்ஷியின் வாக்குமூலத்தின் ஒரு பாகம் நம்பப் படக் கூடாததாக விருப்பதை முன்னிட்டு முழு வாக்குமூலமும் தள்ளுபடி செய்யப்படவேண்டு மென்பது அவசியமல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. **3 Cr. L. R. 358.**

---

## ILLICIT DISTILATION.

சட்ட விரோதமாக சாராயம் காய்ச்சுதல்.

சட்ட விரோதமாக சாராயம் காய்ச்சுவதற்கு வேண்டிய சாமான்கள் ஒரு இடத்தில் காணப்பட்டன. அந்த இடம் குற்றவாளிக்குச் சொந்தமானதாக விருந்தபோதிலும் வழக்கம்போல் எப்போதும் திறக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் அதற்குள் இலேசில் பிரவேசிக்கக்கூடியதா யிருக்கிறது. குற்றவாளியைத் தொந்திரவில் இழுத்துவைக்க வேண்டு மென்கிற கருத்துடன் யாரேனும் அந்த இடத்தில் அந்த சாமான்களைக் கொண்டுவந்து வைப்பது கஷ்டமல்ல. குற்றவாளியின் சத்துருவினுடைய தூண்டுதல்பேரில் ஷெ இடம் சோதனை செய்யப்பட்டிருப்ப தாக சாக்ஷிகளின் வாக்குமூலத்தால் நன்றாய் விளங்குகிறபோது சட்ட விரோதமாக சாராயம் காய்ச்சும் குற்றத்தை குற்றவாளி செய்திருப்பதாக யூகிக்கப்படக்கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. **3 Cr. L. R. 380.**

---

## Illegal Conviction.

சட்ட விரோதமான குற்ற ஸ்தாபனை.

ஒரு எருமை மாடு இயல்பாக இறந்துபோய் விட்டது. அதின் தோலை உறித்ததற்காக குற்றவாளிகள்பேரில் இ. பி. கோ. 290 - வது பிரிவின்படி "நியூசன்ஸ்" குற்றம் சாட்டப்பட்டது. அம்மாடு தொத்து வியாதியால் இறந்து போனதாக ருஜூப்படவில்லை. கிராமத்திலுள்ள மற்ற எந்த மாடும் அப்பேர்ப்பட்ட வியாதியால் பிடிக்கப்பட்டு தானே இறந்துபோய் விட்டதாகவும் ருஜூப்படவில்லை. வேறே சாக்ஷியம் இல்லாதபோது குற்றவாளிகள் மாட்டின் தோலை உறித்தது நியூசன்ஸ் குற்றமாக மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. **3 Cr. L. R. 343.**

---

## THEFT OF FISH.

மீன் திருடினது.

ஒரு குட்டையிலிருந்த மீனைப் பிடித்ததற்காக குற்றவாளியின்பேரில் திருட்டுக் குற்றஞ் சாட்டப்பட்டது. மீன் பிடிக்கப்பட்டபோது குட்டை ஒரு மனிதனுக்குச் சொந்தமாயிருந்ததென்று ருஜூப்

பட்டது. மீன்கள் ஓடிப்போகிறதற்கு சாத்தியமில்லை என்றும் ருஜுப்பட்டது. மீன்கள் அந்தக் குட்டையின் சொந்தக்காரர்கள் வசத்திலிருந்தனவென்று அவைகளைப் பிடித்தது திருடினதாகிறதென்று குற்றவாளியின்பேரில் திருட்டுக் குற்றம் ஸ்தாபிக்கப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டது. 3 Cr. L. R. 368.

---

### TRESPASS.

#### அத்துமீறி பிரவேசிக்கும் கேஸ்.

அத்துமீறி பிரவேசித்ததாக குற்றஞ் சாட்டப்பட்ட கேசில், குற்ற ஸ்தாபனை செய்யப்படுவதற்கு குற்றவாளி ஏதேனும் ஒரு குற்றத்தைச் செய்யவாவது அல்லது வீட்டுக்காரனை நிந்திக்கவாவது அல்லது அவனைத் தொந்திரவு செய்யவாவது வேணுமென்கிற எண்ணத்துடன் அத்துமீறி பிரவேசித்தான் என்று ருஜுப்படுத்த வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 22 I. C. 964.

---

### TWO MOTIVES.

#### இரண்டு எண்ணங்கள்.

ஒரு குற்றவாளி போர்ஜரி செய்ததில் இரண்டு எண்ணங்களைக்கொண்டு போர்ஜரி செய்ததாக அதாவது ஒன்று பிராசிக்கியூஷனிலிருந்து தன்னை தப்பித்துக்கொள்ள வேண்டும். (2) தன்னுடைய செய்கையால் ஒரு மூன்றுவது மனிதனை மோசம் செய்யவேண்டுமென்கிற எண்ணம் ருஜுப்பட்டால் அவன் இ. பி. கோ. 467-வது பிரிவில் சொல்லப்பட்ட குற்றத்தைச் செய்திருப்பதாகத் தீர்மானிக்கப்படவேண்டும் என்று ஜாரி செய்யப்பட்டது. 3 Cr. L. R. 79.

---

### TRADE - MARK.

#### வியாபார அடையாளம்.

ஒரு வியாபார சாமான் அடையாளத்திலிருந்து முழுதினும் பேதப்பட்டவும் ஆனால் அதுபோல பார்வைக்கு காணப்படும் வர்த்தக சாமான் அடையாளம் இ. பி. கோ. 486-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் போலி அடையாளம் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 3 Cr. L. R. 136.

---

## *Miscellaneous Suits.*

## நானாவிதமான வியாஜ்ஜியங்கள்

### சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

—:o:—

ஜட்ஜிகள் :— { மிஸ்டர் சங்கரநாயர் / மிஸ்டர் ஸ்பென்சர் } முன்பாக

எப்படி யிருந்தால் வியாஜ்ஜிய மூலம் ?

---

### JUDGES DIFFER.

#### ஜட்ஜிகள் பேதப்படுகிறார்கள்.

K. பாசவ ரெட்டி என்னும் வாதி கிரளப்பூண்டி ஜெமீன்தார்பேரில் ஒரு வியாஜ்ஜியங் கொண்டு வந்தார். எந்த உடன்படிக்கையை ஆதாரமாகக் கொண்டு வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறாரோ அந்த உடன்படிக்கையில் அடியிற்கண்ட க்ஷரத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. வாதியுடன் கிரளப்பூண்டி ஜெமீன்தார் மைனராகவிருந்தபோது அவருக்குப் பிரதிநிதிகளாக விருந்தவர்கள் அந்த உடன்படிக்கையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். க்ஷரத்துகளாவன—(1) பிரதிவாதிகளின் தகப்பனார் வாதிபெயரில் எழுதிவைத்த சில அடமானங்கள் செலாவணியாகமாட்டாதென்று பிரதிவாதிகள் வாதிபேரில் செய்திருக்கும் வியாஜ்ஜியத்தை பிரதிவாதிகள் வாப்பீஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். (2) வாதி, ஜெமீன்தார்பேரில் பெற்றிருக்கும் டிக்கிரியை நிறைவேற்றும்போது ஜெமீன்தார் யாதொரு விதமானயிடைஞ்சலும் செய்யக்கூடாது. அப்படி, டிக்கிரிக்காவது அல்லது அந்த டிக்கிரியை நிறைவேற்றும்போதாவது ஜெமீன்தார இடைஞ்சல் செய்தாரேயானால் அந்த உடன்படிக்கை எழுதி வாங்குவதற்காக ஜெமீன்தாருடைய நன்மைக்காக வாதியால் கொடுக்கப்பட்ட ரூபா 20 ஆயிரத்தை ஜெமீன்தார் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். ஜெமீன்தார் அடமானமும் டிக்கிரியும் செலாவணியாகாதென்று கோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்தார்; ஆகவே வாதி ஷை எக்கிரிமெண்டை ஆதாரமாகக்கொண்டுவியாஜ்ஜியம்கொண்டு வந்திருக்கிறார்.

காக்கினடா சப்கோர்ட்டார் உடன்படிக்கையின் தாற்பரியப்படி இந்த வியாஜ்ஜியத்திற்கு இன்னும் யாதொரு வியாஜ்ஜிய மூலமும் உண்டாகவில்லை என்றும் வியாஜ்ஜிய மூலம் உண்டாவதற்குமுந்தியே வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கிறதென்றும் ஜெமீன்தார் அடமானத்தையும் டிக்கிரியையும் ஆக்ஷேபித்து ஒரு மனுதாக்கல் செய்திருப்பது இந்த வியாஜ்ஜியத்திற்கு வியாஜ்ஜிய மூலமாக மாட்டாதென்று நியாயம்சொல்லி வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.



வாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார்.

ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர், ஜெமீன்தார் அடமானத்தையும் டிக்கிரியையும் ஆக்ஷேபித்து மனு தாக்கல் செய்திருப்பது வியாஜ்ஜியமூலமாக மாட்டாதென்று சப் கோர்ட்டாரைப்போல அபிப்பிராயப்பட்டார். ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சர் வியாஜ்ஜியமூலம் உண்டாயிருக்கிறதென்று அபிப்பிராயப் பட்டார். முடிவில் அப்பீல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

---

ஜட்ஜி:—மிஸ்டர் பேக்வெல்...முன்பாக.

கணக்குகளைப் பரிசோதனைசெய்ய ஏஜண்டின் பாத்திதை.

நூர் முகமத்கமீசா சேட்டின் சொக்க ஐவேஜியைக் கொண்டும் அவருடைய எஸ்டேட்டின் மற்ற சொத்துக்களைக் கொண்டும் நடத்தி வரப்படுவதாகச் சொல்லப்படும் வியாபாரத்தைப் பெறறுக்கொள்ளும்படியாக கொண்டுவரப்பட்டிருக்கிற வியாஜ்ஜியத்தில் வாதிகள் அதாவது ஷை நூர் முகமத்மீசா சேட்டின் வார்சுகள் தரப்பில் மிஸ்டர் க்ஷாமியர் ஆஜராகி பிரதிவாதி கையிலிருக்கும் கணக்கு புஸ்தகங்களை தம்முடைய கக்ஷிக்காரர்கள் பரிசோதனை செய்யவும், இப்படி பரிசோதனை செய்யும் வேலையில் தகேரியாடாலிப் சாகேபினுடைய உதவி வாதிகளுக்கு கிடைக்கும்படி செய்யவேண்டுமென்றும், ஆகவே இந்தக் காரியங்களுக்காக கோர்ட்டாருடைய அனுமதியைக் கேட்கிறார்கள் என்று சொன்னார்.

“டாலிப்சேட் கணக்கைப் பரிசோதனை செய்வதை பிரதிவாதிகள் ஆக்ஷேபித்தார்கள். ஏனென்றால் அவர் பிரதிவாதிகளுக்கு எதிரி வியாபாரி. மேலும் அவருடைய தூண்டுதல்பேரில்தான் வாதிகள் இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மேலும் ஷை டாலிப்சேட் வாதிகளுடைய ஏஜண்டு அல்ல” என்று பிரதிவாதி தரப்புக்கு ஆஜரான மிஸ்டர் C. K. மகாதேவ அய்யர் எடுத்துப் பேசினார். கோர்ட்டார் பிரதிவாதி சொன்ன கக்ஷியை ஏற்றுக்கொண்டு, கணக்குகளைப் பரிசோதனை செய்வதற்கு காரணமிருக்கிறதென்று வாதி ருஜுப்படுத்தினால் ஒரு தேர்ந்த கணக்கு பரிசோதகரின் உதவியை அடையக்கூடுமென்று அபிப்பிராயப்பட்டு, டாலிப்சேட் கணக்கைப் பரிசோதனை செய்யக்கூடாதென்று ஆக்ஷேபிக்க பிரதிவாதிகள் பாத்திதை யுடையவர்கள் என்று தீர்மானித்து வாதியின் மனுவை ஏற்றுக்கொள்ளவில்லை.

சொலிசிட்டர்கள் மெசர்ஸ் கிரான்ட் அண்டு குரேர்ட்டரிக்கினுடைய உதவியுடன் மிஸ்டர் டி. க்ஷாமியர் வாதி தரப்பிர்கும் முதல் பிரதிவாதிக்கு மிஸ்டர் V. மாசிலாமணிப்பிள்ளையும், 4-வது பிரதிவாதிக்கு மிஸ்டர் C. K. மாதவய்யரும் ஆஜரானார்கள்.

---

### BOMBAY PRIZE COURT.

#### பம்பாய் கப்பல்படை இலாக்கா கோர்ட்.

—:o:—

ஜட்ஜி:—மிஸ்டர் மக்லியாட்...முன்பாக

ஜெர்மன் ஸ்டீமர் “வார்ன்” பம்பாய் துறைமுகத்திற்கு வந்தவுடன் பிரிடிஷ்காரர்கள் அதைப் பிடித்துககொண்டார்கள். இதில் பம்பாய் வர்த்தகர்களுக்கு ஜெர்மனியிலிருந்து அனேக சரக்குகள் வந்திருந்தன. ஸ்டீமர் சரக்குகளுடன் பிடிபட்டுப் போய் பம்பாய் சீக்கஸ்டம் கலெக்டர் வசத்திலிருக்கிறது. வர்த்தகர்கள் கலெக்டருக்கு மனு கொடுத்து சரக்குகளை டெலிவர் செய்யும்படி கேட்டுக்கொண்டார்கள். வர்த்தகர்கள் பிரைஸ் (Prize) கோர்ட்டாருடைய உத்திரவைப் பெற்று மனு செய்து கொண்டால் சரக்குகள் அவர்களுக்கு டெலிவர் செய்யப்படுமென்று கலெக்டர் அறிவித்தார். இதன்பேரில் மெக்காஜி உமாரசி என்னும் வியாபாரியும் இன்னும் சில வியாபார கம்பெனியாரும் சேர்ந்து பம்பாய் ஐக்கோர்ட்டில் மனு தாக்கல் செய்தார்கள். இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பிற்கு “டெப்டாரி பெரியா,” “டைவான் டேவியான்” என்கிற சொலிசிட்டர் கம்பெனியார் ஆஜராகி அடியிற்கண்டபடி பேசினார்கள்:—மனுதாரர்கள் பிரிடிஷ் பிரஜைகள்; “வார்ட்டிராம்” ஸ்டீமரில் வந்திருக்கும் சரக்குகள் பம்பாயிலிருக்கும் மெசர்ஸ் ஸ்டீமன்ஸ்ரோவல் என்னும் ஜெர்மன் கம்பெனியார் மூலியமாக ஜெர்மனியிலிருக்கும் அவர்களுடைய பெயர்கொண்ட தாய்க்கம்பெனிக்கு உத்தரவு அனுப்பி தருவிக்கப்பட்டது. இந்த சரக்குகளுக்கு உத்திரவு அனுப்பும்போது ஐரோப்பாவில் யுத்தம் கூறப்படவில்லை “வார்ட்டிராம்” பம்பாய் துறைமுகத்தைப் பிடித்தபோது இங்கிலாண்டிற்கும் ஜெர்மனிக்கும் யுத்தம் ஆரம்பமாகவில்லை. அந்த ஸ்டீமரில் அடியிற்கண்ட சாமான்களிருக்கின்றன:—இரும்பு மெலாம் பூசப்பட்ட கம்பிகள், இரும்புத் தகடுகள், எனுமல் சாமான்கள் முதலியன. ஜெர்மன் கவர்ன்மெண்டிற்காவது ஜெர்மனிக்குச் சொந்தமான தேசத்தில் குடியிருப்பவனுக்காவது, அல்லது பிரிடிஷ் சிம்மாசனத்தின் வேறெந்த எதிரிக்காவது பிரஸ்தாப சரக்குகளில் நேரேயாயினும் அல்லது வேறே யார் மூலியமாயாயினும் யாதொரு பற்றுதலும் கிடையாது.

கவர்ன்மெண்டு தரப்பிற்கு ஆனரபில் அட்வோகேட் ஜெனரல் மிஸ்டர் M. R. ஜார்டேயின் கவர்ன்மெண்டு சொலிசிட்டருடன் ஆஜராகி சரக்குகளுடைய பில் ஆப்லேடிங் (Bill of Lading) முதலாவது ஜெர்மன் வர்த்தக கம்பெனியாராகிய மெசர்ஸ் ஸ்டிபன் அண்டு நோபால் பெயராலிருக்கிறதென்றும் அதை அவர்கள் மனுதார் பெயரால்

என்டார்ஸ்மெண்டு செய்துகூட கொடுக்கவில்லை என்றும் இப்படி யிருக்கும்போது பிரமாணப் பத்திரிகையில் மனுதார்கள் பிரிடிஷ் அரசாங்கத்தின் எந்தச் சத்துருவுக்கும் சரக்கில் பற்றில்லை என்று சொல்லி யிருப்பது பிசகென்றும் சரக்கின் கிரையம் ஸ்டீமர் செலவுகள் முதலியவைகளை மனுதார்கள் சீக்கஸ்டம் கலெக்ட்டரிடம் செலுத்திவிட்டு சரக்கை டெலிவர் செய்துகொள்ளலாமென்று கோர்ட்டார் உத்திரவு பிறப்பிக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டார்.

கோர்ட்டார் இருதரப்பு லாயர்கள் பேசினதைக் கேட்டுவிட்டு மனுதார்கள் அட்வோகேட் ஜெனரல் சொல்லும் நிபந்தனைப்படி சரக்குகளை டெலிவர் செய்துகொள்ளலாம் என்று உத்திரவு செய்தார்கள்.

அப்பீல் தரப்பு.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் சதாசிவ ஆய்யர்,
மிஸ்டர் நேப்பியர்,

தென் கன்னடத்தில் ஒரு குடி தன்னுடைய குத்தகைக்குட்பட்டிருந்த சில துண்டு நிலங்களில் சிலவற்றில் நில சுவான்தாருக்கிருக்கும் பாத்திதையை மறுத்ததால் முழுக் குத்தகையையுமே ரத்து செய்கிறதென்றும் ஆதலால் குடியை நிலத்திலிருந்து புறப்படுத்த தனக்கு பாத்திதை யிருக்கிறதென்று குடியை நிலத்திலிருந்து புறப்படுத்த நிலஸ்வான்தார் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். கந்தப்பூர் டி. மு. கோர்ட்டார் நிலஸ்வான்தாரின் பாத்திதையை மறுத்ததால் முழுக் குத்தகையும் ரத்தாய் விட்டதென்று அபிப்பிராயப்பட்டு குடியை நிலத்திலிருந்து புறப்படுத்த நிலஸ்வான்தார் பாத்திதையுடையவன் என்று தீர்மானித்தார். ஷை ஜில்லாக் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில் ஷை பாத்திதையை மறுத்தபிறகு நிலஸ்வான்தார் யாதொரு நடவடிக்கையும் நடத்தாதலால் இ. லா. ரி. 31 சென். ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கேசை' பின்பற்றி குடியைப் புறப்படுத்த நிலஸ்வான்தாருக்குப் பாத்திதை இல்லை என்று ஜில்லாக் கோர்ட்டார் தீர்மானித்தார்கள். வாதி ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டதில், வாதிக்காக மிஸ்டர் K. சுந்தரராவ் ஆஜராகி 31 மதிராசில் ரிப்போர்ட் செய்யப்பட்ட தீர்ப்பு பின்பு ஜாரி செய்யப்பட்ட தீர்மானத்தால் ரத்து செய்யப்பட்டு போயிருக்கிறதென்றும் ஆதலால் நிலஸ்வான்தார் யாதொரு கிரிமினல் நடவடிக்கையையும் நடத்திருக்க வேண்டியது அனுவசியமென்று சொன்னார்.

மிஸ்டர் எக்கிய நாராயண ஆதிகா அப்பீல் பிரதிவாதிக்காக ஆஜராகி குடி நிலசுவான்தாரின் பாத்திதையை மறுத்ததால் முழுக் குத்தகையையும் ரத்து செய்துவிடமாட்டாதென்றும் ஆனால் குடியை புறப்படுத்த நிலசுவான்தார் பாத்தியமுடையவரல்ல என்று வாதித்தார்கள்.

ஐக்கோர்ட்டார் குடியின் வசத்திலிருக்கும் சில நிலங்களில் நில சுவான்தாருக்குப் பாத்திதையில்லை என்று குடி சொன்னதால் முழுகுத்தகையும் ரத்தாய்ப் போய்விடமாட்டாதென்று தீர்மானித்து கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் சங்கரநாயா,
மிஸ்டர் ஸ்பென்சர்,
முன்பாக.

ஒரு மாஜிஸ்டிரேட்பேரில் வியாஜ்ஜியம்.

வக்கீல் மிஸ்டர் V. K. கிருஷ்ண மீனனுடன் பாரிஸ்டர் C. மாதவநாயர் அப்பீல் வாதிக்கு ஆஜராகி தம்முடைய கக்ஷியை எடுத்துச் சொன்னார்.

கேசின் வரலாறு:— வாதி "கோயக்குட்டி" என்று பெயருடையவர்; பொன்னனியில் சிலகாலம் ஸ்டேஷனரி சப் மாஜிஸ்டிரேட்டாக விருந்த மிஸ்டர் F. பெர்னன்டொசையும் இன்னும் 5 வரையும் ஆக;பேரில் ஒரு நஷ்ட தாவா கொண்டுவந்தார். பிரதிவாதிகள் எல்லாம் கலந்து யோஜனைசெய்து வாதியின் பேரில் பொய்க்கேசு ஜோடித்து 6-வதுபிரதிவாதியை விட்டு 19—8—1914ல் ஒரு பிரியாது கொடுக்கும்படி செய்தார்கள். 6-வதுபிரதிவாதி முதல்பிரதிவாதியால் போஷிக்கப்பட்டு வருகிறவன்; பிரியாது வாதியின் பேரிலும் அவரிடம் வேலை செய்துகொண்டிருக்கும் ஒரு கூலிக்காரன்பேரிலும் கொடுக்கப்பட்டது. இதன்பேரில் கிரிமினல் நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வாதி பாலக்காட்டு அசிஸ்டென்ட் மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட்டு 17-10-1914ல் விடுவிக்கப்பட்டார். இந்த பறட்டான கிரிமினல் நடவடிக்கையால் வாதி கௌரவக்குறைவு கஷ்டம் நஷ்டம் மனபாதை ஆகிய இவைகளை அடைந்து சங்கடப்பட்டார். ஆதலால் வாதி நஷ்டத்திற்காக இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறார். தென் மலையாளம் ஜில்லா ஜட்ஜி முதல் பிரதிவாதி Judicial Officer's Protection Act படுகிறபடியால் அவர் சம்பந்தப்பட்ட வரையில் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். வாதி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் C. மாதவநாயர் ஆஜராகி முதல் பிரதிவாதியாகிய மாஜிஸ்டிரேட் கேசை பையிலில் வைத்துக்கொண்டு செய்த நடவடிக்கைகளை மட்டிலும் ஷை உத்தியோகஸ்தரின் பாதுகாப்பு சட்டம் காப்பாற்றுமே ஒழிய கேஸ் பையிலில் வைத்துக்கொள்ளப் படுவதற்கு முந்தி முதல் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுடன் கலந்து பொய்க்கேஸ் ஜோடித்த செய்கையை ஷை சட்டம்



ஆதரிக்க மாட்டாதென்றும் இதற்காக குவின் v. வேதாம் என்னும் தீர்ப்பை ஆதாரமாக எடுத்துக் கூறினர். அப்பீல் பிரதிவாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மெண்டு ஆஜராகி உத்தியோகஸ்தர் சட்டம் முதல் பிரதிவாதியைப் பாதுகாக்கிறதென்றும் ஆதலால் அவர்பேரில் யாதொரு வியாஜ்ஜியமும் கொண்டுவரப்படக் கூடாதென்று கக்ஷி சொன்னார். ஐக்கோர்ட்டார் வாதியின் ஆக்ஷேபனையை ஏற்றுக்கொண்டு குவின் v. வேதாம் தீர்ப்பைப் பின்பற்றி ஜில்லா ஜட்ஜியின் தீர்ப்பை ரத்துசெய்து இந்தக் கேசை மறுபடியும் பயிலில் எடுத்துக்கொண்டு சட்டப்படி விசாரணைசெய்து பைசல் செய்யும்படியாக ஜில்லா ஜட்ஜிக்கு உத்திரவு செய்தார்கள்.

---

ஜட்ஜி:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ ஐயர்.

மதுரை ஜில்லா ஜட்ஜியின் தீர்ப்புக்கு விரோதமாகச் செய்துகொள்ளப்பட்ட ஒரு அப்பீலுக்கு ஐக்கோர்ட்டார் இன்று தீர்ப்பு சொன்னார்கள். கேசின் விபரம் என்னவென்றால்: இரண்டாவது பிரதிவாதியாகிய நாட்டுக்கோட்டை செட்டி, ரெங்கூன் செட்டி கடைக்கு ஏஜண்டாயிருந்தவகையில் சில பணத்தைக் கையாடிவிட்டதாக புரோம் கோர்ட்டில் ஒரு கிரிமினல் நடவடிக்கை நடத்தப்பட்டது. இரண்டாவது பிரதிவாதியைக் கைதி செய்யும்பொருட்டு ஒரு வாரண்டு பிறப்பிக்கப்பட்டு திருச்சினாப்பள்ளி ஜில்லா மாஜிஸ்டிரேட்டிற்கு அனுப்பப்பட்டது. இதன்பேரில் இரண்டாவது பிரதிவாதியின் தகப்பன் ரெங்கூன் கடை முதலாளியாகிய வாதிக்கு ரூ. 4000 க்கு ஒரு பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்தான். வாதி கிரிமினல் நடவடிக்கைகளை நிறுத்தி பிரியாதை வாப்பீஸ் பெற்றுக்கொண்டு வாரன்டை ரத்துசெய்து வைப்பதாகவும் ஒப்புக்கொண்டார். அதன்பிறகு ஷை பிராமிசரி நோட்டை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதி மதுரை ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் பிராமிசரி நோட்டு எழுதிக்கொடுத்த தகப்பனை முதல் பிரதிவாதியாகவும் அவருடைய புத்திரனை இரண்டாவது பிரதிவாதியுமாகச் சேர்த்து வியாஜ்ஜியங்கொண்டுவந்தார். கக்ஷிக்காரர்கள் மதுரை ஜில்லா ஜட்ஜி கோர்ட்டின் அதிகார எல்லைக்குள்ளிருக்கிறார்கள். ஜட்ஜி பிராமிசரி நோட்டு கிரிமினல் நடவடிக்கையை வாதி வாப்பீஸ் பெற்றுக் கொள்வதற்காக எழுதிக்கொடுக்கப் பட்டதென்றும், அது பொது நன்மைக்கு விரோதமான காரியமென்றும், பணத்தைக் கையாடினகுற்றம் சமாதானம் செய்துகொள்ளப்படக்கூடாத குற்றம் என்றும் சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுப்படி செய்துவிட்டார்கள். வாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துக்கொண்டார். வாதி தரப்பிற்கு மிஸ்டர் K. சீனிவாச ஐயங்காரும், மிஸ்டர் C. S. வெங்கடாச்சாரியாரும் ஆஜராகி பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுக்கப்பட்டு போனதை முன்னிட்டு புரோம் கோர்ட்டில் கிரிமினல் நடவடிக்கைதானே நின்றுபோய்விட்டதென்றும் வாரன்டை ரத்து செய்துவைக்க வாதியும் முதல் பிரதிவாதியும் ஏற்பாடு செய்துக்கொண்டது சட்டவிரோதமாக மாட்டாதென்றும் கக்ஷி சொன்னார்கள்.

ஐக்கோர்ட்டார் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருடைய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு கிரிமினல் கேஸ் கொண்டுவந்து லாபம் சம்பாதிக்கக் கூடாதென்று ஜனங்கள் கண்டிப்பாய் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் வாப்பீஸ் பெற்றுக் கொள்வதாக வாதி ஒப்புக்கொண்டிருக்கும் கிரிமினல் கேஸ் சமாதானம் செய்துக் கொள்ளப்படக் கூடியதல்லவென்றும், சொல்லி வியாஜ்ஜியத்தை செலவு தொகையுடன் அடியோடுதள்ளுபடி செய்துவிட்டார்கள்.

---

## எழும்பூர் போலீஸ் கோர்ட்.

---

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் F. D. பர்ட்...முன்பாக.

துரைசாமி நாயுடு என்பவர் 600ரூ. மதிப்புள்ள நகைகளை திருடிவிட்டதாக இ. பி. கோ. 380-வது பிரிவின் டி போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் நிக்கலாசால் குற்றம் சாட்டப்பட்ட கேஸிற்கு கோர்ட்டார் தீர்ப்புசொன்னார்கள். பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகள் சொன்ன வாக்கு மூலத்தைக்கொண்டு குற்றவாளி பிரியாதியான பொன்னம்பல முதலியாரின் பந்துவென்றும் குற்றவாளி அடிக்கடி பிரியாதியின் வீட்டிற்குப் போகிறதுண்டென்றும் தெரிகிறது. ஒரு மாதத்திற்கு முந்தி பிரியாதியின் தாயார் தன்னுடைய மகனிடம் தன்னுடைய நகைகளைக் கொடுத்து வைத்திருந்தாள். பிரியாதி அந்த நகைகளை ஒரு அறையிலிருந்த டிரன்க் பெட்டியில் வைத்திருந்தார். கடந்த ஆகஸ்ட்மீ 26உ பிரியாதியின் வீட்டு வேலைக்காரனாகிய முனுசாமி ஷை நகைகள் குற்றவாளியின் பாட்டியார் போட்டுக் கொண்டிருக்கிறாள் என்று பிரியாதியிடம் சொன்னான். பிரியாதி போலீசாரிடம் ரிப்போர்ட்செய்தார். கோர்ட்டார் குற்றவாளிக்கு 9 மாதம் கடுங்காவல் தண்டனை விதித்து ஜெயிலைவிட்டு வந்த பிறகும் அவன் தன்னுடைய போக்குவரத்துகளை போலீசாருக்கு அறிவித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று உத்திரவு செய்தார்கள்.

---

## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

—:o:—

ஜட்ஜி:—மிஸ்டர் சங்கர நாயர் முன்பாக.

### ஏல விற்பனையை ரத்து செய்யும் மனு

ஒரு தீர்ப்புக் கடனாளியிடமிருந்து வசூல் செய்யப்பட்ட பணத்தில் பங்கு வீதத்திற்குப் பாத்தியதையுடைய ஒரு தீர்ப்புக் கடன்காரன் தீர்ப்புக் கடனாளியின் சொத்து ஏலம் போடப்பட்டதில் முக்கியமான ஒழுங்கீனம் நடந்ததென்று காரணம் சொல்லி அந்த ஏல விற்பனையை ரத்து செய்ய சி. பு கோ. 211-வது பிரிவின்படி மனு செய்து கொண்டான். ஏல விற்பனையில் சொத்து மதிப்பு கேவலமாகப்போடப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறதென்றும் அதனால் மனுதாருக்கு நஷ்டம் உண்டாயிருக்கிறதென்றும் ஆகவே ஏல விற்பனையில் முக்கியமான ஒழுங்கீனம் நடந்திருக்கிறதென்று குண்டூர் டி. மு. கோர்ட்டார் முடிவு செய்து ஏல விற்பனையை ரத்து செய்து விட்டார்கள். ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்துக் கொள்ளப்பட்டதில் ஏல விற்பனை ஒழுங்கீனமாய் நடத்தப்பட்டிருக்கிற தென்று தெரிகிறபோதிலும் மனுதார் டி. மு. கோர்ட்டில் செய்துகொண்ட மனுவில் ஏல விற்பனையில் என்ன ஒழுங்கீனம் இருந்ததென்று குறிப்பிட்டு சொல்லாததால் டி. மு. கோர்ட்டாருடைய உத்திரவை ரத்துசெய்து மனுவைத் தள்ளும்படி செய்துவிட்டாகள். ஜில்லா ஜட்ஜியின் உத்திரவிற்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் ஒரு ரிவிஷன் மனு தாக்கல் செய்யபபட்டது. ஐக் கோர்ட்டார் மனுதாரின் கக்ஷியை ஏற்றுக்கொண்டு ஏல விற்பனையைப் பயிரங்கப் படுத்த நோட்டீஸ் போட்டதில் எங்கே ஏலம் போடப்படுமென்றும்என்ன தேதியில்ஏலம் போடப்படுமென்றும் பயிரங்கப்படுத்தப்பட்டதா என்று தீர்மானித்து அனுப்பும்படியாக இந்த மனுவை கீழ்க்கோர்ட்டாருக்கு அனுப்பினார்கள். ஏலவிடமும் காலமும் நோட்டீஸ்களில் பயிரங்கப்படுத்தப் படவில்லை என்று கீழ்க்கோர்ட்டார் முடிவு செயது அனுப்பினார்கள். இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு டி. மு கோர்ட்டாருடைய உத்திரவை உறுதிப்படுத்தினார்கள்.

எதிர் மனுதாருடைய வக்கீல் இன்னொருஆக்ஷேபனையும் சொன்னார். அவாவது என்னவென்றால் மனுதார் உண்மையான தீர்ப்புக் கடனாளியா என்றும் சி. பு. கோ. 211-வது பிரிவின்படி மனு செய்துக் கொள்ள யோக்கியதை யுடையவரா என்றும் தீர்மானிக்கப்படும்படியாக இந்த மனு மறுபடியும் கீழ்க்கோர்ட்டிற்கு அனுப்பப்படவேண்டுமென்று சொன்னார். இந்த மாதிரியான ஆக்ஷேபனை கீழக்கோர்ட்டில் செய்யப்படவில்லை என்றும் இந்த ஆக்ஷேபனைக்கும் சந்தேகத்திற்கும் ஆதாரமாக யாதொரு சாக்ஷியமுமில்லை என்று மனுதார்களின் வக்கீல் பதில் சொன்னார். யாதொரு தீர்மானத்திற்காகவும் இனி இந்த மனு கீழ்க்கோர்ட்டிற்கு அனுப்பப்படவேண்டியது அனாவசியமென்று சொல்லி ஏற்கனவே சொல்லப்பட்டதுபோல ஏல விற்பனையை ரத்து செய்து விட்டார்கள்.

---

ஜட்ஜிகள் :—மிஸ்டர் சங்கர நாயர்,
,, மிஸ்டர் ஸ்பென்சர்,
முன்பாக.

### ஜலத்தீர்வைத் தகரார்கள்.

விசாகப்பட்டணம் ஜில்லா ஜட்ஜிசெய்த தீர்ப்புகளுக்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் செய்துக் கொள்ளப்பட்ட அப்பீல்களை கோர்ட்டார் ஒருவாரம் வரையில் விசாரணை செய்து தீர்ப்பு சொன்னார்கள். விசாகப்பட்டணம் ஜில்லா எட்டி கோப்பா கிராமத்தில் கவர்ன்மெண்டாருக்குப் பங்குகளிருக்கின்றன. இன்னும் சிலருக்கும் பங்குகளிருக்கின்றன. இந்த அப்பீல்களில் இரு தரப்பாரும் கக்ஷிககாரர்களாகவிருக்கிறார்கள். பாத்திதையை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அந்த வியாஜ்ஜியத்தில் பயனை எட்டி கோப்பா கிராமங்களுக்கும் அதற்கு கீழேயிருக்கும் கவர்ன்மெண்டு கிராமங்களுக்கும் 1-க்கு 2-வீதம் ஜல சப்ளையை ஒழுங்கு படுத்தும் பொருட்டு கவர்ன்மெண்டார்கள் அணைபோடும்படி உத்திரவு செய்திருக்கிறார்கள். கூட்டு பாகஸ்தர்கள் ஜலத்தில் மூன்றில் ஒரு பாகத்திற்கு பாத்தியதையுடையவர்கள் எனறு ஒரு கவர்ன்மெண்டு உத்திரவும் பிறந்திருக்கிறது. இத்தியாதி ஆதாரங்களை முன்னிட்டு கூட்டுப்பங்குக்காரர்கள் மூன்றில் ஒரு பங்கு ஜலம் தீர்வையின்றி அடையலாமென்று தீர்மானித்து கவர்ன்மெண்டாரிடமிருந்து வரவேண்டிய காலாவதியாகப் போகாத தொகைகளுக்கு டிககிரி கொடுத்தார்கள். ஆனல் அந்த மூன்றில் ஒருபாக ஜலத்தைக்கொண்டு கூட்டுப்பங்குக் காரர்கள் என்ன வேண்டுமானாலும் செய்துக்கொள்ளலாமென்று கூட்டுப் பங்குக் காரர்கள் சொல்லும் சக்ஷியை சப் கோர்ட்டார் ஆதரிக்கவில்லை. சப் கோர்ட்டார் தீர்ப்புக்கு விரோதமாக் கவர்ன்மெண்டாரும் அப்பீல் செய்துக் கொண்டார்கள். கூட்டுப்பங்குக்காரர்கள் தங்களுக்குப் பாத்தியப்பட்ட ஜலத்தை என்ன வேண்டுமானாலும் செய்யலாமென்று ஆடிய கக்ஷியை சப்க் கோர்ட்டார் ஏற்றுக் கொள்ளவில்லை யல்லவா, அந்த தீர்மானத்திற்கு விரோதமாகவும் அப்பீல் செய்து கொண்டார்கள்.

அப்பீல் விசாரணை நடந்துக்கொண்டு வந்ததில் கவர்ன்மெண்டு பிளீடருக்காக டாக்டர் S. சாமிநாதனும், தூணிராணிக்காக மிஸ்டர் ப. ருசேமும்,



ஆனரபில் மிஸ்டர் நரசிம்ம ராஜா வகையராவுக்காக, ஆனரபில் மிஸ்டர், B. N. சர்மாவும் ஆஜரானார்கள். (1) தூணிராஜா, (2) எட்டி கோப்பா கிராம மொக்காஸ்தார்கள் அதாவது, ஆனரபில்மிஸ்டர், C. K. S. நரசிம்மலு ராஜாவும், அவருடைய சகோதரரும்; ஆனரபில் நரசிம்ம ராஜாவின் தூரபந்து, இரண்டு பசலிகளுக்கு சட்டவிரோதமாக கவர்ன்மெண்டாரால் வசூல் செய்யப்பட்டிருக்கும் ஜலத் தீர்வையை வரப்பீஸ் பெற்றுக் கொள்ளுவதற்காகவும் ஆனரபில் மிஸ்டர் நரசிம்மராஜா அவர்களும், அவருடைய குடும்பத்தாராலும் இரண்டு வியாஜ்ஜியங்கள் செய்துக்கொள்ளப்பட்டன. தூணிராஜா ஒரு பசலியில் வசூல் செய்யப்பட்ட பணத்தை கவர்ன்மெண்டாரிட மிருந்து பெற்றுக் கொள்வதற்காக வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். ஒரு வியாஜ்ஜியம் சம்பந்தப்பட்டவரையில் தூணிராஜாவும் அப்பீல் செய்துக் கொண்டிருக்கிறார். கவர்ன்மெண்டாரும் அப்பீல் செய்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லா வியாஜ்ஜியங்களிலும், எட்டிகோப்பா கிராமத்தின் வழியாக கவர்ன்மெண்டு கிராமங்களுக்குப் பாயும் வராக ஆற்றின் ஜலத்தில் மூன்றில் ஒரு பாகத்தைத் தாங்கள் உபயோகப் படுத்திக்கொள்ள தங்களுக்குப் பாத்தியதையிருக்கிறதென்றும் ஞாபகத்திற்கு எட்டாத காலமுதலிருக்கும் பாத்தியத்தாலும் வழக்கத்தாலும் கவர்ன்மெண்டாருடன் செய்துக்கொண் டிருக்கும் ஏற்பாட்டாலும் கூட்டுப்பங்குக்காரர்களால் போடப்பட்டிருக்கும் அணையின் ஜலத்தில் மூன்றில் ஒரு பாகத்தை அவர்கள் என்னவேண்டுமானாலும் செய்துக் கொள்ளலாமென்று பாத்தியம் பாராட்டுகிறார்கள். 1895ளுல்நடந்தவியாஜ்ஜியத்தில் கவர்ன்மெண்டாரே கூட்டுப் பங்குககாரர் அணைப்போடக் கூடாதென்று தடுத்தார்கள். முடிவில் சப் கோர்ட்டாருடைய டிக்கிரி உறுதிப்படுத்தப்பட்டது.

---

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ்,
ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரியார்.

### பாதாரக்குடி மடக்கேஸ்.

பாதாரக்குடி மடாதிபதி பாதாரக்குடி கிராமம் தனக்குச் சொந்தமென்று தம்முடைய பாத்தியதையை ஸ்தாபிக்க ருமநாதபுரம் சப் கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்திருந்தார். நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் ஷை மடாதிபதியை குருவாகக் கொண்டவர்கள், மடாதிபதி பிரஸ்தாப வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்ததை முன்னிட்டு ஷை குருவுக்கும் நாட்டுக்கோட்டை செட்டிமார்களுக்கும் மனஸ்தாபமும் சச்சரவு முண்டாகி நாட்டுக்கோட்டை செட்டிமாருடைய கோர்ட்டு நடவடிக்கையின் பேரில் ஷை கிராமம் ஜப்தி செய்யப்பட்டது.

சப் கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தை வெகு நாள்வரையில் சாரணை செய்து பிரஸ்தாப மடம் உடுப்பி மடத்தைப்போ லொத்ததென்றும் நாட்டுக் கோட்டை செட்டிமார்கள் நீண்ட காலமாக தாவா கிராம மானேஜ்மெண்டில் சம்பந்தப்பட்டு வந்திருக்கிறார்கள் என்று ருஜுப்படுகிறதென்றும் தாவா கிராமம் மடாதிபதிக்குச் சொந்தமென்றும் ஆனல் அந்த கிராம மானேஜ்மெண்டில் நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் கலந்துகொள்ள பாத்தியப்பட்டவர்கள் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

இந்த தீர்ப்புக்கு விரோதமாக இருதரப்பார்களும் ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்ள, ஐக்கோர்ட்டார் மடாதிபதியே தாவா கிராமங்களுக்கு ஏகாங்கியாய் சுதந்தரமுடையவர் என்று சொல்லி மடாதிபதி பக்கம் தீர்ப்பு சொன்னார்கள்.

ஐக்கோர்ட்டில் அப்பீல் நடவடிக்கை நடத்தப்பட்டு வரும்போது கிராமம், கோர்ட்டாரால் நியமிக்கப்பட்டு வந்த ஒரு ரிசீவரால் மானேஜ்மெண்டு செய்துவரப்பட்டது என்றும் ரிசீவரை நீக்கி கிராமத்தை மடாதிபதியிடம் ஒப்புவிக்கும்படி ஐக்கோர்ட்டில் ஒரு மனு மடாதிபதி தரப்பில் அக்டோபர் மாதம் 16ந்தேதி செய்துகொள்ளப்பட்டது. நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் தாங்கள் ஐக்கோர்ட்டுத் தீர்ப்புக்கு விரோதமாக பிரிவி கவுன்சிலில் அப்பீல் செய்துகொள்ளப் போகிறதாகவும் அதற்காக அனுமதி கொடுக்கவேண்டுமென்றும் பிரிவி கவுன்சிலர்கள் தீர்ப்பு சொல்லும் பரியந்தம் இப்போதிருக்கும் ரிசீவரே கிராமத்தை மானேஜ்மெண்டு செய்து வரவேண்டுமென்றும் ஒரு எதிர் மனுதாக்கல் செய்தார்கள்.

கோர்ட்டார் இருதரப்பு லாயர்கள் பேசினதைக் கேட்டுக்கொண்டு ரிசீவர் நீக்கப்பட்டு கிராமம் மடாதிபதியிடம் ஒப்புவிககப்பட வேண்டுமென்றும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் பிரிவி கவுன்சிலுக்கு அப்பீல் செய்துகொள்ளலாமென்றும் உத்திரவு செய்தார்கள்.

மெசர்ஸ் T. R. ருமச்சந்திர அய்யரும் G. S. ருமச்சந்திர அய்யரும் மடாதிபதி தரப்பிற்கும், மெசர்ஸ் S. சீனிவாசய்யங்காரும் S. கிருஷ்ணசாமி அய்யரும் செட்டிமார் தரப்பிற்கும் ஆஜரானார்கள்.

---

ஜட்ஜி :—மிஸ்டர் பேக்வெல்......முன்பாக.

### அன்னியதேசத் தீர்ப்பின்பேரில் வியாஜ்ஜியம்.

இங்கிலாண்டிலிருக்கும் ஒரு ஐக்கோர்ட்டுத் தீர்பை ஆதாரமாகக்கொண்டு மிஸ்டர் D. கேமர் என்பவர் C. குமாரசாமி செட்டிபேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரதிவாதி சொன்ன கக்ஷி என்னவென்றல் இங்கிலாண்டில் யாதொரு வியாஜ்ஜிய மூலமும் உண்டாகவில்லை என்றும் இங்கிலாண்

டில் நடந்த வியாஜ்ஜியத்திற்கு தமக்கு சம்மன் அனுப்பப்படவில்லை என்றும் தாம் இந்தியாவில் வசித்து வருகிறபடியால் இங்கிலாண்டு ஐக்கோர்ட்டார் மிஸ்டர் சேமர் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தைப் பிடிப்பதற்கு அதிகாரமில்லை என்றும் ஆகவே வாதி மோசடியாய் இங்கிலாண்டில் தீர்ப்பு பெற்றிருக்கிறார் என்றும் சொன்னார்.

பிரதிவாதிக்காக ஆஜரான மெசர்ஸ் C. P. ராமசாமி அய்யரும் C. A. மாகாதேவ அய்யரும் இங்கிலாண்டு ஐக்கோர்ட்டு விதிகளை அனுசரித்து (Supreme Court Rules) வாதி இந்தியாவிலிருக்கும் பிரதிவாதிக்கு சம்மன் அனுப்பினதாக வாதி ருஜூப்படுத்த வேண்டுமென்றும் இங்கிலாண்டில் வியாஜ்ஜியமூலம் உண்டாயிருக்கிறதென்றும் ருஜூப்படுத்த வேண்டுமென்றும் இப்படியெல்லாம் செய்தாலொழிய இங்கிலாண்டு கோர்ட்டு வியாஜ்ஜியத்தைப் பிடிக்க அதிகாரமற்ற கோர்ட்டு என்றும் ஆகவே வாதி இங்கிலாண்டு கோர்ட்டில் பெற்ற தீர்ப்பு பிரதிவாதியை கட்டுப்படுத்த மாட்டாதென்று கக்ஷி சொல்லி அவருடைய கக்ஷிக்கு ஆதாரமாக அனேக தீர்ப்புகளை எடுத்துக் காண்பித்தார்.

வாதி தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் கூஷாமியர் ஆஜராகி வாதி போதுமானபடி கேசை ருஜூப்படுத்தியிருக்கிறார் என்று சொன்னார். கேஸ் விசாரணை நடந்து வருகின்றது.

---

ஜட்ஜி:—மிஸ்டர் சதாசிவ அய்யர்.

மிஸ்டர் C. ராஜகோபால் அய்யங்காருடன் பாரிஸ்டர் மிஸ்டர் E. S. W. சேனாதி ராஜா, குற்றவாளியை விட்டுவிடும்படி கோயமுத்தூர் செஷன் ஜட்ஜி செய்த உத்திரவிற்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு கிரிமினல் அப்பீலில் குற்றவாளி தரப்பில் ஆஜராகிப் பேசினார். கேசின் விபரம் என்னவென்றால் கதிர் அம்மாள் என்பவள் குற்றவாளியிடம் ஒரு அடமானப் பத்திரம் கொடுத்து வைத்திருந்ததாகவும் அதை குற்றவாளி மோசம் செய்துவிட்டதாக ஈரோடு சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன்பாக குற்றம் சாட்டினாள். மாஜிஸ்டிரேட்முன் குற்றம் சாட்டப்படுவதற்கு முந்தி கதிர் அம்மாள் போலீசாரிடம் ரிப்போர்ட் செய்தாள். போலீசார் விசாரணைசெய்து ரிப்போர்ட் பொய்யென்று முடிவு செய்தார்கள். ஈரோடு சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட் கேசை விசாரணை செய்து பிரியாதி தரப்பில் சொல்லியிருக்கும் சாக்ஷிகளுடைய வாக்குமூலம் நம்பப்படக்கூடியதாயில்லை என்று தீர்மானித்து குற்றவாளியை விடுவித்து விடும்படியாக உத்திரவு செய்தார்கள்.

சிலகாலம்சென்று கதிர் அம்மாள் கோயமுத்தூர் செஷன் ஜட்ஜியிடம் அப்பீல் செய்துகொண்டாள்.

கோயமுத்தூர் செஷன் ஜட்ஜி அப்பீலை விசாரணை செய்து குற்றவாளியை விடுவித்துவிட்டு அவனை மறுபடியும் விசாரணை செய்யும்படியாக உத்திரவு பிறப்பித்தார்கள்.

இந்த உத்திரவிற்கு விரோதமாக குற்றவாளி ஐக்கோர்ட்டில் கிரிமினல் ரிவிஷன் மனு தாக்கல் செய்தான்.

குற்றவாளியின் லாயர் சொன்ன கக்ஷி என்னவென்றால் பிரியாதி செஷன் ஜட்ஜியிடம் மிகுந்த தாமதமாய் அப்பீல் செய்துகொண்டிருக்கிறார்கள் என்றும் ஈரோடு சப் டிவிஷன் மாஜிஸ்டிரேட் கேசை முழுதிலும் விசாரணை செய்து கேஸ் ருஜூப்படவில்லை என்று தீர்மானித்து குற்றவாளியை விடுதலை செய்திருக்கிறார் என்றும் செஷன் ஜட்ஜி மாஜிஸ்டிரேட்டின் உத்திரவில் பிரவேசித்ததில் தவறிப்போயிருக்கிறார் என்றும் மேலும் பிரியாதி கொண்டுவந்திருக்கும் கேஸ் சிவில் சுபாவமுடையதென்றும் வாதித்தார். பாரிஸ்டர் மிஸ்டர் V. ரெத்தனசோமநாதன் பிரியாதியின் தரப்பிற்கு ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் செஷன் ஜட்ஜி உத்திரவை ரத்து செய்து மாஜிஸ்டிரேட் உத்திரவை உறுதிப்படுத்தினார்கள்.

---

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்,
ஜட்ஜி மிஸ்டர் ஹானே.

ஒரு ஏஜன்சி கேஸ்.

ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங், ஜட்ஜி மிஸ்டர் ஹானே கூடிய கோர்ட்டார் விசாகப்பட்டணம் கவர்ன்மெண்டு ஏஜண்டால் ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பப்பட்ட ஒரு கேசின் ரிக்கார்டுகளை பரிசீலனை செய்து தீர்ப்பு சொன்னார்கள். கேசின் விபரம் என்னவென்றால் ஒருவன் கொலைக் குற்றத்தைச் செய்துவிட்டதாக போலிசார் மால்கசுன்கரி தாலுக்கா மாஜிஸ்டிரேட்டின் முன்னில் குற்றம் சாட்டினார்கள். மாஜிஸ்டிரேட் கேசை விசாரணை செய்து கடுங்காயம் விளைவித்த குற்றம் குற்றவாளியின்பேரில் குற்றஸ்தாபனை செய்து மூன்று மாதம் கடுங்காவல் தண்டனை விதித்தார். குற்றவாளியின்பேரில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டதே ஒழிய கடுங்காயம் விளைவித்த குற்றம் சாட்டப்படவில்லை. மாஜிஸ்டிரேட் குற்றத்தை மாற்றி விசாரணை செய்திருக்க வேண்டுமென்று விசாகப்பட்டணம் கவர்னருடைய ஏஜண்டு இந்தக் கேசை ஐக்கோர்ட்டாருக்கு அனுப்பினார். மாஜிஸ்டிரேட் அம்மாதிரி விசாரணை செய்து குற்றவாளியைத் தண்டிக்க அதிகாரமில்லை என்று சொல்லி குற்றஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்துசெய்து குற்றவாளியை செஷன் விசாரணைக்கு கமிட் செய்யும்படி உத்திரவு செய்தார்கள்.

---

OFFICE OF THE REGISTRAR ... 2-FEB 1915 MADRAS

# இந்திய சட்ட கெஜட்.

உயர்தர மாதாந்திர சஞ்சிகை.

ந. ராதாகிருஷ்ண கம்பெனியாரால்

பதிப்பிக்கப்பட்டு பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது.

வால்யம் 7.] சென்னப்பட்டணம் 1914ஹு நவம்பர் அண்டு டிசம்பர்மீ [பாகம் 3 & 4.

## அடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தர்ஜமா செய்து அச்சிடும் விதி | 77 |
| 2. | ஜட்ஜிகளுடைய அபிப்பிராயத்தில் பிரவேசித்தல் | 78 |
| 3. | ஜட்ஜியும் லாயரும் | 79 |
| 4. | ஜியார்ஜ்டவுன் கொலைக்கேஸ் | ,, |
| 5. | ரிஜிஸ்டர் கட்டணம் ஒரு வரியா | ,, |
| 6. | ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் | 80 |
| 7. | நவம்பர்மீ த் தீர்ப்புகள் | 81 |
| 8. | கேஸ்களுடைய ரிப்போர்ட்டுகள் | 82 |
| 9. | ருதுமதி விவாக மசோதா ஆக்ட் | 93 |
| 10. | நடை முதல் வியாஜ்ஜியங்கள் | 97 |
| 11. | ஐக்கோர்ட்டு நான்காவது கிரிமினல் செஷன்ஸ் | 100 |
| 12 | ஹிந்துலா | 103 |
| 13. | சமீபத்தில் ஜாரி செய்யப்பட்ட முக்கிய தீர்ப்புகள் | 104 |
| 14. | சென்னை சட்ட நிரூபண சபை | 109 |
| 15. | எங்களுடைய கக்ஷிக்காரர்களுடைய பக்கம் | 112 |
| 16. | யுத்தம் | 113 |
| 17. | நடைமுதல் வியாஜ்ஜியங்கள் | 117 |
| 18. | மதிராஸ் ஐக்கோர்ட்டின் முக்கிய தீர்ப்புகள் | 121 |
| 19. | எங்களுடைய கக்ஷிக்காரர்கள் பக்கம் | 122 |
| 20. | சமீபகாலத்தில் ஜாரி செய்யப்பட்ட ஐக்கோர்ட்டு தீர்மானங்கள் | 123 |

---

## சந்தா விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வருஷ சந்தா | ரூபா 5 0 0 | மூன்று மாதத்திற்கு | ரூபா 1 8 0 |
| ஆறுமாதத்திய சந்தா | ,, 3 0 0 | (தபால் சார்ஜ பிரத்தியேகம்) | |

சிங்கப்பூர் பினங் முதலிய பிரதேசங்களுக்கு (தபால் சார்ஜ் உள்பட) .... .... ரூபா 6 0 0

சந்தா தொகையை அட்வான்சாகவே கட்டவேண்டியது அவசியம்.

# விஞ்ஞாபனம்.

(1) திருச்சினுப்பள்ளி ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் G. K. ரங்கஸ்தாஸ் அவாகள் நம்முடைய வாவை ஏற்று உபசரித்து இந்திய சட்ட கெஜெட்டின் அபிவிருத்திக்காக 25 நன்கொடை கொடுத்து போஷகர் ஜாப்திாவில் தங்களுடைய பெயரை தாக்கல் செய்துக்கொள்ளும்படியாக நமக்கு உத்திா வளிப்பதற்காக மனமாற வந்தனமளிக்கின்றோம். இவர்கள் ஸ்ரீரங்கத்தில் தர்மப் பிரபுவாக விளங்காநின்ற சாவுக்கார் மிஸ்டர் கோபாலதாஸ் அவர்களுடைய குடும்பத்தில் ஜெனித்து 200 வருடங்களுக்கு முந்தி ஸ்தாபிக்கப்பட்டு வந்து இயற்கையில் இவருடைய வசத்திற்கு வந்த தர்மங்களை நிர்வகித்துக்கொண்டு வருகிறபடியாலும் தெய்வ பக்தி நிரம்பப் பெற்றவராயு மிருக்கிறபடியால் இவருடைய திருவுருப் படத்தை நம்முடைய கெஜெட்டின் அடுத்தசஞ்சிகையில் பிரசுரிக்கத் தீர்மானித்திருக்கிறோம்.

(2) திருச்சினுப்பள்ளி கோட்டையி லிருக்கும் ஸ்ரீமான் சிதம்பர ரெட்டியார் அவர்கள் நம்முடைய இந்தியாதேச சட்ட கெஜெட்டின் அபிவிருத்தியை நாடி ரூ. 15 நன்கொடை கொடுத்து உதவி யிருப்பதற்காக அவர்பால் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றோம்.

ந. ராதாகிருஷ்ண அண்டு கோ.

---

ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் வாங்குகிறவர்களுக்கு முக்கியம்!

## மாதிரி தேவை.

இதுவரையில் ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் வாங்கிக்கொண்டுவந்த ஜனங்களுக்கு இனிமேல அம்மாதிரியான சாமான்களை இங்கிலாண்டில் தயார் செய்து சப்ளை செய்யும்பொருட்டு அடியிற்கண்ட பத்திரிகை ஏற்பாடு செய்துகொண் டிருக்கிறது. இந்த விஷயத்தில் பற்றுடையவர்கள் அடியிற்கண்ட பத்திரிகைக்கு சாமான்களின் மாதிரி அனுப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி சாமான்கள் யாரால் இங்கிலாண்டில் தயார் செய்யப்படுகின்றனவோ அவர்களுக்கு அனுப்பப்படும். அவர்கள் மாதிரி அனுப்பியவர்களுக்கு விலை முதலிய விபரம் எழுதுவார்கள்.

இந்த ஏற்பாட்டால் இங்கிலாண்டில் யார் யார் இந்த சாமான்களைத தயார் செய்கிறார்கள் என்று அறிந்துகொள்ளக் கூடும். ஜெர்மனி ஆஸ்டிரியா சாமான்கள் பர்த்தி படுத்தப்படுவதற்கு வசதியாக விருக்கும். மாதிரி அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். பப்ளிஷர்,

பிரிடிஷ் டிரேட் ஜோர்னல்,

24, மார்க் சந்து லண்டன், இங்கிலாண்டு,

## The Best Silver Wrist Watch.

## கையில் கட்டிக்கும்படியான மாக உயர்ந்த வெள்ளி கெடியாரம்.

இது உயர்ந்த சாமான்களால் செய்யப்பட்ட ஸ்விஸ் மேக்கர், மதிராஸ் கோட்டை குண்டுக்கு சரியான டையம் காட்டும். அடிக்கடி ரிப்பேர் செய்வதற்கு இடம் கொடுக்காத வலுவும் உறுதியான கெடியாரம். இது எங்களுக்காகவே தயார் செய்யப்பட்டு வந்திருக்கிறது. கெடியாரத்திற்குள்ளே யிருக்கும் சாமான்கள் பூட்டுவதற்கு சாதாரண திருகு ஆணிகள் போடப்படுவதற்குப் பதிலாக கெம்பு வைக்கப்பட் டிருக்கிறது. சாவி தலையின் பேரி லிருக்கிறது. நேர்த்தியான லிவர் வாச்; ஒரு தடவை சாவி கொடுத்தால் 36 மணி நேரம் ஓடும்.



சாதாரணமாக சில்லரைக் கடைகளில் கெடியாரம் ஒன்றுக்கு 15 ரூ. க்குக் குறைவாக கிடைக்க மாட்டாது. ஆனால் கைக்கு கட்டிக்கொள்ளும் இங்கிலீஷ் தோல் பட்டையுடன் ரூ. 8க்கு விற்று வருகிறோம்.

N. S. ரும் அண்டு கோ,

49, ஆச்சாரப்பன் வீதி,

ஜியார்ஜ்டவுன் சென்னை.



# The Indian Law Gazette.

## இந்திய சட்ட கெஜெட்.

பிரதிமாதமும் கடைசிவாரம் பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யம் 7.] சென்னப்பட்டணம், 1914ளு நவம்பர்மீ [பாகம் 3.


## THE TRANSLATION AND PRINTING RULE.

### தஸ்தாவேஜிகளை தர்ஜமா செய்து அச்சிடும் விதி.

—:o:—

ஐக்கோர்ட்டு அப்பில் விசாரணை நடவடிக்கைக்காக கீழ்க்கோர்ட்டு ரிக்கார்டுகள் தர்ஜமா செய்யப்பட்டு அச்சிடப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதற்காக சில விதிகளும் ஐக்கோர்ட்டாரால் ஏற்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. இந்த விதிகளில் சில குறைவுபாடுக ளிருக்கின்றன என்று சில கக்ஷிக்காரர்களும் லாயர்களும் குறை கூறுகின்றார்கள். தர்ஜமா செய்வதற்காகவும், அச்சிடுவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகள் ஒரே விதமாக அனுஷ்டிக்கப்படுகிறதில்லை என்றும் அந்தந்த ஜட்ஜியின் நோக்கத்தின்படியும் இஷ்டத்தின்படியும் அமுல் நடத்தி வருகிறார்கள் என்றும் ஆகலால் சிற்சில சமயங்களில் நியாய விரோதம் உண்டாகும்படி நேரிடுகிறதென்று சில காலமாக புகார் கிளம்பி யிருக்கிறது. தஸ்தாவேஜிகளை தர்ஜமா செய்வது அச்சிடுவது அப்பீல்களை விசாரணை செய்யும் ஜட்ஜிகளின் சௌகரியத்திற்காகவே ஒழிய மற்றப்படி கக்ஷிக்காரர்களின் சௌகரியத்திற்காகவல்ல. தஸ்தாவேஜிகள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தர்ஜமா செய்யப்பட்டு அச்சிடப்படாவிட்டால் 100, 100 A-ஆகிய இந்த இரண்டு விதிகளின்படி கேசை விசாரணை பயிலிலிருந்து தள்ளுபடி செய்து விடும்படியாக கோர்ட்டாருடைய கவனத்திற்கும் உத்திரவிற்கும் கொண்டுவரப் படுகின்றன. இந்த அற்ப காரணத்திற்காக கேசையே விசாரணை பயிலிலிருந்து தள்ளிப்போட ஐக்கோர்ட்டாருக்கே அதிகார மிருப்பது சந்தேகிக்கப் படுகிறது. சிலகாலம் ஐக்கோர்ட் ஜட்ஜியாகவும், அனேக காலம் லாயராகவுமிருந்து சம்பூரணமான சட்ட ஞானம் நிரம்பப்பெற்ற சர். வி. பாஷியம் அய்யங்கார் அவர்களே தஸ்தாவேஜிகள் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக தர்ஜமா செய்யப்படாததற்காகவும் அச்சிடப்படாததற்காகவும் கேசை தள்ளுபடி செய்வது சட்ட விரோதமாகுமென்று ஒரு சமயம் சந்தேகித்துக் கூறி யிருக்கிறார். சில காலத்திற்கு முந்தி எழுதப்பட்ட தஸ்தாவேஜிகளை பார்த்து லாயர்கள் ஆர்குமெண்டு செய்யும்படியாக விடப்பட்டிருந்தார்கள். இந்தக் காலத்து ஜட்ஜிகள் இப்படிச் செய்ய ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஒரு அப்பீலைச் சேர்ந்த பெரும்பாலான தஸ்தாவேஜிகள் அச்சிடப்பட்டிருந்தபோதிலும் ஆர்குமெண்டுக்கு அவசியமான அல்லது எதிர் தாப்பார் அல்லது கோர்ட்டார் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுவதற்கு அவசியமான தஸ்தாவேஜி அச்சிடப்படாமலிருந்தால் அந்த தஸ்தாவேஜி கோர்ட்டாருக்கு காண்பிக்கப்பட்டால் அவர்கள் அதைப் பார்க்க இணங்க மறுதளிப்பதை நாமென்னவென்று எடுத்துக்கூறுகின்

றது! இப்பேற்பட்ட அவசியமான தஸ்தாவேஜியை கக்ஷிக்காரன் அச்சிடத் தவறிப்போவானேயானால் அவனுக்கு அபராதம் விதிக்கவும் ஒரு விதி ஏற்பட்டிருக்கிறது. இப்படி, கோர்ட்டார் அவனுக்கு அபராதத்தைப் போட்டுவிட்டாவது அந்த தஸ்தாவேஜியை பார்வையிடுவது நலமாயிருக்கும். அப்படியும் செய்யாமல் அச்சிடப்படாத தஸ்தாவேஜியை பார்க்க ஒப்புக்கொள்ளவே ஒப்புக்கொள்ள மாட்டோம் என்று கண்டிப்பான விதி ஏற்படுத்துவது நியாய பரிபாலனத்திற்குப் பொருந்தின காரியமாயில்லை. ஒரு தஸ்தாவேஜி தர்ஜமா செய்யப்பட்டு அச்சிடப்படாவிட்டால் எதிர் கக்ஷிக்காரனுக்கு அதில் அடங்கி யிருக்கும் விஷயங்கள் எப்படி தெரியுமென்றும் ஆதலால் எல்லா தஸ்தாவேஜிகளும் அச்சிடப்பட்டே தீரவேண்டுமென்று கட்டாயப் படுத்தப்படவேண்டுமென்று சிலர் கக்ஷி சொல்லக்கூடும். ஆனால் இந்தக் கக்ஷி ஏற்றுக்கொள்ளக்கூடிய கக்ஷி அல்ல. ஏனெனில் அச்சிடப்படவேண்டிய தஸ்தாவேஜிகள் கீழ்க்கோர்ட்டில் நடந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜிகளே ஒழிய மற்றப்படி வேறே தஸ்தாவேஜி அல்ல. அங்ஙனமிருக்க எல்லா தஸ்தாவேஜிகளிலும் அடங்கியிருக்கும் விஷயங்களை கக்ஷிக்காரன் அறிந்துகொண்டிருக்கக் கூடும். ஆதலால் அப்பீல் விசாரணையில் ஒரு தஸ்தாவேஜி அச்சிடப்படாததால் தனக்கு அந்த தஸ்தாவேஜியிலிருக்கும் சமாசாரம் தெரியாமல் அதற்குத் தான் பதில்சொல்ல முடியாமற் போய்விட்டதென்றும் ஆதலால் தன்னுடைய கேஸ் கெட்டுப்போய் விட்டதென்று புகார் செய்ய நியாயமில்லை. தஸ்தாவேஜிகளை தர்ஜமா செய்து அச்சிடுவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகள் சாக்ஷி வாக்குமூலங்களை ஏற்றுக்கொள்ளுவதற்காகவும், ரெக்கார்டுகளைப் பார்வையிடுவதற்காகவும் செய்யப்பட்டிருக்கும் விதிகளைப்போலொத்தகண்டிப்பானவிதிகளல்ல. எப்படியிருந்தபோதிலும் ரிக்கார்டுகளை அச்சிடும் விதிகள் சம்பந்தப்பட்ட வரையில் அற்ப தவறுதல்களுக்காக கக்ஷிக்காரர்கள் கேசை இழந்துபோகும்படியாக விடுவது கிரமமான காரியமாயில்லை. ஆகையால் இந்த விதிகளை சீர்திருத்தி ஒரே விதமாய் அமுல் நடத்தி வரும்படியாக மிகவும் வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

## LITIGATION IN ENGLAND.
### இங்கிலாண்டில் வியாஜ்ஜியங்கள்.

—:o:—

சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு ஜட்ஜிகளில் ஒருவராயிருந்த ஜட்ஜி சர்ஜான் வாலிஸ் அவர்கள் ஐக்கோர்ட் பிரதம ஜட்ஜியாக நியமிக்கப்பட்டபோது அட்வோக்கேட் ஜெனரலாகவிருக்கும் ஆனரபில் மிஸ்டர் F. H. M. கார்பட் அவர்கள் ஷை ஜட்ஜி அவர்கள் பிரதம ஜட்ஜியாக நியமிக்கப்பட்டதில் தமக்கும் சென்னை ராஜதானியிலுள்ள மற்ற லாயர்களுக்கும் உண்டாயிருக்கும் சந்தோஷத்தை வெளிப்படுத்திப் பேசினார். அந்த சமயத்தில் சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டில் பிரதம ஜட்ஜியால் செய்யப்படவேண்டிய சில சீர்திருத்தங்களையும் சுட்டிக் காண்பித்தார். இந்த சந்தர்ப்பத்தில் இங்கிலாண்டின் ஜனத்தொகை சென்னை ராஜதானியின் ஜனத்தொகையைவிட குறைவாகவிருந்தபோதிலும் இங்கிலாண்டில் வருடம் ஒன்றுக்கு 14-லக்ஷம் வியாஜ்ஜியங்கள் தாக்கலாகி வரும்போது சென்னை ராஜதானியில் 4-லக்ஷம் வியாஜ்ஜியங்கள்தான் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் எடுத்து காட்டினார்.

## KAISER IN THE POLICE COURT.
### போலீஸ் கோர்ட்டில் கேய்சர்.

—:o:—

நிகழ் நவம்பர்மீ 13உ ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கேய்சரை ஒரு பிரிடிஷ் ஆகாயக்கப்பல் தூக்கிக்கொண்டு வந்து கைதிசெய்து கல்கத்தாபோலீஸ் கோர்ட்டில் வைத்திருப்பதாக பரவிவந்த வதந்தியை ஜனங்கள் உண்மை என்று நம்பி கூட்டம் கூட்டமாக சென்று பார்த்து ஏமாந்து போனார்கள் என்று நியூ இந்தியா பத்திரிகை கூறுகின்றது.

## A FIRE IN THE HIGH COURT.
### ஐக்கோர்ட்டில் ஒரு சிறிய தீவிபத்து.

—:o:—

நிகழ் நவம்பர்மீ 14உ ஐக்கோர்ட்டுமேல் தளத்தின் பேரிலிருக்கும் வக்கீல் சங்கத்தின் புஸ்தகமாலில் ஆடிக்கொண்டிருந்த மின்சாரபங்கா தீபிடித்துக் கொண்டது. ஆனால் கவர்ன்மெண்டாரால் பெரிய கட்டடங்களுக்கு சப்ளை செய்யப்பட்டிருக்கும் நெருப்பு அவிக்கும் யந்திரத்தால் அத்தீ உடனே அணைக்கப்பட்டுப் போய்விட்டது. யாதொரு சேதமுமில்லை. ஆனால் ஷை அறையில் கட்டப்பட்டிருந்த சொலிசிட்டர் மிஸ்டர் ஸ்பிரிங் பிரான்சனுடைய உருவப்படத்தின் வர்ணம் மட்டிலும் சிறிது மக்கிப் போய்விட்டது.

## A STRANGE BIRTH.
### ஒரு விநோதமான பிரசவம்.

திருப்பூருக்கு சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் கோர்ட்டு காரியஸ்தனாகயிருக்கும் ஒரு நாயருடைய பெண்சாதி 9-மாதங்களுக்குள் மூன்று குழந்தைகளை பிரசவித்தனள். முதல் குழந்தை 1914 பிப்ரவரிமீ த்தில் பிறந்தது. 4-அல்லது 5-மாதம் சென்று அவள் நோயாயிருந்தாள். அக்டோபர்மீ த்தில் அவள் இன்னொரு குழந்தை பிரசவித்தாள். அதற்கு 6-நாட்கள் சென்ற பிறகு மூன்றுவது குழந்தையை ஈன்றனள். முதல் குழந்தை இன்னும் ஜீவதிசையிலிருக்கிறது. மற்ற இரண்டு குழந்தைகளும் இறந்துபோய்விட்டன. தாயார் மிகவும் பலஹீனமான ஸ்திதியிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

## INTERFERENCE WITH JUDGES' DISCRETION.
### ஜட்ஜியின் நோக்கத்தின் பிரவேசித்தல்.

—:o:—

தென் ஆர்க்காடு சப் ஜட்ஜி ஒரு பெரிய கேசை நீண்ட காலமாக விசாரணை செய்துவந்தார். மற்ற கேசின் கக்ஷிக்காரர்கள் அவர்களுடைய கேஸ் விசாரணை செய்யப்படாமல் காத்துக் கொண்டிருப்பதாக ஜில்லா ஜட்ஜி சப் ஜட்ஜிக்கு எழுதி விசாரணை செய்யப்பட்டுவந்த பெரிய கேசின் விசாரணையை இரண்டுமாத காலம் தள்ளிவைக்கும்படியாக உத்திரவு செய்தார். சப் ஜட்ஜி அதே மாதிரியாக கேசின் விசாரணையைத் தள்ளிவைத்தார். சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர்கள் இந்த சமாசாரத்தை ஐக்கோர்ட்டாருடைய கவனத்திற்குக் கொண்டுவர ஐக்கோர்ட்டார் ஜில்லா ஜட்ஜி சப் ஜட்ஜியின் அபிப்பிராயத்தில் பிரவேசித்ததாக தீர்மானித்து கேசின் விசாரணையைத் தள்ளிவைத்த உத்திரவை ரத்து செய்துவிட்டு சப் ஜட்ஜியின் இஷ்டம்போல விசாரணை நடத்தும்படி உத்திரவு செய்தார்கள்.



## THE JUDGE AND THE LAWYER.
### ஜட்ஜியும் லாயரும்.

நிகழ்மீ 7உ ஐக்கோர்ட்டு அசல் தரப்பில் ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல் முன்பாக ஒரு கேசைப் பற்றி வக்கீல் மிஸ்டர் K. சீனிவாசய்யங்கார் ஆர்குமெண்டு பேசிக்கொண்டிருந்தபோது ஜட்ஜி வக்கீலைப்பார்த்து "நீர் சொல்லும் சட்ட சித்தாந்தம் போல இந்த நான்கு சுவர்களுக்குள்ளாக இதற்கு முன் எவரும் பிரஸ்தாபித்ததில்லை" என்று சொன்னார். வக்கீலுக்கு உடனே மயிர் கூச்சல் உண்டாகி உடனே அடியிற் கண்டபடி பதில் கூறினார். "ஆம்! மைலார்ட்! இப்பேர்ப்பட்ட சித்தாந்தங்களை இந்த சுவர்கள் கேட்டதில்லை என்பது வாஸ்தவம்தான். கேசில் உண்டாகும்படியான சட்ட சம்பந்தமான சிறிய பிரஸ்னைகளையும் விஷய சம்பந்தமான சிறிய பிரஸ்னைகளையும் ஜட்ஜிகள் அறிந்து கொண்டிருப்பார்கள் என்று லாயர்கள் எதிர்பார்க்கிறார்கள்" என்று பதில் சொன்னார்.

## GEORGETOWN MURDER CASE.
### ஜியார்ஜடவுன் கொலைக்கேஸ்.

நிகழ் மீ த்தில் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட் செஷன் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்ட ஜியார்ஜடவுன் கொலைக்கேஸ் மிக முக்கியமான கேஸ். இம்மாதிரி கொலை பட்டணத்தின் மத்தியில் இதுகாறும் நடந்ததில்லை. இந்தக் கொலையில் சம்பந்தப்பட்ட அப்பாராவும், வராகனும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டார்கள். இந்தக் கேசில் சம்பந்தப்பட்ட அலமேலு மங்கைத்தாயார் அம்மாளுக்கு 7 வருட கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது. கொலை நடந்த மறுநாள் காலையிலேயே போலிசார் கொலையாளிகளை கையும் களவுமாக பிடித்துவிட்டது சிலாகிக்கக்கூடியது. போலீஸ் டிப்டி கமிஷனர் ராவ் பகதூர் பராங்குசநாயுடு அவர்கள் இந்தக் கேசை அதி சாமர்த்தியமாக கண்டு பிடித்து குற்றவாளிகளை தண்டித்து வைத்தது அவருக்கு ஏற்கனவேயுள்ள கீர்த்தியைப் பிரகாசிக்கச் செய்யும். குற்றவாளிகளுக்கு பலமான பாரிஸ்டரும், பலமான லாயர்களும் ஆஜரானார்கள் என்பதில் தடையில்லை. அப்படியிருந்தும் குற்றவாளிகளை தப்பித்துவிட சாத்தியப்படாமல் போனது உண்மையோடுவாதாட முடியாது என்பதை சித்தாந்தப் படுத்துகிறது. இந்தக் கேசை நம்முடைய கெஜெட்டு நேயர்கள் அறிந்துகொள்ளும்படியாக ஆதியோடந்தமாக எடுத்து எழுதியிருக்கிறோம். நம்முடைய நேயர்கள் வாசித்து அறிந்துகொண்டால் அதுவே நம்முடைய சிரமத்திற்குப் போதுமான பரிகாரமாயிருக்குமென்று நம்புகின்றோம்.

## A PRESS COMMUNIQUE.
### பத்திரிகைகளுக்கு ஒரு கவர்ன்மெண்டு அறிவிப்பு.

மேன்மை தங்கிய இந்தியா வைசிராயின் சட்ட சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதா ஆக்ட்டுகளுக்குள் மிருந்த தர்க்கங்களுக்கும், தகராறுகளுக்கும் இடம் கொடுக்கும்படியானவைகள் அடுத்தமுறை கூடும் மீட்டிங்கில் கவனிக்கப்படமாட்டா என்றும் இந்தியன் கிரிமினல் லா சீர்திருத்த மசோதா ஆக்ட் அடுத்த வருஷம் முதலில் கூடும் மீட்டிங்கில்கூட கவனிக்கப்படஏதுவில்லை என்றும் கோர்ட்டு நிந்தனை மசோதா ஆக்ட்டும் கிரிமினல் புரோசீஜர் கோட் சீர்திருத்த மசோதா ஆக்ட்டும், இந்த வருடத்திற்குள் கவனிக்கப்படமாட்டா என்றும் இந்தியா கவர்ன்மெண்டார் நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டிற்கு அறிவித்திருக்கிறார்கள்.

## REGISTRATION AS A MEANS OF TAXATION.
### ரெஜிஸ்டர் கட்டணம் ஒரு வரியா?

தஸ்தாவேஜிகள் ரெஜிஸ்டர்செய்யப்படுவதற்கு சர்க்காருக்காக ஒரு கட்டணம் செலுத்தவேண்டியதிருக்கிறதென்பது எல்லோரும் அறிந்த விஷயம். இந்த கட்டண விகிதங்கள் கடுமையானதாகவும் ஜனங்கள் தாங்கக் கூடாதவைவாகவு மிருக்கின்றன என்றும் இவைகள் இலகுவாக விருக்கும்படியாக பரிசீலனை செய்யப்பட்டு புதிப்பிக்கப்பட வேண்டுமென்று வெகு காலமாக ஜனத்தலைவர்கள் கவர்ன்மெண்டாருக்கு யோசனை சொல்லிக்கொண்டு வந்தும் இக்கட்டணங்கள் சீர்திருத்தப்பட்டு புதிக்கப்படவில்லை. சுமார் 4-அல்லது 5-மாத காலங்களுக்கு முன்கூட ஆனரபில் மிஸ்டர் V. K ராமானுஜாச்சாரியார் சட்ட சபையில் கவர்ன்மெண்டாருடைய கவனத்தை இழுத்தார்கள். கோர்ட்டுபீ கட்டணங்களும் ஸ்டாம்பு ஆக்ட் கட்டணங்களும் தேசத்தின்மீது போடப்பட்ட வரிகள்போல எண்ணப்பட்டு வருகின்றன அதுபோல ரிஜிஸ்டிரேஷன் ஆகட் கட்டணமும் ஒரு வரியாக எண்ணப்பட வேண்டுமா என்கிற பிரஸ்னை 1877-ல் ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் பாஸ் செய்யப்பட்டபோது உண்டானது. அப்போதிருந்த கவர்ன்மெண்டு மெம்பர்கள் மோசம் நடக்காமலிருக்கும் பொருட்டும் பாத்தியா பாத்திதைகளை கண்டு பிடிக்க வசதி செய்யும் பொருட்டும் பத்திரங்கள் பதிவு செய்யப்பட வேண்டுமென்பதும் அதற்காக கட்டணம் செலுத்தப்பட வேண்டுமென்பதும் சட்டத்தின் முக்கிய கருத்துக்களேயொழிய மற்றபடி இச்சட்டத்தால் ஒரு வருமானம் சம்பாதித்துக் கொள்ள வேண்டுமென்பது கவர்ன்மெண்டாருடைய கருத்தல்ல என்று சந்தேகமன்றி வெளிப்படையாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் இந்தியா கவர்ன்மெண்டிற்கு மெம்பராகயிருந்த ஆனரபில் மிஸ்டர் காக்சால் "பத்திரப்பதிவுக்காக ஜனங்களிடம் பணம் வசூலிப்பது நன்மையைப் பயக்கக்கூடிய ஏற்பாட்டல்லவென்றும் பத்திரப் பதிவு இலாக்கா வருமானத்திற்கும் செலவிற்கும் சரிபட்டுப் போகும்படியாகமட்டிலும் போதுமான கட்டணம் வசூல் செய்யப்பட்டால் போதுமானதென்றும் கவர்ன்மெண்டாருக்கு ஒரு வருமானத்தைக் கொடுக்கும்படியாக ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் வேலை செய்யப்படக்கூடாதென்றும் பத்திரப்பதிவு இலாக்காவில்வரும் வருமானம் அந்த இலாக்கா காரியங்களுக்கே உபயோகப்படுத்தப்படவேண்டுமே யொழியமற்றபடி வேறே காரியங்களில் விநியோகப்படுத்தப்படக்கூடாதென்றும் அந்த இலாக்காவின் வருமா

னத்தைக்கொண்டு அந்த இலக்கா ஆதரிக்கப்பட்டால் அதுவே போதுமான தென்றும்" சொல்லியிருக்கிறார். அப்படியிருந்தும் கவர்ன்மெண்டார் ஆதியில் கொண்ட நோக்கம் அமுலுக்கு கொண்டு வரப்படவில்லை என்று அநுபவம் அறிவிக்கின்றது.

---

## THE HON'BLE Mr. JUSTICE T. V. SASHAGIRI IYER.

### ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர்.

---

சென்னை மாகாணத்தில் மகா பிரசித்திபெற்ற லாயராக விருந்த மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் கவர்ன்மெண்டாரால் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு ஜட்ஜியாக நியமிக்கப்பட்டபோது ஐக்கோர்ட்டு ஜட்ஜி உத்தியோகத்திற்கு அனேக யோக்கிதாம்சங்களை பொருந்தப்பெற்ற கனவானை கவர்ன்மெண்டார் தெரிந்தெடுத்து நியமித்தார்கள் என்று பொது ஜனங்களும் கக்ஷிக்காரர்களும் உத்தியோகஸ்தர்களும் அடங்கா மகிழ்ச்சி கொண்டார்கள். கனம் பொருந்திய அய்யர் அவர்கள்மீது வைத்திருந்த நம்பிக்கைக்கு ஏற்றவாறே கடந்த 6மாத காலமாக அவர்கள் ஜட்ஜி உத்தியோகக் கடமைகளைச் செய்து சட்ட விஷயங்களில் அவர்களுக்கிருக்கும் அகண்ட ஞானத்தையும் வியாஜ்ஜியங்களை விசாரணை செய்து நீதி பரிபாலனம் செய்வதில் அவர்களுக்கிருக்கும் அபாரசக்தியையும் சித்தாந்தப்படுத்தியிருக்கிறார்கள் என்று நாம் இவ்விடத்தில் எடுத்து எழுதியிருப்பதை எவரும் ஆக்ஷேபிக்க இயலாது என்று நம்புகின்றோம்.

விளையும் பயிர் முளையிலே என்பதற்கிணங்க கனம் பொருந்திய அய்யர் அவர்கள் பள்ளிக்கூடத்திலும் கலாசாலையிலும் பயிலும்போதே பின்பு ஒரு காலத்தில் அவர்கள் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருந்து பிரகாசிப்பார் என்று எண்ணுவதற்கு அவர்களிடம் அறிகுறிகள் காணப்பட்டன. மேன்மை தங்கிய அய்யர் அவர்கள் பி. யல. பரிக்ஷையில் தேறி பட்டம் பெற்ற வருடத்தில் அப்பரிக்ஷையில் வெற்றி அடைந்த மாணவர்களுக்குள் பிரதம ஸ்தானத்தில் நின்று கீர்த்தி பெற்றனர். பி. யல். பரிக்ஷையில் தேறி பட்டம் பெற்றுக்கொண்ட பிறகு வக்கீலாக ஐக்கோர்ட்டில் தாக்கல் செய்துகொண்டு தொழில் நடத்த ஆரம்பித்தார்கள். வெகு சீக்கிரத்தில் கனம் பொருந்திய அய்யர் அவர்களுடைய திருநாமம் ஜொலித்துப் பிரகாசிக்கத் தலைப்பட்டது. சென்னை முதல் கன்னியாகுமரி முனைவரையிலுள்ள கக்ஷிக்காரர்களுக்குள் அவர்களுடைய திருநாமத்தைக் கேள்விப்படாதாரிறார். லாயர் தொழிலின் உத்திரவாதத்தை மிகவும் உணர்ந்தவர். எப்பேர்ப்பட்ட முரணான கேசையும் ஜட்ஜிகள் கஷ்டமானது என்று எண்ணி அருவெறுப்புக் கொள்ளாதபடி அதை துண்டு துண்டாய்ப் பிரித்து ஒரு கதையைப் போல எடுத்துக் சொல்லுவார்கள். மிகவும் வாக்கு சாமர்த்தியம் உடையவர்கள்; நன் நடக்கையும் சாந்த குணமும் உடையவர்கள். பொருமையே கனம் பொருந்திய அய்யர் அவர்கள்போல உருவெடுத்து வந்ததோ என்று எண்ணப்படும்படியாக அவ்வளவு பொருமை குணதிசயம் பொருந்தப் பெற்றவர்கள். இவ்வளவு சிலாக்கியமான குணதிசயங்கள் பொருந்தப்பெற்று தொழில் நடத்தி கக்ஷிக்காரர்களாலும் ஜட்ஜியாலும் நன்கு மதிக்கப்பட்டு வந்தனர். மேன்மை தங்கிய அய்யர் அவர்கள் லாயர் தொழில் நடத்த ஆரம்பித்து சிலகாலம் சென்றபிறகு கவர்ன்மெண்டார் கனம்பொருந்திய அய்யர் அவர்களை உள்ளூர் சட்ட கலாசாலையின் புரொபசராக நியமித்தார்கள். இந்தப் பதவியை 1893-ம் வருடம் முதல் 1899 - வரையில் நிர்வகித்துக்கொண்டு வந்தார்கள். சட்டக் கொள்கைகளை தெளிவாக எடுத்து விவரிப்பதில் மிஸ்டர் அய்யர் அவர்கள் மிகவும் சாமர்த்தியமுடையவர் என்று அவர்களிடம் மாணக்கர்களாக விருந்தவர்கள் இப்போதும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். லாயர்த் தொழில் நடத்திவந்த காலத்தில் அத்தொழில் முறை சம்பந்தப்பட்ட கக்ஷிக்காரர்களிடத்திலும் சரி, மற்ற லாயர்களிடத்திலும் சரி ஆக எல்லாரிடமும் மிகவும் மரியாதை காட்டி நடந்துகொண்டு வந்தனர். இயற்கையிலேயே அன்பான குணமுடையவர்கள். லாயர் கூட்டத்திற்குள் மிஸ்டர் அய்யர் அவர்களுக்கிருக்கும் மதிப்பாலும் அந்தஸ்தாலும் அவர்கள் காலஞ்சென்ற சர் V. பாஷியமய்யங்கார், இப்போது ஐக்கோர்ட்டு ஜட்ஜியாகவிருக்கும் சர். C. சங்கரன்நாயர் போலொத்த ஜெகப்பிரசித்திப்பெற்ற லாயர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று எண்ணப்பட்டு வருகிறார்கள்; சென்னை மாகாண சட்ட சபையில் கனம் பொருந்திய அய்யர் அவர்கள் பொது ஜனங்களுக்கு நேரே நன்மையை பயக்கக்கூடிய அனேக விஷயங்களைப்பற்றி கவர்ன்மெண்டாரை கேள்விகேட்டு அவர்களுடைய கவனத்தை இழுத்து தேசநன்மைக்காக உழைத்து வந்திருக்கிறார்கள். மிஸ்டர் அய்யர் அவர்கள் ஜட்ஜியாக நியமிக்கப்படுவதற்கு முந்தி சட்டமாக பாஸ் செய்விக்கப்பட்ட ஹிந்துதான மசோதா ஆக்ட்டிற்கு இவர்களே பிதாவாகவிருந்து அந்த வகையிலும் தேச நன்[illegible]காக உழைத்து வந்திருக்கிறார் என்று சொல்ல[illegible]ண்டும். இந்தியாவில் இந்த கனவான்தான் இந்துலாவைச்சீர்திருத்திசட்டமாக செய்துவைக்க எத்தனித்தவர்என்றுநாம் நினைக்கிறோம். இவ்வளவு பெருமைகளும் பொருந்தப்பெற்ற ஆனரபில் ஜட்ஜி மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் அவர்கள் பல்லாண்டு பல்லாண்டாய் ஜட்ஜியாகயிருந்து கீர்த்திப் பிரகாசத்துடன் விளங்கி இந்தியர்களுக்கு இன்னும் அனேக நன்மைகளைச் செய்துகொண்டுவரும் பொருட்டு சர்வ வல்லமை பொருந்திய கடவுள் அவர்களுக்கு தீர்காயுசையும் திரண்ட செல்வத்தையும் புத்திரமித்திர பாக்கியாதிகளையும் தந்தருளி ஆசீர்வதிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்ளுகின்றோம்.

---

## LOYALTY.

### இராஜபக்தி.

---

"புதிய வனத்துக் குழந்தைகள்" என்ற தன் ஆசிரியரான ம-ள-ள-ஸ்ரீ. S.V. விவேகானந்தா அவர்களால் எழுதப்பட்டுள்ள "இராஜபக்தி" என்னும் ஒரு நூதன கிரந்தம் நம்முடைய பார்வைக்கும் அபிப்பிராயத்திற்கும் எட்டியிருக்கிறது. அதை நமக்கு அனுப்பியிருக்கும் கிரந்த கர்த்தாவுக்கு மனமார வந்தனம் தந்தனம். இக்கிரந்தத்தை பரிசீலனை செய்து அடுத்த சஞ்சிகையில் நம்முடைய அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவாம்.

---



# Notes of November Madras Decisions.

## நவம்பர் மீ த்திய மதிராஸ் ஐக்கோர்ட்டின் முக்கிய தீர்ப்புகள்.

——:o:——

(30)

அப்பீல் வியாஜ்ஜிய நெ. 121 of 1912.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்

லாப்பாயின்ட்:—ஹிந்துலா...பாகப்பிரிவினை.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்தில் 1893-ல் சகோதரர்கள் பாகப்பிரிவினை செய்துகொண்டபோது, ஊர்ணிவெட்டி தருமம் முதலியவைகள் செய்வதற்காக குடும்ப ஐவேஜியிலிருந்து ஒரு தொகை எடுக்கப்பட்டு சகோதரர்களுக்குள் ஒருவரிடம் கொடுத்து வைக்கப்பட்டிருந்தது. அந்த தருமம் நடத்தப்படாவிட்டால் அந்த தொகையை எல்லா சகோதரர்களும் பங்குபோட்டு பிரித்துக்கொள்ள வேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. தருமம் நடத்தப்படவில்லை. ஆகவே ஜீவதிசையிலிருந்த ஒரு சகோதரனின் புத்திரர்கள் ஷை தருமப்பணத்தில் தங்களுக்குச் சேரவேண்டிய ஒருபாகம் தங்களிடம் கொடுக்கப்பட வேண்டுமென்று 1910-ல் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள்.

தீர்ப்பு:—தருமத்தை நடத்த கட்டாயப்படுத்துவதற்காகவாவது அல்லது தருமத்திற்காக கொடுத்து வைக்கப்பட்ட தொகையை தருமத்தை நடத்தும் பொருட்டு வாப்ஸ் பெற்றுக்கொள்ளவாவது இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்படாமல் தருமத்திற்காக கொடுத்துவைக்கப்பட்டிருந்த தொகையை தருமம் நடத்தப்படவில்லை என்கிற காரணத்தை முன்னிட்டு அந்த தொகையையும் பாகப்பிரிவினை செய்வதற்காக இந்த வியாஜ்ஜியம்கொண்டு வரப்பட்டிருக்கிறபடியால் இந்த வியாஜ்ஜியத்திற்கு லிமிட்டேஷன் ஆக்ட் 10-வது பிரிவு பொருந்தாது என்றும் 1893-ம் வருடம் முதல் குடும்பம் சேர்ந்த குடும்பமாக விராதபடியால் கால நிர்ணயச் சட்டம் 127-வது ஆர்ட்டிகலும் பொருந்தாதென்றும் ஆகவே வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் T. ரெங்காச்சாரியாரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. ராஜா அய்யரும் ஆஜரானார்கள். (30-11-14.)

---



(31)

இரண்டாவது அப்பீல் நெ. 418 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

லாப்பாயின்ட்:—அடமானம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஸ்வாதீன அடமானம் வைக்கப்படாமல் சாதாரணமாக அடமானம் வைக்கப்பட்ட ஒரு நிலத்தின் ஒரு பாகம் சர்க்கார் தீர்வை பாக்கிக்காக ஏலம் போட்டபோது அந்த நிலத்தை அடமானம் வைத்துக்கொண்டவனே ஏலத்தில் வாங்கிக்கொண்டான். அதன்பேரில் அவன் அவனுடைய அடமானத்தின்பேரில் ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவந்தான்.

தீர்ப்பு:—நிலத்தை அடமானம் வைத்துக் கொண்டவன் தன்னுடைய அடமான சம்பந்தமில்லாமல் நிலத்தை ஏலத்தில் கிரயம் கொடுத்து வாங்கியிருக்கிறான். ஏலம் எடுக்கப்பட்ட பாகத்தின் பேரிலிருந்த அடமானத்திற்கு ஏலத்தொகையில் சர்க்காருக்கு செலுத்தப்படவேண்டிய தீர்வை போக ஏதேனும் மீர்ந்திருந்தால் மீர்ந்த தொகை கொடுக்கப்படவேண்டும். அடமானத்தை ஊர்ச்சிதப்படுத்த வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கும் அடமானக்காரன் அவன் ஏலத்தில் அடமானம் வைக்கப்பட்ட நிலத்தின் ஒரு பாகத்தை வாங்கியிருப்பதை முன்னிட்டு அடமானத் தொகையை குறைத்து வாங்கிக்கொள்ள கட்டுப்பட்டவனல்ல என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் T. நரசிம்ம அய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிக்காக[illegible]டர் S. துரைசாமி அய்யரும் ஆஜரானார்கள்.

(30-11-1914.)

---

(32)

அப்பீல் வியாஜ்ஜிய நெ. 175 of 1907.

ஜட்ஜிகள்:—பதிலி சீப் ஜஸ்டிஸ
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி [அய்யர்.

லாப்பாயின்ட்:—ஹிந்துலா...ஜீவனும்சம்.

தீர்ப்பு:—ஒரு ஹிந்து விதவையினுடைய புத்திரனும் அவளுடைய மாற்றாந்தாய் புத்திரனும் அவளுடைய ஜீவனும்சத்திற்கு தங்கள் தங்கள் பாகத்திலிருந்து கொஞ்சம் பணம் கொடுக்கக் கட்டுப்பட்டவர்கள். அவளுக்குக் கொடுக்கப்படவேண்டிய ஜீவனும்சம் அவளுடைய இறந்துபோன புருஷனுடைய சொத்திலிருந்து கொடுக்கப்படவேண்டியது. ஆகையால் அவளுடைய ஜீவனும்சத்திற்கு புத்திரனுடையபாகமும், மாற்றாந்தாய் புத்திரனுடைய பாகமும் கட்டுப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

ஜீவனாம்ச சம்பந்தமானகாரியங்களுக்காக "தாயார்" என்கிற பதம் "மாற்றாந்தா" யையும் அடக்கிக் கொண்டிருக்கிறது.

லாயர்கள்:—அப்பீல் வாதிககாக மிஸ்டர் P. நாராயணமூர்த்தியும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. V. L. நரசிம்மமும் ஆஜரானார்கள்.

(2-12-1914.)

---

(33)

அப்பீல் வியாஜ்ஜிய நே· 58 AND 59 of 1912.

ஜட்ஜிகள்:—பதிலி சீப் ஜஸ்டிஸ்
மிஸ்டர்ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

லாப்பாயின்ட்:—ஒப்பந்தம்.

தீர்ப்பு:— ஆலோசனை சபையிலிருக்கும் இந்தியா காரியதரிசி ஈஸ்ட் இந்தியா கம்பெனியார் எவ்வளவு வரையில் பாத்தியப்பட்டவர்களோ அவ்வளவு வரையில்தான் பாத்தியப்பட்டவர்கள் என்றும் அதற்கு அதிகமாக பாத்தியப்பட்டவர்களல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஆகையால் முழுதிலும் வியாபார சம்பந்தமாயில்லாமல் ஆனால் அரசருக்குள்ள அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தி செய்யப்படும் காரியங்களில் ஒரு வேலைக்காரனுடைய அலக்ஷியத்தால் உண்டாயிருக்கும் காயங்களுக்காக நஷ்டம் கட்டிக்கொடுக்க இந்தியா காரியதரிசியின் பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது. பொதுஜன நன்மைக்காக ரோடுகள் முதலியவை போடுவது அரசருக்கு அரசாயிருப்பதை முன்னிட்டு உண்டாயிருக்கும் அதிகாரங்களைமுன்னிட்டு செய்யப்படும் கடமைகள். இந்த கடமைகள் நிறைவேறும்படியாக செய்து வைப்பதில் ஒரு கண்டிராக்டர் ரோடில் அலக்ஷியமாக கப்பியை குவித்து வைத்திருந்ததால் ஒரு வண்டி குடக்கவிழ்ந்து வாதிக்கு நேரிட்டிருக்கும் நஷ்டத்திற்காக இந்தியா காரியதரிசி நஷ்டத்தை கட்டிக்கொடுக்க பாத்தியப்பட்டவரல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. அப்பீல் வாதிக்காக கவர்ன்மெண்டு பிளீடரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் T. நரசிம்ம அய்யங்காரும் ஆஜரானார்கள்.

(30-11-1914.)

---

(33-a.)

அப்பீல் நே. 61 of 1912.

தீர்ப்பு:— மிகுந்த சமீபமான பந்துத்வத்தையுடைய அனந்தரவாரசு தன்னுடைய சுய நன்மையை நாடி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள சம்மதம் கொடுக்காவிடில் தூர பந்துத்வத்தை உடைய அனந்தரவாரசுகளுடைய சம்மதத்தை பெற்று விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம்.

---

# Reports of Cases.

# கேஸ்களுடைய ரிபோர்ட்டுகள்.

—:o:—

## PRIVY COUNCIL.

## பிரிவி கவுன்சில்.

---

(34)

கவுன்சிலர்கள்:—
(1) லார்ட் மவுல்ட்டன்
(2) லார்ட் பார்க்கர்
(3) சர் ஜான் எட்ஜ்
(4) மிஸ்டர் அமீர் ஆலி

நளினிகாந்தலாகிரி—அப்பீல்வாதி

*vs.*

சுரணமாய் தேபியா வகையரா—அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—சேர்ந்த ஹிந்து குடும்பம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—இந்த வியாஜ்ஜியம் காக்ஷிதாஸ் சனியால் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டது. அவர் இப்போது இறந்து போய்விட்டபடியால் அவருடைய வாரிசாகவும் சட்டபடியுள்ள பிரதிநிதியாகவும் இந்த வியாஜ்ஜியத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் நளினி காந்தலாகிரி அவருக்கு பதிலாக இந்த வியாஜ்ஜிய நடிவடிக்கைகளை நடத்திக்கொண்டு வருகிறார். பட்னி தாலுக்காவில் தன்னுடைய பாகம் இவ்வளவு என்று கோர்ட்டார் கூறும்படியாக இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டது. பட்னி தாலுக்காவில் ஆதியில் காக்ஷிதாஸ் சனியால் என்பவர் $1\frac{1}{2}$-அணா பாகத்திற்குத்தான் பாத்தியமுடையவர். மற்ற பாகஸ்தர்கள் பல தடவை பல காலங்களில் தங்களுடைய பாகத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்கள். இம்மாதிரியான வியாஜ்ஜியங்கள் 1886-ல் மூன்று வியாஜ்ஜியங்கள் தாக்கல் செய்யப்பட்டு மூன்றும் சேர்ந்து விசாரணை செய்யப்பட்டன. காக்ஷிதாஸ் சனியால் ஒவ்வொரு கேசிலும் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டு அவருடைய பாகம் $1\frac{1}{2}$-அணா என்று ஒவ்வொரு வியாஜ்ஜியப் பிரியாதிலும் சொல்லப்பட்டிருந்தது. 1892-லும் அதேமாதிரியான வியாஜ்ஜியம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதிலும் காக்ஷிதாஸ் சனியால் பிரதிவாதியாகச்சேர்க்கப்பட்டிருந்தார். இந்த வியாஜ்ஜியத்தில் சூர்ணமாய் தேபி என்கிற ஸ்திரீ தன்னுடைய புருஷனாகிய டினேந்திரநாத் அவருடைய பாகத்தை தானமாக தனக்குக் கொடுத்துவிட்டதாகவும் ஆதலால் அந்த பாகத்தைப் பிரிவினைசெய்து கொடுக்க வேண்டுமென்றும் தன்னையும் ஷை வியாஜ்ஜியத்தில் ஒரு பிரதிநிதியாக சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஒரு மனு செய்துகொண்டாள். அந்த மனுவை கோர்ட்டார் அங்கீகரித்துக்கொண்டு அந்த ஸ்திரீயையும் ஒரு பிரதிநிதியாகச் சேர்த்துக் கொண்டார்கள். இந்த வியாஜ்ஜியங்கள் எல்லாம் விசாரணை செய்யப்பட்டு வாதிகள் கேட்டுக்கொண்டபடி வாதிகளுக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டு எஸ்டேட் பாகப்பிரிவினை செய்யப்பட்டு அவரவர்களுடைய பாகம் அவரவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டது. வாதிகள் தங்களுடைய பிரியாதில் என்ன சொல்லுகிறார்கள் என்றால் எஸ்டேட் பல பாகஸ்தர்களுக்குள் பாகப்பிரிவினை செய்து கொடுக்கபபட்டுப்போய் மீர்ந்து போனபாகம் தம்முடைய பாகத்திற்காக விடப்பட்டிருக்கிறதென்றும் அப்படி விடப்பட்டிருக்கும் பாகம் தாம் அடைய



பாத்தியமுடைய பாகத்திற்குக் குறைவாயிருக்கிறதென்றும் மற்ற பாகஸ்தர்கள் எல்லாம் தாங்கள் அடைய பாத்தியமுடைய பாகத்திற்கு அதிகமாகவே அடைந்திருக்கிறார்கள் என்பதே. ஆகவே பாட்னா சப் ஜட்ஜி கோர்ட்டில் இந்த வியாஜ்ஜியம் தாக்கல் செய்யப்பட்டது. (22-9-1902.)

பிரதிவாதிகளின் கக்ஷி:—இந்த வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்றும் முந்திய பாகப் பிரிவினை வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்டிருக்கிற தீர்மானம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தைத் தடைப்படுத்துகிறதென்றும் கக்ஷி சொன்னார்கள்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு:—முந்திய பாக வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் செய்திருக்கும் தீர்மானம் பிரஸ்தாப தாவாவைக் கட்டுப்படுத்துகிறதென்றும் மேலும் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறதென்று கூறி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி கல்கத்தா ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டதில் அசல் கோர்ட்டுத் தீர்மானமே உறுதிப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் டி. குருதய்யரும், பாரிஸ்டர் மிஸ்டர் ராசும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் டியூபும் ஆஜரானார்கள்.

அப்பீல் வாதியின் லாயர் பேசினது:—முந்திய பாகப் பிரிவினை வியாஜ்ஜியம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்குத் தடையாயில்லை. ஏன் என்றால் முந்திய வியாஜ்ஜியத்தில் உண்டான பிரஸ்னைகள் வேறு பிரஸ்தாப வியாஜ்ஜியத்தின் பிரஸ்னைகள் வேறு. மேலும் 1892-ல் நடந்த வியாஜ்ஜியத்தில் சுரோமணி தேபி பிரதிவாதியாக ஆதியில் சேர்க்கப்படாமல் பிறகு சேர்த்துக்கொள்ளப்பட் டிருக்கிறாள். இப்படி சேர்ந்துகொள்ளப் போகிறதற்காக வாதிக்கு நோட்டீஸ் அனுப்பப்படவில்லை. அப்படி நோட்டீஸ் அனுப்பப்படாததால் அந்த வியாஜ்ஜியத்தில் கொடுக்கப்பட்ட டிக்கிரிக்கு அப்பீல் வாதிகள் கட்டுப்பட்டவர்களல்ல. மேலும் இந்த வியாஜ்ஜியம் லிமிட்டேஷன் ஆக்ட் 140-வது ஆர்ட்டிகிலின்படி காலாவதி தோஷத்தாலும் தீண்டப்படவில்லை. லிமிட்டேஷன் ஆக்ட் 120 ஆர்ட்டிகில் இந்த வியாஜ்ஜியத்திற்குப் பொருந்தாது.

அப்பீல் பிரதிவாதிகளுக்காக ஆஜராயிருந்த மிஸ்டர் டியூப் தம்முடைய கக்ஷியை எடுத்துச் சொல்லும்படியாக உத்திரவு செய்யப்படவில்லை.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு 23-4-1914ல் சொல்லப்பட்டது.

பிரிவி கவுன்சில் தீர்ப்பு:— இந்த வியாஜ்ஜியத்தில் இப்போது அப்பீல் பிரதிவாதியாகவும் ஆதியில் வாதியாகவுமிருந்தவர் பாட்னி தாலுக்கா எஸ்டேட்டின் கூட்டுபாகஸ்தர்களுள் ஒருவர். பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்கு வெகு காலத்திற்கு முந்தியே மற்ற பாகஸ்தர்கள் தங்களுடைய பாகங்களை பாகப்பிரிவினை செய்துகொள்ளும்பொருட்டு வியாஜ்ஜியம் கொண்டுவந்து தங்களுடைய பாகங்களை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வியாஜ்ஜியங்கள் ஒவ்வொன்றிலும் அப்பீல்வாதி கக்ஷிக்காரராக சேர்க்கப்பட்டிருந்தார். அந்த வியாஜ்ஜியங்கள் ஒவ்வொன்றினுடைய கருத்தும் பாகப்பிரிவினை செய்து கொள்வதைத் தவிர வேறே கருத்தில்லை. ஆகவே வாதியைத்தவிர எல்லா பாகஸ்தர்களும் தனித்தனியே வியாஜ்ஜியம் கொண்டுவந்து தங்கள் தங்களுடைய பாகத்தைப் பெற்றுக்கொண்டார்கள். ஆகவே மற்ற எல்லா பாகஸ்தர்களும் பெற்றுக்கொண்ட பாகங்கள்போக பாக்கியிருந்த பாகம் வாதியினுடைய பாகமாகிய $1\frac{1}{2}$-அணா பாகத்திற்குப் போதுமான பாகமாகயிருந்ததென்று அந்த பாகம் வாதிக்கு விடப்பட்டது. ஆகவே இப்போது வாதியின் கக்ஷி என்னவென்றால் மீர்ந்திருக்கும் பாகம் தமக்குச் சேரவேண்டிய $1\frac{1}{2}$-அணா பாகத்திற்குப் போதாதென்பதே. மற்ற பாகஸ்தர்கள் முந்தி கொண்டுவந்த வியாஜ்ஜியங்களில் சில பாகஸ்தர்கள் தங்களுகக்கு கிடைக்கவேண்டிய பாகத்திற்காக அதிகமாகவே பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று அவர்களை சாக்ஷி விசாரணை செய்ததில் வாதி அறிந்து கொண்டிருக்கிறார். ஆதலால் பாகஸ்தர்களுக்கு அவர்களுக்குச் சேரவேண்டிய பங்குகளைப் பார்க்கிலும் அதிகப்படியான பங்குகள் கொடுபட்டுப் போனபடியால் தமக்குச்சேர பாத்தியப்பட்ட பங்கு குறைந்து போய்விட்டதென்று வாதி இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டு வந்திருக்கிறார். முந்திய வியாஜ்ஜியங்களில் மற்றபாகஸ்தர்களை வாதி சாக்ஷி விசாரணை செய்ததாகவும் அவர்களில் சிலர் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய பாகத்தைப் பார்க்கிலும் அதிகப்படியான பாகத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று வாதி அறிந்துக்கொண்டிருப்பதாகச் சொல்லும் கக்ஷி ஒப்புக்கொள்ளக்கூடியதா அல்லவா என்று யோசனைசெய்வது அனுவசியமென்று பிரிவி கவுன்சிலர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். மற்ற பாகஸ்தர்கள் அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பாகத்தைத்தவிர அதிகப்படியான பாகத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று வாதி சொல்லும் கக்ஷி சரியானதாக விருந்தாலும்சரி, சரிதப்பாயிருந்தாலும்சரி சரியானதென்றே இந்த தீர்ப்புக்காக பிரிவி கவுன்சிலர்கள் நினைத்துக்கொள்ளுகிறார்கள். ஆகவே வாதி கொண்டுவந்திருக்கும் இந்த வியாஜ்ஜியத்தின் முக்கிய கருத்து என்னவென்றால் சில பாகஸ்தர்களும் அதிகப்பங்கு வாங்கிக்கொண்டிருப்பதில் அதில் அதிகப்படியாயுள்ள பாகத்தை எடுத்துப்போட்டு மீர்ந்துபோயிருக்கும் தம்முடைய பாகத்துடன் சேர்த்துவிட்டால் தமக்குச் சேரவேண்டிய $1\frac{1}{2}$-அணா பாகம் சரியாககிடைத்துப் போகுமென்பதே. கீழ் கோர்ட்டார்கள் முந்திய பாகவியாஜ்ஜியத்தில் ... ... ... செய்திருக்கும் தீர்மானம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தை தடைப்படுகிறதென்றும் பிரஸ்தாப வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிற தென்றும் ஆக இரண்டு காரணங்கள் சொல்லி வியாஜ்ஜியத்தைத்தள்ளுபடி செய்துவிட்டார்கள். காலாவதியைப்பற்றிய பிரஸ்னை கீழ்க் கோர்ட்டாரால் முழுதிலும் ஆராயப்பட்டுப் போய்விட்டபடியால் அதைப்பற்றி இவ்விடத்திலும் ஆராயவேண்டியது அனுவசியமென்ற பிரிவி கவுன்சிலர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் முந்தியபாக வியாஜ்ஜியம் பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்குத் தடையாகவிருக்கிறதென்று பிரிவி கவுன்சிலர்கள் அபிப்பிராயப்படுகிறபடியால் இந்த பிரஸ்னையைப் பற்றி விசாரணைசெய்து தீர்மானித்தால் இந்த வியாஜ்ஜியத்திற்குப் போதுமானதென்று அபிப்பிராயப்படுகிறார்கள். முந்திய வியாஜ்ஜியம் பிரஸ்தாபவியாஜ்ஜியத்திற்குத் தடையாயிருக்கிறதாஎன்று இந்த வியாஜ்ஜியத்தில் ஆலோசனைசெய்து தீர்மானிப்பது இலகுவான காரியம். ஒரு பாகஸ்தன் வியாஜ்ஜியம் கொண்டுவந்தால் மற்ற பாகஸ்தர்களை பிரதிவாதிகளாகச் சேர்க்கவேண்டும். ஏன் என்றால் அந்த வியாஜ்ஜியத்தில் வாதியாகயிருக்கும் பாகஸ்தர்களுக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டால் அந்த டிக்கிரி மற்ற பாகஸ்தர்களுக்கு விரோதமான டிக்கிரி ஆகையால் அந்த டிக்கிரி வியாஜ்ஜியம் கொண்டுவந்த வாதிக்கு அனுகூலமாகவும் பிரதிவாதிகளுக்கு விரோதமானவுமான டிக்கிரியாயிருக்கிறது.

பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் இரண்டு வகையான வியாஜ்ஜியங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. முதல்வகை என்னவென்றால் 1885-ல் தாக்கல் செய்யப்பட்ட 25 வியாஜ்ஜியங்கள். இரண்டாவது வகை 1885-ல் தாக்கல் செய்யப்பட்ட 75 வியாஜ்ஜியங்கள். 1886-ல் தாக்கல் செய்யப்பட்ட 5 வியாஜ்ஜியங்கள். இந்த வியாஜ்ஜியங்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து விசாரணை செய்யப்பட்டு வாதிகளுக்கு டிக்கிரி கொடுக்கப்பட்டது. இந்த டிக்கிரியில் ஷை வியாஜ்ஜியங்களைக் கொண்டுவந்த வாதிகளின் பாகங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட ஒரு கமிஷனர் தாவா நிலத்திற்குச் சென்று அளந்து அவர் அவர்களுடைய பாகத்தைப் பங்கு போட்டு பிரித்துக் கொடுத்து அவர்களுடைய நிலத்தை அவர் அவர்களிடம் ஒப்புவித்திருக்கிறார். ஆகையால் அந்த டிக்கிரி எப்பேர்ப்பட்ட டிக்கிரி என்றால் வாதி பிரதிவாதியாகவிருந்த வியாஜ்ஜியங்களில் அவர்பேரில் கொடுக்கப்பட்ட டிக்கிரியாகும். ஆகையால் பிரஸ்தாப வியாஜ்ஜியத்தில் வாதி சம்பந்தப்பட்டவரையில் முந்திய வியாஜ்ஜியம், பிரஸ்தாப வியாஜ்ஜியத்திற்குத் தடையாகவிருக்கிறதென்று தெளிவாய்த் தெரிகிறது. முந்தி வியாஜ்ஜியங்களின் வாதிகளுக்கு பிசகாக அதிகப் பங்கு பிரிவினை செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதென்று வாதி எண்ணினரேயானால் சரியாகப் பங்கு பிரித்துக்கொடுக்கும்படியாக சிவில் புரோசீஜர் கோடில் சொல்லப்பட்டிருக்கிறபடி நடவடிக்கை நடத்தலாம். இம்மாதிரி நடவடிக்கை வாதி நடத்தினதாகத் தெரியவில்லை. ஆகையால் வாதி பிரதிவாதியாகவிருந்த முந்திய வியாஜ்ஜியத்தில் கொடுக்கப்பட்ட டிக்கிரி பிரஸ்தாப வியாஜ்ஜியத்தைத் தடைப்படுத்துகிறதென்று தெளிவாய்த் தெரிகிறது. ஆகையால் இந்த அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிடவேண்டுமென்று மாட்சிமை தங்கிய மகாராஜா அவர்களுக்கு பிரிவி கவுன்சிலர்கள் யோசனை கூறினார்கள். 16 ம. லா. டை. 544; Nalina Kantha V. Suranamoy Debya, 16 M. L. T. 544.

---

## MADRAS HIGH COURT.

## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

---

(35)

அசல் தரப்பு வியாஜ்ஜிய நெ. 253 of 1913.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்.

C. கந்தசாமி செட்டி—வாதி

vs.

S. முருகப்ப செட்டி—பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—சட்டப் பிரகாரமுள்ள பிரதிநிதி.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— ஒரு வியாபார கம்பெனியார் கடன்பட்டுப் போய்விட்டார்கள். இந்த கடனாளி கம்பெனியார்கள் தங்களுடைய சொத்துக்களையெல்லாம் சிலரிடம் ஒப்புவித்து எலம்போட்டு விற்பனை செய்து வசூலாகும் பணத்தைக்கொண்டு கடன்காரர்களுக்கு பங்கு போட்டுக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். அப்படிப்பட்ட ஏற்பாட்டிற்கு வாதியும் பிரதிவாதிகள் நான்குபேர்களும் டிரஸ்டிகளாக நியமிக்கப்பட்டார்கள். இந்த நான்கு டிரஸ்டிகளும் சேர்ந்து உடன்படிக்கைசெய்து கொண்டார்கள். அந்த உடன்படிக்கையின் ஷரத்துகள் என்னவென்றால் (1) கடனாளி கம்பெனியாரின் சொத்துக்களை தாங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும். (2) கம்பெனியின் கடன்காரர்களுக்கு ரூபாய்க்கு 6 அணு வீதம் பட்வாடா செய்துவிடவேண்டும். (3) கம்பெனியின் கடன்காரர்களுக்குச் சேரவேண்டிய கடனுக்குதாங்களே ஜவாப்புதாரர்களாகவிருக்க வேண்டும். (4) ரூபாய்க்கு 6 அணு வீதம் கூடுதலான தொகையை கம்பெனியின் கடன்காரர்களுக்குப் பட்வாடா செய்தபிறகு பாக்கி ஏதேனும் தொகை மீர்ந்தால் அதை தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். இந்தப் பிரகாரம் உடன்படிக்கை செய்துகொண்டு ஷை 5-வர்களும் சேர்ந்து கடனாளி கம்பெனியின் சொத்துக்களை ஒப்புக்கொண்டு கம்பெனியின் கடன்காரர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்துக் கொண்டு வந்து கடனைத் தீர்த்து வைத்தார்கள். இந்த உடன்படிக்கைச் செய்ததிலும் அதன் ஷரத்துக்களை நிறைவேற்றி வைத்ததிலும் நேரிட்ட செலவுகளுக்கு இந்த வியாஜ்ஜியத்தின் வாதியும் 3-வது பிரதிவாதியும் சில பணம் கொடுத்து வந்தார்கள். ஆகவே இந்த உடன்படிக்கையின்படி நடத்தப்பட்ட தொழிலில் உண்டான லாபத்திற்கும் கணக்கிற்கும் லாபத்தில் வாதிக்குச் சேரவேண்டிய பாகத்திற்கும் வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

வியாஜ்ஜியத்தின் நடவடிக்கை:— இந்த வியாஜ்ஜியம் தாக்கல் செய்யப்பட்டு சிலகாலம் சென்றபிறகு அதாவது 23-11-1913-ல் இரண்டாவது பிரதிவாதி ஒரு உயில் எழுதிவைத்துவிட்டு வாதியையும் இன்னொருவரையும் எக்சிக்கியூட்டர்களாக நியமித்துவிட்டு இறந்துபோய்விட்டார். மற்றொரு எக்சிக்கியூட்டர் தமக்கு அந்த உத்தியோகம் வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டுவிட்டார். வாதி தமக்கு புரோபேட் கிடைக்கும்படியாக உயில் கோர்ட்டில் தாக்கல் செய்து மனுசெய்து கொண்டார். இந்த வியாஜ்ஜியம் விசாரணைக்காக 28-8-1914-ல் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது 1, 3, 4, பிரதிவாதிகளுக்காக வக்கீல்கள் ஆஜராகி இரண்டாவது பிரதிவாதியின் சட்டபிரகாரமுள்ள பிரதிநிதியைச் சேர்க்க யாதொரு ஏற்பாடும் இது வரையில் செய்யப்படவில்லை என்று தெரிவித்துக் கொண்டார்கள். வியாஜ்ஜிய விசாரணை தள்ளி வைக்கப்பட்டது. இதன் பிறகு 18-9-1914-ல் வியாஜ்ஜியம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இப்போது இரண்டாவது பிரதிவாதியின் சட்டப்பிரகாரமுள்ளபிரதிநிதியை இந்தவியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரராகச்சேர்க்க வாதி ஏற்பாடும் செய்யவில்லை என்றுகோர்ட்டாருக்குதெரியவந்தது.



ஆகவே கோர்ட்டார் அன்று தேதியில் இரண்டாவது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் வியாஜ்ஜியம் முடிந்துபோய் விட்டதென்றும் கூறிவிட்டார்கள். ஆனால் வாதி கேட்டுக்கொண்டபடி, கோர்ட்டார் இரண்டாவது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் வியாஜ்ஜியம் முடிந்தபோய் விட்டதென்று பிறப்பித்த உத்திரவை ரத்துசெய்து வைப்பதற்காக காலம் கொடுக்கும்பொருட்டு வியாஜ்ஜியத்தை மூன்றுவாரம் தள்ளி வைத்தார்கள்.

இதன்பேரில் வியாஜ்ஜியம் 2-வது பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் முடிந்துபோய் விட்டதென்று கோர்ட்டார் பிறப்பித்த உத்திரவை ரத்துசெய்து வைக்கவாதிஇப்போதுமனுசெய்துகொண்டிருக்கிறார் இந்த மனுவில் சொல்லப்பட்ட காரணங்கள் என்னவென்றால்:—உயில் கர்த்தாவினுடைய புத்திரன் தம்மையும் தம்முடன் நியமிக்கப்பட்ட இன்னொரு எக்சிக்கியூட்டரையும் பயமுறுத்திக் கொண்டிருந்தான் என்றும் ஆகையால் தாம் புரோபேட் பெற்றுக் கொள்ள தாமதித்துக் கொண்டிருந்ததாகவும் கடைசியாக புரோபேட் பெற்றே தீரவேண்டுமென்று தாம் 5-3-1914-ல் தீர்மானித்து புரோபேட் பெற்றுக்கொள்ள மனுக்கொடுத்ததாகவும் தமக்கு இன்னும் கோர்ட்டார் புரோபேட் பிறப்பிக்கவில்லை என்றும் தமக்கு இன்னொரு சந்தேகமுமிருக்கிறதென்றும் அந்த சந்தேகம் என்னவென்றால் தாமே இரண்டாவது பிரதிவாதியின் சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாக தாக்கல் செய்துகொண்டால் தம்முடைய பேரில் தாமே வியாஜ்ஜியம் கொண்டுவரக்கூடுமா என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருந்ததாகவும் காரணம் சொல்லியிருந்தார்.

லாயர்கள்:— வாதிக்காக வக்கீல்கள் மிஸ்டர் C. P. ராமசாமி அய்பரும், மிஸ்டர் C. வெங்கடசுப்பராமய்யாவும், 1, 3, 4, பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் வெங்கடசுப்பராவும், ராதாகிருஷ்ணய்யாவும் ஆஜரானார்கள்.

மிஸ்டர் C. P. ராமசாமி அய்யர் பேசினது:— வாதி புரோபேட் பெற்றுக்கொள்ளாமல் தாமதமாயிருந்ததற்குப் போதுமான காரணமிருக்கின்றது. வாதி புரோபேட் பெற்றுக்கொள்ளும் வரையில் இறந்துபோன 2-வது பிரதிவாதியின் பிரதிநிதியாக இந்த வியாஜ்ஜியத்தில் தம்மை தாக்கல் செய்து கொள்ள முடியாது. எவ்வளவு காலத்திற்குள் புரோபேட் பெற்றுக்கொள்ள மனு செய்துகொள்ளப் படவேண்டுமோ அவ்வளவு காலத்திற்குள்ளேவே மனு தாக்கல் செய்திருக்கிறார். மேலும் இந்த வியர்ஜ்ஜியம் சாதாரணமான வியாஜ்ஜியமல்ல. வாதியையே இறந்துபோன 2-வது பிரதிவாதி எக்சிக்கியூட்டராக நியமித்துவிட்டு இறந்துபோயிருக்கிறார். ஆதலால் அவர் என்ன செய்கிறதென்று தெரியாமல் மயங்கிக்கொண்டிருந்தார். என்னுடைய கக்ஷிக்கு ஆதாரமாக 35 பம். 393ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் வியாஜ்ஜியத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் தீர்ப்பைப் பிரமாணமாக எடுத்துக் கூறுகின்றேன். இந்தக் கேசில் இறந்துபோன கக்ஷிக்காரனுக்கு பதிலாக சட்டப்பிரகாரமுள்ள ஒரு பிரதிநிதியை, கக்ஷிக்காரனாகச் சேர்க்க எவ்வளவு காலத்திற்குள் கோர்ட்டில் மனு செய்துகொள்ளப்பட வேண்டுமோ அந்தக் காலம் கடந்து சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதி கக்ஷிக்காரனாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறான். வாதி ஏற்கனவே இந்த வியாஜ்ஜியத்தில் ஒரு கக்ஷிக்காரனாக விருக்கிறான் என்று சொன்னார்.

1, 3, 4 பிரதிவாதிகளின் லாயர் பேசினது:- இறந்துபோன கக்ஷிக்காரனுக்குப் பதிலாக அவனுடைய சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதி ஷை கக்ஷிக்காரன் இறந்துபோன காலத்திலிருந்து 6 மாதத்திற்குள்ளாக கக்ஷிக்காரனாகச் சேர்க்கப்பட மனு செய்துகொள்ளப் படவேண்டுமென்பது சட்டம். இந்தக் காலத்திற்குள் மனு செய்துகொள்ளப் படாததற்கு போதுமான காரணம் வாதி செய்துகொண்டிருக்கும் பிரமாணப் பத்திரத்தில் சொல்லப்படவில்லை.

ஒரு கக்ஷிக்காரன் சம்பந்தப்பட்ட வரையில் வியாஜ்ஜியம் முடிந்து போய்விட்டதென்று கோர்ட்டார் செய்த உத்திரவை ரத்து செய்துவைக்க வேண்டுமானால் உத்திரவுசெய்த தேதியிலிருந்து 60-நாட்களுக்குள்ளாக கோர்ட்டில் மனுசெய்து கொள்ளப்படவேண்டும் அந்த காலத்திற்குள் வாதி மனு செய்து கொள்ளாததற்கு தகுந்த காரணமும் வாதியால் பிரமாணப்பத்திரத்தில் சொல்லப்படவில்லை. சி. பு. கோ. ஆர்டர் 22, 9-வது ரூலின் (O. 22, r 9) படியும் லிமிட்டேஷன் ஆக்ட் 5-வது பிரிவின்படியும் காலம் தவறி மனுசெய்து கொண்டிருப்பதற்கு மனுதாரன் தகுந்த காரணம் சொல்ல கடமைப்பட்டிருக்கிறான். இந்த இரண்டு அம்சங்களுக்கும் மனுதாரன் காரணம் சொல்லவில்லை. ஆகையால் வியாஜ்ஜியம் இரண்டாவது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் 23-5-1914-ல் உண்மையில் முடிந்துபோய் விட்டது. 18-9-1914-ல் நடந்த தென்னவென்றால் இரண்டாவது பிரதிவாதி சம்பந்தப்பட்டவரையில் வியாஜ்ஜியம் முடிந்துபோய் விட்டதென்று கோர்ட்டார்கூறி தஸ்தாவேஜிகளில் தாக்கல் செய்துகொண்டார்கள். வாதி இரண்டாவது பிரதிவாதியால் எக்சிக்கியூட்டராக நியமிக்கப்பட்டிருக்கிற படியால் இரண்டாவது பிரதிவாதியினுடைய பாத்திதை வாதிக்கு வந்து இறங்கியிருக்கிறதென்றும் ஆகையால் வாதி இரண்டாவது பிரதிவாதியின் சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாக தம்மை வியாஜ்ஜியத்தில் சேர்த்துக்கொள்ள மனுசெய்ய தாமதித்த ஒவ்

வொரு நாளைக்கும் காரணம் சொல்ல கடமைப்பட்டவன். மனுதார் பிரமாணப்பத்திரத்தில் எடுத்துச சொல்லியிருக்கும் காரணம் எல்லாம்கூடி தமக்கு சட்டம்தெரியாதென்றும் தமக்குயோசனை சொல்லுவார் எவருமில்லை என்பதே. இப்படி காரணம் சொல்லுவது தகுந்த காரணமாகமாட்டாது. வாதியின் வக்கீல் அவருடைய கக்ஷிக்கு ஆதாரமாக எடுத்துக் கூறின 35பம். 393-ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் தீர்ப்பு இந்த கேஸிற்குப் பொருந்தாது. அந்தக் கேஸில் காலம் தவரி மனுசெய்துகொண்ட மனுதாரன் சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாக சேர்த்துக்கொள்ளப்பட உண்மையில் பாத்தியமுடையவன் இந்தக் கேஸைப்போல மூன்றாது மனிதனிடமிருந்து பாத்தியதையைப் பெற்றுக்கொண்டவனல்ல. அந்தக் கேஸில் அந்த கக்ஷிக்காரன் சி. பு. கோ. ஆர்டர் 1, ரூல் 10-ன் பிரகாரம் சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

கோர்ட்டார் உத்திரவு:— வாதி செய்துகொண்டிருக்கும் மனுவின் மொத்த தாற்பரியம் என்னவென்ருல் தம்மை இரண்டாவது பிரதிவாதியின் சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் அல்லது தாம் இரண்டாவது பிரதிவாதிக்கு எக்சிக்கியூட்டராக விருக்கும் ஸ்தானத்தில் வியாஜ்ஜியம் கொண்டுவரும்படியாக விடப்படவேண்டு மென்பதே. மேலும் தாம் மனு செய்து கொள்ள தாமதித்ததை மன்னித்து விடவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டிருக்கிருர்.

சி. பு. கோ. ஆர்டர் 1, ரூல் 10-ல் சொல்லப்பட்டிருக்கிறபடி ஒரு கக்ஷிக்காரனைச் சேர்ப்பதற்காகச் செய்துகொள்ளப்பட்ட மனுவல்ல. மனுதாரனுடைய லாயர் தம்முடைய கக்ஷிக்குப் பிரமாணமாக எடுத்துக் கூறின கேஸின் தீர்ப்பு (லக்ஷ்மிசண்ட் v. காச்நபாய்) இந்தக் கேஸிற்குப் பொருந்தாது. ஏன் என்ருல் அந்தக் கேஸில் மனு செய்துகொண்ட கக்ஷிக்காரன் உள்ளபடி சொத்திற்குப் பாத்திதையுடையவன். அவன் சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாக சேர்த்துக்கொள்ளப்படாமற் போனபோதிலும் பிரத்தியேகமாக வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமுடையவன். மேலும் அவனைக் கோர்ட்டார் பிரதிவாதியாகச் சேர்த்துக்கொள்ளும்படி உத்திரவு செய்தார்களே ஒழிய சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாகவல்ல. மேலும் 1865-ம் வருட்த்திய வாரசுச் சட்டம் 187-வது பிரிவின்படி வாதி புரோபேட் பெற்றுக்கொண்டிருந்தாலொழிய அவரை 2-வது பிரதிவாதியின் சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியாக கோர்ட்டார் பாவிக்க முடியாது.

இறந்துபோன இரண்டாவது பிரதிவாதிக்குச் சட்டப் பிரகாரமுள்ள பிரதிநிதி இந்த வியாஜ்ஜியத்தில் சேர்க்கப்படுவதற்கு மனு செய்துகொள்ளுவதற்கு சொல்லப்பட்டிருக்கும் காலத்திற்குள் மனு செய்துகொள்ளப் படாமலிருந்தால், வாதி வியாஜ்ஜியத்தை நடத்துவதற்கு சுறுசுறுப்பாக நடவடிக்கைகள் நடத்தி வருவதாக ருஜுப்பட்டால், அவர் புரபேட் பெற்றுக்கொள்ளுவதற்கு கோர்ட்டார் போதுமான காலம் கொடுக்கக் கூடுமென்று நினைக்கின்றேன். ஆனுல் இந்த கேஸில் வாதி மனு காலம் தவறிச்செய்து கொண்டிருக்கிறபடியாலும் காலம் தவறி செய்ததற்கு தகுந்த காரணம் சொல்லாததால் வாதியின் கோரிக்கை நிறைவேற்றி வைக்கப்பட கூடியதாயில்லை. சி. பு. கோ. 22-வது ஆர்டர், ரூல் 4-ன்படி வியாஜ்ஜியம் இரண்டாவது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் முடிந்து போய் விட்டது. இந்த உத்திரவை ரத்து செய்வதற்கு 9-வது விதியின்படி செய்துகொள்ளப்படும் மனுவில் வாதி வியாஜ்ஜியத்தைத் தொடர்ந்தேர்த்தியாக நடத்த முடியாமலிருப்பதற்குத் தகுந்த காரணம் சொல்லப்பட்டிருக்கவேண்டும். வாதி அவருடைய மனுவில் சொல்லியிருக்கும் காரணம் எல்லாம்கூடி உயில் கர்த்தாவின் புத்திரன் பயமுறுத்திக்கொண்டிருந்தான் என்பதே தவிர மற்றபடி தகுந்தகாரணம் வேறென்றும் சொல்லவில்லை. 5-3-14 முதல் 13-7-14 வரையில் 4-வது விதியின்படி மனுசெய்து கொள்ளப்படாததற்கு வாதி யாதொரு காரணமும் சொல்லவில்லை. ஆகையால் இரண்டாவது பிரதிவாதி சம்பந்தப்பட்ட வரையில் வியாஜ்ஜியம் முடிந்து போய்விட்டது. வியாஜ்ஜியம் முடிந்து போய்விட்டதென்று கோர்ட்டார் கூறிய உத்திரவை ரத்து செய்துவைக்க மனு செய்துகொள்ள வேண்டுமானுல் லிமிட்டேஷன் ஆக்ட் முதல் ஷெடியூல் 171-வது ஆர்ட்டிகிலின்படி கோர்ட்டார் கூறின தேதியிலிருந்து 60-நாட்களுக்குள்ளாக மனு செய்துகொள்ளப்படவேண்டும். இந்த குறிப்பிட்ட காலத்திற்குள் மனுசெய்து கொள்ளுவதற்கு தவறிப்போய் விட்டதற்கு கோர்ட்டாருக்கு திருப்திகரமான காரணம் சொல்லாவிடில் லிமிட்டேஷன் ஆக்ட் 5-வது பிரிவின்படி இந்த மனு காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டுப் போகும்.

வாதி தகுந்தபடி யோசனை சொல்லப்படாததைத் தவிர வேறே யாதொரு காரணத்தையும் காணேம். ஆகையால் இந்த மனுவைத் தள்ளுபடி செய்து 1, 3, 4, பிரதிவாதிகளுக்கு கோர்ட்டுச் செலவுகளை செலுத்தும்படி உத்திரவு செய்கின்றேம் என்று தீர்ப்பு சொன்னர்கள். 22 ம. லா. டை. 550. Kandasawmy Chetti v. Murugappa Chetti, 22 M. L. T. 550.

---



(36)

இரண்டாவது அப்பீல் நே. 1394 of 1912.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

K. M. P. பரமேஸ்வரன் நம்புரிபாட் வகையரு —வாதிகள்...அப்பீல் வாதிகள்.

vs.

K. M. S. சங்கரன் நம்புரிபாட் வகையரு — பிரதிவாதிகள்...அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—பிரியாதைச் சிர்திருத்துவது.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—ஒரு வியாஜ்ஜியத்தில் உண்டாயிருக்கும் உண்மையான பிரஸ்னையைத் தீர்மானிப்பதற்கான அவசியமான சீர்திருத்தங்கள் புதிய சிவில் புரோசீஜர் கோடின்படி செய்யலாம். பிரியாதுகளில் சீர்திருத்த சம்பந்தமான பிரஸ்னைகளைப்பற்றி 1908ம் வருடத்திற்கு முந்தி ஜாரி செய்யப்பட்டிருக்கும் ஐக்கோர்ட்டுத் தீர்ப்புகள் பெரும்பாலும் பிரயோஜனப் படமாட்டா.

லிமிட்டேஷன் ஆக்ட் 7-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் (discharge) விடுதலை என்னும் பதத்திற்கு பண சம்பந்தமான பாத்திதையிலிருந்து விடுதலை அடைவது மட்டிலுமல்ல, ஸ்தாபரசொத்து சம்பந்தமான பாத்திதையிலிருந்தும் மற்ற பாத்திதைகளிலிருந்தும் விடுதலை அடைவதையும் அஷிபதம் அடக்கிக்கொண்டிருக்கிறது.

விடுதலைப் பத்திரங்கள் எழுதிக் கொடுக்கப்படும் விஷயங்களில் ஒரு கர்னவனும் குடும்பத்திலுள்ள மேஜர் அடைந்த எல்லா மெம்பர்களும் சேர்ந்து எழுதிக் கொடுக்கவேண்டும்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்:— லிமிட்டேஷன் ஆக்ட் 7-வது பிரிவின் தாற்பரியப்படி ஒரு கர்னவன் தனியே விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுக்கலாம். [1914] ம. வீ. நோ. 689. K. M. P. Paramswara Numburi Pad v. K. M. S. Sankara Numburi Pad, [1914] M. W. N. 689.

---

(37)

அப்பீல் நே. 121 of 1911.

ஜட்ஜிகள்:—சீப்ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்.

அசேயின் ராகவலு செட்டி வகையரு—வாதிகள்...அப்பீல் வாதிகள்.

vs.

பெல்லாட்டி சித்தம்மா வகையரு—பிரதிவாதிகள்...அப்பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—டிரஸ்ட் சொத்தை குத்தகைக்கு ஒப்புக்கொண்டவர்கள்.

சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்:—சி. பு. கோ. 92-வது பிரிவின்படி கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தில் டிரஸ்ட் சொத்தை குத்தகைக்கு ஒப்புக்கொண்டவர்கள் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்பட வேண்டுமென்பது அவசியமல்ல ஆனுல் அவர்களே இஷ்டப்பட்டால் வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர்:— சட்டப் பிரகாரமுள்ள டிரஸ்டிகளைத் தவிர மற்ற எவரிடமும் டிரஸ்ட் சொத்து ஒப்புவிக்கப் படுவதை எல்லா ஐக்கோர்ட்டுகளுடைய தீர்ப்புகளும் ஆக்ஷேபிக்கின்றன. சி. பு. கோ. 92-வது பிரிவின்படி சொத்து யார் வசத்திலிருக்கிறதோ அப்பேர்ப்பட்டவர்களை அஷிசொத்திலிருந்து அப்புறப் படுத்துவதையும் ஆக்ஷேபிக்கின்றன. சொத்து ஒப்புவிக்கப்படக் கூடாதபோது குத்தகைக்கு டிரஸ்ட் சொத்து கட்டுப்பட்டதென்று கோர்ட்டார் டிக்கிரியில் சொல்லக்கூடாது.

ஒரு ஸ்கீம் வியாஜ்ஜியத்தில், ஒரு டிரஸ்டி செய்த பராதீனம் ஆக்ஷேபிக்கப் படுகிறபோது ஒழுங்கான உபாயம் என்னவென்ருல் பராதீனம் பெற்றவர்களை கக்ஷிக்காரர்களாகச் சேர்ப்பதே. அவர்கள் அவசியமான கக்ஷிக்காரர்களாக இல்லாமற் போனபோதிலும் நியாயத்தைச் சொல்வதற்காக அவர்கள் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்படவேண்டும். [1914] ம. வீ. நோ. 692. Asain Ragavalu Chetty v. Pellati Sittamma, [1914] M. W. N. 692.

---

(38)

அப்பீல் நே. 189 of 1909.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ் மிஸ்டர் வாலிஸ்
ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரி.

அடைக்கலம் செட்டி—வாதி...அப்பீல்வாதி.

vs.

சுப்பான செட்டி வகையரு—பிரதிவாதி...அப்பீல் பிரதிவாதி.

லாப்பாயின்ட்:—ஹிந்துலா சேர்ந்த குடும்பம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— 13-8-1895-ல் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு அடமான ஆதாரவின்படி தமக்கு ரூ. 13 ஆயிரம் சேரவேண்டுமென்றும் அந்த அடமானத்திற்கு பிறகு 21-6-1898-ல் பிறந்த ஒரு அடமான ஆதாரவின் பாபத்தில் ரூ. 4000-ம் சேரவேண்டுமென்று தஞ்சாவூர் சப் கோர்ட்டில் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிந்திய அடமானப் பத்திரம் வாதியின் பெயரால் எழுதிக்கொடுக்கப்படவில்லை. இரண்டாவது பிரதிவாதியின் பெயராலும் இன்னும் வேறே இரண்டுபேர்களுடைய பெயர்களாலும் எழுதிக்கொடுக்கப் பட்டிருந்தது. பிந்தி சொல்லப்பட்டவர்கள் அவர்களுடைய பங்கை

வாதிக்கு டிரான்ஸ்பர் செய்திருக்கிறார்கள். இந்த கேசில் இரண்டாவது பிரதிவாதியாகச் சேர்க்கப்பட்டிருப்பவர் வாதியின் சேர்ந்த குடும்ப சகோதரன். சேர்ந்த குடும்பம் பிரிந்துபோய்விட்டதென்று தாவா தொகை தம்முடைய சொந்தமென்று வாதி பிரியாதில் சொல்லியிருக்கிறார்.

பிரதிவாதிகளின் கக்ஷி:—பிரதிவாதிகள் அனேக ஆக்ஷேபணைகள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவற்றுள் அடியிற் கண்டவை முக்கியமானவை:— (1) தாவாத்தொகை வாதிக்குமட்டிலும் சொந்தமல்ல. வாதியினுடைய குடும்பம் சேர்ந்த குடும்பம். பணம் வாதிக்கும் குடும்பத்தைச்சேர்ந்த மற்ற மெம்பர்களுக்கும் சொந்தமானது. வாதி குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மெம்பர்களைச் சேர்க்காமல் வியாஜ்ஜியம் கொண்டுவருவதற்கு பாத்திய மற்றவர். (2) அடமானம் ஸ்வாதீன அடமானபடியால் அடமானச் சொத்தை விற்பனை செய்வதற்கு வாதி வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்திய மற்றவர். (3) வாதி கொண்டுவந்திருக்கும் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்பட்டிருக்கிறது.

சப் கோர்ட்டார் தீர்ப்பு:—அடமானப் பத்திரம் வாதி தன் பெயரால் எழுதி வாங்கிக்கொண்டிருந்தபோதிலும் சேர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பொதுப் பணத்திலிருந்து அடமானத் தொகை வாதியால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ருஜூப்பட்டிருக்கிறதென்றும் இரண்டாவது அடமானம் சம்பந்தப்பட்டவரையில் வாதிக்கு அடமான பத்திரத்தை டிரான்ஸ்பர் செய்த ரெங்கய்யன் செட்டி வாதியிடமிருந்து டிரான்ஸ்பருக்காக யாதொரு பரிகாரப் பணமும் பெற்றுக்கொண்டிருப்பதாக ருஜூப்படவில்லையென்றும் ஆதலால் அந்த மேடோவர் செல்லுபடியுள்ளதல்லவென்றும் தீர்மானிக்கப்பட்டது. அடமான பத்திரம் ஸ்வாதீன அடமானமாக விருந்தபோதிலும் அடமானக் கடனைத் திருப்பிக் கொடுத்து விடுவதாக அடமானம் வைத்தவன் ஒப்புக்கொண்டு அடமானப் பத்திரம் எழுதிக் கொடுத்திருக்கிறபடியால் இந்த அடமானம் முழுதிலும் ஸ்வாதீன அடமானம் என்று சொல்ல முடியாது என்றும் ஆதலால் வியாஜ்ஜியம் காலாவதி தோஷத்தால் தீண்டப்படவில்லை என்று தீர்மானித்தார்கள். ஆனால் அடமானத்தொகையில் பாத்தியமுடையவர்கள் எல்லோரும் இந்த வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரர்களாகச் சேர்க்கப்படவில்லை என்று காரணம் சொல்லி சப் கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த தீர்ப்புக்கு விரோதமாகவாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் T. நரசிம்ம அய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் L. A. கோவிந்தராகவய்யரும், மிஸ்டர் T. A. ரெங்காச்சாரியாரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—அடமானத்திற்கு கொடுக்கப்பட்ட தொகை குடும்பத்தைச் சேராத தம்முடைய பிரத்தியேகப் பணம் என்றாவது அல்லது தம்முடைய சுயார்ஜ்ஜித மென்றாவது வாதி ருஜூப்படுத்தவில்லை. வாதியும் அவருடைய சகோதரர்களும் ஒரு காலத்தில் இரண்ட சொத்தை உடைய சேர்ந்த குடும்பத்தினர்களாக விருந்தார்கள் என்பது மறுதளிக்கப்படவில்லை. முதல் அடமானப் பத்திரம் பிறந்த தேதியில் குடும்பம் விபக்த்தமானதாக விருந்ததென்று வாதி ருஜூப்படுத்தவில்லை. வாதிக்கு எப்படி 13-ஆயிர ரூபாய் கிடைத்ததென்றும் ருஜூப்படுத்தவில்லை. ஆனால் முதல் அடமானம் பிறந்த தேதியில் வாதி சேர்ந்த குடும்பத்தைவிட்டு நீங்கி பிரத்தியேகமாக வசித்துக்கொண்டு வந்தார் என்று இரண்டாவது பிரதிவாதி சொல்லுகிறார். வாதி பிரத்தியேகமாக வசித்து வந்தது சேர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பணத்தை எடுத்து தம்முடைய பெயரால் அடமான பத்திரம் எழுதிவாங்கும்படியான பாத்திதையைக் கொடுக்கமாட்டாது ஆயினும் இப்போது கவனிக்கப்படவேண்டிய பிரஸ்னை என்னவென்றால் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மெம்பர்களுக்கும் அடமானத் தொகையில் பாத்திதையிருப்பதால் அவர்கள் கக்ஷிக்காரர்களாக இந்த வியாஜ்ஜியத்தில் சேர்க்கப்படவேண்டியது அவசியமா என்பதே. முதல் அடமானப் பத்திரத்தில் வாதி சுயமாக தாமே இந்த அடமானத் தொகையைக் கொடுத்திருப்பதாக எழுதப்பட்டிருக்கிறதே ஒழிய மற்ற எவருடைய சம்பந்தமும் அதிலிருப்பதாக காணப்படவில்லை. வாதி (1) பணம் கொடுத்த முதலாளியை வெளிப்படுத்தாமல் தாமே ஏஜண்டு ஸ்தானத்தில் பணம் கொடுத்து அடமான பத்திரம் எழுதிவாங்கியிருப்பதால் ஒப்பந்தப்படி அவர் பெயராலேயே வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமுடையவர் என்றும் (2) வாதி மானேஜிங் மெம்பராக எண்ணப்படவேண்டுமென்றும் அப்படி எண்ணப்பட்டால் மற்ற மெம்பர்களைச் சேர்க்காமல் தம்முடைய பெயராலேயே வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமுடையரென்று அப்பீல் வாதியின் லாயர்சக்ஷி சொல்லுகின்றார். வாதியும் அவருடைய மற்ற சகோதரர்களுடைய வாக்குமூலங்களைக்கொண்டு குடும்ப மானேஜிங் மெம்பர் ஸ்தானத்தில் தாவாப்பணத்தைக்கொடுக்கவில்லை என்றும் அல்லது குடும்பத்தின் மற்ற மெம்பர்களுக்குப் பிரதிநிதியாகவிருந்தும் பணத்தை கொடுக்கவில்லை என்றும் தெளிவாய் ருஜூப்படுகிறது. ஒருவன் தனக்கும் தன்னுடைய சகோதரர்களுக்கும் சொந்தமான பணத்தை எடுத்து தன்னுடைய சுயநன்மைக்காக உபயோகப்படுத்தி அடமானப்பத்தி



ரம் தன்னுடைய பெயரால் எழுதிவாங்கியிருப்பதும் அவன் மற்றசகோதரர்களுக்கு பணத்திற்கு கணக்கு சொல்லவேண்டிய நிலைமையிலிருப்பது அவன் மற்ற மெம்பர்களைச் சேர்க்காமல் தன்னுடைய பெயரால் வியாஜ்ஜியம் கொண்டு வருவதை தடுக்கமாட்டாது. மற்ற மெம்பர்களையும் வாதிகளாகச் சேர்க்காதது கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்வதற்கு ஒரு காரணமாகமாட்டாது.

வாதி ஒப்பந்தத்தை ஊர்ச்சிதப் படுத்துவதை மேலே சொன்ன காரணத்தை முன்னிட்டு ஆக்ஷேபிக்க முடியாது. அப்படி ஆக்ஷேபிக்க முடியுமானால் ஒரு பெயர் இரவல்காரனுக்குள்ள பாத்திதைகூட வாதிக்கு இல்லாமல் அவ்வளவு கேவலமான நிலைமையில் வைக்கப்படுவான். அது பொருந்தாத காரியம்.

சத்திய ஆனந்தமோ பாரபாஸ்ரா v. பலோராம் கொரேயின் (1) கேசில் ஒரு பெயர் இரவல்காரன் தன்னுடைய பெயரால் எழுதிக் கொடுக்கப்பட்ட அடமான ஆதரவின்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து தொகையை வசூல்செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. பாகப் பிரிவினையாகாத குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் தன்னுடைய பெயரால் எழுதி வாங்கப்பட்ட ஒரு அடமானப் பத்திரத்தின்பேரில் மற்ற மெம்பர்களைச் சேர்க்காமல் தானே வியாஜ்ஜியம் கொண்டுவந்து பணத்தை வசூல் செய்யலாமென்று அடைக்கலம் செட்டி v. மாரிமுத்து (2) கேசில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. மேலே எடுத்துச் சொல்லப்பட்ட கேசில் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டிருக்கும் கொள்கை கிஷன்புரோசாட் v. ஹர்நாரேயின்சிங் (3) என்னும் கேசில் பிரிவி கவுன்சிலர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வாதி ஒரு ஏஜண்டு என்று எண்ணப்பட்டபோதிலும் மற்றவர்களை வெளிப்படுத்தாமல் தம்முடைய பெயராலேயே ஒப்பந்தம் செய்திருக்கிறபடியால் தாமே தனிப்பட வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமுடையவர். பங்ஸீசிங் v. சூடிஸ்ட்லால் (4) கேசில் குடும்பத்தைச் சேர்ந்த மற்ற மெம்பர்களை வெளிப்படுத்தாமல் தன்னுடைய பெயரால் அடமானப் பத்திரம் எழுதி வாங்கினவன் மற்ற மெம்பர்களைச் சேர்க்காமல் தானே வியாஜ்ஜியம் கொண்டுவரலாமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்த தீர்ப்பு அடைக்கலம் செட்டி v. மாரிமுத்து கேசில் கோர்ட்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. வாதி தமக்காக மட்டிலும் ஒப்பந்தம் செய்தாரே ஒழிய மற்றவர்களுக்கும் பிரதிநிதியாக விருந்து ஒப்பந்தம் செய்யவில்லை என்பதற்கு இந்தக் கேசில் சாக்ஷியமில்லை என்று அப்பீல் பிரதிவாதிகள் கக்ஷி சொல்லக்கூடும். அப்படி கக்ஷி சொல்லுவார்களேயாகில் அந்தக் கக்ஷியை ருஜூப்படுத்தவேண்டிய பொறுப்பு பிரதிவாதிகளுடையதென்று கோபாலதாஸ் v. பத்திரிநாத் (5) முதலிய கேஸ்களில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் வாதி தனியே வசித்து வந்தபோது சேர்ந்த குடும்பப் பணத்தை எடுத்துக்கொடுத்து தம்முடைய சொந்த நன்மையை நாடி தம்முடைய பெயராலேயே எழுதி வாங்கிய அடமானப் பத்திரத்தின்பேரில் மற்ற மெம்பர்களைச் சேர்க்காமல் வியாஜ்ஜியம் கொண்டுவர பாத்தியமுடையவர் என்று கோர்ட்டார் தீர்மானித்து சப் கோர்ட்டாருடைய தீர்ப்பைமாற்றி கீழ்க்கோர்ட்டுச் செலவு தொகை உள்பட வாதிக்கு டிக்கிரி கொடுக்கிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள். [1914] ம. வீ. நோ. 684. Adaikalam Chetty v. Subban Chetty, [1914] M. W. N. 684.

NOTES.

குறிப்புகள்.

(1) 24 கல். 644-Sathia Ananda v. Boloram, 24 Cal. 644.

(2) 22 சென். 326 - Adaikalam Chetty v. Marimuthu, 22 Mad. 326.

(3) 2 ம. வீ. நோ. 395 - Kishen Prasad v. Har Narain Singh, 2 M W. N. 395.

(4) 7 கல். 739 - Bungsee Singh v. Soodist Lall, 7 Cal. 739.

(5) 27 அல. 361-Gopal Das v. Budri Nath, 27 Al. 361.

---

(39)

இரண்டாவது அப்பீல் நெ. 2182 of 1912.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரி.

சாம்பசிவ முதலியார்—அப்பீல் வாதி

*vs.*

ஆலோசனை சபையிலிருக்கும் இந்தியா காரிய தரிசி.

லாப்பாயிண்ட்:— 12-வருஷ அனுபோக பாத்திதை.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு:—ரோடுவழியில் யாரேனும் ஒருவன் ஆக்கிரமித்துப் பிரவேசித்து அந்த வழியை உபயோகப்படுத்தி அனுபவித்துக்கொண்டு வருகிறவனைத் தடுத்திருந்தால் ஒழிய அந்த வழியின் ஒவ்வொரு பாகத்தையும் பொது ஜனங்கள் உபயோகப்படுத்திக்கொண்டு வருகிறார்கள் என்று யூகிக்கப்படவேண்டும். ஒரு மனிதன் அந்த வழியை 12-வருடங்களுக்குமேல் அனுபவித்துக்கொண்டு வருகிறான் என்று ருஜூப்பட்டிருக்கிறபோது இந்த வியாஜ்ஜியம் கொண்டுவந்த காலத்திலிருந்து முந்திய 60-வரு

டத்திற்குள்ளாக தாங்களும் அந்த வழியை அனுபவித்துக்கொண்டு வந்ததாக ருஜுப்படுத்த வேண்டிய பொறுப்பு கவர்ன்மெண்டாருடைய பொறுப்பு என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் K B. ரங்கநாத அய்யரும், கவர்ன்மெண்டு தரப்பிற்காக கவர்ன்மெண்டு பிளீடரும் ஆஜரானார்கள்.

[1914] ம. வி. நோ. 711. Sambasiva Mudaliar V. The Secretary of State for India in Council, [1914] M. W. N. 711.

---

(40)

சிவில்ரிவிஷன் மனு நெ. 569 to 571 of 1911.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

G. நாருயணசாமி நாயுடுகாரு—வாதி....மனு [தார்

vs.

கமுரிருமய்யா வகையரா--பிரதிவாதிகள்....அப் [பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—வியாஜ்ஜிய மூலம்.

ஐக்கோர்ட்டு தீர்ப்பு:— எந்த வியாஜ்ஜிய மூலத்தை முன்னிட்டு வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தானோ அந்த வியாஜ்ஜிய மூலம் சம்பந்தப்பட்ட வரையில்தான் வாதிக்குப் பரிகாரம் கொடுக்கப்பட வேண்டியது. வியாஜ்ஜியம் தாக்கலான பிறகு நிகழ்ந்திருக்கும் சம்பவங்கள் அவனுக்கு கொடுக்கப்பட வேண்டிய பரிகாரங்களை குறைக்கவும்மாட்டாது கூட்டவும் மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது.

ஒரு குடியின்பேரில் கொண்டுவரப்படும் நஷ்டதாவா சென்னப்பட்டணம் பூஸ்திதி ஆக்ட் பாஸ் செய்யப்படுவதற்கு முந்தி தாக்கல் செய்யப்பட்டிருந்தபோதிலும் ஷை ஆக்ட் பாஸ் செய்விக்கப்பட்ட பிறகும் சிவில் கோர்ட்டாரால் விசாரணை செய்யப் படக்கூடியதென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:— மனுதாருக்காக வக்கீல் மிஸ்டர் நாகபூஷணம் ஆஜரானர். [1914] ம. வி. நோ. 713. G. Narayanasawmy v Kamuri Ramayya, [1914] M. W. N. 713

---

(41)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

G. வெங்கட சுப்பராவ்—வாதி...அப்பீல்வாதி.

vs.

C. ரோசய்யா — பிரதிவாதி...அப்பீல் பிரதி [வாதி.

லாப்பாயின்ட்:—ஜாமீன் பத்திரம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஒரு வியாஜ்ஜியத்தில் தீர்ப்புக்கு முந்தி ஜப்தி செய்யப்பட்டது. முதல் கோர்ட்டில் சிலர் முன்வந்து ஜாமீன் கொடுத்து சொத்தை ஜப்தியிலிருந்து விடுதலை செய்து வைத்தார்கள். வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டதில் தள்ளுபடி செய்யப்பட்டது.

தீர்ப்பு:-ஜாமீன் பத்திரம் ரத்தாய்விட்டதென்று தீர்மானிக்கப்பட்டது. ஜாமீன் பத்திரத்தை ஊர்ச்சிதப்படுத்தக் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் கொடுத்த உத்திரவிற்கு விரோதமாக ஜாமீன்தார்கள் அப்பீல் செய்துகொள்ளலாமென்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக மிஸ்டர் L. A கோவிந்தராகவய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக வக்கீல்மிஸ்டர் S. நடேசசாஸ்திரியாரும், வக்கீல் மிஸ்டர் வேம்பு அய்யரும் ஆஜரானார்கள். [1914] ம. வி. நோ. 714 G. Venkatasubba Row v. C. Rojayya, [1914] M. W. N. 714.

---

(42)

இரண்டாவது அப்பீல் நெ. 1567 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏப்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

கிருஷ்ணய்யா—வாதி...அப்பீல்வாதி.

vs.

ருமசாமி அய்யர் வகையரு—பிரதிவாதிகள்...
அப்பீல் பிரதிவாதிகள்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—பிரதிவாதிகள் ஸ்ரீரங்கத்தில் சீட்டு பிடித்தார்கள். சீட்டு எடுப்பவர்கள் சீட்டு பண்டின் மானேஜர் திருப்தி அடையும்படியான ஜாமீன் கொடுத்துவிட்டு சீட்டுப் பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பது சீட்டு பண்டின் விதி. வாதிக்கு சீட்டு ரூ. 2700-க்கு விழுந்தது. ரூ. 3 ஆயிரம் பொருமானமுள்ள சொத்து ஜாமீன் கொடுத்துவிட்டு சீட்டுப் பணத்தை தமக்கு கொடுக்கும்படி பிரதிவாதிகளைக் கேட்டார். பிரதிவாதிகள் கொடுக்கவில்லை.

தீர்ப்பு:—ரூ. 2700 சீட்டுப் பணத்திற்கு ரூ. 3000ம் பொருமானமுள்ள சொத்தை வாதி ஈடு கொடுத்திருப்பது நியாயமான காரியமாக விருந்தபோதிலும் மானேஜர் செய்தது சீட்டு பண்டின் விதிக்கு விரோதமென்று சொல்ல முடியாது என்றும் மானேஜர் செய்த தீர்மானத்தில் கோர்ட்டார் பிரவேசிக்க முடியாதென்றும் தீர்மானிக்கப்பட்டது. [1914] ம. வி. நோ. 715. Krisna Iyer v. Ramasawmy Iyer, [1914] M. W. N. 715.

---



(43)

இரண்டாவது அப்பீல் நெ. 467 of 1913.

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏப்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானே.

ருஜம்மாள் வகையரு — பிரதிவாதிகள்....அப் பீல் வாதிகள்.

vs.

மகாதேவயோகி வகையரு — வாதிகள்....அப் பீல் பிரதிவாதிகள்.

லாப்பாயின்ட்:—இஜெக்ட்மெண்டு வியாஜ்ஜியம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—தஞ்சாவூர் ஜில்லா திருவையாற்றில் பாலசுந்தரி அம்மாள் என்னும் ஒரு ஸ்திரீயிடமிருந்து வாதி ஒரு வீட்டை கிரய சாசனம் பெற்றிருக்கிறார். கிரய சாசனம் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. ஷை பாலசுந்தரி அம்மாள் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவருவதற்கு முந்தி இறந்துபோய் விட்டார். அந்த வீடு அந்த அம்மாளுடைய பந்துக்களாகிய பிரதிவாதிகள் வசத்திலிருக்கின்றன. வாதி தம்முடைய கிரய சாசனத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு பிரதிவாதிகளை அந்த வீட்டைவிட்டு புறப்படுத்த திருவையாறு டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்திருக்கிறார். (O. S. No 106 of 1911.)

பிரதிவாதிகளின் ஆக்ஷேபனை:— முதலாவது வீட்டைக் கிரயம் செய்வதற்கே பாலசுந்தரி அம்மாளுக்கு அதிகாரம் கிடையாதென்று கிரயசாசனமே நமோதாவான கிரயசானம் என்று பிரதிவாதிகள் கக்ஷி சொன்னார்கள்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—பாலசுந்தரி அம்மாள் வீட்டை அவள் ஜீவதிசையுள்ள பரியந்தம் அனுபவிக்கும்படியான பாத்தியமட்டிலும் உடையவளே தவிர அதைக் கிரயம் செய்ய அவளுக்கு பாத்தியம் கிடையாதென்றும், கிரய ஆதரவு உண்மையான ஆதரவு அல்லவென்றும் அந்த ஆதரவால் வாதிக்கு யாதொரு பாத்தியமும் உண்டாக மாட்டாதென்று சொல்லி டி. மு. கோர்ட்டார் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

இந்த தீர்ப்புக்கு விரோதமாக வாதி சப் கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு:—பிரதிவாதிகள் சொல்லும் ஸ்வீகாரக் கக்ஷி செலாமணியாக மாட்டாதென்றும் பிரதிவாதிகள் பாலசுந்தரி அம்மாளுடைய புருஷனின் அனந்தர வார்சுகள்கூட அல்லவென்றும், ஆதலால் பாலசுந்தரி அம்மாள் செய்த பராதீனத்தை ஆக்ஷேபிக்கப் பிரதிவாதிகளுக்குப் பாத்தியம் கிடையாதென்று சப் கோர்ட்டார் தீர்மானித்து வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

பிரதிவாதிகள் ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிகளுக்காக வக்கீல் மிஸ்டர் T. V. முத்துகிருஷ்ணய்யரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மெசர்ஸ் C. V. அனந்தகிருஷ்ணய்யரும், P. S. வைத்திநாதய்யரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—யாதொரு பாத்தியமுமில்லாமல் சொத்தை உடைத்தாயிருப்பவன் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கிரய சாசனம் மூலியமாக ஷை சொத்தைக் கிரையம் பெற்று பாத்தியம் பாராட்டுகிறவனுடைய பாத்திதையை ஆக்ஷேபிக்க முடியாதென்று வாதியின் லாயர் எடுத்துச் சொல்லி அதற்கு ஆதாரமாக திரிம்பக் பிக்காஜி v. ஷங்கர் ஷாம்ராவ் (1) கேசின் தீர்ப்பை பிரமாணமாக எடுத்துக் காண்பிக்கின்றார். இந்தத் தீர்ப்பு கேசிற்குப் பொருந்தாததால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடவில்லை. ஆயினும் முல்ஜி கோவிந்தஜி v. நாத்து பிளேய் ஹிராச்சண்டு (2) கேசில் வீட்டை அல்லது நிலத்தைவிட்டு புறப்படுத்தக் கொண்டுவரப்படும் இஜெக்ட்மெண்டு வியாஜ்ஜியங்களில் வாதி வாங்கியிருக்கும் கிரய சாசனம் மோசடி அல்லது நமோதாவான கிரய சாசனம் என்று கக்ஷி சொல்லி ருஜுப்படுத்த பிரதிவாதி பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தீர்ப்பைப் பின்பற்றி கீழ் அப்பீல் கோர்ட்டாருடைய தீர்ப்பை ரத்துசெய்து கேசை சட்டப்படி விசாரணைசெய்து பைசல் செய்யும்படியாக கீழ்க் கோர்ட்டிற்கு அனுப்புகிறோம் என்று தீர்ப்பு சொன்னார்கள், [1914] ம. வி. நோ. 717 Rajammal v. Mahadeva Yogi, [1914] M. W. N. 717.

NOTES.

குறிப்புகள்.

(1) 36 பம். 37. Trimbuk Bhikaji v. Shankar Sham Rao, 36 Bom. 37.

(2) 15 பம். 1. Mulji Govindaji v. Nathu Blai Herachand, 15 Bom. 1.

---

(44)

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 109 of 1914.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர்.

காரிமாங்காடு வகையரு—குற்றவாளி...மனுதார்

vs.

சக்ரவர்த்தியார்—

லாப்பாயின்ட்:—இ. பி. கோ. 404, 424-பிரிவுகளின் தாற்பரியம்.

கேசின் விபரம்:—பெத்தா புரத்தில் ஒரு மனிதன் புத்திர சந்ததி இல்லாமல் இறந்துபோய்விட்

டான். இவனுக்கு இரண்டு மைனர் பெண்சாதிகளிருந்தார்கள். ஒரு தாயாரும் இருந்தாள். அவன் இறந்து போனபோது தாயார் இருந்து அவனுடைய சங்கம சொத்துக்களை எல்லாம் எடுத்துக்கொண்டு அவைகள் தனக்குச்சொந்தமானவை என்று பாத்தியம் பாராட்டினுள். இதனல் ஷ மைனர் விதவைகளுக்கும் மாமியாருக்கும் சண்டை சச்சரவு உண்டாயி அதன் நிமித்தமாக மாமியார் பேரில் இ. பி. கோ. 104, 421 பிரிவுகளின் குற்றங்கள் பெத்தாபுரம் இரண்டாவது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டால் குற்றஸ்தாபனை செய்யப்பட்டது. இந்தத் தீர்ப்புக்கு விரோதமாக டிப்டி மாஜிஸ்டிரேட்டினிடம் அப்பீல் செய்து கொள்ளப்பட்டதில் அசல் கோர்ட்டுத் தீர்ப்பே உறுதி செய்யப்பட்டது. இதன் பேரில் ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்து கொள்ளப்பட்டது.

லாயர்கள்:—மனுதாருக்காக மிஸ்டர் P. சென்னையாவும் கவர்ன்மெண்டு தரப்பிற்காக மிஸ்டர் P. R. கிராண்ட்டும் ஆஜரானுர்கள்.

ஐக்கோர்ட்டுத் தீர்ப்பு:—இ. பி. கோ. 404-வது பிரிவின்படி இறந்து போனவனுடைய சொத்துக்களை அவனுடைய வேலைக்காரர்களும் அவனுடைய பந்துக்களாயிருத அன்னியர்கள் எடுத்துக்கொண்டு மோசம் செய்தால் அப்பேர்பட்டவர்கள் இ. பி. கோ. 404-வது பிரிவின்படி தண்டிக்கப்பட வேண்டுமென்பது ஷ பிரிவின் தாற்பரியம் இ. பி. கோ. 424-பிரிவின் தாற்பரியம் என்ன வென்றால் மோசக் கருத்துடைய கடனுளிகளையும் அவனுடைய கூட்டாளிகளையும் தண்டிப்பதே. இந்தக் கேசில் குற்றஸ்தாபனை செய்யப்பட்டிருப்பவள் இறந்து போனவனுடைய தாயார்; அவள் சொத்திற்கு பாத்தியம் பாராட்டக் கூடியவள். அவளை ஷ பிரிவின்படி தண்டிப்பது நியாயம் விரோதம் என்று குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்து செய்துவிட்டார்கள். அபராதம் விதிக்கப்பட்டிருந்தால் அந்த அபராதம் வாப்பீஸ் செய்யப்படவேண்டும். [1914] ம. வீ. நோ. 791 K. Mangadu v. Emperor [1914] M. W. N. 791.

---

(45)

கிரிமினல் ரிவிஷன் கேஸ் நெ. 21 of 1914.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமிசாஸ்திரி

லாப்பாயிண்ட்:—சிவில் கிரிமினல் சார்ஜ்.

தீர்ப்பு:—ஒரு சிவில் தாவா தாக்கல் செய்யப்பட்ட பிறகு கிரிமினல் பிரியாது கொடுக்கப்பட்டால் சிவில் தாவாவில் தீர்ப்பு சொல்லப்பட்டபிறகு தான் கிரிமினல் பிரியாது விசாரணை செய்யப்படவேண்டும். [1914] ம. வீ. நோ. 211 [1914] M. W. N. 211.


## JOLLY

(Registered) Scented Nut Slices.

The Public are hereby informed that the undersigned has fund out a remedy for rooting out all dental diseases by manufacturing the famous "Jolly Scented Nut Slices" and Tobacco in accordance whith the best modern scientific principles. These slices prove an excellent remedy not only in destroying the germs but also in increasing considerably the power of digestion.

The publice are therefore requsted to avail themselves of this golden opportunity without delay. It is sold at a rediculously low price to suit the convenience of the rich and the poor alike.

| | |
|---|---|
| 4 lbs Tin | Rs. 0—4—0 |
| 1 Box of 144 Packets | ,, 0—5—0 |

Special quotation to traders and commission agents.

Apply to:— K. KANNABIRAN PILLAY,
Snuff Merchant, Uppada Bazaar, Madras.

## ஜாலி பரிமள பாக்குத்தூள்.

இதனல் சகலமானவர்களுக்கும் அறிவிப்பதுயாதெனில்:—அநேக வைத்திய சாஸ்திர முறைகளை அனுசரித்து நமது பற்களுக்குரிய பல நோய்களையும் போக்க இத்திவ்விய வாசனை பாக்குத்தூள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது நமது பற்களிலுள்ள கிருமிகளையெல்லாம் கொன்று பற்களை உறுதிபடுத்துவதுடன் ஜீரணசக்தியையும் விர்த்திசெய்கிறது. இத்தூளில் உயர்ந்த வாசனை திரவியங்களும் சேர்ந்திருப்பதினல் இதனை உபயோகிக்கும் ஒவ்வொருவருக்கும் மனோரம்மியத்தை தரும். இதை ஏழைகளும் உபயோகிக்குமாறு மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஜாலி பரிமளபுகையிலையும் வேண்டியவர்கள் அடியிற்கண்ட என் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| 4 பவுன் பாக்குத்தூள் டப்பி விலை ரூபா | 0—4—0 |
| 144 பைகள் அடங்கிய பெட்டி ,, | 0—5—0 |

க. கண்ணபிரான் பிள்ளை,
உப்பாடைக்கடை, மதராஸ்.




## *THE HON'BLE Mr. V. S. SRINIVASA SASTRI on THE POST-PUBERTY MARRIAGE BILL.*

## ருதுமதி விவாஹ மசோதா.

நிகழ் ௴ கூடின சட்ட சபையில் ருதுமதி விவாஹ மசோதா ஆக்ட்டை சபையின் ஆலோசனைக்கு கொண்டுவர வேண்டுமென்று ஆனரபில் மிஸ்டர் V. சீனிவாச சாஸ்திரியார் அவர்கள் அனுமதிகேட்க, அனுமதி கொடுக்கப்பட்டது. ருதுமதி விவாஹம் என்றால் அநேகருக்கு என்ன என்று தெரியாது. பிராமண ஜாதியாருக்குள்ளும் இன்னும் சில ஜாதியாருக்குள்ளும் பெண்களை புஷ்பவதியாவதற்கு முந்தி விவாஹம் செய்து கொடுத்துவிடும் வழக்கம் ஊர்ச்சிதத்திலிருந்து வருகிறது. இந்த வழக்கத்தால் அனேக தீமைகள் உண்டாகின்றன. ஆதலால் இந்த தீமைகளை விலக்கும் பொருட்டு பெண்கள் புஷ்பவதியானதற்குப் பிந்தி விவாகம் செய்து கொடுக்கப்பட்டால் அந்த விவாஹம் கோர்ட்டாரால் செலாவணியாகக் கூடிய விவாஹம் என்று ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமென்பதற்கு ஒரு சட்டம் அல்லது மசோதா ஆக்ட் தயார் செய்திருக்கிறார். பெண்கள் புத்தி அறிவதற்கு முந்தி விவாஹம் செய்து கொடுக்கப்பட வேண்டுமென்றும் ஹிந்து சாஸ்திரங்களும் ஸ்மிருதிகளும் கூறுவதாக நம்பி பிராமண ஜாதியாரும் சில ஜாதியாரும் அந்த வழக்கத்தைக் கைக்கொண்டிருக்கிறார்கள். இந்த மசோதா ஆக்ட்டின் நோக்கம் நன்மையைப் பயக்கக்கூடியதாக யிருந்தபோதிலும் வைதீக பிராமணர்கள் இந்த சட்டத்தை வெகுவாய் ஆக்ஷேபிப்பார்கள். ஆதலால் இந்த மசோதா முக்கியமாக நம்முடைய கெஜெட் நேயர்களால் மிகவும் கவனிக்கப்பட வேண்டும். இந்த மசோதா ஆக்ட்டைத் தயார் செய்திருக்கும் ஆனரபில் மிஸ்டர் V. S. சீனிவாச சாஸ்திரியார் அவர்களே இந்த ஆக்ட்டின் கருத்துகளைப் பற்றியும் அது அகற்றக்கூடிய தீமைகளையும் செய்யக்கூடிய நன்மைகளையும் இந்நகரில் பிரசுரமாகும் தமிழ் பத்திரிகைகளில் ஒன்றுக்கு விவரமாக எடுத்து எழுதியிருக்கின்றார். நம்முடைய நேயர்கள் இந்த வியாசத்தை வாசித்து அறிந்துகொள்ள வேண்டுமென்று நோக்கம்கொண்டு அதை அப்படியே அடியில் எடுத்துப் பிரசுரித்திருக்கின்றோம்:—

இந்த மாசம் நடந்த சென்னை சட்டசபையில் ருதுமதி விவாஹ மசோதா என்று ஓர் மசோதா கொண்டுவர அனுமதி கொடுக்கப்பட்டது. பிராமணர்களுக்குள்ளும் அவர்களை அனுசரித்துவரும் வேறு சில ஹிந்து வகுப்பினர்களுக்குள்ளும் பெண்களை ருதுவான பிறகு விவாஹம் செய்து கொடுத்தாலும், அந்த விவாஹம் சட்டப்பிரகாரம் செல்லவேண்டுமென்பது மசோதாவின் கருத்து. இப்பொழுது இந்த வழக்கம் இல்லாததாலும், சில ஸ்மிருதிகள் ருதுமதி விவாஹம் கூடாதென்று தடுத்திருப்பதாலும், அது செல்லுமோ என்கிற சந்தேகம் இருக்கிறது. சிலர் கட்டாயம் செல்லுமென்று திடமாய் சொல்லுகிறார்கள். பம்பாய், பஞ்சாப் முதலிய இடங்களில் அநேகர் துணிந்து பெண்களை வயதான [illegible]கு மணஞ்செய்துகொடுக்கிறார்கள். சட்டத்திற்கு ஏற்[illegible]ா என்ற பயமே அவ்விடத்தில் தோன்றவில்லைபோலும். நம்முடைய ராஜதானியில்மட்டும் இந்த புது ஆசாரம் ஏற்படவேண்டுமென்று வெகு காலமாய் பிரயத்தனம் செய்தும், இதுவரை ஆந்திர நாட்டில் மட்டுந்தான் ஏதோ இரண்டு மூன்று விவாஹங்கள் நடந்திருக்கின்றன. தமிழ் நாட்டிலோ வருஷந்தோறும் சில பெண்களுக்கு இந்த எல்லை தாண்டியே விவாஹம் நடக்கிறதென்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தாலும், அதை வெளியில் ஒப்புக்கொள்ளாமல் உண்மையை மறைத்து காரியம் நடைபெறுகிறது. இப்படி பயந்து பொய் சொல்லி ஆசார வழுவுதல் செய்யாமல், பஹிரங்கமாய் பெரிதான பெண்ணென்றே கலியாணம் செய்தால் என்ன? இதை ஜாதியார் ஒப்பமாட்டார்கள்; தகுந்த மாப்பிள்ளை கிடைக்கமாட்டான்; கிடைத்தாலும் சுற்றத்தார் கலியாணம் செய்து கொடுப்பவர்களையும் செய்பவர்களையும் தள்ளி வைப்பார்கள். இவ்வித உபத்திரவம் போதாதுபோல கோர்ட்டில் விவஹாரம் நேர்ந்தால் கலியாணம் செல்லாதென்றும், பிறந்த குழந்தைகளுக்கு ஒழுங்காய்ப் பிறந்த குழந்தைகளுக்குள்ள பாத்தியதைகள் கிடையாவென்றும் பயம் உண்டாயிருக்கிறது. சட்ட சபையார், இந்த பயத்தைமட்டும் மேற்சொன்ன மசோதாவை அங்கீகரித்து போக்கடிக்கலாம். அப்படி போக்கடித்தலும் வேண்டும். ஜாதிக்கட்டு, சுற்றத்தார் விரோதம் முதலிய கேடுகளை மாற்ற ஒருவராலும் முடியாது. இவைகளை புது ஆசாரத்தை நிலைநாட்ட வேண்டுமென்று உற்சாகம் கொண்டவர்கள் அனுபவித்தே தீரவேண்டும். நம்முள் சிலர் ஆராய்ந்து பார்க்காமல் "அவரவருக்கு தோன்றினபடி செய்யலாமே, யார் அடிக்கிறார்கள்" என்று சொல்வதுண்டு. ஆனால் வேறு சிலர் கட்டுப்பாடுகள் செய்து பழைய வழி போகாதவர்களை ஹிம்சிப்பது உண்டு. சட்டத்தில் சந்தேகம் உண்டு; அதை தீர்ப்பது அவசியம்தான் என்று அனேக நியாயவாதிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். இவர்களுள் முக்கியமாய் இப்பொழுது நம் ஐக்கோர்ட்டில் ஹிந்து ஜட்ஜிகளாய் விளங்கிவரும் ஸர் சங்கரன் நாயர், திவான் பஹதூர் சதாசிவ அய்யர், மிஸ்டர் சேஷகிரி அய்யர், மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரி ஆகிய இவர்களைச் சொல்லலாம். காலஞ்சென்ற ஜஸ்டிஸ் சர். டி. முத்துசாமி அய்யர் ஒரு தீர்ப்பில் ஹிந்து சாஸ்திரம், ஹிந்து வழக்கம் இவைகள் பிரகாரம் பிராமண பெண்களுக்கு பெரியவளாவதற்கு முன்னமேயே கலியாணம் செய்துவிட வேண்டுமென்று எழுதியிருக்கிறார். ஆகையால் மற்ற மாகாணங்களில் எப்படியிருந்தால் என்ன, இந்த மாகாணத்தில் இம்மாதிரி ஒரு சட்டம் வேண்டுமென்பது நிச்சயம்.

வேறு சில சட்டங்கள்போல இந்த சட்டத்தால் ஒருவருக்கும் நிர்ப்பந்தமில்லை. எல்லாரும் ருதுமதி விவாஹம் செய்யவேண்டுமென்றாவது, செய்தவர்களுடன் வழக்கம் போல ஒன்றுகூடி வாழவேண்டுமென்றாவது கட்டாயம் கிடையாது. யாராகிலும் துணிந்து ருதுமதி விவாஹம் செய்தால் அவ்விவாஹத்தை கோர்ட்டார் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றுமட்டும் மசோதாவில் கண்டிருக்கிறது. ஆகையால் நம்முடைய விவாஹமுறை தவறிவிடும், சனாதன தர்மம் அழிந்துபோகும், ஹிந்துக்கள் என்ற பெருமை நசித்துவிடும், என்றெல்லாம் அஞ்சுவது அறிவீனம். புது ஆசாரத்தைக் கைக்கொள்பவர்கள் அநேகர் இருக்கமாட்டார்கள். இது நிலைபெற அநேக தலைமுறையாகும். ஏதோ சிலருக்குமட்டும் விவாஹ விஷயத்தில் இஷ்டபடி செய்ய சுவாதீனம் உண்டாகும்.

இப்படி ஏதோ சிலர் நன்மைக்காக மட்டும் ஒரு சட்டம் செய்வானேன்? ருதுமதி விவாஹம் நாகரீகமுள்ள மற்ற நாடுகளிலும் இந்நாட்டில் பிராமணர்கள் தவிர மற்ற ஜாதிகளுக்குள்ளும் பெரும்பாலும் அனுஷ்டானத்திலிருக்கிறது. நாம் மட்டும் அறியாக் குழந்தைகளை விவாஹம் செய்து

அநேகரை கைம்பெண்களாக்குகிறோம். படிப்பும் வெகுவாய் இல்லை. இருந்தால் அடித்தரப் படிப்புக்குமேல் ஏறுகிறதில்லை. தம்மையே சம்ரட்சிக்கத் தகுந்த அறிவில்லாத சிறு பெண்கள் குழந்தைகளை பெற்று வளர்த்து ஆளாக்கும்படி நேருகிறது. இதனால் பிராமண ஜாதியாருக்கே ஆயுள் குன்றியும் தேகபலம் மனோதைரியம் முதலியவை குறைந்தும் வருகின்றன. ஆண் பெண்கள் கூடி வாழ்ந்து குடும்ப நிர்வாகம் செய்யும் அவசரம் நேரிடும் வரையில் கலியாணம் செய்வானேன்? மற்ற ஜாதிப்பெண்கள் 15, 16 - பிராயம் வரையில் ஆண் பெண் என்ற வியவஹாரமே தெரியாமல் தேகப் பயிற்சி மனப்பயிற்சி இரண்டையும் பெற்றுவர, நம் பெண்கள் மட்டும், 7, 8, வயசுமுதல் வேறு குலங்களில் புகுந்து அகமுடையான், மாமியார், நாத்தனார் என்கிற நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு பிஞ்சில் பழுத்துதேய்ந்து போவானேன்? சிலர் கலியாணத்தை அதிபாலியத்தில் செய்துகொண்டு சாந்தி முகூர்த்தத்தை ஒத்திப்போட்டால் போதாதா என்பார்கள். இதற்கும் சில ஆக்ஷேபணைகள் சொல்லலாம். முதலாவது, இந்த யுக்தியால் வைதவிய தசை குறையாது. இரண்டாவது, பெண்களுக்கு அதிசீக்கிரத்தில் புத்திமாறி தேகம் தகுந்தபடி திடப்படுவதற்கு முன்னர் ருதுவாய் விடுகிறார்கள்.

ஒரு புது ஆசாரம் எவ்வளவு யுக்திக்கு ஒத்திருந்தாலும் ஹிந்து தர்ம சாஸ்திரத்திற்கு விரோதமாயிருந்தால் அதை நாம் கைக்கொள்ளலாகாது என்று ஒருதரத்தார் சொல்லுவார். ருதுமதி விவாஹம் அவ்விதமல்ல. இது சாஸ்திர சம்மதிப்பெற்று முற்காலத்தில் நம் தேசத்தில் பெரும்பாலும் வழங்கியது. காவிய நாடகங்களிலும், ராமாயணம், பாரதம், மற்றுமுள்ள புராணங்களிலும் சரித்திரங்களிலும் யௌவனம் வந்து காமம் ஜனித்த பிறகே அநேக பெண்களுக்கு விவாஹம் ஆனதாக வெளியாகிறது. ஸ்வயம்வரமென்று பெண் தானே பார்த்து புருஷனை தெரிந்தெடுப்பதாக ஓர் சம்பிரதாயமுண்டு. இது க்ஷத்திரியப் பெண்களுக்கு மட்டும் அல்ல; ஆரியர் என்று சொல்லும் பிராமணர், க்ஷத்திரியர், வைச்யர் என்ற மூன்று வர்ணத்தார்களுக்குமுண்டு. பெரும்பாலும் விவாகச் சடங்குகளும் மந்திரங்களும் பொதுவானவை மந்திரங்களின் பொருளை ஆராய்ந்தால் விவாஹ காலத்தில் பெண், பிள்ளை இருவருமே முதிர்ந்த பிராயமுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்று சந்தேகமில்லாமல் தெரியவருகிறது. அநேக ஸ்மிருதிகளில் ருதுவான பிறகு 3-வருஷம் வரை தகப்பனார் விவாஹம்செய்து கொடுக்கலாமென்றும், அதற்கு பிறகு பெண்கள் ஸ்வயம்வரம் செய்து கொள்ளலாமென்றும் விதித்திருக்கிறது. இந்த 3-வருஷ காலத்துக்குள் செய்யும் விவாஹம் இரண்டாம் பக்ஷம் என்று அநேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். இருக்கட்டுமே. சிரார்த்தங்களிலாகிலும், புண்ய காலங்களிலாகிலும் யாகாதி கிருதுக்களிலாகிலும் மற்றுமுள்ள சுபாசுபக் காரியங்களிலாகிலும் எதில்தான் முதல்தரமாக நாம் நடத்துகிறோம்? இந்த புண்ணியபூமியில் சிரத்தை குறைந்து வைதீகம் அழிந்து வர்ணாச்சிரமதருமங்கள் ஒன்றுகிலும் சரியாய் நடக்கவில்லை யென்பது நிராக்ஷேபம். பெண் விவாஹத்தில் மட்டும் சௌகரியத்தையும் நானாவித க்ஷேமங்களையும் உத்தேசித்து சாஸ்திர சம்மதமான ஒரு வழியைப்பற்றினால் அது இரண்டாம் பக்ஷம் என்று சொல்லுவது தகுமோ? நம் பெரியோர்கள் ஏற்படுத்திய பிராம்ம விவாஹம் என்ற உத்தமமான கலியாண முறை பெண் பெரியவளாகாமலிருந்தால் மட்டும் காப்பாற்றப்படுமோ? அக்ஷரம், ஸ்வரம், அர்த்தம் ஆகிய மூன்றும் பொருந்தாமல் சமயா சமயம் அறியாமல் மந்திரங்களை பிரயோகித்து காரிய கௌரவத்தை மனதில் சிறிதேனும் நினையாமல் எதிர் ஜாமீன், சீர், சாப்பாடு, பலதானம் முதலிய விஷயங்களில் மனதை முழுவதும் செலுத்தி பாட்டும் கூத்தும் சண்டையும் சச்சரவுமாக கலியாணத்தை நடத்துவது முதற் பக்ஷமாகுமோ? வரதக்ஷிணை, மந்திரம் சொல்லுதல் முதலிய முக்கிய காரியங்களில் சாஸ்திரத்தை ஒரு பக்கத்தில் தள்ளி, மூன்றும் பக்ஷம், நான்காம் பக்ஷமான வழக்கங்களைக் கைகொண்ட நாமோ சாஸ்திரம் ஒப்புக்கொண்ட ருதுமதி விவாஹத்தை இரண்டாம் பக்ஷமென்று ஒதுக்க வல்லவர்!

இது தவிர மற்றொரு முகாந்திரமுண்டு. கலியாணச் சடங்கை யெல்லாம் கிரமமாய் மந்திரங்களுடன் கண்டிருக்கும் பழைய கிருஹ்ய சூத்திரங்கள் என்று சொல்லப்படும் புஸ்தகங்களில் முதல் 3-நாள் இரவில் தம்பதிகள் புணராமல் சேர்ந்து படுத்திருந்து, நான்காவது நாள் ராத்திரியில் 12-மணிக்குமேல் சம்போகம் செய்வதைப்பற்றி மிகப் பச்சையாய் வர்ணிக்கும் சில மந்திரங்களை சொல்லிப் புணரவேண்டுமென்று கட்டளை தெளிவாய் இருக்கிறது. இதனால் முற்காலத்தில் ருதுமதியான பெண்களுக்குத்தான் விவாகமென்பது நன்குவிளங்கும். தற்கால குழந்தை விவாகங்களிலே சடங்கையெல்லாம் விட்டு மந்திரங்களை மட்டும் தாருமாறாய்ச்சொல்லி உண்மையை மறக்கடித்து சாகசத்துடன் இப்படித் தான் அனாதியாய் நடந்து வருகிறதென்று ஓங்கி சாதிக்கிறார்கள். ஆனால் பழைய சம்பிரதாயம் இன்னவை என்று ஞாபகப் படுத்துவதற்கு ஒரு வழக்கம் மைசூரில் மண்டையத்தார் என்று சொல்லப்படும் வகுப்பினரிலும், மாத்தியந்தினர் என்கிற சுக்லயஜுர் வேதிகளிலும் இருக்கிறது. அதாவது, விவாஹத்தின் நான்காம் இரவில் வதூவரர்களை க்ஷணகாலம் சேர்த்துப் படுக்கவைத்து ஒரு கம்பளத்தால் போர்வையிட்டு எடுத்துவிடுகிறது. இதில் புருஷர்கள் அதிகமாய்க் கவக்காமல் பெண்டுகள் சம்பிரதாயம் என்று நடத்தி விடுகிறார்கள்.

மேற்சொன்ன நன்மைகள் விளைந்தாலும், சாஸ்திர சம்மதி இருந்தாலும், புதுவழக்கம் ஒன்றை கைப்பற்றும்பொழுது ஜனங்களுக்கு ஏதாகிலும் பயம் தோன்றுவது ஆச்சரியமல்ல. இவ்விஷயத்தில் சிலர் பின்வாங்குவதற்கு சொல்லத்தகாத ஒரு காரணத்தைச் சொல்லுகிறார்கள். ருதுவான பிறகு பெண்களுக்கு விவாஹம் செய்யலாமென்றால் பெண்பாலை தூற்றுவது தோஷமில்லை என்று எண்ணங்கொண்ட பிராமண ஜாதியில் சில பெண்களுக்கு கெட்ட பெயர் வைத்துவிடுவார்களே, ஏதோ சில பெண்கள் உண்மையில் கெட்டுப் போகலாமே என்கிறார்கள். இதற்கு ஆதாரமாக பெண்பாலருக்கு கபடமும் காமமுமே பெரிது என்பதற்கு புராண வசனங்களும் கதைகளும் ஆதாரமாக எடுத்துரைக்கப்படும். ஆனால் இது முற்றிலும் அநீதி. வாய், கை ஒன்றுமில்லாமல் நம்மையே அடக்கமாக புகுந்த நம்சகோதரிகளையும் பெண்களையும் இவ்வாறு சந்தேகிப்பது தகாது. ருதுமதி விவாஹம் வழங்கிவரும் மிக நாகரீகமடைந்த அநேக ஜாதிகளில் பெண்களுக்கு கற்புக்குறைவு என்று நினைப்பது அறிவீனம். இதுவரை காப்பாற்றிவந்த பெண்களை ருதும்திவிவாஹமென்பது உண்டாகிவிட்டால் காப்பாற்றமுடியாதோ? நம்மில் அநேகருக்கு ஹிந்து ஸ்திரீகள் மேல்நாட்டு ஸ்திரீகளைக்காட்டிலும் ரொம்ப கற்புள்ளவர்கள் என்று பெருமையுண்டு. இந்த உயர்வு உண்மையில் எதனால் வந்தது? நம் ஸ்திரீகளின் இயற்கையாலா? அல்லது பாலியத்தில் விவாஹத்தை செய்து



முடித்தல் என்கிற வழக்கத்தாலா? இரண்டாம் பக்ஷத்தை ஏற்றுக்கொள்வது மிகவும் இழிவு.

வேறு சிலர் வெகு தூரத்திருஷ்டியோடு மற்றொரு கேடு வருமென்று பயப்படுகிறார்கள். வயதான பிறகு கலியாணமென்றால் சில பெண்களுக்கு ரூபத்தாலோ துற்குணத்தாலோ வேறு பிடிவாதத்தாலோ கலியாணம் ஆகாமல் நின்றுவிடக்கூடும். அப்படி கன்னிகைகளாகவே இருக்கும் பெண்களுக்கு ஜீவனத்துக்கு வழியென்ன? குடும்பச் செல்வத்தில் ஒரு பாகம் கொடுக்கும்படி வருமே. அதற்கு ஒருவாறு சட்டத்தைத் திருத்தவேண்டும். இது தவிர, நாட்டில் மணம்புரியாத பெண்கள் அநேகரிருப்பதே கற்புக்குக் குறைவாகும். விவாஹ முறை தப்பிப் பிறந்த குழந்தைகளின் கணக்கு அதிகமாகும். பெண்களும் எனக்கு இந்தப்பிள்ளை வேண்டாம், அந்தப் பிள்ளை வேண்டுமென்று பிடிவாதம் பிடிக்கத் தலைப்படுவார்கள். இவையெல்லாம் ஒரு மாதிரி யில்லாமல் வேறொரு மாதிரியாக இப்பொழுதும் உண்டு. புதிதாய் உண்டாகப்போகிறதில்லை. அதிகமாயும் வளரப்போகிறதில்லை. வீணாய் சஞ்சலப்படலாகாது. ருதுமதி விவாஹம் உலகத்தில் எங்கும் வழங்கிவருகிறது. நம் ஊரிலும் ஆதிகாலத்தில் வழங்கியதுதான். நம்முடைய மதத்திற்கும், ஆசாரத்திற்கும் ஏற்றதுதான். நம் ஜாதியார் நாகரீகம் பெற்ற மற்ற ஜாதியார் போல் முன்வந்து பெருமை பெறவேண்டுமானால், ஸ்திரீ ஜாதியின் நிலையை உயர்த்துவதே முதற்காரியம். ஸ்திரீ ஜாதியின் நிலையை உயர்த்துவதற்கு ருதுமதி விவாஹம் இன்றியமையாததென்று சொல்லவும் வேண்டுமோ?

முடிவில் ஒரு பிரார்த்தனை. இவ்வளவு கக்ஷி, பிரதிகக்ஷிப் பேசுவதால் மசோதாவின் கருத்து ஏதோ அடியோடு நம் நிலையை கவிழ்த்து விடுவதென்று தோன்றலாம். அது சரியல்ல. முதலில் சொல்லியவாறு யாராகிலும் பதினாயிரத்தில் ஒருவர் துணிந்து தேசக்ஷேமமென்றோ, ஜாதி மேன்மையென்றோ, பெண் கல்வியென்றோ இந்தப்புதிய வழக்கத்தை அனுஷ்டித்தால் தம்பதிகளுக்கும், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் குற்றம் குறைவு ஒன்றும் நேரிடலாகாதென்பது மட்டுமே இந்த மசோதாவின் முக்கிய கருத்து. ருதுமதி விவாஹம் சென்னை பிராமணருள் வேரூன்றுமென்பதே பெரிய சந்தேகத்திலிருக்க, அது நாடெங்கும் பரவினால் என்ன தீமை விளைவிக்குமோ என்று யோசிப்பது சற்றேனும் அவசியமில்லை.

---

# Lawyer and Client.

## லாயரும் கக்ஷிக்காரனும்.

—:o:—

## MAINTENANCE OF A CHILD.

## ஒரு குழந்தையின் ஜீவனாம்சம்.

(56-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

லா — கொடுத்தது திரும்பக்கொடார், மனது வந்திடில் குறையின்றி நிறை யீந்திடார். கொடுக்கிறேன் நீ நாளைவாவென்பார், போயினால் கோரி ஒரு தவணை வைப்பார், அடுத்தது கேட்கில் ஆகும் வேளையிலாகும் அல்லது செய்வது செய் என்பார், அணுவை மகமேறு போலாக்குவார், மேருவையும் அணுவா நிறுத்து விடுவார், எடுத்துடல் வளர்த்திட்ட தாய் தாலி என்னினும் எடாது முழுதும் கொடுக்கார், இட்டுரைத்தே மாற்றை ஏமாற்றுவார், முழுதிலும் ஏப்பமிட்டாரு மிடுவார், வடுத்தொழில் பொற்கொல்லரால் சிவபணிபூண்ட வகையாதென ஒருவன் விண்டான், வரை ராஜசு குமரிமடிமீது விளையாடல் புரிமணி கொண்ட வடிவேலனே.

ரங்க — இவ்வளவு சாமர்த்தியம் எங்களவர்களுக்கு இருக்கிறதா!

லா — ரெங்கபத்தரே! நல்லது நீர் போய்வாரும்! அடுத்த சமயம் வரும்போது என்னைப் பணத்துடன் வந்து பாரும். சாரதா! நீங்கள் வந்த காரியம் என்ன! மணி 9 ஆய்விட்டது. கோர்ட்டிற்குப் போகவேணும்.

ரு — ஒரு ஜீவனாம்சப் பிரியாது கொடுக்கவேணும்.

ரு — என் புருஷன்பேரில் குழந்தை பிறந்து வருஷம் மூன்றாகிறது. ஒரு தம்படிகூட எனக்காவது அல்லது குழந்தையை ஆதரிக்கவாவது அவர் கொடுக்கிறதில்லை.

லா — புருஷன் என்ன டிபன்சு சொல்லுகிறானோ?

ரு — சாரதா! பார்த்தாயா! நான் சொன்னேனே! ராமசாமியும் நீயும் சுலுவாகச் சொல்லிவிட்டீர்களே! லாயர் எடுத்தவுடன் என்ன பயமுறுத்துகிறார்!

ரு — லாயர் தொழில் ஒரு வியாபாரமல்லவா? விருவு சகுவு இருக்கவேண்டாமா? கொஞ்சம் பொறு.

லா — டிபன்சு என்ன சாமானிய டிபன்சா சொல்லுவான்?

ரு — என்ன டிபன்சு சொல்லப்போகிறார்?

லா — தன்னுடைய பெண்சாதி விபசார நடவடிக்கையுள்ளவள் என்றும் அவளுக்கு ஜீவனாம்சம் கொடுக்க தான் பாத்தியப்பட்டவனல்ல என்று சொல்லிவிட்டால் நாம் என்னபதில் சொல்லக்கூடும்.

ரு — அப்படிச் சொன்னால் ருஜுப்படுத்த வேண்டாமா?

சா — அப்படி ருஜுப்படுத்துவது சாத்தியப்படாது. சாதாரணமாக பெண்சாதியின்பேரில் கோபம்கொண்டு "கன்னா, பின்னா" என்று ஊரில் உளறிக்கொண்டு திரிவாரே ஒழிய கோர்ட்டிலேயா பகிரங்கமாக அப்படிச் சொல்லுவார் சொல்லமாட்டார்.

லா — அவன் இம்மட்டிலுமா சொல்லுவான் நீங்கள் பேதமைப் பெண்கள்! உங்களுக்கு சபா

சாரம் தெரியாது. கோர்ட்டிற்கு அம்பலத்திற்கு வந்துவிட்டால் இது மானம் இது அவமானம் என்று கூடவா பார்க்கப்போகிறுன். ஒருக்கால் பிள்ளையே தனக்குப் பிறந்த தல்லவென்று சொல்லி சக்ஷி ஆடினுனேயானுல் என்ன செய்கிறது.

ரு — நாம் வந்ததுமுதல் கேசு ஒரு பெரிய கேஸ் என்றும் அதில் அவருக்கு அதிக கஷ்டமிருக்கிறதென்று நாம் நினைக்கும்படியாக பேசுகிறுரே தவிர மற்றப்படி வந்த காரியத்தை இலகுவில் முடித்துக்கொடுக்கிற பேச்சா பேசுகிறுர்? இல்லை! இல்லை!

லா — ஓனுய்க் கதை தெரியுமா?

சா — தெரியாதுங்கள்! ஸ்வாமி! நீங்கள் சொல்லுங்கள்.

லா — தெருவு வழியாக ஒரு ஓனுய் போய் கொண்டிருந்தது. அதே வழியாக ஒரு தாயார் தன்னுடைய பாலகனை இடுப்பின்பேரில் வைத்துக்கொண்டு சென்றுள் குழந்தை கூவினது. தாய் குழந்தையைப் பார்த்து அழாதே! அழுதியோ! அதோ ஓடுதே அந்த ஓனுய்க்கு பூவாவாக உன்னைப்போட்டு விடுவேன் என்று பயமுறுத்தினுள். இதை கேட்டுக்கொண்டிருந்த ஓனுய் நமக்கு இன்று நல்ல ஆகாரம் அகப்பட்டதென்று சந்தோஷப்பட்டு தான் ஆகாரம் தேடும் வேலையை எல்லாம் விட்டு விட்டு மின்னும் பின்னுமாக அந்த ஸ்திரீயைப் பின் தொடர்ந்துக் கொண்டே போயிற்று. நான்கு மணி நேரம்சென்று குழந்தை பயம் பிடித்து சிரிப்பு முகமாய் இல்லாததைப்பார்த்து என் கண்மணி என்ன பயப்படுகிறுய் "ஓனுய் இங் கேவர்தால் நான் இலேசிலேயா விடுவேன் ஓரே வெட்டில் இரண்டு துண்டாய் விழும்படி செய்துவிட மாட்டேனே" என்று செல்லம் கொஞ்சினுள். நல்ல ஆகாரம் அகப்படுமென்று பொழுதெல்லாம் காத்துக்கொண்டிருந்த ஓனுய் வெட்கிப்போய் தன்னுடைய வீடு போய் சேர்ந்தபோது ஓனுய் பெண்சாதி புருஷனைப் பார்த்து "என்ன ஒரு நாளுமில்லாத களைப்பு அடைந்து வந்திருக்கிறீர்" என்று கேட்டது. ஓனுய்ப் புருஷன் "நான் ஒரு பெண் பேச்சைக் கேட்டு மோசம் போனேன்" என்று மறுமொழி சொன்னது. ஆதலால் நீ பெண் அல்லவா? சரியாயிருந்தால் புருஷன் ஏன் உன்னை விட்டுப்போவான்?

ரு — அதெல்லாம் இருக்கட்டும் ஸ்வாமி இந்தக் கேசுக்கு என்ன பீசு கேட்கிறீர்கள்.

லா — ரொம்ப கஷ்டமிருக்கிறது. 100 - ரூபாய் கொடுத்தால்தான் ஜீவனும்ச உத்திரவு வாங்கி கொடுப்பேன்.

ரு — எதற்காக ரூ. 100. இது மகா பெரிய கேசோ எங்களுக்கு வழி தெரியாதென்று நினைத்துக் கொண்டீர்களோ?

லா — உமக்கு என்ன வழி தெரியும்?

ரு — கிரிமினல் புரோசீஜர்கோடு 188-வது பிரிவின்படி ஒரு மனுவை எழுதி எறிந்தால் வழி பிறந்து போகிறது.

லா — பெண்சாதி விபசாரி என்று புருஷன் சக்ஷி ஆடினுல் என்ன செய்வாய்?

ரு — முதலாவது புருஷன் அப்படி சக்ஷியாடமாட்டான் அப்படி சக்ஷியாடினுல் விபசாரக் குற்றத்தை ருஜுப்படுத்துவது வெகு துர்பலம்.

லா — இது போகட்டும் ருக்குமணியை ஜாதியார் ஜாதியைவிட்டு விலக்கி வைத்திருக்கிறுர்கள் என்று சக்ஷி சொன்னுல் என்ன சொல்வாய்?

ரு — ஜாதியார் கூட்டம்கூடி கூப்பிட்டனுப்பியதற்கு போகாததால் ஜாதியைவிட்டுத் தள்ளிவைத்திருக்கிறுர்கள். ஜீவனும்சப் பிரியாதில் அந்தக் கேள்வி வருவானேன். அதற்கும் இதற்கும் என்ன சம்புந்தா சம்பந்தம்?

லா — அடே அப்பா! என்ன வல்வாயனுக யிருக்கிறுய்?

ரு — மகாராஜன் ராதாகிருஷ்ண நாயுடு பல்லாண்டு பல்லாண்டாய் க்ஷேமமாக இருக்கவேண்டும்! அவர் வெளிப்படுத்துகிற இந்திய சட்ட கெஜெட்டை 6-மாத காலம் ஒருவன் வாங்கி வாசித்தால் அரை லாயர் ஸ்வாமி! 1-வருஷம் வாங்கி வாசிததால் முழுலாயரல்லவோ?

லா — ஆனுல் உமக்கு இந்திய சட்ட கெஜெட் வருகிறதோ?

ரு — இதோ! பாருங்கள்.

லா — ஆனுல் பதில் பேசவில்லை. ரூ. 5 கொடுங்கள் பீசுக்கு நான் கேசை ஜெயித்துக் கொடுக்கிறேன். (முணு முணுத்துக்கொண்டு) நல்ல கெஜெட் பிறப்பட்டது தொழிலின் வாயில் மண்ணை வாரிப்போட.

---

## மானேஜர் விளம்பரம்.

1915-ம் வருட ஜனவரிமீ முதல் இந்தியன் லா கெஜெட் இரண்டு பாகம் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் லா ரிப்போர்ட்டுகளைமட்டும், மற்றொரு பாகம் மற்ற விஷயங்களையும் அடக்கிக் கொண்டிருக்கும். அந்த இரண்டு பாகங்களுக்குத் தனிபக்கம் எண்கள் கொடுக்கப்பட்டுவரும்.



# Current Cases.

# நடவடிக்கையிலிருக்கும் வியாஜ்ஜியங்கள்.

—:o:—

## மதிராஸ் ஐக்கோர்ட்.

### (1)

ஜட்ஜுகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்

லாப்பாயின்ட்—விதவை ஸ்வீகாரம்.

தீர்ப்பு:— ஒருனுக்கு இரண்டு விதவைகளிருந்தால் இளையவிதவை புருஷனுடைய சபிந்த பந்துக்களுடைய சம்மதத்தைப் பெற்றுக்கொண்டிருந்தபோதிலும் மூத்த விதவையுடைய சம்மதமின்றி ஸ்வீகாரம் எடுத்துககொள்ள பாத்தியமற்றவள் என்றும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள இளைய விதவையைவிடமூத்த விதவைக்கு அதிக பாத்தியமிருக்கிறதென்று கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறுர்கள்.

### (2)

அசல் தரப்பு.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல்.

ஸ்ரீகிருஷ்ணன் கோவில் கேஸ்.

வாதிகள்:—ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் பக்தர்கள்

vs.

பிரதிவாதி:—காத்தா தொளசிங்க செட்டி.

லாப்பாயின்ட்:—தருமகர்த்தா.

வியாஜ்ஜியச் சுருக்கம்:--ஸ்ரீ வேணுகோபால கிருஷ்ணசாமி தேவஸ்தானம் சென்னப்பட்டணம் பவழக்காரத் தெருவிலிருக்கிறது. இந்த தேவஸ்தானத்திற்கு 1875-ல் பலுஜா செட்டி வகுப்பார் பிரதிவாதியின் தகப்பனுராகிய காத்தா பாலுசெட்டியையும் இன்னும் மூவர்களையும் தருமகர்த்தாக்களாக நியமித்தார்கள். இந்த நான்கு தருமகர்த்தாக்களும் இன்னவிதமாக மானேஜ்மெண்டு செய்து வருகிறதென்று உடன்படிக்கை செய்து கொண்டிருக்கிறுர்கள். இந்த உடன்படிக்கை உண்டான பிறகு தருமகர்த்தாக்களில் மூன்று பேர் இறந்துபோய்விட்டார்கள். ஜீவதிசையிலிருந்த காத்தா பாலுசெட்டிமட்டிலும் ஏகாங்கியாய் தேவஸ்தானத்தை மானேஜ்மெண்டு செய்துகொண்டுவந்தார். ஆனுல் இவர் ஷை உடன்படிக்கையை அனுசரித்து இறந்துபோன தருமகர்த்தர்களுக்குப் பதிலாக புதிய தருமகர்த்தாக்களை நியமிக்காமல் மானேஜ்மெண்டு செய்துகொண்டு வந்தார். அனேக அசையும் பொருள்களும் அசையாப் பொருள்களும் பிரஸ்தாப தேவஸ்தானத்திற்குத் தருமஞ் செய்யப்பட்டிருந்தன. 1912-ல் பிதா இறந்துபோன பிறகு பிரதிவாதி தேவஸ்தானத்தை மிகவும் சீர்கேடாய் மானேஜ்மெண்டு செய்துவருகிறபடியால் பிரஸ்தாப தருமகர்த்தாவை நீக்கி ஒரு புதிய தருமகர்த்தாவை நியமிக்க வேண்டுமென்று ஷை தேவஸ்தானத்தின் பக்தகர்ள் இந்தவியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறுர்கள்.

பிரதிவாதியின் எழுத்து வாக்குமூலம்:—(1) ஆதிகால முதல் தேவஸ்தானமும் அதனுடைய சொத்துக்களும் பிரதிவாதியின் குடும்பத்தின் பிரத்தியேகமான டிரஸ்ட் சொத்துக்களாக பிரதிவாதியின் முன்னேர்களால் மதிக்கப்பட்டும் நடத்தப்பட்டும் வந்தது. (2) பலுஜசெட்டி வகுப்பாரால் பிரஸ்தாப தேவஸ்தானத்திற்கு எந்தக் காலத்திலும் தருமகர்த்தர்கள் நியமிக்கப்பட்டதில்லை. (3) மானேஜ்மெண்டு ஒழுங்காக நடத்தப்பட்டு வருகின்றது. (4) பிரதிவாதியால் தப்பு கணக்குகள் தயார் செய்யப்பட்டதுமில்லை. (5) விரும்பினேர்களுக்கு கணக்கைக் காண்பிக்க மறுத்ததுமில்லை.

வாதி தரப்பு சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டு வருகிறுர்கள்.



### (3)

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார்

அத்தைக்குப் பாஷாணமிட்ட கேஸ்.

ருமய்யா vs. சக்ரவர்த்தியார்.

கேசின் விபரம்:—ருமய்யா என்கிற 20 வயதுடைய பிராமணச் சிறுவன் தன்னுடைய அத்தையைக் கொல்லவேணுமென்று கருத்துக்கொண்டு மிளகாய்த்தூளில் பாஷாணத்தைக் கலந்து அவளுக்குக் கொடுத்ததாக சேலம் செஷன் ஜட்ஜியால் 7 வருஷ கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டான்.

இந்த தண்டனைக்கு விரோதமாக கைதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டான்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக பாரிஸ்டர் மிஸ்டர் J. கிருஷ்ணராவும் கவர்ன்மெண்டிற்காக பப்ளிக் பிராசிக்கியூட்டரும் ஆஜரானுர்கள்.

குற்றவாளியின் லாயர் பேசினது:—பிராசிக்கியூஷன் தரப்பார் சொல்லும் கதை கொஞ்சம்கூட நம்பப்படக்கூடியதாயில்லை என்றும் குற்றத்தை ருஜுப்படுத்த போதுமான சாக்ஷியமில்லை என்றும் சொன்னுர்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—கோர்ட்டார் கவர்ன்மெண்டு தரப்பிற்காக பப்ளிக் பிராசிக்கியூட்டர் பேசினதையும் கேட்டுக்கொண்டு குற்றவாளியின்பேரில் சாட்டப்பட்ட குற்றத்தை ருஜுப்படுத்த போதுமான சாக்ஷியம் இல்லாமலிருப்பதால் குற்ற ஸ்தாபனையை ரத்து செய்து அவனை ஜெயிலிலிருந்து விட்டுவிடும்படி தீர்ப்பு சொன்னுர்கள்.

### (4)

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்

வடகலை vs. தென்கலை.

கேசின் விபரம்:—காஞ்சிவரத்தில் 1913-ம் வருடம் மேமீ 10உ உடையவர் சாத்துமுறை உற்சவத்தில் உடையவர் வீதி பிரதக்ஷணம் செய்துவிட்டு கோவிலுக்குள் வந்த பிறகு வடகலையார் திருவாய்மொழி சொன்ன சமயத்தில் கலகம் செய்ததாக ஷை வடகலையாரைச்சேர்ந்த அட்டி சேஷாச்சாரியாரும் இன்னும் 5-வர்களும் காஞ்சீவரம் சப்மாஜிஸ்டிரேட்டால் குற்றஞ் சாட்டப்பட்டு தலைக்கு ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டார்கள். குற்றவாளிகள் அப்பீல் செய்துகொண்டதில் செங்கற்பட்டு ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் குற்றஸ்தாபனையையும் தண்டனையும் உறுதிப்படுத்தினுர்கள். குற்றவாளிகள் ஐக்கோர்ட்டில் ரிவிஷன்மனு தாக்கல்செய்தார்கள்.

குற்றவாளிகளின் லாயர் சொன்ன கக்ஷி:— தென்கலையார் வடகலையார்பேரில் பிரியாது கொடுத்ததுபோல வடகலையாரும் அதாவது மனுதார்களும் தென்கலையார்பேரில் ஒரு எதிர்பிரியாது கொடுத்திருந்தார்கள். இந்தக் கேசில் குற்றஞ் சாட்டப்பட்ட தென்கலையார் தாப்பில் சாக்ஷியம் சொன்னவர்களுடைய வாக்கு மூலங்களை நம்பி மாஜிஸ்டிரேட் மனுதார்களைத் தண்டித்திருக்கிறார் என்றும் அந்த சாக்ஷியத்தை நீக்கிப்பார்த்தால் வடகலையார்பேரில் குற்றம் ருஜுப்படவில்லை என்றும், தென்கலையார் கொண்டுவந்த கேசில் வடகலையார் கொண்டுவந்த கேசின் சாக்ஷி வாக்குமூலங்களை சப் மாஜிஸ்டிரேட் பிரயோகப்படுத்தி தண்டித்தது சட்ட விரோதமென்று சொன்னார்.

தீர்ப்பு:— பப்ளிக் பிராசிக்கியூட்டர் பேசினதையும் கோர்ட்டார் கேட்டுக்கொண்டு மனுதார்களின் லாயர் சொன்ன கக்ஷியை ஏற்றுக்கொண்டு ஷை குற்றவாளிகள் சம்பந்தப்பட்டவரையில் குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்து செய்துவிட்டு பாக்கி இரண்டு குற்றவாளிகளாகிய அர்ச்சகர்கள்பேரில் குற்றம் ருஜுப்படுகிறபடியால் அவர்கள் சம்பந்தப்பட்டவரையில் தண்டனையை உறுதிப்படுத்தி தீர்ப்பு சொன்னார்கள்.

---

(5)

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார்

## ஜாமீன் வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:— திருச்சினாப்பள்ளி ஜில்லாவில் வாதி பிரதிவாதிகளிடமிருந்து ஒரு நிலம் கிரையம் பெற்றார். கிரையசாசனம் எழுதியதற்குப் பிந்தியும் அது ரெஜிஸ்டர் செய்யப்படுவதற்கு முந்தியும் ஷை நிலத்தின்பேரில் ஏற்கனவே ஒரு அடமானமிருப்பதாக வாதி கேள்விப்பட்டு, ஷை நிலத்தில் ஏதேனும் வில்லங்கம் உண்டாகி தாம் நஷ்டப்படுவாரேயாகில் பிரதிவாதிகள் அந்த நஷ்டத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று ஜாமீன் பத்திரம் எழுதிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டார். பிரதிவாதிகள் வாய்மொழியாக ஒப்புக்கொண்டார்கள். அடமானக்காரன் வியாஜ்ஜியம் கொண்டுவந்து டிக்கிரி பெற்று டிக்கிரியை நிறைவேற்ற எத்தனித்தான். பிரதிவாதிகள் அடமானத் தொகையைச் செலுத்த மறுதளித்தார்கள். வாதி செலுத்திவிட்டு ஷை தொகையைப் பிரதிவாதிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள திருச்சினாப்பள்ளி டி. மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—பிரதிவாதிகள் பேரில் அடமான டிக்கிரி பிறந்து மூன்று வருடம் சென்ற பிறகு வாதி இந்த வியாஜ்ஜியத்தைக் கொண்டுவந்திருக்கிறபடியால் லிமிட்டேஷன் ஆக்ட் 65-வது ஆர்ட்டிகிலின்படி வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல்செய்து கொண்டார். லாயர்கள்: அப்பீல் வாதிக்காக மிஸ்டர் N. ருஜகோபாலாச்சாரியாரும் அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் K. S. கனேஷ அய்யரும் பேசினார்கள்.

வாதியின் லாயர் பேசினது:—பிரதிவாதிகள் வாதிக்கு நேரிடும் நஷ்டத்தைக்கட்டிக் கொடுப்பதாக செய்த ஒப்பந்தத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு வாதி இந்த வியாஜ்ஜியத்தைக்கொண்டு வந்திருக்கிறபடியால் வாதிக்கு உண்மையில் நஷ்டம் நேரிட்ட பிறகு இந்த வியாஜ்ஜியம் கொண்டு வரப்படக்கூடும். நஷ்டத்தைக் கட்டிக்கொடுக்கும்படியாக கொண்டுவரப்படும் வியாஜ்ஜியம் நஷ்டம் நேரிடுவதற்கு முந்தியும் கொண்டுவரப்படக் கூடுமென்றும், உண்மையில் நஷ்டம் நேரிட்ட மூன்று வருஷங்களுக்குள்ளும் லிமிட்டேஷன் ஆக்ட் 83-வது பிரிவின்படி கொண்டு வரப்படலாம் என்று எடுத்துப்பேசினார்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிக்கு உண்மையில் நஷ்டம் நேரிட்ட மூன்று வருஷத்திற்குள் இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருக்கிறபடியால் வியாஜ்ஜியத்திற்குக் காலாவதிதோஷம் உண்டாகவில்லை என்று தீர்மானித்து ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருடைய தீர்ப்பை மாற்றி கேசை விசாரணை செய்து சட்டப்படி பைசல் செய்யும்படியாக ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருக்கு அனுப்பினார்கள்.

---

(6)

ஜட்ஜிகள்:— { ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர்
ஜட்ஜி மிஸ்டர் ஹானே

## தேவஸ்தானங்களில் பூஜைகள்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—திருச்சினாப்பள்ளி ஜெம்புகேஸ்வர தேவஸ்தானத்தில் வாதி பாரம்பரியமாயுள்ள ஒரு அர்ச்சகர். வாதியினுடைய முறையில் பிரதிவாதியாகிய வேறொரு அர்ச்சகர் ஒரு பிரபுவுக்காக "நவவாரண" பூஜை நடத்திவைக்க உத்தேசித்திருக்கிறார் என்றும் அந்தப் பூஜை புதிதான பூஜையானபடியால் அதை நடத்திவைக்காமலிருக்கும்படி கோர்ட்டார் தடுக்கவேண்டுமென்று ஸ்ரீரங்கம் டி.மு. கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—பழைய பூஜை புதிய பூஜை ஆக எல்லா பூஜைகளையும் செய்ய வாதி பாத்தியமுடையவர் என்றும் ஆனால் பிரதிவாதி இப்போது செய்ய உத்தேசித்துக்கொண்டிருப்பது நவவாரண அர்ச்சனையே ஒழிய பூஜையல்லவென்றும் அதைத் தடைப்படுத்த பிரதிவாதி பாத்தியப்பட்டவரல்லவென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொள்ளப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் V. விஸ்வநாதசாஸ்திரியாரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் N. ருஜகோபாலாச்சாரியாரும் ஆஜரானார்கள்.

ஜட்ஜி மிஸ்டர் சதாசிவ அய்யர் தீர்ப்பு:—மாமூல் பூஜைகளுக்கு இடஞ்சல் இல்லாமல் எந்த அர்ச்சகனும் எந்தப் பூஜையையும் நடத்தலாம். தருமகர்த்தாக்கள் அதற்கு அனுமதி கொடுக்கலாம். பிரதிவாதி கிராஸ் அப்பீல் செய்து கொள்ளாததால் இந்த இரண்டாவது அப்பீலைத் தள்ளுபடி செய்துவிட்டோம் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

ஜட்ஜி மிஸ்டர் ஹானே:—ஜில்லா ஜட்ஜி கோர்ட்டாருடைய தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்.

முடிவில் இரண்டாவது அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.



(7)

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரியார்

## கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தில் பிரவேசித்த கேஸ்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—தென் ஆற்காடு சொற்பகால சப் கோர்ட்டில் ஒரு வியாஜ்ஜியம் நீண்ட காலமாக விசாரணை செய்யப்பட்டு வந்தது. பல முறை வியாஜ்ஜியத்தின் விசாரணை ஒத்திபோடப்பட்டன, இப்படி நீண்டகாலமாக விசாரணை செய்யப்பட்டு வருவதால் சப் ஜட்ஜி ஜில்லா ஜட்ஜிக்கு அறிவித்தார். ஜில்லா ஜட்ஜிக்கு எழுதினபதிலில் சப் ஜட்ஜி அந்த பெரிய கேசைமட்டிலும் நீண்டகாலம் விசாரணை செய்து வருகிறபடியால் மற்ற வியாஜ்ஜியங்களின் கக்ஷிக்காரர்கள் அவர்களுடைய கேஸ்கள் விசாரணை செய்யப்படாமல் காற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்றும் சப் ஜட்ஜி சொற்பகாலத்திற்கு நியமிக்கப்பட்டதில், ஐக்கோர்ட்டாருடைய கருத்து என்ன வென்றால் ஜில்லா ஜட்ஜிக்கு அவர் உதவியாகயிருந்து அனேக வியாஜ்ஜியங்களை பைசல்செய்து வைக்க வேண்டுமென்பதே என்றும் மேலும் அந்த பெரிய வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரர்கள் தங்களுடைய வக்கீல்களுக்குச்சொல்லி சாக்ஷிகளை நீண்ட குறுக்கு விசாரணைசெய்து காலத்தைப் போக்கியிருக்கிறார்கள் என்றும் ஆதலால் அந்த வியாஜ்ஜியத்தை அடுத்த ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைத்துவிட்டு மற்ற வியாஜ்ஜியங்களை விசாரணை செய்யும்படியாக உத்திரவு செய்தார்கள். ஜில்லா ஜட்ஜியினுடைய உத்திரவை அனுசரித்து சப் ஜட்ஜி அந்த பெரிய வியாஜ்ஜியத்தை அடுத்த ஜனவரி மாதத்திற்கு ஒத்திவைத்தார்கள்.

சப் ஜட்ஜி செய்த உத்திரவிற்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் ஒரு ரிவிஷன்மனு தாக்கல்செய்யப்பட்டது.

லாயர்கள்:—மனுதார் தாப்பில் மிஸ்டர் T. V. முத்துகிருஷ்ணய்யரும் எதிர் மனுதார் தாப்பில் மிஸ்டர் L. A. கோவிந்த ராகவய்யரும் பேசினார்கள்.

மனுதார் லாயர் பேசினது:—ஜில்லா ஜட்ஜி சப் ஜட்ஜியின் அபிப்பிராயத்தில் பிரவேசித்தது சட்ட விரோதமென்று சப் ஜட்ஜி இந்தக் கேஸ் விஷயத்தில் தம்முடைய சொந்த அபிப்பிராயப்படி நடக்காமல் ஜில்லா ஜட்ஜியின் அபிப்பிராயப்படி நடந்ததில் தவறிப்போயிருக்கிறார்கள் என்றும் ஆகையால் அது சட்டப்படி செய்யப்பட்ட உத்திரவு அல்லவென்று எடுத்துச் சொன்னார்.

எதிர்மனுதார் லாயர் பேசினது:— மனுதார் செய்து கொண்டிருக்கும் மனுவை தாம் ஆக்ஷேபிக்கவில்லை என்றும் இந்தக் கோர்ட்டார் இந்தமனு சம்பந்தமாகச் செய்யப்படும் உத்திரவை சப் கோர்ட்டார் கேசை உடனே விசாரணைக்கு எடுத்துக்கொள்ள செய்யப்பட்ட உத்திரவாக எண்ணக்கூடாதென்று சொன்னார்.

ஐக்கோர்ட்டார் உத்திரவு:—ஜில்லாக் கோர்ட்டார் சப் கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தில் பிரவேசித்தது ஒழுங்கல்லவென்றும் சப் கோர்ட்டார் தம்முடைய அபிப்பிராயப்படி கேசை விசாரணைசெய்து சட்டப்படி பைசல் செய்ய வேண்டுமென்று உத்திரவு செய்தார்கள்.

---

(8)

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சங்கரநாயர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்பென்சர்

## ஒரு உயில் வியாஜ்ஜியம்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஐக்கோர்ட்டு அப்பீல் தாப்பிற்கு மானேஜராகயிருந்து இறந்துபோன மிஸ்டர் V. M. ருமஅய்யங்கார் தம்முடைய சொத்துக்களுக்கு ஒரு உயில் எழுதிவைத்து அவருடைய விதவையையும் எக்சிக்கியூட்டர்களுள் ஒருவராக நியமித்திருந்தார்.

இந்த உயில் மோசடி என்றும் கற்பனை என்றும் உயில் கர்த்தாவின் ஜேஷ்ட புத்திரி கும்பகோணம் சப் கோர்ட்டில் டிக்ளரேட்டரி வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். பிரதிவாதிகளாகிய மற்ற புத்திரிகளும் விதவையும் உயில் உண்மையான உயில் என்று கக்ஷி சொன்னார்கள்.

சப் கோர்ட்டார் தீர்ப்பு:— இந்த வியாஜ்ஜியத்தின் சந்தர்ப்பங்களையும் உயிலில் சொல்லப்பட்டிருக்கும் ஷரத்துகளையும் உத்தேசித்துப் பார்க்குமளவில் உயில் உண்மையானதென்று ருஜுப்படுகிறதென்று தீர்மானித்து அது செல்லத்தகுந்ததென்று தீர்ப்பு சொன்னார்கள்.

இந்த தீர்ப்புக்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மெசர்ஸ் ரெங்காச்சாரியாரும் V. ருமசாமி அய்யங்காரும் ஆஜரானார்கள். அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் V. பத்மநாப அய்யங்காரும் பேசினார்கள்.

தீர்ப்பு:—உயிலிலிருந்து யாதொரு நன்மையும் தங்களுக்கு எதிர்பார்க்காத கௌரவம்பொருந்திய கனவான்கள் உயிலில் கையெழுத்து செய்திருப்பதாலும் உயில்கர்த்தா உயிலில் செய்திருக்கும் கையெழுத்து அவருடைய உண்மையான கையெழுத்துபோல காணப்படுகிறபடியாலும் சப்கோர்ட்டாருடைய தீர்ப்பை உறுதிப்படுத்தினார்கள்.

---

(9)

ஜட்ஜிகள்:— { மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவ அய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானே

## கடன்காரர்களை மோசம் செய்த கேஸ்.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—ஒரு இரண்டாவது அப்பீலில் உண்டான பிரஸ்னை என்னவென்றால்:—கிரையம் செய்தவனும், கிரையம் பெற்றவனும் கடன்காரர்களை மோசம் செய்யவேணுமென்கிற கருத்துடன் ஒரு கிரைய சாசனம் உற்பத்தி செய்தார்கள். ஒருவரிடத்திலிருந்த சொத்து மற்றொருவருக்கு டிரான்ஸ்பர் செய்யப்படவேண்டுமென்பது உள்ளபடி அவர்களுக்கு எண்ணம் கிடையாது. கிரையம் பெற்றவன் கிரையம் செய்தவனுக்கு கிரைய சாசனத்திற்காக கொஞ்சம் பணமும் கொடுத்திருந்தான். இப்படி பணம் செலுத்தப்பட்டிருப்பதை முன்னிட்டு கிரையம் பெற்றவனுக்கு சொத்தில் பாத்தியம் உண்டாகுமா என்பதே.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C. S. வெங்கடாச்சாரியும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் N. சந்திரசேகர அய்யரும் பேசினார்கள்.

அப்பீல் வாதியின் லாயர் பேசினது:—கிரையம் செய்யப்பட்ட சொத்து கிரையம் செய்தவனிடமிருந்து கிரையம்

பெற்றவனுக்கு வந்துவிடவேணுமென்று இருவருக்கும் எண்ணமில்லாமலிருந்தபோதிலும் கிரையம் பெற்றவன் கிரைய சாசனத்திற்காக கொஞ்சம் பணம் கொடுத்திருக்கிறபடியால் அந்தப் பணம், சம்பந்தப்பட்டவரையிலாவது சொத்தின் பேரில் அவனுக்கு டிக்கிரி கொடுக்கப்படவேண்டுமென்று கக்ஷி சொன்னார்.

அப்பீல் பிரதிவாதியின் லாயர் பேசினது:—கடன்காரர்கள் மோசம் செய்வதற்காக கிரைய சாசனத்திற்காக நமோதாவாக பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்றும் இந்தியன் டிரஸ்ட் ஆக்ட் 94-வது பிரிவின்படி அது சட்ட விரோதமான காரியம் என்றும் ஆகையால் கிரயம் பெற்றவனுக்கு சொத்தில் யாதொரு பாத்தியமும் உண்டாக மாட்டாதென்று கக்ஷிசொன்னார்.

தீர்ப்பு:—கிரையம் பெற்றவனுக்கு சொத்தில் யாதொரு பாத்திய மூண்டாகவில்லை என்றும் ஆதலால் சொத்தின் பேரில் டிக்கிரி கொடுக்கப்பட மாட்டாதென்றும் பணம் ஏதேனும் கொடுக்கப்பட்டிருந்தால் கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருடத்திற்குள் வியாஜ்ஜியம் கொண்டுவந்து வசூல் செய்துகொள்ள வேண்டுமென்று தீர்ப்புசொல்லி இரண்டாவது அப்பீலைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

---

## எழும்பூர் போலீஸ் கோர்ட்.

—:o:—

### (10)

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் F. D. பர்ட்.

**கணக்கப்பிள்ளை மோசம் செய்த கேஸ்.**

பிரியாதியின் சுருக்கம்:— திருவல்லிக்கேணி அர்பன் கோவாப்பரேட்டிவ் சங்கத்தில் கணக்கு வேலை பார்த்துவந்த நாராயண சாஸ்திரியிடம் மவுண்ட்ரோட் காஸ்மா பாலிட்டன் கிளப் காஷ்கீப்பர், சங்கத்திற்காக அவரிடம் கொடுத்த ரூபாய் 35-யை சங்கத்தில் செலுத்தாமல் தம்முடைய சொந்த உபயோகப்படுத்திக் கொண்டிருப்பதாக ஷை சங்கத்தின் காரிய தரிசி பிரியாது கொடுத்தார்.

தீர்ப்பு:—குற்றவாளியின்பேரில் குற்றம் ருஜுப்பட்டிருக்கிறதென்று கோர்ட்டார் தீர்மானித்து குற்றஸ்தாபனை செய்து குற்றவாளிக்கு ரூ. 35 அபராத தண்டனை விதித்தார்கள், அபராதம் கட்டத்தவறினால் ஒருமாத கடுங்காவல் தண்டனை விதித்தார்கள்.

---

### (11)

மாஜிஸ்டிரேட்:—மிஸ்டர் F. D. பர்ட்.

**மைலாப்பூர் கொலைக்கேஸ்.**

கேசின் விபரம்:—மைலாப்பூரில் எலப்பாத மாட கோவில் தெருவில் கடந்த செப்டம்பர்மீ 15௳ சிங்காரம் என்பவனும், சாமி என்பவனும் இன்னும் மூன்று பேர்களும் கொலை செய்துவிட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டார்கள்.

கேசின் நடவடிக்கை:—கோர்ட்டார் பிராசிக்கியூஷன் தரப்பு சாக்ஷிகளை விசாரணை செய்துவிட்டு 2, 3, 4 குற்றவாளிகள் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்டதாக ருஜுப்படவில்லை என்று சொல்லி அவர்களை விடுவித்து விட்டார்கள், ஆனால் இறந்துபோனவன் கொலை செய்யப்பட்டதாகச் சொல்லப்பட்ட தினத்தில் தரித்துக்கொண்டிருந்த அங்கவஸ்திரம் இரத்தச் சின்னங்களுடன் "சாமி" என்பவனுடைய வீட்டிலிருந்து எடுக்கப்பட்டிருக்கிறபடியாலும் கவர்ன்மெண்டு ரசாயன சாஸ்திரி அந்த அங்கவஸ்திரத்தில் பட்டிருந்த இரத்தம் மானிட இரத்தம் என்று சொல்லுகிறபடியாலும் இ. பி. கோ. 404 அல்லது 411-வது பிரிவின்படி சாமி என்பவன் பேரில் மட்டிலும் குற்றம் சாட்டப்பட்டது.

லாயர்கள்:—குற்றவாளி தரப்பிற்கு ஐக்கோர்ட்டு வக்கீல் மிஸ்டர் K. M. குப்புராவும், கவர்ன்மெண்டு தரப்பிற்காக மிஸ்டர் D. பத்மநாப நாயுடுவும் ஆஜரானார்கள்.

தீர்ப்பு:—குற்றவாளிக்கு ஒருவருட கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டது.

---

# The fourth criminal Sessions of the High Court of Madras.

## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு நான்காவது கிரிமினல் செஷன்ஸ்.

—:o:—

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் F. நேப்பியர்.

---

## GEORGETOWN MURDER CASE.

### ஜியார்ஜ்டவுன் கொலைக் கேஸ்.

---

(1) அப்பாராவ்
(2) வராகலு
(3) அலமேலு மங்கத்தாயார் அம்மாள்
} குற்றவாளிகள்.

vs.

சக்ரவர்த்தியார்.

கேசின் விபரம்:—(1) அப்பாராவ் (2) வராகலு (3) அலமேலுமங்கத்தாயார் அம்மாள் ஆகிய மூவரும் (1) கொலை செய்ததாகவும் (2) கொள்ளையடித்ததாகவும் ஆகிய இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டு சென்னை பிரசிடென்சி மாஜிஸ்டிரேட்டால் விசாரணை செய்யப்பட்டு ஐக்கோர்ட் செஷன்ஸ் விசாரணைக்கு கமிட் செய்யப்பட்டிருந்தார்கள். சென்னை ஜியார்ஜ்டவுன் தம்பு நாய்க்கன் தெருவில் வெங்கடேசம் செட்டி என்னும் ஒருகோமட்டிஜாதியைச்சேர்ந்தவர் வசித்து வந்தார். அவர் ரத்னவியாபாரி, ஊர் ஊராய்ச் சென்று ரத்தனங்கள் வியாபாரஞ் செய்வது அவருடைய தொழில். இந்தக் கேசில் மூன்றாவது குற்றவாளியாகிய அலமேலு மங்கைத்தாயார் அம்மாள் அவருடைய பெண்சாதி. புருஷனும் பெண்சாதியுமாக பக்காளாவிற்குப் போயிருந்தார்கள். அவ்விடத்தில் ஒரு வீட்டில் வசித்து வந்தார்கள். இவர்களிடம் அந்த ஊரில் எருக்களப்பசெட்டி என்று பெயர்கொண்ட ஒரு கோமட்டி சமையல்காரனாக அமர்ந்தான். வெங்கடேச செட்டி பெண்சாதியையும் சமையல்காரனையும் வீட்டில் வைத்துவிட்டு வியாபார காரியமாக பக்கத்து ஊர்களுக்குப் போகிறதுண்டு. இப்படி புருஷன் ஊரில் இல்லாதபோது பெண்சாதி ரகசியமாக துர்நடத்தை நடத்திக்கொண்டு வந்தாள். புருஷன் ஊரில் இல்லாத காலத்தில் வேற்று மனிதர்கள் வீட்டிற்கு வருவதும் அவளுடன் பேசிவிட்டுப் போவதுமாக யிருந்தார்கள். புருஷன் சிலகாலம் தனியே வியாபார விஷயமாக காக்கிநாடாவுக்குப் போயிருந்தான். அவ்விடத்தில் தன்னுடைய பெண்சாதி துர்நடத்தை நடத்துகிறாள் என்றும் வேற்று புருஷாள் அடிக்கடி அவளை வீட்டில் வந்து கண்டு பேசிவிட்டுப் போகிறதாக கேள்விப்பட்டான். இதன்பேரில் புருஷன் திரும்பி பக்காளாவிற்கு வந்து வீட்டைக் காலி செய்துவிட்டு பெண்சாதியையும் அழைத்துக்கொண்டு காக்கிநாடாவுக்குப் போய் அந்த ஊரில் ஒரு வீடு அமர்த்தி தம்பதி சகிதமாக் குடியிருந்து வியாபாரம் செய்துகொண்டு வந்தான். இந்த வியாபார முறையில் புருஷனுக்கு முதல் குற்றவாளியாகிய அப்பாராவ் பழக்கமானான். முதல் குற்றவாளியும் ஒரு இரத்தன வியாபாரி. காக்கிநாடாவில் அப்பாராவ் வெங்கடேச செட்டி வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்ததிலிருந்து முதல் குற்றவாளிக்கும் மூன்றாவது குற்றவாளிக்கும் சிநேகம் ஜெனித்தது. முதல் குற்றவாளி அந்த ஊரிலேயே ஒரு பிரத்தியேகமான வீடு வாடகைக்கு அமர்த்தி அந்த வீட்டிற்கு மூன்றாவது குற்றவாளியினுடைய புருஷனுக்குத் தெரியாமல் அவளை வரவழைத்துக் கொண்டிருந்தான். இதனால் முதல் குற்றவாளிக்கும் மூன்றாவது குற்றவாளிக்கும் பரஸ்பர சிநேகமும் அபிமானமும் முத்திப்போய் கடைசியில் மூன்றாவது குற்றவாளி தன்னுடைய சொந்தநாயகனை விட்டுவிட்டு சோரநாயகன் என்று சொல்லும்படியான ஆசைநாயகனுடன் சேர்ந்து எந்த ஊருக்கேனும் ஓடிப்போக எத்தனித்தாள். இவர்கள் இருவருக்கும் எருக்களப்ப செட்டி என்கிற சமையல்காரன் தபால்-காரனாகவிருந்தான். அதாவது மூன்றாவது குற்றவாளி முதல் குற்றவாளிக்கு எழுதின கடிதங்களை முதல் குற்றவாளியிடமும் முதல் குற்றவாளி எழுதினகடிதங்களை மூன்றாவது குற்றவாளிக்கும் கொண்டுபோயும் வாங்கிக்கொண்டும் வந்தான். இப்படியாக சிலகாலமாக நடந்துகொண்டு வந்தது. 3-வது குற்றவாளிக்கும் முதல் குற்றவாளிக்கும் சிநேகம் முத்திப்போய் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்திருக்க சகிக்கமுடியாமல் 3-வது குற்றவாளி தான் தன் புருஷனை விட்டுவரத் தயாராயிருப்பதாய் முதல் குற்றவாளியிடம் சொன்னாள். அதற்கு முதல் குற்றவாளி தன்னிடம் [illegible]மில்லையே என்று பதில் சொன்னான். பணத்திற்கு மூன்றாவது குற்றவாளி ஒரு யோசனை சொன்னாள். [illegible] வென்றால் தன்னுடைய மாமியார் [illegible] என்றும் அவள் பட்டணத்தில் தன்னுடைய வீட்டிற்கு பக்கத்தில் குடியிருக்கிறாள் என்றும் அவளிடமிருக்கும் பணத்தையும் நகைகளையும் கொள்ளையடித்து விடலாமென்று தாற்பரியப் படும்படியாக யோசனை சொன்னாள். இந்த சமாசாரம் இம்மட்டில் நிற்க, வெங்கடேசன் செட்டி தன்பெண்சாதிக்கும் அப்பாராவுக்கும் சிநேகிதம் உண்டாயிருப்பதையும் அப்பாராவ் தான் வீட்டில் இல்லாதபோது தன்னுடைய வீட்டிற்கு வந்து தன்னுடைய பெண்சாதியுடன் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போவதையும் கேள்விப்பட்டான். ஆதலால் வெங்கடேசம் செட்டி காக்கிநாடாவில் தன்னுடைய வீட்டைக் காலி செய்துவிட்டு பெண்சாதியை அழைத்துக்கொண்டு பட்டணத்திற்கு வந்துவிட்டான். ஒருமாதம் சென்ற பிறகு இரண்டாவது குற்றவாளியை முதல் குற்றவாளி அழைத்துக்கொண்டு ஆக இருவரும் சென்னப்பட்டணம் வந்து சேர்ந்தார்கள். ஒரு நாள் வெங்கடேசம் செட்டி இவ்விருவரையும் ஷராப்புக் கடையில் கண்டுவிட்டு தன்னுடைய வீட்டிற்குச் சென்று தன்னுடைய பெண்சாதியிடம் அவர்களைக் கண்டதாகச்சொல்லி அவர்களைத் தன்னுடைய வீட்டிற்குள் விடக்கூடாதென்று பெண்சாதிக்கு கண்டிப்பாய் உத்திரவு செய்திருந்தான். 1, 2, குற்றவாளிகள் சென்னப்பட்டணத்திற்கு வந்திருக்கும் விஷயம் எருக்களப்பசெட்டி மூலியமாக 3-வது குற்றவாளிக்குத் தெரிந்து அவள் இவர்களுக்கு ஆகார சாமான்களும் செலவிற்குப் பணமும் எருக்களப்பா மூலியமாக சப்ளை செய்து கொண்டுவந்தாள். 1, 2, 3, குற்றவாளிகளும் எருக்களப்பாவும் பல தடவை கலந்து பேசினார்கள். 3-வது குற்றவாளி சில இரவுகளில் தன்னுடைய மாமியார் வீட்டில் படுக்கிறதுண்டு. மாமியார் வீடும் அதே தம்புநாய்க்கன் வீதியில் புருஷனுடைய வீட்டிற்கு சமீபத்திலிருக்கிறது. பெண்சாதி தாயாருக்குத் துணையாகப் படுத்துக் கொள்ளுகிறாள் என்று புருஷன் நினைத்து அவளைக் கோபித்துக் கொள்ளுகிறதில்லை. மூன்று குற்றவாளிகளும் எருக்களப்ப செட்டியும் கலந்து யோசனை செய்ததில் மாமியார் வீட்டிற்குள் புகுந்து கொள்ளை அடிக்க வேண்டுமென்று முடிவு செய்ததாக தெரிகிறது. 3-வது குற்றவாளி அக்டோபர்மீ 16௳ இரவு மாமியார் வீட்டில் படுக்கிறதுபோல படுத்திருந்து இரவு 10-மணிக்கு கக்கூஸ்கதவை திறந்துவைத்திருக்க ஏற்கனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி இரண்டு குற்றவாளிகளும் எருக்களப்பாவும் கக்கூஸ் வழியாக மாமியார் வீட்டிற்குள் புகுந்து அவளை



1611921

7

கொன்றுவிட்டு அலுமாரியைத் திறந்து அதிலிருந்த நகைகளையும் பணத்தையும் எடுத்துக்கொண்டு யாரோ திருடர்கள் வந்து இந்தக் கொலையையும் கொள்ளையும் நடத்தினார்கள் என்று எண்ணப்படும்படியாக 3-வது குற்றவாளியின் கால் கைகளையும் கட்டி அவளுடைய நகைகளையும் எடுத்துக்கொண்டு வீட்டைவிட்டு வந்து விட்டார்கள். 1, 2, குற்றவாளிகள் வீட்டைவிட்டுப் போனவுடன் எருக்களப்பா அந்த வீட்டிலேயே சில நேரம் தங்கியிருந்தபோது வீட்டின் கதவைத்திறந்து கொண்டு வெளியேவந்தபோது போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கலியாணசுந்தரமய்யர் அந்தத் தெருவில் ரோந்து போனபோது இவனைக்கண்டு யார் என்று கேட்க அவன் தான் வீட்டு மனிதன் என்று சொல்ல அவர் போய்விட்டார். பொழுது விடிந்தவுடன் 3-வது குற்றவாளி யாரோ திருடர்கள் வந்து வீட்டிலிருந்த சொத்துக்களை கொள்ளை யடித்துக்கொண்டு தன்னுடைய கால்கைகளையும் கட்டிவிட்டுப் போய்விட்டதாக புருஷனுக்கு சமாசாரம் சொல்லி அனுப்பினாள். புருஷன் வந்து பார்த்தான்; தாயார் எங்கே என்று கேட்டான். உள்ளே படுத்து இருக்கிறாள் என்று பதில் சொல்ல புருஷன் பின் கட்டில் தாயாரைப்போய் பார்த்ததில் உதிரத்துடன் பிரேதமாய் கிடந்தாள். போலீசாருக்கு அறிவிக்கப்பட அன்றையத்தினமே 1, 2, குற்றவாளிகள் திருவல்லிக்கேணி துரைசாமி ஆசாரி வீட்டில் களவாடப்பட்ட நகைகளை உருக்கிக்கொண்டிருந்தபோது கையும் களவுமாக பிடித்து கைதி செய்து விட்டார்கள்.

கேசின் நடவடிக்கை:— சமையல்கார எருக்களப்பசெட்டி அப்புரூவராக எடுத்துக்கொள்ளப் பட்டான். செஷன்ஸ் கோர்ட்டில் 3-வது குற்றவாளி தன்னையும் அப்புரூவராக எடுத்துக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டனள். ஆனால் கோர்ட்டார் சம்மதிக்கவில்லை.

லாயர்கள்:—1-வது குற்றவாளிக்கு பாரிஸ்டர் மிஸ்டர் தேவதாசும், 2-வது குற்றவாளிக்கு வக்கீல் மிஸ்டர் நாராயணமூர்த்தியும், 3-வது குற்றவாளிக்கு வக்கீல் மிஸ்டர் சல்லாகுருசாமி செட்டியும், கவர்ன்மெண்டு தரப்பிற்காக இந்தக் கேசிற்கென்று பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட ராவ்பகதூர் G. வெங்கடராமய்யாவுடன் பாரிஸ்டர் மிஸ்டர் J. C. ஆடமும் ஆஜரானார்கள்.

ஜூரர்கள்:—மெசர்ஸ் J. R. கோட்ஸ் (போர்மன்) யூனஸ்சேட், W. மெக்கன்ஜி, G. கோபாலசாமி செட்டி, C. E. வுட், S. J. கிராபோர்ட், H. பியர்சன், L. கந்தசாமி முதலி, K. S. சாமிநாதய்யர்.

விசாரணை:—பிராசிக்கியூஷன் தரப்பில் மூன்றுவது குற்றவாளியின் புருஷன், அப்புரூவர், இன்னும் பல சாக்ஷிகள் விசாரணை செய்யப்பட்டார்கள். குற்றவாளிகள் டிபன்ஸ் சாக்ஷிகள் விடவில்லை.

குற்றவாளிகளின் வாக்கு மூலம்:—எருக்களப்பா கொலைசெய்துவிட்டு நகைகளைத் திருடிக்கொண்டு போய் 1, 2, குற்றவாளிகளிடம் கொடுத்துவிட்டதாகச் சொன்னார்கள்.

ஜூரர்களுடைய அபிப்பிராயம்:—கொலைகுற்ற சம்பந்தமாக 1,2,குற்றவாளிகள் குற்றம் செய்திருக்கிறார்களென்று 8-ஜூரர்களும் ஒரு ஜூரர்மட்டிலும் குற்றத்தைச் செய்யவில்லை என்றும், எல்லா குற்றவாளிகளும் "கொள்ளைக்" குற்றத்தைச் செய்திருக்கிறார்கள் என்று ஏகோபித்தும் அபிப்பிராயம் கூறினார்கள்.

குற்ற ஸ்தாபனையும் தண்டனையும்:—1, 2, குற்றவாளிகளை கோர்ட்டார் பார்த்து அடியிற் கண்டபடி சொல்லி தண்டனை விதித்தார்கள்:—8-ஜூரிகள் நீங்கள் கொலையைச் செய்திருப்பதாக அபிப்பிராயம் கூறியிருப்பதை நாம் ஏற்றுக்கொண்டோம். நீங்கள் செய்திருக்கும் கொலை படுகொலையாக யிருக்கிறபடியால் உங்களுக்கு விதிக்கப்படவேண்டிய தண்டனை ஒன்றைத்தவிர வேறே தண்டனை கிடையாது. அந்த தண்டனை என்னவென்றால் உங்களுடைய உயிர் எடுக்கப்படும் பரியந்தம் நீங்கள் தூக்கில் போடப்பட வேண்டுமென்பதே! மூன்றுவது குற்றவாளியைப்பார்த்து கோர்ட்டார் அடியிற் கண்டபடி சொல்லி தண்டனை விதித்தார்கள். நீ கொலையில் சம்பந்தப்படவில்லை ஆனால் கொள்ளையில் சம்பந்தப்பட்டிருக்கிறாய் என்று ஜூரர்கள் அபிப்பிராயம் கூறியிருக்கிறார்கள். உனக்காக ஆஜராயிருக்கும் லாயர் நீ முதல் குற்றவாளியின்பேரில் வைத்திருந்த அபிமானத்தை முன்னிட்டு இந்தக் குற்றத்தைச் செய்ய கட்டாயப் படுத்தப்பட்டிருக்கிறாயே ஒழிய அப்படி நீ அவன்பேரில் அபிமானம் வைக்காமல் போயிருந்தால் உனக்கு அன்பு காட்டி வந்த உன்னுடைய பந்துவை கொள்ளையடித்திருக்க மாட்டாய் என்றும் ஆதலால் உனக்கு இலகுவான தண்டனை விதிக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறார். இந்தக் கொள்ளை இந்த தௌர்பாக்கியமுள்ள ஸ்திரீயின் மரணத்தில் முடியாமற் போயிருந்தால் இலகுவான தண்டனை நாம் விதிக்கக்கூடும். ஆயினும் இந்தக் கேசில் நிகழ்ந்திருக்கும் விநோதமான சந்தர்ப்பங்களை உத்தேசித்து உன்னை சற்று இலகுவாக தண்டிக்கின்றோம். அதாவது உனக்கு 7-வருட கடின காவல் தண்டனை விதிக்கின்றோம். (24-11-1914.)



# *Hindu Law.*

## ஹிந்து லா.

### GUARDIANSHIP.

கார்டியன்.

மைனர் பெண்சாதிக்கு சட்டப் பிரகாரம் புருஷனே கிரமமான கார்டியன் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 28 Cal. 751.

---

பெண்சாதி புருஷனுடைய வசத்திலிருக்கும்போது பெண்சாதியின் பிதா அவளுடைய புருஷனுடைய அனுமதியைப் பெறாமல் அவளை அழைத்துக்கொண்டு போய்விட்டால் அவன் நரசோரம் செய்த குற்றத்திற்கு உள்ளாகிறான் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 17 க. 298.

---

ஆனால் சென்னை ராஜதானியில், விவாகம் செய்யப்பட்ட புஷ்பவதியாகாதபெண் அவளுடையபெற்றோர்களுடைய வீட்டில் விட்டுவைக்கப்பட்டிருக்கும் வழக்கம் அனுஷ்டானத்திலிருக்கிறபடியால் புருஷன் அவளைத் தன்னுடைய வீட்டிலிருக்கும்படியாக கட்டாயப்படுத்த அவனுக்கு பாத்தியமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. 24 ம. 255.

---

புஷ்பவதியாகாத பெண்சாதியினுடைய நன்மையை உத்தேசிக்கும் அளவில் அவளுடைய புருஷனுடைய வீட்டிலிருக்கவேண்டிய தவசியம் ஏற்பட்டிருந்தால் புருஷன் அவளைத் தன்னுடைய வீட்டில் வைத்துக்கொண்டிருக்க பாத்தியமுடையன் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் புருஷனுடைய வீட்டிலிருக்க வேண்டியது அவசியமென்பதற்கு சாக்ஷியம் இல்லாதபோது அவளை அவளுடைய பெற்றோர்களுடைய வீட்டில் வைத்திருப்பதுதான் விரும்பத்தகுந்ததென்று தீர்மானிக்கப்பட்டது. 24 ம. 255.

---

ஒரு விதவைக்கு அவளுடைய பெற்றோர் வழிபந்துக்களைவிட புருஷனுடைய வழிபந்துக்கள் கார்டியனாகவிருக்க அதிக பாத்தியமுடையவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது. 16 க. 585.

---

### WIFES DUTY TO RESIDE WITH HUSBAND.

பெண்சாதி புருஷனுடன் வசிக்கக் கடமைப்பட்டவள்.

---

பெண்சாதி புருஷனிடம் பக்தியும் மரியாதையும் காட்டி அவனுக்கு கீழ்படிந்து நடந்து அவனுடனே இருக்கக் கடமைப்பட்டவள் என்றும் புருஷன் பெண்சாதியைக் கௌரவப்படுத்தியும் அன்பு காட்டியும் மரியாதை காட்டியும் நடத்தக் கடமைப்பட்டவன் என்றும் ஹிந்துலா கூறுகின்றது. 19 கல். 84; 13 அல. 126; 28 கல். 751.

---

பெண்சாதியின் சுயர்ச்சையை அடக்க புருஷன் பாத்திய முடையவன் என்றும் அவள் எந்தவிடத்திற்குப்போகக் கூடாதென்று உத்திரவு செய்கிறானோ அந்தவிடத்திற்குப் போகாமலிருக்க கட்டுபட்டவள் என்று தீர்மானிக்கப்பட்டது. 19 கல். 84.

---

பெண்சாதி புருஷனுடன் சேர்ந்து வசிக்கவேண்டுமென்பதும், புருஷன் அவளுடைய சுயர்ச்சையை அடக்க பாத்தியமுடையவன் என்பதும் அவள் அவனுடைய உத்திரவின் பிரகாரம் நடக்கவேண்டுமென்பதும் ஆகிய இவைகள் சன்மார்க்க விதிகளல்ல, ஆனால் சட்டவிதிகள் என்று தீர்மானிக்கப்பட்டது. 13 அல. 126.

---

எப்போதும் கொடுமையாக நடத்தும் புருஷனுடன் பெண்சாதி வசிக்கக் கடமைப்பட்டவளல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. 19 கல். 84.

---

புருஷன் தன்னுடைய மதத்தைமாற்றி வேறொரு மதத்திற்குச் சென்றுவிட்டால் அவனுடன் சேர்ந்து வாழக்கட்டுப்பட்டவளல்லஎன்று தீர்மானிக்கப்பட்டது. 6 அல. 617.

---

புருஷன், பெண்சாதி தன்னுடன் சேர்ந்து வசிக்கும்படியாகவும் பெண்சாதி புருஷனுடன் சேர்ந்து வசிக்கும்படியாகவும் வியாஜ்ஜியம் கொண்டுவரலாம் என்றும் பெண்சாதி 18-வயதிற்குட்பட்ட மைனராகவிருந்தபோதிலும் சம்சார்க்கக் கடமைகளைச் செய்ய யோக்கிதை உடையவளாகயிருந்தால் அவள் தன்னுடன் சேர்ந்து வசிக்கும்படியாக புருஷன் வியாஜ்ஜியம் கொண்டுவந்து கட்டாயப் படுத்தலாமென்று தீர்மானிக்கப்பட்டது. 28 கல். 37.

---

புருஷன் பெண்சாதியின்பேரில் கொண்டுவரும் வியாஜ்ஜியத்திலாவது அல்லது பெண்சாதி புருஷன் பேரில் கொண்டுவரும் வியாஜ்ஜியத்திலாவது கோர்ட்டார் தங்களுடைய இஷ்டத்தைப் பிரயோகப்படுத்தி தீர்ப்பு செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டது. 34 கல். 981.

---

பெண்சாதி புருஷனுடன் சேர்ந்து வசிக்கவேண்டுமென்று கோர்ட்டார் உத்திரவு செய்வதற்கு முந்தி புருஷனை சில நிபந்தனைகளுக்கு உட்படுத்த வேண்டிய வியாஜ்ஜியங்களுமிருக்கின்றன. 28 கல். 751.

---

பெண்சாதி தன்னுடன் சேர்ந்து வசிக்கவேண்டுமென்று புருஷன் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் பெண்சாதி புருஷன் கொடுமையாக நடத்தி வருகிறான் என்று டிபன்ஸ் சொல்லுவது சகஜம். கொடுமை எப்பேர்ப்பட்ட கொடுமை என்று கோர்ட்டார் கவனிக்கவேண்டும். பெண்சாதியினுடைய தேக சௌக்கியமாவது அல்லது கைகால் முதலிய அவயவங்களுக்காவது அபாய முண்டாகும்படியான கொடுமையா யிருக்கிறதா வென்று கவனிக்கவேண்டும். 34 கல். 978.

பெண்சாதி புருஷன்பேரில் கொண்டுவரும் வியாஜ்ஜியத்தில் பெண்சாதி துன்மார்க்க நடத்தை உடையவளாக யிருக்கிருள் என்று டிபன்ஸ் சொல்லக்கூடும். அதற்கு சாக்ஷியமில்லாவிட்டால் அது சட்டப் பிரகாரமுள்ள கொடுமையாகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 1 கல் 164.

விவாகம் சம்சர்க்கத்திற்காக மட்டிலும் ஏற்பட்டதல்ல. புருஷன் பெண்சாதிபேரில் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் தான் சம்சர்க்கத்திற்கு யோக்கிதையற்றவள் என்றும் அப்பேர்ப்பட்ட நோயை தான் உடைத்தா யிருப்பதாகவும் அல்லது ஏதேனும் ஒரு அவையவம் பிசகியிருப்பதாக டிபன்ஸ் சொல்லுவது மட்டிலும் போதுமான சரியான டிபன்சல்லஎன்று தீர்மானிக்கப்பட்டது. 21வங்.610.

புருஷன் வைப்பாட்டி வைத்துக்கொண்டு அல்லது வேறொரு பெண்சாதியின்பேரில் அபிமானம் வைத்துக்கொண்டு தன்னைக் கொடுமையாக நடத்திவந்தால் அவள் தனக்கு பிரத்தியேகமாக ஜீவனும்சம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்கலாம் என்று அலகாபாத் ஐக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். 8 அல. 78.

புருஷன் ஒரு தாழ்ந்த ஜாதி ஸ்திரீயை வீட்டில் சேர்த்து வைத்துக்கொண்டிருந்தால் பெண்சாதி அவனுடன் சேர்ந்து வசிக்க இஷ்டப்படாமல் பிரத்தியேகமாக தனக்கு ஜீவனும்சம் கேட்க பாத்தியமுடையவள் என்று தீர்மானிக்கப்பட்டது. 20 சென். 740.

புருஷன் இரண்டாவது பெண்சாதியை விவாகம் செய்துகொண்டு முதல் பெண்சாதியின்பேரில் அன்பில்லாமலிருப்பது முதல் பெண்சாதிதன்னுடன்சேர்ந்துவசிக்ககட்டாயப்படுத்தவியாஜ்ஜியம் கொண்டுவர அவனுக்குள்ள பாத்திதையைபோக்கடித்துவிடமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 13 அல. 126.

புருஷன் பெண்சாதியின்பேரில் பிரியமில்லாமலிருப்பதாவது அல்லது அவளை அலக்ஷியப்படுத்துதாவது அவள் தனக்கு பிரத்தியேகமாக ஜீவனும்சம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்பதற்குப் போதுமான காரணமாகமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. 18 க. 264.

விரும்பத்தகாத யாதியை தனக்குக்கொடுத்துவரும் புருஷனை பெண்சாதி விட்டுவிடலாம். தீரா இருமல் முதலிய நோய்களால் பாதிக்கப்படும் புருஷனை விட்டுவிடக்கூடாது. புருஷனிடம் குஷ்டம் போன்ற நோய்கள் காணப்பட்டால் அவனை விட்டுவிடலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. 1 வங். 164.

மதப்பிரஷ்டனுகவாவது அல்லது மதப்பிரஷ்டியாகவாவது போய்விடுவது விவாகத்தைப் பிரித்துப் போடமாட்டாதுஎன்றுதீர்மானிக்கப்பட்டது.ஆனுல் பெண்சாதி தனியே வசித்துவர பிரத்தியேகமான ஜீவனும்சம் கேட்க பாத்தியமுடையவள் என்று தீர்மானிக்கப்பட்டது. 6 அல. 617.

பெண்சாதி ஜீவதிசையிலிருக்கும்போது புருஷன் பிரமோ மதத்திற்குப் போய்விட்டால் பிரமோ மதக் கொள்கையின்படி அவன் வேறொரு பெண்சாதியை விவாகம் செய்துகொள்ள அருகற்றவன் என்று தீர்மானிக்கப்பட்டது. 6 பம். லா. ரி. 58.

MARRIAGE CONTRACT.

விவாக ஒப்பந்தங்கள்.

நிச்சயார்த்தம் பூர்த்திப்பட்டவிவாகமல்ல. நிச்சயார்த்தம் செய்ததற்கு விரோதமாக ஒருவன் நடந்தால் ஒப்பந்தத்தை நிறைவேற்ற அவன்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவர முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. 1 கல். 74.

ஆனுல் ஒப்பந்தத்தை மீறினவன் நஷ்டம் கட்டிக்கொடுக்கக் கடமைப்பட்டவன் என்று தீர்மானிக்கப்பட்டது. 11 வங். 412.

பெண் விவாகம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லை என்று ஒப்பந்தத்தை மீறினவன் கக்ஷி சொல்லுவது அவன் நஷ்டததைகட்டிக்கொடுக்கும் கடமையிலிருந்து தப்பித்து விடமாட்டாது என்று தீர்மானிக்கப்பட்டது. 21 வங். 23.

நிச்சயார்த்த சமயத்தில் விவாகத்தை உத்தேசித்து கொடுக்கப்பட்ட விவாக சாமான்கள், ஒப்பந்தம் மீறினுல், திருப்பிப் பெற்றுக்கொள்ளப் படலாமென்று தீர்மானிக்கப்பட்டது. 16 வங். 673.

தன்னுடைய பெண்ணை விவாகம் செய்துகொடுப்பதற்காக பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட பணத்தை விவாகம் நடக்காததால் வாதிக்கு வாப்பீஸ் செய்துவிடவேண்டுமென்று கோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். 10 கல். 1054.

ஒரு பெண்ணை விவாகம் செய்துகொள்ளுவதற்காக அவளுடைய கார்டியனுடன் ஒப்பந்தம்செய்து அதற்காக கார்டியனுக்குப் பரிகாரப்பணமும் கொடுத்திருந்து விவாகம் நடக்காமல் போனுல் அந்தப் பணத்தை திரும்பிப் பெற்றுக்கொள்ள முதலாவது வியாஜ்ஜியமே கொண்டுவர முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. ஏனென்ருல் இப்பேர்ப்பட்ட ஒப்பந்தங்கள் பொதுஜன நன்மைக்கு விரோதமான ஒப்பந்தங்கள். 10 கல். 1054.

# The Recent Important Rulings.

## சமீபகாலத்தில் ஜாரி செய்யப்பட்ட ஐக்கோர்ட்டுத் தீர்ப்புகள்.

—:o:—

## CIVIL PROCEDURE CODE.

### சிவில் புரோசீஜர் கோடு.

#### பயித்தியம் கோண்டவன் செய்த தானம்.

பயித்தியம் கொண்டவன் ஒரு சொத்தைத் தானம் செய்து எழுதிக்கொடுத்த தானப் பத்திரத்தை ரத்து செய்ய ஒரு வியாஜ்ஜியம் கொண்டு வரப்பட்டது. அந்த வியாஜ்ஜியத்தில் தானம் செய்தவன் பயித்தியம் கொண்டவன் என்று கோர்ட்டார் கூறி தானப் பத்திரத்தை ரத்து செய்துவிட்டார்கள். ஆனுல் ஷை பயித்தியம் கொண்டவனுக்கு



கார்ட்டியனும் நியமிக்கப்படவில்லை. ஷை பயித்தியங் கொண்டவனிடமிருந்து பின்பு அந்த சொத்தைத் தானம் பெற்றவர்கள் அதை அடமானம் வைத்தார்கள். அடமானத் தொகையைப் பெறுவதற்காக அடமானக்காரன் வியாஜ்ஜியம் கொண்டு வந்தான். முந்திய வியாஜ்ஜியத்தில் கோர்ட்டார் செய்திருக்கும் தீர்மானம் பிந்திய அடமான வியாஜ்ஜியத்திற்குத் தடையா யிருக்கிறதென்றும் முந்திய வியாஜ்ஜியத்தில் செய்யப்பட்ட தீர்மானத்தை முழுதிலும் தள்ளுபடி செய்ய முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 673; 22 I. C. 673.

#### நிறைவேற்று நடவடிக்கை.

நிறைவேற்று நடவடிக்கையில் எக்ஸ்பார்ட்டியாக பிறப்பிக்கப்பட்ட உத்திரவு தீர்ப்புக் கடனுளியைக் கட்டுப்படுத்தும். ஆனுல் அவனுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு சார்ஜ் செய்யப்பட்டதென்று ருஜுப்படுத்தப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 26 ம. லா. ஜெ. 189; 26 M L. J. 189.

#### நிலஸ்வான்தாரும் குடியும்.

தீர்வைக்காக வாதி முந்தி கொண்டுவந்த வியாஜ்ஜியம் வாதி எந்த டிரான்ஸ்பர் ஆதாவை ஆதாரமாகக்கொண்டு வியாஜ்ஜியம் கொண்டுவந்தாரோ அந்த ஆதாவு ருஜுப்படவில்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. வாதி வேறொரு வருஷத்திற்குத் தீர்வையை வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டு வந்தார். இந்த வியாஜ்ஜியத்தை முந்திய வியாஜ்ஜியத்தின் தீர்மானம் தடைப்படுத்த மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 7; 22 I. C. 7.

#### நிறைவேற்று நடவடிக்கையின் உத்திரவுகள்.

ஏல விளம்பரத்தில் வாதியால் நிரணயிக்கப்பட்ட சொத்தின் கிரையத்தை கோர்ட்டார் ஒப்புக்கொண்டு செய்த உத்திரவிற்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ள முடியாதென்றும் நிறைவேற்று நடவடிக்கையில் கோர்ட்டார் செய்த ஒவ்வொரு உத்திரவிற்கும் விரோதமாக அப்பீல் செய்துகொள்ள முடியாதென்றும் கக்ஷிக்காரர்களுடைய பாத்தியர் பாத்தியங்களை முடிவாகத் தீர்மானிக்கும் உத்திரவுகளுக்கு விரோதமாக மட்டிலும் அப்பீல் செய்துகொள்ளலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 548; 22 I. C. 548.

#### பணம் கோடுத்ததற்கு கோர்ட்டு சேர்ட்டிபிக்கேட்.

தீர்ப்புக் கடனுளி டிக்கிரிக்காக செலுத்தி யிருக்கும் தொகைக்கு கோர்ட்டாரிடமிருந்து மனு செய்துகொண்டு செர்ட்டிபிக்கேட் பெருமல் நிறைவேற்று நடவடிக்கையில் ருஜுப்படுத்த முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. U. B. R. Vol. I, Part 16.

#### சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதி.

அப்பீல் வியாஜ்ஜியம் நடந்துகொண்டு வரும்போது அப்பீல் பிரதிவாதிகளில் ஒருவன் இறந்து போய்விட்டான். இறந்து போனவனுடைய சட்டப்பிரகாரமுள்ள பிரதிநிதியை கக்ஷிக்காரனுக சேர்க்க இறந்துபோன தேதி முதல் 6-மாதத்திற்குள்ளாக கோர்ட்டில் மனுசெய்து கொள்ளவேண்டுமென்பது சட்டம். இந்தச் சட்டம் தனக்குத் தெரியாது என்று ஒரு கக்ஷிக்காரன் காரணம் சொல்லுவதை முன்னிட்டு காலம் தவறி அவன் செய்துக்கொண்ட மனுவை கோர்ட்டார் அங்கீகரித்துக்கொள்ள முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. பிரதிவாதிகளில் ஒருவன் இறந்துபோனுல் அவன் சம்பந்தப்பட்டவரையில் அப்பீல் அவனுடன் முடிந்து போய்விட்டது. மற்ற அப்பீல் பிரதிவாதிகளை வைத்துக்கொண்டு அப்பீலை நடத்த முடியாது. ஆனுல் இறந்துபோன பிரதிவாதியைச் சேர்க்காமல் மற்ற பிரதிவாதிகள்பேரில் வியாஜ்ஜியம் கொண்டுவந்து நடவடிக்கை நடத்தலாமென்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 951; 22 I. C. 951.

#### கோர்ட்டை அவமதித்தது.

கோர்ட்டாருடைய உத்திரவில்லாமல் கோர்ட்டாருடைய தரப்பில் ஒரு சொத்தை மானேஜ்மெண்டு செய்துவரும் ரிசீவர்பேரில் யாதொரு நடவடிக்கையும் நடத்தப்படக்கூடாது. ஒரு ரிசீவர் கோர்ட்டாருடையஆபீசர். அவர் சொத்தை உடைத்தாயிருப்பது கோர்ட்டார் உடைத்தாயிருப்பதற்குச் சமம். கோர்ட்டாருடைய உத்திரவில்லாமல் கோர்ட்டார் வசத்திலிருக்கும் சொத்தில் பிரவேசிப்பது கோர்ட்டை அவமதித்ததாக எண்ணப்படுமென்று தீர்மானிக்கப்பட்டது. 19 க. லா. ஜெ 191; 19 C. L. J. 191.

## CONTRACT ACT.

### ஒப்பந்தச் சட்டம்.

நிலத்தை விற்பனை செய்வதற்காக ஒப்பந்தம், ஒப்பந்தத்தின் உடன்படிக்கையின்படி அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் காலம் முக்கியமானது. ஒப்பந்தப்படி குறிப்பிட்டகாலத்தில் நிலத்தைக் கிரையம் செய்துகொள்ளாவிடில் டிபாசிட் செய்திருந்த அட்வான்சுத் தொகையை இழந்துபோய் விடுவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 15 பம். லா. ரி. 405; 15 Bom. L. R. 405.

### ஏஜன்டு முறையில் செய்த ஒப்பந்தம்.

ஏஜன்டு முறையில் இருக்கும்போது செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் ஏஜண்டு ஸ்தானத்தைவிட்டு நீங்கியபிறகு அவைகளை நிறைவேற்றும்படியாக கட்டாயப்படுத்த பாத்தியமில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. 18 க. வீ. நோ. 263; 18 C. W. N. 802.

---

### புத்திரனில்லாத எஸ்டேட்டுக்காரன் செய்த பராதீனம்.

திரண்ட சொத்து உடையவும் புத்திரனில்லாதவருமாக விருந்த ஒருவர் தன்னுடைய வைப்பாட்டி குமாரனை ஸ்வீகாரப் புத்திரனாக பாவித்து பிதிரார்ஜ்ஜித சொத்துக்களை அவனுக்கு தானம் செய்தார். 30 வருடகாலம் வரையில் அனந்தர வார்சுகள் அந்த தானத்தை ரத்து செய்ய வியாஜ்ஜியம் கொண்டு வரவில்லை. ஷை எஸ்டேட்டுக்காரனுடைய குடும்பத்தாரில் சிலர் தானம் பெற்றவனுக்குக் கீழ் குடிகளாக விருந்து அவனுடைய நிலத்தைச் சாகுபடி செய்து வந்தார்கள். தானம் செய்யப்பட்ட எஸ்டேட் பாகப்பிரிவினை செய்யப்பட்ட காலத்தில் தானம் பெற்றவன் ஆக்ஷேபிக்காமல் அனந்தரவார்சுவுக்கும் ஒரு பாகம் கொடுத்தான். சில அனந்தரவார்சுகளும் தங்களுடைய நிலத்தை அவனிடம் கொடுத்துவிட்டு அவனுடைய நிலத்தைமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த சம்பவங்கள் எல்லாம் ஷை தானத்திற்கு அனந்தரவார்சு உடந்தையாக யிருந்தார்கள் என்று தெரிய வருகிறபடியால் அவர்கள் அந்த தானத்தை ரத்து செய்துவைக்க முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 607; 22 I. C. 607.

---

### நஷ்டத்திற்காக வியாஜ்ஜியம்.

அவதூருக்காக கொண்டுவரப்பட்ட நஷ்ட வியாஜ்ஜியத்தில் நஷ்டம் எவ்வளவு என்று நிரணயிக்கவேண்டியது சட்ட விதியைப் பொறுத்ததல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. ஒரு சங்கம் ஆயிரம் பவுன் நஷ்டம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தது மிதமிஞ்சினதாக யிருக்கிறதென்று அந்த தீர்மானத்தை ரத்து செய்து கேசை பழையபடி விசாரணை செய்யும்படியாக இங்கிலாண்டு கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள். 83 L. J. K. B. 1.

---

### பிளீடர் ஒப்பந்தம் மீறினது.

வாதிகளுக்கும் தருமகர்த்தாக்களுக்கும் நடந்த ஒரு வியாஜ்ஜியத்தில் வாதிகள் தரப்பில் ஆஜராக வேண்டுமென்று பிரதிவாதியாகிய லாயருடன் ஒப்பந்தம் செய்தார்கள். இப்படி ஒப்பந்தம் செய்துகொண்டபிறகு பிரதிவாதி தருமகர்த்தர்களிடமிருந்து வக்காலத்து பெற்றுக்கொண்டு வியாஜ்ஜியத்தைக் தாக்கல் செய்திருக்கிறபடியாலும் ஒப்பந்தத்தை மீறி நடந்திருக்கிறார் என்றும் வாதிகள் அந்த ஒப்பந்தத்தை ரத்து செய்துவைக்க பாத்தியமுடையவர் என்றும் நஷ்டம் பெற்றுக்கொள்ள பாத்தியமுடையவர்கள் என்றும் ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயரும் ஜட்ஜி மிஸ்டர் பேக்வெல்லும் கூடிய் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 14 ம. லா. டை. 589; 14 M. L. T. 589.

---

### பாத்தியமில்லாதவன் சோத்தை கிரயம் செய்ய ஒப்பந்தம் செய்தது.

ஸ்தாபர சொத்திற்கு பாத்தியமில்லாத ஒருவன் அந்த சொத்தை விற்பனை செய்வதாக ஒப்பந்தம் செய்தால் இந்த ஒப்பந்தத்தை அவன் நிறைவேற்ற முடியாததை முன்னிட்டு வாங்கப்போகிறவன் அடைந்த நஷ்டத்தைக்கட்டிக் கொடுக்கக் கடமைப்பட்டவன் என்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 612; 22 I. C. 612.

---

### விவாக ஒப்பந்தத்தை மீறினதற்காக வியாஜ்ஜியம்.

விவாக ஒப்பந்தத்தை மீறினதற்காக வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தான். கோர்ட்டார் இந்த வியாஜ்ஜியத்தை விசாரணை செய்ததில் பிரதிவாதி ஒப்பந்தத்தை மீறவில்லை என்றும் வேடிக்கையாய் வாதியை பரியாசம் செய்தார்களே ஒழிய மற்றப்படி வாதியினுடைய யோக்கிதையையும் மனுஷத்தன்மையையும் கெட்டுப்போகவில்லை என்றும் ருஜுப்பட்டது. வாதியைப் பரிகாசம் செய்ததால் அவருக்கு கொஞ்சம் வெட்கம் உண்டானதே ஒழிய மற்றப்படி அவருக்கு யாதொரு தீங்கும் செய்யப்படவில்லை. ஆதலால் இப்பேர்ப்பட்ட சுபாபமுடைய வியாஜ்ஜியத்தில் வாதிக்கு நஷ்ட டிக்கிரி கொடுக்க முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. 7 பா. லா. டை. 14; 7 Bur. L. T. 14.

---

### டிரான்ஸ்பருக்குப் பரிகாரம்.

ஒரு டிக்கிரி போதுமான கிரையத்திற்கு டிரான்ஸ்பர் செய்யப்படவில்லை என்று ஒரு அன்னியன் ஆக்ஷேபிக்க முடியாது என்றும் டிக்கிரிக்காரனும் டிக்கிரியை மேடொவர் வாங்கினவனுக்கு மட்டிலும் சம்பந்தப்பட்ட விஷயம் என்று தீர்மானிக்கப்பட்டது. 18 க. வீ. நோ. 450; 18 C. W. N. 450.

---

### மோசடியான டிக்கிரி.

கோர்ட்டில் பொய் சாக்ஷியம் சொல்லி டிக்கிரி பெற்றுக்கொள்ளப்பட்டதென்று காரணம் சொல்லுவது அந்த டிக்கிரி ரிவிஷன் செய்யகேட்டுக்கொள்ளுவதற்குபோதுமானகாரணமல்ல என்றுதீர்மானிக்கப்பட்டது. கோர்ட்டின்முன்னில்ஒருபுறட்டான கேஸ் கொண்டுவரப்பட்டிருந்தால் அதற்கு வேறே பரிகாரம் இருக்கிறது. கோர்ட்டார் முன்னில் ஒரு புறட்டான கேஸ் கொண்டுவரப்பட்டு டிக்கிரி பெற்றுக்கொள்ளப் பட்டதென்று ருஜுப்பட்டால் அந்த டிக்கிரியை ரத்து செய்துவைக்க பின்பு கொண்டுவரும் வியாஜ்ஜியத்தில் அந்த புறட்டு டிக்கிரியை ரத்து செய்ய கோர்ட்டாருக்கு அதிகார மிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டது. 18 கல். வீ. நோ. 447; 18 C. W. N. 447.



---

### ஈஸ்மேன்டு சட்டம்.

ஒருவன் தன்னுடைய நிலத்திற்கு அடுத்தாப்போலிருக்கும் நிலத்தில் மீர்ந்த ஜலத்தை விட்டுக் கொண்டுவர பாத்தியமுடையவனாக விருந்தபோதிலும் பிந்தி சொல்லப்பட்ட நிலக்காரனுக்கு முந்தி சொல்லப்பட்ட நிலத்திலிருந்து மீர்ந்துபோன ஜலத்தைப் பெற்றுக்கொள்ள ஈஸ்மெண்டு பாத்தியம் உண்டாகவில்லை. முந்தி சொல்லப்பட்ட நிலக்காரன் மீர்ந்துபோன ஜலத்தை பிந்தி சொல்லப்பட்ட நிலத்தில் விட்டுக்கொண்டிருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த பாத்தியமற்றவன். நஷ்டம் பெறவும் பாத்தியமற்றவன் என்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 514; 22 I. C. 514.

---

### பேயர் இரவல்காரன் கோண்வேந்த வியாஜ்ஜியம்.

வேறொருவன் பெயரில் சொத்தை எழுதிவைத்தவன், இப்படி எழுதி வைத்ததால் கடன்காரர்களை மோசப்படுத்தாமல் போயிருந்தால், நமோதாவாகவும் பெயர் இரவலாகவும் சொத்து எழுதிவைக்கப்பட்டதென்று ருஜுப்படுத்துவதிலிருந்து விலக்கப்பட்டவனல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. 1 லா. வீ. 169; 1 L. W. 169.

---

### சாக்ஷிச் சட்டம்.

வாதியினுடைய கணக்கு புஸ்தகங்களில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் பதிவுகளை வாதி பிரத்தியேகமான சாக்ஷிகளை கொண்டு ருஜுப்படுத்த வசதியிருந்தும் ருஜுப்படுத்தாம லிருந்திருக்கிறபோது அப்பதிவுகளை பிரதிவாதி ஒப்புக்கொள்ளுவது சரியான காரியமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. 47 P. L. R. 1914.

---

### யூகித்தல்.

ஸ்தாபர சொத்தில் தன்னுடைய புருஷனுக்கிருந்த பாகத்தை அவன் இறந்துபோன பிறகு அடைந்த ஒரு விதவை (உத்திரவைப்பெற்று அந்த சொத்தை அடைய வேண்டுமென்று கக்ஷி சொல்லப்படாதபோது) புருஷனுடைய பாகத்தைதன்னுடைய ஜீவதிசையுள்ள பரியந்தம் அனுபவிப்பதற்காக இந்துலாப்படி வார்சுமுறையில் அடைந்திருக்கிறாள் என்று யூகிக்கப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 138; 22 I. C. 138.

---

சாதாரண ஹிந்து சட்டத்தின்படி ஒரு குடும்பம் சேர்ந்த குடும்பம் என்று யூகிக்கப்படவேண்டும். அது விபக்தமான குடும்பமாக விருந்தால் அது விபக்தமானதென்று யார் கக்ஷி சொல்லுகிறானோ அவன் அதை ருஜுப்படுத்த வேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. குடும்பம் சேர்ந்து சர்க்காருக்கு தீர்வையைச் செலுத்தாததும் மாகூலை சேர்ந்து வாங்காததும் குடும்பம் சேர்ந்த குடும்பம் என்பதை காண்பிக்கவில்லை. குடும்பத்தைச் சேர்ந்த மெம்பர்களில் தனியே கடன் வாங்காமல் பல சமயங்களில் இரண்டு மூன்றுபேர் சேர்ந்து கடன் வாங்கியிருப்பதால் அந்தக் குடும்பம் அவசியமாகச் சேர்ந்த குடும்பமாகத் தானிருக்கவேண்டுமென்று யூகிக்கக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. நோ. 22. இ. கோ. 134; 22 I. C. 134.

---

### உயில்.

ஒரு ஹிந்து வானவன் ஒருவனுக்கு வருஷவாரி பணம் கொடுக்கப்படும்படியாக உயில் எழுதி வைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. 18 க. வீ. நோ. 360; 18 C. W. N. 360.

---

### ஒரு பிராமணனுக்கு ஜமீன்தார் விட்ட இனும் நிலம்.

ஒரு ஜெமீன்தார் அல்லது ஜாகிர்தார் ஒரு பிராமணனுக்கு இனுமாக நிலம் விட்டிருந்தால் அந்த இனும் மேஜர் இனுமாக யிருந்தாலும் சரி, மைனர் இனுமாக யிருந்தாலும் சரி, மேல் வாரத்திற்கு மட்டிலும் பாத்தியத்துடன் விடப்பட்டிருக்கிறதென்று யூகிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 1 லா. வீ. 197; 1 L. W. 197.

---

### மாகாண இன்சால்வேன்சி ஆக்ட்.

மாகாண இன்சால்வென்சி ஆக்ட் 16-வது பிரிவின்படி இன்சால்வெண்டுனுடைய சொத்துகள், இன்சால்வெண்டு மனுவை தாக்கல் செய்துகொண்டு கோர்ட்டார் உத்திரவு பிறப்பித்த தேதியிலிருந்து அபிஷியல் ரீசிவர் வசத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதாக எண்ணப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. 22 இ. கே. 687; 22 I. C. 687.

### கடனாளி அதிக வட்டி செலுத்தினது.

கடனாளி வட்டிக்கடனை தீர்க்கும்போது அந்த தவணைக்கு எவ்வளவு செலுத்தப்படவேண்டுமோ அதைவிட அதிகமாக செலுத்தினான். கடன்காரன் பின்பு தனக்கு செலுத்தப்படவேண்டிய வட்டித் தவணைகளுக்காக அந்தப் பணத்தை இருத்திக் கொண்டால் அவன் கடனாளியினுடைய பணத்தை உபயோகப்படுத்திக்கொள்ளுகிறான். ஆதலால் கடன்காரன் கடனாளிக்கு அந்தப்பணத்திற்கு வட்டி செலுத்தக் கடமைப்பட்டவன் என்று தீர்மானிக்கப் பட்டது. 1 லா. வீ. 131; 1 L. W. 131.

---

### ரேவினியூ கோர்ட்டின் அதிகாரம்.

ஒரு நிலஸ்வான்தாரிடம் ஒரு குடி ஒரு நிலத்தை அடமானம் வைத்து அடமானப்பத்திரம் எழுதிக்கொடுத்தான். வருஷம் இவ்வளவு தீர்வை செலுத்த வேண்டுமென்று அந்த ஆதரவில் குறிப்பிடப்பட்டிருந்தது. கக்ஷிக்காரர்களுக்குள் உண்டாயிருக்கும் சம்பந்தம் நிலஸ்வான்தாருககும் குடிக்குமுள்ள சம்பந்தமாக யிருப்பதால் நிலத்தைவிட்டு குடியைப் புறப்படுத்த நிலஸ்வான்தார் கொண்டு வந்த வியாஜ்ஜியத்தை சிவில் கோர்ட்டார் பிடித்து விசாரணை செய்யக் கூடாதென்றும் ரெவனியூ கோர்ட்டார் பிடிக்க வேண்டுமென்றும் தீர்மானிக் கப்பட்டது. 22 இ கே. 656; 22 I. C. 656.

---

### நிலம் சம்பாதிக்கும் ஆக்ட்.

மைதானமாயிருக்கும் நிலங்களை கவர்ன்மெண்டார் பொதுஜன நன்மைக்காக வாங்கினால் அதற்கு என்ன விலை நிரணயிக்கலாம் என்கிறவிஷயத்தில் பம்பாய் கவர்ன்மெண்டார் கட்டடங்கள் விருத்தி ஏற்பாட்டில் நிலங்களுக்கு என்ன மதிப்பு போடுகிறார்களோ அது சாக்ஷியமாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்றும் அதின்படி சரியான கிரையம் நிர்ணயித்து விடலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. 16 பம். லா. ரி. 55; 16 Bom. L. R. 55.

---

### லாயர்.

ஒரு டிக்கிரியை நிறைவேற்றி பணத்தை வசூல் செய்யும் பொருட்டு ஒரு கக்ஷிக்காரன் தன்னுடைய வக்கீலுக்கு ஒரு வக்காலத்து நாமா கொடுத்திருந்தான். இந்த டிக்கிரிக்கா கோர்ட்டில் பணம் செலுத்தப்படும்போது அப்போதைக்கப்போது அந்தக் கோர்ட்டிலிருந்து பெற்றுக் கொள்ளலாமென்று அந்த வக்காலத்து நாமாவில் அதிகாரம் கொடுக்கப் பட்டிருந்தது. இப்பேர்பட்ட அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறபடியால் கோர்ட்டிற்கு வெளியே தீர்ப்புகடனாளியிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளும் அதிகாரம் அவருக்கில்லை என்று சொல்ல முடியாதென்று தீர்மானிக்கப்பட்டது. 15 ம. லா. டை. 162; 15 M. L. T. 162.

---

### கிரமமானது.

குழந்தை தனக்குப் பிறந்ததை ஒப்புக்கொள்ளுவது சோரபுத்திரன் அல்ல என்பதற்கு சமமல்ல; குழந்தைக்குப் பிதா தான் என்று ஒப்புக்கொள்ளுவது விபசாரம் செய்ததால் உண்டான குழந்தையை கிரமமான குழந்தையாக மாற்றிப்போடமாட்டாது என்று ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யரும் ஜட்ஜி மிஸ்டர் ஸ்பென்சரும் கூடிய சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. 15 ம. லா. டை. 107; 15 M. L. T. 107.

---

### விசாரணையிலிருக்கும் வியாஜ்ஜியம்.

ஒரு டிரான்ஸ்பர் பெற்றவன் டிரான்ஸ்பர் செய்தவனுடைய பெயருக்குப்பதிலாக தன்னுடைய பெயரை பாத்தியப்படுத்த அவனுக்குள்ள பாத்தியம் நாளுக்குநாள் உண்டாகின்றது. அவனுடைய பெயரை பாத்தியப்படுத்திக் கொள்ளும்படியாக டிரான்ஸ்பர் பெற்ற மூன்றுவருடம் சென்று, மனுசெய்து கொண்டதை முன்னிட்டு அவனுடைய மனு காலாவதி தோஷத்தால் தீண்டப்பட மாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 18 கல். வீ. நோ. 450; 18 C. W. N. 450.

---

### நேகோஷியபில் இன்ஸ்டிருமேன்டு ஆக்ட்.

குறிப்பிட்ட ஒருவருடைய பெயரால் எழுதிக் கொடுக்கப்பட்ட ஒரு பிராமிசரி நோட்டு நெகோஷியபில் இன்ஸ்டிருமென்டு ஆக்ட் 13-வது பிரிவின்படி ஒரு நேகோஷியபில் இன்ஸ்டிருமென்டு ஆகமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 32 P. L. R. 1914.

---

### ருஜுப்படுத்தவேண்டிய கடமை.

ஒரு ஹிந்துவிதவை காலாவாதியாகப்போன தன்னுடைய புருஷனுடைய கடன்களைத் தீர்ப்பதற்காக வாங்கின கடனைக் கொடுக்காமல் விதவையின் கடன்காரர்களை மோசப்படுத்தும் பொருட்டு அனந்தரவார்சுகள் சொத்துக்களை விற்பனை செய்தார்கள். காலாவதியாகப்போன கடன்களை தீர்த்ததையும், அவளுடைய புருஷன்பட்ட அந்த கடன்கள் அவளிடம் வசூல் செய்யப்படும் என்றும் அவள் நம்பும்படி செய்யப்பட்டாள் என்றும் ருஜுப்படுத்த வேண்டிய பொறுப்பு அனந்தரவார்சுகளுடையதென்று தீர்மானிக்கப்பட்டது. 21. இ. கே. 757; 21 I. C. 757.

---



### மத சம்பந்தமான உத்தியோகம்.

மத சம்பந்தமான உத்தியோகத்தை பராதீனம் செய்து பணம் சம்பாதிப்பது கோர்ட்டாரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது. அப்படி பராதீனம் செய்வது வழக்கம் என்று கக்ஷி சொல்லப்பட்ட போதிலும் அந்த வழக்கம் செலாவாணியாக மாட்டாது. அப்பேர்ப்பட்ட வழக்கம் சட்ட விரோதமானது 1 லா. வீ. 276; 1 L. W. 276.

---

### இரண்டாவது அப்பீல்.

அவசியமாக சாக்ஷி விசாரணை செய்யப்பட வேண்டியவும் கால நிரணய சட்ட சம்பந்தமாகவுள்ள ஒரு நூதனபிரஸ்னை இரண்டாவது அப்பீலில் உண்டாகும்படியாக விடப்படக் கூடாதென்று தீர்மானிக்கப்பட்டது. 1 பம். லா. ரி. 118; 16 Bom. L. R. 118.

---

## Criminal Rulings.

## கிரிமினல் தீர்ப்புகள்.

—:o:—

### ரிசீவரை நியமிப்பது.

கிரிமினல் புரோசிஜர் கோடு 144 வது பிரிவின்படி நடத்தும் நடவடிக்கையில் ஒரு சப் மாஜிஸ்டிரேட் ஒரு ரிசீவரை நியமிக்க அதிகாரமற்றவர் என்று தீர்மானிக்கப்பட்டது, 3 கி. லா. ரி. 292; 3 Cr. L. R. 292.

---

### விசாரணை.

ஒரு போலீஸ் ஆபீசர் தம்முடைய அதிகார எல்லைக்கு அப்பால் நடககும் குற்றத்தை விசாரணை செய்ய கிரிமினல் புரோசிஜர் கோடு 157-வது பிரிவின்படி அதிகாரமற்றவராக விருந்தபோதிலும் சமாசாரத்தைப்பெற்று தாக்கல் செய்து கொள்ளுவதை 154-வது பிரிவு தடைபடுத்தமாட்டாதென்று தீர்மானிக்கப்பட்டது. 3 கி. லா. ரி. 245; 3 Cr. L. R. 245.

---

### மரண வாக்குமூலம்.

மரண வாக்குமூலத்தை ருஜுப்படுத்த என்ன தகுந்த உபாயம் என்றால் அந்த வாக்கு மூலத்தை தஸ்தாவேஜி சாக்ஷியாக தாக்கல் செய்யவேண்டும். அது கையெழுத்து செய்யப்படாததாக விருந்தால் அந்த வாக்கு மூலம் வாங்கப்படும்போது யார் இருந்தாரோ அவனுடைய வாய்மொழி சாக்ஷியத்தால் ருஜுப்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. 10 N. L. R. 19.

---



### சேஷனுக்கு கமிட் செய்வது.

சாக்ஷி வாக்கு மூலங்கள் சந்தேகமாயிருக்கிறதென்கிற காரணத்தை முன்னிட்டு செஷனுக்கு கமிட் செய்யும்படி செய்யப்பட்ட உத்திரவை ரத்து செய்யமுடியாது என்று தீர்மானிக்கப்பட்டது. 3 கி லா. ரி. 117; 3 Cr. L. R. 117.

---

## The Madras Legislative Council.

## சென்னை சட்ட நிரூபண சபை.

—:o:—

சென்னை சட்ட நிரூபண சபையின் மீட்டிங் ஒன்று நிகழ் நவம்பர்மீ 2 உ கோட்டைக்குள்ளிருக்கும் கவர்ன்மெண்டு செக்ரெட்டரி ஆபீசிலிருக்கும் உன்னதமான மாளிகையில் கூடினது. மேன்மை தங்கிய சென்னை கவர்னர் அவர்கள் சபா நாயகராக விருந்தார்கள். அடியிற்கண்ட ஆனரபில் மெம்பர்கள் மீட்டிங்கிற்கு விஜயம் செய்திருந்தார்கள். ஆனரபில் W. பிரான்சிஸ், ஆனரபில் மிஸ்டர் R. S. சிவசாமி அய்யர், ஆனரபில் மிஸ்டர் அட்வோக்கேட் ஜெனரல், ஆனரபில் மிஸ்டர் S. B. சர்மா, ஆனரபில் மிஸ்டர் S. H. ஸ்டோன், ஆனரபில் சர் பிரான்சிஸ் ஸ்பிரிங், ஆனரபில் மிஸ்டர் B. V. நரசிம்ம அய்யர், ஆனரபில் மிஸ்டர் A. S. கிருஷ்ணராவ், ஆனரபில் ராவ்பகதூர் B. நரசிம்மேஸ்வர சர்மா, ஆனரபில் திவான்பகதூர் L. D. ஸ்வாமிக்கண்ணுப்பிள்ளை, ஆனரபில் கான்பகதூர் ஹாஜி இஸ்மேயில் சேட் சாகிப்பகதூர், ஆனரபில் மிஸ்டர் A. மூர்எட், ஆனரபில் சர் ஹியூக்பிரேசர், ஆனரபில் மிஸ்டர் E. F. பார்பர், ஆனரபில் மிஸ்டர் குன்கிராமன் நயினார், ஆனரபில் மிஸ்டர் K. சிதம்பரநாத முதலியார், ஆனரபில் மிஸ்டர் A. T. G. M. அகமத்தம்பி மரக்காயர், ஆனரபில் ஷிபா-அல்-மலக், ஆனரபில் T. ஜேயின் - அல் - ஆபிடின்சாகேப் பகதூர், ஆனரபில் திவான் பகதூர் V. ராமபத்திரநாயுடு தொட்டப்ப நாய்க்கனூர் ஜமீன்தார், ஆனரபில் மிஸ்டர் K. R. V. கிருஷ்ணராவ், பொல்லாவரம் ஆனரபில் ரெவரெண்டு மிஸ்டர் G. பிட்டன்டிரிக், ஆனரபில் மிஸ்டர் C. V. S. நரசிம்மராஜா, ஆனரபில் மிஸ்டர் V. S. சீனிவாச சாஸ்திரி, ஆனரபில் ராவ்பகதூர் சோமசுந்திரம் செட்டியார், ஆனரபில் மிஸ்டர் K. P. ராமன் மீனன், ஆனரபில மிஸ்டர் J. O. ராபின்சன், ஆனரபில் மிஸ்டர் K. ராம அய்யங்கார், ஆனரபில் மிஸ்டர் P. கேசவப்பிள்ளை, ஆனரபில் ராவ்பகதூர் M. ராமச்சந்திரராவ், ஆனரபில் ராவ்பகதூர் V. K. ராமானுஜாச்சாரியார், ஆனரபில் சர்ஜன் ஜெனரல், ஆனரபில் மிஸ்டர் C. R. M. ஷிமிட், ஆனரபில் மிஸ்டர் N. S.

பிராடி, ஆனரபில் மிஸ்டர் N. F W. ஜில்மான், ஆனரபில் மிஸ்டர் L. E. பக்ளி, ஆனரபில் மிஸ்டர் R. C. C. கார், ஆனரபில் திவான்பகதூர் ருஜ கோபாலாச்சாரியார், ஆனரபில் மிஸ்டர் L. டேவிட்சன், ஆனரபில் மிஸ்டர் A. பட்டர்வொர்த், ஆனரபில் மிஸ்டர் A. G. கார்டியூ, ஆனரபில் சர் ஹாரோல்ட் ஸ்டேவர்ட், ஆனரபில் தரக்கோட்டை ராஜா, ஆனரபில் மிஸ்டர் T. ரிச்மெண்டு, ஆனரபில் மிஸ்டர் சுப்பராயலு ரெட்டி.

மீட்டிங் நடவடிக்கைகள் ஆரம்பமானவுடன் ஆனரபில் சர் ஸ்டேவர்ட் அவர்கள் யுத்தகளத்திற்கு இந்தியத்துருப்புகளை பார்வையிட்டு அகமகிழ்வதற்காகப்போன லார்ட்ராபர்ட்ஸ் அவர்களுடைய கீர்த்தி பிரதாபங்களை எடுத்துப் பிரஸ்தாபித்து அவர் போயிருந்த விடத்தில் இறந்து போனதைப்பற்றிச் சொல்லி துக்கம் பாராட்டிப் பேசினுர். லார்ட்ராபர்ட்ஸ் இந்தியாவில் சில காலம் சேனுதிபதியாகயிருந்தவர்கள். அவர் பிறப்பில் ஐரோப்பியராகவிருந்த போதிலும் இந்தியர்கள்கூட இந்தியத்துருப்புகள் மீது வைக்க முடியாத அவ்வளவு அன்பும் பிரியமும் வைத்து வந்தார். ஆகவே விருத்தாப்பியமான வயதுடையவராக விருந்தும் இந்தியத்துருப்புகளைப் பார்த்து சந்தோஷ மடையவேண்டுமென்று கருத்துக்கொண்டே யுத்தகளத்திற்குச் சென்றுர். யுத்தகளத்தில் இந்தக் காலத்தில் பனியும் குளிரும் மிதமிஞ்சி வியாபித்து வருகிறபடியால் அவர்மேல் அங்கி போட்டுக் கொள்ளவேண்டுமென்று எச்சரிக்கப்பட்டும் அதை கவனியாமல் சாதாரண கோட்டைமட்டிலும் உடுத்திக்கொண்டு துருப்புகளை போய் பார்வையிட்டார்; அவர் எந்த துருப்புகளைப்பார்க்க விரும்பி யுத்தகளத்திற்கு வந்தாரோ அந்த துருப்புகள் மத்தியிலேயே அவருடைய ஆத்மா அவரை விட்டுப் பிரிந்து போய்விட்டது. இந்த விருத்தாந்தங்களையும் அவருடைய குணதிசயங்களையும் ஆனரபில் சர் ஹாரோல்ட்ஸ்டேவர்ட் எடுத்துசசொல்லி விசனப்பட்டார். இன்று கூடிய மீட்டிங்கில் ஒரு புதுமை என்னவென்றுல் மீட்டிங் ஆரம்பமானவுடன் லார்ட்ராபர்ட்ஸ் அவர்களுடைய மரணதுக்கம் கொண்டாடப்பட்டது. மீட்டிங் முடியும் சமயத்தில் ஆனரபில் மிஸ்டர் R. M. சாவேஜ் அவர்களின் மரணதுக்கம் கொண்டாடப்பட்டது. ஆனரபில் மிஸ்டர் P. S. சிவசாமி அய்யர் அவர்கள் பின்னுல் சொல்லப்பட்ட மெம்பருடைய பிரதாபத்தைச் சொல்லி விசனப்பட்டார்கள். அதன் பிறகு ஆனரபில் மெம்பர்களில் பெரும்பான்மையார் இந்தியர்கள் பிரிடிஷ் சிம்மாசனத்தின்மீது வைத்திருக்கும் உறுதியான ராஜ விசுவாசத்தையும் பக்தியையும் எடுத்துச்சொன்னுர்கள். பிரிடிஷார் இப்போது யுத்தத்தில் அமர்ந்திருப்பதால் அப்படி எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியம் என்று நாம் ஒருவாறு ஒப்புக்கொண்ட போதிலும் அப்படி எடுத்துச் சொல்ல வேண்டியதேயில்லை என்று நாம் நினைக்கிறேம். ஏனெனில் அரசாங்கத்தார் இந்தியாவின் ராஜபக்தியை சந்தேகிக்கிற காலம் போகவே போய்விட்டது. இந்தியர்கள் யுத்தசமயத்தில் உடல் பொருள் ஆவியாகிய மூன்றையும் தத்தம் செய்வதுபோல பொருளுக்கு பொருளையும் புத்திரர்களுக்கு புத்திரர்களையும் இந்தியா இங்கிலாண்டிற்கு அர்ப்பணம் செய்திருப்பதுமன்றி ஆயிரக்கணக்கான சோல்ஜர்களையும் அனுப்பியிருக்கிறது. ஆனரபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை இந்தியர்களுடைய ராஜ விசுவாசத்தைப்பற்றி ஒரு தீர்மானம் பிரரேபனை செய்ததுமன்றி மேன்மை தங்கிய வைஸிராய் லார்ட்ஹார்டின்ஞ் அவர்கள் தம்முடைய காலத்தில் இந்திய சோல்ஜர்கள் ஐரோப்பா யுத்தகளத்திற்கு வெள்ளைக்காரருடன் போர்புரியும்படியான சுதந்தரத்தை அவர்களுக்கு கொடுத்திருப்பதற்காக வைஸிராய் அவர்களுக்கு வந்தன மளித்தார்கள். இந்த சுதந்தரம் அற்பமான சுதந்தரமல்லவென்றும் அதிலிருந்து பெருத்த நன்மைகள் உண்டாகப்போகிறதென்று நாம் சென்ற மீ கெஜட்டில் கனம்பொருந்திய வைஸிராய் அவர்களுடைய படத்தைப் பிரசுரித்து அவர்களைப்பற்றி எழுதியிருக்கும் வரலாற்றுல் நன்கு அறிந்து கொள்ளக்கூடும். இந்தியாவிலிருக்கும் முஸ்லீம்களும் ராஜவிசுவாசம் பூண்டு பிரிடிஷார் யுத்தத்தில் ஜெயம்பெற வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறுர்கள் என்று ஒரு தீர்மானத்தைப் பிரரேபனை செய்தார். மலையாளம் பிரதிநிதியாகிய ஆனரபில் மிஸ்டர் குன்கிருமன் நயினுர், நாயர் ஜாதியாருக்குப் பிரதிநிதியாக டாக்டர் T. M. நாயர் ஐரோப்பாவிற்குச் சென்றிருக்கும் ஆஸ்பத்திரி கப்பலில் ஊழியம் செய்வதற்காக அனுப்பப்பட்டது நாயர் வருப்பாருக்கே கௌரவத்தை உண்டுபண்ணியிருக்கிறதென்று சொன்னுர். ஆனரபில் மிஸ்டர் சர்மாவும் ஆனரபில் சர் ஹாரோல்ட்ஸடேவர்ட்டும் இந்தியரின் உறுதியான ராஜ விசுவாசத்தைப்பற்றிப் பேசினுர்கள். அடுத்த நாளும் மீட்டிங் நடந்தது. ஜனப்பிரதிநிதி மெம்பர்கள் கவர்ன்மெண்டு மெம்பர்களை 157-கேள்விகள் கேட்டார்கள். ஒவ்வொரு கேள்விக்கும் 3-உள் கேள்விகளிருக்கிறபடியால் ஆக ஜனப்பிரதி மெம்பர்கள் கேட்ட கேள்விகள் 5C0 - இருக்குமென்று சொல்லலாம். அவைகளையும் அவைகளுடைய ஜவாப்பையும் இவ்விடத்தில் எடுத்துஎழுதுவதென்றுல் நம்முடைய சட்ட கெஜட் இடம் கொடுக்கமாட்டாது ஆனுல் இரண்டொரு முக்கிய கேள்விகளை மட்டிலும் குறிப்பாக காண்பிக்கின்றேம். கோயமுத்தூரில் காடு வளர்க்கப்படுவதைக் குறித்து ஒரு கேள்வி கேட்கப்பட்டது. இது முக்கியமான கேள்வி என்பதில் சந்தேகமில்லை. ஜல சப்ளை பாதுகார்க்கப்படும்



பொருட்டும் காட்டிலிருந்து தேக்குமரங்கள் முதலான பொருள்கள் கிடைக்கக் கூடியதாயிருப்பதாலும் வளர்க்கப்படுகிறதென்றும் அப்படி வளர்ப்பது ஜனங்களுடைய பாத்திதைகளில் ஆக்கிரமித்ததாக மாட்டாதென்று பதில் சொல்லப்பட்டது. பெஜ்வாடாவில் உண்டான வெள்ளப்பிரவாகத்தைப் பற்றியும் ஒரு அணை இடிந்துபோனதையும்பற்றி ஒரு கேள்விகேட்டு இதைப்பற்றி விசாரணை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்று ஒரு யோசனையும் சொல்லப்பட்டது. கவர்ன்மெண்டார் இந்த யோசனையை ஏற்றுக்கொள்ள இணங்கவில்லை. திண்டுக்கல் பாலக்காடு இருப்புப்பாதையை ஒரு பிரைவேட் கம்பெனி மூலதனம் செலவுசெய்து கட்டும்படியாக அந்த கம்பெனிக்கு, அந்த இருப்புப்பாதை போகும்வழியிலிருக்கும் மலையாளம் ஜில்லா போர்ட்டை கவர்ன்மெண்டார் யோசனை செய்யாமல் ஏன் கொடுத்தார்கள் என்று ஷை மாகாணத்திலிருந்து வந்திருக்கும் ஒரு பிரதிநிதி ஒரு கேள்வி கேட்டார். திண்டுக்கல் பாலக்காடு இருப்புப்பாதை மலையாளம் ஜில்லா வழியாக போகின்றது. இந்த இருப்புப்பாதையை மூலதனம் செலவு செய்து போடும் விஷயத்தில் முதலில் யாரேனும் யோசனை செய்யப்படவேண்டுமானுல் அவர்கள் மதுரை ஜில்லா போர்ட்டாரும் மலையாளம் ஜில்லா போர்ட்டாரும் ஆகிய இருவர்களே! கோயமுத்தூர் ஜில்லா போர்ட்டாருடன்கவர்ன்மெண்டார் யோசனை செய்திருக்கும்போது மலையாளம் ஜில்லா போர்ட்டாருடன் ஏன் யோசனை செய்யவில்லையோ நாம் அறிகிலோம். அப்படி கவர்ன்மெண்டார் மலையாளம் ஜில்லா போர்ட்டாருடன் யோசனை செய்ய தவறிப் போயிருப்பது பரிதாபகரமாயிருக்கிறது. ஜனப் பிரதிநிதி மெம்பர்கள் கேட்ட கேள்விக்கு கவர்ன்மெண்டு மெம்பர்கள் பதில் சொல்லி முடிந்தவுடன் சட்டநிரூபணம் செய்யும் வேலைஆரம்பிக்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தைப் பிரயோகப்படுத்தி அனேக ஆனரபில் மெம்பர்கள்பேசினுர்கள். இந்த கவுன்சிலில் பாஸ் செய்விக்கப்பட்ட முதல் சட்டம் என்னவென்றுல் கவுன்சில் மீட்டிங்கின் நடவடிக்கையைப்பற்றி தஸ்தாவேஜி மசோதா ஆக்ட் சட்ட நிரூபண சபை மீட்டிங்கில்ஆனரபில் மெம்பர்கள் பேசும்பேச்சுகளின் முக்கியமான பாகம்மட்டிலும் சர்க்கார் தஸ்தாவேஜிகளில் பதிவுசெய்து கொள்ளப்பட்டுவந்தன. ஆனுல் இப்போது செய்யப்பட்டிருக்கும் சட்டத்தின்படி இனி ஒவ்வொரு ஆனரபில் மெம்பரும் பேசும் பேச்சும் சொல்லும் கக்ஷி வாதமும் செய்யும் தர்க்கமும் ஆகிய இவைகள் எல்லாம் சர்க்கார் தஸ்தாவேஜியில் முழுதிலும் பதிவுசெய்து கொள்ளப்படும். அதன் பிறகு ஆனரபில் மிஸ்டர் V. சீனிவாச சாஸ்திரியார் இந்து ஸ்திரீகள் ருதுவானபிறகு செய்துக்கொள்ளும் விவாகங்கள் சட்டப்படி செலாவணியாகும்படியாக ஒரு மசோதாஆக்ட் தயார்செய்திருக்கிறுர். அதை சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவரும்படியாக சபையின் உத்திரவைக்கேட்டார். எந்த மெம்பரும் அதை ஆக்ஷேபிக்கவில்லை. சென்னபட்டணம் 1914-ம் வருடத்திய நீர்ப்பாய்ச்சல் மசோதா ஆக்ட் ஆனரபில் மிஸ்டர் கார்டியூவால் ஆலோசனைக் கொண்டுவரப்பட்டு யுத்தம் முடிந்த பிறகு இந்த மசோதா ஆக்ட் கவனிக்கப்பட வேண்டுமென்று தள்ளிவைக்கப்பட்டிருக்கிறது. இத்துடன் மீட்டிங்கின் நடவடிக்கைகள் முற்றுப் பெற்றன. இம்முறை கூடிய மீட்டிங்கில் நடந்த ஒரு விசனகரமான சம்பவத்தை நாம் எடுத்தெழுத மறந்து போகக்கூடாது. அதாவ தென்னவென்றுல் ஆனரபில் மிஸ்டர் குன்கிருமன்நாயினுர் ராஜ விசுவாச தீர்மானத்தைப்பற்றி பேசி முடிந்த பின்பு ஆனரபில் மிஸ்டர் ராமபத்ர நாயுடு அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது ஆனரபில் மிஸ்டர் நாயனுர் நார்க்காலியிலிருந்து மயக்கங்கொண்டு நழுவககாணப்பட்டார்; இவர் பக்கத்திலிருக்கும் ஒரு அறைக்குத் தூக்கிக்கொண்டு போகப்பட்டு சர்ஜன் ஜெனராலாலும் டாக்டர் ஜேயினலாபுடியினுலும் கவனிக்கப்பட்டார்கள். கவனித்தும் பிரயோஜனமில்லாமல்போய், அவர் இறந்து போய்விட்டார். அவருக்கு உண்டான நோய் மார் அடைப்பு அல்லவென்றும் அவர் சபையில் செய்த பிரசங்கத்தால் அவருடைய மூளை ஏதோ பாதிக்கப்பட்டு இறந்து போய்விட்டார் என்று சர்ஜன்ஜெனரல்அபிப்பிராயப்படுகிறுர். ஆனரபில் மிஸ்டர் நாயனுருக்கு இவ்வுலகினில் சத்துரு இல்லாதவர் என்று நாம் கூறுவதால் அவர் எல்லாருடனும் அன்புடன் பழகிவந்தார் என்று யூகித்துக் கொள்ளக் கூடுமானபடியால் அவருடைய மேன்மையான குணதிசயங்களை இவ்விடத்தில் எடுத்து எழுதுவது அனுவசியமென்று நாம் எடுத்து எழுதவில்லை.

---

## MARRAGE EXPENSES.

## விவாகச் செலவுகள்.

---

பையனுடைய விவாகம்.

ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்தின் பாகஸ்தனுடைய விவாகம் குடும்ப காரியம் என்றும் அதற்காக வாங்கும் கடன் குடும்பத்தைக் கட்டுப்படுத்துமென்றும் தீர்மானிககப்பட்டது.

குடும்பத்திற்கு பிதிரார்ஜ்ஜித சொத்து இல்லாதபோது விவாகமாகாத சகோதரர்களுக்கு விவாகம் செய்துவைக்க விவாகம் செய்துகொண்ட சகோதரர்கள் கட்டுப்பட்டவர்களல்ல. 27 சென். 206.

---

# Our Client's Page.

## நம்முடைய கக்ஷிக்காரர்களின் பக்கம்.

நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டின் அபிப்பிராயங்களைக் கேட்கிறவர்கள் மாமூலான விதிகளை மறந்துபோயிருப்பதைப்பற்றி நாம் விசனிக்கிறோம். அபிப்பிராயம் கேட்பதற்கு கடிதம் எழுதும்போதே ரூ. 5 அட்வான்ஸ் மணியார்டர் செய்யவேண்டுமென்றும் இல்லேல் ரிக்கார்ட் கட்டை அவிழ்த்துப் பார்க்கப்பட மாட்டாதென்று பலமுறை நம்முடைய சஞ்சிகைகளில் எழுதியிருந்தும் கக்ஷிக்காரர்கள் கவனிக்கிறதில்லை! இந்த காரணத்தை முன்னிட்டு சுமார் 35 அபிப்பிராயக் கடிதங்கள் முதலாவது உடைத்துப் பார்க்கப்படவில்லை. ஆதலால் இனி கக்ஷிக்காரர்கள் ஞாபகத்தில் வைப்பார்கள் என்றும் நம்புகின்றோம்! நம்முடைய கெஜெட் கூறும் அபிப்பிராயம் ஏனோ தானோ என்று அலக்ஷியமாகச் சொல்லப்படும் அபிப்பிராயமல்ல. கூறப்படும் அபிப்பிராயம் ஒவ்வொன்றிற்கும் அதன் கடைசியில் லா ரிப்போர்ட் பிரமாணமும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்களையே வெளியூர்களில் உள்ள கக்ஷிக்காரர்கள் அவர்களுடைய சொந்த லாயர்களிடம் எடுத்துச் சொன்னால் கக்ஷிக்காரர்களிடமிருந்து லாயர்கள் அதிகப்படியான பீஸ் எதிர்ப்பார்க்க விடமில்லாமல் மேல் நடவடிக்கை நடத்திக்கொண்டு போவார்கள்.

நம்முடைய கெஜெட்டினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டவர்களில் எவரும் அந்த அபிப்பிராயம் சரியாயில்லையே என்று நமக்கு எழுதியிருப்பதை நாம் அறியோம்! நம்மால் இயன்றளவு நாம் ஜீவதிசையிலுள்ள பரியந்தம் கக்ஷிக்காரர்களுக்கு சாதகம் செய்யவேண்டுமென்று விரதம்கொண்டு கங்கணம் கட்டிக்கொண்டு சுமார் 9-வருட காலமாக தொடர்ந்தேர்த்தியாக உழைத்துக்கொண்டு வருகிறோம் என்பது உலகமறிந்த விஷயம் என்பதை மறுக்க முடியாது. ஆகையால் இந்த வகையில் கக்ஷிக்காரர்களுடைய முழு ஆதரிப்பையும் பெறுவோம் என்று நம்புகின்றோம்:—

### அபிப்பிராய ஜவாப்பு.

திருச்சிநுப்பள்ளி மிஸ்டர் அய்யர்:— புருஷனுடைய வியாபாரத்தை தொடர்ந்தேர்த்தியாக நடத்திக்கொண்டு போவதற்கு விதவை கடன்படுவது மற்ற விஷயங்களுக்காக கடன்பட்டு பராதீனம் செய்வதற்குச் சமம். அதாவது அந்தக் கடன்கள் அவசியமான காரியத்திற்காக வாங்கப்பட்டன என்று ருஜூப்பட்டால் அவள் செய்த பராதீனம் செலாவணியாகுமென்று 15 ம. லா. டைம்ஸில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது இந்த தீர்ப்பை தங்களுடைய கேசிற்கு ஆதாரமாக எடுத்துக் கூறலாம்.

முசமட் உசேன்:— கீழ் கோர்ட்டில் லாயர் தன்னுடைய கேசை நன்றாய் ஆர்குமெண்டு செய்யவில்லை என்பது அந்தக் கேசை ஐக்கோர்ட்டார் ரிவிஷன் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுவதற்கு ஒரு தகுந்த காரணமாகமாட்டாது. இப்படி காரணம் சொல்லி அந்தக் காரணத்தைக்கொண்டு ஐக்கோர்ட்டார் கேசை ரிவிஷனில் விசாரணை செய்தால் தோற்றுப்போன ஒவ்வொரு கக்ஷிக்காரனும் ஐக்கோர்ட்டில் ரிவிஷன் மனுதாக்கல் செய்துவிடுவான். வேறே தகுந்த காரணம் எடுத்துக் காண்பிக்க வேண்டும்.

முத்தன் அம்பலன்:— கலகம் 6-மாதத்திற்கு பிறகு நடக்கப்போகிறதாக பயந்து சப் மாஜிஸ்டிரேட் அம்மாதிரி உத்திரவுசெய்தது சட்டவிரோதம். ஆகையால் நீர் அப்பீல் செய்துகொண்டால் கட்டாயம் அந்த உத்திரவு ரத்தாய்விடும். மேலும் உங்களுக்கு இன்னொரு சகாயம் செய்கின்றோம். அதாவது என்னவென்றால் 3-கிரிமினல் லா ரிப்போர்ட் 49-வது பக்கத்தில் தங்களுடைய கேஸ் மாதிரியான ஒரு கேஸ் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கேசை எடுத்து கோர்ட்டாருக்குக் காண்பிக்கும்படியாக தங்களுடைய பிளீடருக்கு நீர் சொல்லவேணும்.

ரத்தினசாமி:— புதிய வருஷத்திற்கு கோர்ட்டு திறந்த பின்புதான் தங்களுடைய கேஸ் ஐக்கோர்ட்டு நோட்டீஸ் போர்டில் போடப்படும் அப்போது தங்களுடைய வக்கீல் தாஸ்தாவேஜிகள் அச்சிப்போடுவதற்காக பணம் அனுப்பும்படியாக எழுதுவார்கள். அப்போது பணம் அனுப்பவேண்டும். தங்களுடைய கேஸ் விசாரணைக்கு எடுக்கப்படுவதற்கு இன்னும் வெகு காலம் செல்லும்.

அரந்தாங்கி பழனியாண்டிபிள்ளை:— சென்னையில் நடந்த கோமுட்டி ஜாதியில் நடந்த கொலைக்கேசின் தீர்ப்பு இவ்வூர் தினசரி பத்திரிகைகளில் வந்திருக்கின்றது. அந்தத் தீர்ப்பு நிகழ்மீ சஞ்சிகையில் நம்முடைய கெஜெட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறதைப் பார்க்கவும்.



திருவையார் அமராவதி:— இந்து விவாகம் சாமானியமான காரியமல்ல. சம்சர்க்கத்தை உத்தேசித்து மட்டிலும் விவாகம் செய்து கொள்ளப்படுகிறதில்லை. நீர் சொல்லும் காரணம் நீர் சம்சர்க்கத்திற்கு யோக்கியதை யற்றவள் என்று மட்டிலும் காரணம் சொல்லுகிறீர். அந்தக் காரணத்தை கோர்ட்டார் ஒப்புக்கொண்டபோதிலும் அந்தக் காரணத்தை முன்னிட்டு நீர் புருஷனுடன் சேர்ந்து வசிக்கவேண்டியதில்லை என்று உத்திரவு செய்துவிட மாட்டார்கள். ஆகையால் நீர் புருஷன் வீட்டிற்கு முடிவில் போய்ச் சேரவேண்டியதாகத்தானிருக்கும் என்பதில் நமக்கு சந்தேகமில்லை.

வேலூர் ருமசாமி உடையார்:— தங்களுடைய கடிதமும் மணியார்டரும் வந்து சேர்ந்தன. இன்னும் கடிதம் கவனிக்கப்படவில்லை. ஒருவாரம்சென்று கவனித்து அடுத்தசஞ்கையில் பதில்எழுதுகின்றோம்.

பச்சை கிராமணி:— சாதாரண எகிரிமெண்டு ½-ரூபாய் ஸ்டாம்பில் எழுதப்படலாம்.

திருச்செங்காடு நீலாதாக்ஷி:— சாத்தியப்படாத காரியம்; புருஷன் மேற்பார்வைக்கு புதிதாக வந்து சேர்ந்திருக்கும் இரண்டாவது பெண்சாதி கோபித்துக் கொள்ளப்போகிறாளோ என்று அஞ்சி உம்மை அலக்ஷியமாக நடத்தி வரக்கூடும். ஆனால் உள்ளுக்குள் அபிமானம் வைத்திருக்கக்கூடும். அபிமானம் வைத்திருப்பதாக ருஜூவும் படுத்தக்கூடும். ஆதலால் நீர் உமக்குப் பிரத்தியேகமாக ஜீவனாம்சம் கொடுக்கப்பட வேண்டுமென்று வாதாடுவதில் பயனில்லை.

பாலக்கரை ரேங்கய்யா:— வீடு போ போ என்றும் காடு வா வா என்றும் கூப்பிடும் இந்தக் காலத்தில் உமக்கு இந்த யோசனை கூடாது. அபிப்பிராயம் சொல்லுவதும் கக்ஷிக்காரர்களுக்காகப் பரிந்து கோர்ட்டில் கக்ஷி ஆடுவதும் ஆகிய இந்தத்தொழிலை உலகத்திற்கு நன்மை செய்யவேண்டும் என்கிற விரதத்துடன் நாங்கள் கைக்கொண்டிருக்கிறபடியால் ஒரு குடியை அக்கிரமமாகக் கெடுக்கும்படியான யோசனைகளைக் கேட்டு அவைகளுக்கு உடந்தையாக விருந்து ஒரு யுக்தி சொல்லமாட்டோம்.

இடக்குடி நாராயணசாமிப் பிள்ளை:— அப்பீலில் ஜெயில் தண்டனையும் அபராத தண்டனையும் அதிகப்படுத்தப்படக்கூடாதென்பது சட்டமல்ல. அவைகளை அதிகப்படுத்துவதற்கு கோர்ட்டாருக்கு தாராளமாக அதிகாரமிருக்கிறது. ஐக்கோர்ட்டார் பெரும்பாலும் கீழ் கோர்ட்டாருடைய தண்டனையை உயர்த்தமாட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் தண்டனைகள் கடுமையாகவிருக்கின்றன என்று அவர்கள் அபிப்பிராயப்பட்டால் அவைகளைத் தணிப்பார்கள். குற்றம் மகா கொடுமையான குற்றம் என்றும் கீழ் கோர்ட்டார் அந்தக் குற்றத்திற்கு விதித்த தண்டனை போதாது என்று அபிப்பிராயப்படுவார்களேயாகில் உயர்த்தினாலும் உயர்த்துவார்கள்.

மதுரை ரங்கநாயகி:— நீர் கேட்ட கேள்விக்கு ஜவாப்பு எழுதி சாத்தியப்படாது. ஹிந்து விவாக ஒப்பந்தங்களை சுருக்கமாய் எடுத்து நம்முடைய இம்மாத கெஜட்டில் பிரசுரித்திருக்கிறோம் அதை பார்த்துக்கொள்ளவும்.

கோயமுத்தூர் வேலப்ப கவுண்டர்:— உம்முடைய கடிதம் மட்டிலும் வந்து சேர்ந்ததே ஒழிய மணியார்டர் வரவில்லை. அபிப்பிராயத்திற்காக வரும் கடிதங்கள் மணியார்டரையும் அழைத்துக்கொண்டு இரண்டும் சேர்ந்தாப்போல் வராமல் போனால் தனியே வந்த கடிதமட்டிலும் கவனிக்கப்படாதென்று நம்முடைய தொழில் நமக்கு ஆக்கியாபித்திருக்கிறது.

N. Rathakrishna & Co., Madras.

## THE WAR.

## ஐரோப்பா யுத்தம்.

—:o:—

ஐரோப்பாவில் இப்போது நடந்துகொண்டு வரும் யுத்தத்தை மதுபிந்து கலகத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். "மதுபிந்து கலகம்" என்றால் அது என்ன கலகம் என்று அனேகருக்குத் தெரிந்திருக்காததாகையால் இவ்விடத்தில் அதை எடுத்து விவரிப்போம். ஒரு வியாபாரியினுடைய கடையிலே ஒரு துளித்தேன் விழுந்தது. அத் தேனில் ஈக்கள் பறந்து வந்து விழுந்தன. வீட்டுப்பல்லி ஈக்களைப் பிடித்தது. பல்லியை பூனை வந்து பிடித்தது. பூனையை அடுத்தவீட்டுப் பட்டாணியின் நாய் வந்து பிடித்தது. வியாபாரி வாளெத்து நாயை வெட்டிவிட்டான். என்னுடைய நாயை ஏன் வெட்டினாய் என்று பட்டாணி கடைக்காரனோடு சண்டைக்குப் போனான். கடைக்காரனுக்குத் துணையாக மற்றக் கடைக்காரர்கள் சேர்ந்தார்கள். பட்டாணிக்குத் துணையாக மற்ற பட்டாணிகள் எல்லோருஞ் சேர்ந்தார்கள். இரு கக்ஷியும் அடிபிடிப்பட ஊரெல்லாம் சந்தடியும் அலங்கோலமாயிற்று. இரு கக்ஷியிலும் சண்டையிலே விழுந்தோரும், காயப்பட்டோரும், இறந்தோரும் பலராயினார்கள் இவை எல்லாம் ஒரு துளித் தேனாலே வந்தன. அதுபோல செர்வியாவுக்கும் ஆஸ்டிரியாவுக்கும் சண்டை ஆரம்பிக்க செர்வியாவுக்குத் துணையாக ருஷியா வந்தது. ஆஸ்டிரியாவுக்குத் துணையாக ஜெர்மனி வந்தது. ருஷியாவுக்குத் துணையாக பிரான்சு வந்தது. இதன் நடுவில் ஜெர்மனி நடு நிலையாகவிருந்த பெல்ஜியத்தின் பேரில் படையெடுத்துப்போக யுத்தத்தில் சேர

கொஞ்சம்கூட விருப்பமில்லாதவும் சமாதானத்திலும் அமரிக்கையிலும் விருப்பமுடைய இங்கிலாண்டும் பெல்ஜியத்திற்குப் பரிந்து ஜெர்மனியை எதிர்க்கும்படி நேரிட்டுவிட்டது. இந்த யுத்தத்தில் மாண்டுபோகும் மனிதர்களை கணக்கிட்டுப் பார்த்தால் நம் மனம் நடுங்குகின்றது. ஆஸ்டிரியர்களும் ஜெர்மனியர்களுமாக சேர்ந்து தினம் ஒன்றுக்கு 20 ஆயிரம் பேர்கள் இறந்துபோகிறார்கள் என்று கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த கணக்கின்படி கடந்த நான்குமாத காலமாக மாண்டு வருகிறார்கள். ஐயோ! பாவம்! பிரிடிஷ்காரரும் பிரான்சுக்காரருடைய தரப்பில் அவ்வளவு பேர்கள் மாண்டுபோகாமற் போனபோதிலும் அவர்களுடைய சேனைகளின் அளவுக்குத் தக்கபடி மாண்டுபோகின்றார்கள். எப்போது இந்த யுத்தம் முடியுமோ, எப்போது உலகத்திற் க்ஷேமம் உண்டாகுமோ தெரியவில்லை. அமெரிக்கா தேசத்து ஒரு யுத்த நிபுணர் ஜெர்மனியர் செய்யும் ஏற்பாடு ஒவ்வொன்றும் தவறிப்போய் களைத்துப் போய்விட்டார்களானபடியால் கூடிய சீக்கிரத்தில் சண்டை முடிந்துபோய் விடுமென்று அபிப்பிராயப்படுகிறார். ஆனால் இங்கிலாண்டில் லார்ட் கர் ஜானும், லார்ட் கிச்சனரும் யுத்தம் முடிய இன்னும் மூன்று வருடம் செல்லுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள். "இன்னும் மூன்று வருடம் செல்லும்" என்னும் வார்த்தைகளை எழுதும்போதே நம்மனம் கூசுகிறது! நம் கை நடுங்குகிறது! எத்தனை ஸ்திரீகள் புருஷர்களை யிழக்கப்போகிறார்களோ, எத்தனை புத்திரர்கள் புத்திரிகள் பிதாக்களை யிழக்கப்போகிறார்களோ, எத்தனை பிராதாக்கள் சகோதரர்களை இழக்கபோகிறார்களோ நாம் அறிகிலோம்! நவம்பர்மீ யுத்தத்தில் விசேஷ புதினங்கள் காணோம். கூட்டு சைனியங்கள் ஒய்சார் கால்வாயுக்கும் டிக்ஸ்மோட்டிற்கும் மத்தியிலிருக்கின்றன. ஜெர்மன் சேனையும் அதற்கு சுற்றுப்புரத்திலிருந்துகொண்டிருக்கிறது. ஜெர்மனியர்கள் என்ன பாடுபட்டாலும் "கலே" நகரைப்பிடித்து அதிலிருந்தபடி இங்கிலாண்டின்பேரில் பாயவேண்டுமென்று பிடிவாதமாய் ஒருமாதகாலமாய்ச் சண்டைபோட்டுக்கொண்டிருக்கிறார்கள். கூட்டு சைனியங்கள் ஜெர்மனியர்களை நகருக்குள் நுழையும்படியாக வழி விடுகிறதில்லை என்று பிடிவாதம் கொண்டு பலமான சுவர் வைத்ததுபோல நின்றுகொண்டிருக்கிறார்கள். மாதம் ஒன்றாகிறது. இந்த நிலைமையிலேயேயிருக்கிறார்கள். இந்த மாதம் யுத்தகளத்திலிருந்து வந்திருக்கும் தந்திகள் எல்லாம் பெரும்பாலும் நிலைமைமாறவில்லையென்றே கூறுகின்றன. ஜெர்மனியர்கள் ஒருநாள் டிக்ஸ்மோடைப் பிடித்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. டிக்ஸ்மோடுக்கும் கலேக்கும் 25 மைல் தூரம் தானிருக்கிறது. பிந்தி ஒருநாள் பிரான்சுக்காரர்கள் டிக்ஸ்மோடில் நுழைந்துவிட்டதாகச் சொல்லப்பட்டது. இப்படி தந்திகள் மாறி வருகின்றன. எப்படியிருந்தாலும் ஜெர்மனியர்கள் கலேய் நகருக்குள் நுழைய முடியவில்லை என்பது திண்ணம். அவர்கள் இந்நகருக்குள் நுழைந்தபோதிலும் அவர்கள் இங்கிலாண்டை கலேய் துறைமுகத்திலிருந்து எதிர்க்க முடியாது. கலேயிலிருந்து விடப்படும் பீரங்கி குண்டுகள் 35 மயில் தூரம் பாய்ந்து இங்கிலாண்டின்பேரில் போய் விழமாட்டாது. ஜெர்மனியர்கள் கலேய்க்குள் நுழைந்து இங்கிலாண்டைப் பார்த்து கடுவதற்கு முந்தி பிரிடிஷ் கப்பல்படை கலேய் துறைமுகத்திற்கு வந்திருந்துகொண்டு கலேய்க்குள்ளிருக்கும்படியான ஜெர்மனியர்களைச் சுட்டுப்பொடியாக்கிவிடும். ஜெர்மனியர் ஆஸ்டண்டு நகரில் பட்டபாடு படுவார்கள். ஆதலால் இங்கிலாண்டின்பேரில் ஜெர்மனி பாயநினைத்திருந்தால் கனவிலும் நிறைவேற்ற முடியாத எண்ணம் என்பதில் ஐயமில்லை. இந்தியாவில் சில காலம் சேனாதிபதியாகயிருந்த லார்ட்ராபர்ட்ஸ்நம்முடைய இந்தியத்துருப்புகளை ஆவல்கொண்டு பார்க்கவந்தவிடத்தில் அவருடைய பிராணனையே விட்டுவிட்டார். இவ்வளவுதான் நவம்பர் மாசத்தில் மேற்கு யுத்தகளத்தில் நடந்த முக்கிய சமாசாரங்கள். மேற்கு யுத்தகளத்தில் நிச்சயமான வெற்றி யாதொன்றும் சொல்லக்கூடாத போனபோதிலும் கிழக்கு யுத்தகளத்தில் ருஷியர்கள் பலமுறை ஜெர்மனியரோடவும் ஆஸ்டிரியரோடவும் சண்டைசெய்து ஆயிரக்கணக்கான கைதிகளையும் பீரங்கிகளையும் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆசியா கண்டத்தில் ஜப்பானியர்கள் பிரிடிஷாருக்காகப் பரிந்து ஜெர்மனியருக்குச் சொந்தமான கயோச்சாவின்பேரில் படையெடுத்துச் சென்று அதைப் பிடித்துவிட்டார்கள். நவம்பர் மாதத்தில் நடந்த இரண்டு முக்கிய சம்பவங்கள் உண்டு. அவை என்னவென்றால் ஒன்று எம்டன் பிடிபட்டது. இரண்டாவது இங்கிலாண்டு துருக்கியின்பேரில் யுத்தம் கூறினது. எம்டன் என்னும் ஜெர்மன் சிறிய சண்டைக் கப்பல் இந்திய சமுத்திரத்தில் பல வியாபார ஸ்டீமர்களை வாயில் போட்டுக்கொண்டு இருக்கிறவிடம் வெளிவர விடாமல் ரகசியமாக அலைந்து திரிந்துகொண்டிருந்தது. அதனால் சமுத்திரத்தில் ஸ்டீமர்கள் போகும் மார்க்கம் சாவதானமற்று அபாயத்திற்குள்ளான நிலைமையிலிருந்தது. இக் காரணத்தை முன்னிட்டு வியாபார ஸ்டீமர்கள் ஒருவிடத்திலிருந்து மற்றொரு விடத்திற்குப் பிரயாணம் செய்ய முடியாமலிருந்தது. வியாபாரம் குன்றிப்போய் விட்டது. ஸ்டீமர் கம்பெனிக்காரர்கள் சரக்குகள் ஏற்றிக்கொள்ளுவதற்கு அதிகப்படியான அபாய இன்சூரன்ஸ் பணம் வியாபாரிகள்பேரில் விதித்துக்கொண்டு வந்தார்கள். எம்டன் சென்ற அக்டோபர் மாதத்தில் மினிக்காயிக்கு சமீபத்தில் வேட்டையாடி சில ஸ்டீமர்களை அமிழ்த்தினபிறகு ருஷிய



ருடைய சண்டைக் கப்பல் மாதிரியாக வேஷம்பூண்டுகொண்டு சாயங்கால வேளையில் பினாங் துறைமுகத்திற்குச் சென்றது. பினாங் துறைமுகத்தில் ருஷிய ஸ்டீமர் ஒன்றும், ஜப்பான் ஸ்டீமர் ஒன்றும் நங்கூரம் போடப்பட்டிருந்தன. இவைகள் பினாங் துறைமுகத்தை நோக்கி வந்த எம்டனை உள்ளபடி நேச அரசாங்கத்தாருடைய ஸ்டீமர் என்று எண்ணின. எம்டன் ஷெ இரண்டு கப்பல்களுக்கு சமீபத்தில் நெருங்கி பீரங்கியால் சுட்டு அவைகளை சமுத்திரத்தில் அமிழ்த்திவிட்டன. இதன்பிறகு சிலநாட்கள் வரையில் அது உலாவிக்கொண்டிருக்கும் விடம் தெரியாமலிருந்தது. பினாங்கு வேட்டைக்குப்பிறகு எம்டன் கோக்கோ தீவுகளுக்குச் சென்று அவ்விடத்தில் ஆஸ்டிரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் புணைக்கப்பட்டிருக்கும் சமுத்திரத் தந்திக் கம்பியை துண்டிக்க எத்தனித்தது. எம்டனைப் பிடிக்க ஆஸ்டிரேலியா கப்பல் படையும், பிரிடிஷ் கப்பல் படையும் எப்போது சமயம் வாய்க்குமென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்து அது விருக்கும் விடத்தை விசாரித்துக்கொண்டிருந்தபடியால் எம்டன் கோக்கோ தீவுக்கு வந்திருக்கிறதென்று ஆஸ்டிரேலியா கப்பல் படையைச் சேர்ந்த "சிட்னி" என்னும் சண்டைக் கப்பல் கேள்விப்பட்டு விரைவில் சென்று அதை தாக்கியது. "எம்டன்" சிட்னியைக் கண்டவுடன் ஓட்டம் எடுத்தது. ஆயினும் சிட்னி அதைவிடாமல் சண்டைக்கு இழுத்து இரண்டும் சண்டை போட்டதில் எம்டன் சேதப்பட்டுத் தரை தட்டிப்போய் விட்டது. இதன்பேரில் சிட்னியிலிருந்த ஆபிசர்கள் எம்டனுக்கு சென்று எம்டனிலிருந்த ஆபிசர்களை கைதிசெய்து தங்களுடைய ஸ்டீமரில் ஏற்றிக்கொண்டார்கள். எம்டன் ஆபிசர்கள் உலகம் திடுக்கிடும்படியான ஆச்சரியமான வேலை நடத்தினபடியால் அவர்கள் யுத்தவீரர் என்று எண்ணப்பட்டு அவர் கைதிசெய்யப்பட்ட பிறகும் அவருடைய கத்தி அவரிடமிருந்து பிடுங்கப்படவில்லை. எம்டனைத் தகர்த்தது ஒரு கௌரவமானபடியால் அதினுடைய சிகரம் ஆஸ்டிரேலியா கண்காக்ஷி சாலையில் கொண்டுபோய் வைக்கப்பட்டிருக்கிறது. எம்டன் பிடிபட்டதென்று முதலில் தந்தி வந்தபோது அதை எவரும் நம்பவில்லை. பிறகு அனுபோகத்தால் நம்பினார்கள். எம்டன் பிடிபட்டபிறகுதான் வியாபார மார்க்கம் சாவதான நிலைமையை அடைந்து வியாபாரம் ஏறக்குறைய எப்போதும்போல நடக்கத் தலைப்பட்டிருக்கிறது.

அதன் பிறகு இங்கிலாண்டு துருக்கியின் பேரில் யுத்தம் கூறியிருக்கும் விஷயத்தை எடுத்து எழுதுவோம். பால்கன் யுத்தத்திற்கு பிறகு ஜெர்மனி துருக்கிக்குக் கடன் கொடுத்து உதவியிருக்கிறது. மேலும் ஒரு ஜெர்மன் ஆபீசர் அதன் சேனைகளுக்கு சேனாதிபதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆகவே ஜெர்மனிக்கு துருக்கியில் அதிக செல்வாக்கு உண்டாய் விட்டதால் இந்த செல்வாக்கை பிரயோகப்படுத்தி இங்கிலாண்டிற்கும் ருஷியாவுக்கும் விரோதமாக துருக்கியை கிளப்பிவிட நீண்ட காலமாக தூண்டிக்கொண்டிருந்தது. துருக்கி சுல்தானும் இன்னும் மந்திரிகளில் வயது முதிர்ந்தோர்களும் இங்கிலாண்டிற்கு விரோதமாக சண்டைசெய்ய இணங்கவில்லை. ஆயினும் துருக்கியிலுள்ள பாலிய கக்ஷிக்காரர்கள் ஜெர்மனியர் கக்ஷியிலிருந்து இங்கிலாண்டிற்கு விரோதமாக சண்டைசெய்ய துருக்கியை கட்டாயப்படுத்தினார்கள். ஆதலால் துருக்கி சண்டைகப்பல் கருப்பு சமுத்திரத்தில் நின்றுகொண்டிருந்த ருஷிய சண்டைகப்பலைத் தாக்கினது. ஆகவே இங்கிலாண்டு துருக்கியின்பேரில் யுத்தம் கூறிவிட்டது. இந்தியாவில் அனேகமுஸ்லீம்பிரஜைகளிருக்கிறபடியால் ஒருக்கால் இங்கிலாண்டு துருக்கியின்பேரில் பாய்ந்திருப்பது அவர்களுக்கு மனவருத்தத்தை உண்டாக்குமென்று நினைத்து இந்தியாவின் வைசிராய் துருக்கி இங்கிலாண்டின் கோபத்தை மூட்டிவிடவேணுமென்று செய்துகொண்டு வந்த அக்கிரமச் செய்கைகளை எல்லாம் எடுத்துச்சொல்லி ஒரு பயிரங்கமான விளம்பரம் பிரசுரித்தார்கள். ஆகவே இந்தியாவில் உள்ள முஸ்லீம்கள் எல்லோரும் துருக்கி இங்கிலாண்டுபேரில் யுத்தம் செய்தபோதிலும் தாங்கள் எப்போதும்போல ராஜவிசுவாச முடையவர்களாக விருப்பதாக உறுதியான வாக்களித்திருக்கிறார்கள். ஆப்கன் தேச அமீரும் பெர்ஷியா தேசத்து அரசரும் யுத்தத்தில் எந்தக் கக்ஷியிலும் சேராமல் நடுநிலைமையிலிருப்பதாக கூறியிருக்கிறார்கள். ஈஜிப்டில் கக்ஷிக்காரர்களுக்குள்ளிருந்த கொஞ்சம் கொஞ்ச விரோதம்கூட பரந்துபோய் எல்லோரும் ஒன்று சேர்ந்து பிரிடிஷ் சிம்மாசனத்தின் பேரில் உண்மையான பக்தி செலுத்தி வருகிறார்கள். ஐதராபாக்கம் நிஜாம் அரசரும் போப்பால் சாகேப் ஜாடாவும் துருக்கியிடம் அனுதாபம் கட்டாமல் பிரிடிஷாரிடம் எப்போதும்போல ராஜபக்தி செலுத்திவருவதாக பயிரங்கமாக கூறியிருக்கிறார்கள். ஆகவே துருக்கியை இங்கிலாண்டின்பேரில் கிளப்பிவிட்டால் துருக்கிக்குச் சார்பாக இந்திய முஸ்லீம்கள் இந்தியாவில் கலகம்செய்ய ஆரம்பித்து விடுவார்கள் என்றும் அந்த சந்தில் தாம் நுழைந்து இங்கிலாண்டை எதிர்த்து வெற்றி பெறலாம் என்றும் கேய்சர்கொண்ட எண்ணம் எல்லாம் மண்ணாகப் போய்விட்டது.

துருக்கி முழுமனதுடன் யுத்தம் செய்தபோதிலும், துருக்கி ஏகாங்கியாய் யுத்தத்தை நடத்துவதற்கு அதற்குப் போதுமான பணஜேவேஜியுமில்லை, படையுமில்லை. முதலாவது துருக்கி அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கும் பட்டாள ஆபீசர்களுக்குமே மாதச்சம்பளம் சரியாக பட்வாடா செய்ய துருக்கி வகையற்றுயிருக்கிறது. சண்டைசெய்ய போகும்

சோல்ஜர்களுக்குக்கூட உடுப்பு சப்ளை செய்ய ஐவேஜி அற்றிருக்கிறது. எல்லாம்கூடி அதற்கு இருக்கும் சண்டைக் கப்பல்கள் எல்லாம் இப்போது சமீபத்தில் வாங்கினதாகச் சொல்லப்படும் "கோபான" "பிரஸலா" வைத் தவிர 11-சிறிய குருசர் சண்டைக் கப்பல்களும் இரண்டொரு பெரிய யுத்த கப்பல்களுமிருக்கின்றன. ஆனால் இவைகள் எல்லாம் பழையகால கப்பல்கள். அதனுடைய சேனைக்கு ஜெர்மன் ஆபீசர் சேனாதிபதியாகயிருந்தபோதிலும் அந்த சேனையால் வெற்றி அடைய முடியாதென்று பால்கன் யுத்தத்தில் துருக்கி அடைந்த அபஜெயத்தால் நன்குவிளங்குகின்றது. ஆதலால் துருக்கி ஜெயமடைய வேண்டுமென்றால் ஜெர்மனியருடைய உதவியைக்கொண்டு வெற்றி பெற்றால் பெறக்கூடும். ஜெர்மனியரே கஷ்டப்பட்டு திண்டாடித் தெருவில் நிற்கிறபோது துருக்கிக்கு எப்படி உதவி செய்யக்கூடும். ஜெர்மனியின் அனேக ஜெனரல்கள் இந்த யுத்தத்தில் மாண்டு போய்விட்டார்கள். சண்டைபோடும் துருப்புகள் பெரும்பாலும் மாண்டுபோய் ஜெர்மன் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களும் மாணுக்கர்கள் கூட யுத்தத்தில் கலந்து சண்டைசெய்து வருகிறார்கள். கேய்சார் கத்தியை உறையில் போடமாட்டோம் என்று பூமியில் நின்றுகொண்டிருந்த தம்முடைய ஜனங்களை பார்த்து சொன்னார். இப்படி சொல்லி ஆத்திரப்பட்டு அவசரமாய் தெய்வமே என்று நடுநிலைமையாகவிருந்த பெல்ஜியத்தின்பேரில் தம்முடைய சேனைகளை ஏவினார். முடிவில் அவருடைய ஆத்திரமும் அவசரமும் என்னமாய் முடிந்ததென்றால் அவருடைய சேனைகளும், ஆபீசர்களும், தேசவியாபாரமும் மாண்டுபோய் கடைசியில் ருஷியர்கள் ஜெர்மனிக்குள் நுழைந்து ஜெர்மனியையே பிடித்துவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சி ஜெர்மனியின் எல்லையோரங்களை முன் ஜாக்கிறதையாக அரண்செய்து கொண்டிருக்கும்படியான கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டார். பிரிடிஷ் சக்ரவர்த்தி, ருஷியாவும் பிரான்சும் யுத்தத்தில் கலந்துகொண்ட பிறகு தாம் "டிரிப்பில், என்டேட்டி" என்னும் உடன்படிக்கையின்படி யுத்தத்தில் கலந்துகொள்ள கட்டுப்பட்டவராகவிருந்தும் அப்படி கலந்துகொள்ள சம்மதமற்றவராயிருந்தார்கள். ஆனால் பெல்ஜியத்தில் ஜெர்மன்படை நுழைந்த பிறகு "பெல்ஜியத்தைக் காப்பாற்றுகிறோம்" என்று ஆதியில் பெல்ஜியத்திற்குக் கொடுத்திருந்த வாக்கு தானத்தை அதாவது சத்தியத்தை நிறைவேற்றுவதற்காக பிரிடிஷ் சக்ரவர்த்தியும் யுத்தத்தில் கலந்து கொள்ளும்படியாக கட்டாயப் படுத்தப்பட்டார்கள். வெற்றியாருக்கு உண்டாகும்? சத்தியம் காப்பாற்றுவதற்காக சண்டைபோடும் இங்கிலாண்டுக்கா? அல்லது சத்தியத்தைப் புறக்கணித்த ஜெர்மனிக்கா ஜனங்களே நீங்கள் சொல்லுங்கள்!


## நோய்க்கிடங்கொடேல்.

சூரியனைக்கண்ட பனிபோல் சகலவித நோய்களையும் பறக்கடிக்கும்

சஞ்சீவியான "பெயினலீன்" பாம் தைலம்.

இடுப்புவலி, தலைநோய், சழுத்திழுப்பு, தொண்டைநோய், மார்பு நோய், மார்புசளி, சளுக்கு, பல்நோய், காதுநோய், முகஜன்னி, கை கால் பிடிப்பு, திமிர்வாய்வு, கப இருமல், ஜலதோஷம், பிடரிவலி, பார்ஸ்வாய்வு முதலிய நோய்களினால் உபத்திரவப்படுகிறவர்களுக்கு குணத்தையளிக்கும், மருந்து "பெயினலீன்" (தி பெஸ்ட் பாம்) எனப் பெயர் பூண்ட தைலமே. இந்தப் "பெயினலீன்" தான் கொண்ட பெயருக்குத் தக்கபடி நோய்களை அதிக சீக்கிரத்தில் நோயின் மூலகாரணத்தைக் கண்டுபிடித்து வேரோடு நிர்மூலமாக்குகிறது. இதை ஒருமுறை உபயோகித்தால் அதன் குணம் தெரியும்.

விலை புட்டி 1-க்கு பெரியது அணு 10.
சிறியது அணு 6. வி. பி. சார்ஜ் 4.

மாதிரி வேண்டுமானால் ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பினால் அனுப்பப்படும்.

### வாந்திபேதி நிவாரணி.

இது வாந்திபேதிக்கும், அஜீர்ணபேதிக்கும் எடுத்த திராவகம் இதன் பரிமளமே பேதியைக் கிட்டணுகாதுகாற்கும் இதை ஒவ்வொருவரும் ஆபத்துக்குதவும் சஞ்சீவியாகக் கையிருப்பில் வைத்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

இதன் விலை புட்டி 1-க்கு அணு 12.

### மூலிகைகளால் செய்த பற்பொடி.

இதை உபயோகிப்பதால் பல்லிலிருந்து ரத்தம் விழாது பற்கள் உறுதியாகும், பற்களைச் சுத்தப்படுத்தி முத்துபோல் பளபளப்பாக்கச்செய்யும் வாய்நாற்றம் நீங்கும், பல்வலிபோகும்.

இதன் விலை டப்பி 1-க்கு அணு 4.

### சுர சம்ஹாரி.

இது முறைசுரம், தொந்தசுரம், விடாசுரம், மலேசுரம்முதலான எல்லாவிதசுரங்களுக்கும் சஞ்சீவி.

இதன் விலை டப்பி 1-க்கு அணு 8.

### படை சம்ஹாரி.

இது சுடி அல்லது படை என்று சொல்லப்படும் கொடிய நோய்க்கு மருந்து நெடுநாளான படையாயிருந்தாலும் போக்கடிக்கும்.

இதன் விலை டப்பி 1-க்கு அணு 4.

### வீரியவிர்த்தி பூஷணம்.

இது நரம்பைப் பற்றினவும் சிரஸைப்பற்றினவுமான தளர்ச்சிக்கு ஒப்புயர்வற்ற மருந்து இது எல்லாவித பலஹீனர்களுக்கும், புஷ்டிக்கும் எடுத்த மருந்து. புட்டி 1-க்கு விலை ரூபா 1.

இன்னும் எதாகிலும் மருந்து தேவையிருந்தால் எங்களுக்கு எழுதி அதைப்பெற்றுக்கொள்ளலாம்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

M. C. AGENCY,
72, Nattu Pillayar Coil St.,
Sowcarpet Post Madras.




# Current Cases.

## நடைமுதல் வியாஜ்ஜியங்கள்.

—:o:—

## MADRAS HIGH COURT.

## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

(1)

### A SOCIAL REFORM CASE.

### ஆசார சீர்திருத்த சம்பந்தமான கேஸ்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் ஹானே.

வியாஜ்ஜிய சங்கிரகம்:—வாதி பிரதிவாதி கர்நூலில் வசிப்பவர்கள்; பிரமாண ஜாதியார். பிரதிவாதியின் கிருகத்தில் ஒரு சிரார்த்தம் நடந்தது. பிராமணார்த்தத்திற்காக வாதியைக் கூப்பிட்டிருந்தார். பிரதிவாதி வீட்டிற்குப் போயிருந்தபோது "நீர் ஓடிப்போம் நீர் விதவை விவாகம் நடந்த வீட்டில் போஜனம் செய்திருக்கிறீர். நீர் இந்த சிரார்த்தத்திற்காக வந்திருக்கும் மற்ற பிராமணர்களோடு கலந்தால் அவர்கள் என்னுடைய வீட்டில் போஜனம் செய்யமாட்டார்கள்" என்று சொன்னார். ஆகவே வாதி பிரதிவாதியின்பேரில் கர்நூல் டி. மு. கோர்ட்டில் நஷ்டதாவா கொண்டுவந்தார்.

டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

பிரதிவாதி கர்நூல் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—பிரதிவாதி வாதியைப் பார்த்து சொன்னது அவதூரும் ஆகமாட்டாது அல்லது மான நஷ்டமும் ஆகமாட்டாதென்று சொல்லி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

பிரதிவாதி ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—ஒரு பிராமணனை "விதவை விவாகத்தில் சாப்பிட்டவன் என்று சொல்லுவது நிந்தனையாகமாட்டாது. அந்த வார்த்தைகளே வாதி பிசகான மனிதன் என்று எண்ணப்படுவதற்கு இடம் கொடுக்கமாட்டா. அல்லது வாதி ஜாதி பிரஷ்டை செய்யப்பட்டவன் என்றும் குறிப்பிடமாட்டா என்று தீர்மானித்தார்கள். தற்கால பிராமணர்களுக்குள் இரு வகுப்பார் இருக்கிறார்கள். ஒன்று ஆசார சீர்திருத்தக் கக்ஷியார். மற்றொருவர் வைதீக கக்ஷியார். சீர்திருத்தக் கக்ஷியில் சேர்ந்திருப்பவர்கள் அப்படிச் சேர்ந்திருப்பதை முன்னிட்டு பிராமணர்களாக விருப்பதை விட்டுவிடவுமில்லை. ஜாதியையும் இழந்துபோகவில்லை. பிரதிவாதியைப் பார்த்து சொன்ன வார்த்தைகள் மற்றவர் முன்னில் அவ்ரை அகௌர்வப் படுத்தக்கூடியனவாயிராததால் அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கிறோம்" என்று தீர்ப்பு சொன்னார்கள்.

---

(2)

### வண்டி குடக்கவிழ்ந்து விழுந்த கேஸ்.

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

தென்னிந்தியா ரயில்வே சம்பெனி ஏஜண்டு

*vs.*

இந்தியா காரியதரிசி.

வியாஜ்ஜியச் சுருக்கம்:—தென் இந்தியா ரயில்வே கம்பெனியாரைச் சேர்ந்த மிஸ்டர் காக்ராபட்டும், மிஸ்டர் டி. ஜி. மாக்குளோயின் ஆகிய இந்த இரண்டு ஆபீசர்களும் கள்ளிக்கோட்டையில் ஒரு ஜட்கா வண்டியில் ஏறிக்கொண்டு மராமத்து இலாக்காக்காரர்களாய் நிர்வகித்து வரப்படும் ஒரு ரோட்டின் வழியாகச் சென்றார்கள். ரோட்டின் நடுவே கப்பிக்குவியல் ஒன்று குவித்து வைக்கப்பட்டிருந்தது. வண்டியில் அந்தக் குவியல் மோத மேற்படி இரண்டு ஆபீசர்களும் காயம்பட்டார்கள். ஆகவே மேற்படி இரண்டு ஆபீசர்களும் வடமலபார் ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் இந்தியா காரியதரிசிபேரில் நஷ்டதாவா கொண்டுவந்தார்கள்.

பிரதிவாதியின் ஆக்ஷேபனை:—கப்பி அலக்ஷியமாய் அந்தவிடத்தில் குவிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் அப்படி ஏதேனும் அலக்ஷியமாக குவிக்கப்பட்டிருக்கிறதென்று ஏற்பட்டால் அந்த அலக்ஷியத்திற்கு உத்திரவாதம் சொல்லக் கடமைப்பட்டவர் சர்க்கார் உத்தியோகஸ்தரல்லாத மராமத்து இலாக்காவின் கண்டிராக்டர் என்றும் வாதிகளும் வண்டியை அலக்ஷியமாக விட்டுக்கொண்டு போயிருக்கிறார்கள் என்பதே.

ஜில்லா ஜட்ஜி கோர்ட்டார் தீர்ப்பு:—வாதிகளுக்கு முறையே ரூ. 1000 க்கும் ரூ. 250க்கும் டிக்கிரி கொடுத்தார்கள்.

பிரதிவாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காகப் பப்ளிக் பிராசிக்யூட்டரும், அப்பீல் பிரதிவாதிகளுக்காக மிஸ்டர் டி. நரசிம்ம அய்யங்காரும் ஆஜரானார்கள்.

ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:—இந்தியா காரியதரிசி தரப்பில் பப்ளிக் பிராசிக்யூட்டர் ஆஜராகி கவர்ன்

மெண்டார் ரோடுகளை நிர்வகித்து வருவது லாபத்தைக் கொடுக்கும்படியான வியாபார மாகமாட்டாதென்றும் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுடைய அலக்ஷியத்தால் வாதிகளுக்கு உண்டாயிருக்கும் காயங்களுக்கு கவர்ன்மெண்டார் பாத்தியப்பட்டவர்களல்லவென்று கக்ஷி சொன்னர். கோர்ட்டார், பொது ஜனங்களுடைய நன்மைக்காக ரோடுகளைப் போட்டு நிர்வகித்து வருவது வியாபார சம்பந்தமான சுபாவமுடைய காரியமல்ல. ஆனல் முழுதிலும் கவர்ன்மெண்டாருடைய கடமை என்றும் அப்பேர்ப்பட்ட கடமை சக்ரவர்த்தியாருக்கும் அதிகாரதோரணையை முன்னிட்டு செய்யப்பட்டு வருகிறதென்றும் ஆதலால் கவர்ன்மெண்டாருடைய வேலைக்காரர்களின் அலக்ஷியத்தால் உண்டாயிருக்கும் காயங்களுக்கு நஷ்டம் கட்டிக்கொடுக்க கவர்ன்மெண்டார் அல்லது இந்தியா காரியதரிசி கட்டுப்பட்டவர்களல்லவென்று காரணம் சொல்லி கீழ்க்கோர்ட்டாருடைய தீர்ப்பை மாற்றிவிட்டார்கள். பிரதிவாதி அப்பீலில் சொன்ன கக்ஷியை அசல் கோர்ட்டில் சொல்லாததை முன்னிட்டு பிரதிவாதிக்கு செலவுதொகை கொடுக்கப்படும்படி கோர்ட்டார் உத்திரவு செய்யவில்லை.

---

(3)

மலையாளம் முக்கொலைக்கேஸ்.

ஜட்ஜிகள்:—சர். C. சங்கரநாயர்
ஜட்ஜி மிஸ்டர் ஹானே.

கேசின் விபரம்:—தென் மலையாளம் செஷன் ஜட்ஜியால் கோயில்நாதன் என்பவன் கொலைக்குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டான். குற்றவாளியின் ஜாதியைச் சேர்ந்த ஒரு விவாகமாகாத பெண்ணுகிய வள்ளி என்பவள் ராமன் என்பவனுடன் சிநேகமாயிருந்து கர்ப்பவதியாயினள். ஆதலால் இவள் ஜாதியைவிட்டு தள்ளப்படும் தருவாயிலிருந்தாள். குற்றவாளி அந்த சமயத்தில் ஒரு தகுந்த யோஜனை சொன்னன். அதென்னவென்றுல் வள்ளியினுடைய தமக்கை புருஷனுகிய பரஞ்சே என்பவனை விவாசம் செய்துகொண்டால் குழந்தை பிறந்தால் அவனுக்குப் பிறந்ததென்று ஊரார் எண்ணிக்கொள்ளுவார்கள் என்றும் வள்ளிக்கு அபகீர்த்தியான பெயர் உண்டாகமாட்டாதென்றும் யோஜனை சொன்னர்கள். குற்றவாளி யோஜனையின்படியே விவாகமும் நடந்தது. குழந்தையும் பிறந்தது. ஆனல் "ஆடு மலையேறி மேய்ந்தாலும் குட்டி கோனுனுடையது" என்பது போல குழந்தை ராமனுடையதென்று ஊரில் உள்ள ஜனங்கள் பிரஸ்தாபித்துக்கொண்டு வந்தார்கள். ஆதலால் மேலும் வள்ளியும் வள்ளியினுடைய தாயார் காளியும் கூடி யோஜனை செய்தார்கள். அந்த யோஜனை என்னவென்றுல் வள்ளி குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் குற்றவாளியின் வீட்டில் எரிந்துவிட்டு குற்றவாளிதான் அக் குழந்தைக்குத் தகப்பன் என்று கூவிவிட்டு அச்சமயம் ஒரு பந்துவின் வீட்டில் விவாகத்திற்காக கூடியிருந்த கூட்டத்தாருக்குச் சொல்லிவிட்டு வந்துவிட வேண்டுமென்று யோஜனை செய்தார்கள். வள்ளியும் அவளுடைய தாயாரும் பாலகனை எடுத்துக்கொண்டு குற்றவாளியின் வீட்டிற்குப் போய் வைத்தார்கள். இந்த செய்கையைக் கண்டவுடன் குற்றவாளிக்குத் திடீரென்று கோபம் பிறந்து அரிவாளை எடுத்து மூன்று பேர்களையும் வெட்டிப் போட்டான். அந்த நிமிஷமே மூவரும் இறந்துபோய் விட்டார்கள்.

கேசின் நடவடிக்கை:—செஷன் கோர்ட்டாரால் விதிக்கப்பட்ட மரண தண்டனை ஐக்கோர்ட்டாரால் உறுதிப் படுத்தப்படவேண்டியதாயிருக்கிறபடியால் செஷன் கோர்ட்டார் இந்தக் கேசை ஐக்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பினர்கள். குற்றவாளியும் செஷன் கோர்ட்டார் விதித்த தண்டனைக்கு விரோதமாக அப்பீல் செய்துகொண்டான்.

குற்றவாளியின் லாயர் பேசினது:—குற்றவாளிக்காக அட்வோக்கேட் மிஸ்டர் N. வெங்கடாச்சாரியார் ஆஜராகி வள்ளியின் மானத்தை குற்றவாளி காப்பாற்ற எத்தனித்ததை வள்ளி மறந்துவிட்டு ராமனுடைய பேச்சைக்கேட்டுத தன்னையே அவமானப் படுத்தியதில் அவனுக்குத் திடீரென்று கோபம் பிறந்து கொலைக்குற்றத்தைச் செய்திருக்கிறுன் என்றும் ஆதலால் அவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை சற்று குறைக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டார். கோர்ட்டார் தூக்கு தண்டனையை தீவாந்திர தண்டனையாக மாற்றினர்கள்.

---

(4)

புருச்சண்டை மரணக்கேஸ்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சங்கரநாயர்
ஜட்ஜி மிஸ்டர் ஹானே.

கேசின் விபரம்:—கொலை என்று சொல்ல முடியாத கொலைக் குற்றத்தைச் செய்ததாக கோதாவரி செஷன் ஜட்ஜியால் குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு 6 வருட கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்ட சந்நியாசி என்பவனுல் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. கேசின் விபரம் என்னவென்றுல்:—கோதாவரி கைத்தொழில் சாலையில் வேலை செய்துகொண்டிருக்கும் 7 பேர்கள் குற்றஞ் சாட்டப்பட்டு செஷனுக்கு கமிட் செய்யப்பட்டார்கள். இந்த அப்பீலைச் செய்துகொண்டிருக்கிற சந்நியாசி இரண்டாவது குற்றவாளி. இவன்பேரில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டது. பாக்கி 6 பேர்களும் காயம் விளைவித்த குற்றத்திற்காக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்கள். இவர்கள் எல்லாம் சேர்ந்து அப்பளாசாமி என்னும் பெயர்கொண்ட ஒருவனை கடந்த மார்ச்சுமீ 2உ அடியோ தண்டமாக அடிக்க அவனுடைய மண்டையும் மூளையும் நொருங்கிப் போய் இரண்டுமணி நேரத்திற்குள் இறந்துபோய் விட்டான். குற்றவாளிகள் இறந்துபோனவனை அடிப்பதற்குக் காரணம் என்னவென்றுல் சில பையன்கள் புருக்களை முன்னிட்டு சண்டை போட்டுக்கொண்டதே, குற்றம் நடப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முந்தி இறந்துபோன அப்பளாசாமியின்பேரிலும் இன்னும் இருவர்பேரிலும் ஒரு கிரிமினல் பிரியாது தாக்கல் செய்யப்பட்டிருந்தது. கொலைக்குற்றம் நடந்த சமயத்தில் இந்தப் பிரியாது மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரால் விசாரணை செய்யப்பட்டுக்கொண்டிருந்தது. குற்றம் நடந்ததினத்தில் இறந்துபோனவனும் இன்னொருவனும் தங்களுடைய வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள். போகும் வழியில் 1, 2, 3 குற்றவாளிகள் மறைந்துகொண்டிருந்து கொம்புகளுடன் திடீரென்று வந்து அப்பளாசாமியைத் தாக்கினர்கள். இரண்டாவது குற்றவாளி அவனுடைய தலையில் ஒரு பலமான அடி அடித்தான். அவன் "பாபு! நான் செத்தேன்" என்று சொல்லிக்கொண்டு கீழே விழுந்தான். செஷன் விசாரணையில் 2-வது குற்றவாளி கடுங்காயம் விளைவித்த குற்றத்தைச் செய்திருக்கிறுன் என்றும் மற்ற குற்றவாளிகள் குற்றத்தைச் செய்யவில்லை என்றும் அபிப்பிராயம் கூறினர்கள். செஷன் ஜட்ஜி இரண்டாவது குற்றவாளியின்பேரில் கொலையாகாத கொலைக்குற்ற ஸ்தாபனை செய்து அவனுக்கு 6-வருட கடினகாவல் தண்டனையும் 3-வது குற்றவாளியின்பேரில் காயம் விளைவித்த குற்றம் ஸ்தாபனை செய்து 6 மாத கடுங்காவல் தண்டனையும் விதித்தார்கள். மற்றவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

ஐக்கோர்ட்டில் இரண்டாவது குற்றவாளியின் லாயராகிய ராவ்சாகேப் ஜி. வெங்கடராமய்யா ஆஜராகி 2-வது குற்றவாளி அடித்த அடியால் அப்பளாசாமி இறந்துபோய்விட்டான் என்று பிராசிக்கியூஷன் தரப்பார் ருஜுப்படுத்தவில்லை என்று எடுத்துப் பேசினர்.

தீர்ப்பு:—கோர்ட்டார் 2-வது குற்றவாளியின் பேரில் காயம் விளைவித்த குற்ற ஸ்தாபனை செய்து 6 வருட கடினகாவல் தண்டனையை 18 மாத கடுங்காவல் தண்டனையாக குறைத்துப் போட்டார்கள்.

---

(5)

வடகலைத் தென்கலைக் கேஸ்.

ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்.

கேசின் விபரம்:—1913-ம் வருடம் மே மாதம் 10தேதி காஞ்சிவரத்தில் நடந்த உடையவர் சாத்துமுறை உற்சவத்தில் வடகலையைச் சேர்ந்த சேஷாச்சாரியும் இன்னும் 5 பேர்களும் கலகம் செய்ததாக காஞ்சிவரம் சப் மாஜிஸ்டிரேட்டாரால் குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு தலைக்கு 10-ரூபாய் வீதம் அபராதம் விதிக்கப்பட்டார்கள். குற்றவாளிகள் கிரிமினல் ரிவிஷன் மனு தாக்கல் செய்தார்கள். ௲௦௰௯ '

பிராசிக்கியூஷன் தரப்பாருடைய கக்ஷி என்னவென்றுல் உடையவர் ஆலயத்திற்குள் வந்து சேர்ந்தபிறகு வடகலையார் திருவாய்மொழி சொல்ல ஆரம்பித்தபோது கலகம் நடந்தது என்பதே. மனுதாருக்காக ஆஜரான வக்கீல் என்ன சொன்னர் என்றுல் வடகலையாரும் ஒரு எதிர்ப்பிரியாது செய்திருந்தார்கள் என்றும், இந்தக் கேசில் தென்கலையார்களின் டிபன்ஸ் தரப்பு சாக்ஷிகள் சொன்ன வாக்குமூலத்தை சப் மாஜிஸ்டிரேட் நம்பி குற்ற ஸ்தாபனை செய்து தண்டித்திருக்கிறுர் என்றும் இந்த வாக்குமூலங்களைத் தவிர மனுதார்கள் (வடகலையார்) பேரில் வேறே சாக்ஷியம் கிடையாதென்றும் ஆகையால் அந்த வாக்குமூலங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு தண்டித்தது சட்ட விரோதம் என்பதே.

தீர்ப்பு:—கோர்ட்டார் பப்ளிக் பிராசிக்கியூட்டர் சொன்ன கக்ஷியை கேட்டுக்கொண்ட பிறகு மனுதாருடைய வக்கீல் எடுத்துப் பேசிய கக்ஷி வாதத்தை அங்கீகரித்துக்கொண்டு நான்கு குற்றவாளிகள் சம்பந்தப்பட்டவரையில் குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் ரத்து செய்து இரண்டு அர்ச்சகர்கள் சம்பந்தப்பட்டவரையில் அவர்கள்பேரில் குற்றம் ருஜுப்பட்டுப் போயிருப்பதால் குற்ற ஸ்தாபனையையும் தண்டனையையும் உறுதிப்படுத்தினர்கள்.

---

## பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்டு.

—:o:—

(6)

ஸ்டீமர் கொலைக்கேஸ்.

மாஜிஸ்டிரேட்:—கான்சாகேப் முகமத்
பசுல்லா சாகேப்.

கேசின் விபரம்:—சென்னைத் துறைமுகத்திற்கு வந்திருக்கும் S. S. யுமேடா என்னும் ஸ்டீமர் சிப்பந்திகளில் ஒருவனுகிய நூர் முகமத் என்பவனை சென்ற மாதம் 8-ந்தேதி இரவு ஸ்டீமரிலிருந்து தூக்கி சமுத்திரத்தில் எறிந்து கொலைக்குற்றத்தைச்

செய்திருப்பதாக குட்டிலிங்கம், கோபாலன், மதுரை ஆகிய மூன்று சாமான் கூலிகள் குற்றம் சாட்டப்பட்டார்கள்.

கேசின் நடவடிக்கை:—ஸ்டீமரின் முதல் ஆபிசர் இரண்டாவது ஆபிசர் முதலான பலபேர் சாக்ஷி விசாரணை செய்யப்பட்டார்கள்.

உத்திரவு:— குற்றம் ருஜுப்படவில்லை என்று மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளை விட்டு விடும்படி உத்திரவு செய்தார்கள்.

---

## சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு.

—:o:—

(7)

ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவும் வாய்மொழியான சாக்ஷியமும்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்
ஜட்ஜி மிஸ்டர் ஹானே.

கேசின் விபரம்:—ஒரு ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களுக்கு விரோதமாக வாய்மொழியான சாக்ஷியத்தை ஏற்றுக்கொள்ளக் கூடுமா என்கிற பிரஸ்னை சம்பந்தப்பட்ட ஒரு அப்பீல் விசாரணைக்கு வந்தது. அப்பீலின் விபரம் என்னவென்றால் வாதியினுடைய சிறிய தகப்பனார் பெயரால் ஒரு அடமானப் பத்திரம் பிறந்திருந்தது. குடும்ப பாகப்பிரிவினையில் இந்த அடமானப் பத்திரம் தன்னுடைய தகப்பனுருடைய பாகத்திற்கு விழுந்ததென்று வாதி சொல்லி அந்த அடமானப் பத்திரத்தின் தொகையை வசூல் செய்ய வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். கீழ்க்கோர்ட்டில் வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டதில் பாகப் பிரிவினைப் பத்திரத்தில் பிரஸ்தாப அடமானப் பத்திரமே காணப்படவில்லை. ஆயினும் அந்த அடமான ஆதரவு தன்னுடைய தகப்பனுருடைய பாகத்திற்கு விழுந்ததென்று வாதி ருஜுப்படுத்த எத்தனித்தார். கீழ்க் கோர்ட்டார் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவுக்கு விரோதமாக வாய்மொழி சாக்ஷியம் இந்தியன் சாக்ஷி சட்டம் 92-வது பிரிவின்படி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாதென்று வாதியின் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். வாதி ஐக்கோர்ட்டில் இரண்டாவது அப்பீல் செய்துகொண்டார். அப்பீல்வாதியின் லாயர் ஒரு கக்ஷி சொன்னார். அதாவதென்னவென்றால் இந்தியன் சாக்ஷி சட்டம் 92-வது பிரிவின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவில் சம்பந்தப்பட்ட விஷயங்களுக்கு விரோதமாக வாய்மொழி சாக்ஷியம் சொல்லி ருஜுப்படுத்தக்கூடாது ஒழிய அந்த ஆதரவில் சம்பந்தப்பட்டவனுக்கும் சம்பந்தப்படாத ஒரு அன்னியனுக்கும் நடந்துகொண்டுவரும் வியாஜ்ஜியத்தில் அந்த ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஆதரவுக்கு விரோதமாக சாக்ஷியம் சொல்லி ருஜுப்படுத்தக் கூடுமென்று எடுத்துச் சொன்னார்.

தீர்ப்பு:—கோர்ட்டார் அப்பீல் வாதியின் லாயர் சொன்ன கக்ஷியை ஏற்றுக்கொண்டு கீழ்க் கோர்ட்டாருடைய டிக்கிரியை மாற்றி வியாஜ்ஜியம் விசாரணை செய்யப்பட்டு சட்டப்படி பைசல் செய்யும்படியாக அந்த கீழ்க் கோர்ட்டிற்கு அனுப்பும்படி உத்திரவு செய்தார்கள்.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் T. R. சுப்பிரமணிய அய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் ஜெகந்நாத அய்யரும் ஆஜரானார்கள்.

---

(8)

சிவசமுத்திரக் கொலைக்கேஸ்.

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் ஏய்லிங்
ஜட்ஜி மிஸ்டர் குமாரசாமி சாஸ்திரி.

கேசின் விபரம்:—இந்தக் கேசில் யூசேப் காதர் உசேன் என்கிற முகமதியன் கடந்த ஜூன்மீ 7௳ சிவசமுத்திரத்தில் தன்னுடைய பெண்சாதியைக் கொன்றுவிட்டதாக குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டு கோயமுத்தூர் செஷன் ஜட்ஜியால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டான். பிராசிக்கியூஷன் தரப்பார் சொன்ன கொலையின் வரலாறு என்னவென்றால் கொலை நடந்த தினத்தில் குற்றவாளி தன்னுடைய பெண்சாதியுடன் பிராசிக்கியூஷன் தரப்பு 4-வது சாக்ஷி உசேன் சாகேப் வீட்டில் வசித்துக்கொண்டிருந்ததாகவும் அவனுடைய மாமனார் சிவசமுத்திரத்தில் நோயாயிருப்பதாகவும் அவர் தன்னுடைய புத்திரியைப் பார்க்க விரும்புகிறதாக சொல்லி தன்னுடைய பெண்சாதியை தன்னுடைய கிராமமாகிய கொல்லேகாலிலிருந்து சிவசமுத்திரத்திற்கு அழைத்துக்கொண்டு போனான் என்பதே. குற்றவாளி தன்னுடைய பெண்சாதியை சிவ சமுத்திரத்திற்கு அழைத்துக்கொண்டு போனபோது வழியில் பலர் அவனைககண்டு கேட்டதற்கு பள்ளி வாசலில் நடக்கிற ஒரு திருவிழாவிற்கு அழைத்துக் கொண்டு போகிறதாக பதில் சொல்லியிருக்கிறான் என்று பிராசிக்கியூஷன் தரப்புகள் சொல்லும் வாக்குமூலத்தால் ருஜுப்படுகிறது. சிவசமுத்திரத்திலிருந்து திரும்பி வரும்போது அவனுடன்கூட அவன் பெண்சாதியுமில்லை என்று ருஜுப்பட்டிருக்கிறது.

குற்றவாளியின் பெண்சாதி குற்றவாளியுடன் கடைசியாகப் பார்க்கப்பட்டாள் என்றும் ஆதலால் குற்றவாளியே அந்தக் கொலையை நடத்தியிருக்கிறான் என்று செஷன் கோர்ட்டார் தீர்மானித்து மேலே சொன்னபடி தண்டனை விதித்தார்கள்.



ஐக்கோர்ட்டு அப்பீலில் குற்றவாளியின் லாயர் சொன்ன கக்ஷி என்னவென்றால் கொலை செய்ததை கண்ணால் பார்த்த சாக்ஷியம் இந்தக் கேசில் இல்லை என்றும் அனுமான சாக்ஷியத்தை ஆதாரமாகக் கொண்டு குற்ற ஸ்தாபனை செய்யப்பட்டிருக்கிறதென்றும் பிராசிக்கியூஷன் தரப்பார் குற்றத்தை சந்தேகம் நீங்க ருஜுப்படுத்தவில்லை என்றும் ஆதலால் சந்தேகத்தின் நன்மையை குற்றவாளிக்குக் கொடுத்து அவனை விடுவித்து விடுவதற்கு இது தகுந்த கேஸ் என்றும் மேலும் தடாகத்திலிருந்து பிரேதம் எடுக்கப்பட்டிருக்கிறபடியால் குற்றவாளி இல்லாத சமயத்தில் அவனுடைய பெண்சாதி தவறி அதில் விழுந்து இறந்துபோயிருக்கக்கூடும் என்று எடுத்துப் பேசினார்.

தீர்ப்பு:—கோர்ட்டார் குற்றவாளியின் வக்கீல் எடுத்துச் சொன்ன கக்ஷியை ஏற்றுக்கொண்டு பிராசிக்கியூஷன் தரப்பார் சந்தேகமில்லாமல் குற்றத்தை ருஜுப்படுத்தவில்லை என்றும் ஆதலால் சந்தேகத்தின் நன்மையை அடைய குற்றவாளி பாத்தியமுடையவன் என்றும் தீர்மானித்து அவனை விடுவித்துவிடும்படி தீர்ப்பு சொன்னார்கள்.

லாயர்கள்:— கவர்ன்மெண்டு தரப்பிற்குப் பப்ளிக் பிராசிக்கியூட்டரும் குற்றவாளி தரப்பிற்கு வக்கீல் மிஸ்டர் K. S. ஜெயராம அய்யரும் பேசினார்கள்.

---

# *Notes of Madras Decisions.*

## மதிராஸ் ஐக்கோர்ட்டின் முக்கிய தீர்ப்புகள்.

—:o:—

(46)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஒல்ட்பீல்ட்
மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.

லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல் நே. 21 of 1914.

லாப்பாயின்ட்:—தேவஸ்தான டிரஸ்டி.

தீர்ப்பு:—ஒரு தேவஸ்தான டிரஸ்டி தேவஸ்தானத்திற்காக கடன்வாங்க அவசியம் ஏற்படாதபோது கடன்வாங்கி தேவஸ்தான விஷயமாகவே செலவிட்டார். கடன் வாங்குவதற்கு அவசியம் ஏற்படவில்லை என்றும் கடனுக்கு தேவஸ்தான சொத்தும் கட்டுப்படமாட்டாதென்றும் ருஜுப்பட்டது. இப்பேர்ப்பட்ட கடனுக்கு டிரஸ்டி நேரே தாமே கட்டுப்பட்டவர் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் G. S. ருமச்சந்திர அய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் S. முத்தய்யா முதலியாரும் ஆஜரானார்கள். [1914] ம. வீ. நோ. 214, [1914] M. W. N. 214.

(28—10—1914.)



(47)

ஜட்ஜிகள்:—ஜட்ஜி மிஸ்டர் சதாசிவய்யர்
ஜட்ஜி மிஸ்டர் நேப்பியர்.

இரண்டாவது அப்பீல் நே. 1277 of 1913.

லாப்பாயின்ட்:— நாட்டுக்கோட்டைச் செட்டி வியாபாரக் கம்பெனி.

தீர்ப்பு:—ஒரு நாட்டுக்கோட்டை வியாபாரக் கம்பெனியின் வியாஜ்ஜியத்தில் குடும்பச் சொத்து வியாபாரச் சொத்தாகவும் கூட்டு வியாபாரச் சொத்தாகவும் எண்ணப்படவேண்டும்.

ஒரு நாட்டுக்கோட்டை செட்டி கம்பெனியின் பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தில் கம்பெனியின் மானேஜருக்கு மட்டிலும் சம்மன் சார்வ் செய்யப்பட்டது. நாட்டுக்கோட்டை செட்டி குடும்பத்தில் மைனர் மெம்பர்களிருந்தபோதிலும் டிக்கிரி பெற்றுக்கொண்டவன் மேற்படி குடும்ப சொத்தை கூட்டு வியாபார சொத்தாக பாவித்து ஜப்தி செய்யலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:— அப்பீல் வாதிக்காக மிஸ்டர் K. சீனிவாசய்யங்காரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் N. ருமச்சந்திர அய்யரும் ஆஜரானார்கள். [1914] ம. வீ. நோ. 214, [1914] M. W. N. 214.

(26—10—1914.]

---

(48)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஹானே.

இரண்டாவது அப்பீல் நே. 83 of 1913.

லாப்பாயின்ட்:—இரண்டாவது அப்பீல்.

தீர்ப்பு:—முதல் அப்பீல் கோர்ட்டார் சி. பு. கோ. 41-வது ஆர்டர் 27-வது ரூலை அனுசரித்து சாக்ஷியம் தாக்கல் செய்துகொள்ள மறுதளித்தார்கள். இப்படி மறுதளித்ததைக் காரணமாகக் கொண்டு இரண்டாவது அப்பீல் செய்துகொள்ள முடியாது என்று தீர்மானிக்கப்பட்டது.

லாயர்கள்:—அப்பீல் வாதிக்காக மிஸ்டர் C. V. அனந்த கிருஷ்ணய்யரும், அப்பீல் பிரதிவாதிக்காக மிஸ்டர் M. D. தேவதாசும் ஆஜரானார்கள்.

---

(49)

ஜட்ஜிகள்:—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர்
மிஸ்டர் ஜஸ்டிஸ் நேப்பியர்.

இரண்டாவது அப்பீல் நே. 157 of 1912.

லாப்பாயின்ட்:—மைனர்.

தீர்ப்பு:—ஒரு கார்டியன் செய்த பராதீனத்தை ரத்து செய்யக் கொண்டுவந்த வியாஜ்ஜியத்தில் எந்தக் காரியத்திற்காக பராதீனம் செய்து பணம் வாங்கப்பட்டதோ அந்தத் தொகையின் பெரும்பாகம் மைனரைக் கட்டுப்படுத்தக்கூடியதா யில்லை என்று ருஜுப்பட்டது. இந்தக் கேசில் கொடுக்கப்பட வேண்டிய சரியான டிக்கிரி என்னவென்றால் மைனரைக் கட்டுப்படுத்தும்படியான பாகத்தைச் சேர்ந்த பணத்தை மட்டிலும் மைனர் செலுத்திவிட்டபிறகு முழுப் பராதீனத்தையும் ரத்து செய்வது தான் ஒழுங்கான டிக்கிரியாக விருக்குமென்று தீர்மானிக்கப்பட்டது. [1914] ம. வீ. நோ. 212, [1914] M. W. N. 212.

# Our Client's Page.

## நம்முடைய கக்ஷிக்காரர்களின் பக்கம்.

நம்முடைய இந்திய சட்ட கெஜெட்டின் அபிப்பிராயங்களைக் கேட்கிறவர்கள் மாமூலான விதிகளை மறந்துபோயிருப்பதைப்பற்றி நாம் விசனிக்கிறோம். அபிப்பிராயம் கேட்பதற்கு கடிதம் எழுதும்போதே ரூ. 5 அட்வான்ஸ் மணியார்டர் செய்யவேண்டுமென்றும் இல்லேல் ரிக்கார்ட் கட்டை அவிழ்த்துப் பார்க்கப்பட மாட்டாதென்று பலமுறை நம்முடைய சஞ்சிகைகளில் எழுதி யிருந்தும் கக்ஷிக்காரர்கள் கவனிக்கிறதில்லை! இந்த காரணத்தை முன்னிட்டு சுமார் 35 அபிப்பிராயக் கடிதங்கள் முதலாவது உடைத்துப் பார்க்கப்படவில்லை. ஆதலால் இனி கக்ஷிக்காரர்கள் ஞாபகத்தில் வைப்பார்கள் என்றும் நம்புகின்றோம்! நம்முடைய கெஜெட் கூறும் அபிப்பிராயம் ஏனோதானோ என்று அலக்ஷியமாகச் சொல்லப்படும் அபிப்பிராயமல்ல. கூறப்படும் அபிப்பிராயம் ஒவ்வொன்றிற்கும் அதன் கடைசியில் லா ரிப்போர்ட் பிரமாணமும் எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. இந்தப் பிரமாணங்களையே வெளியூர்களில் உள்ள கக்ஷிக்காரர்கள் அவர்களுடைய சொந்த லாயர்களிடம் எடுத்துச் சொன்னால் கக்ஷிக்காரர்களிடமிருந்து லாயர்கள் அதிகப்படியான பீஸ் எதிர்ப்பார்க்க விடமில்லாமல் மேல் நடவடிக்கை நடத்திக்கொண்டு போவார்கள்.

நம்முடைய கெஜெட்டினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டவர்களில் எவரும் அந்த அபிப்பிராயம் சரியா யில்லையே என்று நமக்கு எழுதி யிருப்பதை நாம் அறியோம்! நம்மால் இயன்றளவு நாம் ஜீவதிசையிலுள்ள பரியந்தம் கக்ஷிக்காரர்களுக்கு சாதகம் செய்யவேண்டுமென்று விரதம்கொண்டு கங்கணம் கட்டிக்கொண்டு சுமார் 9-வருட காலமாக தொடர்ந்தேர்த்தியாக உழைத்துக்கொண்டு வருகிறோம் என்பது உலகமறிந்த விஷயம் என்பதை மறுக்க முடியாது. ஆகையால் இந்த வகையில் கக்ஷிக்காரர்களுடைய முழு ஆதரிப்பையும் பெறுவோம் என்று நம்புகின்றோம்:—

### அபிப்பிராய ஜவாப்பு.

(1) கோபிநாதராவ்:—தங்களுக்காக மிகவும் பிரயாசை எடுத்துக்கொண்டு அனேக வருட "Digest" என்னும் தீர்ப்புச் சுருக்க தொத்துகளை ஆராய்ந்து பார்த்தோம். சமீப காலத்தில் தங்களுடைய கேஸ் மாதிரியாக சென்னை ராஜதானிக்குள் யாதொரு வியாஜ்ஜியமும் நடந்ததாகத் தெரியவில்லை. ஆயினும் தங்களுடைய விஷயத்தில் நாங்கள் எடுத்துக்கொண்ட சிரமம் வீண்போகவில்லை. ஏனென்றால் சுமார் இரண்டு மூன்று மாதங்களுக்கு முந்தி வடக்கேயுள்ள வடமேற்கு மாகாணத்தில் தங்களுடைய வியாஜ்ஜியம்போல ஒரு வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டு தீர்ப்பு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு வடமேற்கு மாகாணம் லா ரிப்போர்ட்டில் (10 N. L. R., 10 வால்யூமில் 137-வது பக்கத்தில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. இந்த லா ரிப்போர்ட் அனேகமாக எல்லா வக்கீல்களிடமும் கிடைக்கமாட்டாது. அதிலும் தங்களுடைய ஊரிலுள்ள பிளீடர்களிடம் அகப்படவே அகப்படமாட்டாது. ஆயினும் மெசர்ஸ் T. வெங்கடசாமி ராவாலும், T. கிருஷ்ணசாமி ராவாலும் பிரசுரஞ் செய்யப்பட்டுவரும் "Current Index" என்கிற நடையப்பட்டுவரும் முதல் வருடத்திய தீர்ப்புச் சுருக்கம் என்னும் புத்தகத்தில் அந்த தீர்ப்பு எடுத்துப் பிரசுரித்திருக்கிறது. அந்தத் தீர்ப்பில் அடியிற்கண்ட பிரகாரம் சொல்லப்பட்டிருக்கிறது:—ஒருவன் மைனர் என்று எண்ணப்பட்டு அவன்பேரில் டிக்கிரி கொடுக்கப்பட்டிருந்து தன் பேரில் டிக்கிரி கொடுக்கப்பட்டபோது தான் மைனராயில்லை மேஜர் என்று அந்த டிக்கிரியை ஆக்ஷேபித்தால் மேலே சொன்ன கோர்ட்டார் தான் மைனர் என்று திருப்தி அடைந்து டிக்கிரி பிறப்பித்திருந்தபோதிலும் தான் அந்த சமயத்தில் மைனராயில்லை என்று ருஜூப்படுத்தவேண்டிய பொறுப்பு அவனுடையதென்று தீர்மானிக்கப்பட்டது.

(2) சோமசுந்திர முதலியார்:—தாங்கள் அப்பீல் செய்துகொள்ளுவதில் பயனில்லை. மாஜிஸ்டிரேட் கிரிமினல் புரொசிஜர் கோட் 147-வது பிரிவின்படி நடவடிக்கை நடத்தி விசாரணை செய்து இருதரப்பிலும் சொல்லப்பட்ட சாக்ஷி வாக்குமூலங்களை ஆராய்ந்து ஒரு கக்ஷிக்காரன் ஏஜண்டு என்றும் மற்றொரு கக்ஷிக்காரன் எஜமான் என்றும் ஆதலால் தகராருக்கு உட்பட்டிருக்கும் நிலம் எஜமான்வசத்திலிருக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார். ஆதலால் அந்தத் தீர்மானத்தில் ஐக்கோர்ட்டார் பிரவேசிக்கமாட்டார்கள். தாங்கள் நாம் கூறும் அபிப்பிராயத்திற்கு ஜாரி செய்யப்பட்ட தீர்ப்பு எடுத்துச் சொல்லவேண்டுமென்று எழுதி யிருக்கிறபடியால் அந்த ஆதாரத்தையும் இவ்விடத்தில் எடுத்துக் கூறுகின்றோம். [1914] மதிராஸ் வீக்லி நோட்ஸ் என்கிற லா ரிப்போர்ட்டு 795-வது பக்கத்தில் வைத்தினாத அய்யர் என்பவருக்கும் சுப்பாலு அம்மாள் என்பவளுக்கும் கி. பு. கோ. 145-வது பிரிவின்படி நடந்த கிரிமினல் நடவடிக்கை ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. மாஜிஸ்டிரேட் செய்த உத்திரவிற்கு விரோதமாக வைத்திநாதய்யர் அப்பீல் செய்துகொண்டதில் ஐக்கோர்ட்டாரால் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது.

(3) ராமநாதபுரம் வீரபத்திர பாண்டியன்:—உம்முடைய கேள்வி என்னவென்றால் ஒரு போலீஸ் ஸ்டேஷன் அவுஸ் ஆபிசருடைய அதிகார எல்லைக்கு அப்பால் சோதனை போட்டு நடத்தினார் என்றும் அவருக்கு சோதனை செய்ய எழுத்து மூலியமான ஆர்டரும் இல்லை என்பதே. இப்படி தாங்கள் சொல்லுவது ருஜூப்படுமானால் தங்கள் அப்பீல் ஐக்கோர்ட்டில் ஏற்றுக்கொள்ளப்படும். ஏன் என்றால் 8 S. L. R. I ரிப்போர்ட்டில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கேசில் ஒரு போலீஸ் ஆபிசர் எழுத்து மூலியமான உத்திரவு இல்லாமல் சோதனை செய்வது சட்ட விரோதமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

(4) ரெங்கசாமிக் கவுண்டன்:—டி. மு. கோர்ட்டார் செய்த தீர்ப்புக்கு விரோதமாக அப்பீல் செய்துகொள்ளவே கூடாதென்றும் அப்படி யிருந்தும் சப் கோர்ட்டார் அந்த அப்பீலை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்று தங்களுடைய கடிதம் அறிவிக்கிறது. சப் கோர்ட்டார் செய்திருக்கும் உத்திரவிற்கு விரோதமாக ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டால் அவர்கள் சப் கோர்ட்டாருடைய உத்திரவில் பிரவேசிப்பார்கள்.

(5) மாயூரநாத முதலியார்:—நீர் வசிப்பது குளித்தலையாக யிருப்பதை முன்னிட்டும் உம்முடைய சாக்ஷிகள் எல்லாம் குளித்தலையி லிருப்பதை முன்னிட்டும் கேசை குளித்தலை டி. மு. கோர்ட்டிற்கு டிரான்ஸ்பர் செய்துக்கொள்ள முடியாது. வேறே ஏதேனும் தகுந்த காரணங்களிருக்கவேண்டும்.

(6) உள்ளூர் சந்தாதாரர்:—லிமிட்டேஷன் சம்பந்தமான லாப்பாயின்ட் ராஜதானி நகர் ஸ்மால் காஸ் கோர்ட் (Presidency Small Cause Court) புல் பென்ச்சாரால் தவறுதலாகத் தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும் சி. பு. கோ. 115-வது பிரிவின்படி ஐக்கோர்ட்டார் அந்த உத்திரவில் பிரவேசிப்பதற்கு அதிகாரமில்லை என்று N. C. குப்புசாமி அய்யங்கார் v. N. C. நாராயண அய்யங்கார் கேசில் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கேஸ் 16 மதிராஸ் லா டைம்ஸ் 488-வது பக்கத்தில் பிரசுரிக்கப்பட் டிருப்பதைப் பார்க்கவும்.

(7) பாளையங்கோட்டை மீனாக்ஷி அம்மாள்:—ஜீவனாம்சத்திற்காக ஒரு ஸ்தாபர சொத்து உமக்கு கொடுக்கப்பட்டால் அதற்கு எழுத்து மூலியமான ஆதாரவு இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. ஆயினும் எழுத்து மூலியமான ஆதாரவு ஏற்பட்டால் அது ரெஜிஸ்டர் செய்யப்படவேண்டும். (Transfer of Froperty Act) என்னும் பராதீனச் சட்டத்தில் "விற்பனை" "அடமானம்" "கிரையம்" "குத்தகை" எழுத்து மூலியமாக விருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய ஜீவனாம்ச ஆதாரவைப் பற்றி யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஹிந்து லாப் பிரகாரம் எந்த விவகாரத்திற்கும் எழுத்து மூலியமான ஆதாரவு அனாவசியம். ஆயினும் ஆதாரவு எழுதி வாங்கி ரெஜிஸ்டர் செய்து வைப்பது உமக்கு நன்மையைக் கொடுக்கும்.

(8) ரெத்தினப் படையாச்சி:— உம்முடைய கடனை மோசம் செய்யும்பொருட்டு சொத்தை விற்பனை செய்தது சொத்தைக் கிரையம் பெற்றவனுக்கு தெரியுமென்று ருஜூப்படுத்தினால் அந்தக் கிரையத்தை கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளாமல் ரத்து செய்து விடுவார்கள். கடனாளிக்கிருந்த கெட்ட எண்ணம் வாங்கினவனுக்குத் தெரியுமென்று ருஜூப்படுத்துவது துர்லபம்.

(9) கழனிவாசல்:— தங்களுடைய கடிதம் வந்து சேர்ந்தது. லாயர் கமிட்டியாருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பி யிருக்கிறோம். தாங்கள் அனுப்பவேண்டிய பீஸ் முதலிய விபரங்களுக்கு எங்களுடைய ஆபீஸ் கடிதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

N. RATHAKRISHNA & Co., MADRAS.



# Hindu Law.

## ஹிந்துலா.

—:o:—

### ALIENATION.

#### பராதீனம்.

ஒரு ஹிந்து பாட்டனும் அவருடைய மைனர் பேரப்பிள்ளைகளும் சேர்ந்த குடும்பமாக வசித்து வந்தார்கள். மைனர்களுடைய தாயாருடையவும் அம்மானுடைய சம்மதத்தின்பேரில் பாட்டன் குடும்பச் சொத்தில் ஒரு பாகத்தை அவருடைய மூன்றுவது பெண்சாதிக்குத் தானம் கொடுத்து தான ஆதாரவில் இந்த தானம் குடும்பச்சொத்தில் தமக்கிருக்கும் பாகத்திலிருந்து கொடுக்கப்பட்டது என்று எழுதியிருந்தார்.

இந்தப் பராதீனம் மைனர்களைக் கட்டுப்படுத்தும் என்றும் இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் கார்டியன்கள் சம்மதம் கொடுக்க யோக்கிதை உடையவர்கள் என்று தீர்மானிக்கப்பட்டது.

பாட்டனுக்கு இஷ்டமிருந்தால் குடும்பச் சொத்தில் தம்முடைய பாகத்தைப் பிரித்து முழு பாகத்தையும் தன்னுடைய மூன்றுவது பெண்சாதிக்குக் கொடுத்திருக்கக்கூடும். அருணாசலம்பிள்ளை v. சம்பூரணத்தாச்சி, Arunachalam Pillai v. Sampurnathachi, 27 M. L. J. 485.

---

## DEBT.

### கடன்.

ஹிந்துலாப் பிரகாரம் புருஷன்பட்ட கடன்கள் காலாவதியாகப் போயிருந்தபோதிலும் அந்தக் கடன்களைத் தீர்க்க விதவை கட்டுப்பட்டவள் என்றும் ஆனால் புருஷன் ஜீவதிசையிலிருந்தபோதே ஆக்ஷேபித்த கடன்களை விதவை தீர்க்கக் கட்டுப்பட்டவளல்ல என்று தீர்மானிக்கப்பட்டது. பகவத் பாக்ஷகர் கோரனி v. கிலிரட்டி ஷேக்ராம் பாடீயூல், 16 Bom. L. R. 738.

ஒரு ஹிந்து புத்திரன் பிதா பட்ட கடன்களைத் தீர்க்க பாத்தியப்பட்டவன். இப்பேர்ப்பட்ட புத்திரன் பிதா நடத்திக்கொண்டுவந்த கூட்டு வியாபாரத்தில் பிதாவுக்குப் பிறகு அவருடைய ஸ்தானத்திற்கு வருவானேயானல் யூகிக்கப்படவேண்டிய தென்னவென்றால் கூட்டு வியாபாரத்தில் பிதா காலத்தில் உண்டான கடன்களுக்குப் புத்திரன் கட்டுப்படவேண்டுமென்று தெரிந்து அந்த ஸ்தானத்திற்கு வந்திருக்கிறான் என்பதே. சுப்பிரமணிய செட்டி v. M. சோமசுந்திரம் செட்டி, 24, I. C. 80.

---

## MAINTENANCE.

### ஜீவனம்சம்.

ஒரு ஹிந்து விதவைக்கு ஜீவனம்சத்திற்காக ஒரு ஸ்தாபர சொத்தைக் கொடுக்கவேண்டுமென்றால் எழுத்து மூலியமான ஆதரவு அல்லாமல் வேறு மூலியமாகவும் கொடுக்கலாம். எழுத்து மூலியமான ஆதரவு ஏற்பட்டால் அது ரெஜிஸ்டர் செய்யப்பட்டுத் தீரவேண்டும். ஜீவனம்சம் கொடுப்பதற்கு எழுத்து மூலியமான ஆதரவு இருக்கவேண்டுமா என்பதைப்பற்றி ரெஜிஸ்டிரேஷன் ஆக்ட் மௌனமாயிருக்கிறது. சில பராதீனங்கள் ரெஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமென்று (Transfer of Property Act) பராதீனச் சட்டம் கூறுகின்றது. அந்தப் பராதீனங்கள் விக்கிரையம், அடமானம், தானம், குத்தகை. ஒரு ஹிந்து விதவைக்கு ஜீவனம்சத்திற்காக ஒரு ஸ்தாபர சொத்தைக் கொடுப்பதைக்காட்டி அந்த ஆக்டில் யாதொன்றும் சொல்லப்படவில்லை. ஆகவே இந்தப் பிரஸ்னை ஹிந்துலாப் பிரகாரம் தீர்மானிக்கப்படவேண்டும். இதன் பிரகாரம் ஜீவனம்சத்திற்காக சொத்து கொடுப்பது எழுத்து மூலியமாக விருக்கவேண்டியதில்லை. ஒரு ஹிந்து விதவைக்கு ஜீவனம்சத்திற்காக சொத்து கொடுக்கப்படுவதை வாய்மொழி சாக்ஷியத்தால் ருஜூப்படுத்தக்கூடுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஜீவன்லால் v. சூட்மான், Jiwanlal v. Chudman, 10 N. L. R. 111.

---

## RELIGIOUS ENDOWMENTS.

### தருமச் சொத்து.

ஹிந்துலாப் பிரகாரம் ஒரு விக்கிரகம் ஒரு சொத்தை தானம் பெறவும் வைத்துக்கொள்ளவும் சக்தி யுடையது. ஒரு விக்கிரம் கும்பாபிஷேகம் முதலியவைகள் கிரமப்பிரகாரம் செய்யப்பட்டு பொது ஜனங்கள் கும்பிடுவதற்காகத் தத்தம் செய்யப்பட்டால் கண்ணால் பார்க்க முடியாத கடவுள் அதிலிருக்கிறதாக எண்ணப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீதாக்கூர் சீத்தாராம்ஜி v. ஜாடுநாத்சிங், Srithakur v. Jadunath Singh, 24 I. C. 72.

---

## SUCCESSION.

### வார்சு முறை.

மிதாக்ஷர சட்டத்தின்படி ஒரு சன்னியாசியின் சன்மார்க்கமான சிஷியன் அவருக்கு வார்சாக வர பாத்தியமுடையவன். ஒரு மகந்து இறந்துபோய் விட்டார். வைஷ்னவ மதத்தைச் சேர்ந்த ஒரு பைராகி தேவஸ்தான சொத்துக்களைப் பெறுவதற்காக வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். வாதி இறந்துபோன மகந்துவுக்கு சிஷியனாகவிராதபடியால் வார்சாகவர பாத்தியமற்றவர் என்று தீர்மானிக்கப்பட்டது. கோபாலதாஸ் சாது v. பலவெந்ததாஸ், 16 Bom. L. R 757.

மிதாக்ஷர சட்டத்தின்படி சகோதரனுடைய விதவை சிறிய தகப்பனுடைய புத்திரனைக் காட்டிலும் வார்சாகவர அதிக பாத்தியமுடையவனென்று தீர்மானிக்கப்பட்டது. 16 Bom. L. R. 699.

---

## WIDOW.

### விதவை.

ஒரு அடமான ஆதரவை ஆதாரமாகக்கொண்டு வரப்பட்ட வியாஜ்ஜியத்தில், இந்த வியாஜ்ஜியத்தின் வாதியும் பிரதிவாதியும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். வாதி பிந்திய அடமானக்காரனாகவும் பிரதிவாதி ஒரு ஹிந்து விதவையிடமிருந்து தானம் பெற்றவனாகவும் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இதன் பிறகு வாதி தன்னுடைய அடமானத்தின்பேரில் ஒரு



வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். யாதொரு அவசியமுமில்லாமல் வாதி பராதீனம் செய்திருப்பதாக பிரதிவாதி சாக்ஷி சொன்னார். முந்திய அடமான வியாஜ்ஜியத்தில் பிரதிவாதி இந்தக் சாக்ஷி சொல்லாததை முன்னிட்டு இந்த வியாஜ்ஜியத்தில் அந்தக் சாக்ஷி சொல்லுவதிலிருந்து விலக்கப்பட்டவரல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. Chittar Mal v. Ram Narain, 24 I. C. 84.

கடன் வாங்குவதற்கு சட்டத்தில் சொல்லியிருக்கிற அவசியமான காரணங்கள் ஏற்பட்டிருந்தனவென்று ருஜூப்படுத்துவதுடன் அதிகப்படியான வட்டி கொடுப்பதாய் ஒப்புக்கொண்டு கடன் வாங்கும்படியான அவ்வளவு அவசியமான காரணங்கள் ஏற்பட்டிருந்தனவென்று ருஜூப்படுத்தவேண்டும். ஒரு ஹிந்து விதவை வைத்த அடமானம் செலாவணியாகுமென்று ருஜூப்படுத்த வேண்டுமானால் அவள் ஏற்கனவே வாங்கியிருந்த கடன்களைத் தீர்ப்பதற்காக அடமானம் வைத்தாள் என்று ருஜூப்படுத்தினால் போதுமானதல்ல. அந்தக் கடன்களே சட்டத்தில் சொல்லப்பட்ட அவசியமான காரியங்களுக்கா அவள் வாங்கினால் என்று ருஜூப்படுத்தப்படவேண்டும். Chittar Mal v. Ram Narain, 24 I. C. 84.

---

## WILL.

### உயில்.

ஒரு ஹிந்து தன்னுடைய மகனுக்காவது பெண்சாதிக்காவது உயில் மூலியமாக சொத்து கொடுத்தால் அந்த சொத்தை அவன் ஜீவதிசையுள்ள பரியந்தம் அனுபவிக்கும்படியான பாத்தியத்துடன் மட்டிலும் அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதென்று யூகிக்கவேண்டுமென்பது விதி. ஆனால் அந்த உயிலை முழுதிலும் வாசித்துப் பார்த்ததில் அப்பேர்ப்பட்ட தாற்பரியம் கொடுக்கக் கூடாததாக விருந்தால் சர்வ சுதந்தரங்களுடன் அதாவது விற்பனை செய்யவும் அடமானம் வைக்கவும் ஆகிய எல்லா பாத்தியங்களுடன் அச்சொத்தை அவள் அனுபவித்துக்கொண்டு வரவேண்டுமென்பது உயில் கர்த்தாவின் எண்ணமாயிருந்திருக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

ஜட்ஜி மிஸ்டர் சேஷகிரி அய்யர் தீர்ப்பு:—ஒரு உயிலினுடைய தாற்பரியத்தால் உயில் சொத்து சர்வ சுதந்தர பாத்தியங்களுடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும்போது உயில் மூலியமான யாருக்கு சொத்துக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பேர்வழி ஒரு பெண்ணாயிருப்பது உயிலினுடைய கருத்தை பேதப்படுத்தி விடமாட்டாது. கோட்டமான் ராமானுஜ அய்யங்கார் v. சடோகோபாச்சார், Gottaman Ramanuja Aiyangar v. Satogopa Char. 27 M. L. J. 329.

---

## JOINT FAMILY.

### சேர்ந்த குடும்பம்.

ஒரு சேர்ந்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மெம்பர் சேர்ந்த குடும்பத்தின் சொத்தை உயில் மூலியமாகக் கொடுக்க அருகதற்றவன் என்று தீர்மானிக்கப்பட்டது.

மைனர் புத்திரர்களும் பிதாவும் கூடிய சேர்ந்த குடும்பத்து தகப்பன் எழுதிக்கொடுத்த அடமானத்தின்பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியத்தில் பிதாவின்பேரில் ஒரு அடமான டிக்கிரி கொடுக்கப்பட்டது. டிக்கிரி நிறைவேற்றப்பட்டு சொத்து ஏலம் போடப்பட்டாலும்சரி, இல்லாவிட்டாலும் சரி அந்த டிக்கிரி தங்களைக் கட்டுப்படுத்தமாட்டாதென்று கோர்ட்டிற்கு வந்து சாக்ஷியாடும் புத்திரர்கள், அந்தக் கடன் சட்டப் பிரகாரம் செலாவணியாகக்கூடாத காரியங்களுக்காவது அல்லது துன்மார்க்கச் செலவுகளுக்காவது தகப்பனால் வாங்கப்பட்டிருக்கிறதென்று ருஜூப்படுத்தவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. Gurnarain v. Gulzari Lal, 17 O. C. 318.

---

## INTEREST.

### வட்டி.

ஒருவன் கடன் வாங்கினால் அந்தக் கடனுக்கு வட்டி சேர்த்து செலுத்தவேண்டுமென்று அறிந்து கடன் வாங்கியிருக்கிறான் என்று எண்ணப்படவேண்டும். ஒரு கடன் பத்திரத்தில் முதல் செலுத்தப்படுவதற்கு ஒரு குறிப்பிட்ட தேதி குறிப்பிடப்பட்டு, பத்திரம் பிறந்ததுமுதல் அந்தத் தேதி வரையில் கூட்டு வட்டி செலுத்திவர வேண்டுமென்று சொல்லப்பட்டிருந்தது. அந்த குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு கடன் வாங்கினவன் கூட்டுவட்டி செலுத்த கடமைப்பட்டவன் அல்லவென்றும் கூடுதலான வட்டியின்பேரிலும் முதலின்பேரிலும் அந்த குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு சாதாரண வட்டி மட்டிலும் செலுத்த பாத்தியமுடையவன் என்று தீர்மானிக்கப்பட்டது. Thathothathil Pokker v. Ramachandra Shenoy, 16 M. L. J. 487.

---

## CONTRACT.

### ஒப்பந்தம்.

எந்த ஒப்பந்தத்தை ஆதாரமாகக்கொண்டு இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டதோ அந்த ஒப்பந்தம் "கதிர்" யில் செய்யப்பட்டது. வியாஜ

161192

ஜியம் தாக்கல் செய்யப்படும் சமயத்தில் கதிரி மதனப்பள்ளி டி. மு. கோர்ட்டின் அதிகார எல்லைக்குள்ளிருந்தது. 30-3-1911-ல் மதனப்பள்ளி டி. மு. கோர்ட்டார் ஒரு டிக்கிரி அளித்தார்கள். 1-4-1911-ல் கதிரி பெனுகொண்டா டி. மு. கோர்ட்டாருடைய அதிகார எல்லைக்குள் கொண்டுவரப்பட்டது. மதனப்பள்ளி டி. மு. கோர்ட்டுத் தீர்ப்புகளுக்கு விரோதமாக அப்பீல்கள் கடப்பை ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் செய்து கொள்ளப்படுகின்றன. பெனுகொண்டா டி. மு. கோர்ட்டிலிருந்து அப்பீல்கள். பெல்லாரி ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் செய்து கொள்ளப்படுகின்றன. கதிரி பெல்லாரி ஜில்லாவில் சேர்க்கப்பட்டுப் போய்விட்டபடியால் பிரஸ்தாப டிக்கிரி மதனப்பள்ளி டி. மு. கோர்ட்டாரால் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் பெல்லாரி ஜில்லா ஜட்ஜி கோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ம. சுப்பய்யா V. M. ராச்சய்யா, M. Subbayya V. M. Rachayya, 37 M. 477.

---

## LIMITATION ACT.

### கால நிரணயச்சட்டம்.

சிவில் கோர்ட்டுத் தீர்ப்புகளுக்கும் டிக்கிரிகளுக்கும் மனுசெய்து கொள்ளுகிறவர்கள் இரண்டு முக்கியமான காரியங்கள் செய்யவேண்டும்:—

(1) மனுவில் சட்டப்பிரகாரம் ஒட்டப்பட வேண்டிய ஸ்டாம்புகளை ஒட்டி கிரமமான காலத்திலும் குறிப்பிடப்பட்ட உத்தியோகஸ்தரிடமும் மனு கொடுக்கப்படவேண்டும்,

(2) நகல்களை பெற்றுக்கொள்ளுவதற்காக குறிப்பிட்ட காலத்திலும் குறிப்பிட்டவிடத்திலும் வந்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த இரண்டு காரியங்களையும் மனுதாரன் செய்தாலொழிய அவன் அவனுடைய கடமைகளைச் செய்வதில் கிரமமாகவும் சுறுசுறுப்பாகவுமில்லை என்று ஏற்படும். இந்தக் கடமைகளை அவன் நேரேயும் செய்யலாம் ஏஜண்டு மூலியமாகவும் செய்யலாம். முதலாளி நியமிக்கும் ஏஜண்டுகளுக்குள் தபால் ஆபீஸ் ஒரு ஏஜண்டு. இந்த ஏஜண்டை எஜமான் நியமிக்கும்போது காலம் எப்படி கணக்கிடப்படுமென்றால் எந்தத் தேதியில் என்ன மணியில் தபால் ஆபீஸ் மனுவையும் அதற்கு செலுத்தப்படவேண்டிய கட்டணத்தையும் நியமிக்கப்பட்ட கோர்ட்டு உத்தியோகஸ்தரிடம் பட்வாடா செய்து செலுத்துகிறதோ அந்த தேதியிலிருந்து அந்த கோர்ட்டு உத்தியோகஸ்தர் எந்தத் தேதியில் நகல்களை தபால் ஆபீஸ் மூலியமாக அனுப்புகிறாரோ அந்தத்தேதி வரையில் இன்னும் விபரமாகச் சொல்லப்போனால் போஸ்டாபீசில் மனுவும் மணிஆர்டரும் அனுப்பிய காலமுதல் நகல்தபால் ஆபீஸ்மூலியமாக மனுதாரனுக்கு வந்து சேரும் காலம் வரையில் காலாவதி தோஷம் உண்டாயிருக்கிறதா என்று கணக்கிடப்படுவதில் சேர்க்கப்படமாட்டாது. ஏதேனும் எதிர்பார்க்க முடியாத அசந்தர்பங்களை முன்னிட்டு தபால் ஆபீசால் தவக்கம் உண்டானால் கோர்ட்டில் மனுகொடுத்து அறிவித்துக்கொண்டு தாமதத்தை மன்னிப்பு செய்யும்படி வேண்டிக்கொள்ளலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. Ragu v. Madhgia, 10 N. L. R. 139.

---

## JOLLY

### (Registered) Scented Nut Slices.

The Public are hereby informed that the undersigned has fund out a remedy for rooting out all dental diseases by manufacturing the famous "*Jolly Scented Nut Slices*" and Tobacco in accordance whith the best modern scientific principles. These slices prove an excellent remedy not only in destroying the germs but also in increasing considerably the power of digestion.

The publice are therefore requsted to avail themselves of this golden opportunity without delay. It is sold at a rediculously low price to suit the convenience of the rich and the poor alike.

| | |
|---|---|
| 4 lbs Tin | Rs. 0—4—0 |
| 1 Box of 144 Packets | ,, 0—5—0 |

Special quotation to traders and commission agents.

Apply to:— K. KANNABIRAN PILLAY,
*Snuff Merchant, Uppada Bazaar, Madras.*

---

## ஜாலி பரிமள பாக்குத்தூள்.

இதனால் சகலமானவர்களுக்கும் அறிவிப்பதுயாதெனில்:—அநேக வைத்திய சாஸ்திர முறைகளை அனுசரித்து நமது பற்களுக்குரிய பல நோய்களையும் போக்க இத்திவ்விய வாசனை பாக்குத்தூள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது நமது பற்களிலுள்ள கிருமிகளையெல்லாம் கொன்று பற்களை உறுதிப்படுத்துவதுடன் ஜீரணசக்தியையும் விர்த்திசெய்கிறது. இத்தூளில் உயர்ந்த வாசனை திரவியங்களும் சேர்ந்திருப்பதினால் இதனை உபயோகிக்கும் ஒவ்வொருவருக்கும் மனோரம்மியத்தை தரும். இதை ஏழைகளும் உபயோகிக்குமாறு மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஜாலி பரிமளபுகையிலையும் வேண்டியவர்கள் அடியிற்கண்ட என் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | |
|---|---|
| 4 பவுன் பாக்குத்தூள் டப்பி விலை ரூபா | 0—4—0 |
| 144 பைகள் அடங்கிய பெட்டி ,, | 0—5—0 |

க. கண்ணபிரான் பிள்ளை,
உப்பாடைக்கடை, மதராஸ்.